# தாய்வீடு

THAIVEEDU DECEMBER 2024 டிசம்பர் www.thaiveedu.com



**தாயக மண்ணின்**
**தீராக் காதலன் மதிசூடி**

- பொன்னையா விவேகானந்தன்

**புதிய அரசியல் பண்பாட்டுப் பேரலையும்**
**இனி வரும் சவால்களும்**

- என். சரவணன்



**ஒளிமனம்**

- கருணாகரன்

**இலங்கைத் தமிழ்ச் சஞ்சிகைகளில்**
**மகளிர் கவிதைகள்**

- கோட்டி திருமுருகானந்தம்

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling
Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

## மழையும் நிவாரணமும்!

கடந்த பல நாட்களாக இலங்கையின் பல பாகங்களும் எதிர்கொண்டுள்ள பெருமழை பாரிய அனர்த்தங்களை விளைவித்துள்ளது. ஒக்ரோபர் மாதத்தில் நாடெங்கும் பரவலாக இடம்பெற்ற பாரிய மழைப்பொழிவும், அதைத் தொடர்ந்த வெள்ள அனர்த்தங்களும் விளைவித்த பாதிப்பிலிருந்து மக்கள் பொருளாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் மீள்வதற்கு முன்னரேயே, மீண்டும் ஒரு பெருமழை மக்களைத் தாக்கி, வாழ்வாதாரங்களைச் சிதைத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக இதுபோன்ற அனர்த்தங்கள் அதிகரித்த எண்ணிக்கையில், அடிக்கடி நிகழ்வதோடு, அவற்றின் உக்கிரமும் அதிகரிக்கும் என அறிவியலாளர்கள் எதிர்வுகூறி வருவதற்கு ஆதாரம் சேர்ப்பதுபோல், இவ்வாண்டின் மே, ஜூன் மாதங்களிலும், பின்னர் ஒக்ரோபரிலும், இப்போது நவம்பரிலும் என மழை கோரத்தாண்டவம் ஆடியுள்ளது.

கடந்த வாரத்தின் வெள்ளப்பெருக்கால் தங்கள் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட இரண்டு இலட்சத்து எழுபத்தாறாயிரம் மக்கள் நாடெங்கும் உருவாக்கப்பட்டுள்ள 165 நிவாரண நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள் என அரச அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிலர் காணாமல் போயும், சிலர் கொல்லப்பட்டும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும், உயிர்ச்சேதம் பெருமளவு தவிர்க்கப்பட்டுள்ளமை நிம்மதி அளிக்கிறது.

இருந்தபோதும், பாரிய பொருளாதாரச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து, அவற்றில் இருந்து மீள எத்தனித்துக் கொண்டிருக்கும் ஒரு நாட்டுக்கு இதுபோன்ற அனர்த்தங்கள் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தும். கால் நடைகளுக்கும், விளைநிலங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மக்கள் மீள மாதங்களென்ன ஆண்டுகளே ஆகலாம்.

காலநிலை மாற்றத்தையோ, அதன் விளைவாக ஏற்படும் அனர்த்தங்களையோ தனியொரு நாடாகத் தடுக்கும் வல்லமை இலங்கைக்கு இல்லை. ஆனால், இந்த அனர்த்தங்கள் ஏற்படுத்தும் அழிவுகளையும் பாதிப்புகளையும் மட்டுப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளையும் தற்காப்பு நடவடிக்கைகளையும் இலங்கையும் அதன் மக்களும் மேற்கொள்ளலாம். மேற்கொள்ளவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

நாட்டின் பல பாகங்களிலும் வெள்ளம் வடிவதற்கான வழிவகையின்றி பல நாட்களாகத் தேங்கிநின்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதற்கு, முறையான திட்டமிடலின்றிக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டமையும், பெருகிவரும் கட்டுமானங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வடிகால் கட்டமைப்புகள் மேற்கொள்ளப்படாமையுமே முக்கிய காரணம் எனலாம். யாழ்ப்பாணம் போன்ற கடல் சூழ்ந்துள்ள ஒரு சிறு நிலப்பரப்பிலேயே வெள்ளம் வடிவதற்கு வழிவகையற்று இருப்பது அகக்கட்டுமானத்தின் குறைபாடேயன்றி வேறில்லை. யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் குளங்கள் மூடப்பட்டு, கட்டடங்கள் எழுப்பப்பட்ட தொலைநோக்கற்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதை அறிவோம். ஒரு காலத்தில் வளவுக்கு ஒரு கிணறு இருந்த நிலைமாறி, இப்பொழுது பொருளாதாரக் காரணங்களுக்காகக் குழாய்க் கிணறுகளே அதிகம் தோண்டப்படும் நிலையே இருக்கிறது. குழாய்க் கிணறுகள் நிலத்தடி நீருக்கு விளைவிக்கும் ஊறுகளைத் தவிர்த்துவிட்டு நோக்கினாலும், கிணறுகள் போன்று வெள்ளத்தைத் தேக்கும் கொள்ளளவு அவற்றுக்கு இல்லை. மேலும், போருக்குப் பின், நாட்டில், குறிப்பாக வடமாகாணத்தில், குவியும் புலம்பெயர் பணம், தொலைநோக்கோ, அந்த மண்ணின் பாரம்பரிய அறிவுபற்றிய புரிதலோ இன்றியே பெரிதும் செலவிடப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. காணிகளுக்கு எல்லைகளாக வேலிகள் இருந்தவரை, வெள்ளம் வழிந்தோடக்கூடியதாய் இருந்தது. அந்த வேலிகள் இப்போது வடிகால் பற்றிய சிந்தனையற்ற சுற்று மதில்களாக மாறிவருகின்றன. புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகளைச் சுற்றி கொங்கிறீற் தரைகள் இடப்படுவதால் மழைநீர் நிலத்தடியைச் சேர முடியாமல் வெள்ளமாகின்றது. அதுவும் வாசற்படலையூடாகவே பாய்ந்து வெளியேற வேண்டிய பரிதாப நிலை. அண்மைய மழை வெள்ளத்தால் நாட்டின் பல பகுதிகளும் பாதிக்கப்பட்டிருந்தாலும், யாழ் மாவட்டமே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதற்கு மேற்கூறியவையும் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

இந்த நிலையிலே, இலங்கையின் அரசும், இலங்கை வாழ் மக்கள்மீது அக்கறை கொண்டுள்ள ஏனையவர்களும், வெள்ள நிவாரணத்தை, 'வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரண நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம்' என்ற குறுகிய காலச் செயற்பாடாக மட்டும் நோக்குவது ஆபத்தானது. இதை எதிர்வரும் காலத்தில் ஏற்படப்போகும் அனர்த்தங்களின் பாதிப்பை மட்டுப்படுத்துவதற்கான தொலைநோக்கச் செயற்பாடாக, அகக்கட்டுமானத் திட்டமாக அணுகவேண்டும். புதிய கட்டுமானங்களைச் செய்பவர்கள் தனிநபர்களாயினும், நிறுவனங்களாயினும், முறையாக அனுமதி பெற்று நாட்டினதும், பிரதேசங்களினதும் அகக்கட்டுமானத் திட்டத்துக்குக் கட்டுப்படுவதை உறுதி செய்யவேண்டும். தற்காலிக நிவாரணம் எவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படுகிறதோ, இந்தத் தொலைநோக்குடைய தற்காப்பு நடவடிக்கைகள் அதைவிட முக்கியமானவையாகக் கருதப்படவேண்டும்.

**மழையும் நிவாரணமும்!** 3

**புதிய அரசியல் பண்பாட்டுப் பேரலையும் இனிவரும் சவால்களும்** 5
- என். சரவணன்

**இலங்கையில் தேர்தல் அரசியலின் மாற்றமுறும் தன்மை: 2024-ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலும் அதன் தாக்கமும்** 12
- ரமேஷ் ராமசாமி
- எம்.எம். இஃஜாஸ்

**தென் சீனக்கடலில் அமெரிக்க - சீன மோதல்** 20
- ரதன்

**டொனால்ட் ட்ரம்ப் - எலோன் மஸ்க் ஆட்சி | பணம் | ஊடகம்: கைகோர்த்துள்ள மும்முனை அதிகாரங்கள்** 24
- ரூபன் சிவராஜா

**பொலிவியா: சதிகளின் சதிராட்டம்** 28
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தமிழ்நாட்டுப் பாடசாலைகளில் சாதியத் தீ** 33
- நெல்லை ஜெயசிங்

**செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரம்** 36
- பால. சிவகடாட்சம்

**உயிர் காக்கும் திறன் கைக்கடிகாரங்கள்** 39
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**போதையால் இளமைதான்! என்றுமே முதுமையில்லை!** 42
- போல் ஜோசேப்

**உள நலம் - அனைவரதும் மனித உரிமை** 45
- ஷகீதா பாலச்சந்திரன்

**மாற்றுத்திறனாளிகளை அரவணைப்போம்** 49
- சி. நற்குணலிங்கம்

**கற்றலும் நினைவாற்றலும்** 51
- அகமட் பிஸ்தாமி

**திக்குத் தெரியாத வானத்தில் தேடித்தேடி...** 53
- குரு அரவிந்தன்

**வெள்ளக் காப்புறுதி** 56
- செந்தூரன் புனிதவேல்

**புதிய வீடா, மீள் விற்பனை வீடா? எதனைத் தெரிவு செய்வது?** 57
- வேலா சுப்ரமணியம்

**செய்யவேண்டியதைப் பிற்போடும் நடத்தைகள்** 60
- த. சிவபாலு

**பாடசாலை அரங்கு, கல்வியியல் அரங்கு, சிறுவர் அரங்கு! தன்மைகளும் பண்புகளும்** 64
- ரதிகலா புவனேந்திரன்

**சமகாலத்தையும் எதிர்காலத்தையும் உருவாக்கும் எங்கள் பயணத்தின் குறிப்பிடப்பட வேண்டிய கண்ணி! ‘குமரிக் கண்டமும் சங்கத் தமிழும்’** 68
- சி. ஜெயசங்கர்

**கலைகளில் பாரதி** 71
- ஓவியர் ஜீவா

**ஒளிமனம்** 74
- கருணாகரன்

**பண்ணாய் விசும்பில் படரும் சுருதி : மு. பொன்னம்பலம் நினைவாக...** 78
- மு. புஷ்பராஜன்

**அதிபர் பொ. கனகசபாபதி வாழ்வும் வரலாறும்** 82
- குரு அரவிந்தன்

**ஒரு நட்பின் பயணம்** 85
- கதிர் துரைசிங்கம்

**தாயக மண்ணின் தீராக் காதலன் மதிசூடி** 87
- பொன்னையா விவேகானந்தன்

**ஈழத்துப் பெரியார் தமிழறிஞர் கந்த. முருகேசனார்** 90
- வே. விவேகானந்தன்

**‘சாயம் தோய்ந்த வரிகள்’ மும்மொழிகளிலும் வெளிவந்துள்ள மலையகக் கவிதை நூல்** 92
- மல்லியப்புசந்தி திலகர்

**ரஷ்மியின், ‘சற்றே பெரிய கதைகளின் புத்தகம்’ - வாசிப்பனுபவம்** 95
- அருண்மொழிவர்மன்

**தாகூரின் இன்னிசைக்கு ஒரு காட்டுமலர்: சி.வி. வேலுப்பிள்ளையின் ‘விஸ்மாஜினி’** 98
- மு. நித்தியானந்தன்

**ஏடகரும் ஊடகரும்** 103
- செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

**ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்** 105
- என். செல்வராஜா

**தேசபக்தன் கோ. நடேசய்யரின் நெடும் பயணம் சிலோன் முதல் சிம்லா வரை இதுவரை அறியப்படாத ஒரு நேர்காணல்** 109
- பெருமாள் சரவணகுமார்

**மார்க்சிசமும் சமூக விஞ்ஞான முறையியலும் முழுமை என்னும் கருத்தாக்கம்** 113
ஆங்கில மூலம் ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**சங்க காலத்தில் பெண்கள்** 116
- ஜெயஸ்ரீ சதானந்தன்

**பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதம்** 118
- சிவா மாலதி

**கூட்டுக் கவிதைத் தொகுப்பு** 121
- சி. ரமேஷ்

**இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள்** 126
- கோட்டி திருமுருகானந்தம்

**மலையக நாவல் இலக்கியச் செல்நெறி** 132
- அருணாசலம் லெட்சுமணன்

**புலம்பெயர் தமிழ்த் தேசியக் கருத்தியலும் இலங்கைத் தமிழ்த் தேசியமும்** 137
- விதுர்ஷா கமலேஸ்வரன்

**மல்லாவியில் கிடைக்கப்பெற்ற ஈழத்தமிழர் தொன்மையை உணர்த்தும் சுடுமண் உருவங்கள்** 142
- சானுஜன் டனுஷா வாசன்

**சோழராட்சியின் பின்னர் இலங்கையில் வணிக கணங்கள்** 144
- வி. துலாஞ்சனன்

**நந்தி** 147
- த. ஜீவராஜ்

**‘நியாயமான போர்’ என்ற கருத்துருவாக்கமும் இலங்கையும்** 149
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்ககால மலேசியச் சிறுகதைகள்** 154
- சு. வேணுகோபால்

**ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – 6** 158
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**பாரதி பாடிய வீரர் பிரான்** 161
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து...** 165
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**யாத்திரை** 169
- சஞ்சயன்

**வாழ்வுரிமை 16** 173
- மா. சித்திவினாயகம்

**மேலிருந்து கீழ் - வலமிருந்து இடம்** 176
- உஷாதீபன்

**பூப்பு நீராட்டு விழா** 180
- அ. கந்தசாமி

**சூனியக்காரி** 184
- ஷேளி ஜக்சன்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# புதிய அரசியல் பண்பாட்டுப் பேரலையும் இனி வரும் சவால்களும்

– என். சரவணன்

1946-ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தோற்றம் பெற்றது. அடுத்த ஆண்டே அது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. 1951-ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உருவாக்கப்பட்டது. அடுத்த ஐந்தாண்டுகளில் 1956-ம் ஆண்டே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டது. 2016-ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த மூன்று ஆண்டுகளில் 2019-ல் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் 1965-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜேவிபி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற சுமார் 60 ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது. ஒரு புறம் அக்கட்சியை ஒரு கொம்யூனிசப் பேயாகவே சித்திரித்து வந்த வலதுசாரி தேசியவாத ஆட்சியாளர்கள் அதனை இருமுறை தடை செய்தார்கள். அதன் விளைவாக இருமுறை தலைமறைவு அரசியலுக்குள் தள்ளப்பட்டதுடன் இரு முறை ஆயுதம் ஏந்தி கிளர்ச்சி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். முதல் மூன்று தசாப்தகாலம் அதிகார வர்க்கத்தின் நெருக்குதல்களுக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் பலியாக நேரிட்டது. அடுத்த மூன்று தசாப்தங்களாகத் தான் அரசியல் அழுத்தங்களையும் பாதுகாப்பு நெருக்கடிகளையும் எதிர்கொண்டபடி முற்றிலும் நாடாளுமன்றவாதப் பாதையில் பயணித்து இறுதியில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் இந்த வெற்றிக்கு அதன் கொள்கைகளும், உள்ளக வெற்றிகளும் மட்டும் காரணமில்லை. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி, வீதிகளுக்கு வந்த மக்கள் பட்ட துன்பங்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அரகலய போராட்டம் என்பன இவ்வெற்றிக்கான முக்கிய உடனடிக் காரணங்கள் என்பது மறுப்பதற்கில்லை. மாறாக இலங்கையில் ஏனைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் பின் தள்ளிவிட்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டக் கோரி இன, மத, வர்க்க, சாதிய வேறுபாடின்றி மக்கள் தந்த ஆணை என்றே இந்த அரசியல் மாற்றத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்.

## உலக வரலாற்று சாதனை:

மூன்றே மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஒரேயடியில் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பலமான கட்சியாக மாறித் தன்னாட்சியை நிறுவியது. உலகில் வேறெங்கும் இப்படியான உதாரணங்கள் இல்லை. இதுவோர் பிரமாண்ட பாய்ச்சலே. இதற்காகக் கொடுக்கப்பட்ட விலை அதிகம்.

## 2/3 பெரும்பான்மை ஆபத்தா?

1977 தேர்தலில் ஜே.ஆர். அரசாங்கம் 5/6 பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்தது. 1978-ம் ஆண்டு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்தது. அந்த யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதே விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை. இலங்கையின் வாக்களிப்பு மரபின் பிரகாரமும், இனப் பரம்பல் காரணிகளும் இனி ஆட்சியமைபவர்கள் எவரும் 2/3



பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாதபடியான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அந்த அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தினார். உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு ஜனாதிபதியொருவருக்கான உச்சபட்ச அதிகாரத்தையும் அந்த அரசியலமைப்பின் மூலம் நிறுவினார். அதன் பிரகாரம் அந்த அரசிலயமைப்பை மாற்றுவதாக இருந்தால் கூட 2/3 பெரும்பான்மை இன்றி மேற்கொள்ள முடியாது என்று

ஜே.ஆர். மட்டுமல்ல பல அரசியல் வல்லுனர்களும் இதுவரை ஆரூடம் கூறி வந்திருக்கிறார்கள். 2024 தேர்தல் அந்த ஆரூடத்தைச் சுக்குநூறாக்கியது. அந்த நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஜே.ஆர். 1989 வரை ஆட்சி செய்தார்.

வரலாற்றில் இதுவரை 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்த ஆட்சியாளர்களின் ஆட்சியின் போதுதான், நாடு அதிக அராஜகத்துக்கும், அதிகார துஷ்பிரயோகத்துக்கும், பல நாசங்களும் உள்ளானது. 1970-ஆம் ஆண்டு 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த சிறிமா மேற்கொண்ட நாசங்களின் விளைவாகவே ஜே.ஆர். இலகுவாக 5/6 பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க முடிந்தது. இந்த இருவர் ஆட்சியிலும் மேற்கொண்ட அதிகார அராஜகத்தின் விளைவாக இரு ஆயுதக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. போதாததற்கு தமிழர் பிரதேசங்களில் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஜே.ஆரின் ஆட்சியின்போது 1980 யூலை வேலைநிறுத்தத்தின் போது லட்சக்கணக்கானோரை அரச உத்தியோகங்களில் இருந்து நீக்கினார். இக்காலப் பகுதியில்தான் ஜே.ஆர் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றை பயன்படுத்தி புதிய வடிவத்தினாலான அரச பயங்கரவாதத்துக்கு வழிவகுத்தார். 1982-ம் ஆண்டு நடத்த வேண்டிய பொதுத் தேர்தலை மேலும் ஏழு வருடங்களுக்குத் தள்ளி வைத்தார். 1983 யூலை படுகொலைகளைப் பின்னின்று புரிந்துவிட்டு அதற்கு சம்பந்தமே இல்லாத மூன்று கட்சிகளைத் தடை செய்தார். தனது அராஜகங்களை மீறுவோரை இலகுவாக நீக்கும் வகையில் தனது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை முன் கூட்டியே கையெழுத்து வாங்கி வைத்துக் கொண்டார்.

யுத்தத்தில் வென்றதை மூலதனமாக வைத்து 2010 தேர்தலில் 2/3 பெரும்பான்மை பலத்தை வென்ற மகிந்த ராஜபக்சவின் 2010 - 2015 வரையான ஆட்சி காலப்பகுதியில் மகிந்த ஏற்படுத்திய நாசங்களின் விளைவுகளையும், ஊழல் அராஜகம், துஸ்பிரயோகம் என்பவற்றின் விலைகளையும் இன்று முழு நாடும் அனுபவிக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அவ்வாட்சியில் மகிந்த ராஜபக்ச தனது 2/3 பலத்தைப் பயன்படுத்தி 18-வது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அதன் மூலம் தனது ஜனாதிபதி அதிகாரத்தை மேலும் அதிகரித்துக் கொண்டார். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தனது அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்தை எதிர்த்த பிரதம நீதியரசர் ஒருவரைப் பதவி நீக்கியதுடன் விசேட பெரும்பான்மையைப் பயன்படுத்தி ஜனாதிபதி பதவிக்கான கால வரம்பையும் நீக்கினார். அவ்வாட்சியானது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் சுயாதீன நிறுவனங்களையும் பலவீனப்படுத்தியது.

‘இந்த நிறைவேற்று அதிகாரம் ஒரு பைத்தியக்காரனின் கரங்களுக்குச் சென்றால் என்ன ஆகும்’ என்று அன்றே கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா எச்சரித்திருந்தார். வரலாற்றில் அதை சகல ஜனாதிபதிகளும் மெய்ப்பித்திருக்கிறார்கள். தம்மிடம் 2/3 பெரும்பான்மை பலத்தைத் தந்தால் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவதாகவும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை அகற்றுவதாகவும் கூறி கடந்த மூன்று தசாப்தங்களாகப் பல ஆட்சிகள் வந்து விட்டன. 2/3-ஐப் பெற்ற ஆட்சிகளோ அதனைச் செய்யவில்லை. 2/3 பெறாத ஆட்சிகளோ தம்மோடு ஏனைய கட்சிகள் சேர்ந்தால் தேசிய அரசாங்கம் அமைத்து அதனை செய்வதாகக் கூறின. அதுவும் நடந்ததில்லை.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மேலதிகமாகவே 2/3-ஐ விட அதிகமான ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். ஒரு நெருக்கடி காலத்து அரசாங்கத்துக்கு இந்தளவு அதிகாரம் அவசியமானதே. இன்று தேசிய மக்கள் சக்திக்கு எதிர்பாராத அளவுக்கு ஆதரவு கிடைத்துள்ளது. இவர்களும் புதிய அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டு வருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அது அவர்களே கூறிய ‘system change’-க்கு எந்தளவு வாய்ப்பளிக்கப்போகிறது என்பதைத்தான் இப்போது அனைவரும் கவனித்து வருகிறார்கள். ‘மறுபக்கம் எதிர்க்கட்சிகள் வலுவிழந்திருப்பது ஜனநாயக ஸ்திரத்தன்மைக்கு ஆபத்தான சமிக்ஞை’ எனப் பல அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

## விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ்?

1989-ம் ஆண்டு தேர்தலில் தான் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழான நாடாளுமன்றத் தேர்தல் முதன் முதலில் நடத்தப்பட்டது. அதன் மூலம் தெரிவான முதலாவது ஜனாதிபதி பிரேமதாச. அதே விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் முதன் முதலில் நடத்தப்பட்ட நாடாளுமன்ற தேர்தலும் அவ்வாண்டு தான் நடத்தப்பட்டது. மேற்படி விபரங்களின் பிரகாரம் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் இலங்கையில் முதன் முதலில் தனியொரு கட்சி அதிகப்படியான ஆசனங்களை வென்றது இந்த 2024 தேர்தலில் தான். 1977-ல் ஜே.ஆர். மொத்த ஆசனங்களில் 83.33 வீதத்தை வென்றார். 2024 தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மொத்தம் 159 ஆசனங்களை (61.56% வீத ஆசனங்களை) பெற்றிருக்கிறது. 2010 (144), 2020 (145), ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன முன்னணியானது முறையே 144, 145 (64% வீத) ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும் அது தனியொரு கட்சி பெற்ற ஆசனங்கள் அல்ல. அது பல கூட்டணிக் கட்சிகளின் ஆசனங்களையும் உள்ளடக்கியதே.

கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் 3% வீதத்தைப் பெற்றிருந்த அனுர குமார திசாநாயக்க ஐந்தே ஆண்டுகளில் 42% வீதத்தை தாண்டினார். ஒரு மாதத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 3 ஆசனங்களில் (1.33%) இருந்து 159 ஆசனங்களை (70.67%) அடைந்தார். இந்தளவு குறுகிய காலத்தில் ஒரேயடியாகத் தாண்டிய எந்த ஒரு கட்சியும் உலகில் இல்லை என்றே கூறலாம். அதேவேளை சென்ற தேர்தலில் 145 ஆசனங்களைக் கொண்டு ஆட்சியமைத்திருந்த பொதுஜன பெரமுன இம்முறை 3 ஆசனங்களை மட்டுமே பெற்றிருக்கிறது.

## வாக்களிப்புக் குறைந்தது ஏன்?

65.02% மக்கள் மட்டுமே வாக்களித்திருக்கிறார்கள். சுமார் ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட (5,325,108) வாக்காளர்கள் வாக்களிப்பில் இருந்து தவிர்த்து இருக்கிறார்கள். அப்படியா



யின் வாக்களித்தவர்கள் யார்? வாக்களிப்பைத் தவிர்த்துக் கொண்டவர்கள் யார்?

இந்தத் தேர்தலில் இதற்கு முன்னர் பிரதான கட்சிகளுக்கு வாக்களித்தவர்களில் ஒரு பகுதியினர் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிற அதேவேளை அவர்களில் எஞ்சிய பலரே வாக்களிப்பைத் தவிர்த்திருக்கிறார்கள் என்று பலர் கணிக்கிறார்கள். அதாவது இந்தப் பாரம்பரியக் கட்சிகளை வெறுத்தவர்களின் 'விரக்தி வாக்குகள் - அதிருப்தி வாக்குகள்' 'அலட்சிய வாக்குகள்' என்றே கருத இடமுண்டு. மேலும் இம்முறை யாரெல்லாம் தெரிவாக வேண்டும் என்பதை விட யாரெல்லாம் தெரிவாகக் கூடாது என்பதில் மக்கள் கவனமாக இருந்துள்ளனர்.

## வரலாற்றில் முதலாவது இடதுசாரி அரசாங்கம்?

இலங்கையில் மிதவாத வலதுசாரி தேசிய கட்சிகளோடு ஒப்பிடுகையில் அதிகளவிலான கட்சிப் பிளவுகளையும், உடைவுகளையும் இடதுசாரிக் கட்சிகளில் தான் ஏற்பட்டுள்ளன. இத்தகைய இரு வேறுபட்ட பிளவுகளில் உள்ள வித்தியாசம் யாதெனில் இடதுசாரி இயக்கங்களில் ஏற்பட்ட பிளவுகளில் பெரும்பாலானவை கொள்கை ரீதியான வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டவையே. ஜேவிபி யும் கடந்த 60 ஆண்டுகளில் பெரிய, சிறிய பிளவுகள் என பல்வேறு பிளவுகளைச் சந்தித்து வந்திருக்கிறது. அதையெல்லாம் தாண்டி அது தாக்குப்பிடித்து ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது என்றால் அது மகத்தான வரலாற்று வெற்றி என்றே கூறவேண்டும்.

மேலும் இலங்கையில் தற்போது உள்ள கட்சிகளிலேயே உயர்ந்தபட்ச கட்சி ஒழுங்கைக் கொண்டுள்ள முதன்மைக் கட்சியாக ஜேவிபியைக் குறிப்பிட முடியும். புதிய உலக ஒழுங்கின் கீழ் இடதுசாரிய மரபிலான கறாரான கட்சி ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாக்க முடிவதில்லை. இதனால் உலகம் முழுவதும் மரபான கட்சி விதிகள், கட்சி ஒழுக்கங்கள் என்பவற்றின் மீது தளர்வை ஏற்படுத்தும் நிர்ப்பந்தம் சகல இடதுசாரி இயக்கங்களுக்கும் ஏற்பட்டிருப்பது உண்மையே. அந்தப் போக்குக்கு ஜேவிபியும் விதிவிலக்கில்லை. ஆட்சிகளைப் புரட்சியின் மூலம் கைப்பற்றுவதோ, அதனை தடையின்றி பேணுவதோ நவீன உலகில் கற்பனாவாதமாகவே நோக்கப்படுகிறது. பூர்ஷ்வா தாராளவாத முறைமைக்குள் கிடைக்கிற வெளியைத் தந்திரோபாய ரீதியில் கையாள்வதே இன்றைய இடதுசாரி இயக்கங்களின் முன்னால் உள்ள தெரிவாகும். அதன் மூலம் ஆட்சியமைக்க முடியும் என்று நிறுவிய முக்கிய தேர்தல் இதுவாகும். ஆனால் பூர்ஷ்வா அமைப்புடன் தற்காலிகமாகப் பல்வேறு சமரசங்களைத் தற்காலிகமாக வேனும் செய்துகொள்ள நேரிடும்.

## இனப்பிரச்சினை:<br>சமரசம்! சரணடைவு?

அதேவேளை இத்தகைய பூர்ஷ்வா அமைப்பு வெறும் வர்க்க அமைப்புடன் மாத்திரம் சமரசம் செய்துகொள்ள நிர்ப்பந்திப்பதில்லை. மாறாக பல்வேறு சமூக எற்றத்தாழ்வுகளுடனும், சமூகச் சிக்கல்களுடனும் சமரசத்தை ஏற்படுத்திக் கொள்ள நிர்ப்பந்திக்கும். உதாரணத்துக்கு இலங்கைச் சூழலில் மையப் பிரச்சினையாகப் பல தசாப்தங்களாக நீண்டு கொண்

டிருக்கும் இனப் பிரச்சினையை அதே சமரசத்துக்குள் கொண்டு வைத்து விடுகின்றன. பெரும்பான்மை சிங்கள பௌத்த வாக்குகளைச் சவாலுக்கு இழுக்கும் துணிச்சல் தேசிய மக்கள் சக்திக்கு உண்டா என்றால் அது இல்லை என்றே உணர்ந்து கொள்ளலாம்.

அடிப்படை பேரினவாதக் கட்டமைப்புடன் மோதுண்டால் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவோ, அல்லது மீண்டும் அதிகாரத்துக்கு வரவோ முடியாது என்கிற கணிப்பை யதார்த்தமாக எவரும் உணர முடியும். பெரும்பான்மை வாக்கு என்பது சிங்கள பௌத்த தேசியவாத வாக்குகளே. அந்த சிங்கள பௌத்த வாக்கு வங்கியை யார் தக்கவைத்துக் கொள்வார்களோ அவர்களாலேயே ஆட்சியைக் கைப்



பற்ற முடியும் என்பதே இலங்கையின் தேர்தல் பண்பாட்டு மரபின் யதார்த்தமாக எஞ்சியுள்ளது. அவ்வாக்கு வங்கிக்கான போரைக் கூர்மை படுத்துவதற்காகவே பல தேசியக் கட்சிகள் தமக்குள் போட்டி போட்டு யார் சிறந்த சிங்கள பௌத்த தேசியவாதிகள் என்பதை நிறுவ முற்பட்டதன் விளைவே இலங்கையின் இனப்பிரச்சினையின் இன்றைய வடிவம்.

இன்று இலங்கை என்கிற தேசமானது சிங்கள - பௌத்த பேரினவாதமயப்பட்ட தேசமே. அரசு என்பது சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பே. அதில் எந்த அரசாங்கம் பதவியேற்றாலும் அரசின் நிகழ்ச்சிநிரலையும், அதன் நீட்சி மரபையுமே பேணிக்கடக்கின்ற தற்காலிக சக்திகளே. தேசிய மக்கள் சக்தியும் அதில் விதிவிலக்காக ஆகப் போவதில்லை. ஆனால் இதுவரை வந்த அரசாங்களில் இருந்து வேறுபடும் ஒரே விடயம் கொள்கையளவில் இனவாதத்துக்கு எதிரான கொள்கைத் திட்டத்தை அவர்கள் கொண்டிருகிறார்கள் என்பதும், அதற்குரிய ஒரு ஒழுக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தான்.

அவர்களால் மதசு; சார்பற்ற ஒரு அரசை நிறுவ முடியும் என்று நம்புவதற்கில்லை. சிங்கள பௌத்த தரப்பையோ, கட்டமைப்பையோ திருப்திபடுத்தாமல் ஆட்சியை இலகுவாக கொண்டு செல்ல முடிவதில்லை. முன்னைய ஆட்சி முறைகள் கைக்கொண்ட சிங்கள பௌத்த ஆதரவில் இருந்து சற்று தளர்வுகளைச் சிலவேளைகளில் காண முடியும். பல முக்கிய அரச வைபவங்களில் மதச் சடங்குகளைத் தவிர்த்திருப்பதைக் கவனிக்க முடிகிறது. ஜனாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கத்தின் போது கூட வழமையான மத அனுஷ்டானங்கள், சடங்குகள் இருக்கவில்லை.

## இன்றைய சிங்கள பௌத்த தேசியவாத வடிவம்:

மக்கள் அரசாங்கத்தை மாற்றி இருக்கிறார்கள் அரசை மாற்றவில்லை. அரசுக்கு என்று சில இயல்புகள் உள்ளன. 1833-இல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட அரச கட்டமைப்பு முறையானது பல யாப்பு சீர்திருத்தங்களுக்கு ஊடாகவும் நிர்வாக ரீதியாகவும் ஆட்சி ரீதியாகவும் பல மாற்றங்கள் கண்டு 1948 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையர்களுக்கு கைமாற்றப்பட்டு வேறு வடிவம் பெற்று இன்று அது ஒரு அரச கட்டமைப்பாகவே இயங்கி வருகிறது.

இனத்துவ, மதத்துவ, சாதிய, நிலப்பிரபுத்துவ, ஆணாதிக்க ரீதியிலான பண்பாட்டுக் கூறுகளையும் தாங்கிக் கொண்டு தான் இந்த அரச கட்டமைப்பு தன்னை வளர்த்துக்கொண்டு வந்துள்ளது. இந்த இயல்பை முற்போக்குக் கூறுகளுடன் வளர்த்தெடுப்பது இலகுவானதல்ல. அதை மாற்றுவதற்கு நூறுவீதம் தயாராக இருக்கும் எந்த அரசாங்கத்தாலும் கூட அதனை மாற்றிவிட முடியாது. ஏனென்றால் அரச கட்டமைப்பின் இயல்புகளாக ஆக்கப்பட்டுள்ள அந்த நாசகர ஆதிக்க இயல்புகளோடு தன்னை வளர்த்துக்கொள்ள அதிக காலத்தையும், உழைப்பையும், சக்தியையும் செலவழித்திருக்கிறது.

அதை ஒரேயடியில் மாற்றும் மாயாஜாலர்கள் எவரும் இதுவரை நமக்கு வாய்த்ததில்லை. இனியும் வாய்க்கப்போவதுமில்லை. நிறுவனமயப்பட்ட பேரினவாதத்துக்கு ஒரு வடிவம் உண்டு, அதற்கு எனத் தன்னளவில் வளர்த்து வந்த சித்தாந்தம் உண்டு. அதைக் கொண்டு இயக்க பல சிவில் அமைப்புகளும், கட்சிகளும் நிறுவனங்களும் உள்ளன. அதனைப் பலப்படுத்தவெனச் சிவில் நிர்வாகத்துறை இறுக்கமாக உள்ளது. ஈற்றில் அது நிறுவனமயப்பட்ட ஒன்று என்கிறோம். அதை மாற்றுவதாயின் மீண்டும் பெரு விலை கொடுத்தே அக்கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதற்கு தேசிய மக்கள் கட்சி குறைந்தபட்ச அடிப்படையானப் பலத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு ஆறுதல். அத்தகைய ஆரம்பத்தை ஏற்படுத்துவதற்கான பெரும்பான்மை பலமும் அவர்களிடமுண்டு.

கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறியவர்கள் இதனைச் சரிசெய்யாமல் நாட்டின் ஆரோக்கியமான வளர்ச்சியை முன்நகரத்த முடியாது என்கிற உண்மையை

உணர்த்த போதுமான சிங்கள சக்திகள் இல்லை. தமிழர் தரப்பும் துருவமயப்பட்டு சமரசத்துக்கு சற்றும் அருகில் நெருங்கத் தயாரில்லாத எதிர்ப்பரசியலை மட்டுமே செய்து வருவதை பெரும்போக்காகக் (mainstream) கொண்டிருக்கி

| ஆண்டு | இடங்கள் | பிரதான கட்சிகள் | முடிவுகள் | ஆசனம் | ஆட்சியாளர் |
|---|---|---|---|---|---|
| மே 27, 1970 | 151 | ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க., ல.ச.கட்சி | ஐதேக: 37.91% | 17 | சிறிமாவோ பண்டாரநாயக்கா (ஸ்ரீ.ல.சு.க) |
| | | | ஸ்ரீ.ல.சு.க: 36.86 | 91 | |
| | | | ல.ச.கட்சி 8.68 | 19 | |
| ஜுலை 21, 1977 | 168 | ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க. | ஐதேக: 50.92% | 140 | ஜே.ஆர்.ஜயவர்தன (ஐ.தே.க) |
| | | | ஸ்ரீ.ல.சு.க: 29.72% | 8 | |
| பிப்ரவரி 15, 1989 | 225 | ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க, ஜே.வி.பி. | ஐ.தே.க: 50.71% | 125 | ரணசிங்க பிரேமதாச (ஐ.தே.க.) |
| | | | ஸ்ரீ.ல.சு.க: 29.44% | 67 | |
| | | | ஜேவிபி: 5.16% | 3 | |
| ஓகஸ்ட் 16, 1994 | 225 | பொ.மு., ஐ.தே.க. | பொ.ஐ.மு: 48.94% | 105 | சந்திரிகா குமாரதுங்க (பொ.மு.) |
| | | | ஐ.தே.க: 44.04% | 94 | |
| ஒக்ரோபர் 10, 2000 | 225 | பொ.மு., ஐ.தே.க. | பொ.ஐ.மு: 45.11% | 107 | சந்திரிகா குமாரதுங்க (பொ.மு.) |
| | | | ஐ.தே.க: 40.22% | 89 | |
| டிசம்பர் 5, 2001 | 225 | ஐ.தே.க., பொ.மு. | ஐ.தே.க: 45.62% | 109 | ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க.) |
| | | | பொ.ஐ.மு: 37.19% | 77 | |
| ஏப்ரல் 2, 2004 | 225 | ஐ.ம.சு.கூ., ஐ.தே.க. | ஐ.ம.சு.கூ: 45.60% | : 105 | மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.கூ) |
| | | | ஐ.தே.க: 37.83% | 82 | |
| ஏப்ரல் 8, 2010 | 225 | ஐ.ம.சு.கூ., ஐ.தே.க. | ஐ.ம.சு.கூ: 60.33% | 144 | D.M. ஜயரத்ன (ஐ.ம.சு.கூ) |
| | | | ஐ.தே.க: 29.34% | 60 | |
| ஓகஸ்ட் 17, 2015 | 225 | ஐ.தே.க, ஐ.ம.சு.மு. | ஐ.தே.க: 45.66% | 106 | ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க.) |
| | | | ஐ.ம.சு.கூ: 42.38% | 95 | |
| ஓகஸ்ட் 5, 2020 | 225 | ஸ்ரீ.ல. பொ.பெ: ஐ.ம.ச: | ஸ்ரீ.ல.பொ.பெ: 59.09% | 145 | மஹிந்த ராஜபக்ஷ (ஸ்ரீ.பொ.பெ) |
| | | | ஐ.ம.ச: 23.90% | 54 | |
| நவம்பர் 14, 2024 | 225 | தே.ம.ச, ஐ.ம.ச: | தே.ம.ச 61.56% | 159 | அனுர குமார திசாநாயக்க (தே.ம.சக்தி) |
| | | | ஐ.ம.ச: 17.66% | 35 | |

**பொ.ஐ.மு – பொதுஜன முன்னணி**
**ஐ.ம.சு.கூ. – ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி**
**ஐ.தே.க – ஐக்கிய தேசியக் கட்சி**
**ஐ.ம.ச – ஐக்கிய மக்கள் சக்தி**
**ஸ்ரீ.சு.க – ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி**
**ஸ்ரீ.பொ.பெ – ஸ்ரீ லங்கா போது ஜன பெரமுன**
**ஜே.வி.பி. – மக்கள் விடுதலை முன்னணி**
**தே.ம.ச – தேசிய மக்கள் சக்தி**

றது. சமரசம் என்றால் சரணாகதி என்று நம்பிக் கொண்டிருக்கும் வரை எந்த மாற்றத்தையும் நிகழ்த்த முடியாது. அரச தரப்பிடம் இருந்து சமரசத்தை எதிர்பார்ப்பது போலவே தமிழர் தரப்பிலும் விட்டுக்கொடுப்புகளுக்கு தயாராக வேண்டியது காலத்தின் கட்டாயம். சமரசம் என்பது இரு தரப்பு நெகிழ்ச்சியையும் முன்நிபந்தனையாகக் கொண்டதே. இனி வரும் நாட்களில் இனப்பிரச்சினை குறித்த அணுகுமுறைகளைக் கண்காணிப்பதும் அது குறித்த வினையாற்றலைச் செய்யும் கடமை சிறுபான்மையினருக்கு உரியது.

## முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவி விவகாரம்:

தேசிய மக்கள் கட்சியை ஆதரித்த பல முஸ்லிம்கள் அமைச்சரவையில் முஸ்லிம் எவரும் தெரிவாகவில்லையே என்கிற அதிருப்தியை முன்வைத்தனர். சுதந்திரத்துக்குப் பின்னர் முஸ்லிம்கள் அல்லாத அமைச்சரவை என்று விமர்சித்தனர். முஸ்லிம் ஆதரவாளர்கள் பலருடன் சந்திப்பை நடத்திய அமைச்சர் விஜித ஹேரத் இதற்கு பதில் அளித்தபோது ‘இதை வைத்து இனவாதிகளாக எங்களை விமர்சிக்க முயற்சிக்காதீர்கள். முஸ்லிம்களுக்கு நியாயம் கோரி பல தடவைகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவர்கள் நாங்கள் என்பதை மறந்து விடக்கூடாது. பாடசாலை முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாப் உடைக்கான துணி வகைகளை வழங்கக் கோரி அமைச்சரவைப் பத்திரம் வழங்கியதும் சிங்களவனாகிய நான் தான். முஸ்லிம் அமைச்சர்கள் அல்லர். முஸ்லிம் ஒருவர்தான் கட்டாயம் இருக்க வேண்டும் என்றில்லை. இம்முறை அம்பாறையில் முஸ்லிம்கள் எவரும் தெரிவாகவில்லை. முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அங்கே அவசியம் என்பதற்காகத் தேசியப் பட்டியலின் மூலம் ஆதம் பாவா என்கிற ஒரு முஸ்லிம் உறுப்பினரை அங்கே தெரிவு செய்தோம். மேல் மாகாணத்துக்கான ஒரு கவர்னராக முஸ்லிம் ஒருவரையே தெரிவு செய்தோம்...’ என்றார்.

அமைச்சரவை 25-க்குள் சுருக்கப்பட்டுவிட்டதால் முக்கிய அமைச்சர்கள் கட்சியின் சிரேஷ்டர்கள், முக்கிய துறைசார் நிபுணர்கள் என்போரையே தெரிவு செய்ய நேரிட்டது என்றும் இன, மத அடிப்படையில் தெரிவான அமைச்சரவை அல்ல இதுவென்றும் இது விடயத்தில் பதிலளிக்கப்பட்டு வருகிறது. இதேவேளை தேசிய மக்கள் சக்தியின் நீண்டகாலத் தலைமை வகித்து வரும் பல சிரேஷ்ட தலைவர்களிடம் உங்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லையே என்கிற கேள்வியை ஊடகங்கள் கேட்டபோது. எங்கள் கடமைகளைச் செய்ய அமைச்சுப் பதவிகள் எங்களுக்கு அவசியமில்லை. தேவைப்பட்டால் கட்சி தெரிவு செய்யும். என்றே பதில் அளித்து வருகின்றனர். இது ‘சேர்’ மாரின் அரசாங்கம் அல்ல. தோழர்களின் அரசாங்கம்.’!

புதிய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் தம்மை சேர் என்று அழைக்க வேண்டாம் என்றும் பெயர் கொண்டோ அல்லது தோழர் என்றோ அழையுங்கள் என்று தெரிவித்து வருகிறார்கள். சேர், மாண்புமிகு, போன்ற சொல்லாடல்களால் மேலே தூக்கி வைத்ததன் விளைவே இதற்கு முந்திய ஆட்சியாளர்களை அதிகாரத்துவத்துக்கு இட்டுச் சென்றது என்றும் தெரிவிக்கின்றனர். இந்தத் தேர்தலும் புதிய ஆட்சியையும் ஒரு புதிய அரசியல் பண்பாட்டை அறிமுகம் செய்து கொண்டிருக்கிறது என்றே பல நோக்கர்களும் தெரிவிக்கிறார்கள்.

புதிய அமைச்சரவையில் பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்து பேரைத் தவிர ஏனைய அனைவரும் அமைச்சரவைக்குப் புதியவர்கள். அந்த ஐவரும் 2004-ம் ஆண்டு மகிந்த ஆட்சியின்போது அமைச்சர்களாகச் சிறிது காலம் இருந்தவர்கள். தேசிய மக்

கள் சக்தியின் 159 உறுப்பினர்களும் தமது சம்பளத்தை எடுப்பதில்லை என்றும், பொது நிதிக்கே அச்சம்பளத்தை வழங்குவது என்று தீர்மானித்து இருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் வசதிகள், சலுகைகள் பலவற்றைப் பெறுவதை தவிர்த்து இருக்கிறார்கள். இதுவரை ஒவ்வொரு உறுப்பினருக்கும், அமைச்சர்களுக்கும் என பாதுகாப்புக்கு பொலிசார், இராணுவம், உதவியாளர்கள், வீடு, பராமரிப்புக்கென ஏகப்பட்ட செலவுகள் எல்லாவற்றையும் அனுபவித்து வந்தார்கள். சேவை செய்ய வந்தவர்களுக்கு இத்தனை வசதிகள் தேவையில்லை என்பதே தேசிய மக்கள் சக்தியின் கொள்கை. அமைச்சர்களுக்கு கூட முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பல வசதிகள் கூட வழங்கப்படவில்லை எனத் தெரிகிறது.

கைத்தொழில் அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட அன்று சுனில் ஹந்துநெத்திக்கு வந்த ஒரு தொலைபேசி அழைப்பை தனக்கு வாழ்த்து தெரிவிக்க வந்த அழைப்பென நினைத்து மகிழ்ச்சியுடன் 'நான் அமைச்சர் ஹந்துநெத்தி பேசுகிறேன்' என்றபோது மறுமுனையில் கறாராக 'உங்கள் தொலைபேசி கட்டணப் பாக்கி 22 ஆயிரத்தைக் கடந்துவிட்டது நாளைக்குள் கட்டாவிட்டால் இணைப்பைத் துண்டித்துவிடுவோம்' என்று எச்சரித்து விட்டு அப்பெண் வைத்து விட்டதாகவும். தனக்கு வந்த முதல் அழைப்பே இப்படித்தான் என்றும் நகைச்சுவையுடன் வெளிப்படுத்தி இருந்தார்.

எல் போர்ட் (L Borad) அரசாங்கம் என்று ரணில் சமீபத்தில் கேலி செய்திருந்தார். முன்னாள் தேர்தல் ஆணையார் மகிந்த தேஷப்பிரிய ஊடக மாநாட்டில் 'கலியாணம் கட்டுவதற்கு முதல், அனுபவம் பெற்றுவிட்டு வரவேண்டும் என்கிறீர்களா ?' என்று வினவியிருந்தார். இந்த அமைச்சர்கள் ஒரு கட்டுக்கோப்பான கட்சியின் கொள்கைக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதை நினைவிற் கொள்வோம்.

அமைச்சரவையில் ராமலிங்கம் சந்திரசேகரனும் பிரதி அமைச்சர்களாக பதவியேற்ற பிரதீப், அருண் ஆகியோரும் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நாடாளுமன்றத்தில் 22 பெண்கள், தேசிய பட்டியலின் மூலம் நாடாளுமன்ற உறுப்புரிமை எல்லாம் புதிய ஆரோக்கியமான அரசியல் பண்பாட்டுக்கான தொடக்கம்.

இதுவரையான அரசாங்க மரபில் மாற்றமும் மறுமலர்ச்சியும், புதிய அரசியல் பண்பாடும் ஆரம்பிக்கிறது என்று உணர முடிகிறது. மக்களுக்கு இதுவோர் புதிய அனுபவம். இவ்வாறு சாத்தியமா என்று பலர் ஆச்சரியப்படுகிறார்கள். இனி வருபவர்களுக்கும் ஒரு முன்மாதிரியான உதாரணமாக இந்த அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் தேசிய மக்கள் சக்தியினர்.

நாம் எவரும் விரும்புகிற, நாம் எவரும் கனவு காண்கிற ஒரு ஆட்சியை எவராலும் ஏற்படுத்திவிடமுடியாது. ஒரு வித கனவு utopian மனநிலையில் இந்த அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பதை விட கடந்த 76 ஆண்டுகளில் காணாத முற்போக்கான -முன்னுதாரண மாற்றங்களைக் காண முடியும் என்றே ஊகிக்க முடிகிறது.

இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அது லேசானது அல்ல. அதிக சவால்களை எதிர்கொள்ள நேரிடும். ஏகாதிபத்தியம், கார்பரேட்டுகள், முதலீட்டாளர்கள், ஊழல் மாபியாக்கள், வலதுசாரி தேசியவாத வங்குரோத்து அரசியல் எதிரிகள், இனவாதிகள், இதுவரை லஞ்சம், ஊழல், துஷ்பிரயோகம், விரயம் என்பவற்றுக்குப் பழகிய சிவில் நிர்வாகத்துறை என ஏராளமானவற்றை எதிர்கொள்ள நேரிடும். இதுவரை இருந்த அரசாங்கங்கள் அத்தகையவற்றுக்கு சமரசம் செய்து கொண்டு விலை போனவையாக இருந்தன.

அது இந்த அரசாங்கத்தில் நடக்காது. காரணம் இங்கே அத்தகைய நிலைமையைக் கண்காணித்து சரிசெய்யும் பொறிமுறை உண்டு. கடந்த காலங்களைப் போல அரசியல் லாபத்துக்காக கூட்டுக் கட்சிகளின் நிர்ப்பந்தங்களில் தங்கியிராத அரசாங்கம். தனிநபர்வாதம், அதிகாரத்துவம் என்பவற்றைக் கொண்டிராமல் கடமைக்கே முன்னுரிமை என்கிற அரசாங்கம். இதுவரை அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பெருமளவு சலுகைகள் இராது. அவர்கள் ஊதியத்துக்கு வேலை பார்க்க வந்தவர்கள் அல்லர். கடமையை நிறைவேற்ற வந்த செயற்பாட்டாளர்கள். குறைகள் இல்லாமல் இருக்க முடியாது. அதனைச் சரி செய்வதற்கான பொறிமுறை அங்கு உண்டு என்பதே நமக்கு பேராறுதல். இந்த ஆட்சியானது ஒரு கட்டுக்கோப்பான கட்சிக்கு கட்டுப்பட்டது என்பது இலங்கை ஆட்சிமுறைக்கு புதியது என்பதை கவனிக்க வேண்டும்.

76 ஆண்டுகாலம் பொறுத்திருந்த நமக்கு இந்த ஐந்து ஆண்டுகளைச் சரியாக முறையாக செய்ய ஒத்துழைப்பை நாடியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினரோ அடுத்த மாதமே வந்து 'சொன்ன சொல் எங்கே..., தீர்வெங்கே...!' என்று அரசியல் செய்யத் தொடங்கி விடுவார்கள். அதற்குரிய ஒழுங்குக்கு அவகாசம் கொடுப்பதும் நமது கடமை. அதேவேளை ஆக்கப்பூர்வமாக விமர்சிப்பது நமது உரிமை. மக்கள் விரோத அரசாங்கமாக மாறினால் அதனைத் தூக்கியெறிவதையும் மக்களால் செய்ய முடியும் என்பதையும் இதே அரசாங்கம் தெரிவான முறைக்கு ஊடாக காட்டப்பட்டமையும் சிறந்த உதாரணம்.

இதனை மறுமலர்ச்சி என்கிற வார்த்தை கொண்டு அழைக்கிறார்கள் பெருவாரி மக்கள். அந்த நம்பிக்கைக்கு நியாயம் செய்யுமா? தேசிய மக்கள் கட்சி என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

### சில சிறப்பம்சங்கள்:

- இலங்கையின் சனத்தொகை 22 மில்லியன்கள். இதில் இம்முறை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கை 17,140,354 அதாவது மொத்த சனத்தொகையில் 77.91%.
- அதில் அளிக்கப்பட வாக்குகளின் எண்ணிக்கை 11,148,006. (மொத்த வாக்காளர்களில் 65.02%)
- நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 667,240. (அளிக்கப்பட்ட வாக்குகளில் 5.99%)
- தெரிவு செய்யப்பவர்களின் கட்சிகளைச் சேர்ந்த 12 மற்றும் ஒரு சுயேச்சை குழு ஆகியவற்றுக்குமாக 10,457,009 வாக்குகள் வழங்கப்பட்டுள்ளன.
- எஞ்சிய 690,997 வாக்குகளும் தெரிவாகாத கட்சிகளுக்கும், சுயேட்சை குழுக்களும் வழங்கப்பட்டுள்ளன. இது சுமார் 6

வீத வாக்குகளாகும்.

- 17,710 வாக்குகளைப் பெற்ற இலங்கை தொழிற்கட்சிக்குக் கூட ஒரு ஆசனம் கிடைத்திருகிறது என்றால் இப்பயன்ப டாத வாக்குகளின் பெறுமதியை நீங்கள் விளங்கிக் கொள் ளலாம்.
- கடந்த 2020 தேர்தலில் இலங்கையிலேயே அதிகப்படி யான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களில் முதலாவது இடம் மகிந்த ராஜபக்ச. அவர் 527,364 விருப்பு வாக்குக ளைப் பெற்றிருந்தார். இரண்டாம் இடத்தில் இருந்தவர் சரத் வீரசேகர. அவர் மொத்தம் 328,092 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.
- மகிந்த அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார். அதிகப்படி யான வாக்குகளைப் பெற்றிருந்த சரத் வீரசேகர இம்முறை முற்றிலும் குறைந்த பட்ச வாக்குகளைக் கூட பெற்று நாடா ளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை.
- இவ்வாறு கிட்டத்தட்ட இனவாதத்துக்கு நேரடி தலைமைத் துவத்தைக் கொடுத்து வந்த பலர் தோற்கடிக்கப்பட்டிருக் கிறார்கள்.
- முன்னைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த 167 பேர் இழந்துள்ளனர். புதிதாக 176 உறுப்பினர்கள் நாடாளுமன் றத்துக்கு. இலங்கையின் வரலாற்றில் முதற்தடவை அதிக ளவிலான பட்டதாரிகளைப் நாடாளுமன்றத்துக்கு அனுப் பிய தருணம்.
- 1978 இரண்டாவது குடியரசு யாப்பின் கீழ் தனியொரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற முதல் சந்தர்ப் பம்.
- இலங்கையின் வரலாற்றில் முதற் தடவையாக இடதுசாரி கட்சியொன்று ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறது
- வரலாற்றில் முதற் தடவையாகத் தமிழர்களின் கோட்டை யாகக் கருதப்படுகிற யாழ்ப்பாணத்தில் தமிழ் கட்சியாக அல்லாத ஒரு கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.
- முதற் தடவையாக 22 பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருக்கிறார்கள்.
- முதற் தடவையாக சானு நிமேஷா என்கிற திருனர் (இலங்கை சோசலிசக் கட்சி) தேர்தலில் பங்குபற்றியிருக் கிறார்.
- முதற் தடவையாக நாடாளுமன்றத்துக்கு பார்வையற்ற மாற்றுத் திறனாளியொருவர் நாடாளுமன்ற உறுப்பினரா கத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தேசிய மக்கள் சக்தி தமது தேசியப் பட்டியலின் மூலம் சுகத் வசந்த டி சில்வா என்கிற பார்வையற்ற பட்டதாரி ஒருவரே அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்.



sarawanan.n@thaiveedu.com



# இலங்கையில் தேர்தல் அரசியலின் மாற்றமுறும் தன்மை : 2024-ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலும் அதன் தாக்கமும்

– ரமேஷ் ராமசாமி
– எம்.எம். இஃஜாஸ்

மிகுந்த ஆவலுடன் எதிர்ப்பார்க்கப்பட்ட இலங்கையின் சனாதிபதித் தேர்தலானது, தற்போதைய ஆட்சி முறை மற்றும் அரசியல் கலாசாரம் ஆகிய இரண்டிலும் ஓர் அடிப்படை மாற்றத்தை வலியுறுத்தி தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்ட அனுரகுமார திசாநாயக்கவின் (AKD) வெற்றியோடு முடிவுக்கு வந்துள்ளது. இத்தகையதொரு மாற்றம் ஒன்றினையே 2022-ம் ஆண்டு இடம்பெற்ற 'ஜனத்தா அரகலய' என்று அழைக்கப்படும் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் இளைஞர்களும் கோரி நின்றனர். தேசிய மற்றும் சர்வதேச அவதானிப்பாளர்களின் கூற்றுப்படி, 2024-ம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலானது, மக்கள் தமது இறைமை அதிகாரத்தை பயன்படுத்தி தமது ஆட்சியாளர்களைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கு வாய்ப்புக்கிட்டிய மிகவும் அமைதியானதும் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலாகும். எனவே, இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீண்டும் ஒருமுறை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, அதிகாரத்தை கைமாற்றுவதற்கான ஒரேயொரு வழி என்ற வகையில் ஜனநாயகம் இலங்கையில் மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஓர் அரசியல் முறைமை என்ற வகையில் ஜனநாயகத்தின் மீதான இலங்கை மக்களின் பற்றுறுதி மற்றும் திட நம்பிக்கை ஆகியவற்றை இத்தேர்தல் மீண்டும் ஒரு முறை பறை சாற்றியுள்ளது. சுமார் 75 விகிதமான இலங்கையர்கள் தேர்தலில் வாக்களித்தமை இதற்கான சான்றாகும். தேர்தலின் பின்னர் முன்னைய ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடமிருந்த அதிகார கைமாற்றம் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது. இது, இலங்கையின் பலமான நிறுவனமயப்படுத்தப்பட்ட ஜனநாயகத்துக்கான ஓர் சான்றாக அமைகிறது. பல்வேறு காரணங்களுக்காக இத்தேர்தல் முக்கியமானதாக திகழ்வதோடு, எமக்கு பல படிப்பினைகளையும் வழங்கியுள்ளது. எனவே, 2024-ம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முக்கிய பிரதிபலிப்புகளைச் சுருக்கமாக ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக்கொண்டுள்ளது.

## வாக்களிப்பு நடத்தையில் வகுப்பு ரீதியான போக்குகள்:

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இலங்கையின் அரசியலானது பிரபுத்துவ குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒரு சக்தி வாய்ந்த சிறிய அரசியல் மற்றும் சமூக மேட்டுக்குடி (உயர் வகுப்பு) குழுவினரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. முக்கியமாக, பிரேமதாச மற்றும் சிறிசேன ஆட்சிகாலத்தில் கூட அரசாங்கத்தின் தலைவர் கீழ் வகுப்புப் பின்னணியைக் கொண்டவர்களாக இருந்தபோதும், அரசாங்கத்தின் உள் வட்டாரம் எப்போதும் மேட்டுக் குடியினர் வசமே இருந்தது. எனவே, இலங்கையின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியதர அல்லது கீழ் வகுப்பினைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் ஒருபோதும் அதிகார ஆசனத்தில் வீற்றிருக்கவில்லை - தீர்மானம் மேற்கொள்ளலில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கவும் இல்லை. இது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றலாம். எனினும், நடுத்தர அல்லது சாதாரண வகுப்பு பின்னணியைக் கொண்ட அரசியல்வாதிகளுக்கு நாட்டின் கொள்கை வகுத்தலில் மிகவும் வரையறுக்கப்பட்ட அளவிற்கே செல்வாக்குச் செலுத்த முடிந்தது. தத்தமது அமைச்சுகளுக்கு வழங்கப்பட்ட நிர்வாக அதிகாரங்களை அவர்கள் கொண்டிருந்தார்களே தவிர, நாடாளுமன்றத்தினால் அல்லது அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தீர்மானங்களில் அவர்கள் எவ்வித செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை. எப்போதும், நாடாளுமன்ற உறுப்பினர்களுள் மிகப் பெரும்பான்மையானோர் நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்கள் அல்லது அரசியலமைப்பிற்கான திருத்தங்கள் ஆகியவற்றை அங்கீகரிப்பதற்காக அமோக ஆதரவுடன் தமது கைகளை உயர்த்திய போதிலும், அவற்றை அவர்கள் வாசிப்பதோ அல்லது புரிந்து கொள்வதோ இல்லை. வேறு வகையில் கூறுவதாயின், முக்கிய தீர்மானங்களை எப்போதும் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு சிறிய மேட்டுக்குடி வகுப்பினரோடு இணைந்து உயர் குழாம் அரசியல் வர்க்கம் மேற்கொண்டது. சாதாரண வகுப்பு பின்னணியோடு வந்த அரசியல்வாதிகளுள் மிகப் பெரும்பான்மையினர் அதிகாரத்தின் வெளிப்புற விளிம்பு நிலையில் காணப்பட்டனர்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக, குறிப்பாக, 1978-ம் ஆண்டிற்குப் பின்னர், அரசியல் களம் கணிசமான அளவு இன்று மாறியுள்ளது என்பதனை உணர முடிகின்றது. இதனைப் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. அதாவது அனுசரணை அரசியல் (patronage politics) அல்லது காப்பாளன் - கட்சிக்காரன் (patron-clientelism) உறவு மற்றும் மேட்டுக்குடியினர் அரசைக் கைப்பற்றுதல் ஆகியவற்றுக்கு வழிவகுத்து, சுமார் 75 ஆண்டுகளுக்கு மேல் இந்த நாட்டை ஆட்சி செய்த எண்ணிக்

கையில் சிறிய அரசியல் வகுப்பினரை இனியும் நம்புவதற்குத் தாம் தயாரில்லை என்ற தீர்ப்பினை இத்தேர்தல் மூலம் இலங்கை மக்கள் வழங்கியுள்ளனர். ஆளும் வர்க்கத்தினரின் தொடர்ச்சியான தீயஆட்சி, ஊழல், அனுசரணை அரசியல், நண்பர்சார்புவாதம் மற்றும் பரம்பரை அரசியலைப் பாதுகாத்தல் ஆகியன காரணமாக இலங்கையின் வாக்காளர்களில் ஒரு கணிசமான பிரிவினர் ஆளும் வர்க்கத்தினர் மீது அதிருப்தியுற்றுள்ளனர் அல்லது அவர்களை வெறுக்கவும் செய்கின்றனர் என்பதை 2024-ம் ஆண்டு சனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இறுதியில் மேற்போந்த காரணிகளே 2022-ல் இலங்கையை பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலைக்கு உள்ளாக்கின என்ற கருத்து இன்று சமூகமயப்படுத்தப்பட்டுள்ளது போல் தென்படுகின்றது. எனவே, இத்தேர்தலில் மக்கள் ஒரு கிராமிய, ஆளும் வர்க்கம் சாராத, மேட்டுக்குடி சாராத குடும்பப் பின்னணியிலிருந்து வரும் ஒரு தலைவரைத் தமது தெரிவாக மேற்கொண்டுள்ளனர். இவ் அதிகார நிலைமாற்றமானது, இலங்கையின் பாரம்பரிய அரசியல் கலாசாரம் ஒரு புதிய யுகத்திற்குள் காலடியெடுத்து வைத்துள்ளதை காட்டுகின்றது. குறிப்பாக, மக்கள் மைய, திறந்த, பொறுப்புக்கூறல்மிக்க, ஊழலற்ற, கீழிருந்து மேல்நோக்கிய, திறமைக்கு முதலிடம் மற்றும் பங்கேற்பு ஆட்சிமுறை யுகத்தினை நோக்கி நிலைமாற்றமுறுவதன் தொடக்கத்தை உணர்த்தி நிற்கிறது.

## இனத்துவமும் வாக்களிப்பு நடத்தையும்:

இனத்துவம், பிரதேசம், சாதி மற்றும் மதம் ஆகியவற்றிற்கிடையிலான இடைத்தொடர்பின் மாற்றமுறும் தன்மை பற்றிய முக்கிய புரிதல்களையும் இத்தேர்தல் முடிவுகள் எமக்கு வழங்குகின்றன. இன, மத உணர்வுகளைத் தூண்டிவிடுவதற்கு தன்னலவாதிகளால் ஒரு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக தேர்தல் பிரசாரத்தின்போது இனவாதம் எவ்வித தாக்ககரமான பங்கையும் வகிக்கவில்லை என்பது தெளிவு. மொட்டுக் கட்சி மற்றும் திலித் ஜயவீரவின் மௌபிம ஜனத்தா கட்சி ஆகியவை தோற்கடிக்கப்பட்டமை இக்கருத்தினை மேலும் உறுதிப்படுத்துகிறது. எனினும், வாக்களிப்பு நடத்தையில் இன மற்றும் மதக் காரணிகளின் செல்வாக்கு ஓரளவுக்கேனும் இருந்தது என்பதும் மறுப்பதற்கில்லை. ஆயினும் நாடாளுமன்றத் தேர்தலில் இன, மத, சாதி மற்றும் பிரதேசக் காரணிகளை வாக்காளர்கள் முற்றாகப் புறக்கணித்திருப்பதனைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இதனை தெற்கிலும், வட-கிழக்கிலும் மற்றும் மலையகத்திலும் அவதானிக்க முடிகின்றது. தீவிர தமிழ்த்தேசியவாதம் மற்றும் முஸ்லிம் தேசியவாதம் நிலவும் தேர்தல் தொகுதிகள் (வட்டுக்கோட்டை, திகாமடுல்ல) மற்றும் மலையக அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்ட நுவரெலிய-மஸ்கெலியா தேர்தல் தொகுதி என்பவற்றில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருப்பது இதனை மேலும் உறுதிசெய்கிறது. மேலும் நவ-தாராளவாதம், நண்பர்சார்புவாதம், ஊழல் மற்றும் குடும்ப அரசியல் ஆகியவற்றை நிராகரித்ததன் மூலம் சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்கள் தற்போதிருக்கும் ஆட்சி முறையில் ஒரு மாற்றத்தினை வேண்டி தமது வாக்குகளை அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இருப்பினும், ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இனத்தவர்கள் வாழும் பிரதேசங்களில் வாக்களிப்பு முறைமை வேறுப்பட்டதாக அமைந்திருந்தது. பிராந்திய அரசியல் கட்சிகள் பலம் பொருந்திய நிலையிலுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள், புத்தளம் மற்றும் மலையக மாவட்டங்களில் வாழும் மக்களின் வாக்காளர் நடத்தை சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களின் வாக்காளர் நடத்தையிலிருந்து கணிசமான அளவு வேறுபட்டிருந்ததை தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பு (TNA), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்(SLMC), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC) மற்றும் தமிழ் முற்போக்குக்



கூட்டணி (TPA), தேசிய காங்கிரஸ் (NC) ஆகியன சஜித் பிரேமதாச அல்லது ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாக முனைப்பாக பிரசாரம் செய்தன. இதற்கு மாறாக, தேர்தலுக்கு முன்னர் வடக்கு கிழக்கில் உள்ள ஒருசில அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் 'தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு' என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான திரு அரியநேத்திரனை 'பொது தமிழ் வேட்பாளராக' களமிறக்கின. எனவே, மாவட்ட அடிப்படையிலான தேர்தல் முடிவு வரைபடத்தில் காட்டப்பட்டவாறு யாழ்ப்பாணம், வன்னி, திகாமடுள்ள, திருகோணமலை, மட்டக்களப்பு, நுவரெலியா, பதுளை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் சஜித் பிரேமதாசவினால் வெற்றிகொள்ளப்பட்டதோடு, ரணில் விக்ரமசிங்கவும் கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு, இனத்துவ சிறுபான்மையினரது - இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் வாக்களிப்பு நடத்தை ஏனைய சிங்கள பெரும்பான்மையினரது வாக்களிப்பு நடத்தையிலிருந்து கணிசமான அளவு வேறுபட்டிருந்தது. இம் மாறுபட்ட வாக்களிப்பு நடத்தைக்கு ஒருவர் பின்வரும் விளக்கங்கள் பலவற்றை முன்வைக்கலாம்.

இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தொடக்க காலத்திலிருந்தே மத்திய அரசாங்கம் சிறுபான்மையினரது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காது பாராமுகமாக உள்ளது என்ற கருத்தை இன, மத சிறுபான்மையினரது பிரதிநிதிகள் கொண்டிருப்பதனால் இவ்விரு தரப்புகளுக்கும் இடையே ஒரு செயழிழந்த - வலுவிழந்த உறவே நிலவி வருகின்றது. எனவே, சிறுபான்மையினரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் பிராந்திய கட்சிகள் அரசாங்கத்திற்கும் தொகுதி மக்களுக்குமிடையில் ஒரு தரகராக செயற்பட்டு வந்துள்ளன. மரபுரீதியாக, சிறுபான்

மையினர் தலைமைதாங்கும் அரசியல் கட்சிகள் தாமே இச்ச மூகங்களின் ஏக பிரதிநிதிகள் என்ற மனோநிலையில் மத்திய அரசாங்க மட்டத்தில் கொள்கை வகுத்தல் செயன்முறையில் இம்மக்களின் பிரச்சினைகளை எடுத்தியம்புகின்றன. அதனால் சிறுபான்மை மக்களுக்கு கிடைத்த பயன் என்ன என்பது தனியாக ஆராயப்படவேண்டிய வினாவாகும். ஆகையால், பிராந்திய கட்சிகள் ஒரு காப்பாளர் - கட்சிக்காரர் (patron-client) எனும் அணுகுமுறையையும் போசகர் வலையமைப்புகளையும் அத்துடன் இன, மத தேசியவாதத்தையும் பயன்படுத்தி உள்ளூர் குடிமக்களோடு ஒரு நெருக்கமான உறவைக் கட்டியெழுப்பியுள்ளன. இக்கட்சிகள் உள்ளூர் மட்டத்தில் முனைப்புடன் செயற்படுவதோடு, மக்கள் தமது நாளாந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்காக அவற்றின் உள்ளூர் செயற்பாட்டாளர்களை அணுக விளைகின்றனர். கட்சிக்கும் வாக்காளருக்கும் இடையிலான உறவுகள் இப்பிரதேசங்களில் பலமானதாக உள்ளன. எனவே, மக்கள் தேசிய மட்ட கட்சிகளை விட இப்பிராந்திய கட்சிகளுக்கு அரசியல்ரீதியாக அதிகம் விசுவாசமாக உள்ளனர் அல்லது பிணைக்கப்பட்டுள்ளனர் எனலாம்.

எனவே, சனாதிபதி தேர்தல்களின்போது வாக்காளர்கள் வழமையாகத் தமது தேர்தல் தெரிவுகளை மேற்கொள்வதில் பிராந்திய இனத்துவ கட்சிகளின் தலைவர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களையே பின்பற்றுகின்றனர். மேலும், இப்பிராந்திய இனத்துவ கட்சிகள் பெருமளவில் தலைவர் மைய, தனிநபர் தன்மைமிக்க மற்றும் குறைந்தளவிலான ஜனநாயகத்தினைக் கொண்டவையாக காணப்படுகின்றன. எனவே, இனத்துவம், சாதி மற்றும் மதம் ஆகியன பிராந்திய இனத்துவக் கட்சிகளோடு வலுவாக பிணைக்கப்பட்டுள்ளன. எனினும் இக்கட்சிகள் தேசிய தேர்தல்களில் தேசிய கட்சிகளோடு இணைந்து செயற்படுவதோடு, சில சந்தர்ப்பங்களில் தேசிய மட்டத்தில் அரசாங்கங்கத்தை அமைப்பதிலும் முக்கிய சக்திகளாகக் காணப்படுகின்றன. தேர்தல்களின்போது தேசிய மட்டக் கட்சித் தலைவர்கள் பிராந்திய இன, மத கட்சிகளின் தலைவர்களின் ஆதரவுடன் அடிக்கடி சிறுபான்மையினர் செறிவாக வாழும் பகுதிகளுக்கு விஜயம் செய்வதானது அச்சமூகத்தின் மீது ஒருவித ஏகபோகத்தைச் சிறுபான்மையின தலைவர்களுக்கு தவறுதலாக வழங்குகிறது. தேசிய மட்டக் கட்சிகள் சிறுபான்மைப் பகுதிகளில் தமது அரசியல் அலுவலகங்களைக் கொண்டிருந்தபோதிலும், தமது பணிகளுக்கு மக்களை ஒன்றுதிரட்டுவதில் அவை மிகவும் செயற்றிறனற்றவையாக உள்ளன. அதேவேளை, பிராந்தியக் கட்சிகள் மக்களுடன் இணைந்திருப்பதை உறுதி செய்வதற்காக அப்பிரதேச மக்களுடன் முறைசாரா கூட்டங்களையும் அனுசரணை வலையமைப்புகளையும் பயன்படுத்துகின்றன.

பிராந்தியக் கட்சிகள் தமது சமூகத்தின் மீது கொண்டிருக்கும் மேலாதிக்கமானது, அரச அதிகாரம், வளங்கள், அமைச்சுப் பதவிகள் மற்றும் வேறு கண்கூடான மற்றும் கண்கூடற்ற பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுகிறது. எனினும், அவை எந்தளவுக்கு தமது சமூகம் சார் நலன்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்பது கேள்விக்குறியே. முக்கியமாக, தேசியமட்டக்கட்சிகள் சிறுபான்மையினர் உரிமைகள், அதிகாரப்பகிர்வு, நல்லிணக்கம் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவை தொடர்பாக கொண்டிருக்கும் கொள்கைகள் தொடர்பாக ஒருவித எதிர்மறையான கருத்து சிறுபான்மை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதற்கு வரலாற்றுக் காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பதிலுக்கு அவை சிறுபான்மை மக்கள் மத்தியில் தேசியக் கட்சிகள் குறித்த நம்பிக்கையீனம் மற்றும் சந்தேகம் ஆகியவற்றுக்கு இட்டுச் சென்றுள்ளன. இவை அனைத்தும் சிறுபான்மை வாக்காளர்களுக்கும் தேசிய கட்சிகளுக்கும் இடையே ஒரு பகைமையான உறவிற்கு வித்திட்டுள்ளதாகச் சிலர் வாதிடுகின்றனர். இது, தேசியக் கட்சிகளுடன் சிறுபான்மை கட்சிகள் இணைந்து செயற்படுவதற்கான அவகாசத்தினைக் குறைவடையச் செய்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் இது தொடர்பாடல் மொழிகளில் காணப்படும் மட்டுப்பாடுகள் காரணமாகப் பரப்பப்படும் தவறான தகவல்களினால் ஏற்படுகிறது. தெற்கின் அரசியல் போக்குகள் தொடர்பாகத் தமிழ் ஊடகங்கள் சிறுபான்மையினருக்கு தகவல் வழங்கும் முறை வேறுபட்டதாக அமையலாம். சில சந்தர்ப்பங்களில் அத்தகைய துருவமயமாதல் சில பிராந்தியக் கட்சித் தலைவர்களால் தாம் மீண்டும் தெரிவு செய்யப்படுவதையும் வேறு அரசியல் ஆதாயங்களையும் இலக்கு வைத்து தமது வாக்கு வங்கியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவையனைத்தும் சிறுபான்மையினரின் வாக்களிப்பு நடத்தையில் பெரியளவிலான தாக்கத்தினைச் செலுத்துகின்றன. இத்தகைய வாக்களிப்பு வேற்றுமை 2005, 2010, 2015, 2019 மற்றும் 2024-ம் ஆண்டுகளின் சனாதிபதித் தேர்தல்களில் பிரதிபலித்துள்ளது. இதன்போது, சிறுபான்மை இனத்தவரது வாக்களிப்பு நடத்தை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வேறுபடுகின்றது. ஆகவே முன்னைய மற்றும் தற்போதைய ஜனாதிபதி தேர்தல்களின் முடிவுகளின் அடிப்படையில் நோக்கும்போது இனத்துவ சிறுபான்மையினர் தமது தெரிவுகளைப் பெரும்பாலும் தமது கட்சியின் வேண்டுகோளுக்கும் நிகழ்ச்சி நிரலுக்கும் அமையவே மேற்கொள்கின்றனர் என்று வாதிட முடியும்.

சனாதிபதித் தேர்தல் முடிவுற்றவுடனேயே சிறுபான்மை இனத்தவருக்கெதிரான பெருமளவு விமர்சனங்களை நாம் கண்டுள்ளோம். எனினும், வெறுமனே அவர்களது வாக்களிப்பு பாங்கினை அடிப்படையாகக் கொண்டு சிறுபான்மை இனத்தவர்கள் தற்போதிருக்கும் ஆட்சி முறைமையைத் திருத்தி அமைப்பதற்கு தயாராக இல்லை என்று கற்பிதம் கொள்வது நியாயமானதல்ல. மாறாக, அவர்கள் வாழுகின்ற அரசியல் சூழ்நிலை மற்றும் பல ஆண்டுகளாகப் பிராந்திய கட்சிகளினால் விருத்தி செய்யப்பட்ட அரசியல் கலாசாரம் ஆகியன அவர்களது தேர்தல் நடத்தையை வடிவமைப்பதில் பெருமளவு தாக்கம் செலுத்தியுள்ளது. இது பாரம்பரிய கட்சி தாபனங்களையும் காலத்துக்கொவ்வாத பழைமைவாய்ந்த அரசியல் கலாசாரத்தையும் நிராகரிப்பதற்கான அவர்களது வாய்ப்பை மட்டுப்படுத்தி இருப்பதாக தென்படுகிறது. ஆயினும் இப்போக்கினைப் நாடாளுமன்றத் தேர்தலில் மாற்றியுள்ளனர் என்பது சிறுபான்மை தேர்தல் அரசியல் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றமாகும். எனவே, எதிர்காலத்தில் தேசியமட்டக் கட்சிகள் இப்பகுதிகளில் தமது கட்சி அலுவலகங்களை வலுவூட்டியும் உயிர்ப்பூட்டியும் தமது அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினரை நேரடியாக ஈடுபடுத்திக்கொள்வதற்கு கூடுதல் முயற்சியொன்றை மேற்கொள்ள வேண்டும். மேலும், தேசியக் கட்சிகள் உள்ளூர் மட்டத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள், கூட்டங்கள், கள விஜயங்கள் மற்றும் சமூக மட்டத்திலான நிகழ்ச்சிகள் போன்றவற்றை மேற்கொள்ள

லாம். இவை அனைத்தும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், பரஸ்பர புரிந்துணர்வு, மதிப்பளித்தல் மற்றும் சிறுபான்மையினருடனான உறவு ஆகியவற்றை வளர்த்தெடுக்க உதவும். இவ்விடயத்தில் தேசியக் கட்சிகளின் தொடர்பாடல் மொழி மற்றும் சரியானதும் நம்பகமானதுமான தகவல்களை பரப்புதல் ஆகியன முக்கியமாகும். மேலும், பாரம்பரிய அரசியலில் ஒரு மாற்றத்தை கோரும் தேசியக் கட்சிகள் உள்ளூர் இளைஞர்களோடு இணைந்து செயற்படுவதும் தமது அரசியல் தளத்தை விரிவுபடுத்துவதற்கு உதவும். வடக்குக் கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகள் மாத்திரமின்றி, கண்டி மற்றும் புத்தளம் முதலிய சிறுபான்மை மக்களின் வாக்குகளை ஒன்று திரட்டுவதற்கு சரியான பொறிமுறையொன்றினைத் தேசியக் கட்சிகள் பின்பற்றுமாயின் பிராந்தியக் கட்சிகள் உருவாக்கியுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியக்க வாய்ப்பு ஏற்படலாம். தேசிய மக்கள் சக்தியின் (NPP) செயற்பாடுகள் அத்தகைய மாற்றம் ஒன்றிற்கான தேவையினைச் சிறுபான்மை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது எனலாம். நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இதற்கான சிறந்ததொரு அடித்தளத்தினை இட்டுள்ளது எனலாம்.

அதேவேளை, மனித பாதுகாப்பு, அதிகாரப் பகிர்வு, ஜனநாயகத்திற்கு மதிப்பளித்தல், மனித உரிமைகள், அடிப்படை மனித சுதந்திரம் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான வாய்ப்பு குறித்த கரிசனைகள் சிறுபான்மையினரின் வாக்களிப்பு நடத்தையினைச் செம்மைப்படுத்துகின்றன என்பதனையும் தேசியக் கட்சிகள் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, இது குறித்த தெளிவான புரிதல் பிரதான தேசியக் கட்சிகளுக்கு இருக்க வேண்டும். மேற்கூறப்பட்டவற்றிற்கு மதிப்பளிக்கும் வேட்பாளர்களுக்கு பிராந்தியக் கட்சிகள் தமது ஆதரவை வழங்கும் போக்கும் காணப்படுகின்றது. எனவே, சிறுபான்மையினருக்கு ஆகக் குறைந்தளவு தீங்கிளைக்கும் வேட்பாளரைத் தெரிவு செய்யுமாறு அவர்கள் தமது ஆதரவாளர்களைக் கோருகின்றனர். எனினும், வரலாற்றுரீதியாக பல சந்தர்ப்பங்களில், இவ்வெதிர்ப்பார்ப்பு பூர்த்தி செய்யப்படவில்லை. இவற்றுக்கப்பால், சிறுபான்மை மக்கள் ஏன் பிராந்திய அரசியலை நோக்கித் தள்ளப்பட்டார்கள், அதற்கான வரலாற்றுக் காரணிகள் மற்றும் தேசியக் கட்சிகள் காலம் காலமாக இம்மக்களின் பிரச்சினைகளைக் கையாண்ட விதம் போன்றவற்றினை தேசியக் கட்சிகள் புரிந்துக்கொள்வது மற்றும் அதற்கேற்ற வகையில் தமது கொள்கைகளைத் திருத்திக் மாற்றிக்கொள்வது என்பன சிறுபான்மை மக்களை அணுகுவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும். நாடாளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களும் புதிய எதிர்ப்பார்புடன் தே.ம.சக்திக்கு வாக்களித்துள்ளார்கள் - அந்த நம்பிக்கையினைத் தொடர்ந்துப் பேணுவதற்கு அவசியமான செயற்பாடுகளை முன்னெடுப்பது புதிய அரசாங்கத்திற்குள்ள சவாலாகும். அது தே.ம.சக்திக்கும் சிறுபான்மை மக்களுக்குமிடையிலான எதிர்கால உறவுப் பாதையினை தீர்மானிக்கும்.

சனாதிபதித் தேர்தலில், சிறுபான்மையினருள் ஒரு பிரிவினர் கட்சிச் செல்வாக்கின்றி தமது தெரிவை தாமே சுதந்திரமாக மேற்கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, இத் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணம் (27,086), வன்னி (21,412), மட்டக்களப்பு (38,832), நுவரெலியா (105,057), ஆகிய மாவட்டங்களில் கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுள்ளார். 2019-ம் ஆண்டு அனுரா பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடுகையில் இது, சிறுபான்மையினர் தலைமை தாங்கும் கட்சிகளின் மேலாதிக்கத்துக்கான ஒரு சவாலை வெளிப்படுத்தும் கவனிக்கத்தக்கதொரு மாற்றமாகும். வடக்கு கிழக்கிலும் மத்திய மலைநாட்டிலும் கணிசமான ஆதரவைப் பெற்றுக் கொள்ள தேசிய மக்கள் சக்திக்கு முடியுமாயின், அது தேசிய கட்சியொன்றுக்கும் இனத்துவ மத சிறுபான்மையினருக்கும் இடையிலான புதியதொரு உறவை அதிலும் ஆரோக்கியமான நேரடி உறவினைத் தோற்றுவிக்கலாம். நாடாளுமன்றத் தேல்தல் முடிவுகள் அதனை உறுதிசெய்வதாக அமைந்துள்ளது.

முக்கியமாக முஸ்லிம் இளைஞர்கள், குறிப்பாக, கல்வி அறிவைக் கொண்டவர்கள், வெளி உலகத்தை அறிந்தவர்கள், சமூக ஊடகங்களில் முனைப்பாக செயற்படுபவர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறுபட்ட பிரிவினரோடும் இடைத்தொடர்புகளைப் பேணுபவர்கள் புதிய அரசியல் மாற்றத்தினைக் கோரி வாக்களித்துள்ளார்கள். இத்தகையதொரு போக்கினைப் பெருந்தோட்டப்புறங்களில் வாழும் இளைஞர்கள் மத்தியிலும் கண்கூடாக எம்மால் அவதானிக்க முடிகிறது. அவர்கள் சமூக ஊடகங்களின் மூலம் அநுரகுமார திசாநாயக்கவிற்காக பிரச்சாரம் செய்ததோடு, தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தில் மாற்றமொன்றினை வேண்டி தேர்தல் தெரிவுகளை மேற்கொள்வதில் தமது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் மத்தியில் செல்வாக்குச் செலுத்தினர். அவர்கள் தமது சமூகத்தின் பாரம்பரிய அரசியல் தலைவர்களை மிகவும் தீவிரமாக விமர்சனம் செய்பவர்களாக இருந்ததோடு, தமது தலைவர்களது சந்தர்ப்பவாத நடத்தைகள் காரணமாக அவர்கள் மீது பெருமளவு அவநம்பிக்கையையும் கொண்டிருந்தனர். அவர்கள் தமது தலைவர்களின் அடிக்கடி மாற்றமுறும் அரசியல் நிலைப்பாடுகள், கட்சித் தாவல்கள் மற்றும் சந்தர்ப்பவாதக் கொள்கைகள் ஆகியவற்றை விமர்சிப்பவர்களாகவும் இருந்தனர். எனவே தூய அரசியல் குறித்து கரிசனை கொண்டுள்ள, புதிய அரசியல் கலாசாரமொன்றைப் பற்றி கனவு காணும் இளம் தலைமுறையினர் தற்போதிருக்கும் பாரம்பரிய மற்றும் பிரபுத்துவ அரசியல் கலாசாரத்தைப் படிப்படியாக மாற்றியமைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும், கட்சிக் கட்டமைப்புகள், ஒன்றுதிரட்டல் உபாயங்கள் மற்றும் பிராந்தியக் கட்சிகளினால் பயன்படுத்தப்படும் அனுசரணை வலையமைப்புகள் ஆகியவை காரணமாக இது ஒரு எளிதான பணியாக அமைந்துவிடாது - அவை மிகவும் பலமானவையாகவும் நிறுவனமயப்படுத்தப்பட்டவையாகவும் உள்ளன. அத்துடன், உள்ளூர் அரசியல் மற்றும் வர்த்தக மேட்டுக் குடியினர் உள்ளூர் அரசியலின் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் உள்ளனர். எனவே, அவர்கள் அத்தகைய மாற்றத்தை எதிர்ப்பார்கள் தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் சமூக ஆதரவு பொறிமுறைகளையும் பயன்படுத்தி இளைஞர்களை அரசியல் ஈடுபாட்டிலிருந்து தனிமைப்படுத்துவார்கள். இது, எதிர்காலத்தில் பாரம்பரிய அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதில் சிறுபான்மையின இளைஞர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் ஒரு முக்கிய சவாலாகத் தோன்றுகிறது. எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலின் போதும் அதற்குப் பின்னரும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் வாழும் முஸ்லிம் இளைஞர்களின் ஆதரவு கணிசமாக தேசிய மக்கள் சக்தியினை நோக்கி நகர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் வெளிப்பாடே நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளாகும்.

## நவ தாராளவாத நிகழ்ச்சி நிரலை நிராகரித்தல்:

மேலும், இலங்கை வாக்காளர்கள் தமது தேர்தல் ஜனநாயக வரலாற்றில் முதல் தடவையாக பிரபல தலைவர்களையும் அவர்களது யதார்த்தபூர்வமற்ற வாக்குறுதிகளையும் நிராக ரித்து, மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவல்ல மக்கள்-மைய அரசாங்கமொன்றை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்த ஒரு வேட்பாளரை சனாதிபதியாக தெரிவு செய்துள்ளனர். மத் தியதர மக்கள் மத்தியில் இவ்வுணர்வு மிகவும் பலமாக உள் ளதாகத் தோன்றுகிறது. அதேவேளை, விவசாயம், பண் ணைத் தொழில், சிறு தொழில் முயற்சியாண்மை, சுயதொ ழில் மற்றும் அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு பயன்கள் ஆகியவற்றை நம்பியிருக்கும் சாதாரண மக்களின் சில பிரிவி னர்களும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அநுரகு-மார திசாநாயக்கவை ஆதரித்தனர். எனினும், இதற்கு மாறாக, கிராமப்புற வாக்காளர்களுள் குறிப்பிடத்தக்கதொரு பிரிவி னர் சஜித் பிரேமதாசவை ஆதரித்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தே.ம.சக்தி பொருளாதார சனநாயகம் மற்றும் ஓர் உறுதியான சமூக பாதுகாப்பு வலையமைப்பு ஆகியவற்றைக் கொண்ட ஒரு சமத்துவமான பொருளாதாரத்திற்கான சீர்திருத்தங் களை முன்வைத்து பிரச்சாரம் செய்தது. இது பொருளாதார ஜனநாயகம், பொருளாதார நன்மைகளை பகிர்ந்தளிப்பதில் ஒரு மனிதாபிமான அணுகுமுறையை பின்பற்றுதல், நவதாரா ளவாத கொள்கையை நிராகரித்தல் என்பவற்றினை பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளடக்கி இருந்தது. அது இலங்கை மக்களில் 5 வீதத்தினருக்குக் குறைவானவர்கள் மத்தியில் நாட்டின் செல்வம் மிக அதிக அளவில் குவிந்து கிடப்பதை நிராகரிக்கும் ஒரு பொருளாதார முறைமையாகும். அத்தகையதொரு பொருளாதாரக் கொள்கைக்கு மக்கள் அமோக ஆதரவினை வழங்கியிருப்பது நாடாளுமன்றத் தேர் தல் முடிவுகளில் மேலும் உறுதியாகியுள்ளது.

## ஊழலுக்கெதிராக அரச சேவையாளர்களின் வாக்களிப்பு:

ஊழலற்ற அரசாங்கமொன்றை ஏற்படுத்துவதாக வாக்குறுதி யளித்த அநுரகுமார திசாநாயக்கவின் மிகத் தீவிர ஆதரவா ளர்கள் மத்தியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் இருக்கின் றனர் என்பதை தபால்மூல வாக்குகள் எடுத்துக்காட்டுகின் றன. அரசாங்க ஊழியர்கள் ஊழலுக்கு எதிராக போராடுவ தற்கு தாம் தயாராக இருப்பதாக தமது வாக்குகள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர். இது எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், சிறந்ததொரு ஆரம்பமாக நோக்கலாம். ஊழல் மிக்க அரசியல் தலைவர்களுக்கான ஒரு பலமான செய்தியா கவும் இது அமைகிறது. அரச ஊழியர்கள் ஊழலின் ஆபத் தையும், பொருளாதாரம், சமூக நலநோம்புகை மற்றும் நாட் டின் அபிவிருத்தி ஆகியவற்றின் மீதான அதன் பாதகமான தாக்கத்தையும் உணர்ந்துள்ளனர். அரசாங்க உத்தியோகத் தர்கள் ஊழல் மிக்கவர்கள் என்ற ஒரு பரவலான கருத்து சமூ கத்தில் மிக நீண்டகாலமாக நிலவி வருகின்றது. எனினும், முழு தேர்தல் பிரசாரத்தையும் ஊழலுக்கெதிரான ஆட்சி என்ற கருப்பொருளில் நடத்திய ஒரு தலைவருக்கு கணிச மான அரச அதிகாரிகள் வாக்களித்துள்ளனர். இது அரச அதிகாரிகளின் சிந்தனை போக்கில் ஏற்பட்டுள்ள ஒரு குறிப் பிடத்தக்க மாற்றம் என்பதோடு, அரசாங்க நிறுவனங்களில் ஊழல் பிரச்சினையின் தாக்கத்தையும் இது எடுத்துக் காட்டு கிறது. அத்துடன் அரச நிறுவனங்களிலும் சமூகத்திலும் தீவிர மாகப் பரவியுள்ள ஊழல் காரணமாக இலங்கை வங்கு ரோத்து நிலையை அடைந்துள்ளது என்ற உண்மையையும் அவர்கள் உணர்ந்துள்ளனர் போல் தெரிகின்றது. அரசியல் தலையீடற்ற, ஊழலுக்கெதிரான நிறுவனங்களை பலப்படுத் துவதன் மூலம் ஊழலுக்கெதிராக போராடுவதற்கு உறுதி யான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புதிய ஜனாதிப திக்கு ஒருவித சட்டபூர்வத் தன்மையை தபால்மூல வாக்குகள் வழங்கியுள்ளன. அரச அதிகாரிகளின் வாக்களிப்பு நடத்தை நாடாளுமன்றத் தேர்தலில் தீவிர மாற்றத்துக்கு உள்ளாகியுள் ளது. சுமார் 80 விகிதத்திற்கு அதிகமான அரச அதிகாரிகள் தே.ம.சக்திக்கு வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே ஊழலற்ற ஓர் இலங்கை, சட்டவாட்சி எனும் கோட் பாட்டிற்கு இணங்க, பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படை தன்மை மிக்க ஆட்சிக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். மக்கள் பல்வேறு காரணங்களினால் அரசாங்க நிறுவனங்களி லும் சட்டத்தை நிலைநாட்டும் அமைப்புகளிலும் நம்பிக் கையை இழந்துள்ளனர். எனவே, அரசாங்க நிறுவனங்க ளுக்கு புத்துயிரளிப்பதும் அவற்றின் மீதான பிரசைகளது நம் பிக்கையை உறுதி செய்வதுமே தற்போதைய தேவையாகும் -இது புதிய சனாதிபதியினால் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு மாபெரும் பணியாகும்.

## கிராமப்புற சிங்கள மக்களின் வாக்களிப்பு கோலங்கள்:

ஜனாதிபதித் தேர்தலில் இரத்தினபுரி, பதுளை மற்றும் மொன ராகலை முதலிய மாவட்டங்களில் கிராமப்புற சிங்கள வாக்கா ளர்களின் வாக்களிப்பு நடத்தை வேறுபட்டிருந்தது. அம்மா வட்டங்களில் வறுமை நிலையிலுள்ளோர் வீதம் முறையே 28%, 37% மற்றும் 33% என மிக அதிகமாக பதிவாகிறது (DCS, 2023). இவைதான் அநுரகுமாரவிற்கு குறைவான ஆத ரவு கிடைத்த மாவட்டங்களாகும். எடுத்துக் காட்டாக, மொன ராகலை மாவட்டத்தில் அளிக்கப்பட்ட 341,753 வாக்குகளுள் சஜித் 134,238 வாக்ககுள் பெற்றிருந்த அதேவேளை, அநுர-குமார திசாநாயக்க 140,269 வாக்குகளை மாத்திரமே பெற்றி ருந்தார். அதே போன்று இரத்தினபுரியில் மொத்தமாக அளிக் கப்பட்ட 756,970 வாக்குகளுள் சஜித் மற்றும் ரணில் ஆகி யோர் முறையே 257,721 மற்றும் 145,38 வாக்குகளைப் பெற, அநுரகுமார திசாநாயக்க 291,708 வாக்குகளைப் பெற்றார். பதுளை மாவட்டத்தில் மொத்தமாக அளிக்கப்பட்ட 584,443 வாக்குகளுள் அநுரகுமார திசாநாயக்க 197,283 வாக்குக ளைப் பெற்றார். ஆயினும் கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளி லும் நடுத்தர வர்க்க மற்றும் கல்விகற்ற வாக்காளர்கள் அநு-ரகுமார திசாநாயக்கவை பலமாக ஆதரித்த அதேவேளை, மொனராகளை, பதுளை, இரத்தினபுரி ஆகிய தேர்தல் மாவட் டங்களில் வறுமை மற்றும் குறைந்த கல்வியறிவு ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் தேசிய மக்கள் சக்தியி னால் வாக்குறுதியளிக்கப்பட்ட சீர்திருத்தவாத, ஊழல் எதிர்ப்பு, சமூக நலநோம்புகை நிகழ்ச்சித் திட்டம், பொருளா தார ஜனநாயக மாதிரி ஆகியவற்றின் பின்னால் அணிதிரள வில்லை என்பது தெளிவானதொரு எடுத்துக்காட்டாகும். மறு புறமாக, ஹோமாகம, கடுவெல, கெஸ்பேவ, கம்பஹா மற்றும் குருநாகல் போன்ற கல்வி மட்டம் உயர்வாக காணப்படும் தேர்தல் தொகுதிகள் அநுரகுமாரவிற்கு மிக அதிகமான

ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன (https://election.newsfirst.lk/district/Colombo). உயர்ந்த கல்வி மட்டத்தையும் உயர்ந்த பொருளாதார அடைவுகளையும் கொண்டுள்ள பகுதிகளில் மக்கள் ஒரு புதிய சமூக மற்றும் அரசியல் இயக்கத்தை விரும்பியுள்ளனர். ஆயினும், ஏலவே சுட்டிக்காட்டிய அதிக வறுமை நிலவும் மாவட்டங்களில், குறைந்தளவிலான கல்வி மட்டம், வெளியுலகத் தொடர்பு மற்றும் அரசியல் அறிவு என்பவற்றுடன், பெற்றோர்கள் பரம்பரை பரம்பரையாக கொண்டிருந்த அரசியல் விசுவாசம் என்பன புதிய அரசியல் மாற்றத்திற்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பினை தடுத்திருக்கலாம். ஆயினும் இந்நிலைமை நாடாளுமன்றத் தேர்தலில் தீவிர மாற்றத்துக்குள்ளாகியுள்ளது என்பது அவதானிக்கத்தக்க விடயமாகும்.

## தேசியவாதமும் வாக்களிப்பு நடத்தையும்:

வேறுபட்ட இனத்துவ பின்புலத்தினைக் கொண்ட மக்கள் தேசியவாதத்தினை நிராகரித்துள்ளமை (முழுமையாக இல்லாவிட்டாலும்) 2024-ம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இம்முறை சிங்கள வாக்காளர் மத்தியில் தேசியவாதத்திற்கு இடம் இருக்கவில்லை. சிங்கள-பௌத்த மேலாதிக்க கட்சியான மொட்டுக்கட்சி மக்களால் தூக்கியெறிப்பட்டுள்ளது. இதற்கு பிறிதொரு வாதமும் முன்வைக்கப்படுகின்றது. அதாவது சிங்கள பௌத்தத்தை பாதுகாப்பதற்கான மாற்றீடாக தேசிய மக்கள் சக்தியினை சிங்கள மக்கள் பார்க்கின்றார்கள் என்பதாகும். ஆகவே மொட்டுக்கட்சியினை தூக்கியெறிந்து அனுராவிற்கு வாக்களித்துள்ளனர். தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருள் கணிசமான பிரிவினர் அநுரகுமார திசாநாயக்கவின் பின்னால் அணி திரளவில்லையெனினும், அது எவ்விதத்திலும் தேசியவாத காரணங்களினால் ஏற்பட்டதல்ல. மேலும், ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தியிருந்தாலும், வடக்குக் கிழக்கு மக்கள் தமது பெரும்பான்மையான வாக்குகளைச் சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தேசியத் தலைவர்களுக்கு வழங்கியதன் மூலம் தமிழ் தேசியம் எனும் சிந்தனையை வாக்களிப்பின் போது ஒரு பிரதான காரணியாக எடுக்கவில்லை என எண்ணத் தோன்றுகிறது. ஆயினும், இதற்கு மாறுபட்ட விளக்கங்களை ஒருவர் முன்வைக்கலாம். இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர் வாழும் ஒரு நாட்டில் தமிழ் பொது வேட்பாளர் 230,000-க்கும் குறைவான வாக்குகளையே பெற முடிந்தது. இந்த வாக்களிப்பு பாங்கானது வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் சமூக அரசியல், பொருளாதார, மற்றும் கலாசார விடயங்களில் சம உரிமை, அங்கீகாரம் மற்றும் மதிப்பு ஆகியவற்றோடு ஓர் ஐக்கிய இலங்கைக்குள் வாழ விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. ரணில் மற்றும் சஜித் ஆகியோர் வட-கிழக்குத் தமிழ் மக்களுக்கு பரீட்சயமான நபர்களாகவும் அனுர குமார திசாநாயக்க அவர்கள் பரீட்சயமற்றவராக இருப்பதனால் வாக்களிப்பதனை தவிர்த்திருக்கலாம். நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மூலம் தமிழ் மக்கள் ஒரு தெளிவான செய்தியினை தெற்கிற்கு வழங்கியுள்ளார்கள். ஐக்கிய இலங்கைக்குள் சம உரிமைகளுடன் வாழ விரும்புவதே அச்செய்தியாகும். தெற்கின் சிங்கள-பௌத்த தேசியவாதத்திலும் வட-கிழக்கு தமிழ் தேசியவாதத்திலும் முற்போக்கான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது தீவிர மாற்றமா இல்லையா என்ற முடிவுக்கு வருவதற்கு காலம் அவசியம். ஆயினும் இதனை நல்லதொரு ஆரம்பமாக எடுத்துக்கொண்டு தெற்கும்-வடக்கும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். அதுவே காலத்தின் தேவையாகும். நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அதனை தெளிவாக உணர்த்தியுள்ளது. இச்சந்தர்ப்பம் தவறவிடப்படுமாயின் இனி ஒருபோதும் இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப அல்லது இலங்கை அரசைக் கட்டியெழுப்ப வாய்ப்பு கிடைக்காது. இதுவே தே.ம.சக்திக்கு முன் எழுந்துள்ள பெரும் சவாலுமாகும்.

## அரசியல் கட்சி முறைமையின் மாற்றமுறும் தன்மை மற்றும் அவநம்பிக்கை:

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க, மற்றும் புதிதாகத் தோன்றிய மொட்டுக்கட்சி (SLPP) ஆகிய பாரம்பரிய கட்சிகளைத் தெளிவாக நிராகரித்து, தமது நம்பிக்கையை தே.ம.சக்தியின் (NPP) மீதும் ஐக்கிய மக்கள் சக்தியின் (SJB) மீதும் வைத்துள்ளமையானது இலங்கையின் அரசியல் கட்சி முறைமையில் ஏற்பட்டுள்ள ஒரு தீவிர மாற்றத்தை இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின. இவ்விரு கட்சிகளும் கட்சி அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் இரு பெரும் சக்திகளாக உருவெடுத்து நாட்டின் அரசியல் களத்தை வடிவமைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இவ்வனுமானத்தினை முற்றாக மாற்றியுள்ளது. மக்கள் நம்பிக்கை தே.ம.சக்தியின் மீது பெரியளவில் அதிகரித்துள்ளது. எனவே, தே.ம.சக்தி பழையக் கட்சிகளைப் பதிலீடு செய்துள்ளதுடன், இலங்கையின் அரசியல் கட்சி முறைமையும் ஒரு தீவிர மாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளதனையும் காட்டுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது பாரிய வீழ்ச்சியினைத் தழுவியுள்ளது - ஆயினும் தொடர்ந்தும் இரண்டாம் இடத்திலேயே உள்ளது. இவை தனிக் கட்சிகள் அல்ல. மாறாக, பல சிறிய கட்சிகளினால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பாகும். தே.ம.ச மற்றும் ஐ.ம.ச ஆகியன தமது கொள்கைகள், சித்தாந்தங்கள் மற்றும் சௌகரியம் ஆகியவற்றைப் பின்பற்றும் இடதுசாரி மற்றும் வலதுசாரி கட்சிகளோடு செயற்படுவதற்கான வாய்ப்பை வழங்கும் அதேவேளை, இலங்கையில் அரசியல் கட்சி முறைமை மீண்டும் ஒரு இரு கட்சி முறைமையாகவே இருக்கப் போகின்றது என்பதும் தெளிவாகிறது. ஆயினும் இக்கட்சிகளின் சித்தாந்தங்கள் அவ்வப்போது மாற்றமுறும் காரியவாதத்தை (pragmatism) அடிப்படையாகக் கொண்டுள்ளன.

இதுவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து எந்த ஒரு வேட்பாளரும் 50% வாக்குகளைப் பெற முடியாதுபோன முதல் தடவையாகும். இது அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கு காணப்படும் நம்பிக்கையின்மை மற்றும் தற்போதைய தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடுகள் ஆகியவற்றின்பால் எமது கவனத்தை ஈர்க்கின்றது. அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை இலங்கையில் தீவிரமாகக் குறைவடைந்துள்ளதோடு, ஆட்சி அதிகாரத்தினைத் தமது நலன்களையும் வர்த்தக வகுப்பினரின் தேவைகளையும் அடைந்துக்கொள்ளும் வகையில் பயன்படுத்திய விதம் குறித்து வாக்காளர்கள் அதிருப்தியுற்றிருப்பதாகவும் தோன்றுகிறது. எனவே, இந்தத் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவிற்கு வழங்கிய ஆதரவு ஏனைய பிரதான கட்சிகள் மீதான பெருமளவு நம்பிக்கையின்மையினை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், ஏறத்தாழ 3.8

மில்லியன் இலங்கையர்கள் (வெளிநாடுகளில் தொழில் புரியும் தொழிலாளர் அடங்கலாக) இம்முறை வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்துள்ளனர். இது, அரசியல் கட்சிகள்மீது எந்தளவு நம்பிக்கை குறைவாக உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அரசியல் கட்சிகள்மீதான நம்பிக்கையின்மையானது, கட்சித் தாவல்ககள், பேராசை, அரசியல் ஊழல், அனைத்து வித ஏமாற்றுச் செயல்கள் ஆகியன அடங்கலாக மக்கள் ஆணையின் தொடர்ச்சியான மீறலினாலேயே பெரும்பாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது, விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இலங்கையின் தேர்தல்முறை அரசியலில் ஒரு நிரந்தரமான அம்சமாக மாறியுள்ளது. எனவே, அத்தகைய அரசியல் தலைவர்களையும் அவர்களது கட்சிகளையும் இனியும் நம்புவதற்கு தயாரில்லை என்ற தெளிவான செய்தியை இலங்கை வாக்காளர்கள் வழங்கியுள்ளனர். - இது ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் தோல்வியில் ஒரு முக்கிய காரணியாக இருந்துள்ளது. இதனை இலங்கை மக்கள் மிகத் தெளிவாகப் நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளர். சுமார் 40 விகிதமான வாக்காளர்கள் வாக்களிப்பதனைத் தவிர்த்துள்ளனர். யுத்தத்திற்குப் பின்னர் இடம்பெற்ற மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது, 2024-ம் ஆண்டுத் தேர்தலிலேயே வாக்களியாமை போக்கு மிக அதிகமாக காணப்படுகின்றது.

மேலும் கட்சி - வாக்களர் உறவில் மாற்றமுறும் தன்மையை இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. வாக்களிப்பதற்காக அரசியல் தலைவர்களிடமிருந்து பொருள்சார் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவும் அனுசரணை அரசியல் அல்லது காப்பாளர் - கட்சிக்காரர் என்ற உறவு இலங்கையின் தேர்தல் அரசியலின் ஒரு முக்கிய அம்சமாகும். இந்தப் பாங்கானது, வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூர் மட்ட கட்சி அமைப்பாளர்கள் பல்வேறு வகையான பொருள்சார் பயன்களைத் தமது கட்சிக்காரர்களுக்கு வழங்கும் கலாசாரம் மிகவும் பலமாக விளங்குகின்றது. வேறு வகையில் கூறுவதானால், வாக்காளர் - கட்சி எனும் உறவு இலங்கையிலும் ஏனைய தென்னாசிய நாடுகளிலும் பெருமளவிற்கு பொருள்சார் நன்மைகளினாலேயே தீர்மானிக்கப்படுகிறது. எனினும், இத்தேர்தலில் தே.ம.சக்திக்கு வாக்களித்த 57 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் அத்தகைய பயன்களை நிராகரித்து, ஆட்சி முறைமையில் ஒரு மாற்றதிற்காகத் தமது வாக்குகளை வழங்கியுள்ளனர். இது, மரபு ரீதியான தேர்தல் அரசியலினால் நேரடியாகப் பலியாகியுள்ள இளைஞர்கள் மத்தியில் துரிதமாகத் தோன்றிவரும் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தின் ஆரம்பமாகத் தோன்றுகிறது. நாடாளுமன்றத் தேர்தல் இதனை மேலும் உறுதிசெய்துள்ளதுடன், இலங்கையில் அனுசரணை அரசியல் மற்றும் காப்பாளர்-கட்சிக்காரன் உறவு முடிவுக்கு வரும் காலம் கனிந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது.

சனாதிபதித் தேர்தல் முடிவுகள் காட்டிய பிறிதொரு விடயம் யாதெனில், இலங்கையின் தேர்தல் அரசியல், வாக்காளர் நடத்தை மற்றும் கட்சி அரசியல் மிக வேகமாக மாற்றமுறும் தன்மையாகும். உதாரணமாக, நான்கு வருடங்களில் தே.ம.ச 3 வீதத்திலிருந்து 42 வீதத்திற்கு முன்னோக்கிப் பாய்வது ஒரு சாதாரண விடயம் அல்ல. இவ்வெற்றி அரசியல் விஞ்ஞானிகளை மற்றும் அவதானிப்பாளர்களை பெரும் வியப்புக்குள் ஆழ்த்தியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எம்மை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இப்படியான அரசியல் மாற்றங்கள் உலகில் மிகவும் அரிதாகவே இடம்பெறுகின்றது. அத்துடன், 2019-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ 6.9 மில்லியன் வாக்குகளையும் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தெளிவான மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற்றுக்கொள்வதற்கு உதவியது சிங்கள-பௌத்த பெரும்பான்மைவாதத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட பலமிக்க மொட்டுக்கட்சியாகும். ஆயினும் 2024-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 3% வாக்குகளைப் பெற்று இக்கட்சி பெரும் தோல்வியைச் சந்தித்தது. நாடாளுமன்றத் தேர்தலிலும் மொட்டுக்கட்சியினை மக்கள் முற்றாகப் புறக்கணித்துள்ளார்கள். இத்தேர்தலிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் இலங்கையின் தேர்தல் அரசியல் களம் துரிதமாக மாறிவருகிறது என்பதும் வாக்காளர்கள் அரசியல் நிகழ்வுகள் குறித்து நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பதும் அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி தேர்தல் நடைமுறை வாயிலாக ஊழல்மிக்க, ஏமாற்றுத் தலைவர்களைத் தண்டிப்பதில் அக்கறையாக உள்ளனர் என்பதுமாகும். ஊழல்மிக்க மற்றும் மக்கள் ஆணையினை மீறும் அரசியல்வாதிகளை மக்கள் தண்டிப்பதற்குள்ள ஒரே ஒரு சந்தர்ப்பம் தேர்தலாகும். இதனை இலங்கைப் நாடாளுமன்றத் தேர்தல் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளது.

இனத்துவக் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் இத்தேர்தலில் கற்றுக்கொள்வதற்கு ஒரு பாடம் உண்டு. அதாவது, வர்க்கபேதம், சாதி, பிரதேசம், இனத்துவம் மற்றும் மதம் ஆகியவற்றால் உருவாக்கப்படும் குறுகிய பிரதேசவாத அரசியலை மீளக் கட்டமைப்பதிலேயே அவர்களின் எதிர்கால அரசியல் பிழைப்பு தங்கியுள்ளது என்பதே அப் படிப்பினையாகும். பிராந்திய அரசியலைப் புதிய பாதையில் மற்றும் பாணியில் முன் கொண்டு செல்ல புதிய அணுகுமுறையினையொன்றினைக் குறித்து சிந்திக்க வேண்டும். பெரும்பான்மை - சிறுபான்மை எனும் சிந்தனை இத்தேர்தல் பிரச்சாரம் முழுவதிலும் அவ்வளவு கவர்ச்சியைப் பெறவில்லை. எனவே வேட்பாளர்களும் அவர்களது கட்சிகளும் இதனை நன்கறிந்து தேர்தல் ஆதாயத்திற்கான ஒரு ஆயுதமாகக் இனத்துவத்தினைக் கையாள முற்படவில்லை. எனவே, இனத்துவக் கட்சிகள் தத்தமது தேர்தல் தொகுதிகளையும் சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை, தேசிய அரசியலிலும் தேசியப் பிரச்சினைகளிலும் நேரடியாக ஈடுபடவேண்டும் - இது, சிறுபான்மையினர் தெற்கு அரசியல் தலைவர்களோடும் கட்சிகளின் செயற்பாடுகளோடும் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்பினைத் திறந்துவிடும். இவ்வணுகுமுறை, சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவத்தினை உறுதி செய்யும். அனைவரையும் அரவணைத்து இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான முன்நிபந்தனையாகவிருக்கும். இது பெரும்பான்மையினர் - சிறுபான்மையினருக்கிடையிலான இடைவெளியை அகற்றுவதற்கான இன்றைய தேவையாகத் தோன்றுகிறது. அத்தகைய மாற்றம் மிக ஆழமாக துருவமயமாக்கப்பட்டுள்ள இலங்கையின் தேர்தல் அரசியலின் தன்மையை நிச்சயமாக நிலைமாற்ற உதவும். இதற்கு தெற்கு அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் மத்தியில் சிறுபான்மையினரின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அங்கீகரித்தல் ஏற்பட வேண்டும் என்பதுடன் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களில் சமத்துவம் மற்றும் பரஸ்பர

புரிந்துணர்வு நிலைநாட்டப்படவும் வேண்டும். அதற்கான ஆணையினையே நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து இலங்கையர்களும் சகல வேறுபாடுகளையும் மறந்து வழங்கியுள்ளனர்.

### முடிவுரை:

இலங்கையின் தேர்தல் அரசியல் மாற்றங்கண்டுள்ளது. அது தொடர்ந்து மாற்றமுறும் என்ற முடிவுக்கு வரலாம். அரகலய (மக்கள் போராட்டம்) காரணமாக அரசியலில் இனவாதத்திற்கும் வகுப்புவாதத்திற்குமான முன்னுரிமை ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளது. அதன் தாக்கத்தினை சனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தெளிவாக அவதானிக்க முடிந்தது. இலங்கையின் மத்தியதர வர்க்கம் அரசியல் ரீதியாக எழுச்சி பெற்றுள்ளது. இம்மாற்றம் சிறுபான்மையினர் உள்ளிட்ட ஏனைய சமூகத்தவர்கள் மத்தியிலும் பரவிச் சென்றுள்ளதனைப் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன - குறிப்பாக சிறுபான்மை மக்கள் மத்தியில், தே.ம.ச தமக்கு மக்கள் வழங்கியுள்ள மிகப்பெரிய ஆணையினை நன்கு புரிந்து கொண்டு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாயின், அது இலங்கையின் அரசியல் கலாசாரத்தை நிரந்தரமாக மாற்றியமைக்கக் கூடும். எனினும், இது நடைபெறுவதற்கு தே.ம.ச (NPP) அதன் மக்கள் விடுதலை முன்னணி (JVP) தோற்றுவாயிலிருந்து விடுபட்டு முன்னோக்கி நகர வேண்டியிருக்கும். முற்போக்கான கொள்கைகள் மற்றும் கருத்தியல்களை முன்னிறுத்தி செயற்பட வேண்டும். தே.ம.சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்த திட்டங்களை யதார்த்தபூர்வமாக அடைவதற்கு பொதுத்தேர்தலில் ஆணை கிடைத்துள்ளது. தே.ம.சக்தியினை பிரதிநிதித்துவம் செய்ய பல தொழில்வாண்மையாளர்கள் இம்முறை நாடாளுமன்றம் செல்கின்றார்கள். ஆகவே திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இவர்களின் இயலுமை, அறிவு மற்றும் நிபுணத்துவத்தினை முழுமையாக பயன்படுத்த முடியும். எனினும், தேர்தல் வாக்குறுதிகளுக்கும் யதார்த்த விளைவுகளுக்கும் இடையே எப்போதும் ஓர் இடைவெளி காணப்படும். இவ்விடைவெளி இயன்றவரை சிறியதாக இருக்க வேண்டும் - அது தே.ம.சக்தியின் மக்கள் ஆதரவினைத் தொடர்ந்து பேண உதவும். தே.ம.சக்தியின் வேலைத்திட்டங்கள் வெறுமனே ஒரு பொருளாதார மீட்சியாக மாத்திரமல்லாமல் மனித மேம்பாடு, சமூக நலன், ஜனநாயகம், மனித உரிமைகள், பொறுப்புக்கூறும் அரசாங்கம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.



Ihjas.m.m@thaiveedu.com



ramesh.r@thaiveedu.com





# தென் சீனக்கடலில் அமெரிக்க - சீன மோதல்

– ரதன்

தென் சீனக் கடல் அண்மைக்காலமாக ஊடகங்களில் உரையாடப்படும் பேசுபொருள். பசுபிக் சமுத்திரத்தின் மேற்கு பகுதியில், தெற்கு சீனாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்தோசீன குடாவிற்கு மேற்காகவும் இது உள்ளது. இந்தோசீன பிரதேசத்தில் உள்ள நாடுகள் வியட்நாம், கம்போடியா, லாவோஸ், மியன்மார்(பர்மா), தாய்லாந்து, மேற்கு மலேசியா ஆகியவையாகும். தென் சீனக் கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் சீனா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், தாய்வான். மலேசியா, புறுனை ஆகிய நாடுகள் உள்ளன. இதன் வடபகுதியில் - கிழக்கு சீனக் கடலில் ஜப்பான், வட மற்றும் தென் கொரியா உள்ளன.

தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸ் கடல், Sulu Sea, சிங்கப்பூர் நீரிணை, ஜாவாக் கடல் ஆகியன உள்ளன. இப்பகுதியில் பல தீவுக் கூட்டங்களும் உள்ளன. Pratas Islands, Paracel Islands, The Spratly Islands, Macclesfield Bank, Scarborough Shoal ஆகியவையுள்ளன. தென் சீனக் கடலில் சீனாவின் தொடர்ச்சியான ஆதிக்கம் அப்பகுதியில் அமைந்துள்ள பல நாடுகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சீனா பல செயற்கை தீவுகளை உருவாக்கி சர்வதேச கடல் எல்லையினுள் மற்றைய நாடுகள் வருவதனைத் தடுப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அதே சமயம், இக்கடல் பகுதியில் அமைந்துள்ள பார்சல் தீவுகள் மீது சீனா, வியட்நாம், தைவான் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடுகின்றன. இதற்கான பிரதான காரணம் கடல் பரப்பு. 1951-ல் அப்போதைய சீனப் பிரதமர் சூ என் லாய் Spratly and Paracel சீனாவிற்குரியது என அறிவித்திருந்தார். Spratly தீவில் சுமார் 100 பில்லியன் பரல்கள் ஹைட்ரோகார்பன் (hydrocarbon) நிலத்தடியில் உள்ளன. அத்துடன் தென் சீனக் கடலில் எண்ணெய் படிவுகளும், இயற்கை வாயுவும் நிறைந்து காணப்படுகின்றது.

இக்கடல் பரப்பில் அமெரிக்கா நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இப்பொழுது சீனாவால் ஏற்பட்டுள்ள தீவுகளின் மீதான ஆக்கிரமிப்பு போட்டியினுள் வித்தியாசமாக அமெரிக்கா உள் நுழைகின்றது. freedom of navigation என்ற பெயரில் இராணுவக் கப்பல்களையும், விமானங்களையும் அனுப்புகின்றது. அமெரிக்க அமைச்சர் அன்ரனி ஜே. பிளின்கன் 2021-ல் அமெரிக்கா எப்பொழுதும் ஒரு இந்தோ பசுபிக் நாடாகவேயிருக்கும் என்று கூறினார். the United States has long been, is and always will be an Indo-Pacific Nation. This is a geographic fact, from our Pacific coast states to Guam, our territories (colonies) across the Pacific. 1991-இல் ரஷ்யாவுடனான கோல்ட் வோர் (நிழல் யுத்தம்) முடிவடைந்த பின்னர், அமெரிக்கா சீனாவின் வளர்ச்சியை அவதானித்து வந்தது. சீனா அடுத்த வல்லரசாக மாறிவருகின்றது என்பதனை அமெரிக்கா கணித்தது. அப்பொழுதிருந்தே, அமெரிக்கா சீனாவிற்கு எதிராகக் காய்களை நகர்த்தத் தொடங்கியது. இதில் குறிப்பாக சீனா, தென் சீனக் கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. தென் சீனக் கடலின் வடபகுதியில் இக்கடலுடன் இணைந்த கிழக்கு சீனக் கடல் பகுதியில்தான் ஜப்பான், தென் மற்றும் வடகொரியாவுள்ளது. தென் கொரியாவும், ஜப்பானும் அமெரிக்காவின் நேசநாடுகள். வடகொரியா சீனாவுடன் நெருக்கமான நாடு. தனது நேச நாடுகளுடன் இணைந்து சீனாவிற்கு நெருக்கடியைக் கொடுக்க அமெரிக்கா தீர்மானித்தது. தென்சீனக்கடல் பகுதியில் உள்ள பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் மிக நெருங்கிய நாடு. அமெரிக்கா அங்கு ஐந்து இராணுவத் தளங்களைப் பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் இணைந்து அமைத்துள்ளது. இவை குறிப்பாகத் தென்சீனக் கடல் பகுதியை அண்டியே உள்ளது. இக்கடல் பகுதியிலேயே தைவானும் உள்ளது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் முதன் முதலாக இந்தோ-பசிபிக் என்ற புவிசார் அரசியல் சொற்பதத்தை கூறி உரையாடியவர் ஹிளரி கிளின்டன் ஆவார். இவர், பரோக் ஒபாமாவின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகவிருந்த பொழுது 2010-ல் ஹவாயில் நடைபெற்ற அரசியல் நிகழ்வு ஒன்றிலேயே இப்பதத்தை அறிமுகப்படுத்தி உரையாடினார். இவர் அவ் உரையில் Quadrilateral Security Dialogue(QUAD) (இந்தோ-பசுபிக் நீர்த்தேக்கம்) உருவாக்கப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தார். நீர்த்தேக்கம் என்ற சொல்லாக்கம் சற்று குறைவானது. ஏனெனில் இரண்டு சமுத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் இந்திய கடற்படையுடன் இணைந்து அமெரிக்க கடற்படை ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் எனவும் ஹிலறி கிளின்டன் கூறியிருந்தார். இவற்றுடன் Quadrilateral Security Dialogue(QUAD) என்ற அமைப்பினைப் பற்றியும் அழுத்தமாகத் தெரிவித்திருந்தார். இவ்வமைப்பானது அவுஸ்திரேலியா, யப்பான், இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்டது. இவ் அமைப்பு இடையில் நிறுத்தப்பட்டு, ஹிளரி கிளின்டன் உரையாடுவதற்குச் சில மாதங்களின் முன்னரே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதே காலப்பகுதியில் ஒபாமாவால் Pivot to Asia ஆரம்பிக்கப்பட்டது. இது ஆசியாவினை திட்டமிட்டு கட்டுப்படுத்தும்

திட்டம். ஆனால், வெளிப்பார்வைக்கு ஆசிய நாடுகளுக்கு உதவி செய்வதாகவிருக்கும். இதன் முக்கியத்துவத்தை ஒபா-மாவின் பின்னர் ஆட்சிக்கு வந்த டொனால்ட் டிரம்ப் உணர்ந் தார். ஏற்கனவே US Pacific Command (USPACOM) என்றி ருந்ததை US Indo Pacific Command(USINDOPACOM) என மாற்றினார். இது புதிய ஒரு நிழல் யுத்த ஆரம்பமாகும். ஒபமா வின் நடவடிக்கைகள் சீனாவைக் குறிவைத்ததாகவேயிருந் தது. டொனால்ட் டிரம்ப் நேரடியாகவே தாக்குதலை ஆரம்பித் தார். சீனாவைச் சுற்றி ஒரு xU Giant Nose-இனை அமைத் தது அமெரிக்கா. டிரம்ப்ன் நிர்வாகம் சீனாவை ரஷ்யாவின் ஆதரவுடனான சீராய்வு செய்யப்பட்ட சக்தி (Revisionist Power) என்று முத்திரை குத்தியது (labeled). அதே போன்று ரஷ்யாவை தீங்கான நாடு (Malign State) என்றும் வட-கொரி-யாவை முரட்டுத்தனமான நாடு (Rogue) எனவும் அமெரிக்கர் கள் கருதினார்கள். டிரம்ப் அரசின் நோக்கம் சீனாவின் பொரு ளாதார வளர்ச்சியைப் படிப்படியாக அழித்து, அதன் இரா ணுவ வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, சீன கம்யூனிஸ்ட் கட்சி யையும் அழித்து சீனாவில் ஒரு புதிய அரசை ஏற்படுத்துவதா கும். டொனால்ட் டிரம்ப்ன் முதலாவது ஆட்சிக் காலத்தில் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. சுங்கவரி விதிக்கப்பட்டது. ஆனால், பின்னர் ஆட்சிக்கு வந்த ஜோ பைடனின் அரசு, சீனாவுடன் மென்மையாகவே உறவுகளை வைத்துள்ளது. Huawei என்ற சீன 5ஜி நிறுவனத்தின் உயர் அதிகாரியான Meng Wanzhou, அமெரிக்க அரசு கேட்டதற்கி ணங்க கனடாவில் வைத்து 2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்டார். இந்த நடவடிக்கையும் சீனாவை மிரட் டுவதற்காகவே அமெரிக்காவினால் செய்யப்பட்டது. இதுவும் டிரம்ப்பின் ஆட்சிக் காலத்திலேயே நடைபெற்றது. மீண்டும் டொனால்ட் டிரம்ப் 2025-ல் ஆட்சிக் வருகின்றார். தேர்தல் பிரச்சாரங்களில் சீனாவிற்கு அதிகளவு சுங்கவரி விதிப்பேன் எனக் கூறியுள்ளார். சீனாவிற்கு அமெரிக்கா 800 பில்லியன் டொலர்கள் கடன் வழங்கவேண்டியுள்ளது என்பதனை டொனால்ட் டிரம்ப் மறந்துவிட்டார்.

சீனா ஒரு ‘Second Sino-Japanese War’ திட்டத்தை முன் வைக்கின்றது. அதாவது தைவான், ஹொங் ஹொங் அனைத் தும் சீனா என்ற நாட்டிற்குள் அடங்கும் என்பதாகும். ஹொங் ஹொங்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நவம்பர் மாதம் வழங்கப்பட்ட கடும்தண்டனை இதனை உறுதிப்படுத் துவதாகும். அமெரிக்கா இதனை எதிர்க்கின்றது. தைவானை இராணுவ ரீதியாக அமெரிக்கா பலப்படுத்திவருகின்றது. யப் பானும் தைவானுக்கு அவ்வப்போது உதவிபுரிந்து வருகின் றது. யப்பானும் சீனாவும் எதிரிகள். Meng Wanzhou (1937–45) போது யப்பான் சீனாவின் சில பிரதேசங்களை கைப்பற்றி வைத்திருந்தது. நாசிகள் யூதர்களுக்கு செய்தது போல், யூதர் கள் இப்பொழுது பாலஸ்தீனியர்களுக்கு செய்வது போல், யப் பானியர்கள் ஆக்கிரமித்த பிரதேசங்களில் சீனர்களை மிக மோசமாகச் சித்திரவதை செய்தாகக் கூறப்படுகின்றது. இரண் டாம் உலகப் போரினை முடிக்க எனக் கூறி அமெரிக்க யப்-பான் மீது அணு குண்டுகளை வீசியது. ஆனால், இன்று யப்-பான் அமெரிக்காவின் நெருங்கிய நண்பன். இக்குண்டுகள் வீசப்படுவதற்கு பசுபிக் சமுத்திரத்திலுள்ள குவாம் தீவிலி ருந்தே அமெரிக்க விமானங்கள் பறந்து சென்றன. இத்தீவி னைப் பற்றியே மேலே அன்ரனி ஜே. பிளின்கன் கூறியுள்ளார்.

ஆசியாவின் பொருளாதார வல்லரசாகத் திகழ்ந்த யப்பான் இன்று இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. முதலி டத்தை சீனா கைப்பற்றியுள்ளது. இந்த பொருளாதாரப் போட் டியினைத் தனக்கு சாதகமாக மாற்ற அமெரிக்கா விரும்புகின் றது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு அமெரிக்காவிற்கு சீனாவின் அதீத பொருளாதார வளர்ச்சி பயத்தை ஏற்படுத்துகின்றது. இராணுவ மற்றும் பொருளாதார வல்லரசாகவிருந்த அமெரிக் காவை பொருளாதாரத்தில் இரண்டாம் நிலைக்கு சீனா தள் ளிவிட்டது. பெடரல் றிசேவ் போர்ட் ஒவ் சென் லூயிஸ் (அமெ ரிக்கா)-இன் பொருளியல் நிபுணர் Yi Wen, இங்கிலாந்து, அமெரிக்கா, யப்பான் போன்றவை 200 வருடங்களில் ஏற்படுத் திய பொருளாதார மாற்றங்களை சீனா 22 வருடங்களில் (1978-2000) ஏற்படுத்தியுள்ளது எனக் கூறியுள்ளார். 1981-ல் சீனர்கள் வெறும் 1.25 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வாழ்வாதாரத்தையே கொண்டிருந்தனர். இன்று அதன் நிலை மாறிவிட்டது. சீனாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. உலக வணிகத்தில் 15 வீதமான பங்கு சீனாவுடையது. வெறும் எட்டு வீதமே அமெரிக்காவினுடையது.

Hu Jintao சீன ஜனாதிபதியாகவிருந்த 2002-2012 காலப்பகுதி முக்கியமானது. 2007-ம் ஆண்டு சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் 17-வது காங்கிரஸ், ஒக்ரோபர் மாதம் நடைபெற்றது. சீனாவின் பழமைவாதிகள் (தீவிர இடதுசாரிகள்) ஹோ ஜின்ராவ்வைக் கடுமையாக விமர்சித்தனர். ஜின்ராவ் கம்யூனிசத்தில் வலது சாரி. மாற்றங்களை விரும்புபவர். ஜின்ராவ் பின்னர் ‘சீனப் பண்புகளுடனான சமவுடைமை’ கொள்கை(Socialism with Chinese Characteristics)-யை அறிமுகப்படுத்தினார். அடிப் படை உரிமைகள், கலாச்சாரம், உற்பத்தி ஆகிய மூன்று அம் சங்களும் இவற்றுள் அடங்கும். இவற்றுள் உற்பத்தி என்பதற் குள் பொருளாதாரம் அடங்குகின்றது. ஜின்ராவ்வினால் முன் வைக்கப்பட்ட பொருளாதார மாற்றங்கள் இன்றைய சீனாவின் வளர்ச்சிக்கு ஏதுவாகியது. சீனாவில் உள்ள பழமைவாதக் கம்யூனிஸ்ட்டுகள் போன்று ரஷ்யாவிலும் உள்ளனர். இவர் களே இன்று புட்டினின் வலதுகரமாகத் திகழ்கின்றனர். மாவோ (மா செ துங்)வின் கம்யூனிச ஆட்சியிலிருந்து மாறு பட்டிருந்தது. தனியார் நிறுவனங்கள் சுயமாக இயங்கின. எனி னும், கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இயங் கின. பன்னாட்டு நிறுவனங்கள் இயங்க அனுமதிக்கப்பட்டன. அவற்றின் குறிப்பிட்டப்பட்ட பங்கு கம்யூனிஸ்ட் கட்சிக்குரிய தாகவிருந்தது. இன்றைய அதிபர் ஜீ ஜின் பிங் Theoretical System of Socialism with Chinese Characteristics என மாற் றியுள்ளார். சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு காரணமான சில காரணங்களான நிறுவனரீதியான நெருக்கடிகள், சந்தை சீர்தி ருத்தமின்மை, மாற்றுப் பொருளதார சிந்தனை வரட்சி போன் றன ஏற்படாமல் ஜின்ராவ்வும் ஜீ ஜின் பிங்கும் செய்தனர். 2013-ல் ஜீ ஜின் பிங் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது அமெரிக்கா ஜீ யை மற்றொரு கோர்ப்பசேவ் எனவே கருதி யது. ஜீ அமெரிக்காவின் கனவைச் சீனாவின் கனவாக மாற்றி னார். சீனாவின் கனவு சில்க் பாதை அமைப்பதாகும். இவர் ஆட்சிக்கு வந்தவுடனேயே இதனை நடைமுறைப்படுத்தினார். இன்று பதினொரு வருடங்களின் பின்னர் சில்க் பாதையை நோக்கி சீனா வெகு வேகமாக நகர்ந்து செல்கின்றது. இப்பா தையில் உள்ள தென் சீனக் கடல் மற்றும் இந்தோ பசுபிக் பிராந்தியங்களை அமெரிக்கா கட்டுப்படுத்த முயல்கின்றது. ஒபாமாவின் அரசினை விட பின்னால் வந்த டொனால்ட் டிரம்ப் அரசு சீனாவை ஒரு கடும் எதிரியாகவே கருதியது. மீண்டும் டிரம்ப் ஆட்சிக்கு வருகின்றார். அடுத்த நான்கு வரு டங்கள் சீனாவின் மீதான அமெரிக்காவின் அழுத்தம் மிக அதிகமாகவேயிருக்கும். அதுவும் பிறிக்ஸ் அமைப்பின்

தலைமைத்துவ நாடுகளில் ஒன்றாக சீனாவுள்ளது. பிறிக்ஸ் அமைப்பின் விரிவாக்கத்துக்கு காரணம் சீனாவின் பொருளாதார பலமுமாகும்.

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உக்ரைன்-ரஷ்ய போரில் சீனாவின் பங்களிப்பு முக்கியமானது. ரோன்களை சீனா இரு தரப்பிற்கும் ஏற்றுமதி செய்துள்ளது. எனினும், ரஷ்யா Semi Conductors போன்ற இராணுவ உபகரணங்களையும் வழங்கியுள்ளது. ஐ.நாவில் ஹமாசுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தனது வீற்றோ சக்தியை பாவித்துள்ளது. அமெரிக்க ஊடகங்கள் சீனா மீதான ஒரு எதிர்க்கருத்தியலை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இன்றுவரை கொரோனா வைரஸ் சீனாவால் உருவாக்கப்பட்டது என்ற ஐயப்பாடு




அமெரிக்க மக்கள் மத்தியில் உள்ளது. 'ரிக் ரொக்' தடை போன்றனவும் அமெரிக்க-சீன வணிக போட்டியின் விளைவாகும்.

கடந்த பல வருடங்களாக அமெரிக்க இராணுவத்தால் வெளிநாடுகளில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றங்கள், ஆக்கிரமிப்புகள் போன்றனவற்றுடன் ஒப்பிடும்பொழுது, சீனா உலகம் பயம் ஏற்படுமளவிற்கு எதுவுமே செய்யவில்லை. அமெரிக்க இராணுவ திட்டத்தை உருவாக்குபவர்கள், சீனா மீதான அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் வெற்றி கொண்டுள்ளார்கள். அதே போன்று அவர்கள் தடுப்பு நிதி (deterrence fund) ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குச் சுமார் 100 பில்லியன் டொலர்களைத் தென் சீனக் கடல் பகுதியில் உள்ள நாடுகளைப் பலப்படுத்துவதற்கு ஒதுக்கியுள்ளார்கள். இதனுள் தைவான் மற்றும் பிலிப்பைன்ஸ் அடங்கும்.

2024 ஏப்ரல் மாதம் Typhon எனப்படும் நிலத்தை மையப்படுத்திய மிசைல் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இதனுள் Tomahawk cruise missiles, Supersonic Standard Missle-6 (SM-6), Multi-purpose interceptor missiles, Mark 41 ground-based vertical launch system என்பன அடங்கும். இந்த Typhon தைவானுக்கு கிழக்காக உள்ள வட லுசன் (Luzon) தீவுகளில் உள்ளது. இந்த தீவுகள் பிலிப்பைன்ஸ் நாட்டின் தீவுகளாகும். இப்பகுதி சீனா இராணுத் தளங்கள் உள்ள பகுதிக்கு அருகில் உள்ளது. இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் மேலும் பல தளங்கள் அமைக்கும் திட்டம் அமெரிக்காவிற்கு உள்ளது. தற்பொழுது சீனாவைச் சுற்றி 400 அமெரிக்க இராணுவத் தளங்கள் உள்ளன.

தென்சீனக்கடல் பகுதியிலும் அதன் அண்டைய பகுதிகளிலும் 66 அமெரிக்கப் பாதுகாப்புத் தளங்கள் உள்ளன. 375,000 இராணுவ மற்றும் கடற்படை வீரர்கள் தங்கியுள்ளனர். பிலிப்பைன்ஸ்க்கும் ஹவாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களில் அமெரிக்கா இராணுவத் தளங்களை அமைக்க அனுமதி பெற்றுள்ளது. இதனை Compacts of Free Association (COFA) என்பார்கள். மார்சல் தீவுகள், Micronesia, Palau ஆகிய தீவுகளிலேயே அமெரிக்க இராணுவத் தளங்கள் இயங்கும். இவற்றிற்கு பதிலாக, அமெரிக்கா பல்வேறு தேவைகளுக்கு நிதியுதவி வழங்கும். இவற்றைவிட அமெரிக்கா பல நாடுகளுடன் இணைந்து இப்பிராந்தியத்தைக் கண்காணிக்கின்றது. முதலில் QUAD என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது SQUAD என்ற மற்றொரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. யப்பான், பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளடங்கியது SQUAD. இதனைவிட 1946-ல் உருவாக்கப்பட்ட UKUSA அமைப்பை விரிவாக்கி ஐந்து கண்கள் UKUSA அமைப்பை உருவாக்கியுள்ளார்கள். இதனுள் கனடா, நியுசிலாந்து, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அடங்கும். இந்த நாடுகள் அனைத்தும் ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்டவையாகும். இவற்றைவிட இந்தியாவுடன் அமெரிக்க நெருக்கமான இராணுவ உறவுகளைப் பேண முயல்கின்றது. இந்தியாவிற்கு Missile Technology Control Regime Category-1 Unmanned Aerial System வழங்க முன்வந்துள்ளது. எனினும் இந்தியா மிகவும் அவதானத்துடனேயே அமெரிக்காவின் திட்டத்தை அணுகின்றது. அண்மையில் சீனாவுடனான எல்லை உறவுகளை இந்தியா புதுப்பித்துள்ளது. இது அமெரிக்காவிற்கு இந்தோ பசுபிக் பிராந்திய விடயத்தில் சற்று பின்னடைவாகும்.

ஆனால் QUAD அமைப்பு மற்றொரு அமைப்பான ASEAN ஊடாக இப்பிராந்தியத்தில் சீனாவின் கடல் நகர்வுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. கடல் நகர்வுகளில் மீன்பிடித்தல், சீனக் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் புதிய செயற்கைத் தீவுகளை உருவாக்கலும் அடங்கும். ரஷ்யாவை மையப்படுத்தி நேட்டோவை உருவாக்கியது அமெரிக்கா. சீனாவை மையப்படுத்தி இந்தோ பசுபிக்கினை உருவாக்கியுள்ளது. 2022 பெப்ரவரி அமெரிக்காவின் பைடன் அரசு 'பசுபிக் தீவுகள், வடகிழக்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, தென் ஆசியா, ஓசினியா உட்பட அனைத்து மூலைகளையும், முனைகளையும் கண்காணிக்கும்' எனத் தெரிவித்துள்ளது. பைடனுக்கு முன்பாக டொனால்ட் டிரம்ப் நவம்பர் 2017-ல் APEC மாநாட்டில் 'Free and open Indo-Pacific' ஐ அமெரிக்கா அமைக்கும் எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்புத் திட்டமிடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது, சீனா அமைதியாகப் பல விடயங்களைச் செய்து வருகின்றது. அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்ட இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான

நாடுகள் சீனாவால் தங்களது நாடுகளுக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது எனத் தெரிவித்துள்ளன. அதே சமயம் சீனா பல நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள் ளது. சீனாவால் உருவாக்கப்படும் புதிய தீவுகளில் சீனா இரா ணுவத் தளங்களையும் கண்காணிப்பு கோபுரங்களையும் நிர் மாணித்துள்ளது. இத்தீவு ஒவ்வொன்றிலும் 24 jet fighters and five bomber planes தரித்து நிற்கலாம்.

இப்புதிய தீவுகளால் சீனாவுக்கான பாதுகாக்கப்பட்ட maritime water protection நீர்ப்பரப்பு அதிகரித்துள்ளது. உண் மையில் தென் சீனக் கடலில் சீனாவிற்கான (Exclusive Economic Zone)பரப்பளவு குறைவானதாகும். பிலிப்பைன்ஸ், மலேசியா, வியட்நாமுக்குரிய பரப்பளவே அதிகம். செயற் கைத் தீவுகளை உருவாக்குவதன் மூலம் இப்பரப்பளவை சீனா அதிகரிக்கவும் செய்கின்றது. சீனாவால் உருவாக்கப்ப டும் செயற்கைத் தீவுகள் சீனாவின் கரையிலிருந்து சுமார் 500-750 மைல்கள் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத் தீவு கள் வியட்நாமிலிருந்து சுமார் 150 மைல் தூரத்தில் உள்ளன. இதனால் அதிக பாதிப்பு வியட்நாமுக்காகும்.

The United Nations Convention on the Law of the Sea (UNCLOS)-இன்படி செயற்கைத் தீவுகள், வழமையான தீவுகளா கக் கருதப்படாது. அதனால் EEZ பரப்பளவைச் சீனாவால் அதிகரிக்க முடியாது. ஆனாலும், தென் சீனக்கடல் பரப்பில் சீனாவும், அமெரிக்காவும் ஐ.நாவின் சட்டங்களை மதிப்ப தில்லை; பின்பற்றுவதுமில்லை. ஏற்கனவே மனிதர்களோ அல்லது உயிரினங்களோ, மரங்களோ அற்றிருந்த சில மிகச் சிறிய தீவுகளையே சீனா, புதிதாகப் பாறைகள், மற்றும் மண் ணால் நிரப்பி இராணுவத் தளங்களை அமைத்துள்ளன. இத் தீவுகளில் தங்கள் முன்னோர் தங்கி நின்று மீன் பிடித்துள்ள னர். எனவே, அவை எமது; அந்த கடல் பிரதேசம் எங்களுடை யது என சீனா வாதிடுகின்றது. ஆனால் சர்வதேச சட்டமானது UNCLOS மனிதர்களோ, உயிரினங்களோ அற்ற தீவுகளைத் தீவுகளாக கருதுவதில்லை. இந்த சர்வதேச சட்டம் அமெரிக் காவிற்கு ஆதரவானது எனச் சீனா கருதுகின்றது. ஆதலால் அதனைச் சீனா எதிர்க்கின்றது.

Guam, Gibraltar, and Hawaii ஆகிய தீவுகளை அமெரிக்கா வும், ஐக்கிய இராச்சியமும் கைப்பற்றியதால் தமது ஆதிக் கத்தை இந்தோ பசுபிக் சமுத்திரங்களில் நிலைநிறுத்தி வரு கின்றது. தீவுகளைச் சுற்றியுள்ள கடல்பரப்பின் வளங்களை யும் இந்நாடுகள் பயன்படுத்துகின்றன. சீனா சர்வதேச சட்டங் களை மீறி தனது இராணுவத் தளங்களைத் தென் சீனக் கடல் பகுதியில் அதிகரித்து வருகின்றது. அதே போன்று சில்க் பாதை அமைப்பில் பல நாடுகளில் துறைமுகங்கள் போன்ற வற்றையும் அமைத்துள்ளது. பாகிஸ்தானுக்கு கடுகதி நெடுஞ்சாலைகளையும் அமைத்துள்ளது.

சீனாவின் உளவுத்துறைத் தலைவர் Chen Yixin சீனக் கம்யூ னிஸ்ட் கட்சி தோழர்கள் மத்தியில் பேசும்பொழுது அமெரிக் காவின் நடவடிக்கைளுக்கான காரணம் 'கிழக்கு வளர்கின் றது. மேற்கு தேய்கின்றது' (East is rising and West is declining) எனக் கூறினார். உண்மையும் அதுவே. தென் சீனக் கட லிலும், இந்தோ பசுபிக் பிராந்தியத்திலும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அமை தியாக பார்த்துக் கொண்டிருக்கும் சீனா, தனது முன்னைய மூன்று அம்சங்களான உட்கட்டுமானம், கட்டடங்கள், வணிக செயலாக்கம் போன்றவற்றுடன் அடுத்த கட்டமான தூய சக்தி தொழில்நுட்பம், மின்சார வாகனங்கள், பட்டறிகள் போன்றன வற்றின் உற்பத்தியிலும் அதிக கவனம் செலுத்தி வருகின் றது. உலகின் ரோன் ஏற்றுமதியில் 60 வீதத்தை சீனாவே செய் கின்றது. ரஷ்யாவுடன் இணைந்து பல சர்வதேச நிகழ்வுகளின் திட்டங்களையும் தீர்மானிக்கின்றது. இன்று அமெரிக்கா தைவானைக் காப்பற்றலாம். தென் சீனக்கடலையும், இந்தோ பசுபிக் பிராந்தியத்தையும் தாண்டி சீனாவின் வளர்ச்சி அதிக ரித்துள்ளது. சில்க் பாதை அமைக்கும் திட்டம் மிகவும் வெற்றி கரமாக உள்ளது. டொனால்ட் டிரம்பினால் ஏற்படுத்தப்பட வுள்ள சீனாவிற்கான சுங்க வரி அமெரிக்காவையே பலவீனப் படுத்தும். தென் சீனக் கடலை அமெரிக்கா தனது கட்டுப்பாட் டுக்குள் தொடர்ந்து வைத்திருக்கலாம், ஆனால் உலகின் பொருளாதார வல்லரசாகவுள்ள சீனாவை அமெரிக்காவால் மீறமுடியாது.

**உசாத்துணை:**
- https://warontherocks.com/2024/05/the-east-and-south-china-seas-one-sea-near-seas-whose-seas/



rathan@thaiveedu.com





# டொனால்ட் ட்ரம்ப் – எலோன் மஸ்க்
## ஆட்சி / பணம் / ஊடகம் : கைகோர்த்துள்ள மும்முனை அதிகாரங்கள்

– ரூபன் சிவராஜா

**உலக வல்லரசான அமெரிக்க ஜனாதிபதியின் அரசியல் அதிகாரமும் உலகின் அதியுச்சச் செல்வந்தரான ஒருவரின் பெருநிதி அதிகாரமும் ஊடக அதிகாரமுமாக மூன்று முக்கிய அம்சங்கள் கைகோர்த்திருக்கின்றன. ஊழலுக்கும் சட்டத்திற்குப் புறம்பான பொருளாதார மோசடிகளுக்கும் இவ்வாட்சி மாற்றம் இட்டுச் செல்லும் என்ற கருத்துகளும் பல மட்டங்களில் நிலவுகின்றன.**

நவம்பர் 4-ஆம் திகதி நடைபெற்று முடிவடைந்த தேர்தல் அமெரிக்காவின் 47வது ஜனாதிபதித் தேர்தல். டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். உலகின் முதலாவது செல்வந்தரான எலோன் மஸ்க் (Elon Musk) அமெரிக்க அரசியலில் அதிகாரம் மிக்க நபராக மாறியுள்ளார். ரொனால்ட் டிரம்பின் வெற்றி உறுதிசெய்யப்பட்ட கணத்தில் மஸ்க்கின் ரெஸ்லா ('Tesla' மின்சாரக் கார்) நிறுவனப் பங்குச்சந்தைப் பெறுமதி 15 வீதத்தால் உயர்ந்ததாகச் செய்திகள் வெளிவந்தன. டிரம்பின் தேர்தற் பரப்புரைகளுக்காக மட்டும் மஸ்க் 130 மில்லியன் டொலர்களைச் செலவிட்டதாகக் கூறப்படுகின்றது.

### உலகின் ஆகப்பெரும் செல்வந்தர்:

எலோன் மஸ்க் ஒரு இயற்பியலாளர், பொறியாளர், கண்டுபிடிப்பாளர், தொழிலதிபர் மற்றும் முதலீட்டாளர் எனப் பன்முக ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டவர். 2002-ல் விண்வெளி நிறுவனமான SpaceX மற்றும் 2003-ல் மின்சாரச் மகிழுந்து உற்பத்தியான Tesla Motorst-இன் நிறுவனராக மஸ்க் அதிகம் பிரபலமடைந்தார். இந்நிறுவனங்கள் மூலம் அவரது உரித்துடமை மற்றும் வருமானம் அவரை உலகின் ஆகப்பெரிய முதன்மைப் பணக்காரர்களில் ஒருவராக ஆக்கியது. இவருடைய தந்தை தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்தவர், தாயார் கனடாவைச் சேர்ந்தவர். தென்னாப்பிரிக்காவின் பிரிட்டோரியாவில் (Pretoria) வளர்ந்தவர். 1988-ல் கனடாவிற்கும், பின்னர் 1992-ல் அமெரிக்காவிற்கும் இயற்பியற்துறையிற் கற்கவும் சென்று பின் அங்கு 2002-லிருந்து குடியுரிமை பெற்று வசித்துவருகின்றார். சமீப ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) நிறுவனமான xAI, சமூக ஊடகத் தளமான X (முன்னைய Twitter) ஆகியவற்றின் உரிமையாளராகவுள்ளார்.

ஜோ பைடன் நிர்வாகம் அமெரிக்க வணிக மற்றும் உற்பத்திச் சமூகத்தின் மீது கட்டுப்பாடுகளை அதிகரித்ததோடு, தொழிற்சங்கங்களின் அதிகாரத்தை வலுப்படுத்த முனைந்த பின்னணியில் ஜனநாயகக் கட்சி ஆதரவு நிலையிலிருந்த மஸ்க் தீவிர வலதுசாரிச் சாய்வினைத் தேர்ந்து கொண்டார். இத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரத்துவம் தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்கும் (Technological innovation) மற்றும் செவ்வாய்க் கிரகத்தினை ஆக்கிரமிக்கும் தனது கனவுக்கும் குறுக்காக நிற்குமென்பது மஸ்க்கின் நிலைப்பாடு. தனது செவ்வாய் கிரகக் கனவு அமெரிக்காவின் புதிய தொழிற்புரட்சி யுகத்திற்கு வழிவகுக்குமென்று அவர் கூறியிருக்கின்றார்.

### ட்ரம்ப் அரசாங்கத்தில் மஸ்க்கிற்கு அதிகாரபூர்வப் பதவி:

ட்ரம்ப் அரசாங்கத்தில் மஸ்க்கிற்கு அதிகாரபூர்வப் பதவி வழங்கப்படுவது தொடர்பான உறுதியான சமிக்ஞைகள் தென்படவில்லை. ஆனால் ட்ரம்பின் முதன்மை ஆலோசகர்களில் ஒருவராக அவர் விளங்குவார் என்று அரசியற் பரப்பில் நம்பப்படுகின்றது. ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களைப் பணி நீக்கம் செய்வது உட்பட்ட வேறு திட்டங்களின் மூலம் தேசிய வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் வெட்டுகளுக்குப் பங்களிக்கப் போவதாக மஸ்க் கூறியிருந்தமை நினைவுகூரத்தக்கது. மேடிசன் சதுக்கத் தோட்டத்தில் (Madison Square Garden) இடம்பெற்ற ட்ரம்பினுடைய பாரிய தேர்தற்பரப்புரை நிகழ்வில், அமெரிக்க வரலாற்றில் 'ஆகப்பெரிய முதலீட்டாளர்/முதலாளி' என்று அறிமுகப்படுத்தப்பட்டார். அமெரிக்க தேசிய வரவு-செலவில் எவ்வளவு நிதி வெட்டினைச் சாத்தியப்படுத்த முடியுமென்று அந்நிகழ்வில் மஸ்க்கிடம் கேட்ட போது, குறைந்தது இரண்டு 2000 பில்லியன் டொலர்கள் என்று அவர் பதிலளித்தார்.

இன்றைய சூழலில் சுயாதீனமானதாக இயங்கும் அமெரிக்க மத்திய வங்கியினை அரசியற் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது மஸ்க்கின் விருப்பமாக வெளிப்பட்டிருக்கின்றது. அதேவேளை வணிகக் கட்டுப்பாட்டுத் தளர்த்துகையினால் அவரது தொழில் நிறுவனங்கள் அதிக வருமானத்தையும் இலாபத்தையும் ஈட்டுவதற்கான சூழல் அமையும். இது மட்டு

மல்லாமல் பென்ரகனுடன் (Pentagon) அவரது SpaceX செய்துகொள்ளக்கூடிய புதிய உடன்படிக்கைகள் மூலமும் வருமானம் அதிகரிக்கும். மஸ்க் மீது அமெரிக்காவில் வணி கத்துறை தொடர்பான 19 வழக்குகள் உள்ளன. அவற்றில் பல அல்லது அனைத்தையும் இல்லாமற் செய்ய முடியும். தொழிற்சங்கச் சட்டங்களை அமுல்ப்படுத்தும் நிறுவனமான தேசிய தொழிலாளர் உறவு வாரியத்துடனும் (National Labor Relations Board) மஸ்க்கிற்கு முரண்பாடுண்டு. ஜோ பைடன் நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட அதன் தலைவரை ட்ரம்ப் நீக்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மஸ்க் அடிப்படையில் Cryptocurrency எனப்படும் அண் மைக் காலங்களிற் பிரபலமாகிப் பொருளாதார, முதலீட்டு மற்றும் பங்குச் சந்தைப் பரப்புகளிற் பாவனைக்கு வந்துள்ள எண்ணிம நாணயம் / எண்ணிமக் கட்டணமுறை / நாணயப் பரிமாற்ற முறைமையின் தீவிர ஆதரவாளர். ட்ரம்ப் முன்னர் இந்த நாணய முறைமையினை ஊழல் என்று கூறிவந்தார். ஆனால் இம்முறைத் தேர்தற் பிரச்சாரங்களுக்கு பெருந் தொகை நிதியினை எண்ணிமத் தொழிற்துறை (Crypto industry) வட்டாரங்களிலிருந்து பெற்றுள்ளார். அத்தோடு தனது சொந்த cryptocurrency-இனை அறிமுகப்படுத்தியதோடு, cryptocurrency சார்ந்து பைடன் நிர்வாகத்தினால் அமுற்ப டுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்குவதாகவும் உறுதியளித் துள்ளார்.

சமீப காலமாக அமெரிக்காவின் தாராளவாத உயரடுக்குக ளுக்கு எதிராக ஊடக, பொருளாதார, அரசியற் தளங்களில் போர்க்கொடியினைத் தூக்கித் தன்னை ஒரு கலகக்காரனாக வும் கருத்துரிமைப் போராளியாகவும் சுயசித்திரிப்புச் செய்து வருகின்றார். அத்தோடு ட்ரம்பின் ஊடக மூலோபாயத்தையும் ஆதரிக்கின்றார். அதாவது இம்முறைத் தேர்தற் பிரச்சாரங்க ளில் பாரம்பரிய மற்றும் நிறுவப்பட்ட ஊடகங்களுக்கு வெளி யில் Poscast வகைமை எண்ணிம ஒலிபரப்புகளைத் தனது பரப்புரைகளுக்குப் பயன்படுத்தினார்.

## ‘X’ சமூக ஊடகத்திலிருந்து பயனர்கள் வெளியேற்றம்:

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, மில்லியன் கணக்கான பயனர்கள் எலோன் மஸ்க் உரிமையாளராகவி ருக்கும் சமூக ஊடகமான ‘X’ இலிருந்து வெளியேறி விட்டனர் அல்லது அதனைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டனர். X-இலிருந்து விலகி, Bluesky, Threads போன்ற தளங்க ளுக்குப் பல மில்லியன் பயனாளர்கள் மாறியுள்ளனர். அதற் குக் காரணம் எலோன் மஸ்க்கின் டிரம்ப் ஆதரவு நிலைப்பா டும் தீவிர வலதுசாரிப் போக்கும், ‘X’-தளத்தில் நேரடியாக ட்ரம்ப் ஆதரவு அரசியற் பரப்புரைகளை முன்னெடுத்தமை-யுமாகும்.

‘Make America Great Again’ எனும் கூற்றுப் பொறிக்கப்பட்ட தொப்பியுடன் ட்ரம்ப்பிற்கான பரப்புரைக் கூட்டங்களில் மஸ்க் கலந்துகொண்டிருக்கின்றார். பல கல்வியாளர்கள், பத்திரி கையாளர்கள் மற்றும் இடதுசாரி அரசியல்வாதிகள் வேறு மாற்றுச் சமூக ஊடகத் தளங்களை நாட வழிவகுத்துள்ளன மஸ்க்கின் ட்ரம்ப் ஆதரவுச் செயற்பாடுகள். Meta நிறுவனத் தின் குறுஞ்செய்திச் செயலியான Threads உடன் ஒப்பிடும் போது Bluesky முன்னணியில் இருப்பதாக Financial Times நவம்பர் ஆரம்பத்தில் தகவல் வெளியிட்டிருந்தது. X-இற்குப் போட்டியாக Threads இனால் உருவாக்கப்பட்டதே Threads.

தேர்தல் நாளிலிருந்து, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் Bluesky-இன் பயன்பாடு கிட்டத்தட்ட 300 சதவீதம் அதிகரித் தது 3.5 மில்லியன் நாளாந்தப் பயனர்களை அது எட்டியுள் ளது என பைனான்சியல் ரைம்ஸ் பத்திரிகை Similarweb தரவை மேற்கோள் காட்டி கூறியுள்ளது. Bluesky-இன் மொத் தப் பயனர்கள் 20 மில்லியன் எனப்படுகின்றது. இவர்களிற் பெரும்பாலானோர் மிக அண்மைக் காலத்தில் இணைந்தவர் களாவர். Sensor Tower தரவுகளின்படி, 2023-இல் X தளத் தின் நாளாந்தப் பாவனையாளர்கள் 250 மில்லியன்கள். அமெ ரிக்கத் தேர்தலின் பின் அது 164 மில்லியன்களாக வீழ்ச்சிய டைந்துள்ளது. இன்னும் வீழும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற Meta நிறுவனத்திற் குச் சொந்தமான சமூக ஊடகத் தளங்களில் அரசியல் உள்



ளடக்கம் முடக்கப்படும் என்று அதன் தலைமை நிர்வாக அதி காரி மார்க் ஜுக்கர்பெர்க் (Mark Zuckerberg) முடிவு செய்த தணிக்கைக் கட்டுப்பாட்டின் பின்னர் Bluesky-இன் வளர்ச்சி நிகழத் தொடங்கியது. இதற்காக அண்மையில் ஒருமுறை ட்ரம்ப் மார்க்கிற்கு நன்றி கூறும் தொனியில் ஒரு கூற்றினைச் சொல்லியிருந்தார். அதாவது அவர் தேர்தலிலிருந்து தூர விலகியிருக்கின்றார் என்பதால் அவரைத் தனக்கு இப்பொ ழுது கூடுதலாகப் பிடித்திருக்கின்றது என்றிருந்தார். அதன் பொருள் மார்க் கடைப்பிடிக்கும் அரசியற் தணிக்கை அல் லது தணிக்கை அரசியல் தனக்கெதிரான பரப்புரைகளுக்கு இடம்கொடுக்காது என்ற சந்தோசத்தின் வெளிப்பாடு அதுவா கும். அதேவேளை X-இல் ட்ரம்பிற்கு ஆதரவான அரசியற் கருத்துகள் அதிகம் இடம்பெற்றன. தீவிர வலதுசாரிக் கருத்துகளும் அதில் வெளிப்பட்டன என்பது பொதுவான கணிப்பாகும்.

## பெருநிதியும் கருத்தியற் பரப்புரையும்:

ட்ரம்பின் தேர்தல் வெற்றிக்கு இரு பெரும் முதன்மைத் தளங் களில் உதவியவர் மஸ்க். ஒன்று, தேர்தற் பிரச்சாரங்களுக் கான பெருந்தொகை நிதி. மற்றையது, கருத்தியற் தளம்.

கருத்தியற் தளம்கூட இரண்டு தளங்களாலானவை. உலகின் ஆகப்பெரிய செல்வந்தர் என்ற உயரடுக்கு அந்தஸ்து, பொருளாதார அதிகாரமிக்க நபர் என்ற அளவிலான அவரது கருத்துநிலைப் பரப்புரை. மற்றையது X-தளம் வாயிலான ஊடகப் பிரச்சாரம். இந்நிலையில் அவருக்குக் கைமாறாக ட்ரம்பிடமிருந்து என்ன திரும்பக் கிடைக்கும் என்ற கேள்விகள் உலக மட்டத்தில் முதன்மையான பேசுபொருளாக உள்ளன.

அடிப்படையில் மஸ்க், ட்ரம்ப் ஆதரவாளராகவோ அல்லது குடியரசுக் கட்சி ஆதரவாளராகவோ நீண்டகாலம் இருந்த ஒருவர் அல்ல. அவர் ஜனநாயகக் கட்சி ஆதரவாளராகவே அண்மைய ஆண்டுகள் வரை இருந்தவர். அது மட்டுமல்லாமல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் 69 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தினையும் முன்வைத்தவர். ஆனால் தற்போது 78 வயதான ட்ரம்புடன் கைகோர்த்துள்ளமைக்கு ஒரு பின்னணி உண்டு. அது முற்றி

**THE COMPANIES BUILT BY**
**ELON MUSK**

| | | Valuation |
|---|---|---|
| 1. | Tesla | $1.042 Trillion |
| 2. | SpaceX | $100 Billion |
| 3. | PayPal: | $103 Billion |
| 4. | The Boring Company | $5.6 Billion |
| 5. | Solar City | $2.6 Billion |
| 6. | Neuralink | $1 Billion |

லும் பொருளாதாரக் காரணங்களைக் கொண்ட பின்னணி என்பதைப் புரிந்துகொள்வது கடினமுமல்ல. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரச செயற்திறன் அமைச்சகத்தின் (Department of Government Efficiency) தலைமைப் பொறுப்பினை எலோன் மஸ்க் மற்றும் விவேக் இராமசாமி ஆகிய இருவரும் ஏற்கவுள்ளனர். தேர்தலுக்கு முன் ட்ரம்ப் வெளியிட்ட புதிய பொருளாதாரத் திட்டங்களின் ஒரு பகுதியாக அரசாங்க செயல்திறன் ஆணைய உருவாக்கத்தினை முன்மொழிந்திருந்தார்.

## புதிய அமைச்சக உருவாக்கம்:

இவர்கள் இருவரும் சேர்ந்து, தனது நிர்வாகத்தில் அரசாங்க அதிகாரத்துவத்தை நீக்குவதற்கும், அதிகப்படியான விதிமுறைகளைக் குறைப்பதற்கும், வீண் செலவுகளைக் குறைப்பதற்கும், மாநிலங்களின் கூட்டாட்சி நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கும் வழிசமைக்கவுள்ளனர் என்று டிரம்ப் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவ்விருவரும் அரசாங்கத் துறைகளோடு உடன்படிக்கைகளைக் கொண்டுள்ள பல இலாபகரமான தொழில் நிறுவனங்களை நடத்துகின்றனர். இந்நிலையில் புதிய அமைச்சகத்தில் இவர்களது பணி முரண்நிலைகளுக்கு உட்படக்கூடியது என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதேவேளை அமெரிக்கக் காங்கிரஸ் அவை முற்றிலும் குடியரசுக் கட்சியின் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் வாய்ப்பு வந்தாற்கூட பொதுச் செலவுகள், செயற்பாடுகளில் பாரிய மாற்றங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு கிட்டுமா என்பது கேள்விக்குரியதே.

2002-ல் அமெரிக்கக் குடியுரிமை பெற்றதிலிருந்து ஜனநாயகக் கட்சிக்கே ஒவ்வொரு முறையும் தான் வாக்களித்து வந்ததாக மஸ்க் கூறியிருக்கின்றார் (Mike Wendling, BBC, 12.08.2024). ஜனநாயகக் கட்சியினர் இடது பக்கம் அதிகம் நகர்ந்துள்ளதாகத் தான் நம்புவதாகவும் மஸ்க் தெரிவித்துள்ளார். அத்தோடு ஜனநாயகக் கட்சி 'தீவிரவாதிகளால்' கையகப்படுத்தப்பட்டதான மிகைப்படுத்தப்பட்ட கூற்றினையும் உதிர்த்துள்ளார்.

## ஜோ பைடன் – மஸ்க் முரண்பாடு:

தொழிற்சங்கங்கள் சார்ந்த விவகாரத்தில் ஜோ பைடனுக்கும் மஸ்க்கிற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடே மஸ்க்கின் நிலைப்பாட்டு மாற்றத்திற்கும் காரணம். மஸ்க்கின் கட்சி ஆதரவுத் தாவலுக்கான காரணங்களில் முதன்மையானது இதுவாகும். அத்தோடு 2021-ல் வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற மின்சார வாகனங்கள் சார்ந்த மாநாடு ஒன்றிற்கு மஸ்க் அழைக்கப்படவில்லை. தற்போது X எனும் பெயரைக் கொண்டுள்ள Twitter தளத்தினை 2022-ல் மஸ்க் கொள்வனவு செய்தபோதும் பைடன் நிர்வாகம் எதிர்த்துள்ளது. சாரதியில்லா வாகன விதிகளில் இறுக்கத்தை அமுல்படுத்தியமையிலும் இரு தரப்பிற்குமிடையில் முரண்பாடு அல்லது இடைவெளி தோன்றியுள்ளது.

## அரசியல் பச்சோந்தி:

அண்மைக் காலங்களில் மஸ்க் அதிகம் மாறியிருப்பதாக அமெரிக்க ஊடகவியலாளர் ரியான் ப்ரோடிடரிக் (Ryan Broderick) கூறியுள்ளார். அதீத கவர்ச்சிவாத அணுகுமுறை கொண்டவர் என்று அவரை ப்ரோடெரிக் சித்தரிக்கின்றார். 'அதிகம் கவனத்தை கோருகிற ஓர் அரசியல் பச்சோந்தி' என்றும் அவரை விளித்திருக்கின்றார்.

டிரம்ப் மற்றும் மஸ்க் பல்வேறு அரசியல் பிரச்சினைகளை எவ்வாறான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றனர் என்பதை அமெரிக்க Fortune ஊடகம் கணிப்பீடு செய்து வெளியிட்டுள்ளது. குடியேற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடங்கிக் கருக்கலைப்பு, கருத்துச் சுதந்திரம் வரை அனைத்தையும் இந்த மதிப்பாய்வு உள்ளடக்கியது (Jenn Brice, Fortune, 06.11. 2024). உலகின் மிகப் பெரிய செல்வந்தரும் உலகின் மிக சக்திவாய்ந்த அதிகாரம் மிக்க மனிதரும் நிறைய விடயங்களில் ஒத்த தன்மைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பது அந்த ஊடகத்தின் முடிவாகும்.

மஸ்க் ஆறு பெரு நிறுவனங்களின் உரிமையாளர். அவற்றிற் பல அமெரிக்க அரசாங்கத்துடன் பெரிதும் சம்பந்தப்பட்டுள்ளன. SpaceX நிறுவனம் நாசா (National Aeronautics and Space Administration NASA) மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை ஆகியவற்றுடன் பில்லியன் கணக்கான மதிப்புள்ள

உடன்படிக்கைகளைக் கொண்டிருக்கின்றன. ரெஸ்லா தானியங்கி ரொபோ டாக்சிகளில் (Autonomous robot taxis) அதிக முதலீடு செய்துள்ளது. இதனை அமெரிக்க நிர்வாக அதிகாரத்துவம் தாமதப்படுத்தி வந்துள்ளது. இதற்கான ஒப்புதற் செயல்முறையை டிரம்ப் 2025 ஜனவரியில் எளிதாக்கும் சட்ட மூலங்களைப் பிறப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மஸ்க்கின் செவ்வாய்க் கிரகக் கனவு:

2024-ம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்திற்கு நான்கு விண்கலங்களை அனுப்புவதாக எலோன் மஸ்க் கூறியதாக கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அவற்றில் இரண்டு மனிதர்களை ஏற்றிச்செல்லும் என்றும் கூறியிருந்தார். அங்கு செல்லும் விண்வெளிக் குழுவினர் செவ்வாய்க் கிரக மேற்பரப்பில் ஒரு தளத்தை உருவாக்குவதோடு, பூமிக்குத் திரும்பும் பயணத்திற்கான எரிபொருள் உற்பத்தியைத் தொடங்குவார்கள். ஆனால் அவர்கள் உயிராபத்தின்றித் திரும்புவதற்கான சாத்தியங்கள் குறித்து உறுதியாகத் தெரியவில்லை என்றும் 2024 மார்ச் மாதம் இடம்பெற்ற ஒரு மாநாட்டின் போது மஸ்க் கூறியதாகச் செய்திகள் பதிவாகியிருக்கின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் ஆஸ்டினில் (Austin) நடைபெற்ற SXSW மாநாட்டின் போது செவ்வாய்க் கிரகத்தின் கொலனித்துவத்திற்கான திட்டங்களைப் பற்றி எலோன் மஸ்க் வெளிப்படையாகப் பேசினார். 40 முதல் 100 ஆண்டுகளில் ஏவுகலன்கள் செவ்வாய்க் கிரகத்திற்கு ஒரு மில்லியன் மக்களைக் கொண்டு செல்லும் என்று மஸ்க் கூறியுள்ளார்.

மனிதர்கள் செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்லத்தான் போகிறார்கள். ஆனால் அது 2024-ல் நடப்பதற்குச் சாத்தியமில்லை. என்று கருத்துரைத்துள்ளார் Niels Bohr ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த (University of Copenhagen) வானியற்பியல் மற்றும் கிரக ஆய்வுத்துறை இணை பேராசிரியர் க்ஜார்டன் கிஞ்ச் (Kjartan Kinch). அதற்கு அதிகமான பரிசோதனைகள் அவசியப்படுகின்றன, பூமியிலிருந்து வெகு தொலைவில் உள்ள செய்வாயிற் காலடி வைப்பதாயின் அதற்குரிய அனைத்தும் உரிய முறையிற் தொழிற்பட வேண்டும், தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுமிடத்து அவற்றை உடனடியாகத் திருத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்று அவர் மேலும் விபரித்துள்ளார். டென்மார்க் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி மையமான 'DTU Space' இயக்குநரான கிறிஸ்தியான் பெடர்சன் (Kristian Pedersen) அக்கருத்தில் உடன்படுகின்றார். அவரது பார்வையில் மஸ்க்கின் கூற்று யதார்த்தமற்றது என்கிறார். மனிதர்கள் குறைந்தது அரை வருடம் உயிர்வாழக்கூடிய ஒரு விண் பெட்டகத்தினை (Space capsule) உருவாக்குவதும், செவ்வாயக் கிரகத்தில் பாதுகாப்பாகத் தரையிறங்குவதை உறுதிசெய்வதும் அதீத தொழில்நுட்ப வளர்ச்சியைக் கோரி நிற்கின்ற அம்சம். அப்படி அனுப்புவது சாத்தியமானாலும்கூட உயிர் பிழைப்பதற்கான நிகழ்தகவு மிகக் குறைவு என்கிறார் பெடர்சன்.

## ட்ரம்ப் – மஸ்க் நிலைப்பாடுகள்:

புதுப்பிக்கத்தக்க சக்தி (Renewable energy) சார்ந்த பார்வையில் இருவருக்கும் ஒருமித்த கருத்து நிலவவில்லை. காலநிலை மாற்றம், உலக வெப்பமயமாதல் ஒரு புரளி என்று ட்ரம்ப் பல ஆண்டுகளாகக் கூறிவந்திருக்கின்றார். எண்ணெய் ஆய்வு தொடர்பான கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் திரும்பப் பெறப்போவது, பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை மீண்டும் வெளியேற்றுவது, பைடனின் பணவீக்கக் குறைப்புச் சட்டத்தை (Inflation Reduction Act) நீக்குவது போன்ற வாக்குறுதிகள் ட்ரம்பினால் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை மஸ்க் தன்னை சூழலியல் அக்கறையாளனாகவும் காலநிலை மாற்றம் குறித்துக் கவலை கொண்டவராகவும் சித்தரித்து வந்திருக்கின்றார். கார்பன் உமிழ்வுகளுக்கு வரி விதிக்க முன்மொழிந்ததோடு, எதிர்கால உலகின் சக்திக்கான தேவைகளைச் சூரியசக்தி ஈடு செய்யும் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருந்தார். 2016-ல் ட்ரம்ப் நிர்வாகத்தின் மூலோபாய மற்றும் தொழிற்துறை ஆணையத்தில் அங்கம் வகித்து, முதன்முறை பாரிஸ் உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா வெளியேற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக வல்லரசான அமெரிக்க ஜனாதிபதியின் அரசியல் அதிகாரமும் உலகின் அதியுச்சச் செல்வந்தரான ஒருவரின் பெருநிதி அதிகாரமும் ஊடக அதிகாரமுமாக மூன்று முக்கிய அம்சங்கள் கைகோர்த்திருக்கின்றன. ஊழலுக்கும் சட்டத்திற்குப் புறம்பான பொருளாதார மோசடிகளுக்கும் இட்டுச் செல்லும் என்ற கருத்துகளும் பல மட்டங்களில் நிலவுகின்றன. அவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துமென்பது எதிர்பார்ப்பிற்குரியது.

## உலகை ஆள்வது யார்:

உலகின் மிகப்பெரிய தகவற்தொடர்புத் தளங்களில் ஒன்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் உலகின் மிகப்பெரிய செல்வந்தரான மஸ்க்கின் ஆதரவானது - அதிகாரம், ஆட்சிசார் அர்த்தத்தில் மிகப்பெரிய செல்வாக்குள்ளது. இங்கு அறிஞர் நோம் சோம்ஸ்கியின் 'Who rules the world' நூலில் இடம்பெற்ற ஒரு விடயத்தினை இக்கட்டுரையின் முடிவுரையாகக் குறிப்பிடுவது பொருத்தமாகும்:

ஆதிக்க சக்திகளின் மக்கள் பிரதிநிதித்துவ நடைமுறைக்கும் இந்தப் பிரபஞ்சத்தைப் புரிந்து கொண்டவர்களுக்குமிடையிலான இடைவெளி என்பது நிச்சயமாக மிகப்பெரியது.

சிறந்த ஜனநாயகத்தினைக் கொண்டுள்ள நாடுகளிலும்கூட, அரசியல் கொள்கை முடிவுகளில் 'மக்களால்' மட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கினையே செலுத்த முடிகிறது. அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் பொருளாதார உயரடுக்குகளும் வணிக நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுமே அதிகமதிகம் சுயாதீனமான செல்வாக்கினைச் செலுத்துகின்றன. இவை தொடர்பாக ஆதாரபூர்வமான பல்வேறு ஆய்வுகள் உள்ளன. சராசரிக் குடிமக்கள் மற்றும் வெகுசன நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்புகள் எந்த விதத்திலும் சுயாதீனமான செல்வாக்கினைச் செலுத்த முடிவதில்லை அல்லது மிகக்குறைந்த செல்வாக்கினையே கொண்டிருக்கின்றன.



rooban.s@thaiveedu.com



# பொலிவியா: சதிகளின் சதிராட்டம்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## முகப்பு:

ஒக்ரோபர் 27-ம் திகதி காலை, முன்னாள் பொலிவிய ஜனாதிபதி ஈவோ மொராலஸ், கொச்சபாம்பாவிற்கும் சாண்டா குரூஸுக்கும் இடையே வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். அவர் மீதான கொலை முயற்சியில் அவரது சாரதி படுகாயமடைந்தார். மொராலஸ் மயிரிழையில் உயிர் தப்பினார். இலத்தீன்




அமெரிக்க நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்கள், இவ்வன்செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், இந்த சம்பவம் சர்வதேச அளவில் கண்டனத்துக்கு உள்ளானது. ஹோண்டுராஸ் ஜனாதிபதி சியோமாரா காஸ்ட்ரோ, கியூபா ஜனாதிபதி மிகுவல் டியாஸ்-கனெல், கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் ஆகியோர் மொரேலஸுடன் தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். 2022-ல் இவ்வகையான படுகொலை முயற்சியில் பாதிக்கப்பட்ட ஆர்ஜென்டினாவின் முன்னாள் ஜனாதிபதியான கிறிஸ்டினா பெர்னாண்டஸ் டி கிர்ச்னர் மற்றும் ஈக்வடாரின் முன்னாள் ஜனாதிபதி ரஃபேல் கொரியா ஆகியோரும் பொலிவிய தலைவர் மீதான வன்முறைக்குக் கண்டனம் தெரிவித்தனர். இந்தப் படுகொலை முயற்சியானது பொலிவியாவில் நடந்தேறுகின்ற சதிகளின் அண்மைய அத்தியாயமாகும்.

அமெரிக்காவின் கொல்லைப்புறம் என அறியப்படும் இலத்தீன் அமெரிக்கா, அரசியற் சதிகளுக்குப் பெயர்போனது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆயிரத்துக்கு மேற்பட்ட சதிகள் இந்தப் பிராந்தியத்தில் அரங்கேறியுள்ளன. குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய - அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலான கெடுபிடிப் போர் -காலப்பகுதியில் இப்பிராந்தியத்தின் அனைத்து நாடுகளிலும் சதிகள் அரங்கேறின. இன்றுவரை அமெரிக்காவின் நலனுக்கு முரணாகச் செயற்படும் ஆட்சிகளைக் கவிழ்ப்பது என்பது தொடர்கிறது. இதன் ஓர் அத்தியாயம் கடந்த ஒரு தசாப்த காலமாகப் பொலிவியாவில் அரங்கேறுகிறது. 2019 நவம்பரில் ஜனாதிபதியாக இருந்த மொராலஸ் இராணுவச் சதியின் மூலம் அகற்றப்பட்டார்.

குறித்த படுகொலை முயற்சியை மொராலஸின் ஆதரவு பெற்ற தற்போதைய ஜனாதிபதியும் அவர்தம் கூட்டாளிகளுமே மேற்கொண்டதாக, மொராலஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் சோசலிசத்தை நோக்கிய இயக்கம் குற்றஞ்சாட்டுகிறது. இது மொராலஸ் மற்றும் ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ் ஆகியோருக்கு இடையிலான உள்ளார்ந்த நெருக்கடிகளின் விளைவாகும் என்பதே பொதுக் கருத்தாகும்.

சோசலிசத்தை நோக்கிய இயக்கம் வெளியிட்ட அறிக்கையின்படி, ஈவோ மோரல்ஸ் தனது வானொலி நிகழ்ச்சியைப் பதிவு செய்ய ஞாயிற்றுக்கிழமை காலை 6:30 மணியளவில் லாக்காவுக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவர் பயணித்த வாகனம் மீது இரண்டு வாகனங்களில் பதுங்கியிருந்த ஆயுதம் ஏந்திய மனிதர்கள் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவம் இராணுவ முகாம் நுழைவாயிலில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட வாகனங்கள் இராணுவ முகாமிற்குள் நுழைந்தன. இதற்கு உள்துறை அமைச்சர் எட்வர்டோ டெல் காஸ்டிலோ மற்றும் பாதுகாப்பு அமைச்சர் எட்மண்டோ நோவில்லோ ஆகியோரை நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று அவ்வறிக்கை கோரியது.

இது ஒரு படுகொலை முயற்சி அல்ல. ஆனால் போலீஸ் சோதனைச் சாவடியில் மொராலஸின் வாகனங்கள் நிற்காததற்கு காவல்துறையின் பதிலிறுப்பாகும் என்று உள்துறை அமைச்சர் எட்வர்டோ டெல் காஸ்டிலோ தெரிவித்தார். மேலும், சோதனைச் சாவடியில் இருந்த இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகள் மீது மொராலஸ்ஸின் குழு துப்பாக்கிச் சூடு நடத்தியதாக டெல் காஸ்டிலோ குற்றம் சாட்டினார்.

மொராலஸ் மற்றும் தற்போதைய ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரிவுகளுக்கு இடையே உள்ள உள்நாட்டுப் போராட்டத்தின் மத்தியில் ஆழமான பிளவுகள் உருவாகியுள்ளன. பொலிவியாவில் உள்நாட்டிலும் இடதுசாரிகளுக்குள்ளும் அதிக அரசியல் பதற்றம் நிலவிய சூழலில் இந்த வன்முறைச் செயல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இன்றும் இலத்தீன் அமெரிக்காவின் முதன்மையான தலைவர்களில் ஒருவராக ஈவோ மொராலஸ் இருக்கிறார். குறிப்பாக ஃபிடஸ் காஸ்ரோ, ஹூகோ சாவேஸ் ஆகியோரின் மறைவுக்குப் பின்னர், இரண்டாயிரமாம் ஆண்டுகளில் இலத்தீன் அமெரிக்காவில் எழுந்த இளஞ்சிவப்பு அலையின் பிரதிநிதியாக இன்னமும் நிலைப்பவர் மொராலஸ்.

## தென்னமெரிக்காவின் இளஞ்சிவப்பு அலை:

இருபத்தோராம் நூற்றாண்டு, இலத்தீன் அமெரிக்கா முழுவதும் பரவிய தீவிர அரசியல் அணிதிரட்டல்களின் அலையுடன் துவங்கியது. வெனசுவேலா, பிரேசில், அர்ஜென்டினா, உருகுவே, பொலிவியா, சிலி, ஈக்குடோர், பராகுவே மற்றும் பெரு ஆகிய நாடுகளில் இடதுசாரிக் கட்சிகளை ஆட்சியில் அமர்த்தியது. 1970-கள் மற்றும் 1980-களில் இராணுவ ஆட்சிகளால் ‘வில்லன்களாக’ கருதப்பட்ட இடதுசாரிகள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிக்கு வரத் தொடங்கினர். வெனிசுலாவில் 1998-ல் ஹூகோ சாவேஸ் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து இலத்தீன் அமெரிக்காவின் பெரும்பகுதியில் இடதுசாரிகள் மீண்டும் எழுச்சி பெற்றனர். சிலியில் ரிக்கார்டோ லாகோஸ் (2000), பிரேசிலில் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா (2002), அர்ஜென்டினாவில் நெஸ்டர் கிர்ச்னர் (2003), உருகுவேயில் தபாரே வாஸ்குவேஸ் (2004), பொலிவியாவில் ஈவோ மோரல்ஸ் (2005), ஈக்குவடோரில் ரஃபேல் கொரியா (2006), நிகரகுவாவில் டேனியல் ஒர்டேகா (2006), பராகுவேயில் பெர்னாண்டோ லுகோ (2008), எல் சால்வடாரில் மௌரிசியோ ஃபூன்ஸ் (2009) ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். இந்த இடது நோக்கிய இலத்தீன் அமெரிக்காவின் திருப்பமானது ‘இளஞ்சிவப்பு அலை’ என்று அழைக்கப்பட்டது. பராகுவேயில் பெர்னாண்டோ லுகோவைத் தவிர, ஏனைய அனைவரும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் அல்லது தங்கள் கட்சிக்கு தங்களுக்கு விருப்பமான வாரிசுகளை ஆதரிப்பதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட முறை ஆட்சியைத் தக்கவைத்தனர்.

‘இளஞ்சிவப்பு அலை’ என்பது 1980-களில் இலத்தீன் அமெரிக்காவெங்கும் இருந்த சர்வாதிகாரங்களால் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் மற்றும் 1990-களில் நவதாராளவாத சமூக ஜனநாயகங்களால் முன்தள்ளப்பட்ட தீவிர தனியார்மயமாக்கல்கள் மற்றும் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான பாரிய சமூக அணிதிரட்டலின் விளைவாகும். இந்த புதிய அரசியல் நிகழ்வின் முக்கிய தூண்டுதல்களாக ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாரம்பரிய தொழிலாளர் இயக்கத்தின் செயற்றிறன், பழங்குடியினரின் அரசியல் எழுச்சி, பெண்கள் மற்றும் நகர்ப்புற அமைப்புகளின் செயலூக்கம் ஆகியன இருந்தன. உலகமயமாதலுக்கு எதிரான இயக்கம் இந்த இளஞ்சிவப்பு அலையின் இன்னொரு முக்கிய புள்ளியாகும்.

இக்காலப்பகுதியில் இலத்தீன் அமெரிக்கா முழுவதிலும் உள்ள இடதுசாரி அரசாங்கங்கள் நிறுவனங்களை மறுதேசியமாக்கியது, வறுமைக் குறைப்பு மற்றும் நகர்ப்புற பங்கேற்பு போன்ற பாரிய திட்டங்களை இயக்கியது. இது பெண்கள், பழங்குடியினர் மற்றும் கறுப்பின சிறுபான்மையினருக்கு அதிகாரம் அளித்தது. இலத்தீன் அமெரிக்காவைப் பற்றி அதிகம் அறியாத ஒரு வெளி உலகத்திற்கு, இளஞ்சிவப்பு அலைக்கு வழிவகுத்த மக்கள் கோபம் மற்றும் எதிர்ப்பின் வெடிப்புகள் பெரும்பாலும் தற்காலிக சூழ்நிலைகளுக்கான தன்னிச்சையான எதிர்வினைகளாகத் தோன்றும். உண்மையில், சுரண்டல் மற்றும் காலனித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான இடைவிடாத போராட்டத்தின் வெளிப்பாடே இந்த இளஞ்சிவப்பு அலையாகும்.

இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் பொலிவிய மக்களின் பங்கு பிரதானமானது. பல நூற்றாண்டுகளாக நாட்டின் கனிம இதயத்தை கிழித்தெறிந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுரண்டல்களுக்கு எதிரான பொலிவிய மக்களின் வரலாற்றை, நீண்ட மற்றும் தைரியமான வாழ்க்கைப் போராட்டத்தை வேறெங்கும் காணவியலாது. பொலிவியாவில் ஏராளமான இயற்கை வளங்கள் உள்ளன, ஆனால் வரலாற்று ரீதியாக இவை மக்களுக்கான செல்வமாகச் சென்றடையவில்லை. உண்மையில், பிராந்தியத்தில் மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக பொலிவியா இருந்தது.

பொலிவியாவின் இயற்கை வளங்களின் பயன்பாடும் கட்டுப்பாடும் நீண்ட காலமாகச் சமூக மோதலுக்கான மையமாக இருந்து வருகிறது. 1999-ம் ஆண்டில் கொச்சபாம்பா பகுதியில் தண்ணீரைத் தனியார் மயமாக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தண்ணீரைத் தனியார் மயமாக்குவது என்பது நவ-தாராளவாத மூலோபாயத்தின் ஒரு மையப் பகுதியாகும். உலக மூலதனத்தின் கைகளில் தண்ணீரை வழங்குவதென்பது நுணுக்கமான ஆராய்வில், வாழ்க்கையின் மீது கட்டுப்பாட்டை ஒப்படைப்பதாகும். இதை எதிர்த்து மக்கள் போராடினர். வலுவான எதிர்ப்பியக்கம் கட்டியெழுப்பப்பட்டது. இதில் பழங்குடியினத் தலைவராக எழுச்சிபெற்ற ஈவோ மொராலஸ் நன்கறியப்பட்ட ஒருவரானார். தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களின் விளைவால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

கொச்சபாம்பா நடவடிக்கை ஒரு வெற்றி. முதன்முறையாக ஒரு எதிர்ப்பு இயக்கம் ஒரு பன்னாட்டு நிறுவனத்தைச் சுதந்தி

ரமான நடவடிக்கை மூலம் பின்னுக்குத் தள்ளியது. அடிமட்டத்தில் இருந்து உருவான ஒரு இயக்கத்தின் கோரிக்கைக் கேற்ப அரசு செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது தீயைப் போல பரவியது. நாடு முழுவதும் போராட்டங்கள் பெருகின. கோச்சபாம்பாவின் தெருக்களில் போர்கள் பொங்கி எழும்போது, லா பாஸில் ஒரு போர்க் குணமிக்க வேலை நிறுத்தம் வெடித்தது. எல் ஆல்டோவில், தண்ணீர் தனியார் மயமாக்கல் நகரத்தின் பெருமளவிலான பழங்குடி மக்களை நேரடியாக மோதலுக்கு கொண்டு வந்தது. மற்



றொரு பன்னாட்டு நீர் நிறுவனம் அடிபணிந்தது.

புதிய தாராளமயத்தை எதிர்ப்பதில் அடிமட்டத்தில் வெகுஜன நடவடிக்கைகள் தீர்மானிக்கும் திருப்புமுனையாக கோச்ச பாம்பா அமைந்தது. இது ஒரு புதிய போராட்ட மாதிரியை வழங்கியது. இது தெருக்களில் இறங்கியவர்களின் போர்த் திறனைப் பற்றியது அல்ல - நாட்டின் முழு வரலாறும் அரச படைகளின் முகத்தில் வீரம் மற்றும் உறுதிப்பாட்டின் எடுத்துக்காட்டுகளால் நிரம்பியுள்ளது. மாறாக, பல்வேறு அமைப்புகளின் ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது, அத்துடன் அதன் அதிகரித்து வரும் அரசியல்மயமாக்கலை எடுத்துக் காட்டியது.

2005-ல், சமூகக் கொந்தளிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், பொலிவியா 54 சதவீத வாக்குகளுடன் ஈவோ மொராலஸை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது. உலகின் முதலாவது பழங்குடியின ஜனாதிபதியாக மொராலஸ் பதவியேற்றார். அவரது சோசலிசத்தை நோக்கிய அவரது இயக்கம் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது. 1982-ல் பொலிவியா ஜனநாயகத்திற்கு திரும்பிய பிறகு எந்தக் கட்சியும் பெரும்பான்மையைப் பெற்றது கிடையாது. இவ்வாறு பெரும்பான்மையைப் பெற்ற முதலாவது கட்சி என்ற பெருமை மொராலஸிற்குரியது. ஒரு சக்திவாய்ந்த மக்கள் ஆணையுடன், மொராலஸ் ஒரு ஜனநாயக மற்றும் கலாசாரப் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார். அவர் அரசியல் மற்றும் சமூக நிலையை உயர்த்தி, இயற்கையோடு இயைந்து ‘நன்றாக வாழ’ மக்களுக்கு உதவும் வகையில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கினார். ஹைட்ரோகார்பன் துறையின் பகுதி தேசியமயமாக்கலைத் தள்ளினார், போதைப்பொருளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவந்தார். அரசியலமைப்பை மீண்டும் எழுதுவதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தைக் கூட்டினார்.

அவரது நிர்வாகம் பல குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கொண்டுள்ளது. நடுத்தர வர்க்கம் மக்கள் தொகையில் 10 சதவீதத்தை உள்ளடக்கியதாக வளர்ந்துள்ளது, பொருளாதார வளர்ச்சி பல தசாப்தங்களில் இருந்ததை விட அதிகமாக உள்ளது, மேலும் சிவில் மற்றும் சமூக உரிமைகள் அடிப்படையில் பெரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பணப்பரிமாற்றம், புதிய குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சுகாதாரம், அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் கல்வி ஆகியவற்றில் முதலீடு செய்வது சமூகத்தின் ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய துறைகளின் வாழ்க்கையை மேம்படுத்தியுள்ளது. தீவிர வறுமை 2005-ல் 38 சதவீதத்தில் இருந்து 2019-ல் 11 சதவீதமாக குறைந்துள்ளது. மேலும் பணக்கார 10 சதவீதத்திற்கும் ஏழ்மையான 10 சதவீதத்தினருக்கும் இடையிலான இடைவெளி 128 மடங்காக இருந்து 31 மடங்காகக் குறைந்துள்ளது.

2010-ன் நடுப்பகுதியில், சிலியில் செபாஸ்டியன் பினேரா தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இளஞ்சிவப்பு அலை தணியத் தொடங்கியது. 2013-ல் சந்தேகத்திற்கிடமான முறையில் வெனசுவேலாவில் ஹுகோ சாவேஸ் இறந்தார். அர்ஜென்டினாவில் மொரிசியோ மேக்ரியின் தேர்தல் வெற்றி (2015) மற்றும் பிரேசிலில் டில்மா ரூசெஃப்பின் பதவி நீக்கம் (2016) ஆகியவற்றின் பிறகு, பல ஆய்வாளர்கள் இலத்தீன் அமெரிக்க இடதுகளின் முடிவை அறிவித்தனர். ஈக்வடோரில் லெனின் மோரேனோ (2017), பிரேசிலில் ஜெய்ர் போல்சனாரோ (2018), உருகுவேயில் லக்கால் போ (2019) ஆகிய அதிவலது நபர்களின் வெற்றி இக்கூற்றை உறுதி செய்தது. ஆனால் 2019-லும் பொலிவியாவில் ஏகோபித்த மக்கள் ஆதரவுடன் மொராலஸ் ஆட்சியில் இருந்தார்.

## சதிகளின் அரசியல்:

பொலிவியாவின் வரலாறு அடிக்கடி அரசியல் ஸ்திரமின்மை மற்றும் இராணுவ தலையீடுகளால் நிறைந்தது. 1825-ல் சுதந்திரம் பெற்றதில் இருந்து, பொலிவியா கிட்டத்தட்ட 40 சதி முயற்சிகளைச் சந்தித்துள்ளது. குறிப்பாக 1964-க்கும் 1982-க்கும் இடைப்பட்ட காலம் சர்வாதிகார ஆட்சிக்காலமாகும். அதன் பின்னரும் பல சதிகள் அரங்கேறியுள்ளன. அமெரிக்கா தனக்கு உவப்பில்லாத ஆட்சியாளர்களை உலகெங்கிலும் தொடர்ச்சியாக அகற்றி வந்துள்ளது. குறிப்பாக தென்னமெரிக்காவில் இவ்வாறான அரசியற் சதிகள் அடிக்கடி நிகழ்ந்தன. இந்தப் பின்புலத்தில் 2019-ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மொராலஸ் வெற்றி பெற்றிருந்த நிலையில் அங்கொரு இராணுவச் சதி அரங்கேறியது. மொராலஸ் பதவி அகற்றப்பட்டார்.

மொராலஸுக்கு எதிரான சதியானது, 1980-இல் பாசிச துணை இராணுவக் குழுக்களின் உதவியுடன் இடதுசாரிகளை பயமுறுத்துவதற்காக கட்டவிழ்த்து விடப்பட்ட கொக்கெயின் சதியுடன் பல ஒற்றுமைகளைக் கொண்டிருந்தது. 1980-ம் ஆண்டில், பார்பி மற்றும் இத்தாலியைச் சேர்ந்த அதிவலது பயங்க

ரவாதிகள் உட்பட பிற சர்வதேச பாசிஸ்டுகளால் பயிற்று விக்கப்பட்ட குழுவானது பொலிவியாவின் இடதுசாரி அரசியல்வாதிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களை வேட்டையாடிச் சுத்திகரிப்பு செய்தது. இது போதைப்பொருள் உற்பத்தியைக் கட்டுக்குள் வைத்திருக்கும் முயற்சியின் அங்கமாக இருந்தது. இன்று அதே வகைப்பட்ட ஒரு செயல், பல தசாப்தங்களுக்கு முன்னர் அங்கு குடியேறிய நாஜிக்கள் மற்றும் புலம்பெயர்ந்த பாசிசவாதிகளின் புதிய தலைமுறையினரால் வழிகாட்டப்பட்டது. இலாபகரமான போதைப்பொருள் விநியோக மோசடியில் இருந்து பொலிஸாரை தடுக்க மொராலஸ் முயற்சித்தது அவர்களை சதித் திட்டத்தில் சேரத் தூண்டிய கூறுகளில் ஒன்றாகும். ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட போர் மற்றும் கொலம்பியாவின் கிளர்ச்சிகள் எவ்வாறு அமெரிக்காவின் போதைப்பொருள் ஏற்றுமதியில் பாரிய எழுச்சிக்கு வழிவகுத்ததுபோல், பொலிவியாவில் இருந்து இதேபோன்ற முடிவை அமெரிக்கா எதிர்பார்த்தது. ஆனால் அமெரிக்கா போதைப் பொருளை எதிர்த்துப் போராடுவதுபோல் பாசாங்கு செய்கிறது. போதைப்பொருளுக்கெதிரான போர் என்ற போர்வையில் ஆட்சிகளைக் கவிழ்க்கவும், குழப்பவும் தொடர்ந்து பணியாற்றுகிறது.

பொலிவிய மற்றும் கொலம்பிய விவசாயிகளைப் பயமுறுத்துவதற்கு ஒரு சாக்காகப் பயன்படுத்தப்பட்ட போதைப்பொருள் மீதான இந்த போலியான போரை எதிர்ப்பதில்தான் ஈவோ மொரலஸ் முக்கியத்துவம் பெற்றார். அதிகாரம் பெறுவதற்கு முன்பே அவர் பல அமெரிக்காவின் படுகொலை முயற்சிகளில் இருந்து தப்பியவராவார் என்பதும் முக்கியமானது.

மொராலஸின் ஆட்சிக் கவிழ்ப்பில், சிஐஏ ஆட்சிக்கவிழ்ப்பு செய்யும்போது பின்பற்றும் அதே நடைமுறைகளைக் காணவியலும். குறிப்பாக மூன்று முக்கிய அம்சங்களைக் காணலாம். இவை பொலிவியாவிற்கு மட்டுமல்ல மேலும் பல நாடுகளுக்கும் பொருந்தும். இலங்கையில் கூட இதன் சில கூறுகள் தொடர்ச்சியாக வெளிப்படுகின்றன. புதிய ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களும் இதிலுண்டு.

சிஐஏ ஆட்சிக் கவிழ்ப்பின் முதல் முக்கியமான அம்சம் இராணுவத்தின் கட்டுப்பாட்டைப் பெறுவது. இலத்தீன் அமெரிக்காவில் இது வழக்கமாக தி ஸ்கூல் ஆஃப் தி அமெரிக்காஸ் மூலம் செய்யப்படுகிறது. பொலிவிய சதியில் தொடர்புடைய அறுவர் இந்தப் பள்ளி பட்டதாரிகள். ஸ்கூல் ஆஃப் தி அமெரிக்காஸ் பல்வேறு ஆட்சிக்கவிழ்ப்பு சதிகாரர்களுக்கு பயிற்சி அளிப்பதில் பிரபலமானது. இது அவர்களுக்கு இரக்கமற்ற எதிர்ப்பு கிளர்ச்சிக் கோட்பாட்டைக் கற்பிக்கிறது. சமூகத்தில் உள்ள எந்தவொரு முற்போக்கான கூறுகளையும் ஆபத்தான எதிரியாகக் கருதுமாறு கோருகிறது. அது சித்திரவதை செய்யப்படுவதை ஆதரிக்கிறது. அமெரிக்காவின் ஸ்கூல் ஆஃப் தி அமெரிக்காவில் கற்றுக்கொண்ட பாடங்களின் விளைவாக இலத்தீன் அமெரிக்காவில் லட்சக்கணக்கான மக்கள் பயங்கரமான மரணங்களைச் சந்தித்துள்ளனர். சிஐஏ ஆட்சேர்ப்பு செய்த பொலிவிய இராணுவத்தின் மிக முக்கியமான உறுப்பினர் ஜெனரல் வில்லியம் கலிமான் ரொமேரோ ஆவார். அவருடைய குடும்பம் அமெரிக்காவில் வசித்ததால் குறிப்பாகப் பாதிக்கப்படக்கூடியவர். மொராலஸ் செய்யவிருந்த அனைத்தையும் பற்றி அமெரிக்காவிற்குத் தெரியப்படுத்துவதையும் பொலிவியாவில் நடக்கும் அனைத்தையும் பற்றி மொராலஸுக்குத் தவறான தகவலைத் தெரிவித்ததையும் பல ஆண்டுகளாக அவர் இவ்வாறு செய்துவந்தார் என்பது பின்னரே தெரியவந்தது. அவர் சதித்திட்டத்தை மறைத்தார், அமெரிக்க சிறப்புப் படைகள் நாட்டிற்குள் ஊடுருவ அனுமதித்தார், பின்னர் சிஐஏ-யின் உத்தரவுப்படி மொராலஸை பதவி விலகும்படி கட்டாயப்படுத்தினார். இந்தத் துரோகத்திற்காகக் கலிமான் ஒரு மில்லியன் டாலர்களைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஆட்சிக் கவிழ்ப்பின் இரண்டாவது முக்கிய அம்சம் காவல்துறையின் கட்டுப்பாட்டைப் பெறுவது. ஈராக்கில் இருந்து உக்ரைன் வரையிலான நாடுகளில் நிகழும் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளை எதிர்கொள்வதற்கு உலகம் முழுவதும் உள்ள போலீசாருக்கு அமெரிக்கா தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது. 2019 ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பங்களித்த பொலிவிய காவல்துறைத் தலைவர் ஜெனரல் விளாடிமிர் யூரி கால்டெரோன் அமெரிக்காவில் உள்ள பொலிவிய தூதரகத்தில் காவல்துறை இணைப்பாளராக இருந்தபோது, சிஐஏ அவரை விலைக்கு வாங்கி, அவரைப் பணியமர்த்தியது. கால்டெரோன் பொலிவியாவில் இருந்த அமெரிக்கத் தூதரக்கில் காவல்துறை இணைப்பாளராக இருந்த சிஐஏ ஏஜென்ட் மேஜர் மேத்யூ கென்னி தாம்ஸனால் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. மொராலஸ் பதவி கவிழ்க்கப்பட்டவுடன், ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து அமைதியான போராட்டங்களை முன்னெடுத்த போராட்டக்காரர்களைச் சுட்டுக் கொன்றதன் மூலம் காவல்துறை நடவடிக்கைகளை வழிநடத்தியவர் தாம்ஸன் என்றும் அக்கட்டளைகளை கால்டெரோன் வழங்கினார் என்பதும் ஆதாரங்களுடன் நிறுவப்பட்டுள்ளன.

சிஐஏ சதியின் மூன்றாவது முக்கிய அம்சம், அமெரிக்க அபிவிருத்தி நிறுவகம் (USAID) மற்றும் ஜனநாயகத்திற்கான தேசிய நன்கொடை (National Endowment for Democracy) போன்ற பெருநிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட என்.ஜீ.ஓக்களின் மூலம் 'சிவில் சமூகத்தை' கட்டுப்படுத்துவதாகும். சிஐஏ-யின் செயற்பாடுகளில் இந்த சிவில் சமூகம் முக்கிய பங்காற்றியுள்ளது. இவை பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், தொழிலாளர் குழுக்கள், கல்வியாளர்கள் ஆகியோருக்கு நிதியளிப்பது, மனித உரிமை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றை நடத்துவது மற்றும் பொழுதுபோக்காளர்களுக்கு சமூகத்தை வடிவமைக்கும் முகமாக செயற்படுவது எனப் பல முகங்களைக் கொண்டவை. இவை தேவையானபோது உளவியல் போரை நடத்தி அரசுகளை கவிழ்க்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரேபிய வசந்த காலத்தில் முதலில் கிழக்கு ஐரோப்பா மற்றும் பின்னர் மத்திய கிழக்கு முழுவதும் பரவிய நிறப் புரட்சிகள் வரை சிஐஏயின் பணியின் இந்த அம்சம் உலகம் முழுவதும் பிரபலமடைந்தது. பொலிவியாவின் ஆட்சிக் கவிழ்ப்பிலும் இந்த சிவில் சமூகம் முக்கிய பங்காற்றியது.

மொராலஸின் ஆட்சிக் கவிழ்ப்பில் இயற்கை வளங்கள் மீதான கட்டுப்பாடு ஒரு முக்கிய அம்சமாகும். குறிப்பாக பொலிவியாவில் உள்ள லித்தியம் தாது பொருட்கள் மீது எல்லோரும் கண் வைத்துள்ளார்கள். அமெரிக்காவை தளமாகக் கொண்ட டெல்சா கார் உற்பத்தியாளரின் உரிமையாளர்

எலன் மஸ்க், மொராலஸ்க்கு எதிரான 'லித்தியம் சதி' என்று அழைக்கப்படுவதில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டார். பொலிவியாவின் லித்தியத்தை மஸ்க் பெறுவதற்காக, ஈவோ மொராலஸுக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் ஒரு சதித்திட்டத்தை ஏற்பாடு செய்ததாக மஸ்க்கின் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு, 'யாரை வேண்டுமானாலும் நாம் கவிழ்ப்போம்! முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று பதிலளித்துள்ளார். மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் பேட்டரிகளின் முக்கிய அங்கமாக லித்தியம் இருக்கிறது.

மொராலஸ் பதவி அகற்றப்பட்டு ஓராண்டின் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மொராலஸின் ஆதரவு பெற்ற மிகுவல் டியாஸ்-கனெல் ஜனாதிபதியானார். இந்நிலையில் இவ்வாண்டு யூன் மாதம் ஜனாதிபதிக்கு எதிரான இராணுவச் சதி ஒன்று அரங்கேறியது. இராணுவ வாகனங்கள் ஜனாதிபதி மாளிகையை சுற்றிவளைத்தன. இச்செய்தியைக் கேள்விப்பட்ட மொராலஸ் மக்களை வீதிக்கு இறங்கிப் போராடுமாறு கேட்டுக்கொண்டார். மக்கள் வீதிக்கு இறங்கினர். இராணுவம் பின்வாங்கியது. இராணுவச் சதி முறியடிக்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதியால், மொராலஸ் ஆட்சியின்போது வழங்கிவந்த சமூகநலத் திட்டங்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றை வழங்க முடியவில்லை. இதனால் இவருக்கெதிரான போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இந்நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து மொராலஸை ஓரங்கட்டுவதற்காகவே அவருக்கெதிரான கொலை முயற்சியை ஜனாதிபதி மேற்கொண்டார் என மொராலஸ் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்போது இருவரும் எதிரெதிர்த் திசைகளில் நிற்கிறார்கள். பழங்குடி மக்களின் ஓரே நம்பிக்கைக் கீற்றாக மொராலஸ் திகழ்கிறார்.

## முடிப்பு:

பொலிவிய அனுபவத்தை தற்போதைய இலங்கை மாற்றங்களுடன் ஒப்பிட முடியும். 2019-ல் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு என்பது முதலாளித்துவத்தின் எதிர்ப்புரட்சிகரக் கிளர்ச்சி என்று அழைக்கப்படுகிறது. பொலிவியா போன்ற நாடுகளில் இவ்வாறான எதிர்ப்புரட்சிச் சதிகளுக்கான ஆதரவு மிகவும் அரசியல் மயமாக்கப்பட்ட, அதிகம் படித்த நடுத்தர வர்க்கத்திடமிருந்தே கிடைக்கிறது. தொடக்கத்தில் இவர்கள் நவதாராளவாதத்தைத் தண்டிப்பதற்காக அவருக்கு வாக்களித்திருந்தாலும் கூட, விரைவில் இவர்கள் மொராலஸிடமிருந்து தங்களைத் தூர விலக்கத் தொடங்குகின்றனர். ஆனால், மாற்றங்களை ஆதரித்த தொழிலாள வர்க்கமும் பழங்குடியினப் பெரும்பான்மையும் தொடர்ச்சியாக மொராலஸிற்கு ஆதரவளித்தன.

தலைநகரை மையமாகக் கொண்ட மேலாதிக்கக் கட்டுப்பாட்டை வைத்திருக்கும் ஒரு உயரடுக்கினரும், மத்தியதர வர்க்கமும் தங்களைப் பழங்குடியினராக உணரவில்லை. மாறாக, அவர்கள் மிகவும் இனவெறி கொண்டவர்கள். தாம் மற்ற பொலிவியர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்றும், அவர்கள் ஸ்பானியர்களின் நேரடி வம்சாவளியினர் என்றும் உணர்கிறார்கள். அவர்கள் மற்றவர்களைவிட வெள்ளையாகவும் மேற்கத்தியமாகவும் உணர்கிறார்கள். இந்த உணர்வுகள் பொலிவியன் நடுத்தர வர்க்கத்தின் மையத்தில் இருந்தது. அவர்களது பொருளாதார நலன்களுக்கு எதிராக, அரசுடைமையாக்கல், தேசியமயமாக்கல் போன்றவற்றை மொராலஸ் செய்தபோது இந்த குழு ஈவோ மொராலஸை தீவிரமாக எதிர்த்தது.

மொராலஸ்ஸால் பொருளாதார மீட்சியை வழங்க முடிந்தது. அதனால் எதிர்க்கட்சி அமைதியாக இருந்தது, ஆனால் இரண்டு விஷயங்கள் எப்போதும் இருந்தன. ஒன்று, தேசிய சோக உணர்வு, ஏனென்றால் பொலிவியாவை பன்முகத் தன்மை கொண்ட நாடாக அரசியலமைப்பின் ஊடாக மொராலஸ் அறிவித்தார். பொலிவியர்கள் பன்முகத்தன்மை கொண்டவர்கள், அதாவது பழங்குடியினர் என்று அழைக்க வழி செய்தார். அவர்களுக்கு இது சோகமானது. அவர்கள் இந்த நாடு தங்களுக்கு சொந்தமானது அல்ல, ஏனென்றால் அவர்களிடம் எப்போதும் இருந்த அதிகாரத்தை இழந்துவிட்டார்கள். மொராலஸ் கீழிருந்து வந்தவராகையால் அனைத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்தார்.

இரண்டாவது, உயரடுக்குகள் அனுமதிக்கப்பட்டு வணிகம் செய்ய வாய்ப்புகள் இருந்தாலும், பொதுவாக அவர்களால் முழுமையாக நுழைய முடியவில்லை. அதனால், அவர்கள் தங்களிடம் இருந்த கருத்தியல், கலாசார, கல்வி மூலதனம் என்ற அரசியல் இடத்தை இழந்தனர். ஆனாலும் அனைத்துத் தளங்களிலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்திய வண்ணமே இருந்தனர். பலர் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் போல் தம்மைக் காட்டிக் கொண்டனர். ஆனால் அவர்கள் ஆட்சிக்கு எதிரானவர்களாகவும், அவர்களின் இனவெறியைத் தூண்டுபவர்களாகவும் இருந்தனர். தங்களுடைய தனிப்பட்ட பிரச்சினையைப் பொதுப் பிரச்சினையாக ஆக்கினார்கள். வன்மமான எதிர்வினைகளை மேற்கொண்டனர். பன்மைத்துவ அரசை ஒழித்துவிட்டு குடியரசிற்குத் திரும்புவது, அதாவது ஒற்றைக் கலாசார அரசாங்கம், முடிந்தவரை நவதாராளவாதத்திற்குத் திரும்புவது என்பதே அவர்களது இலக்காக இருந்தது. அதைச் செய்வதற்கு சதியின் வழி ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொண்டனர்.

இவை இன்றைய இலங்கை அரசாங்கத்துக்கான படிப்பினைகள். தனக்கு உவப்பில்லாத ஆட்சிகளை கவிழ்க்க மேற்குலகம் தயங்குவதில்லை. அதற்கான முதற்படி நாட்டின் நிலைத்தன்மையைச் சீரழிப்பதன் மூலம் அரசாங்கத்தைத் தள்ளாட வைப்பது. அதற்குப் பயங்கரவாதம், பயண எச்சரிக்கை போன்றனவும் பயன்படுகின்றன. பின்னர் முற்போக்கான நடவடிக்கைகளுக்கு எதிரான இனவாதப் பிரசாரத்தைத் தூண்டுவது. அதையடுத்து சிவில் சமூகங்களை அரசுக்கெதிராக முடுக்குவது, மக்களையும் திரட்டுவது, போராட்டங்கள் நடத்துவது என்று தொடரும். நிலையற்ற ஆட்சியானது இவ்வகையான செயற்பாடுகளால் நெருக்கடிக்குள்ளாகும்.

பொலிவிய அனுபவம் இரண்டு விடயங்களைச் சொல்கிறது. முதலாவது, முற்போக்கான அரசாங்கள் ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஆளாகுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இரண்டாவது, ஏகோபித்த மக்கள் ஆதரவு எந்தவொரு அரசாங்கத்தையும் ஆட்சிக் கவிழ்ப்பில் இருந்து காக்கவல்லது.



meenilankco@thaiveedu.com



# தமிழ்நாட்டுப் பாடசாலைகளில்
# சாதியத் தீ

நெல்லை ஜெயசிங்

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’, ‘பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்’ என ஓங்கி ஒலிக்கும் தமிழ் நாட்டில் சமூகங்களுக்கு இடையிலான சமத்துவம் தேய்ந்து வருகிறது. இது பெரியார் மண் எனக் கூறப்பட்டபோதும் சாதியம் மறைந்து விடவில்லை. தீண்டாமையும், சாதியப்பாகுபாடும் இந்திய அரசியல் அமைப்புக்கு எதிரானது எனக் கூறப்பட்டபோதும், நாட்டில் எல்லா இடங்களிலும், எல்லா வகையிலும் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணலாம். சமூக ரீதியாக உலகிற்கு வழிகாட்டுவதாகப் பெருமைப்படும் தமிழ் நாட்டில், சாதியப் பாகுபாடு, சமூக ஒடுக்குமுறை தொடர்ந்து கொண்டே வருகிறது. 80 வீதத்திற்கும் அதிகமான கல்வி அறிவு உடையவர்கள் இங்கு வாழ்கிறார்கள். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்த முதல் மாநிலமாகத் தமிழ் நாடு இருக்கின்றது. ஆயினும் தீண்டாமைக் கொடுமை குறைந்ததாகத் தெரியவில்லை. அது தொடர் கதையாகிக் கொண்டே இருக்கிறது.

7 கோடிக்கு மேல் மக்கள் தொகை உள்ள தமிழ் நாட்டில் 87 வீதத்தினர் இந்து மதம் சார்ந்தவர்கள் ஆவர். இவர்களில் 68% வீதத்தினர் பிற்பட்ட சமூகத்தினராகவும், 23% வீதத்தினர் தாழ்த்தப்பட்ட, பழங்குடிச் சமூகத்தினராகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மத்தியில் 443-ற்கும் மேற்பட்ட, சாதியப் பிரிவுகள் உள்ளன. சாதியம் மதத்துடன் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. இவர்களுக்கிடையே சாதியக் கொடுமைகள் அன்றாடம் நடந்து வருவதும், அதனைப் பூரணமாகத் தடுக்க முடியாத நிலையில் அரசுகள் இருப்பதையும் காணலாம். 16 நிமிடத்துக்கு ஒரு தலித் மீது குற்றம் இழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சாதியக் கொலைகள், பாலியல் வன்கொடுமைகள், வீடுகளுக்குத் தீ வைத்தல், சாதியின் பெயரால் இழிவுபடுத்துதல், பொது வெளியில் அவமானப்படுத்துதல் எனப் பல்வேறு தீண்டாமைக் கொடுமைகள் நடந்து வரும் தமிழ் நாட்டில், பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், இக் கொடுமைகள் நிகழ்ந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றன. தமிழகப் பாடசாலைகளில் தலித் மாணவர்களுக்கு எதிரான குற்றங்கள் காலாகாலமாக நடந்து வருவதாகவும், ஆனால் தற்போது தொழில்நுட்ப வசதியின் விளைவாக அவை பொது வெளியில் வெளிப்படத் தொடங்கி இருப்பதாகவும், முன்னாள் நீதிபதி திரு. சந்துரு அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில், குறிப்பாக வட மாநிலங்களில் இந்து மதச் சமூகங்களிடையே, தீண்டாமைக் கொடுமை மிக ஆழமாக இருந்து வரும் நிலையில், தமிழ் நாட்டிலும் பட்டியல் இனத்தின் மீதான வன்முறை பரவலாக நடந்து வருகிறது. சமூகங்கள் இடையே வேரூன்றி உள்ள தீண்டாமை, தமிழ் நாட்டின் பாடசாலைகளில், இளம் சிறார்கள் மத்தியில் வெவ்வேறு வடிவங்களில், வெளிப்படத் தொடங்கி இருப்பது மிகவும் கவலை அளிக்கும் விடயமாகும். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீதான தாக்குதல், அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சாதிய உணர்வு, சமூகத்தின் பிரதிபலிப்பாக பாடசாலை மாணவர்கள் இடையே தீவிரம் அடைந்து வருகிறது. ஒரு சமூகம், சாதி என்ற சாக்கடையில் தோய்ந்து கிடக்கும்போது அச் சமூகத்தில் இருந்து உருவாகும் மாணவர்களிடமும் அச்சாதிய உணர்வு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

### பாடசாலைகளில்
### தீண்டாமையின் பல்வேறு வடிவங்கள்:

- தமிழ் நாட்டில் 30% வீதமான பாடசாலைகளில் நீர் அருந்தத் தனித்தனி டம்ளர்.
- சத்துணவின்போது தனி வரிசை. உணவு உண்ணத் தனி அறை.
- தலித் மாணவர்களைத் தொடாமல் தவிர்ப்பது.
- தலித் மாணவர்களுக்குத் தண்டனை அதிகம் கொடுப்பது.
- மலசல கூடங்களைச் சுத்தம் செய்ய வைப்பது.
- வருகைப் பதிவேட்டில் சாதியப் பெயர் இடம்பெறுவது.
- ஆசிரியர்கள் இடையில் தீண்டாமை பார்ப்பது.
- தலித் மாணவர்கள் முதல்மதிப்பெண் எடுத்தால் பத்திரிகைகளில் செய்தி கொடுக்க மறுப்பது.
- கடைசி வரிசையில் உட்கார வைப்பது.
- சாதியத் தலைவர்களின் படங்களை வைத்துக்கொள்வது. அவர்களின் படம் போட்ட ஆடைகள் அணிவது.

இவ்வாறு ஏராளமான மறைமுகமான தீண்டாமைச் செயற்பாடுகள் தமிழ் நாட்டு பாடசாலைகளில் இருந்து வருகின்றன. 39

விதமான தீண்டாமைகள் பாடசாலைகளில் இருப்பதாக, தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணி, ஆய்வொன்றில் கூறியுள்ளது.

## வெளிப்படையான தீண்டாமை:

பாடசாலைகளில் தலித் மாணவர்கள் மீதான, ஆதிக்கச் சாதி மாணவர்களின் வன்முறை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. நேரடித் தாக்குதல் சம்பவங்களும் நடந்து வருகின்றன.



- கடந்த வருடம் திருநெல்வேலி அருகில் நாங்குனேரியில், வகுப்பு ஆசிரியர் நன்கு படித்த தலித் மாணவனை சுட்டிக் காட்டியதால், அதே வகுப்பு ஆதிக்க சாதி மாணவன் ஒருவன், சக தலித் மாணவனை, வீடு புகுந்து அரிவாளால் வெட்டிப் படுகாயத்திற்கு உட்படுத்திய கொடுமை நடந்துள்ளது.
- தலித் மாணவன் அம்பேத்கர் படத்தை அலைபேசியில் முகப்புப் படமாக வைத்ததை மாற்றக் கூறி தாக்குதல் நடைபெற்றுள்ளது.
- கபடி விளையாடும்போது, பட்டியல் இனப் பையனின் கால் பட்டதற்குக் கொலை நடந்த அவலம் அரங்கேறி இருக்கிறது.
- ஆசிரியர்களும் ஆதிக்க சாதி உணர்வின் அடிப்படையில் அணிதிரள்கின்ற போக்குக் காணப்படுகிறது.
- பிளேடால் கீறுவதுடன், பிற்படுத்தப்பட்ட பெண்களிடம் பேசினால் தாக்குதல் நடத்தும் சம்பவங்களும் நடந்துள்ளன.
- தலித் மாணவன் அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தால் தாக்குதல் நடைபெறுகிறது. அண்மையில் திருநெல்வேலி அருகில் மேலப்பாட்டம் கிராமத்தில் தவறைத் தட்டிக் கேட்ட 17 வயது மாணவன் தாக்கப்பட்ட சம்பவம் நடந்துள்ளது.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீதான ஆதிக்க சாதியினரின் வெளிப்படையான தீண்டாமை கொடுமை நடந்து வருவது நாடறிந்த ஒன்றாகும். சாதாரண பள்ளிகள் தொடங்கி I.I.T.வரை, படிக்க வரும் மாணவர்கள் ஒடுக்கப்படும் நிலை அதிகரிக்கும் போது, அவர்கள் இடையே இடை நிற்றல், தற்கொலைகள் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மாணவர்கள் தொடர்பான ஏராளமான மோதல் வழக்குகள் இன்று வரையிலும் காவல் நிலையங்களில் நிலுவையில் உள்ளன. ஆனால் கடந்த பத்து வருட காலத்தில் யாரும் தண்டனைக்கு உட்படுத்தப்படவில்லை. காவல் துறையின் பாரபட்ச அணுகு முறையே இதற்கான காரணமாக கூறப்படுகிறது.

இவ்வாறான சாதியத் தீண்டல், நகர்ப் புறங்களைவிட கிராமப் புறப் பாடசாலைகளிலேயே அதிக அளவில் இருப்பதாக அறியப்படுகிறது. அதிலும் குறிப்பாகத் தனியார் பாடசாலைகளைவிட அரசு பாடசாலைகளில் தீண்டாமை ஆழமாக வேரூன்றிக் காணப்படுகிறது. சாதியப் பின்புலத்துடன் காணப்படும் கிராமியக் குடியிருப்புகளில் இருப்போரே, அதிக அளவில் அரச பாடசாலைகளில் படிக்கின்றனர். அதனால் அவர்களின் சாதியப் பின்புலம் இலகுவாக அடையாளம் காணப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

மேலும் அவர்கள் பொருளாதார பலம் இல்லாது இருப்பதும், பாதிப்புக்கு இடமளிக்கிறது. இந்தியாவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களில் பெரும் பகுதியினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களாக இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதனால் அச்சமூகமும் சரி, அம்மாணவர்களும் சரி, தங்கள் சமூகத்தின் மீதான கொடுமைகளை எதிர்த்துப் போராட முடியாத நிலையில் பலவீனப்பட்டுக் காணப்படுகின்றனர். தற்போதைய சாதியப் படிநிலைகளில் தலித் மக்கள் கடைநிலையில் தள்ளப்பட்ட மக்களாகவே இருக்கின்றனர்.

சாதிப் பெருமை பேசும் குடும்பமும், அவர்கள் சார்ந்த சமூகமும் சாதியை ஊட்டி வளர்க்கிறது. அரசியல் தலைவர்களும் அரசியல் இலாபத்திற்காகச் சாதி அடையாளங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். குழந்தைகளின் மனங்களில் சாதிய எண்ணங்களைப் பெற்றோர்களே விதைத்து வருகின்றனர். சாதி அடையாளத்தைத் தூக்கிப்பிடிக்கும் பெற்றோர், சாதிச்சங்க கூட்டங்களுக்கும் பிள்ளைகளை அழைத்துச் செல்கின்றனர். தற்காலத்தில் சாதிச் சங்கங்கள் புற்றீசல் போல் பெருகியுள்ளன. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நாட்டில், தற்போது சங்கம் வைத்துச் சாதி வளர்க்கப்படுகிறது. சாதி உணர்வு இயல்பான ஒன்றாக மாறி விடுகிறது. அதனால் மாணவப் பருவத்திலேயே சாதி ஆதிக்கச் சிந்தனைக்கு உட்பட்டுவிடுகின்றனர். இதன் மூலம் சிறுவர்கள் மனதிலும் சுயசாதிப் பெருமைகள் திணிக்கப்படுகின்றன. இதனால் சாதி அடையாளத்தைக் காப்பாற்றுவது தமது கடமை எனவும் சிறுவர்கள் நினைக்கிறார்கள். இதன் விளைவாகச் சக மாணவரை நண்பராகப் பார்க்காமல், விரோதியாகப் பார்க்கும் மனநிலைக்கு மாணவர்கள் சென்று விடுகின்றனர்.

தமிழ் நாடு கல்வியில் வளர்கிறது. மறு பக்கம் சாதியும் வளர்கிறது. கல்வி கற்றவர்களின் சதவீதம் உயர்ந்து வருகிறது. மறுபுறம் சாதியக் கொடுமைகளும் அதிகரித்தே வருகின்றன. சமூகத்தின் பிரதிபலிப்பை வெளிப்படுத்துபவர்களாக மாணவர்கள் இருக்கிறார்கள். எனவே, சமூகங்கள் இடையே நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் உருவாக்குவதில் அரசும், சமூக அமைப்புக்களும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். பாடப் புத்தகங்களில் சாதியை நீக்குவதால் மட்டும் சாதி ஒழிந்து விடாது. வெறும் பாடப்புத்தகம் மட்டுமே மாணவர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்திவிடாது.

**தீர்வுகள்:**

பல நூறு வருடங்களாக புரையோடி சீழ் பிடித்து நாற்றமெடுக்கும் சாதிய உணர்வை, ஒரு நாளில் ஒழித்துவிட இயலாது. ஆயினும், படிப்படியாக அதனை நோக்கி நகர்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். அதன் தொடக்கமாக சமூகப் பண்புகளை உள்ளடக்கியதாக மாணவர்களின் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். மூட நம்பிக்கைகளைப் பாடத்திட்டங்களில் புகுத்த முயற்சிக்கக் கூடாது.

மாணவர்களிடம் மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் மத்தியில் இருந்து வரும் சாதிய உணர்வும் அகற்றப்பட வேண்டும். தமிழ் நாட்டுப் பாடசாலைகளில் சாதிப் பாகுபாடு, தீண்டாமை பற்றிய கல்வி, சரிவரப் போதிக்கப்படுவதில்லை என்றும், சாதிய உணர்வு ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது. நன்னெறி வகுப்புகளில் கூட சாதி ஒழிப்பு பேசப்படுவதில்லை என்று அறியப்படுகிறது. சாதியக் கட்டமைப்பு கொண்ட சமூகம் என்பதால், ஆசிரியர்களும் அதற்கு அமையவே செயற்படுகின்றனர் என அறியப்படுகிறது. இந்நிலையில் ஆசிரிய பெருமக்கள் சாதிய உணர்வு இன்றி பாரபட்சம் பாராது பணி செய்தல் அவசியமாகும்.

மேலும் பள்ளிகளில் சாதி அடையாளங்கள் மாணவர்களிடம் இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். வருகைப் பதிவேட்டில் சாதி குறித்த அடையாளம் இடம்பெறாதிருத்தல் அவசியம். சாதிச் சான்றிதழ் இல்லாமல் மாணவர்கள் பாடசாலைகளில் சேர்க்கப்படுவதில்லை. அதில் மாற்றங்கள் வேண்டும்.

மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் இடையேயும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்வித்துறையின் கீழ் சமூக நீதிக்கென்று தனிக் கட்டமைப்பை உருவாக்குவது மிகவும் அவசியமான ஒன்றாகும். உளவியல் வகுப்புகள் ஊடாக சாதி வெறியை நீக்கி, அந்த இடத்தில் மனிதம் நிரப்பப்பட வேண்டும். சுய சாதியின் வெற்றுப் பெருமையில் மூழ்கிக் கிடக்கும் சமூகத்தையும், பெற்றோர்களையும் ஒரே நாளில் மாற்றிட முடியாது. படிப்படியாக அந்த நிலையை எட்ட, முற்போக்குசக்திகள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

சாதியின் பெயரால் ஒரு சமூகத்தை இழிவுபடுத்தி, இருட்டுக்குள் வைத்திருப்பது தேசிய அவமானம். ஏற்றத் தாழ்வற்ற சமத்துவமான சமூகம் உருவாகாதவரை, நாம் உலக அரங்கில் தலை குனிந்தே நிற்க வேண்டி வரும்.



jeyasingh@thaiveedu.com



# செகராசசேகரம்
# சர்ப்ப சாஸ்திரம்

– பால. சிவகடாட்சம்



3

*உற்றசனிக் கிழமை யிரா விருபதாக வோங்கிய*
*வெய்யோன் விடிந்து முப்ப தோடே*
*சொற்ற பத்து நாழிகை யினளவு தானுஞ்*
*சூளனந்த னேவலினாற் கடிக்கும் பாம்பு*
*நற்று விடங் காலி னிற்குஞ் சொன்ன வந்த*
*ஞாயியிறிரா விருபது நாழிகையுந் திங்கள்*
*பெற்ற பகலிரவு செவ்வாய் கன்னல் பத்தும்*
*பேணும் வாசுகி யேவக்கடிக்கும் பாம்பே* 22

சனிக்கிழமை இரவு இருபது நாழிகையுடன் விடிந்து பத்து நாழிகையளவும் அனந்தன் என்னும் பாம்பின் ஏவலினால் கடிக்கும் பாம்பின் விடம் காலில் நிற்கும். அடுத்து ஞாயிற்றுக் கிழமை இருபது நாழிகையும் திங்கள் பகல் இரவும் செவ்வா யில் நாழிகை பத்தும் வாசுகி என்னும் பாம்பின் ஏவுதலால் கடிக்கும் பாம்பின்

*பாம்பின்விட நரம்பில் நிற்கும் செவ்வாயம்பொன்*
*புகர்புதனில் நாற்பதுநா ழிகையும்பற்றி*
*யேம்படவே கார்க்கோடன் ஏவலா*
*லேயரவங் கடிக்க நிற்கும் விடநெஞ்சிற்கே*
*ஆம்புதனி லிருபதுநா ழிகையும் ஆசான்*
*அறுபது நாழிகையும் பற்மன் ஏவலாலே*
*தேம்பரவங் கடித்த விடங் கண்டந்தன்னிற்*
*செறிந்து நிற்கும் வெள்ளி சனி சிறப்புக்கேளே* 23

விடமானது நரம்பில் நிற்கும். செவ்வாய் வியாழன் வெள்ளி புதனில் நாற்பது நாழிகையும் கார்க்கோடன் ஏவலால் கடிக் கும் பாம்பின் விடம் நெஞ்சில் நிற்கும். புதன்கிழமையில் இரு பது நாழிகையும் வியாழனில் அறுபது நாழிகையும் பத்மன் என்னும் நாக தெய்வத்தின் ஏவலாலே கடித்த பாம்பின் விட மானது கழுத்தில் செறிந்து நிற்கும். (ஆசான்- வியாழன்)

*சிறந்த வெள்ளி பகலிரவு சனி வாரத்திற்*
*சேர்ந்தபகன் முப்பது நாழிகையுஞ் சேர*
*மறஞ்செய்மகா பற்மனற் றேவலாலே*
*வாளரவங் கடிக்கின் விடம் மருவுமூக்கின்*
*நிறைந்தசனி யிரவிலஞ்சு நாழிகைக்கே*
*நின்ற வராக் கடித்திடுகின் நிகரில்லாமற்*
*பிறந்தசங்க பாலன்றன் னேவலாகும்*
*பெருகுவிட முச்சிநெற்றி பெறநிற்குமே* 24

வெள்ளிக்கிழமை பகலும் இரவும் சனிக்கிழமை பகல் முப்பது நாழிகையும் சேர்ந்த காலப்பகுதியில் மகாபத்மன் என்னும் பாம்பின் ஏவலினாலே கடித்த பாம்பின் விடம் மூக்கில் செறிந்து நிற்கும். சனிக்கிழமை இரவில் ஐந்து நாழிகைக்குள் சங்கபா-லன் என்னும் பாம்பின் ஏவலினால் கடிக்கும் பாம்பின் விடம் உச்சியிலும் நெற்றியிலும் செறிந்து நிற்கும்.

*நின்ற சனிக்கிழமை அஞ்சுனாழிகைக்குள்*
*நிகழ்ந்த பத்து நாழிகையுங் குளிகனேவ*
*லென்றரவு கடிக்கும் விட முச்சிதன்னி*
*லேறி நிற்கும் நாழிகை தானெண்ணிக் கண்டே*
*துன்றுவிடம் அக்கினியிற் றுரும்பு போலத்*
*தூயதாக மீட்பது வாஞ் சொன்ன வண்ணம்*
*அன்றியிவைக் குற்றதெல்லாம் உபதேசத்தால்*
*அறிந்திடுக பெரியோர்கள் நாவின்பாரே* 25

சனிக்கிழமை ஐந்து நாழிகைக்குள் நிகழ்ந்த பத்து நாழிகை யும் குளிகனின் ஏவலால் பாம்பானது கடிக்கும் விடம் உச்சி தன்னில் ஏறி நிற்கும். நாழிகைக் கணக்கை எண்ணிக் கண்டு விடத்தை நெருப்பில் போட்ட துரும்பு போலத் தூயதாக மீட்ப தற்கு பெரியோர்களிடம் கேட்டு அறிந்துகொள்க.

*அருந்தகரி யென்னும் பல்லுப் பட்டாற் புண்வாயரை*
*வட்டப் பட்டெண்ணை பொசிந்தாப் போலாங்*
*கரிந்து வளர் மகரி யென்னும் பல்லுப் பட்டாற்*
*காக்கைகால் போற் சிதறிக் காணுஞ் சென்னீர்*
*திருந்தியிடுங் காளியெயி றூன்றிற் றென்றால்*
*செப்பிவிடு நாற்கோணங் கறுப்ப சோரி*
*முருந்துறள் காளாத்திரிப் பற்பட்டாற் கோண*
*மூன்றிரத்த மரிசனம்போல் முந்துந் தானே* 26

தகரி என்னும் பல்லுப் பட்டிருந்தால் புண்வாய் அரைவட்ட வடிவத்தில் எண்ணெய் கசிந்ததுபோல் காணப்படும். மகரி என்னும் பல்லுப்பட்டால் காக்கையின் கால் போல் இரத்தம்சி தறிக் காணப்படும்.காளி என்னும் பல்லுப்பட்டால் கடிக்குறி நாற்கோண வடிவத்தில் கறுத்த நிற இரத்தத்துடன் காணப்ப டும். காளாத்திரி என்னும் பல்லுப்பட்டால் கடிக்குறி முக்கோ ணமாகவும் இரத்தம் மஞ்சள் நிறமாகவும் காணப்படும்.

*முந்து வொருவனைப் பாம்பு கடித்த தென்றால்*
*முக்கண்ணார் திசைமுதல் நாலெட்டதாக்கி*
*யந்த வடகிழக்கு நல்லபாம் பதாகும்*
*அதற்கருகு விரியனதற் கருகு கருவழலை*
*வந்த திக்கிற் கோணமுதல் நல்ல பாம்பை*
*வைத்தெண்ணிப் பாம்பொழுங்கின் வகையைக் காணே* 27
(இந்தப் பாடல் மூன்றடி கொண்ட வெளிவிருத்தமாக உள்ளது)

ஒருவரைபாம்பு கடித்துவிட்டால் வடகீழ்த்திசையை முதலாகக் கொண்டு நான்கு பக்கத்திலுமாக மொத்தம் எட்டுப் பெட்டிகள் கீறி அதில் வடகிழக்குமூலையில் கடித்ததென்றால் கடித்த பாம்பு நல்ல பாம்பு என்றும் அதன் கீழே அருகில் விரியன் என்றும் அதன் பக்கத்தில் கருநாகம் என்றும் ஒவ்வொரு திக்கிலும் நல்லபாம்பை முதலாக வைத்து எண்ணிக் கடித்த பாம்பின் வகையை கண்டறிவீர். (நல்லபாம்பு, விரியன், கருவழலை, நல்லபாம்பு, விரியன், கருவழலை, நல்லபாம்பு)

*காணவந்தோன் விழுதல் தலைவிரித்துப் போதல்*
*கைமுறுக்கிப் பிணைக்குதல் காலொடுகால் தெற்றல்*
*சேணுறக் கைமேற் போக்க லெதிரே தள்ளல்*
*செய்திடுகிற் கடியுண்டான் செத்தானென்க*
*வீணுறவே யது வொளிந்த படியே நிற்கின் மீளுநஞ்சு*
*மெய்யினி லோரிடத்திற் றொட்டால்*
*நாணுறவே பார்க்குதல் செய் தானேயாகில்*
*நச்சரவு கடித்த விடம் நம்பிக்கொள்ளே* 28

பாம்பு கடித்தவிட்டது என்று சொல்ல வந்தவன் விழுந்தால், தலையை விரித்துக்கொண்டு போனால், கைகளை முறுக்கிப் பிணைத்தால், காலோடு கால் தேய்த்தால், அகலக் கைகளை மேலே தூக்கினால் அல்லது எதிரே நீட்டினால் கடியுண்டவன் தப்பமாட்டான் என்று அறிந்து கொள்க. வீணாக ஒளிந்து நின்று கொண்டால் நஞ்சு மீளும். உடம்பில் ஓரிடத்தில் தொடும்போது வெட்கப்பட்டுப் பார்த்தால் நச்சுப்பாம்பு கடித்துள்ளது என நம்புவீர்.

*நம்பியவன் றான் சொன்ன வார்த்தை தன்னை*
*நாடியெழுத் தெண்ணிக்கண் டொற்று நீக்கித்*
*தம்பமென வஞ்சினாற் கழித்துத் தள்ளித்*
*தானின்ற வெழுத் தொன்றுந் தானேயானால்*
*வெம்பகு வாய் நல்லபாம் பென்று காண்க*
*மிகுந்திரண்டு மூன்று நாலென்ன மிஞ்சிற்*
*கம்பமிகு பெரும்புடையன் விரியன் நீண்ட*
*கருவழலை யென்றறிக கருத்தினாலே* 29

பாம்பு கடித்த விடயம் பற்றி வைத்தியரிடம் சொல்லவந்தவன் கூறிய வார்த்தைகளில் உள்ள எழுத்துக்களுள் மெய்யெழுத்துக்களை நீக்கிவிட்டு எண்ணிவந்த தொகையை ஐந்தால் பிரித்து வரும் மீதி ஒன்றாக இருப்பின் கடித்தது நல்லபாம்பென்று அறிக. அவ்வாறே வந்த மீதி இரண்டானால் புடையன் என்றும் மூன்றானால் விரியன் என்றும் நான்கு என வந்தால் கருநாகம் என்றும் அறிந்து கொள்வீர்.

*நாலன்றி யஞ்செழுத்தாகி நின்றால்*
*நஞ்சுளது கடித்ததல்ல நாலினாலே*
*யோலமெனக் கழித்த வெழுத்தொன்று நின்றால்*
*ஒருபல்லாம் இரண்டெழுத்துக் கிரண்டுபல்லாஞ்*
*சாலமூன் றெழுத்தாகிற் றந்த மூன்றாந்*
*தக்க நாலெழுத்தெனிற் றந்த நாலாம்*
*மேலு மூன்றதிற் கழித்தே கண்ட சேட*
*மெய்திதொன்றெனிற் கடித்தல் மின்னார்க்கே* 30

முன்கூறியபடி எண்ணி வந்த எழுத்துக்களின் தொகையில் அஞ்செழுத்து மட்டுமே வந்தால் நஞ்சுள்ள பாம்பு கடிக்க



வில்லை என்று அறிக. அதனை நான்கால் பிரிக்கும்போது ஒன்று மிஞ்சினால் ஒரு பல்லுப்பட்டதென்க. இரண்டெழுத்தானால் இரண்டு பல்லும் மூன்றெழுத்து மிஞ்சினால் மூன்று பல்லும் நாலெழுத்து வந்தால் நாலு பல்லும் பட்டதென்க. மொத்த எழுத்துக்களை மூன்றால் பிரித்துவந்த மீதி ஒன்றாக இருப்பின் கடியுண்டவர் ஒரு பெண்ணென்று உணர்க.

*மின்னும் இரண்டெழுத்தாகிற் புருடர் தன்னை*
*விடப்பாம்பு கடித்ததென்க மீண்டுமுன்னே*
*சொன்ன திரண்டிற் கழித்தோரெழுத் தேறிற்*
*றுய்ய விடப் பாகமி ரண்டெழுத்துத் தோன்றின்*
*மன்னுவலப் பாகமுறக் கடித்த தென்க*
*மற்றது மூன்றிற் கழித்த தொன்றேயேறில்*
*இன்னவை தோல்பற்று மிரண்டெழுத்தேறில்*
*இவைதசை மூன்றெழுத்தேல் நஞ்சென்ப தானே* 31

இரண்டெழுத்து மிஞ்சின் விஷப்பாம்பு கடித்தது ஒரு ஆணை

என்று அறிந்து கொள்க. இரண்டால் பிரித்து வந்த மீதம் ஒன்று என வந்தால் பாம்பு இடப்பாகத்தில் கடித்ததென்று அறிக. இரண்டெழுத்து மீதமாயின் வலப்பக்கத்தில் கடித்ததென்று அறிக. மூன்றாற் பிரித்து வந்த மிச்சம் ஒன்று எனில் விடம் தோலில் பாய்ந்துள்ளது என்றும் இரண்டெழுத்து மிஞ்சினால் தசையில் பாய்ந்துள்ளது என்றும் அறிந்து கொள்ளலாம்.

***தானாகி வருதூதன் சொன்ன வார்த்தை***
***தன்னில் முதலெழுத்த கரந்தானேயாகில்***
***நானோக்கும் பெரும் புடையனிகர மாகில்***
***நல்லபாம்பென்றறிக உகாரமாகிற்***
***கானோக்குங் கருவழலை யேகாரமாகிற்***
***கருவிரியன் ஒகரஞ்சில விடமே காட்டும்***
***மானே கேள் ஆ ஏ ஊ ஏ ஓ வென்று வரிற்***
***பிசகு நஞ்சமென மனத்தில் எண்ணே*** 32

ஒருவருக்குப் பாம்பு கடித்துவிட்டது என்னும் செய்தியை விஷ வைத்தியர்க்கு அறிவிக்க வந்த தூதுவன் கூறிய வார்த்தை யின் முதல் எழுத்து அகரம் ஆக இருப்பின் கடித்த பாம்பு பு டையன் என்று உணர்ந்து கொள்ளவும். முதல் எழுத்து இகர மாகில் நல்லபாம்பென்றும் எகரமாகில் கருவழலை என்றும் ஒகரமாகில் கருவிரியன் என்றும் அறிந்து கொள்ளலாம். ஆ ஏ ஊ ஏ ஓ என்று இருந்தால் ஒவ்வாத நஞ்சு என்று உணர்ந்து கொள்வீர்

***எண்ணியிவை யிரண்டு வரில் நிமித்தமென்க***
***இதுபொல்லாதாகில் விடமீளாதென்க***
***திண்ணிய பாம்பதுகடியுண்டோன்றன் வீட்டிற்***
***சென்றவனைப் பார்த்துக் கண்டுன்னிச் சென்றால்***
***விண்ணுறவே சீவனது போனதென்க***
***விடமொதுங்கி யொருபுறமே மிகக் கிடந்து***
***நண்ணியந்தப் யுறமாகுஞ் சீவனகமுறுக்கிற்***
***சிவந்திருக்கு நயந்து முன்னே*** 33

எழுத்துக்களை எண்ணி இரண்டாக வந்தால் அவற்றை நிமித் தம் என்று அறிந்து கொள்ளுவீர். இந்த நிமித்தம் பொல்லாத தாக இருப்பின் விடத்தை மீட்கமுடியாது என்று கருதுவீர். வைத்தியர் பாம்பினால் கடியுண்டவன் வீட்டுக்கு சென்று அவ னைப் பார்க்கும்போது அவனது கண்கள் பிதுங்கி இருந்தால் அவனது உயிர் பிரிந்துவிட்டது என்று அறிக. விடம் ஒதுங்கி ஒரு புறமாகக் கிடந்தானேயாகில் அந்தப்புறமாக சீவன் உள்ளே அடங்கி இருக்கும்.

***முன்கையினிற் சுட்டிட்டிற் கொப்புள மதாகின்***
***முகமுறக் கண்ணீர் விழுகின் முழமேழாகி***
***யொன்பதுற நீண்டுபதின் மூன்று சுற்றா***
***யுகிர்வெழுத்து விழிசிவந்திடுயர் வானத்திற்***
***றென்பிறைபோற் துணை மருப்பு மதமா வேந்தன்***
***செகராசாய சேகரமன் செங்கை யேந்து***
***மின்கிரண வுடைவாளை யசைக்கப் போரில்***
***விழுமரசர் போலவுயிர் மெய்யி லுண்டே*** 34

பாம்பு கடித்தவனின் முன்கையில் தீயினால் சூடு போட்டால் அங்கு கொப்புளம் உண்டாகி, முகத்தில் கண்ணீர் விழுந்து, முழம் ஏழாகி ஒன்பதாக நீண்டு பதின்மூன்று சுற்றாகி, நகம் வெளுத்து, கண் சிவந்திடால் வானத்தில் தோன்றும் பிறை நிலா போன்ற தந்தங்கள் உடைய மதயானைகளை உடைய மன்னன் செகராசசேகரன் தன் கரங்களில் ஏந்தும் உடை வாளை அசைத்தவுடன் போரில் விழும் அரசர் போல உயிர் உடம்பில் இருக்கும்.

***உண்டாகு மொருபல்லுப் பட்டதாகில்***
***உற்றதொரு மந்திரத்தால் உடனே மீட்க***
***கண்டாலங் கிரண்டு பல்லுப் பட்டதாகிற்***
***கருத்தினால் மீட்கப் பல்லுக்கழு மூன்றானால்***
***பண்டான மருந்துகளின் மீட்க நாலு***
***பற்பட்டான் மந்திரங் கருத்து பலமருந்தாற்***
***கொண்டாட மீட்கப் பல்லின் பேதமெல்லாங்***
***குறித்த சர்ப்ப சாத்திரம் பொன்கொழிக்குங்காரே*** 35

பாம்பின் ஒரு பல்லுப்பட்டால் மந்திரத்தால் விடத்தை உடனே மீட்டுக் கொள்ளலாம். இரண்டு பற்களின் குறியை அங்கு கண்டால் கருத்தினால் (பார்வை பார்த்தலால்) மீட்கவும். மூன்று பற்களின் குறி இருந்தால் மருந்துகளினால் விடத்தை மீட்கலாம். நான்கு பற்கள் பட்டிருந்தால் மந்திரம் கருத்து மருந்து என்பவற்றின் உதவியோடு நஞ்சை மீட்கலாம். பல் லின் பேதங்களை எல்லாம் சர்ப்பசாத்திரம் என்னும் நூலின் வாயிலாக அறிந்து கொள்வீராயின் செல்வம் உம்மிடம் குவி யும்.

**செகராசசேகரம் முற்றும்:**

பின்குறிப்பு: இந்த ஏட்டுச்சுவடியின் இறுதியில் ‘செகராசசேக ரம் முற்றும்’ என்று காணப்படுகின்றது. எனவே சர்ப்பசாத்திரம் என்னும் இப்பாடம் செகராசசேகரம் என்னும் ஒரு பெரு நூலின் இறுதிப் பாடமாக இருத்தல் வேண்டும். செகராசசேக ரம் என்னும் தமிழ்மருத்துவநூலின் ஏட்டுச்சுவடி ஒன்றில் பின் வரும் பாயிரப்பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

***சொன்னதோர் தயிலம் மிக்கச் சுவைரசவர்க்க மல்லால்***
***அன்னபூ அட்டைகொம்பும் அரியசத் திரத்தினோடு***
***இன்னமுங் கேளாய் ரட்சை இதுமுதல் சர்ப்பசாத்திரம்***
***முன்னமே வாகடத்தின் முறைமையை மொழியுமாறே***

‘இங்கே சொல்லப்படும் விடயங்கள் தயிலவர்க்கம், சுவை மிக்க இரசவர்க்கம் என்பவை தவிர உணவு, அட்டைவிதி, கொம்புவிதி, மற்றும் சத்திரவிதி என்பவற்றோடு ரட்சாபந்தன விதி (காப்புக்கட்டல்) முதல் சர்ப்பசாஸ்திரம் வரை வாகடத் தின் முறைப்படி கூறுகிறோம்’ என்பது இப்பாடல் தரும் செய்தி. வடமொழி வாகடமான வாக்பட்டரின் அஷ்டாங்க ஹிருதயம் என்னும் பெரு நூலின் இறுதிப்பாடம் பாம்புக்கடி உள்ளிட்ட விஷவைத்தியம் பற்றியதாகும் என்பதை இவ்வி டத்தில் நினைவு கூரலாம்.



Sivakadadcham@thaiveedu.com




திறன் கைக்கடிகாரங்கள் (SmartWatch) நமது உடலியல் தொடர்பான விசாலமான தரவுகளைச் சேகரிக்கின்றன. இப்போது அவற்றின் தொழில்நுட்ப பரிணாம வளர்ச்சி முன்னெப்போதும் இல்லாத வகையில் பல்வேறு மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. உடல் ஆரோக்கியம் தொடர்பான மிக முக்கியமான தரவுகளைத் தந்துதவுபவையாகவும் திறன் கைக்கடிகாரங்கள் செயற்படுகின்றன. அறுவை சிகிச்சைகளை மேற்கொண்ட நோயாளிகளைக் கண்காணிப்பதில் இந்த திறன் கைக்கடிகாரங்கள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிப்பது ஆச்சரியமூட்டுகின்றது. மயக்க மருந்து வழங்கி மேற்கொள்ளப்படும் நீண்ட அறுவை சிகிச்சைக்குப் பின் ஏற்படும் சிக்கல்களைப் பற்றியும் அச்சந்தர்ப்பத்தில் திறன் கைக்கடிகாரங்களின் பணி என்ன என்பது குறித்தும் சுவிட்சர்லாந்தின் லூசான் CHUV பல்கலைக்கழக மருத்துவமனையின் உணர்வுநீக்கவியல் தலைமை மருத்துவ நிபுணரான பற்றிக் ஸோகோட்டர் (Patrick Schoettker) கூறும் கருத்துக்கள் முக்கியமானவை.

அறுவைச்சிகிச்சைகளின்போது ஏற்படும் விரைவான இரத்த இழப்புக்களால் நோயாளி அதிர்ச்சிக்கு உள்ளாகக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான அதிர்ச்சியானது உடலின் இரத்த ஓட்டத்தில் ஆபத்தான வீழ்ச்சியைத் தூண்டும், இதனால் பல மணிநேர ஆழ்ந்த மயக்கத்திற்குப் பிறகு நோயாளிகளுக்கு கடுமையான நுரையீரல் பிரச்சினைகள் உருவாகவும் வாய்ப்புண்டு. அறுவை சிகிச்சை நடைபெற்று முதல் ஆறு நாட்களுக்குள் பதிவாகும் மரணங்களில் 25 வீதமானவை இவ்வாறே நிகழ்கின்றன. நோயாளியின் உடற்றொழியல் கண்டறியப்படாமல் இருந்த அடிப்படைக் குறைபாடுகள் காரணமாக இத்தகைய துயரங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய முக்கிய நடைமுறைகளுக்கு முன்னதாக மருத்துவமனைகளில் விரைவான மற்றும், குறைந்த செலவிலான கண்காணிப்பைச் செய்வதற்கான வழி உண்டா? என்பது தொடர்பாக Schoettker மற்றும் அவரது சகாக்கள் ஒரு சோதனையை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நோயாளிகளுக்கு அவர்களின் அறுவை சிகிச்சை நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக Masimo W1 எனப்படும் ஸ்மார்ட்வாட்ச் பொருத்தப்பட்டது. அது சேகரித்து தந்த தரவுக்குப் பின்னர் அவர்களின் உடல்நிலை மதிப்பீடு செய்யப்பட்டது.. இதயத் துடிப்பு, சுவாச வீதம், இரத்த ஆக்சிஜன், நாடித் துடிப்பு மற்றும் உடலின் நீரின் அளவுகள் ஆகியவற்றின் தொடர்ச்சியான அளவீடுகளை Masimo W1 வழங்குகிறது, இவை அனைத்தும் மருத்துவத்தர துல்லியத்துடனாவை என ஸ்கோட்கர் (Schoettker) விபரிக்கிறார். மேலும் அது உயிர்களைக் காப்பாற்ற உதவும் என்றும் நம்புகிறார்.




அறுவைச் சிகிச்சைக்குப் பின் ஏற்படும் சாத்தியமான சிக்கல்களைக் கணிக்கவும், அவற்றைத் தடுக்கும் வழியில் செயல்படவும், அறுவைச் சிகிச்சைக்கு முன் பெறப்பட்ட இந்தத் தரவைப் பயன்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்' என ஸ்கோட்கர் தெரிவிக்கின்றார்.

வளர்ந்து வரும் திறன் கைக்கடிகார சந்தை - 2027-ம் ஆண்டளவில் உலகளவில் 400 மில்லியனுக்கும் அதிகமான சாதனங்கள் விற்கப்படும் என்று சில ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். இது நோய்களைத் தடுக்கக்கூடிய வலுவான ஒரு புதிய சகாப்தத்தை எவ்வாறு ஆரம்பிக்கின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். மாசிமோ(Masimo), ஆப்பிள்( Apple), சாம்சங்(Samsung), விடிங்ஸ்(Withings), ஃபிட்பிட்(FitBit) மற்றும் போலார் (Polar) போன்ற நிறுவனங்கள் அனைத்தும் அசாதாரண அளவிலான தரவைப் பதிவுசெய்யும் ஆற்றல் கொண்ட திறன் கைக்கடிகாரங்களை உருவாக்கியுள்ளன. இவை தூக்கத்தின் தரம், இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு மாறுபாடு மற்றும் இரத்த ஆக்ஸிஜன் செறிவூட்டல் அளவுகள் போன்ற அளவுகளை அளவீடு செய்கின்றன.

‘இந்த அளவீடுகள் ஒருவரின் இதயம் மற்றும் நுரையீரல்கள் எவ்வளவு நன்றாகத் தொழிற்படுகின்றன என்பதை நிகழ்நேரத்தில் கண்காணித்து வெளிப்படுத்தக்கூடிய தொழில்நுட்பமாகும். இந்தத் தகவல் ஏற்கனவே நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய உடல்நலப் பிரச்சனைகள் குறித்து எச்சரிக்கை செய்ய உதவுவதுடன் இந்த தகவல்களைக் கொண்டு மருத்துவர்கள் விரைவில் செயல்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்குகின்றது’ என லண்டனின் மயோ மருத்துவமனையின் (Mayo Clinic Healthcare) ஆலோசகரும், இருதயநோய் நிபுணருமான கோசியா வாமில் (Gosia Wamil) கூறுகின்றார். ‘அதிகமான நோயாளிகள் தங்கள் திறன் கைக்கடிகாரங்களைப் பயன்படுத்தி சில தரவுகளைப் பெறத் தயாராக உள்ளனர் எனவும்; பின்னர் அந்த தரவுகளை அச்சிட்டு எங்களிடம் கொண்டு வந்து தரவும் தயாராக உள்ளனர் எனவும்; இந்த தரவுகளை ஆய்வுக்கு உட்படுத்தி உடலின் அசாதாரண நிலைமைகளை அவதானித்து சிகிச்சையளிப்பது இலகுவாகின்றது’ எனவும் அவர் கூறுகின்றார்.

திறன் கைக்கடிகாரங்கள் இதய ஆரோக்கியம் தொடர்பான மிக முக்கியமான தரவுகளைத் திரட்டுவதற்கும், தீர்வுகளை வழங்குவதற்கும் இதுவரையில் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், திறன் கைக்கடிகாரங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட எலக்ட்ரோ கார்டியோகிராம் (ஈசிஜி) அளவீடுகள் - இதயத்தின் மின் செயல்பாடுகளின் அளவீடுகள் - ஆரோக்கியமான 50 முதல் 70 வயதுடையவர்களில் கூடுதல் இதயத் துடிப்பை நம்பத்தகுந்த முறையில் அடையாளம் காண முடியும் என்று ஒரு ஆய்வு கண்டறிந்துள்ளது. இது மிகவும் தீவிரமான நிலை, ஏட்ரியல் ஃபைப்ரிலேஷன் அல்லது சீரற்ற இதயத்துடிப்பு எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம், அங்கு இதயம் ஒழுங்கற்ற முறையில் துடிக்கத் தொடங்குகிறது அல்லது எச்சரிக்கையின்றி கட்டுப்பாட்டை மீறி பாரதூரமான நிலைமைக்கு செல்லக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றமொரு ஆய்வில், செயற்கை நுண்ணறிவு (AI) வழிமுறைகள் மூலம் ஆப்பிள் கைக்கடிகாரத்தின் ஈசிஜி அளவீடுகளைப் பயன்படுத்தி, இதயத்துடிப்பின் போது இரத்தம் பாய்ச்சப்படுவது குறைவானவர்களை அடையாளம் காண முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் இதயம் துடிக்கும் போது பாய்ச்சும் இரத்தத்தின் அளவு குறைவாக இருந்தால் அது இதயச் செயலிழப்புக்கான முக்கிய எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம், அப்பிள் திறன் கைக்கடிகாரத்தின் ஊடாகப் பெறப்பட்ட தரவுகள் 88 வீதமான துல்லியத்தன்மையுடையவை என தெரிவிக்கப்படுகின்றது. அனைத்து வகையான இதய நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, இயந்திரக் கற்றல் தளங்கள் மற்றும் திறன் கைக்கடிகாரங்களின் ஊடாகப் பெறப்பட்ட தரவுகளின் கலவையானது புரட்சிகரமான சாதக மாற்றங்களை நிரூபிக்க வாய்ப்புள்ளது என்று வாமில் கூறுகிறார்.

‘இருதய மருத்துவ மனைகளில், இதயப் படபடப்பு பற்றி தெரிவிக்கும் நோயாளிகளைப் அவதானிக்கின்றோம், மேலும் அவர்களின் மார்பில் ஒட்டிக்கொண்டு 24 மணி நேரத்திற்கும் மேலாக ஈசிஜியைப் பதிவுசெய்யக்கூடிய டேப்களை நாங்கள் வைத்திருப்போம்,’ என வாமில் கூறுகின்றார். எனினும், நோயாளிகள் அந்த 24 மணிநேரத்தில் அறிகுறிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் திறன் கைக்கடிகாரங்கள் மூலம், நோயாளி அறிகுறிகளை அனுபவிக்கும் போதெல்லாம், அவர்கள் தங்கள் கடிகாரத்தில் ஒரு பொத்தானை அழுத்தி, ECG ஐப் பெற்று அவற்றை மருத்துவர்களிடம் காண்பிக்க முடியும்.

‘இந்த தரவுகள் ஏற்கனவே நோய்களைத் தடுப்பதற்கான சிகிச்சைகளுக்கு வழிவகுத்து வருவதாகவும், பக்கவாதத்தைத் தடுக்க, ஒழுங்கற்ற இதயத் துடிப்பின் அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகளுக்கு இரத்தத்தை மெல்லியதாக மாற்றும் மாத்திரைகளை இருதயநோய் நிபுணர்கள் பரிந்துரைக்க உதவுவதாகவும்’ அவர் குறிப்பிடுகின்றார்.

‘டைப் 2 நீரிழிவு நோயாளிகள் அனுபவிக்கும் இருதய சிக்கல்கள் சிலவற்றைத் தடுக்க இந்தத் தரவு பயன்படுத்தப்படுமா என்பது குறித்து கண்டறிவதற்கான ஆய்வுகளில் தாங்கள் ஆர்வம் காட்டுவதாக’ அவர் தெரிவிக்கின்றார். ‘நீரிழிவு நோயாளிகள் குறுகிய ஆயுளைக் கொண்டிருப்பதற்கு முக்கிய ஏதுவாக, அவர்களில் பலருக்கு இதயப் பிரச்சினைகள் உருவாகும் சாத்தியங்கள் காணப்படுவதாகவும், இதனால் அவர்களுக்கு உயிராபத்து அபாயம் அதிகம்’ எனவும் என வாமில் கூறுகின்றார். ‘மாரடைப்பு மற்றும் பக்கவாதத்தின் எதிர்கால ஆபத்து குறித்து எச்சரிக்கை எதிர்வுகூறல்களை வெளியிடுவதற்கு, ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிய இந்தத் தரவுகள் உதவும்’ என நம்பிக்கை வெளியிட்டுள்ளர்.

## நரம்பியல் பிரச்சினைகளை முன்னறிவித்தல்:

ஆனால் திறன் கைக்கடிகாரங்களின் பல பயன்பாடுகள் இதய ஆரோக்கியத்திற்கு அப்பால் நீண்டு செல்கின்றது என்றால் பிழையாகாது. ஜூலை 2023-ல், இங்கிலாந்தின் கார்டிஃப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 100,000 க்கும் மேற்பட்ட நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவைப் பயன்படுத்தி ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டனர். குறித்த நபர்களுக்கு ஒரு வாரம் முழுவதும் திறன் கைக்கடிகாரங்கள் அணிவிக்கப்பட்டது. இந்த தரவுகளின் அடிப்படையில் நடுக்குவாதம் அல்லது பார்கின்சன் நோயின் அறிகுறிகளைக் கொண்ட நபர்களை, அவர்களின் மருத்துவ ரீதியான நோயறிதலுக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே அடையாளம் காணமுடியும் என்று இந்த ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. கைக்கடிகாரத்தின் மோஷன் சென்சார்கள் மூலம் அளவிடப்படும். அவர்களின் நடைமுறைகளில் நுட்பமான அசாதாரண நிலைமைகளைக் கண்டறிவதன் மூலம் இம்முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆய்வுக்கு தலைமை தாங்கிய சிந்தியா சாண்டோர், ‘நோயை உருவாக்கும் தூக்கத்தின் தரம் போன்றனவற்றை பிற ஸ்மார்ட்வாட்ச் அளவீடுகளுடன் கூடிய இயக்கத் தரவை இணைப்பதன் மூலம் இந்த அறிகுறிகளை இன்னும் விரைவாகக் கண்டறிய முடியும்’ என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

‘பார்கின்சன் நோயில், நோயறிதல் ஒரு நீண்ட கட்டத்திற்கு முன்னதாக உள்ளது, அங்கு நுட்பமான மோட்டார் மாற்றங்கள் போன்ற அறிகுறிகள் தெளிவாகத் தென்படும்’ என சாண்டோர் கூறுகிறார். ‘மிகவும் முன்கணிப்பு அம்சம் இலகுவான உடல் செயல்பாடுகளின் போது இயக்கம் மெதுவாக இருப்ப

தைக் கண்டறிய முடியும் எனவும், இது தனிநபர்களால் கவனிக்க முடியாத அளவுக்கு நுட்பமானது' எனவும் தெரிவிக்கின்றார். 'தரவுகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதன் மூலம் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளைத் துரித கதியில் மேற்கொள்ள முடியும்' என சாண்டோர் நம்பிக்கை வெளியிடுகின்றார். 'நோயாளிகள் பார்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்படும்போது மூளையில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பு ஏற்பட்டிருப்பதனால் சிகிச்சைகள் 100 வீதம் வெற்றியளிப்பதில்லை எனவும் இதனால் பயனுள்ள சிகிச்சைகளை வழங்க முடியவதில்லை' எனவும் தெரிவிக்கின்றார். 'திறன் கைக்கடிகாரங்களின் தரவை அடிப்படையாகக் கொண்ட ஆரம்பகால கண்காணிப்பு கருவிகள், நோயாளிகளை முன்கூட்டியே அடையாளம் காண முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இது நியூரோபிராக்டிவ் சிகிச்சை சோதனைகள் வெற்றிகரமாக இருக்க வழியமைக்கும்' எனக் குறிப்பிடுகின்றார்.

கால்-கை வலிப்பு போன்ற நாள்பட்ட நிலையில் வாழும் மக்களுக்கு, வலிப்புத்தாக்கங்கள் ஏற்படப் போகிறது என்பதற்கான முன்னெச்சரிக்கை அறிகுறிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், திறன் கைக்கடிகாரங்கள் விரைவில் உதவக்கூடும் என்று நம்பப்படுகிறது. வலிப்புத்தாக்கங்களால் ஏற்படும் விழுதல்கள் மற்றும் கடுமையான விபத்துக்கள் கால்-கை வலிப்புடன் வாழ்பவர்களுக்கு அறியப்பட்ட ஆபத்து காரணிகளாகும் 'வலிப்புத்தாக்கங்கள் ஏற்படக்கூடும் என்ற நிச்சயமற்ற தன்மை, வலிப்புடன் வாழ்வதில் மிகவும் கடினமான அம்சங்களில் ஒன்றாகும்' என்று அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மூளை ஆய்வு நிறுவகத்தின் ஆய்வாளர் ஐலீன் மெக்கோனிகல் கூறுகின்றார். McGonigal ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்ட எம்படிக்கா திறன் கைக்கடிகாரத்தின் ( Empatica smartwatch) சிறப்பு முன்மாதிரி பதிப்பு வலிப்புத்தாக்கத்தை முன்னறிவிப்பதில் எவ்வாறு உதவும் என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் ஆய்வில், தகவலோடை (streams) கலவையில் செயற்கை நுண்ணறிவு படிமுறைத் தீர்வுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதயத் துடிப்பு மாறுபாடு, தோலின் வெப்பநிலை, உடல் இயக்கமுறைகள் மற்றும் வியர்வையின் காரணமாகத் தோலின் மின் கடத்துத்திறனில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை இதில் அடங்கும், இது உடலின் தன்னியக்க நரம்பு மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது. இந்த அளவுருக்கள் ஒவ்வொன்றையும் கடிகாரத்தால் அளவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. 'வலிப்புத்தாக்கங்களுக்கு வழிவகுக்கும் மணித்தியாலங்களில், தரவு வடிவங்களைப் பகுப்பாய்வு செய்வதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்' என மெகோனிகல் குறிப்பிடுகின்றார். வலிப்பு நோய் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்கள் வலிப்புத்தாக்கங்கள் அதிகமாக ஏற்படும் போது நோயாளிகள் அதனை முன்கூட்டியே கணிக்க விரும்புகிறார்கள், இது வலிப்புத்தாக்கத்துடன் தொடர்புடைய விழுதல் மற்றும் காயத்தின் அபாயத்தைக் குறைக்க மாறுபட்ட அளவு மருந்து மற்றும் தினசரி நடவடிக்கைகளை கண்காணித்தல் மூலம் சிகிச்சையை பொருத்தமான அடிப்படையில் மாற்றுவதற்கு சாத்தியங்கள் ஏற்படுகின்றன.

ஆனால் சக்திவாய்ந்த செயற்கை நுண்ணறிவு படிமுறைத்தீர்வுகள் முறையில் துல்லியமான அணியக்கூடிய அளவீடுகள் ஆகியவற்றின் கலவையானது எதை அடைய முடியும் என்பதில் சிறந்த சாத்தியங்கள் காணப்பட்டாலும், இந்த திறன் கைக்கடிகாரத் தவறான அல்லது எதிர்மறைத் தரவுகளை வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பது மறுப்பதற்கில்லை எனச் சில மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

'அதிகளவில் திறன் கைக்கடிகாரங்கள் பயன்பாடு நோயாளியின் அழுத்தத்தை அதிகரிக்க வழிவகுக்கும் என எச்சரிக்க விடுக்கப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்பம் பல்வேறு வழிகளில் மருத்துவத்திற்கு உதவுகிறது' என செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனை NHS அறக்கட்டளையின் ஆலோசகர் ஜெர்மி செமல்ட் தெரிவிக்கின்றார். அவற்றில் ஒன்று சிக்கல்களை முன்கூட்டியே கண்டறிதல், ஆனால் அது உயிரைக் காப்பாற்றும். 'எல்லா தொழில்நுட்பங்களைப் போலவே, திறன் கைக்கடிகாரங்களும் சோதிக்கப்பட வேண்டும்' எனத் தெரிவிக்கின்றார். தவறான தரவுகள் நோயாளிகளுக்கு அனாவசியமான கவலையை ஏற்படுத்தும் என்பதுடன் தேவையற்ற நேரங்களில் மருத்துவரின் உதவியை நாட உந்தப்படும் சாத்தியங்களும் உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், ஆபத்தான நோய் நிலைமைகளைக் கொண்டவர்களுக்கு திறன் கைக்கடிகாரங்களின் தரவுகள் அவர்களது பணத்தையும் நேரத்தையும் சேமிக்க உதவும் என்பதுடன் நோய் ஆபத்துக்களையும் தவிர்க்க உதவுகின்றது.

மேலும், திறன் கைக்கடிகாரங்கள் இன்னும் அதிநவீனமாகி, உற்பத்தியாளர்கள் மனித உடலைப் பற்றிய அளவிடக்கூடிய தரவைப் பெறுவதற்கான வழிகளை மேலும் மேலும் கண்டுபிடிக்கும்போது, சாத்தியமான நோய் தடுப்பு பயன்பாடுகளின் பட்டியல் மேலும் அதிகரிக்கும். 'தனது நிறுவனத்தின் திறன் கைக்கடிகாரங்களை அடுத்த பரிமாணத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக' மாசிமோ கைக்கடிகார உற்பத்தி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று ஜோ கியானி தெரிவிக்கின்றார். 'ஆஸ்துமா தாக்குதலைக் கணிக்க முடியும். சுவாசம் குறித்த அளவீடு எங்களிடம் உள்ளது' என கியானி குறிப்பிடுகின்றார்.

'நீங்கள் எப்போது சுவாசிக்கச் சிரமப்படுகிறீர்கள் என்பதை உங்களால் சொல்ல முடியும், ஏனெனில் சுவாச விகிதம் அதிகரிக்கிறது, துடிப்பு விகிதம் அதிகரிக்கிறது. இவை அனைத்தும் உங்களுக்கு கிடைக்கும் ஆக்ஸிஜன் பற்றாக்குறையை ஈடுசெய்ய முயற்சிக்கின்றன' என்று அவர் குறிப்பிடுகின்றார். 'கடந்த ஐந்து ஆறு தசாப்தங்களாக உடல் வெப்பமாணி மட்டுமே வீடுகளில் காணப்பட்டது, அவற்றை மட்டுமே நாம் பயன்படுத்தினோம் எனவும் தற்பொழுது அவசர சிகிச்சைப் பிரிவிற்குச் செல்லாது வீடுகளிலேயே பல்வேறு மருத்துவ தகவல்களைத் துல்லியமாக திரட்டக்கூடிய சாத்தியப்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளதாக' அவர் தெரிவிக்கின்றார். தொழில்நுட்பத்துறையின் இந்த வளர்ச்சியானது பலரது உயிர்களைக் காப்பதற்கும் ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கும் வழியமைத்துக் கொடுக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.



jeyaseelan.s@thaiveedu.com



# போதையால் இளமைதான்! என்றுமே முதுமையில்லை!

– போல் ஜோசேப்

என்ன இது போதைக்கு ஆதரவாக இப்படி சொல்கிறீர்கள் என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. ஆம்,

***புகையுங்கள், நன்றாகப் புகையுங்கள்!***
***குடியுங்கள், மதுவை நன்றாகக் குடியுங்கள்!***
***போதையின் பாதையில் நடை போடுங்கள்!***
***உங்களுக்கு முதுமையே வராது!***
***ஏனென்றால், - நீங்கள்***
***இளமையிலேயே இறந்து விடுவதால்.***

நான் இந்தியாவில் இருந்தபோது 1990-ல் எழுதிய கவிதை. எனது நூலிலும் இது வெளிவந்துள்ளது. போதைப் பழக்கம் என்பது தொற்றாத ஒரு நோயாக பரவி வருகிறது, உலக அளவில் போதைப் பழக்கத்தினால் 40 மில்லியன் மக்கள் பல நோய்களுக்கு ஆளாகி, அதில் ஆண்டுதோறும் 4 மில்லியன் மக்கள் இறந்து போகிறார்கள். போதை பழக்கம் என்பது ஏதோ ஒரு மனநோய் என்பதுதான் பலரின் எண்ணமும். ஆனால், அது ஒரு 'மூளை நோய்' என்பதுதான் உண்மை.

நமது மூளையின் அறிவியல் என்பது இன்னும் முழுமையாக புரியாத புதிராக இருந்தாலும் 100 பில்லியன் நியூரோன்ஸ் (Neurons) என்ற நரம்புக்கலங்களையும் அவற்றை இணைக்கும் ஸ்னாப்ஸ்(Synapse) என்ற ஆயிரம் ட்ரில்லியன் எண்ணிக்கையிலான இணைப்பான்களையும் கொண்ட ஓர் அற்புத படைப்பாகும். போதையின் விஞ்ஞானத்தை முதலில் சரியாகப் புரிந்து கொண்டாலே அதிலிருந்து வெளிவருவதும் அல்லது அடிமையாகாமல் இருப்பதும் இலகுவானதாகும். இது ஏதோ வழக்கம் போல ஆலோசனையும் புத்திமதியும் சொல்லப் போகும் கட்டுரை அல்ல, போதையின் பாதையின் மருத்துவ விஞ்ஞானப் பார்வையின் அடிப்படையில் விழிப்புணர்வை உண்டாக்கும் கட்டுரையாகும்.

என்னிடம் ஆலோசனைக்காக வந்த ஒருவர் டாக்டர் மது அருந்துவது நல்லது தானே கொஞ்சம் மனதிற்கும் இதமாக இருக்கிறது, கவலையை மறந்திருக்க முடிகிறது என்றார். நானும் அது நல்லதுதான் தொடருங்கள் என்று சொன்னேன். அருகில் இருந்த அவரின் மனைவி, டாக்டர் என்ன நீங்களே இப்படி சொல்லுறீங்க என்று ஆதங்கப்பட்டார். அதற்கு நான் சொன்னேன், யாருக்கு நல்லது? அது எனக்கு நல்லது அல்லது, என்னைப் போன்ற மருத்துவர்களுக்கு நல்லது. ஏனென்றால், நீங்கள் உங்கள் காசை கொடுத்து மதுபானத்தை வாங்கிக் குடித்துவிட்டு, உங்கள் உடம்பை கெடுத்துவிட்டு, பின்னர் எங்களிடம் வந்து எங்களுக்கும் காசு தந்து வைத்தியத்தை பார்க்கிறீர்கள். ஆகவே, மது அருந்துவது உங்களுக்கு நல்லதோ இல்லையோ மருத்துவர்களாகிய எங்களையும், சாராயம் விற்கும் முதலாளிகளையும் பணக்காரர்கள் ஆக்குவதில் உங்களைப் போன்ற குடிகாரர்கள் தான் தேவை. அதனால் தான் நல்லது என்றேன். அன்றிலிருந்து மனுஷன் 'சரக்கை' தொடுவதை நிறுத்திவிட்டார்.

***புகைவது புகையிலை மட்டுமல்ல***
***நுரையீரல் குலையும்தான்!***
***எரிவது நெருப்பு கருகுவது குருதி!***
***ஊதுவது கஞ்சா மட்டுமல்ல***
***உங்கள் உயிரையும்தான்!***
***உதடுகளுக்கு இடையே***
***உனக்கு நீயே செய்து பார்க்கும்***
***சுடுகாட்டின் இறுதிக் கிரியைக்கான***
***ஓர் ஒத்திகை.***

நமது மூளையில் முன் பகுதியானது தீர்மானங்களைச் சரியாக எடுப்பதற்கும் தர்க்கரீதியான சிந்தனை, கற்றல், நல்லது கெட்டது தீர்மானித்தல், முடிவெடுத்தல் இப்படி பல பணிகளுக்கு பொறுப்பானது. நடுமூளையானது நமது ஐம்புலன் கள், உடலின் அசைவுகள், நடத்தல், ஓடுதல் போன்ற தசைக ளின் இயக்கங்கள், செய்தி பரிமாற்றம் மற்றும் மூளைத் தண் டுடன் நேரடியாக தொடர்பில் இருப்பதால் அதனுடன் இணைந்து இதயத்தின் இயக்கம், சுவாசம், உடல் வெப்ப நிலை பேணுதல், குறிப்பாக Survival என்ற தக்கனப் பிழைத்தலும் தப்பித்தலும் செயல்படுவது மூளையின் இந்தப் பகுதி தான். மற்றும் மூளையில் உள்ள லிம்பிக்சிஸ்டம்(Limbic system) என்ற பகுதி மிக முக்கியமானது, ஏனென்றால் நமது மனம், கனவுகள், கற்பனைகள், உணர்வுகள் உணர்ச்சிகள், பழக்க வழக்கங்கள், உறக்கம் இப்படி பலவிதமான செயல்பாடுகளுக்கு காரண கர்த்தா இவர்தான். நாம் அழுவதும் சிரிப்பதும், அன்பு காட்டுவதும் கோபப்படுவதும், பாசமும் நேசமும், காதலும் காமமும், கவலையும் பயமும் இப்படி எல்லாவற்றிற்கும் பின்புலத்திலிருந்து நம்மை ஆட்டிவைப்ப தும் இந்த கதாநாயகன் தான்.

ஒருவர் போதைக்கு அடிமையாகிறார் என்றால் அவரை சமூகம் கேவலமாக பார்ப்பதும் தள்ளி வைப்பதும் ஒதுக்குவதும் இயல்பு. அவர் செய்யும் சமூக விரோதச் செயல்களுக்கு யார் பொறுப்பு? அவரா? அவரது மூளையா? அவரது மனமா? வாழ்க்கை முறையா? குடும்பமா? சமூகமா? என்றால் நாம் இதுவரை சொல்லிவரும் பதில்கள் எல்லாம் கொஞ்சம் சந்தேகத்தை எழுப்புகின்றன.

ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டுங்கள், இரக்கம் காட்டுங்கள்..., இப்படி தொன்று தொட்டு வாய் நிறைய பேசுகிறோம். ஆனால், இதற்கும் பின்னால் இருக்கும் விஞ்ஞானத்தைப் பற்றி பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட மூளை நரம்புக் கலங்கள் மற்றும் அதில் உள்ள பல்லாயிரம் கோடி இணைப்புகள் என்ற ஸ்னாப்ஸ்களில்(Synapse) ஆயிரக்கணக்கான நியூரோ டிரான்ஸ்மிட்டர்ஸ்(Neurotanmitters) என்ற நரம்பு ரசாயனங்கள் உள்ளன. அவற்றை அவ்வப்போது தேவைக்கேற்ப சுரப்பது இந்த மூளையின் லிம்பிக் சிஸ்டம் தான். அதில் குறிப்பாக Dopamine, Oxytocin,Serotonin,Endorphine, GABA.., இப்படி பல நூறு. இதில் கட்டுரையின் அவசியத்தை பொறுத்து சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன். ஒக்ஸிரோஸின் இல்லை என்றால் நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க முடியாது, அன்பு காட்ட முடியாது, ஏன் நீங்கள் காதலிக்கவே முடியாது. இந்த என்டோர்பின் மற்றும் டொப்பாமின் இல்லையென்றால் நீங்கள் சிரித்து மகிழ முடியாது, இன்பத்தையும் வாழ்வின் எந்த சந்தோஷங்களையும் அனுபவிக்க முடியாது. அது மட்டுமல்ல, அட்ரினலின் GABA போன்ற நியூரோகெமிக்கல் உங்களிடம் இல்லை என்றால் Survival என்ற சவால்களை எதிர்கொண்டு போராடி வெற்றி பெறுதல் இல்லாமல், உயிர் வாழ்தலே கேள்வியாகிவிடும். ஆம். இப்படி நமது மூளையைப் பற்றி இன்னும் அறியவேண்டியது ஏராளம் உண்டு.

இனிப்பை ருசித்து சுவைக்கிறீர்கள், காதலிக்கோ மனைவிக்கோ குழந்தைக்கோ முத்தங்கள் கொடுக்கிறீர்கள், அது உங்களுக்கும் பிடிக்கிறது. காதலியின் அடுத்த முத்தத்திற்காக காத்திருந்து ஏங்குகிறீர்கள். மேலும் நாங்கள் ஒரு நல்ல விடையத்தை செய்யும்போது யாராவது நம்மை பாராட்டமாட்டார்களா என்று ஒரு சிறிய நன்றிக்காக, பாராட்டுக்காக ஏங்கித் தவிக்கிறோம். போட்டிகளில் வெற்றிபெறத்துடிக்கிறோம். இப்படி, இவை எல்லாம் ஒருவித போதைதான். இவை மீண்டும் மீண்டும் செய்தாலும், மூளை செய்யத் தூண்டினாலும் அதனால் எந்தவித பாதிப்புகளும் இல்லை. அதேபோலத்தான் நாம் தேநீர், கோப்பி அருந்துவதும், ஏன் தியானம் செய்யும் போதும் நமது மனம் அமைதி அடைவதும் அதற்குப் பின்னால் உள்ள விஞ்ஞானமும் மூளையில் உள்ள ரசாயனங்களின் விளையாட்டுத்தான்.

மாறாக, போதை மருந்துகளும் மதுவும் கஞ்சாவும் அப்படியல்ல. அதில் உள்ள ரசாயனங்கள் மூளையிலும் உடலிலும் உள்ளத்திலும் பல பாதிப்புகளை உண்டாக்குகின்றன. முதல் முறை எடுக்கும் போது ஒரு தற்காலிகமாக, நான் முன்பு குறிப்பிட்ட நியூரோ கெமிக்கல்ஸ்(Neurochemicals) போன்றவற்றை தூண்டி ஒருவித கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் மனதில் இன்பத்தையும் உண்டாக்கி விடுகின்றது. இந்த உணர்வுகள் மூளையின் லிம்ப்பிக் சிஸ்டத்தில் உள்ள நினைவுப் பதிவுகளில் உள்வாங்கப்பட்டு ஒரு புதிய, புதிய அனுபவம் என்பதை பதிவு செய்கிறது. மீண்டும் அந்த நியூரோ கெமிக்கல்ஸ் குறையும் போது லிம்பிக் சிஸ்டமானது நடுமூளைக்கு தகவல்களை அனுப்பி நமது வழக்கமான அன்பு பாசம், பாராட்டு மகிழ்ச்சி, வெற்றி இவைகளை விட செயற்கையான போதை ரசாயனங்களால் கிடைக்கும் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் உயர்ந்தது, எந்தவித முயற்சியும் இல்லாமல் இலவசமாக இலகுவாக கிடைக்கிறது, அதனால் மீண்டும் மீண்டும் இதுவே பரவாயில்லை என்ற உணர்வினை தீர்மானங்களை எடுக்கும் முன்மூளைக்கு தகவல்களை சொல்லும். அதை ஏற்றுக் கொண்டு முன்மூளையும் முடிவெடுப்பதால் போதை மருந்துகளின் மீது ஒரு ஆசையினைத் தூண்டி தொடர்ச்சியாக எடுப்பதில் ஆர்வம் உண்டாகிறது.

அதன் பின்பு இப்படி பல நாட்கள் தொடர்ந்தபிறகு, நடுமூளையினையும் நான் முன்பு குறிப்பிட்ட லிம்பிக் சிஸ்டம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடும். பிறகென்ன போதை மருந்தோ, மதுவோ, கஞ்சாவோ எதுவோ... அதை எடுக்கவில்லை என்றால் நடுமூளை தனது வேலையை காட்டத் தொடங்கி விடும். கை, கால் நடுக்கம், இதயப் படபடப்பு, மூச்சு விடுவதில் சிரமம், பதட்டம், பயம், மனச்சோர்வு, எதிலும் விருப்பமின்மை, பசியின்மை, தலை இடி, தூக்கமின்மை, உடல் வலி... இப்படி பல அறிகுறிகளை உண்டாக்கிவிடும். இவைதான் மருத்துவத்தில் வித்ரோவல் சிம்டம்ஸ்(Withdrawal symptoms) என்று அழைக்கப்படுகிறது. மீண்டும் போதை ஏறும்போது மட்டுமே இந்தக் குணங்குறிகள் எல்லாம் மறைந்துவிடும்.

பின்னர் நடுமூளை Survival என்ற உயிர் வாழ்தலுக்கு தக்கனப் பிழைத்தல் எனும் தன் ஆயுதத்தை கையில் எடுத்துக் கொள்ளும். எப்போதுமே முழு மூளையினையும் உடலையும் மனதையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து மிரட்டிக் கொண்டே இருக்கும். இந்த நிலை போதைக்கு அடிமையான ஒருவருக்கு ஆபத்தான கட்டமாகும். இதை மருத்துவத்தில் அடிக்சன்(Addiction) என்று அழைக்கிறோம். இவ்வாறாக போதைப் பழக்கத்திற்கு அடிமையாகும் நபர்கள் பல்வேறு விதமான உடல், உள நோய்களுக்கு ஆளாகின்றனர். சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு தனிமை உணர்வு மேலோங்குகிறது. பாதுகாப்பற்ற உணர்வும் அதனால் சமூக விரோத செயல்கள் மீதான தொடர்பும் ஈடுபாடும் தலைதூக்கும்.

கனடாவில் ஜனவரி 2016 முதல் மார்ச் 2024 வரை மொத்தம் 50,000 வெளிப்படையான ஓபியாய்டு நச்சுத்தன்மை இறப்புகள் பதிவாகியுள்ளன. அண்மைக்காலமாக நமது தமிழ் சமூகத்தில் ‘ஓவர் டோஸ்’ எடுத்து பல இளைஞர்கள், யுவதிகள் மரணமாகி வரும் செய்திகள் நீங்கள் அறிந்ததே. மேலும் காலப்போக்கில் ‘ஓவர் டோஸ்’ என்ற நிலையில் அண்மைக்காலமாக பல நாடுகளிலும் இளைஞர்களின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளது. உலக அளவில் ஆண்டுதோறும் சுமாராக 10 லட்சம் பேர் ஓவர் டோஸ் எடுப்பதால் இறக்கிறார்கள். உலக சுகாதார நிறுவன கணிப்பின்படி மதுவினால் இறப்பவர்களின் எண்ணிக்கை மட்டும் உலகளவில் ஓராண்டுக்கு சுமார் 30 லட்சம் பேராம். போதைப் பழக்கத்தால் உண்டாகும் விபத்துகள் மற்றும் கொலைகள், தற்கொலைகள் என்பது மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு அடிமையானோர் பல்வேறு குடும்ப வன்முறைகளில் ஈடுபடுவதும் துப்பாக்கிகளைக் கொண்டு பொது வெளியில் சுட்டுத் தள்ளுவதும் நாம் நாளும் கேள்விப்படும் செய்திகளாகிவிட்டன. போதையினால் ஏற்படும் திருமணமுறிவுகளால் உடைந்த குடும்பங்கள், அதன் பின்பு இவர்களின் வாரிசுகளான பிள்ளைகளின் கேள்விக்குறியான எதிர்காலம், அதனால் மீண்டும் பிள்ளைகளும் இதே போன்ற பழக்கத்திற்கு அடிமையாதல் என்பதும் இது ஒரு தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது. இளையோர்கள் போதைக்கு அடிமையாவதால் பின்பு இவர்களின் தாம்பத்திய வாழ்வில் உண்டாகும் குறைபாட்டால் தோல்வியினைத் தழுவி, திருமணமாகி குறுகிய நாட்களில்

மணமுறிவு மற்றும் குழந்தையின்மையும். பிள்ளைகள் பிறந்தாலும் உடல் உளக் குறைகளுக்கு ஆளாகும் நிலையும் ஏற்படுகிறது.

அண்மைக்கால ஆய்வுகளின்படி மது மற்றும் போதையால் உடல் கலங்களிலுள்ள மரபணுக்களின் மேல் உள்ள புரதங்களில்(Epigenetic) நினைவுப் பதிவுகள் உண்டாகி அடுத்த தலைமுறைக்கும் இதன் பாதிப்புகள் கடத்தப்பட வாய்ப்புண்டு என்பது ஆய்வுகளின் முடிவுகளில் தெரியவந்துள்ளன.

'ரோல் மாடல்' என்ற சொல்லாடல் மிகவும் பொருத்தமானது. ஏனென்றால் நாம் பிள்ளைகளின் முன்பாக பார்ட்டிகளில், கொண்டாட்டங்களில் மது அருந்திவிட்டு கொஞ்சம் வையின் தானே குடிக்கலாம் என்று பெண்களும் சேர்ந்து எரிகிற நெருப்பை தூண்டிவிட, வார விடுமுறைப் பார்ட்டிகளில்தான் கொஞ்சம் எடுப்போம் மற்றபடி நாங்கள் குடிகாரர்கள் அல்ல என்று மொக்கையாக வாதம் செய்யும் கூட்டத்தினரின் பிள்ளைகளும், பட்டையும் கட்டையும் அடிப்பதில் தவறில்லைதானே.

இந்தக் கட்டுரையின் நோக்கமே வந்தபின் காப்பதை விட வருமுன் காப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதற்கான விழிப்புணர்வுகளில்த்தான் நாம் இனி கவனம் செலுத்தியாக வேண்டும். போட்டிகளும் பொறாமைகளும் நிறைந்த சமூகத்தில் நமது பிள்ளைகள் எப்போதுமே ஒரு Comfort zone என்ற இதமான சுகமான வலயத்திற்குள்ளே வளர்க்கப்படுகிறார்கள். அதனால் கல்வியில், வேலை வாய்ப்புகளில், பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகளும், தோல்விகளும் சறுக்கல்களும் ஏற்படும்போது வரும் சவால்களை எதிர்கொள்ளத் தெரியாது, போதையின் பாதையிலே மடைமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

பிள்ளைகளுக்கான சுதந்திரம் மற்றும் பொறுப்புணர்வில் உள்ள எதிரும் புதிருமான புரிந்துணர்வு, பொத்திப் பொத்தி வளர்த்தாலும் பொறுப்புகளை பங்கீடு செய்யாமல் வளர்த்தலும், அவற்றை மீறுகிற போது கண்டிக்காமல் இருந்துவிட்டு தண்டிப்பதால் தடம்மாற வழிவகுக்கும். அதுமட்டுமல்ல சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது தவறான முறையில் நடத்தப்படுதல் (Child abuse) போன்றவற்றால் உளக்காயங்களுக்கு உள்ளாகி அதன் அனுபவங்களினால் பின்னாளில் அவை PSTD என்ற அதிர்ச்சிக்குப் பின்னரான மன அழுத்த நோய்க்கு ஆளாகி தடம் புரள வாய்ப்புகள் உண்டு. பிள்ளைகள் மீதான அதிக ஆதிக்கம் செலுத்தும் பெற்றோர், விவாகரத்து பெற்று அல்லது பிரிந்திருக்கும் பெற்றோர் மற்றும் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிடும் பெற்றோரின் வாரிசுகள் தங்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழல் காரணமாக தவறான நண்பர்களுடன் நட்புக் கொள்ளும் சூழலும் உருவாகி போதையின் பாதையில் வழி நடத்தப்படலாம்.

கூட்டுக் குடும்பங்களின் காலகட்டம் மறைந்து இப்போது தனிக் குடும்பங்கள் அதிலும் ஓரிரு பிள்ளைகள் என்று சுருங்கிப் போனதால் பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்ள இருவரும் பணிக்குச் செல்ல வேண்டிய கட்டாயச் சூழல் போன்றவற்றால் பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையான தொடர்பாடல் அனுபவங்களும், உறவாடல் பரிமாற்றங்களும் அற்ற சூழல் இன்றைய தலைமுறையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அது மட்டுமல்ல வீட்டில் மூத்தோர், முதியோரின் பாசம் பரிமாற்றம், அன்பு, அரவணைப்பு, அனுபவத்தின் அடிப்படையிலான ஆலோசனைகள் அறவே அற்றுப்போய் வெற்றுக் குருவிக்கூடுகளாகிப்போன இன்றைய இல்லங்களும், வருங்காலச் செல்லங்களுக்கு வழிகாட்டி ஆற்றுப்படுத்த இயலாத நிலைக்கு சமூகம் தான் முழு பொறுப்பேற்க வேண்டும்.

Social stigma என்ற வார்த்தைப் பிரயோகம் இப்போது பொதுவெளியில் பேசப்படுகிறது. அதாவது குடும்பத்தில் யாராவது குறிப்பாகப் பிள்ளைகளில் போதைப் பழக்கம் உண்டு என்று தெரிந்தாலும், தொடக்கத்திலேயே மருத்துவரிடமோ அல்லது தகுந்த சிகிச்சை முறைகளுக்கோ, ஆலோசனைகளுக்கோ அழைத்துச் செல்வதை முற்றாகத் தவிர்த்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் மற்றவர்களுக்கும் இந்த விடயம் தெரிந்து, அதனால் குடும்ப மானம் குலைந்து, சமூகத்தில் பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விடும் என்பதற்காக இத்தகைய முடிவுகளை எடுப்பது பேராபத்தாகும்.

இன்றைய போட்டிக் கல்விச் சந்தையில் பெற்றோரின் பிள்ளைகள் மீதான கட்டாயத் திணிப்பும் அதிலிருந்து தப்பிக்க ஏதோ ஒரு வடிகால் அவசியமாகிறது. அந்த வடிகால் பின்பு காலை வாரிவிடும் வடிகாலாகவும் அமைய வாய்ப்புகளுண்டு. குறிப்பாக இலங்கையில் மாணவர்களின் இன்றைய நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும். காலையில் ரியூஷன் பிறகு பாடசாலை, மீண்டும் மாலை, இரவு மற்றும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் ரியூஷன். இப்படியான இந்தக் கலாசாரத்தால் பிள்ளைகளின் மன உளைச்சலும் அதிலிருந்து விடுபட, மனம் மகிழ ஏதோ ஒரு வடிகாலை மனம் தேடுவது இயற்கைதான். டியூஷன் கலாச்சாரத்தை ஒழிக்க சமூகமாக முடிவுகளை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கிறது. அதற்கு மாற்றாக பாடசாலைகளில் நல்ல கல்விமுறைகள் நெறிப்படுத்தப்பட வேண்டிய தேவையும் உள்ளது.

இப்படி ரியூஷன் ரியூஷன் என்று அலைந்து திரிந்து 3A எடுத்ததில், கடந்த ஐந்து சகாப்தங்களில் நம் சமூகத்திலிருந்து எத்தனை விஞ்ஞானிகள் அல்லது பல்துறைசார் உலகப் புகழ் பெற்ற மனிதர்களை உருவாக்கி இருக்கிறோம். இது வரை சாதனை படைத்த மூத்தவர்கள் எல்லாம் ரியூஷன் கலாச்சாரத்தில் படித்தவர்கள் அல்ல என்பதை இன்றைய சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். மாணவர் சமூகத்தின் மனதை மடைமாற்ற கலை, இலக்கியம், சமூக தொண்டுகள், ஆன்மீகம், இசை மற்றும் விளையாட்டு, போன்றவற்றில் ஈடுபாடு, மற்றும் மனதிற்கும் உடலுக்கும் வலுவூட்டம், கலைகளை கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுதல், கல்விக்கூடங்களில் உளவளத்துறை பயிற்சிகள் போதையின் பாதைக்குள் செல்லாமல் இருக்க நல்ல வழிகாட்டியாக அமையும்.

நான் கட்டுரையின் தொடக்கத்தில்4 குறிப்பிட்டதுபோல ஆலோசனைகளைச் சொல்வது எனது நோக்கம் அல்ல, கருத்துக்களையும் காரணங்களையும் முன் வைத்திருக்கிறேன். இது பற்றி இன்னும் அறிவூட்டல் ரீதியாக, சட்ட ரீதியாக, சமூகமாக விழிப்புணர்வூட்டல் அவசியமாகிறது.



paul.joseph@thaiveedu.com



# உள நலம் - அனைவரதும் மனித உரிமை

– ஷகீதா பாலச்சந்திரன்

சமீப காலங்களில் இலங்கையில் பாடசாலை மாணவர்களின் தற்கொலை சம்பவங்கள் அறியப்பட்டதிலிருந்து, உளநலன் சம்பந்தமான பேச்சுக்கள் மற்றும் உள ஆரோக்கியம் சம்பந்தமான விழிப்புணர்வு பதிவுகள் மக்கள் மத்தியிலும் சமூக வலைதளங்களிலும் காரசாரமான விவாதப் பொருளாக மாறியிருந்தன.

தற்கொலை ஒரு உலகளாவிய பொதுச்சுகாதாரப் பிரச்சினை ஆகும். ஒவ்வொரு ஆண்டும் 720,000-க்கும் அதிகமானோர் தற்கொலையால் இறக்கின்றனர். இந்த இறப்புகளில் பெரும்பாலானவை (73%) குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் நிகழ்கின்றன. இதற்கு அப்பால், தற்கொலை என்பது சமூகங்கள், நண்பர்கள் மற்றும் தற்கொலை செய்துகொண்டவரின் குடும்பங்கள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது (உலக சுகாதார அமைப்பு, 2024). இலங்கை பொலிஸின் தரவின் படி 2022-ல் இலங்கையில் தற்கொலை விகிதம் (மக்கள் தொகை) ஆண் மற்றும் பெண்களில், 27/100,000 மற்றும் 5/100,000 ஆக இருந்தது. அண்ணளவாக 15/100,000 உள்ளது.

உளநலம் என்பது தற்போதைய உலகில் மிகவும் அடிப்படையான, அவசியமான தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. உலகம் முழுவதுமுள்ள உளநலன் சார்ந்த சவால்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உளநலச் சுகாதாரத்தை மேம்படுத்தவும் ஆதரவான செயற்பாடுகளை ஒன்றுதிரட்டுவதையும் நோக்கமாக அடிப்படையாக கொண்டு உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் 10-ம் திகதியை உலக உளநலன் தினமாக அனுஷ்டிக்கிறது. உளநல ஆரோக்கியத்தில் ஏற்படும் பாதிப்புகளால் நமது நல்வாழ்வு, பணிபுரியும் திறன், தனிநபர், குடும்பம் மற்றும் சமூகத்துடனான உறவுநிலை முதலானவற்றில் பாரிய நெருக்கடிகளும் சிக்கல்களும் உருவாகின்றன.

மன ஆரோக்கியம் என்னும் மனநலன் எனப்படுவது, மக்கள் தம் வாழ்க்கையின் அழுத்தங்களைச் சமாளிக்கவும், அவர்கள் தமது திறன்களை உணர்ந்து அவற்றுக்கு முகம் கொடுக்கவும், அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவும், வேலை செய்யவும், அவர்களின் சமூகத்திற்கு பங்களிக்கவும் உதவுகிறது. மனநலச் சிக்கலானது எந்த நேரத்திலும், ஒரு தனிநபருக்கோ குடும்பத்துக்கோ, சமூகத்துக்கோ ஏற்படலாம். வறுமை, வன்முறை, இயலாமை மற்றும் சமத்துவமின்மை உள்ளிட்ட பாதகமான சூழ்நிலையால் மனநலச் சிக்கல் உண்டாகிறது.

ஒப்பீட்டளவில் மனநலச் சிக்கல்களுக்கு குறைந்த செலவில் திறம்படச் சிகிச்சையளிக்கப்படலாம், இருப்பினும் சுகாதார அமைப்புகளில் வளங்கள் குறைவாகவே உள்ளன. மற்றும் வழங்கப்படும் சிகிச்சைக் கால இடைவெளிகள் உலகம் முழுவதும் பரவலாக உள்ளன. நோயாளிக்கு வழங்கப்படும் மனநலச் சிகிச்சைகள் பெரும்பாலும் கணிசமான தரத்தில் இருக்கும். இதனால் மனநல நிலைமைகள் உள்ளவர்கள் பெரும்பாலும் பாகுபாட்டிற்கு உள்ளாக்குவதுடன் மனித உரிமை மீறல்களை அனுபவிக்கின்றனர்.

மன நோய்கள் குணப்படுத்தக்கூடியவை, சிகிச்சை மூலம் அவை ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறைக்கலாம். இருந்தபோதிலும், சிகிச்சையின் பற்றாக்குறை அல்லது தரம் குறைவாக உள்ளது, மேலும் பலர் தங்கள் அறிகுறிகளைச் சுகாதார நிபுணர்கள் அல்லது தங்களுக்குத் தெரிந்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளச் சங்கடப்படுகிறார்கள். 3 பெண்களில் ஒருவரும் 5 ஆண்களில் ஒருவரும் தங்கள் வாழ்நாளில் பெரும் மன அழுத்தத்தை அனுபவிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (SOURCE: Our world in Data).

2019-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு 8 பேரில் ஒருவர் அல்லது உலகில் 970 மில்லியன் மக்கள் கவலை, மனச்சோர்வுக் கோளாறுகள் மற்றும் மனநலக் கோளாறுடன் வாழ்கின்றனர். 2020-ம் ஆண்டில், கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக கவலை மற்றும் மனச்சோர்வுக் கோளாறுகளுடன் வாழும் மக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது (உலக சுகாதார அமைப்பு, 2022).

பதட்டம், உலகில் 284 மில்லியன் மக்களைப் பாதிப்பதாகப் புள்ளி விபரங்கள் கூற மனச்சோர்வு 264 மில்லியன் மக்களைப் பாதிக்கிறது. மது பயன்பாட்டுக் கோளாறினால் 107 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். போதைப்பொருள் பயன்பாட்டுக் கோளாறு 71 மில்லியன் மக்களைப் பாதிக்கிறது. (மனநலப் புள்ளிவிவரங்கள் 2024 – The checkup).

மனநலம் சார்ந்த கள நிலவரம், சவால்கள், எடுக்கப்படவேண்

டிய நடவடிக்கைகள், தேவைகள் பற்றி வடகிழக்கு மற்றும் இலங்கையில் இது சார்ந்து மக்களுடன் இணைந்து களத்தில் பல காலமாகப் பணிபுரிகின்றவர்களின் தகவல் பரிமாற்றங்கள் இங்கு இணைக்கப்படுகின்றன.

30 வருடங்களுக்கு மேலாக வவுனியா மாவட்டத்தில் உளசமூக ஆலோசகர் மற்றும் மனநலம் சார்ந்த பயிற்றுவிப்பாளராகவும், மேற்பார்வையாளராகவும் இலங்கை பொது சுகாதார பரிசோதகர் ஆகவும் பணியாற்றுகின்ற ரவீந்திரன் சண்முகதாஸ் பகிர்ந்து கொண்ட விடயங்கள்:

எமது சமூகத்தை பின்வருமாறு வகைப்படுத்தலாம். அதாவது, சிறுவர்கள் (ஆரம்பகாலக் குழந்தைப் பருவம், ஆரம்பப் பள்ளி அதாவது தரம் 5-ற்கு முன், தரம் 6-இலிருந்து 8, தரம் 9-இலிருந்து 11, உயர்தரம் பயிலும் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வேலை அல்லது பயிற்சிகளுக்குச் செல்பவர்கள்), திருமணமானவர்கள் (புதிதாக திருமணமானவர்கள் மற்றும் குழந்தைகள் உள்ள பெற்றோர்) என்று வகைப்படுத்தலாம். விசேடமாக நடுத்தர வயதுடையவர்கள் முக்கியமானவர்கள். ஏனெனில் அவர்கள் தமது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பராமரிக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளவர்கள். அதிலும் சமூகத்திலும் சிறியோரை வெளிப்படுத்தும் பொறுப்பிலும் உள்ளவர்கள். அதை நடுத்தர வயது நெருக்கடி (middle aged crisis) என்பர். அதுவும் கவனத்தில் கொள்ளவேண்டிய வயதுப் பராயம். அடுத்ததாக வயதானவர்கள். இறக்கும் தருவாயில் உள்ளவர்கள். அல்லது 60வயதைத் தாண்டியவர்கள்.

## மாற்றமடையும் உலகில் இளைஞர்களும் மன ஆரோக்கியமும்:

இதில் பாடசாலை பருவத்திற்கு உட்பட்ட, பல்கலைக்கழகத்திற்கு செல்லும் 25 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் அதாவது இளம் வயதினர் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் அனுபவிக்கும் உளசமூகப் பிரச்சினைகள் பெருவாரியாக இருக்கிறது. ஏனெனில் தமது உளசமூக பிரச்சினைகளுக்கு யாரை அணுகுவது என்று தெரியாமல் உள்ளனர், அதேபோல் சமூகத்தால் இகழப்படும் என்ற காரணங்களால் தமது பிரச்சினைகளைச் சொல்லக் கூச்சப்பட்டு மறுத்தல், இதனால் தமக்கு தெரிந்த முறையில் இப்பிரச்சினைகளைக் கையாள முனைதல், அது முடியாத சந்தர்ப்பத்தில் தற்கொலை போன்ற முடிவுகளை எடுத்தல் அல்லது போதைப்பொருள் மதுபாவனை போன்றவற்றுக்கு அடிமையாதல், சரியான முடிவுகளை எடுப்பதில் தயக்கம். உதாரணமாக இருநபர்களுக்கு இடையில் வரும் உறவுச்சிக்கல் அதாவது இருவரும் இணைந்து தொடர்ந்து வாழமுடியாது என்று தெரிந்தும் எவ்வாறு விலகுவது? அதிலுள்ள தயக்கம்; அவ்வாறு விலகுவது என்பது ஒரு பாவச் செயல் எனக்கருதி மோசமான ஒரு நிலையில் வாழ்க்கையைத் தொடர்வது போன்ற உளநலச் சிக்கல்கள் காணப்படுகிறது. படித்தவர்களாக இருந்தாலும் அதை எவ்வாறு தீர்ப்பது? என்ற அறியாமை. ஏனெனில் இவ்வகையான முரண்பாடுகளைத் தீர்த்தல் சம்பந்தமாக சிறுவயதில் கற்றுக் கொடுக்காததால் இவ்விடயங்கள் பாடப்பரப்பில் சேர்க்கப்படாததால் அல்லது பாடப்பரப்பில் சேர்க்கப்பட்டிருந்தாலும் சரியாகப் படிப்பிக்க பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்கள் இல்லாததால் இந்த பிரச்சினைகள் இவர்களுக்குள் ஏற்படுகிறது.

ஒன்று, நிதியை எவ்வாறு கையாள்வது?, சாதாரணமாக எமக்கு ஏற்படும் உளசமூகப் பிரச்சினைகளை எப்படி பகுப்பாய்வு செய்வது? என்பவற்றை உள்ளடக்காது விஞ்ஞானம், கணிதம் போன்றவைகளை மட்டும் முக்கிய பாடங்களாகப் படிப்பித்தல் இலங்கையின் கல்விக் கொள்கையில் உள்ள பெரிய குறைபாடு ஆகும்.

## பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல்:

- பாடசாலையில் உள்ள பிரச்சினையை ஆலோசக ஆசிரியர் கையாண்டாலும் உளசமூகப் பிரச்சினைகள் பாடசாலையில் மட்டுமன்றி வீட்டில், வெளியில், வீதியில், விளையாட்டுத்திடலில், சமூகத்தில் இருக்கின்றன. பாடசாலையில் சமூக சேவகர் என்ற பதவி வேறு பல நாடுகளில் உள்ளது போல் இலங்கையிலும் உருவாக்கப்படவேண்டும். தற்போதுள்ள நிதி நெருக்கடி நிலை காரணமாக இது சாத்தியப்படவில்லை. இருந்த போதிலும் தற்போது அதிக எண்ணிக்கையில் பாடசாலைப் பணியில் அமர்ந்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இது சார்ந்த பயிற்சிகளை வழங்கி இப்பொறுப்பில் அமர்த்தலாம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தேசிய நிறுவனங்களில் முறையாக சமூக பணியில் பட்டம் பெற்ற பட்டதாரிகளை இப்பொறுப்பில் அமர்த்தலாம்.
- திருமணம் செய்த பின்னர் ஏற்படும் குடும்ப வன்முறை, இதனால் குடும்பமாக தற்கொலையில் ஈடுபடல், உதாரணமாக தாய் தனது குழந்தைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்தல், ஆற்றில் குதித்தல் போன்றன காணப்படுகின்றன. மாவட்ட செயலகத்தில் பணிபுரிகின்ற மகளிர் மேம்பாட்டு அதிகாரிகள், சமுர்த்தி அதிகாரிகள், சிறுவர் மேம்பாட்டு அதிகாரிகள் வினைத்திறனாகக் களத்தில் சேவையாற்றுவதை உளசமூகப் பயிற்சி பெற்ற கண்காணிப்பாளர்கள் அல்லது மருத்துவ மனநல ஆலோசகர் உறுதிசெய்தல். இதன் மூலம் சமூகத்தில் ஏற்படும் குறைபாடுகளைக் குறைக்கலாம்.
- மது மற்றும் போதைக்கு அடிமையாகி உள்ளானவர்களுக்காக இலங்கை உள ஆரோக்கிய கொள்கையின்படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மதுவிலக்கு மறுவாழ்வு மையம் இருந்தபோதிலும் ஊழியர் பற்றாக்குறை காணப்படுகிறது. குறைந்தது 3 கிழமைகளாவது மது மற்றும் போதைக்கு அடிமையானவர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற வேண்டும். மற்றும் அவர்கள் குடும்பத்தவர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கும் பதின்மவயதில் உள்ள இவர்களின் பிள்ளைகளுக்கும் வெவ்வேறான ஆலோசனைப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலமே பூரண குணமடைந்து இதிலிருந்து வெளிவர முயற்சி செய்வதுடன் குடும்பமும் இவ்வாறான சிகிச்சைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும். இது முழுமையான சிகிச்சையாக இருக்க வேண்டும். உதாரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மதுவிலக்கு மறுவாழ்வு மையம், 'குருந்தம்' என்ற பெயருடன் தொழிற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஊழியர் பற்றாக்குறை இருந்த போதிலும் நாளொன்றுக்கு ஏழு நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர்.
- ஒவ்வொரு பெரிய வைத்தியசாலையிலும் உளசமூக ஆலோசனைச் சேவைக்காக தனி இடம் ஒதுக்கப்படவேண்டும். வைத்தியசாலைக்கு வரும் ஐம்பது வீதமானவர்கள் தமது உளசமூக பிரச்சினைகளுக்காகவே வருகின்றனர். பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களும் இதை பற்றி

கதைத்துள்ளதோடு இதை பற்றி எழுதியும் உள்ளார். இவர்களுக்கு தளர்வு பயிற்சிகள் வழங்கி மசாஜ் செய்து அவர்கள் சொல்வதைக் கவனமாகச் செவிமடுத்து அவர்களை ஆசுவாசப்படுத்தல் வேண்டும். இதற்கு நீண்ட காலப் பயிற்சிகள் தேவைப்படுவதில்லை. வெளி நோயாளர் பிரிவிற்கு வருபவர்களை வைத்தியர் இனங்கண்டு இவை தேவைப்படுவதாக உணர்ந்தால் இப்பிரிவிற்கு அனுப்பிவைப்பார்.

- பாடசாலையிலிருந்து இடைவிலகி அல்லது வெளியேறியவர்களுக்கு வாய்ப்புகள் குறைவாக காணப்படுகிறது. இதனால் இவர்கள் சக்தியை சமூக விரோத நடவடிக்கைகளில் செலவிடுகின்றனர்; இல்லாவிடில் பல இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். அரசாங்கம் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும் உதாரணமாக வவுனியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பயிர் செய்யக்கூடிய பல நிலங்கள் காணப்படுகிறது. அரசாங்கம், விவசாய திணைக்களத்தின் உதவியுடன் அவர்களுக்கு நிதி வழங்கி விலங்கு வேளாண்மை, பயிரிடுதல் போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இவ்விளைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும்.
- தரம் 9-12-ல் பாலியல் கல்வி சம்பந்தமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதை கற்றுக்கொடுப்பதுடன் அதன் சார்பாகப் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும். இதனால் மாணவர்கள் ஆர்வமாகப் படிப்பதோடு மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் அதிகம் ஈடுபடுவர். ஆசிரியர்களுக்கும் இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு வலயக்கல்வி அலுவலகங்களும் தொடர்ச்சியாக இச்செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டும்.

### பெற்றோர்களும் மன ஆரோக்கியமும்:

பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குத் துணையாக இருப்பதோடு பிள்ளைகளின் நடத்தைவாதமுறைகளை அறிந்து, புரிந்து நடந்து கொள்பவர்களாக இருக்கவேண்டும். அதேசமயம் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். சாப்பிடுதல், கல்வி கற்றல் என்பவற்றைத் தவிர ஒரு பெற்றோராக நான் எவ்வாறு இருக்கப் போகிறேன்?, நான் சரியான முறையில் இருக்கிறேனா?, பிள்ளைகளின் முன்னிலையில் பெற்றோர் இருவரும் சரியான கணவன் மனைவியாக இருக்கின்றார்களா? அல்லது வன்முறையில் ஈடுபடுகின்றார்களா? என்பனவும் குழந்தை வளர்ப்பு முறைக்குள் உள்வாங்கப்படுகிறது.

இதற்காக மனநல மருத்துவர்கள், மருத்துவ உளவியலாளர்கள், ஆலோசகர்கள், நாடக வல்லுநர், பால்நிலை நிபுணர் போன்ற குழுவினர் இணைந்து 'மனோகரி' என்ற 25 பிரிவுகள் கொண்ட கையேடு ஒன்றினைத் தயாரித்தனர். ஒவ்வொன்றும் 1 - 2 மணித்தியாலங்கள் கொண்டது. இவை எவ்வாறு உணர்வுகளைக் கையாளுதல், சிறந்த பெற்றோராக இருத்தல் பற்றி ஆழமாக விளக்கியுள்ளது. இதனை பாடசாலையிலும், சமூகத்திலும் பெற்றோர்களுக்கும் அறிமுகம் செய்தல் நன்று.

### பாடசாலை சமூகமும் மன ஆரோக்கியமும்:

இன்னொரு தரப்பினர், முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கு தெரிந்தவற்றை கற்றுக்கொடுப்பதுடன் சிறுவர்களின் உளநிலையைப் புரிந்துகொள்வதில்லை. சிறுவர்கள் தவறு செய்யும் போது எவ்வாறு அணுகுவது?, சிறுவர்களை எவ்வாறு மதிப்பிடல்? போன்றவை பற்றி குறைவாகப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நல்ல காத்திரமான பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். அரச கல்வி நிர்வாக அமைப்பிற்குள் உள்வாங்கப்படாவிட்டாலும் அவர்களின் பங்கு சிறுவர்களின் வளர்ச்சியில் இன்றியமையாதது. அவர்களுக்கு பயிற்சி கொடுத்து மருத்துவ உளவியலாளரின் கண்காணிப்பில் அல்லது மாவட்ட இணைப்பாளரின் கண்காணிப்பில் அவர்களை விடுவது நல்லது.

பாடசாலை மாணவர்களை எடுத்துக்கொண்டால் விளையாட்டுப் போட்டிகளில் நல்ல திறமையாகச் செயற்படுபவர்களையே ஆசிரியர்கள் தெரிவு செய்கின்றனர். பெரும்பாலான பாடசாலைகளில் மற்ற மாணவர்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சி போன்றவை அற்றே உள்ளனர். ஆனால் விளையாட்டு என்பது அனைவருக்குமானதாக இருக்க வேண்டும். எல்லா மாணவர்களும் விளையாட்டு திடலில் விளையாடி ஏதாவதொரு விளையாட்டில் ஈடுபடுவதை விளையாட்டு ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இதை கொள்கையிலும் கொண்டு வர வேண்டும்.

பாடசாலை சிற்றுண்டிசாலைகளில் சுகாதார திணைக்களம் சிற்றுண்டிச்சாலை கொள்கையைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதில் 15 உணவுக்கானச் செய்முறை உள்ளது. ஆனால் உப்பு மற்றும் கொழுப்பு கூடிய உணவுகள் சீனி கூடிய மென்பானங்கள் விற்கப்படுகின்றன. பழவகைகளை கொடுப்பது இல்லை. கல்வி திணைக்களம் இதை கண்காணிக்க வேண்டும். இவை சரியாக இருந்தால் மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேறும்போது இதே வகையான உணவு கட்டுப்பாட்டைப் பேணுவர். இதனைச் சரியாகப் பேணினால் உடல் பருமன் மற்றும் தொற்றாத நோய்கள் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். ஆனால் இதற்கு நேர்மாறானதாக வைத்தியர்கள் தற்போது உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு கொழுப்பு நிறைந்த கல்லீரல் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

தரம் 5-இன் பிறகு மாணவர்கள் ஏதாவது இசைக்கருவிகள் (மிருதங்கம், நரம்பிசைக்கருவிகள், காற்று வாத்தியங்கள்) கற்றுக்கொள்ள வேண்டும். இவை மனதிற்கு ஆறுதலையும் அமைதியையும் சந்தோஷத்தையும் கொடுக்கும். இந்த உணர்வுகள் நீண்ட காலத்திற்கு மனதில் நீடிக்கும். இதை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும்.

### பணியிடங்களில் மன ஆரோக்கியம் – 2024 இவ்வாண்டின் உலக உளநலன் தினத்தின் தொனிப் பொருள்:

எந்தத் துறையாக இருந்தாலும் உளநலப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். தபால் திணைக்களம், தொலைத்தொடர்பு திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், கல்வித் திணைக்களம், விவசாய மற்றும் மீன்பிடி திணைக்களம் என்பவற்றில் எதுவாக இருப்பினும் ஊழியர்களுக்கு ஒரு ஒழுங்கு முறையில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை எனினும் உளநலப் பயிற்சி கொடுப்பது அவசியம் ஆகும். பிராந்தியச் சுகாதார சேவை

கள் அமைப்பிலுள்ள உளநல அலகின் ஊடாக வளப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்து இது ஒழுங்கமைக்கப்படவேண் டும். இதில் மனோகரி என்ற உளநலக் கையேட்டை பயன்ப டுத்தலாம்.

இளம் பருவத்தினரின் உள நலம் கவனத்தில் கொள்ளவேண் டிய விடயமாகும். கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்க ளப்பில் அதிகத் தற்கொலைகள், அதிக போதைப்பொருள் பாவனை, பெண்களுக்கெதிரான வன்முறை, பாடசாலை இடைவிலகல், மற்றும் பதின்மவயது கர்ப்பம் என்பவற்றை அவதானிக்க கூடியதாக உள்ளது. இவ்வாறான பிரச்சினை களை எவ்வாறு கையாள்வது? சமூகத்தை எவ்வாறு மேம்ப டுத்துவது? என்பது தொடர்பாக வலய மற்றும் மாகாண கல் வித் திணைக்களத்தின் ஊடாக ஆசிரியர்களுக்கு வாழ்க் கைத்திறன் பயிற்சிகள், விவசாய இரசாயன துறையில் பணி புரிபவர்களுக்கு இரசாயனங்களை கொள்வனவு செய்ய வரு பவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கான மற்றும் கொள்வனவு செய்வதற்கான நோக்கங்களை சரியாக அடை யாளம் காண்பதற்கான பயிற்சிகள், பாலியல் சுகாதாரம் மற் றும் உளநலம் தொடர்பாகச் சுகாதார அமைச்சு மற்றும் பொது சுகாதார ஆய்வகம் ஊடாக நிறுவனங்களுக்கு வழங் கப்படும் பயிற்சிகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைப்பினூடாக நிகழ்வுகள் போன்ற செயற்பாடுகள் முதலானவற்றை முன்னெடுப்பதாக 20 வரு டங்களுக்கு மேலாக மனநலத்துறையில் பணியாற்றுகின்ற மனநல மருத்துவரும், கல்லடி மட்டக்களப்பு சுகாதார திணைக்களத்தின் பிராந்திய இயக்குநருமான டான் சௌந்த- ரராஜா அவர்கள் தெரிவித்தார்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் மட்டக் களப்பில் வீட்டிலுள்ள பெண் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பும் தன்மை அதிகமாக உள்ளதால் ஆண்களிடம் தங்கி வாழ்ந்த பெண்களுக்கு பணியகத்தில் பணியாற்றுவது மிகவும் சிரமமாக உள்ளது. தமது பிள்ளைகளுக்கான பாட சாலை உபகரணங்கள் மற்றும் ஒருவேளை சாப்பாட்டைக்கூட போதுமானதாக வழங்க முடியாமையாலும் மற்றும் பிள்ளைக ளைப் பாடசாலைக்கோ அல்லது தனியார் வகுப்புகளுக்கோ பணச் சிக்கலால் அனுப்ப இயலாத நிலமையாலும் பெற் றோர்கள் குற்ற உணர்வுகளால் மனநலம் பாதிக்கப்படுகின்ற னர்.

யுத்தத்தின் போது எவ்வாறான மனநிலை இருந்ததோ அவ் வாறே தற்போதும் மனநிலை உள்ளது. இவ்வாறான நிலை யில் ஏற்படுகின்ற குடும்பக்கஷ்டம் மற்றும் நுண்கடன் பிரச்சி னைகள் (நாள் மற்றும் கிழமை வட்டிக்கான கடன்) மேலும் அதிகரித்துள்ளது. உதாரணமாக முன்பு தீபாவளி மற்றும் களியாட்ட நிகழ்வுகளுக்கு ரூபா 1000, ரூபா 2000-இல் புடை வையைக் கொள்வனவு செய்த குடும்பம் தற்போது ரூபா 750- களுக்கே ஈடு கொடுக்க கூடியதாக உள்ளது. அத்தோடு தமது நகைகளை அடகு வைத்தே வாழ்வாதாரத்தை நடத்த முடிகிறது. ஆண்கள் போதைவஸ்து மற்றும் வெற்றிலைப் பாவனைக்கு அடிமையானதுடன் பெண்கள் குடும்ப வன்மு றைக்கு ஆளாகின்றனர். மேலும் தற்போது வெளிநாட்டுக்குச் செல்லும் மோகம் அதிகரித்துள்ளதுடன் ருமேனியா போன்ற நாடுகளுக்கு வேலைக்காக பிள்ளைகள் அனுப்பப்படுகின்ற னர். இதனால் குடும்ப வன்முறை அதிகரிக்கிறது. பெண்க ளும் வேலைக்கு வெளியே போவதால் வீட்டிலுள்ள சிறுவர் கள் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர்.

பெண்களுக்கான பாலியல் தொந்தரவுகளும் அதிகரித்துள் ளன. சமூக வலைத்தளங்கள் மற்றும் செயலிகள் ஊடாக பாலியல் ரீதியான கருத்துக்களை இட்டு தொந்தரவு செய்தல் நாளாந்தம் நடந்தேறுகின்றன. உதாரணமாக இரு பெண்கள் நடனமாடிச் சமூக வலைதள செயலியில் பதிவிட்டிருந்தால் அவர்களைக் கொச்சையாக வர்ணித்து கருத்திடுவதன் மூலம் அவர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் மன உளைச்சலுக்குள்ளாகி தற்கொலைக்குத் தூண்டப்படுகின்ற னர். அதிலும் அரசியலிலுள்ள பெண்கள் இவ்வாறான தாக்கு தல்களுக்குள்ளாகின்றனர். இந்த காலத்தில் பெண்களுக்கு சம உரிமை இருக்கிறது என்ற பேச்சுக்கள் இருந்த போதிலும் பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறையால் இன்றும் பெண்கள் பாதிப்படைகின்றனர்.

ஆசிரியர்களும் பாரிய வேலைப்பளு காரணமாக வீடுகளுக் கும் வந்து பாடக்குறிப்பு மற்றும் ஒப்படைகள் போன்ற வேலை களைச் செய்வதால் பாரிய மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ளனர். வயது முதிந்தவர்களும் அவர்களைப் பராமரிக்க யாருமின்றி தனிமையிலும் நோய்ப்பீடிப்பாலும் அவதியுறுகின் றனர். முந்தைய காலத்தில் பத்தில் நான்கு அல்லது ஐவர் மனநல பாதிக்குட்பட்டவர்கள் என்று எடுத்துக்கொண்டால் தற்போது பத்தில் எழுவர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மட்டக்களப்பு மாவட்டப் பெண்கள் அதிகாரசபைப் பொருளா ளரும் பெண்களுக்கெதிரான வன்முறை மற்றும் உளசமூகவி யல் அமைப்பின் உறுப்பினரும் சமூகத்தில் 20 வருடங்க ளுக்கு மேலாக பெண்கள் மேம்பாடு தொடர்பாக கள அனுப வம் கொண்ட சர்மிளா வசந்தராஜா பகிர்ந்து கொண்டார்.

தேசிய மனநல நிறுவனத்தின் முன்னாள் நிறுவுநரும் இயக்குந ருமான ஆலோசகர் மனநல மருத்துவர் டாக்டர் ஜெயன் மெண்டிஸ் இம்மாதம் டெய்லி மிரருக்கு கொடுத்த செவ்வி யில், மனச்சோர்வினால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுடன் தங்கள் சிரமங்களைப் பற்றி கலந்து ரையாடவேண்டும் அல்லது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலைகளில் அனைத்து முக்கிய மருத்துவமனைகளிலும் சேவை பெறக்கூடிய சிறுவர் கிளினிக்கிற்கும் செல்லுமாறு அறிவுறுத்தினார். மனநலம் பற்றிய களங்கம் குறைய வேண் டும். பதின்மவயதினர் தங்களுடைய உணர்ச்சிகள் மற்றும் கஷ்டங்களைப் பற்றி பேசுவதற்கு வசதியாக ஒரு பாதுகாப் பான இடத்தை உருவாக்குவது அவசியம் எனவும் கூறியுள் ளார்.

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் மனச்சோர்வு அல்லது தற்கொலை எண்ணங்களை அனுபவித்தால், தயவு செய்து தேசிய மனநல நிறுவனம்: +94112682535/ 0112692909/ 0112696666-ஐ தொடர்பு கொள்ளவும்.

வினைத்திறனான ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெ ழுப்புவதற்கு உளநலன் தவிர்க்கப்பட முடியாததாகும்!



shageetha.balachandran@thaiveedu.com



# மாற்றுத்திறனாளிகளை அரவணைப்போம்

– சி. நற்குணலிங்கம்

உலக சனத்தொகையில் சுமார் 15 வீதமானவர்கள் ஏதோ ஒருவகையில் உள அல்லது உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட வர்களாகக் காணப்படுகிறார்கள் என மதிப்பீடுகள் கூறுகின் றன. சமூகத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் இவர்க ளுக்கு தடைகள் கணப்படுகின்றன. இவர்கள் எதிர்நோக்கும் இடையூறுகளாக வாழும் இடத்தின் தன்மைகள், அவர்கள் ஏனையவர்களுடன் ஏற்படுத்தும் தொடர்பாடல்கள், சில நாடு களின் சட்டதிட்டங்கள், சமூகத்தின் மனோபாவம், பாரபட்சம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதன் பெறுபேறு யாதெனில் வேலைவாய்ப்பு, உடல் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரக் கவ னிப்பு, போக்குவரத்து, அரசியல், நீதிநிலை ஆகியவற்றில் பாரபட்சப்படுத்தப்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இத்த டைகள் நீக்கப்பட்டு முழுமையாக இவர்கள் சமுதாயத்துடன் இணைக்கப்பட்டு இவர்களது திறமைகள் வெளிக்கொணரப்ப டவேண்டும். இவர்களை உலகத்தின் பங்காளர்களாக மாற்று வதனால்ற்றான் இவர்களுடன் சேர்ந்து சமூகமும் நாடும் வளர்ச்சி காணும். எமக்கு அல்லது எமது குடும்பத்தில் ஒருவ ருக்கு இந்நிலை ஏற்படுமாயின் வாழ்நாள் முழுவதும் இன் னொருவரில் தங்கியிருக்க நேரிடும். இந்நிலையினை மாற்றி அறிவுபூர்வமாகச் சிந்தித்தால் இன்றைய உலக வளர்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் என்று சொல்வதற்கு யார் இருப்பர்.

1981-ம் ஆண்டை உலக மாற்றுத்திறனாளிகள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் அவை பிரகடனம் செய்துள்ளது. உலக நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் மாற்றுத்திறன் உள்ள மக் களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதற்கு வழிவ கைகளை செய்ய வேண்டும் என்று ஐ.நா. சபை வேண்டு கோள் விடுத்தது. இதற்கென 1983 முதல் 1992 வரையுள்ள ஒரு தசாப்த காலத்தை மாற்றுத்திறனாளிகளின் விருத்திச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கி ஐ.நா.சபை பணிகளைச் செய் தது. இந்த தசாப்தம் முடிவுக்கு வரவிருக்கும் நிலையில் 1992-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ம் திகதி அன்று ஐ.நா. பொதுச்சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய டிசம்பர் மாதம் மூன்றாம் திகதியை சர்வதேச மாற்றுத்திறனா ளிகள் நாளாக பிரகடனம் செய்தது.

உலக மக்கள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சி னைகளைப் புரிந்துகொள்வதுடன் அவர்களுக்கு மேன்மை யும் உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கில் இந்நாள் அனுசரிக்கப்படுகின்றது. பொதுவாக இந்நாளில் தன்னார்வலர்கள் பல முன்னெடுப்புகளைச் செய்கின்றனர். பல நாடுகள், அரசநிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகளின் நிலையை உயர்த்துவதற்கான செயற்திட்டங்களைத் தீட்டி அவர்களின் முயற்சிகளுக்கு உறுதுணை புரிகின்றன. அத்துடன் மாற்றுத் திறனாளிகளின் நிலை உயர சிறப்புக் கருத்தரங்குகள், பயிற் சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், பிரச்சாரங்கள், ஊட கங்கள் வழியாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என சமூகத் தில் சமஉரிமைகளுடன் ஒவ்வொரு துறையிலும் இவர்கள் சிறந்து விளங்க முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இவர்கள் வாழ்க்கையில் எல்லோரையும் போல உரிமைகள் அனைத்தையும் பெறவைப்பது ஒரு சமு தாயக் கடமையாகும். ஆனால் எல்லா இடங்களிலும் இவர் கள் முறையாக அணுகப்படுவதில்லை. இது வேதனைக்கு ரிய விடயமாகும். உலகில் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகள் ஏனைய மனிதர்களைப்போல் சகல உரிமைகளும் பெற்று கௌரவமாக வாழவேண்டும் என்ற உயரிய நோக்கோடு ஐ.நா.சபை 1975-ம் ஆண்டு இவர்களுக்கான உரிமைகளைப் பிரகடனம் செய்தது. உலகில் வாழ்கின்ற அனைத்து மாற்றுத் திறனாளிகளும் இவ்வுரிமைகளுக்கு உரித்துடையவர்கள்.

ஆரம்பத்தில் ஐ.நா.-வின் பிரகடனத்தில் இத்தினத்தை INTERNATIONAL DAYA OF DISABLE PERSON என்றே குறிப் பிட்டிருந்தது. எனினும் இது 2007 டிசம்பர் 18-ம் திகதியன்று INTERNATIONAL DAY OF PERSONS WITH DISABILITIES என மாற்றப்பட்டது. ஏனெனில் அறிவியல் வளர்ச்சி காரண மாக மக்களின் வாழ்க்கை தரமும், வாழ்வின் துணைக் கருவி களும் முன்னேற்றம் பெற்றன. இதனால் இந்நிலையில் உள்ள மக்களும் ஏனையவர்களைப்போல சகல விடயங்களையும் செய்யக்கூடிய நிலைக்கு வந்தமையாகும். DISABLE என்ற பதம் நிரந்தரமாக இயலாத்தன்மையை குறிப்பதாகும். ஆனால் இது வெல்லப்படக்கூடிய ஒன்று என உணரப்பட்டபோது இந் தப் பதத்தை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. DISABILITY என்பது குறிப்பிட்டசில விடயங்களை செய்வதற்கு பயிற் சியின்மை என்ற கருத்தை ஏற்படுத்தியது. விசேடதேவையு டையோர், மாற்றுத்திறனாளிகள், வலுவளரினர் போன்ற பதங் களைப் பயன்படுத்துவது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள்

இன்றும் இடம்பெற்றுவருகின்றன.

பதங்கள் பொருத்தமாக இடப்பட்டாலும் அவர்களுக்கான வசதி, வாய்ப்புகள் முழுமையாக கிடைக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. இணையத்தளங்களை வடிவமைக்கும் போது வலுவளரினரும் அணுகும்விதத்தில் W3C (WORLD WIDE WEB CONSORTIUM) வகுத்துள்ள வழிமுறைகளை பின்பற்றி அமைக்கவேண்டும். வலுவளரினர் உரிமைச்சட்டம், ஐ.நா.-வின் மாற்றுத்திறனாளிகள் உடன்படிக்கையில், சாலைகளில் ஆடியோசிக்னல் வைக்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான பகுதிகளில் அவை உள்ளனவா? பொது இடங்களில் எங்கும் பிரெய்ல் முறையில் அறிவிப்பு பலகைகள் எழுதப்பட்டுள்ளதா? விதிவிலக்காக சில இடங்களில் இருந்தாலும் அவை எங்கு இருக்கிறது என்பது தெரியாதுள்ளது. என்னமாதிரியான உடல் குறைபாட்டிற்கு என்ன தேவை இருக்கிறது என்பதும் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. புத்தகங்கள், இணையசேவைகள் SEREEN READING வடிவில் எங்கும் இருக்கின்றதா? எழுத்துருக்கள் யூனிக்கோட்டில் முழுமையாக இருக்கவேண்டும். ஆடியோ வடிவிலும் எல்லாவற்றையும் உருவாக்கவேண்டும். மேலும் தேர்வுகளின்போது கணினியிலேயே தேர்வெழுதும் விதத்தில் SCREEN READING மென்பொருள் இருக்க வேண்டும். ஏனெனில் கண்பார்வை குறைந்த மாற்றுத்திறனாளிகள் தேர்வு எழுதுவதற்காக ஏற்பாடு செய்த ஸ்க்ரைப்புக்கு திடீரென வரமுடியாத சூழல் ஏற்படலாம். மேலும் கடைகள் மற்றும் காரியாலயங்களுக்கு இவர்கள் உட்செல்ல முடியாதுள்ளது. எனவே கட்டடத்திற்கு உரிமம் அளிக்கும்போது மாற்றுத்திறனாளிகள் அதனை அணுகும் விதத்தில் இருக்கிறதா என்பதைப் பார்த்து அளிக்கவேண்டும். இந்த விஷயத்தில் எந்த அளவுக்கு சமூகம் முதிர்ச்சி அடைந்திருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும்.

வங்கிக்கணக்கு தொடங்குதல், ஏ.ரி.எம் காட் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளை பார்வை குன்றிய மாற்றுத்திறனாளிகளால் முழுமையாக பெறமுடியாத சூழலே காணப்படுகின்றது. மாற்றுத்திறனாளிகளும் உயர்ந்த வாழ்க்கையைப் பெறவேண்டும் என்பது நம் எண்ணம். அவர்களும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் வாழும் அத்தனை உரிமைகளையும் பெற்றவர்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு சமவாய்ப்புகளையும் அவர்களின் நலவாழ்வுக்கான உரிமையும் வழங்கவேண்டும். மாற்றுத் திறனாளிகள் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ வேண்டும், அரசியல்ரீதியாகவும் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரரீதியாகவும் அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு இடத்திலும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பது முக்கியமான ஒன்று. இந்த நாளில் அவர்களின் நலன் மதிக்கப்படவேண்டும்.

இவர்கள்மீது நாம் எவ்வளவு விழிப்புணர்வு கொள்கிறோமோ அந்தளவுக்கு இவர்களிடத்தில் நாம் மாற்றத்தையும் காண வேண்டும். இவர்கள் மாற்றுத்திறனாளிகளா? அல்ல. இவர்கள் நம்பிக்கையோடு வாழும் மாற்றும் திறனாளிகள். உலகை மாற்றமடைய செய்யும் திறனாளிகள். ஒவ்வொரு வருடமும் இவர்களுக்கான நாள் கொண்டாடப்படும்போதும் அந்த ஆண்டுக்கான கருப்பொருளும் வெளியிடப்படும். அந்தவகையில் 2022-ம் ஆண்டுக்கான கருப்பொருளாக ‘அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய தீர்வுகள், அணுகக்கூடிய மற்றும் சமமான உலகத்தைப் படைப்பதில் புதுமையின் பங்கு’ என்பதே ஆகும். 2023-ம் ஆண்டுக்கான கருப்பொருள் ‘நீடித்த வளர்ச்சியை மற்றும் இலக்குகளை அடைய மாற்றுத்திறனாளிகள் மக்களுடன் இணைந்து அவர்களுடன் செயலாற்றி அதை அடையவேண்டும்’ என்பதாகும். 2024-ம் ஆண்டுக்கான கருப்பொருள்: எல்லோரையும் உள்ளடக்கிய உறுதியான எதிர்காலத்துக்காக மாற்றுத்திறனாளிகளின் தலைமைத்துவப் பண்பை வளர்த்தல் என்பதாகும்.

மாற்றுத்திறனாளிகள் மாறுபட்ட திறமைகொண்டு நவீன காலத்தில் மறுரூபம் எடுத்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தடைகளை உடைத்து தங்கள் தடங்களைப் பதித்துவருகிறார்கள். எடுத்துவைக்கும் காலடிகள் இமாலய சாதனைகளை நோக்கியே இருக்கின்றது. இவர்களும் மகத்துவமுள்ள சாதனையாளர்களே. எடுத்துக்காட்டாக இளம் வயதில் ஏற்பட்ட மர்மக் காய்ச்சலால் பார்வை, பேச்சு, கேட்கும் திறன் அனைத்தையும் இழந்தவர் ஹெலன்கெல்லர். பேச்சு மற்றும் கேட்கும்திறன் இழந்தவர்களில் முதன்முதல் இளங்கலைப் பட்டம் பெற்றவர் இவர்தான். இவர் பிறந்த தினமான யூன் 27 அமெரிக்காவில் ஹெலன்கெல்லர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்டீபன்ஹாகிங் 1942-ல் பிறந்த இவர் 21-வது வயதில் தசையூட்டமற்ற பக்கமரபு நோயால் - நரம்பணுக்களின் குறைபாட்டால் தசைகள் ஊட்டம் பெறாமல் உடல் குறைவுறும் நோயால் பாதிக்கப்பட்ட இவருக்கு கை, கால்கள் முழுமையாகச் செயலிழந்தன. சார்பியல் மற்றும் குவாண்டம் ஈர்ப்பில் அரிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர். வேற்று கிரகவாசிகளைப்பற்றிய ஆராய்சிகளைச் செய்தவர். கேட்கும்திறனை முழுமையாக இழந்திருந்த பீத்தோவன் இசை உலகின் பிதாமகனாய் கருதப்பட்டார். அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மர்லா ருன்யான் பார்வையற்றவர். மாற்றுத்திறனாளிகளுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் மூன்றுமுறை உலக சாம்பியன் பட்டம் வென்றவர். இவர்கள் மட்டுமல்ல இவர்களைப்போல் பலரும் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியுள்ளனர். மாற்றிவருகின்றனர்.

அவர்களின் மனநிலையைப் பாருங்கள், ஒரு கை போனால் மறுகை உண்டு, மறுகையும் போனால்த்தான் என்ன? இன்னும் ஒரு கை உண்டு. அது உறுதியான கை, உற்சாகத்தின் கை, அது நாம் நம்பும் கை, அதுதான் நம்பிக்கை. நம்பிக்கையுடன்தான் அவர்கள் சாதிக்கிறார்கள், சாதித்துக்கொண்டிருக்கிறார்கள். சாதாரண கண்ணால் பார்த்தால் அவர்கள் குறை உடையவர்கள், மாற்றுத்திறனாளிகள். சற்று உற்றுப் பார்த்தால் இவர்கள் சமூகத்தின் உறுதியான சிற்பங்கள். அவர்களை முதுகில் தட்டி முன்னேறுங்கள் என்று ஊக்கிவிப்போம். கண்பார்வையற்றோருக்கு விழிகளாய் இருப்போம். காது கேளாதோருக்கு செவிகளாய் இருப்போம். மொத்தத்தில் உதாசீனப்படுத்தாமல் உற்சாகப்படுத்தி அரவணைப்போம்.



natkunalingam@thaiveedu.com



# கற்றலும் நினைவாற்றலும்

– அகமட் பிஸ்தாமி

வகுப்பறைச் சுவர்களுக்கிடையே... சற்று நோட்டமிட்டுப் பார்த்தால் சகலரதும் நன்மதிப்பைப் பெறக்கூடிய நிலையில் மிகச்சிறந்த நினைவாற்றல் உள்ள மாணவர்கள் இருக்க, நினைவாற்றல் இழப்பால் அவதிப்படுவோர், பலரதும் அவப் பெயரையும் விமர்சனத்தையும் அவமானத்தையும் முகச் சுளிப்பையும் சுமந்து கொண்டுதான் அன்றாடப் பாடசாலைச் செயற்பாடுகளைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர் என்பது வருந்தத்தக்க விடயம்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர்களது நடத்தையி லும் வாழ்விலும் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் கல்விப் புலத்தில் கல்வியலாளர்கள் முன்வைக் கின்ற வாதமாக இருக்கின்றது. மாணவர்களிலேயே கற்கின்ற விடயங்களை மையமாக வைத்து நினைவாற்றல் சார்ந்தும் நடத்தை சார்ந்தும் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடு மிகப்பெரிய ஒரு தொடர் பொறிமுறை(Mechanism of change). மாற்றப் பொறிமுறை அல்லது மாற்றத்தின் பொறி முறை என இதனை அழைக்கலாம்.

கல்வியியலாளரும் உளவியலாளருமான Robert Siegler (1998)-ன் அவதானிப்பின்படி பிள்ளைகளது அறிகை சார்ந்த (cognitive skills development) விருத்தியிலே கூட்டாகத் தாக் கம் (together or collectively) செலுத்துகின்ற மூன்று விடயங் கள் காணப்படுகின்றன. Three mechanism work together to create change in children's cognitive skills according automaticity and strategy construction. வகுப்பறை கற்றக் கற்பித்தல் செயற்பாடுகளாகட்டும், சுய கற்றல் செயற்பாடுக ளாகட்டும், சிந்தனை சார்ந்த செயற்பாடுகளாகட்டும், அனைத்திலுமே இம்மூன்றும் கணிசமான செல்வாக்கும் தாக் கமும் செலுத்துகின்றன.

## Encoding:

இதன்போது பிள்ளையின் சிந்தனைக்கு ஆட்பட்ட அனைத்து தகவல்களும் நினைவிலே சேகரமாகும். எந்தளவு தூரம் பிள்ளை தான் பெற்றுக் கொள்கின்ற தகவல்களைச் சுயமாக, இயல்பாக நினைவாற்றலிலே பதித்து கொள்வதற்கான தயார் நிலையில் இருக்குமோ, அந்தளவு தூரம் பிள்ளையின் நினை வாற்றல் பெருகும். இதன் விளைவாகப் பிள்ளையின் அறி கைத் திறன் (cognitive skills) விருத்தி அடையும். இதிலே மிக முக்கியமான ஒன்று தான் தகவல்களை மூளையிலேயே சேகரிக்கின்றபொழுது (encoding relevant information and ignoring irrelevant information) பொருத்தமான, தேவையான



தகவல்களை நினைவாற்றலின் வழியாக நிரல் கோடல் செய்து பொருத்தமற்றவற்றைக் கிடப்பில் போட்டு விடுவது, அல்லது கை விடுவது முக்கியம் பெறுகின்றது. நினைவாற்ற லுக்கு இது மிக முக்கியம்.

## automatically:

எந்த விதமான சிரமமும் இல்லாமல் தன்னிடத்தில் இருக் கின்ற ஆற்றல்களின் வழியாக இயல்பாகவும் மிகத் துரிதமாக வும் தகவல்களைத் தன்னகத்தே பத்திரமாகச் சேமித்து வைத்துக் கொள்கின்ற முறை. இது சிலருக்கு இயல்பான இறை அருளாக இருக்கும்(inborn gifted). இன்னும் சிலருக் குப் பயிற்சி மூலம் நினைவாற்றலை அப்படியே உடனுக்கு டன் பதிவு செய்து வைத்துக் கொள்வதற்கான வலைய மைப்பை உருவாக்கிக் கொள்ள முடியும். இப்படியானவர்க

ளுக்கு பேசுகின்ற விடயங்கள் சிந்திக்கின்ற விடயங்கள் அப்படியே நினைவில் தானாகச் சேகரம் ஆகும். சிரமப்பட்டு மனனம் செய்ய வேண்டிய அவசியம் இவர்களுக்கு இருக்காது. உரையாற்றுகின்றவர்கள், தொடராக எழுதுகின்றவர்களிடம் இவற்றைக் காணலாம்.

**strategy construction:**

The creation of new procedure for processing information. இங்கு மாணவர்கள் நினைவாற்றலை மேம்படுத்திக் கொள்வதற்கான கட்டமைப்புப் பொறிமுறை ஒன்றை அல்லது மூலோபாயக் கட்டமைப்பு ஒன்றைத் தன்னிலைக்கு ஏற்றாற் போல உருவாக்கிக் கொண்டு நினைவாற்றலை வினைத்திறனாய் அமைத்துக்கொள்வதற்குரிய முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டும்.

For example children's reading benefits when they develop the strategy of stopping periodically to take stock of what they have read so far...

இதனால் தான் அவர்கள் சிறந்த புத்திஜீவிகளாக மரணித்த பிறகும் மிளிர்கின்றனர். அவர்களது சிந்தனைகளை அவர்களது தாய்மொழி தவிர்ந்த வேறெந்த மொழிகளிலும் பேசாவிட்டாலும் எழுதாவிட்டாலும் கூட அவர்களது சிந்தனைகளில் காணப்பட்ட கருத்துச் செறிவும் கருத்த ஆழமும் சர்வவிசாலிப்பும் காரணமாக சர்வதேச அறிஞர்கள் தமது மக்களின் நலன்கருதி அவற்றைத் தத்தம் மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்து உலகிற்கு அறிமுகம் செய்கின்றனர், பயன்பெறுகின்றனர்.

Developing and effective repertoire of strategies and selecting the best want to use on a learning task is a critical aspect of becoming an effective learner என்கிறார் Bjorklund(2012).

வகுப்பறையிலே மாணவர்களுக்குக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபொழுது அவர்களது நினைவாற்றலை மேம்படுத்துகின்ற வகையிலும் சிந்தனையைக் குறிப்பிட்ட விடயப் பரப்பிலே குவிமயப்படுத்தி சுய கற்றலுக்கு ஈடுபடுத்துகின்ற வகையிலும் ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துவத்தை கனகச்சிதமாக, விளைதிறன் வாய்ந்ததாக அமைத்துக் கொள்கின்றபொழுது பரிபூரணமான பன்முக ஆளுமை விருத்தி கொண்ட, துடிப்புள்ள இளந் தலைமுறையை உருவாக்கி நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம்.



bisthamy.ahamed@thaiveedu.com




**சிந்தனைக் களம்**
**(இசை, நடனம்)**

**இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்**

**Zoom ID: 873 7195 7886 Passcode: 709 155**

**உரைத்தொடர் - 46**

உரைப் பொருள்
***'கூத்து மரபும் நாட்டிய சாஸ்திரமும் - ஈழத்துக் கூத்து மரபை மையப்படுத்திய பார்வை '***

உரையாளர்
***கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா***
*முதுநிலை விரிவுரையாளர், நடனத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*இலங்கை*

**21 டிசம்பர் 2024 சனிக்கிழமை 8:00pm-10:30pm**
**(கனடா-ரொறன்ரோ)**

**22 டிசம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை 6:30am- 9:00am**
**(இலங்கை, இந்தியா)**

**22 டிசம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை 12:00am-2:30pm**
**(சிட்னி)**

**Website**: www.chinthanaikkalam.org
**E-mail**: chinthanaikkalam@gmail.com



# திக்குத் தெரியாத வானத்தில் தேடித்தேடி...

– குரு அரவிந்தன்

ஒக்ரோபர் மாதம் 10 திகதி 2024. சூரியன் மறைந்ததும் வானத்தில் வால்நட்சத்திரம் தெரியலாம் என்று இணையத்த ளத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கு சுச்சின்ஸன்-அட்-லஸ் Tsuchinshan-Atlas( C-2023 A3 ) என்று ஆய்வாளர்கள் பெயர் சூட்டியிருந்தனர். நான் ஏற்கனவே தாயகத்தில் இருக் கும்போது, வேறு வால்நட்சத்திரங்களைப் பார்த்திருக்கின் றேன். வாழ்நாளில் இந்த வால்நட்சத்திரத்தை மீண்டும் பார்க் கச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பதால் ஏற்பட்ட ஆர்வம் கார ணமாக, அதைப் பார்ப்பதற்கு முயற்சி எடுத்தேன். காரணம் இந்த வால்நட்சத்திரம் 80,000 ஆண்டுகளுக்குப் பின்தான் மீண்டும் சூரியனைச் சுற்றி வருமாம். இது மீண்டும் திரும்பி வருமா என்ற சந்தேகமும் சில ஆய்வாளர்களுக்கு இருந்தது. இந்த வால்நட்சத்திரம் சூரியனுக்கு அருகே செல்லும்போது பனிப்பாறைகள் உருகிவிடலாம், அதனால் அதன் வடிவம் மாறலாம் என்ற ஊகமும் இதற்குக் காரணம் காட்டப்பட்டது.

கனடாவில் கொஞ்சம் குளிராக இருந்ததால் அதற்கான ஆடைகளை அணிந்து கொண்டு கமெராவையும் எடுத்துக் கொண்டு அருகே இருந்த விளையாட்டு மைதானப் பக்கம் சென்றேன். சூரியன் மறையும் தருணம் மேற்கு வானம் செம் மஞ்சள் நிறமாக மாறியிருந்தது. இருட்டும்வரை பொறுமையா கக் காத்திருந்தேன். தென்மேற்குப் பக்கத்தில் தெரியும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அங்கே இன்னுமொரு குடும்பத்தின ரும் தூரப் பார்க்கக்கூடிய நீளமான பெரிய ‘லென்ஸ்’ கொண்ட கமெராவை அதன் தாங்கியில் பூட்டியபடி தயாராக வைத்துக் கொண்டு காத்திருந்தனர். சூரியன் மறைந்தபின் னும் காத்திருந்தோம், ஆனால் வால்நட்சத்திரம் எங்கள் கண் ணில் படவேயில்லை.

விமான நிலையம் அருகில் இருந்ததால், உயரப் பறந்த சில விமானங்கள் வானத்து இருட்டில் எங்களை வால்நட்சத்திரம் என்று நம்பும் வகையில் அவ்வப்போது குழப்பத்தில் ஆழ்த் திக் கொண்டிருந்தன. என்றுமில்லாதவாறு அன்று வானத்தில் வித்தியாசமான நிறங்கள் தெரிவதை அவதானித்தேன். நொதேன் லைட் இம்முறை ரொறன்ரோவிலும் தெரியக்கூடிய தாக இருந்தது. ஐஸ்லாந்திலோ அல்லது வான்கூவரிலோ பார்த்தது போல மிகத் தெளிவாகப் பல வர்ணங்களில் இல் லாவிட்டாலும், அதற்குப் பதிலாக நொதேன் லைட்டை ரொறன் ரோவிலும் பச்சை, சிவப்பு, ஒரேன்ஞ் நிறங்களில் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. வீதி வெளிச்சங்களால் அது சாதா ரண கண்ணுக்கு மங்கலாகத்தான் தெரிந்தாலும், செல்போ னில் அதிசயமாக வானத்தின் பல வர்ணங்களைப் படம் பிடிக்க முடிந்தது.

வால்நட்சத்திரத்திற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. வானத்தின் எல்லாப் பக்கமும் தேடிப்பார்த்தும் என் கண் ணில் படாமைக்கு காரணங்கள் இருக்கலாம். சில இடங்களில் முகில் கூட்டம் கறுத்திருந்ததால் அதற்குள் மறைந்திருக்க லாம். ஆனாலும் இந்தமாதம் முழுவதும் வானத்தில் தெரியும் என்று நாசா தளத்தில் எழுதியிருந்தார்கள். ஆகவே சூரிய அஸ்தமனத்தையும், நொதேன் லைட்டையும் படம் பிடித்த திருப்தியோடு வீட்டுக்குச் சென்றேன். எனது மகனிடம் இதைப்பற்றிக் குறிப்பிட்டபோது, அவர் தன்னிடம் செல்போ னில் ஒரு மென்பொருள் இருப்பதாகவும், அதன் மூலம் வால் நட்சத்திரத்தைக் கண்டு பிடிக்கலாம் என்றும் நம்பிக்கை யோடு சொன்னான். அதைக் கேட்டதும் எனக்கு மகிழ்ச்சியாக வும், ஆறுதலாகவும் இருந்தது. அதற்காக வானம் மேகங்க ளால் மூடாத ஒரு நாளுக்காகக் காத்திருந்தோம்.

வால்நட்சத்திரம், வால்வெள்ளி அல்லது வால்மீன் என்றால் என்ன என்று பலருக்குத் தெரிந்திருக்கும், தெரியாத இளைய தலைமுறையினருக்கு இதைப்பற்றிச் சிறிது விளக்கம் தர லாம் என நினைக்கின்றேன். சூரிய குடும்பத்தில் சூரியன் ஒரு நட்சத்திரமாக இருக்கின்றது. சூரியனைவிடப் பல மடங்கு பெரிய நட்சத்திர குடும்பங்கள் எல்லையில்லா வானத்தில் பல ஒளியாண்டுகளுக்கு அப்பால் இருக்கின்றன. இவை யா வும் பிரபஞ்சத்தைச் சுற்றி வருகின்றன. குறுகிய கால வால்நட் சத்திரங்கள் கைபர் பெல்ட்டில் (Kuiper belt) இருந்து வருகின் றன. நீண்டகால வால்நட்சத்திரங்கள் ஊர்ட் கிளவுட்டில் (Oort cloud) இருந்து தோன்றுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இதில், குறுகிய கால வால்நட்சத்திரங்கள் உருவத்தில் சிறிய தாகவும், உள் சூரிய குடும்பச் சுற்றுப்பாதையில் அடிக்கடி பயணிப்பதாகவும் இருக்கும். உதாரணமாக, ஹாலி என்ற வால் நட்சத்திரத்தின் சுற்றுப்பாதைக் காலம் சுமார் 75 ஆண் டுகளாகும். நீண்ட கால வால்நட்சத்திரங்கள் நீள்வட்ட சுற்றுப் பாதைகளைக் கொண்டுள்ளன. இவற்றின் சுற்றுப்பாதைக் காலம் பொதுவாக 200 முதல் 1000 ஆண்டுகள் வரை எடுக் கின்றன. இதில் சி-1983 எச் 1 என்ற வால்நட்சத்திரம் தனது

நீள்வட்டப் பாதையில் சுற்றிவர 960 ஆண்டுகள் எடுக்கிறது. காலம் கணக்கிட முடியாத வால்நட்சத்திரங்களும் அண்டவெளியில் சுற்றி வருகின்றன. எம்மிடம் தற்போது உள்ள தொழில் நுட்பவசதிகளைக் கொண்டு அவற்றின் பாதைகளைக் கணக்கிட முடியவில்லை. இவை ஒரு முறைதான் சூரியக்குடும்பத்தைக் கடந்து செல்கின்றன. எங்கே செல்கின்றன, திரும்பவும் வருமா என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய அறிவியல் தொழில் நுட்பம் எங்களிடம் இதுவரை உருவாகவில்லை. பிரபஞ்சத்திற்கு எல்லை இல்லை என்பதற்கு இவை உதாரணமாக இருக்கின்றன. இதில் சி-1811 எவ் 1 என்ற பெரிய வால்நட்சத்திரம் தனது நீண்ட சுற்றுப்பாதையில் சுற்றி



வர சுமார் 2974 ஆண்டுகள் எடுத்திருக்கின்றது. நெப்டியூன் கிரகம் சூரியனைச் சுற்றி வர 165 ஆண்டுகளும், புளூட்டோ 248 ஆண்டுகளும் எடுக்கின்றன என்பது ஏற்கனவே நாமறிந்ததே!

சூரியனைப் பலமுறை கடந்து சென்ற சில வால்நட்சத்திரங்கள் பனி உருகியதால் அழிந்து போயிருக்கின்றன. உள்சூரிய மண்டல வால்நட்சத்திரங்களை மேங்க்ஸ் (Manx) என்று அழைக்கிறார்கள். தொழில்நுட்ப வசதி விரிவடைந்ததால், 2013-ம் ஆண்டுக்கும் 2017-ம் ஆண்டுக்கும் இடையே 27 மேங்க்ஸ் வால்நட்சத்திரங்களை வான்வெளியில் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவை ஏற்கனவே இருந்திருக்கலாம், ஆனால் இப்பொழுதுதான் எங்கள் கண்ணில் படக்கூடிய தொழில் நுட்ப வசதி கிடைத்திருந்தது. 67-பி என்ற வால்நட்சத்திரத்தை ஆய்வு செய்வதற்காக ஐரோப்பிய விண்வெளி நிலையம் 'ரொசெட்டா' என்ற விண்கலத்தை 2004-ம் அண்டு அனுப்பியிருந்தது. இந்தவிண்கலத்தின் தரையிறங்கியான பிலே (Philae) 2014-ஆம் ஆண்டு, அதாவது பயணத்திற்குப் பத்து ஆண்டுகள் எடுத்தபின் வால்நட்சத்திரத்தில் தரை இறங்கி 2016-ஆம் ஆண்டுவரை தேவையான தகவலை அனுப்பியிருந்தது. ஆய்வின் போது, water, carbon dioxide, carbon monoxide and oxygen ஆகிவை இதில் இருப்பதைக் கண்டறிந்தது.

வால் நட்சத்திரங்கள் சூரியனுக்கு அருகே செல்லும் போது வெப்பமடைந்து வாயுக்களை வெளியிடுகின்றது. இது சூரியனைச் சுற்றி வரும், தூசி, உறைந்த வாயுக்கள், பாறைகள், மற்றும் பனிப்பந்துகளால் ஆன நீண்ட வால்களைக் கொண்ட பெரிய பொருட்களாக இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. சூரியன் மற்றும் கிரகங்கள் உருவான காலத்தில் இருந்து எஞ்சிய பொருட்களை ஒன்றாகச் சேகரித்து இவை உருவானதாக ஆய்வுகள் மேலும் தெரிவிக்கின்றன. இவை சில மைல்கள் வரை அகலம் கொண்டவையாக இருப்பதால், சூரியனுக்கு அருகில் சுற்றும்போது அவை வெப்பமடைந்து வாயுக்கள் மற்றும் தூசிகளை, அதன் ஒளிரும் தலையில் உமிழ்கின்றன. கோமா(Coma) என்பது வால்நட்சத்திரத்தின் தலையைச் சுற்றி வெளியேறும் தூசுபடிந்த வளிமண்டலமாகும், இந்த வளிமண்டலம் வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு அருகில் வரும்போது ஆவியாகும் பனிக்கட்டிகள், மற்றும் உறைந்த பனிக்கட்டிகளுடன் கலந்திருக்கும் தூசித் துகள்களையும் அவற்றுடன் எடுத்துச் செல்லும். இப்படி உமிழப்பட்ட பொருட்கள் கோடிக்கணக்கான மைல்கள் வரை நீண்டு ஒரு வாலை உருவாக்குவதால் அவற்றை வால்நட்சத்திரம் என்று அழைக்கிறார்கள். இதன் வால்கள் பொதுவாக வெள்ளை மஞ்சள் நிறங்கள் கலந்ததாக எங்கள் பார்வைக்குத் தெரியும்.

Tsuchinshan-ATLAS என்ற வால் நட்சத்திரம் முதன்முதலில் சீனாவில் உள்ள பர்பிள் மவுண்டன் அப்சர்வேட்டரி என்றும் அழைக்கப்படும் Tsuchinshan ஆய்வகத்தில் 09-01-2023 அன்று வானியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு, இந்த வால்நட்சத்திரம், Asteroid Terrestrial-Impact Last Alert System தொலைநோக்கியைப் பயன்படுத்தி ஆர்வலர்களால் சுயாதீனமாக கண்டுபிடிக்கப்பட்டது. ATLAS என்பது தென்னாப்பிரிக்காவில் உள்ள தொலைநோக்கி என்பதால், Tsuchinshan-ATLAS. என்று பெயர் சூட்டப்பட்டது. 2023-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதால், ஆய்வாளர்கள் இதற்கு சி-2023 ஏ3 என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்த வால்நட்சத்திரத்தை ஆய்வுக்காகச் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தும் நாசா நிறுவனத்தினர் பல படங்கள் எடுத்துள்ளனர். இரவு வானத்தில் நாம் எப்போதாவது பார்க்கும் வால் நட்சத்திரங்கள் பொதுவாக சூரிய குடும்பத்தின் மிகவும் தொலைதூரத்தில் உள்ள ஊர்ட் கிளவுட் என்ற பகுதிகளிலிருந்து வருகின்றன. சுச்சின்ஸன் - அட்லஸ் வால்நட்சத்திரத்தின் சுற்றுப்பாதையை அவதானித்தபோது, ஒக்ரோபர் 12, 2024 அன்று பூமிக்கு அருகே நெருங்கி வரும் என்றும், விடியலுக்கு முந்தைய வானத்திலும் இதைப் பார்க்க முடியும் என்றும், மேலும் பூமிக்கு மிக அருகில் வரும்போது, அது இன்னும் ஈர்க்கக்கூடிய மாதிரியாக இருக்கும் என்றும் அறிவித்திருந்தனர்.

ஒக்ரோபர் 12-ம் திகதி வானம் வெளித்திருந்தது. இரவு 8:30 மணியளவில் தெளிவாகத் தெரியும் என்று இணையத்தளத்தில் பதிவாகியிருந்தது. நானும் மகனும் வண்டியை எடுத்துக்கொண்டு ஒன்ராறியோ நெடுஞ்சாலை 27-ல் சற்றுத் தூரம் வடதிசை நோக்கிச் சென்றோம். வயல்வெளிகள் தெரிந்தன, தெருவிளக்குகள் இல்லாததால் ஒரே இருட்டாக இருந்தது. அதுதான் சரியான இடம் என்பதால், வண்டியை நிறுத்தி விளக்கை அணைத்து விட்டு மென்பொருளின் உதவியோடு வால்நட்சத்திரத்தைத் தேடிப்பிடித்து படம் பிடித்துக் கொண்டேன். அதன் தலை வியாழன் நட்சத்திரத்தைப் போலப் பிரகாசமாக இருந்தது. நவீன தொழில்நுட்பம் தந்த மென்பொருளுக்கு மனதார நன்றி சொன்னேன், காரணம் அது இல்லாவிட்

டால், கோடிக்கணக்கான நட்சத்திரங்களுக்கு நடுவே வால்நட்சத்திரத்தை எங்கே தேடிப்பிடிப்பது? ஒக்ரோபர் 17-ம் திகதி சூப்பர் மூன் என்பதால், சந்திரனில் இருந்து வந்த வெளிச்சத்தால் வானம் பாதிக்கப்பட்டிருந்தது. பூமியில் இருந்து பார்க்கும்போது இந்த வால்நட்சத்திரம் சிறிதாகத் தெரிந்தாலும், இந்த வால்நட்சத்திரத்தின் தலை சுமார் 130,000 மைல்கள் விட்டம் கொண்டது என்றும், அதன் வால் சுமார் 18 மில்லியன் மைல்கள் வரை நீண்டிருப்பதாகவும் ஆய்வாளர் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த வால்நட்சத்திரம் பூமியைக் கடந்து சென்ற போது, நமது கிரகத்தில் இருந்து சுமார் 43,911,824 மைல்கள் (70,669,230 கிமீ) தொலைவில் இருந்தது.

'வால்நட்சத்திரங்கள் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் நேரடியாகச் செல்லும்போது, சூரியனின் ஒளி சிதறல். தூசி மற்றும் பனிக்கட்டி படிகங்களில் பிரதிபலித்து, பார்வையாளரை நோக்கி அந்த ஒளியை சிதறடிப்பதன் மூலம் வால்நட்சத்திரத்தை குறிப்பிடத்தக்க வகையில் பிரகாசமாகத் தோன்ற வைக்கிறது' என்று ஓய்வுபெற்ற நோயியல் நிபுணரும், வால்மீன்களில் குறிப்பிட்ட ஆர்வமுள்ள அனுபவமிக்க அமெச்சூர் வானவியலாளருமான ஜோசப் என். மார்கஸ் என்பவர் குறிப்பிடுகின்றார்.

சென்ற மார்ச் மாதம் 12பி - போன்ஸ் புருக்ஸ் என்ற வால்நட்சத்திரம் பூமியைக் கடந்து சென்றது. இதை முதன் முதலாக 1812-ம் ஆண்டு கண்டு பிடித்தனர். தொடர்ந்து 1884-ம் ஆண்டும், 1954-ம் ஆண்டும் மீண்டும் 2024-ம் ஆண்டும் 232 மில்லியன் கி.மீ தூரத்தில் இந்த வால்நட்சத்திரம் பூமியைக் கடந்து சென்றது. மீண்டும் 2095-ம் ஆண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேபோல 2020-ம் ஆண்டு சி-2020 எவ்3 நியோவைஸ் என்ற நீண்ட சுற்றுப்பாதை கொண்ட வால்நட்சத்திரம் 250 மில்லியன் கி.மீ தூரத்தில் மிகப் பிரகாசமாகப் பூமியைக் கடந்து சென்றது. மீண்டும் சூரியக் குடும்பத்திற்கு வருவதற்குக் குறைந்தது 4.400 வருடங்கள் எடுக்கலாம் என்று கணித்திருக்கிறார்கள்.

இது போன்ற வால்நட்சத்திரங்கள் காலாகாலமாய் பூமியைக் கடந்து பயணித்துக் கொண்டுதான் இருந்தன, ஆனால் அதைக் கண்டுபிடிக்கக்கூடிய அறிவியல் சாதனங்கள் எங்களிடம் முன்பு இருக்கவில்லை. ஒருவேளை அப்படி இருந்திருந்தாலும், பண்டைய தமிழர்கள் விண்வெளி பற்றிய இது போன்ற அறிவைக் கொண்டிருந்தாலும், அந்த அறிவியல் சாதனங்கள் காலத்தால் அழிக்கப்பட்டிருக்கலாம்.

**உசாத்துணை:**

- https://en.wikipedia.org/wiki/C/2023_A3_(Tsuchinshan%E2%80%93ATLAS)



kuruaravindan@thaiveedu.com






கனடிய வீட்டு உரிமையாளர்கள் வீட்டுக் காப்புறுதியில் வெள்ளத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்ட ஈடு செய்வதற்கான உறுதியைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதைக் காணக் கூடியதாயுள்ளது. குறிப்பாக இவ்வருடம் ரொறன்ரோவில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பல நெடுஞ்சாலைகள் உட்பட வீடுகள் மூழ்கிய வேளையில், தமது காப்புறுதி வெள்ள இழப்பை ஈடு செய்யாது என்பதை அறிந்தபோது தமது காப்புறுதியில் எதிர்கால இழப்புகளை ஈடு செய்வதற்கான வாசகத்தை மேலதிக கட்டணத்தை செலுத்தி சேர்த்துக் கொண்டதுடன் தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் பரிந்துரை செய்ததைக் காணக்கூடியதாயுள்ளது.

பலரும் இவ்வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தை 2013-இல் ஏற்பட்ட வெள்ளத்துடன் ஒப்பிட்டு நோக்கி உள்ளார்கள். அத்தருணத்தில் 80,000 மக்களை வீட்டில் இருந்து வெளியேற அறிவித்துள்ளார்கள். பெருமழை பெய்ததுடன் சில உயிர் இழப்புகளும் ஏற்பட்டதை அறியக்கூடியதாயுள்ளன. இரண்டு வெள்ளங்களுக்குமாக காப்புறுதி அமைப்புகள் நஷ்டஈடாக மொத்தம் 3.1 பில்லியன் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. தற்காலத்தில் தேசியரீதியாகக் கட்டாயமற்ற வெள்ளக் காப்புறுதி வாசகத்தை கேட்டுப் பெறுவதாயும் காப்புறுதி முகாமையாளர்கள் அதனைப் பெற்றுக் கொள்ள ஊக்குவிப்பதாகவும் காணக்கூடியதாயுள்ளது.

அண்மைக் காலம் வரை வெள்ளத்திற்கான காப்பீடு இருக்கவில்லை. ஏனெனில் வெள்ளம் பாயும் ஆற்றுக்கு அருகில் வீடு கட்டி விட்டு வருடாவருடம் நஷ்டஈடு கேட்கலாம் அல்லவா? ஆதலால் தெரிவுக் காப்பீடு அண்மையில்தான் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட விதிவிலக்கான வெள்ளங்களின் பின் காப்பீடு வழங்குவதற்கு காப்புறுதி அமைப்புகள் முன் வந்துள்ளன. வழமைக்கு மாறாக சீதோஷண மாற்றம் ஏற்பட்டுள்மையால் அதன் அவசியத்தைக் காப்புறுதி அமைப்புகள் உணர்ந்துள்ளன. இத்தகைய கேட்பனவுகள் வெள்ளம் மற்றும் தீயினால் வரும் அனர்த்தங்களையும் உள்ளடக்கும்.

நாம் ஒரு 15 வருடங்கள் பின் நோக்கிப் பார்த்தால் காப்புறுதி அமைப்புகள் காற்று, நெருப்பு, வெள்ளம் போன்றவற்றால் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வதற்கு வருடம் ஒன்றிற்கு சராசரியாக 700 மில்லியன் நஷ்ட்ட ஈடாக வழங்கியுள்ளன. ஆனால் அதே கட்டமைப்பு 2022, 2023 வருடங்களில் வருட நஷ்ட ஈடாக 3 பில்லியன் அதாவது முன்னூறு கோடி டலர்கள் வழங்கியுள்ளது. இதனால் தான் காப்புறுதி அமைப்புகள் அரசாங்கத்துடன் இணைந்து தேசிய வெள்ளக் காப்புறுதித்திட்டம் ஒன்றை தயாரிக்க ஆரம்பித்துள்ளது. இதன் விளைவாக வெள்ளம் வரும் கிராமப் பிரதேசங்களில் வீடுகளைக் கட்டுபவருக்கு வெள்ள அனர்த்தக் காப்புறுதி இருக்காது, அப்படி அல்லாமல் காப்புறுதி வழங்குவதானாலும் கட்டணம் மிக அதிகமாக இருக்கும்.

இதன் முக்கிய விளைவு பொதுவான பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கு வெள்ளத்துக்கான காப்புறுதி கட்டணம் மிகையாக இருக்காது. அதேவேளை கூடிய ஆபத்து நிறைந்த பகுதியில் வதிப்பவருக்கு போதிய காப்புறுதியும் கிடைக்கும். வெள்ளத்துக்கான காப்புறுதி எனும் வேளையில் குளங்கள் வான்பாய்தல், ஆறுகள் போன்றவற்றால் வரும் இழப்புகளை ஈடு செய்யும் அதேவேளை கழிவு நீர் வாய்க்கால் அடைப்பு (Server Backup) போன்றவற்றிற்கான விசேட காப்புறுதி இருந்தால்தான் இழப்பை ஈடு செய்ய முடியும். அதேவேளை பூரண வாகனக் காப்புறுதி (Comprehensive Auto Insurance) இருந்தால் உங்கள் வாகனத்திற்கு வெள்ளத்தால் ஏற்படும் இழப்பையும் ஈடுசெய்யும்.

சீதோஷண நிலை மாற்றம் காரணமாக கடும் வெள்ளமும் தீயும் இடம்பெறும் இக்காலகட்டத்தில் காப்புறுதி ஆவணங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமாகும். அவைகளால் ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா? என்று காப்புறுதி முகவரிடம் கேட்டு உறுதிப்படுத்துவது உங்கள் உரிமையும், அதை வழங்குவது காப்புறுதி முகவரின் கடமையுமாகும். வீட்டு காப்புறுதிக் கட்டணம் 68 விகிதத்தால் இவ்வருடம் அதிகரித்திருக்கும் வேளையில், நீரை வெளியேற்ற உதவும், நீர்க்குழாய்களை (Sump Pump) வைத்திருப்பதனால் கட்டணத்தைக் குறைக்க முடியும்.

உங்கள் வாகனம் அல்லது வீடு வெள்ளத்தால் பாதிக்கப்படும் வேளையில், ஆபத்து விலகியவுடன் கூடிய சீக்கிரத்தில் இழப்புகளை படம் எடுத்து ஆவணப்படுத்துவது மிக முக்கியமாகும். பொருட்கள் வாங்கியதற்கான ஆவணங்கள் இருப்பின் அதுவும் பயனுடையதாகும்.

இயன்ற அளவு விரைவாய் உங்கள் வாகன அல்லது வீட்டு காப்புறுதி முகாமையாளருக்கு அறிவியுங்கள். ஏதாவது செலவுகள் செய்தால் அதற்கான பற்றுச் சீட்டைப் பத்திரப்படுத்துங்கள்.

கவனமாக முன் எச்சரிக்கையாய் இருந்து,
வாழ்க வளமுடன்.



senthuran.p@thaiveedu.com




பொதுவாகவே வீடு தேடும் படலத்தில் இறங்கி இருப்பவர்கள் மத்தியில் புதிய வீடா ? அல்லது பழைய வீடா ? என்ற கேள்வி நிச்சயம் வரத்தான் செய்யும். சுருங்கக் கூறுவதானால் இரண்டு தெரிவுகளிலும் நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. அந்த வகையில் இரண்டு பக்க நன்மைகளையும் தீமைகளையும் இங்கு ஒப்பிட்டுக் காட்ட விழைகிறேன். சகலதையும் சீர்தூக்கிப் பார்த்து இறுதி முடிவு எடுப்பதைத் தனிப்பட்ட விருப்பாகக் கருதி உங்கள் கைகளில் விடுகிறேன்.

### முதலில் புதிய வீடுகள் வாங்கும்போது ஏற்படக் கூடிய அனுகூலங்கள் பற்றிப் பார்ப்போம்.

**விருப்பத்திற்கேற்ற தெரிவுகள்:**

புதிய வீடுகள் வாங்கும்போது எங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் தெரிவுகளை மேற்கொள்ளலாம் என்பது மிகப் பரந்த விரிந்த அம்சங்களைக் கொண்டது. பெரும்பாலான கட்டட அமைப்பாளர்கள் நுகர்வோரின் விருப்பத்திற்கேற்பவும் கட்டடநிர்மாண விதிகளுக்கு முரணாகாத வகையிலும் எந்த வித மாற்றங்களையோ அல்லது உட்புகுத்தலையோ அல்லது நீக்கல்களையோ செய்யத் தயாராக இருக்கிறார்கள். உதாரணமாக 4 படுக்கை அறைகள் அமைப்பதா அல்லது 5 படுக்கை அறைகள் போடுவதா என்பது நுகர்வோரின் தெரிவாக இருக்கும். மேற்தள குளியலறை இரண்டா? அல்லது மூன்றா ? என்பது கூட வீடு வாங்குபவர்களது தெரிவாக அமையலாம்.

சலவை செய்யும் அறையை பிரதான தளத்தில் வைப்பதா ? அல்லது மேல் தளத்தில் வைப்பதா ? அல்லது கீழ்த் தளத்தில் வைப்பதா ? என்பதை நுகர்வோர் தீர்மானிக்கும் வசதி உண்டு. பிரதான தளத்தில் ஒரு அலுவலக அறை அல்லது நூலக அறை இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும் ? என்பது பலரதும் ஆதங்கமாக இருக்கின்றது, புதிய வீடுகள் வாங்கும் போது அதற்கேற்ற தெரிவுகளை மேற்கொள்ள வாய்ப்பு உண்டு. மறுபுறம் கனடாவில் வயதானவர்களும், ஏன் சில இளைஞர்களும்கூட படிகள் ஏறி இரண்டாம் மாடிக்குப் போவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பெற்றோரை வீட்டில் வைத்துப் பராமரிக்கும் பிள்ளைகள் பெற்றோர் படும் அவலம் கண்டு பல மாற்று வழிகளைக் காண்பதைப் பல இடங்களிலும் அவதானிக்கலாம். இப்படியான சூழ்நிலைகளில் இருப்பவர்கள் வீடு கட்டும்போதே பிரதான தளத்தில் படுக்கை அறையும் குளிய லறையும் வரக்கூடியதான தெரிவுகளை ஏற்படுத்த முடியும். நூலகத்திற்குப் பதிலாக அதனைப் படுக்கை அறையாக மாற்றி சகல வசதிகளுடனும் கட்டுவித்துப் பெறும் வாய்ப்பு புதிய வீடு வாங்குபவர்களுக்கு இருக்கின்றது.

அமைப்பு ரீதியான மாற்றங்கள் மட்டுமன்றி வீட்டை அழகுபடுத்தும் விதத்தில் பல தெரிவுகளைச் செய்யக்கூடிய வாய்ப்புகள் புதிய வீடு வாங்குபவர்களுக்கே இருக்கின்றது. சுவரின் நிறம் தொடக்கம் நிலத்தின் நிறம் வரை தமது விருப்பத்திற்கு ஏற்ற வர்ணங்களைத் தெரிவு செய்யலாம். வீட்டின் வரவேற்புப் பகுதி சமையலறை, சாப்பாட்டறை, Family Room போன்ற பல பிரிவுகளுக்கும் படுக்கை அறை குளியலறை போன்றவற்றிற்கும் நிலத்தை எவ்வாறு அமைப்பது என்ற கேள்விக்கு Granite, Quartz, Marble, Hardwood, Carpet போன்ற தெரிவுகள் நிலத்தைப் பொறுத்தவரை மிக அதிக அளவில் உள்ளன. இவற்றுள் எதனை எங்கு எந்த வடிவத்தில் எந்த நிறத்தில் போடுவது என்பது நுகர்வோரது தெரிவாக அமையும்.

பொதுவாக வீடு வாங்குபவர்களின் கவனத்தை முதலில் கவரும் இடமாக அமைவது சமையலறை. வீடுகள் வாங்கும்போது இறுதி முடிவு எடுக்கும் நிலை பெண்களின் கையில் இருப்பதனாலோ என்னவோ கவர்ச்சிகரமான சமையலறைகளைக் கொண்ட வீடுகள் மிக வேகமாக விற்கப்படுவதாகச் சில ஆய்வுகள் கூறுகின்றன. அத்தகைய சமையலறைக்கு இருக்கக்கூடிய அலுமாரிகள் எந்த வடிவத்தில் எந்த நிறத்தில் அமையவேண்டும் எத்தகைய கைபிடிகள் போடப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் புதிய வீடு வாங்குபவர்களுக்கு இருக்கும். சமையலறை மேற்தட்டுக்களை (Counter Top)Granite, Quartz போன்ற மிக அழகான நிலைத்து நிற்கக்கூடிய மூலப் பொருட்களில் போடவும் இசைவான வடிவங்களிலும் வர்ணங்களிலும் போடவும் அதிக வாய்ப்பு உண்டு.

**Green Appliances:**

தொழில் நுட்ப ரீதியாகப் பார்க்கின்றபோது ஒவ்வொருவருடமும் உத்தம உளவில் விரயத்தைத் தவிர்த்து, அதிக சக்தியைத் தரக்கூடிய Energy Efficient தன்மை கொண்ட வீட்டுத் தேவைக்கான இயந்திர உபகரணங்கள் ஆண்டு தோறும் அறிமுகமான வண்ணமே இருக்கின்றன. குளிர்சாதனப்

பெட்டி, அடுப்பு, வெப்பமாக்கி, (Furnace) சுடுநீர் தொட்டி, குளிரூட்டி மட்டுமன்றி மின்சார விளக்குகள் கூட Energy Star தன்மை கொண்டனவாகவும், மிக அழகானவையாகவும் ஒவ்



வொரு வருடமும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. புதிய வீடுகள் வாங்குபவர்களுக்கு நவீன தொழில் நுட்ப உபகரணங்களை உபயோகிக்கும் வாய்ப்புக் கிட்டுவது மட்டுமன்றி அவர்களது மாதாந்தச் செலவு கணிசமான அளவு குறையவும் புதிய வீடுகள் வழி வகுக்கின்றன.

## புதிய கட்டட நியமங்கள்:

காலத்திற்குக் காலம் கட்டட நிர்மாணத்திற்குரிய நியமங்களும் சட்ட திட்டங்களும் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவசியமற்றதாகக் கருதப்பட்டவை காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு தற்போது சட்டமாக்கப்படுகின்றன, அல்லது நியதியாக்கப்படுகின்றன. அந்த வகையில் நுகர்வோரின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு புகை அறிவுறுத்தும் கருவி, காபன்மொனோக்சைட்(Co) அறிவுறுத்தும் கருவி, என்பவற்றையும் மற்றும் சாளரங்களின் தன்மை, கழிவு நீர்போக்கும் வழிகள், அடைப்புக்கள்(insulation) போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம்.

முக்கியமாக தற்போது கட்டப்படும் வீடுகள் 'Energy Star Homes' என்று முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக வீட்டினுடைய அமைப்பும், கட்டடத்தின் பாவிக்கப்படும் கட்டட மூலப் பொருட்களும், காற்றோட்டம், வெளிச்சம், அடைப்புகள் (Insulation) போன்ற அம்சங்களும் மிகத் துல்லியமான முறையில் ஒவ்வொரு ஆண்டும் Energy Efficient ஆகத் தரமுயர்த்தப்படுகின்றன. 2004-ம் ஆண்டு வெளியிடப்பட்ட கட்டட நியம அறிக்கை ஒன்றில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவ் ஆண்டில் 25% சக்தி விரயத்தடுப்பின் அதிகரிப்பு (Efficency) உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மிகப் புதிய வீடுகளில் மிக அதிகளவில் சக்தி விரயத் தடுப்பு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்பதோடு அவை மிகப்பாதுகாப்பு மிக்க சூழ்நிலையை உருவாக்கக்கூடிய செலவு குறைந்த ஸ்திரமான வாழ்வுக்கு வழிவகுக்கும் எனவும் கூறலாம்.

## உத்தரவாதம்:

புதிய வீடு வாங்குபவர்களுக்கு 30 நாள், ஒரு வருடம், 2 வருடங்கள், 7 வருடங்கள் என்று பலவித உத்தரவாதங்கள் வழங்கப்படுகின்றன. எனவே இக்காலப் பகுதிகளில் வீட்டில் ஏற்படக் கூடிய பழுதுகளை இலவசமாகத் திருத்துவிக்கும் வாய்ப்பு புதிய வீட்டுரிமையாளர்களுக்கு உண்டு என்பது பலருக்கும் ஆறுதலைக் கொடுக்கும் அம்சமாகக் காணப்படுகின்றது.

## இடர்ப்பாடுகள்:

- அதிகளவு முற்பணம்: புதிய வீடுவாங்குபவர்கள் 80-200 ஆயிரம் டொலர்களை 3 அல்லது 4 தடவைகளில் அல்லது சில தவணை முறையில் முற்பணமாகச் செலுத்த வேண்டி இருக்கும். மிகச் சொற்ப அளவான சேமிப்பை வைத்துக் கொண்டு அதைக்காட்டி இதைக்காட்டி வீட்டில் முதலீடு செய்பவர்களுக்கு இது ஒரு ஒருபாரிய தடைக் கல்லாக அமையும்.
- நீண்டகால காத்திருப்பு: பொதுவாக 1 தொடக்கம் 2 அல்லது 3 ஆண்டுகள் வரை கட்டுப்பணத்தைக் கொடுத்த பின் காத்திருப்பதும், பல தடவைகள் கட்டட அமைப்பாளர்கள் காலத்தைத் தள்ளிப் போடுவதும் புதிய வீடு வாங்குபவர்களுக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத இடர்ப்பாடுகளில் ஒன்று.
- மேலதிகச் செலவு: எதிர்பாராத செலவுகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை வீடு கையேற்கப்படும்போது ஏற்படலாம். உத்தரவாதத்திற்குரிய கட்டணம், இணைப்புச் செலவுகள், (Hookup Charges) மரம் நடுவதற்கான செலவுகள், வண்டிப் பாதைக்கான செலவு போன்ற செலவுகள் பழைய வீடுகளை வாங்கும் போது ஏற்படுவதில்லை.
- பொதுவாக அடுப்பு, குளிர்சாதானப் பெட்டி, சலவை செய்யும் இயந்திரம், உலர்த்தி என்பன நுகர்வோரினால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட வேண்டியவையாக இருக்கும். ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டும் அவை வீட்டின் விலையுடன் உள் எடக்கியதாக இருக்கும். ஆனால் பலருக்கும் இது நன்மையாகக் கூட அமையலாம். அதாவது தமக்குப் பிடித்தமான நவீன கருவிகளை வாங்க இதுதான் அருமையான சந்தர்ப்பம் என்ற சாதகமான நிலையையும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.
- புதிய வீடுகளில் திரைச் சேலைக்கான செலவு மேலதிகச் செலவாக அமையும். ஆனால் பிடிக்காத வர்ணங்களில் பல காலம் வருத்தத்துடன் காலம் கழிப்பதைவிட தமக்குப் பிடித்த வர்ணங்களையும் வடிவங்களையும் கொண்ட திரைச் சேலைகளைப் போடமுடியும் என்ற ஒரு நன்மையுள்ள பக்கத்தையும் பார்க்க வேண்டி உள்ளது.
- புதிய வீடுகள் கட்டம் கட்டமாகப் புதிய இடங்களில் கட்டப்

படுவதால் ஆரம்பத்தில் ஒரு சில ஆண்டுகளுக்குப் பல வித இடர்களைச் சந்திக்கவேண்டி இருக்கும். கடைகள், பாடசாலைகள், போக்குவரத்து வசதி என்பன அபிவிருத்தி செய்யப்படக் காலம் எடுக்கும். தெருக்களும், சுற்றுச் சூழலும் சகதி நிறைந்ததாகக் காணப்படலாம். சில ஆண்டுகள் கழித்தே சகல வசதிகளும் கொண்ட சுற்றுச் சூழலையும், சேவைகளையும் எதிர்பார்க்கமுடியும்.

- பெரும்பாலும் புதிய வீடுகளில், உள்ளகப் பகுதிகள் வசிக்கக் கூடிய நிலைக்கு வந்ததும் அவை உரிமையாளர்களுக்குக் கையளிக்கப்பட்டுவிடும். அரை குறை வேலைகள் எல்லாம் உரிமையாளர்கள் வீட்டிற்குள் குடியேறிய பின்னரே செய்யப்படும். இதனால் பலவித அசௌகரியங்களும், அந்தரங்கமற்ற நிலையும் காணப்படும். இது மட்டுமன்றி பின்வளவு, முன்வளவு என்பவற்றைச் சமப்படுத்தல், புற்றரை போடுதல், வண்டிப்பாதை அமைத்தல் போன்ற பலவிதமான வெளிப்புற வேலைகளும் உடனடியாகச் செய்யப்படுவதில்லை. 6 மாதம் ஒரு வருடம் எனக் காலம் கடந்தே இத்தகைய வேலைகள் எல்லாம் புதிய வீடுகளில் செய்யப்படும்.

ஒன்றை இழந்துதான் இன்னொன்றைப் பெறலாம் என்ற கூற்றிற்கமைய சில இடர்பாடுகளைச் சகிக்கும் மனநிலை இருந்தால் மட்டுமே புதிய வீடுகளால் ஏற்படும் நன்மைகளை அனுபவிக்கமுடியும்.

### பழையவீடுகள்

### பழைய வீடுகள் வாங்குகின்றபோது ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள்:

- தெரிவுகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். அதாவது சந்தைக்கு வந்தவற்றுள் ஒன்றைத்தான் தெரிவு செய்ய முடியும்.
- வீட்டின் அமைப்புகளில் பல வசதியீனங்கள் காணப்படும். காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் நுகர்வோரின் தேவையையும், பயன்பாட்டையும் கருத்திற் கொண்டு வீட்டின் அமைப்புகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படுகின்றன. உதாரணமாக சமையலறை, இருக்கையறை (Family Room) என்பவற்றில் செலவிடும் நேரம் அதிகமாக இருப்பதால் புதிய வீடுகளில் அவை பெரிதாக இருக்கும். அதுமட்டுமன்றி பிரதான தளத்தில் சமையலறை சாப்பாட்டறை, இருக்கையறை என்பன தனியறைகளாகப் பிரிக்கப்படாது திறந்த அமைப்பாக (Open Concept) இருப்பது பலரையும் கவர்ந்திருப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எனவே பழைய வீடுகளில் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் தன்மை அரிது எனக் கூறலாம்.
- வீட்டில் பாரிய திருத்த வேலைகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். உரிமையாளர்களின் வீட்டுப் பராமரிப்புக்கு ஏற்ப ஒரு வருட வயதுடைய வீடுகளில் கூட பலவித திருத்த வேலைகளைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம். குறிப்பாக 10 வருடத்திற்கு மேற்பட்ட வீடுகளில் திருத்த வேலைகள் அதிகமாக இருக்கும் வாய்ப்பு உண்டு. அவற்றிலும் குறிப்பாக ஒரு வீட்டின் வயது 15-20 ஆண்டுகளைச் கடக்கும் பட்சத்தில் பாரிய அளவிலான திருத்த வேலைகளையும் மாற்றீடு வேலைகளையும் செய்யவேண்டிய தேவை இருக்கும். குறிப்பாகக் கூரை, சாளரங்கள், இயந்திர உபகரணங்கள் என்பன தமது இளைப்பாறும் நிலையை அடைவது இயல்பானது. எனவே, பழைய வீடுகள் வாங்கிய பின்னர் ஒரு தொகைப் பணத்தைப் பராமரிப்புச் செலவுக்காக ஒதுக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.
- வீட்டின் அமைப்பு, வசதிகள், தளங்களின் தன்மை, வர்ணங்கள் போன்ற பல கோணங்களிலும் பார்த்தால் ஒவ்வொரும் தங்களின் விருப்பங்களையும் தேவையையும் இருப்பதற்கேற்ப மாற்றவேண்டியதாகவோ அல்லது விட்டுக் கொடுக்க வேண்டியதாகவோ இருக்கும். அல்லது பாரிய மாற்றங்களைச் செய்ய முற்பட்டால் பாரிய செலவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.
- வீட்டின் பராமரிப்புச் செலவும் மாதாந்தக் கட்டணங்களும் பழைய வீடுகளில் அதிகரித்துக் காணப்படும். 'High Efficiency'-இன் தன்மை அரிதாக அல்லது குறைவாக இருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.
- பிறர் விட்டுச் செல்லும் அழுக்குகளை நாங்கள் சுத்தம் செய்வதா ? என்பது பலருக்கும் இருக்கும் ஒரு சங்கடமான விடயமாகக் காணப்படுகிறது.

### நன்மைகள்:

- பழைய வீடுகள் பரந்த காணிகளில் கட்டப்பட்டிருப்பதற்கான வாய்ப்பு உண்டு. பரந்த காணிகளில் பற்றுள்ளவர்கள் பலர் எம்மவர் மத்தியில் உள்ளனர். அதேவேளை பரந்த காணியைப் பராமரிப்பது பலருக்கும் ஒரு மேலதிக வேலைப் பழுவாகவும் காணப்படலாம். எது எப்படி இருப்பினும் பெரும்பாலான புதிய வீடுகளில் முன்வளவு, பின்வளவு என்பன சிறிய அளவிலேயே காணப்படும்.
- சுற்றம் சூழலும், வசதிகளும் அபிவிருத்தி அடைந்த நிலையில் இருக்கும். கடைகள், பாடசாலை போக்குவரத்து என்பன ஏற்கனவே நல்ல நிலையில் இருக்கும்.
- அயலவர் எப்படியானவர்கள், சுற்றம் சூழல் எப்படியானது என்பதை ஓரளவு அனுமானிக்கலாம்.

எனவே சகலதையும் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து ஏறத்தாழ 5 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வீடு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டதாகவும் அதேவேளை வாங்குபவர்களின் பெரும்பாலான தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யக்கூடியதாகவும், ஏற்ற முறையில் தர முயர்த்தப்பட்டதாகவும் இருந்தால் அவற்றை வாங்குகின்றபோது அதிக பலனையும் அடையலாம், பல சிரமங்களையும் தவிர்க்கலாம். ஒருவரது விருப்பத்தினை 100% பூர்த்தி செய்யக் கூடிய வீடுகளை எங்கேயும் காண்பது அரிது. ஆனால் சிறிது செலவில் அவற்றை ஓரளவு பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தால் அதுவே போதுமானது.

போதும் என்றிருப்பதா ? அல்லது தேடலைத் தொடர்வதா ? முடிவு உங்கள் கைகளில்!



velasubramaniam@thaiveedu.com

# செய்யவேண்டியதைப் பிற்போடும் நடத்தைகள்

– த. சிவபாலு

பிற்போடுதலின் தோற்றம் பற்றி உங்களுக்குச் சொல்வதை நாங்கள் தாமதப்படுத்த மாட்டோம்: இது லத்தீன் முன்னொட்டு, அதாவது 'முன்னோக்கி,' மற்றும் crastination, 'நாளை' என்பதிலிருந்து வந்தது. இந்த வார்த்தையின் அர்த்தம், மெதுவாக நகர்வது அல்லது பின்தங்கியபடி செயற்படுவது, குறிப்பாக சோம்பேறித்தனம் அல்லது அக்கறையின்மை மூலம் குற்றம் சாட்டத்தக்க தாமதத்தை இது குறிக்கிறது. தள்ளிப் போடுதல் என்பது முடிவுகளை அல்லது செயல்களை தேவையில்லாமல் தள்ளிப் போடுவது. உடன் செய்வது அதிக மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பதைத் தெரிந்த பின்னர் அதனைத் தொடங்குவது முறையன்று, ஆதலால் நாம் உண்மையில் செய்ய விரும்பாத விஷயங்களைத் தொடங்குவதையோ முடிப்பதையோ தவிர்ப்பது பொதுவானது. ஆயினும் தள்ளிப்போடுதல் என்பது கடைசி நிமிடம் வரை அல்லது காலக்கெடுவைக் கடந்தும் செய்ய வேண்டிய பணிகளை ஆற்றாது அதனைத் தாமதப்படுத்துவது அல்லது தள்ளிவைப்பது ஆகும். அது தவறான செயலாகும். இது நேர முகாமைத்துவப் பிரச்சினை மட்டுமல்ல. சுய கட்டுப்பாட்டில் உள்ள தோல்வியே நம்மை அறிவார்ந்த வகையில் சிந்திக்கத் தவறும் முறையில் செயற்பட வைக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த தாமதம் எதிர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்பதை அறிந்திருந்தாலும், செய்யவேண்டிய செயல்களை அல்லது விடயங்களைத் தள்ளி வைப்பதே காரணமாகும். இதனை ஆங்கிலத்தில் Procrastinating Behaviours எனக்கூறுவர்.

'தொடர்ந்து செயல்களைத் தள்ளிப் போடும் ஒருவர் இறுதியில் சிறிதளவு சாதிக்கிறார் என்று பொருள்' என ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான எட்வர்ட் யங் (1683-1765) எழுதிய இரவு எண்ணங்கள் என்பதிலிருந்து இந்தப் பழமொழி உருவானதாகக் கொள்வர். தள்ளிப்போடுதல் எதிர்மறையானதும் மன ஆரோக்கியத்திற்குக் கேடு விளைப்பதும் ஆகும். தள்ளிப்போடுபவர்கள் அதிக அளவு பதட்டம் மற்றும் மோசமான அவசர மனநிலைக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். தள்ளிப்போடுதல் உடல் நோய்களுடன் கூட தொடர்புடையதாகக் கண்டறியப்பட்டுள்ளது. விடாமுயற்சி வெற்றியைத் தரும் என்பதை 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் பழமொழி நினைவூட்டுகின்றது.

தள்ளிப்போடுவது என்பது ஒவ்வொருவருக்கும் ஒரு காலத்தில் ஏற்படும் பிரச்சினை. வாழ்க்கையில் முக்கியமான விடயங்களைப் பெறுவதில் இருந்து தடுக்கும்போது அது ஒரு தீவிரமான பிரச்சினையாக மாறுகிறது. ஒழுங்கின்மை, முக்கியமற்ற விஷயங்களைச் செய்வதில் நேரத்தை வீணடித்தல், கவனம் இல்லாமை, நிராகரிப்பு, தோல்வி, பயம் ஆகியவை எடுத்துக்கொண்ட விடயத்தைப் பின்போடும் பிரச்சினையின் ஒரு பகுதியாகும். 'பள்ளியில் தூங்கி அவன் படிப்பிழந்தான்' என்பது படிக்காது பிற்போடுவதையும் கவனம் செலுத்தாது விடுவதையும் குறிக்கின்றது.

தள்ளிப்போடுதல் மனச்சோர்வு, பதட்டம் மற்றும் மன அழுத்தம், தனிமை, வாழ்க்கையில் திருப்தியின்மை ஆகியவற்றின் அறிகுறிகளுடன் தொடர்புடையது எனப்படுகின்றது. தள்ளிப்போடுதல் என்பது பொதுவான உடல் ஆரோக்கிய பிரச்சினைகள், இருதய நோய்கள், ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறை நடத்தைகள் ஆகியவற்றுக்குக் காரணமாகவும் அமைகின்றது என அண்மைய ஆய்வு ஒன்று எடுத்துக்காட்டுகின்றது. பின்விளைவுகள் இருந்தபோதிலும், நாம் ஏன் செயல்களை நிறைவேற்றாமல் தள்ளிப்போடுகிறோம் இது தனி ஒருவருக்கான பிரச்சினை அல்ல பெரும்பாலானவர்களின் பொதுவான பிரச்சினையாகும்.

## தள்ளிப்போடுதல் எவ்வளவு சாதாரணமானது அல்லது பொதுவானது?

சிலர் ஊக்கத்தோடு செயற்படுவதில் சிறந்தவர்களாக இருந்தாலும், விரும்பத்தகாத பணிகளைச் சமாளிக்கத் தள்ளிப்போடுகின்றனர். தள்ளிப் போடுவது மிகவும் பொதுவான பிரச்சினையாகும். கல்லூரி மாணவர்களில், ஏறக்குறைய அனைவரும் சில சமயங்களில் பிற்போடுதலை ஒப்புக்கொள்ளுகின்றனர். இறுதி நேரம் வரை தாம் செய்ய வேண்டியவற்றைக் காலமிருந்தும் செய்யாது அதனைப் பிற்போட்டு இறுதி நேரத்தில் ஆமையும் முயலும் கதையாக கோட்டை விடுகின்றனர். வெற்றியாளர்கள், தம்மைத்தாமே பகுப்பாய்வுக்கு உட்படுத்தி (Self Analysis) தங்களுடைய பலம், பலவீனம் பற்றி அறிந்துகொள்ளுவர். வெற்றி வாய்ப்புக்கள், எதிர்கால பயங்கள் போன்றவற்றை அலசி ஆராய்ந்து இலக்கைத் தீர்மானிக்கிறார்கள். பின்பு திட்டமிட்டு, குறிக்கோளுக்குரிய கால எல்லையைத் தீர்மானித்து, தங்களுடைய அறிவை வளர்த்து திறமையை ஊக்குவித்து நேர்மறை எண்ணப் பாங்குடன், தம்மைத் தாமே ஊக்கப்படுத்திக் குறிக்கோளை அடைகின்றனர்.

Rozental A, Forsström D, Hussoon A, Klingsieck KB. ஆகியோர் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஆய்வுகளை நடாத்தினர். 'ஒருவர் எவ்வளவு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டவராகவும் அர்ப்பணிப்புடனும் இருந்தாலும், அவர் வேலையில் நேரத்தைச் செலவழித்திருக்க வேண்டிய நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பது, முகநூல் தளத்தில் மேலோட்டமிடுவது, நேரலையில் கொள்வனவு செய்தல் போன்ற அற்பமான செயல்களில் பல மணிநேரம் செலவிடுவது தெரியவந்தது, செய்யவேண்டிய செயலைக் குறித்த நேரத்திற் செய்யவிடாது பிற்போடுதலால் எவ்வித பயனும் இல்லை என்பதை உணர்ந்து செயற்படவேண்டியது வெற்றிக்கு அடிப்படையாக அமையும்.

## பள்ளி தொடர்பான திட்டங்கள்:

வேலைக்கான திட்டத்தை முடிப்பதை எவர் பிற்போடுகிறார்களோ, எவர் வீட்டுப் பாடங்களைத் தவிர்க்கிறார்களோ, அல்லது வீட்டு வேலைகளைப் புறக்கணிக்கிறார்களோ அவர் தம் வேலையில் பின்னடைவை எய்துவார். வேலையைப் பிற்போடுவதால் பரீட்சையில் சிறந்த மதிப்பெண்களை பெறமுடியாது. இவர்கள் வாழ்க்கையில் பெரும் பின்னடைவைச் சந்திக்கநேரிடும், அது பெரும் விளைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பிற்போடுவது ஒரு தீவிரமான பிரச்சினையின் அறிகுறி. பிற்போடுவது வேறு விடயங்களில் கவனம் செலுத்துதல், சோம்பல் ஆகியவற்றாலும் இடம்பெறலாம்.

## தள்ளிப்போடுவதற்கு என்ன காரணம்?

தள்ளிப்போடுவதற்கு பங்களிக்கும் மிகப்பெரிய காரணிகளில் ஒன்று, ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஒரு வேலையைச் செய்ய நாம் உத்வேகம் அல்லது உந்துதல் பெற வேண்டும் என்பதே கருத்து ஆகும். அதற்கு மாறாக சோம்பல் நிறைந்தவர்களாக இருப்பதும் ஒரு காரணியாகும். சில விருப்பமற்ற பணிகளைச் செய்ய சரியான மனநிலைக்குத் திரும்பும் வரை செய்யாமல் காத்திருந்தால், சரியான நேரம் ஒருபோதும் வராது மற்றும் பணி ஒருபோதும் முடிவடையாது. இருப்பினும், உந்துதலுக் காகக் காத்திருப்பது தள்ளிப்போடுவதற்கு பங்களிக்கும் ஒரே பிரச்சினையாக அமையாது. பின்வருபவர்கள் ஒரு பாத்திரத்தை வகிக்கக்கூடிய வேறு சில காரணிகளாகின்றனர்:

## கல்வியாளர்கள்:

மாணவர்களிடையே பிற்போடுதல் குறிப்பாக உச்சரிக்கப்படலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். மதிப்பிடப்பட்ட 75% மாணவர்கள் தொடர்ந்து பின்போடுகிறார்கள், மேலும் இந்த மாணவர்களில் பாதி பேர் இந்த நடத்தை ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக உணர்கிறார்கள். ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, சில பெரிய அறிவாற்றல் சிதைவுகள் கல்வித் தாமதத்திற்கு வழிவகுக்கும். அதனைப் பல மாணவர்கள் தவிர்ப்பதற்கு முனைகின்றனர் என்பதும் கருத்திற்கொள்ளத்தக்கது. கல்வித்துறையில், பின்போடுதல் என்பது நன்கு அறியப்பட்ட, ஒரு பொதுவான நிகழ்வாகும். மாணவர்கள் கற்றல் மற்றும் படிப்பில் உள்ளார்ந்த பணிகள் மற்றும் செயற்பாடுகளை தாமதப்படுத்துகிறார்கள், தாமதம் காரணமாக அவர்களின் அடைவுகள் மோசமாக இருக்கும் என்பது வெளிப்படை. சில மாணவர்களுக்கு, பாடசாலை வேலைகளைத் தள்ளிப்போடுதல் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்கலாம், மற்றவர்களுக்கு இது ஒரு பழக்கம் அல்லது மனப்பான்மையின் பண்பார்ந்த அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். ஏறக்குறைய அனைத்து மாணவர்களும் எப்போதாவது ஒருமுறை தங்கள் செயல்களைத் தள்ளிப்போடுவதில் ஈடுபடுவதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. அதே நேரத்தில் 75% பேர் வழக்கமாக தள்ளிப்போடும் நடத்தையைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த நடத்தையைத் தள்ளிப்போடுபவர்களில் ஏறக்குறைய பாதிப் பேருக்கு, தள்ளிப்போடுதல் என்பது ஒரு உண்மையானதுமம், நிலையானமான பிரச்சினையாகும் என Steel, 2007, குறிப்பட்டுள்ளார். எவ்வாறாயினும், அவர்கள் அனைவரும் ஒத்திவைப்பதில் உள்ளார்ந்த சுய-கட்டுப்பாட்டு சிக்கல்கள் காரணமாக உதவியை நாடவில்லை என்று கருதலாம், மேலும், தள்ளிப்போடலுடன் தொடர்புடைய அவமான உணர்வுகள் காரணமாக எதிர்மறையான விளைவுகளின் வெளிச்சத்தில், கல்விச் சாதனைகள் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றிற்கு ஒத்திவைப்பு காரணமாக அமையலாம். தேவையான ஆதரவை வழங்குவதற்காக மக்கள், மாணவர் சுகாதார மையங்களில் உதவியை நாடும் மாணவர்களின் விஷயத்தில், அவர்கள் தீவிரமான அல்லது குறைவான ஒத்திவைப்பு தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்களா என்பதைப் பார்ப்பதும் உதவியாக இருக்கும், இதனால் அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப ஆதரவை வழங்க முடியும். தள்ளிப்போடுவது அவர்களின் கல்வி சாதனைகளுக்கு மட்டுமல்ல, மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தும். மேலும் உடல் மற்றும் உளவியல் நல்வாழ்வு பாதிக்கப்படும்.

## கல்விதொடர்பான நடத்தையைப் பின்போடுதல்:

திட்டமிடப்பட்ட செயலைத் தானாக முன்வந்து தாமதப்படுத்துவது மோசமான செயலாகக் கருதப்படுகிறது. பிற்போடுதல் என்பது நிகழ்வின் இரண்டு முக்கிய அம்சங்களைப் பிரதிபலிக்கிறது.

- முடிவெடுக்க முடியாது ஒன்றைக் கைவிடுதலாகும்: பிற்போடுதல் என்பது இலக்கை நோக்கிய நடத்தையில் ஒரு காரியத்தை முடிவெடுக்க முடியாது கைவிடுதலாகும்.
- கைவிடுதலால் உடலில் ஏற்படும் உணர்வுகள் : பிற்போடுதல் என்பது இயற்கையில் கொடூரமானது, ஏனெனில் தனிநபர்கள் சிறப்பாக ஒரு செயலை ஆற்றுவதற்கு மாறாக உத்தேசித்துள்ள நடவடிக்கையை கைவிடுகின்றனர். பிற்போடுதலால் வருத்தம், அவமானம், குற்ற உணர்வு, கவலை மற்றும் பதட்டம் போன்ற உணர்வுகளால் மனிதன் பீடிக்கப்படுகிறான்.

ஒரு செயலை விளைவுகளை எதிர்பார்க்காது சடுதியாகச் செய்யாது ஆற அமர்ந்து திட்டமிட்டு செய்யக் காலதாமதம் கண்டிப்பாகத் தேவையான ஒன்றாகக் கருதப்படுவதால், காலதாமதம் என்பது தந்திரோபாய உத்தி என்றும் கூறப்படுகிறது.

கல்வி தொடர்பான செயற்பாட்டில் தள்ளிப்போடுதல் சுய-ஒழுங்குமுறையில் தோல்வியாக அறிவுறுத்தப்படுகிறது.

மாணவர்களைப் பொறுத்தவரை, கல்வித் தாமதம் சிலருக்கு ஒரு சிறிய தொல்லையாக இருந்தாலும், மற்றவர்களுக்கு இது கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. ஆதலால் இதனை எவ்வாறு தடுக்கலாம்.

- பணிகளைச் செய்ய ஒருவருக்கு எவ்வளவு நேரம் தேவைப் படும் என்பதை உணர்ந்து கருமம் ஆற்றுதல் வேண்டும்
- எதிர்காலத்தில் ஒன்றைத் திருப்திகரமாகச் செய்ய தனக்கு மற்றவர்கள் எவ்வளவு உந்துதலாக இருப்பார்கள் என் பதை கருத்திற்கொண்டு செயற்படுதல் அவசியம்
- ஒரு திட்டத்தில் வேலை செய்ய ஒருவருக்கு சரியான மனநி லையில் இருக்க வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டு காரியங்களை ஆற்றவேண்டும்

## பக்கச் சார்பு அல்லது ஒருபக்கமாக சிந்தித்தல்:

தற்போதைய பக்கச்சார்பு என்பது மனித நடத்தையில் காணப்படும் ஒரு நிகழ்வு ஆகும், இது தள்ளிப்போடுவதற்கு வழிவகுக்கும். உடனடி மனநிறைவு மற்றும் வெகுமதிகளால் நாம் அன்றாடம் ஊக்குவிக்கப்படுகிறோம். ஊக்கமடைகி றோம். இதனாலேயே தள்ளிப் போடும் எண்ணம் மனித மனத் தில் எழுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு வலைப்பதிவு இடு கையை வெளியிடுவதற்கு எடுக்கும் நீண்ட கால வெகும தியை விட படுக்கையில் தங்கி டிவி பார்ப்பதன் ஊடாக உட னடி வெகுமதி கிட்டும்; அது மிகவும் ஈர்க்கக்கூடியது, முன் னையதை நிறைவேற்ற அதிக நேரம் எடுக்கும்.

## மனச்சோர்வு அல்லது மனவழுத்தம்:

தள்ளிப்போடுதல் மன அழுத்தத்தின் விளைவாகவும் இடம் பெறுவதற்குக் காரணமாகலாம். நம்பிக்கையின்மை, உதவி யற்ற தன்மை மற்றும் ஆற்றல் இல்லாமை போன்ற உணர்வு கள் எளிமையான பணியைத் தொடங்குவதை அல்லது முடிப் பதைக் கடினமாக்குகிறது. மனவழுத்தம் சுய சந்தேகத்திற்கு வழிவகுக்கும்.

## நாளாந்த நடத்தைகளை மன அழுத்தம் உள்ள வர்கள் தவிர்ப்பது பயன் தரும்:

ஆட்டிப்படைக்கின்ற அல்லது அலைக்கழிக்கின்ற கட்டாய உளக்கோளாறு உள்ளவர்கள் தம் காரியங்களைப் பிற்போடு தல் மிகவும் பொதுவானது. ஒரு காரணம் என்னவென்றால், Obsessive-compulsive disorder (OCD) என்பது மிக நாட் பட்ட ஒழுங்கமைப்பற்ற மனநோயாகும். பெரும்பாலும் தவ றான எல்லாமே சரியானது என்னும் வாதத்துடன் இணைந்த தாக இது காணப்படுகின்றது. இம்மனநோய் புதிய தவறுக ளைச் செய்வது குறித்தஅச்சத்தையும், யாவும் சரியாகச் செய் யப்படுகின்றதா என்ற சந்தேகத்தையும், மற்றவர்களின் எதிர் பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நான் நடந்து கொள்கிறேனா என்பது குறித்துக் கவலைப்படுவதையும் உள ரீதியாகச் செய்கின்றது. இந்த கோளாறு (OCD) உள்ளவர்கள் பெரும்பாலும் முடிவெடுக்க முடியாமல் இருப்பார்கள், இத னால் அவர்கள் முடிவெடுப்பதை விட எந்தக் கருமத்தையும் பிற்போட்டுக்கொண்டே இருப்பார்கள். எதையும் குறித்த காலத்தில் செய்துமுடிக்கமாட்டார்கள்.

## மாற்றத்தை ஊக்குவிக்க உறுதியற்ற தன்மை யைத் தழுவுங்கள்:

கவனக்குறைவு /அதிகச் செயற்பாட்டுக் கோளாறு (ADHD) உள்ள பல பெரியவர்கள் தள்ளிப்போடுதலுடன் போராடுகி றார்கள். வெளிப்புறத் தூண்டுதல்கள் மற்றும் உள் எண்ணங் களால் அவர்கள் திசைதிருப்பப்படும்போது, ஒரு வேலை யைத் தொடங்குவது கடினமாக இருக்கும், குறிப்பாக அந்த பணி அவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருக்கும்.

## பிற்போடுவது மனநோயா?

தள்ளிப்போடுவது மனநோய் அல்ல. ஆனால் சில சந்தர்ப்பங் களில், இது மனச்சோர்வு, OCD அல்லது ADHD (Attention deficit hyperactivity disorder) போன்ற அடிப்படை மனநல நிலையின் சிறப்பியல்புகளாகவும் இருக்கலாம். மனச்சோர்வு மற்றும் பிற்போடுதல் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு, கவனப் பற்றாக்குறை அதிகளவு செயற்பாட்டுக் கோளாறு கள் (ADHD) உள்ள குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரி டம், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 42 இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பத் தொன்பது வீதமானவர்கள் தம் அன்றாடக் கடமைகள் பல வற்றைப் பிற்போடுகின்றார்கள்.

## ஏன் நடத்தைகள் பிற்போடப்படுகின்றன?

தமது கடமைகளைப் பிற்போடுபவர்கள் தம் நடத்தையை நியாயப்படுத்த முனைகின்றார்கள். அடிக்கடி பல சாக்கு போக்குகளைக் கூறுவதுடன் பகுத்தறிவுரீதியான தர்க்கத்தை முன்வைக்கின்றார்கள். பொதுவாகச் சோம்பல், வேறு செயல் களில் நாட்டம் அல்லாதவர்கள் தம் கருமங்களில் கவனத் தைச் செலுத்தாது தாங்கள் செய்யவேண்டியவற்றைப் பிற் போடுகின்றார்கள். சிலருக்குப் பிற்போடுவது ஒரு உள நோயாகவே மாறிவிடுகின்றது, அதனால் இதனை நாட்பட்ட நடத்தை அல்லது மனநோய் என்கின்றனர்.

## மக்கள் தங்கள் செயல்களைப் பிற்போடுவதற் கான பொதுவான காரணங்களில் சில:

- என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் இருப்பது
- ஒன்றை எப்படி செய்வது என்று தெரியாமல் இருப்பது
- ஏதாவது செய்ய விரும்பாதது
- ஏதாவது செய்யும்போது கவலைப்படாமல் இருப்பது
- ஒன்றைச் செய்வதற்கான மனநிலையில் இல்லை
- கடைசி நிமிடம் வரை காத்திருக்கும் பழக்கம்
- அழுத்தத்தின் கீழ் நீங்கள் சிறப்பாகச் செயற்படுவீர்கள் என்று நம்புதல்
- கடைசி நிமிடத்தில் முடித்துவிடலாம் என்று நினைப்பது
- தொடங்குவதற்கான முன்முயற்சி இல்லாதது
- மறத்தல்
- நோய் அல்லது மோசமான ஆரோக்கியத்தைக் குறை கூறு தல்
- சரியான தருணத்திற்காகக் காத்திருக்கிறது
- பணியைப் பற்றி சிந்திக்க நேரமில்லாது இருத்தல்

## பிற்போடுதல்:

- ஒரு செயலை மேற்கொள்ளும்போது முடிவெடுப்பதிலும் செயற்படுத்துவதிலும் சிக்கல் இருப்பதாகக் கருதினால் பணியைத் தாமதப்படுத்துங்கள்.
- அழுத்தத்தின் கீழ் பணிபுரிவது சவாலான விடயம். ஆதலால் அழுத்தம் தரக்கூடிய செயல்களை முற்கூட்டியே முடிவு எதனையும் எடுக்காது ஒரு காரியத்தை தொடங்காதீர்கள்
- எல்லாம் ஒழுங்காகவும் சரியாகவும் இருக்கவேண்டும் என்னும் உளப்பாங்கு கொண்டவர்கள், ஒரு பணியைச் சரியாக முடிக்க முடியாது. அவர்கள் பயத்தில் பணிகளைத் தள்ளிப் போடுகிறார்கள்.
- எதிர்காலத்தைப் பற்றி கனவு காண்பவர்கள் காரியத்தில் கவனம் செலுத்துவதில் திறமை இல்லாததால் பணிகளைத் தள்ளி வைக்கின்றனர்.
- தங்கள் நடத்தைகள் பற்றிக் கவலைப்படுபவர்கள் மாற்றத்திற்கு பயந்து தம் பணிகளைத் தள்ளி வைக்கிறார்கள்.

## பிற்போடாதவர்கள்:

நீங்கள் விஷயங்களைத் தள்ளிப் போடாதீர்கள். அமெரிக்க உளவியல் சங்கத்தின் கூற்றுப்படி, தள்ளிப்போடாதவர்கள் பணியில் அதிக கவனஞ் செலுத்துகிறார்கள். மற்றவர்கள் தங்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்று அவர்கள் கவலைப்படுவதை விட, அவர்கள் தங்களை இப்படித்தான் பார்க்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

பரந்த மனப்பான்மைகளில் ஒன்றான மனசாட்சி எனப்படும் ஆளுமைப் பண்பிலும், தள்ளிப்போடாதவர்கள் அதிகமாக இருப்பார்கள். அதிக மனசாட்சி உள்ளவர்கள் சுய ஒழுக்கம், விடாமுயற்சி மற்றும் தனிப்பட்ட பொறுப்பு உள்ளிட்ட பிற பகுதிகளிலும் உயர்ந்தவர்களாக இருப்பார்கள்.

## பிற்போடுவதன் எதிர்மறைத் தாக்கங்கள்:

தள்ளிப்போடுதல் நாட்பட்டதாக இருக்கும்போது இது மிகவும் தீவிரமான பிரச்சினையாக மாறும். மற்றும் ஒரு நபரின் அன்றாட வாழ்க்கையைத் தீவிரமாக பாதிக்கத் தொடங்கும். இது போன்ற சந்தர்ப்பங்களில் நேர முகாமைத்துவத் திறனைக் கருத்தில் கொண்டு பிற்போடுவதைத் தவிர்க்கவேண்டும்.

எந்த ஒரு விடயமானாலும் இறுதி நேரம்வரை காத்திருக்காது செயலைத் தொடங்கவேண்டும். ஒத்திவைப்பானது ஒரு நபரின் மன ஆரோக்கியம் மற்றும் சமூக, தொழில் மற்றும் நிதி நலன் உட்பட பல விடயங்களில் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தும்.

- அதிக அளவு மன அழுத்தம் மற்றும் நோய்
- சமூக உறவுகளின் மீது சுமத்தப்பட்ட சுமை
- நண்பர்கள், குடும்பத்தினர், சக பணியாளர்கள் மற்றும் சக மாணவர்களிடமிருந்து மனக்கசப்பு
- தவறிய பில்கள் மற்றும் வருமான வரி ரிட்டர்ன்களின் விளைவுகள்

## ஒத்திவைப்பைத் தவிர்ப்பதற்கான பயிற்சிகள்:

- செய்ய வேண்டியவை குறித்தான பட்டியலை உருவாக்குதல் : உங்கள் வேலையைத் திருப்திகரமாகச் செய்ய, செய்து முடிக்க வேண்டிய ஒவ்வொரு உருப்படிக்கும் ஒரு நிலுவைத் தேதியை வைத்துக்கொள்ளப் பழகுதல்.
- வேலையை சிறிய கூறுகளாக ஆக்குதல் : செய்யவேண்டியவற்றின் பட்டியலில் உள்ள உருப்படிகளை சிறிய, சிறிய அலகுகளாக பிரித்தெடுத்தல், இதனால் செய்து முடிக்க வேண்டிய பணிகள் மிகவும் பெரிதாகவோ, அதிகமானவையாகவோ தோன்றாது.
- எச்சரிக்கை அறிகுறிகளை ஏற்றுக்கொள்ளுதல் : தள்ளிப் போடுதல் பற்றிய எண்ணங்கள் வரும்போது அது குறித்து உரிய கவனஞ் செலுத்த வேண்டும். மற்றும் தூண்டுதலை எதிர்க்க முடிந்த அனைத்தையும் செய்தல் வேண்டும்.
- கவனச்சிதறலை நீக்குங்கள் : இன்ஸ்டாகிராம், முகநூல், யுரியூப் புதுப்பிப்புகள் அல்லது உள்ளூர் செய்திகள் என எதுவாக இருந்தாலும் உங்கள் கவனத்தை அதிகம் இழுப்பது எது என்று அறிந்து கொண்டு அவற்றிற்கு கடிவாளமிடப் பழகுதல்.
- எங்களை நாங்களே தட்டிக்கேட்டல்: செய்ய வேண்டிய பட்டியலில் உள்ள ஒரு பொருளை சரியான நேரத்தில் முடிக்கும்போது, எம்மை நாமே வாழ்த்திக் கொள்வதைப்போல ஒரு செயலைப் பிற்போடும்போது அது சரியா, தவறா என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

## எடுத்துச்செல்லும் பொருட்கள்:

நீங்கள் சில நேரங்களில் செய்யும் வேலைகளை அல்லது விடயங்களைத் தள்ளி வைத்தால், கவலைப்பட வேண்டாம். அது நம் அனைவரின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களில் ஒன்று. பெரும்பாலும் நாம் விரும்பாத பணிகள்தான் கடைசி நிமிடம் வரை தள்ளிப்போடப்படும். இது பொதுவானதாக இருந்தாலும், செய்ய வேண்டிய வேலையை உரிய காலத்தில் செய்யாது தள்ளிப் போடுவதால் அந்நடத்தைவாதமுறை எம் உறவுகளைக் காயப்படுத்தும் என்பது திண்ணம். இந்நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் இவ்வேலையைத் தொடர நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். செய்ய வேண்டிய விடயங்களின் பட்டியலை உருவாக்கி வேலையை சிறிது சிறிதாகத் தொடங்கவேண்டும். இதனை நினைவில் கொள்ளுதல் வெற்றியைத் தரும். செயலொன்றைச் செய்யும்போது தொலைக்காட்சி பார்த்தல், யுரியூப்பில் நேரம் செலவிடல், முகநூலில் காலத்தைக் கடத்தல் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். பிற்போட்டு செய்யவேண்டியவற்றிற்கு முன்னுரிமை கொடுக்காது எதனைச் செய்யவேண்டுமோ அதனை உணர்ந்து தெரிந்து செயலாற்றவேண்டும். அதுவே பயன் தருவனவாகவும் அமையும்.



sivapalu@thaiveedu.com




பாடசாலை அரங்கு, கல்வியியல் அரங்கு, சிறுவர் அரங்கு என்பவற்றைப் பார்ப்பதற்கு முன்னர் பாடசாலை, கல்வி, கல்வியின் முக்கியத்துவம், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், மாணவர்களின் பண்புகள் என்பவற்றைப் பற்றிப் பார்ப்போம். பாடசாலை என்பது சமூகத்தின் பொறுப்பு வாய்ந்த நிறுவனமாகும். சமூகத்தின் வெளிப்பாங்கான பண்புகளை இளைய தலைமுறையினருக்கு பயிற்றுவிக்கும் இடமாகவும் காணப்படுகின்றது.

கல்வி என்பது மாணவர்களின் உள்ளே இருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வது. இக்கல்வி முறையை இலங்கையில் இலவசமாக C.W.W கன்னங்கரா அவர்கள் அறிமுகப்படுத்தினார். அனுபவத்தை அனுபவத்தால் அனுபவத்தின் மூலமாக ஆசிரியரால் மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிவூட்டலே கல்வியென 'John Doue' எனும் அறிஞர் குறிப்பிட்டார்.

தற்பொழுது கல்வியானது நடைமுறையில் சான்றிதழ் மையப்பட்டதாகவும், போட்டிப் பரீட்சையாகவும், எழுத்துப் பரீட்சையாகவும், புள்ளிகள், பெறுபேறுகள் எனும் அடிப்படையில் தவறான திசைக்கோட்படுத்தலை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயமாகவே அமைகின்றதைக் காணலாம். இக்கல்வி முறையில் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதோடு கல்வியைப் பரீட்சையாகவும் வெறுமனே பாடத்திட்டமாகவும் விளங்கிக் கொண்டுள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறு கல்வியைப் பெறும் மாணவர்களின் ஆளுமை விருத்தியானது கேள்விக்குறியாகக் காணப்படுவதுடன், பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகம் வரை கல்வியைப் பெற்று வெளியேறுபவர்களின் ஆளுமையானது மாறுதலற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்தல், சமயோசிதமாகச் செயற்பட வழிவகுத்தல், பொருளாதார நிலையை உயர்த்தல், சமூகத் தகுநிலையை உயர்த்தல், நாட்டினுடைய எழுத்தறிவு வீதத்தினை உயர்த்தல், சமூகத்தில் நன்நடத்தை உடையவர்களாகத் திகழ வைத்தல், ஆரோக்கியமான கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவுதல், மாணவர்களின் பகுத்தறிவுத் தன்மையை உயர்த்துதல், சமூகத்துடன் இணைந்து வாழும் தன்மையை உருவாக்குதல், சுய சிந்தனையாளர்களாகவும் தன்நம்பிக்கை உடையவர்களாகவும் மாற்றியமைத்தல், சூழலில் ஏற்படும் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றி பெறச்செய்தல், வாழ்க்கை முறையின் தேவைகளைப் பற்றி போதிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள உதவுதல், குடும்ப வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்கும் தேவையானவற்றை விளங்கிக் கொள்வதற்கும் வழிவகுத்தல் என்பன கல்வியினுடைய முக்கியத்துவங்களாகும்.

கற்றல் என்பது தொடர்ச்சியானதும் நிலையானதுமான நடத்தை மாற்றமாகும். இது அனுபவத்தினால் உருவாகி நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் செயற்பாடாகவும் காணப்படுகின்றது. மாணவர்கள் தமது நண்பர்கள் ஊடாக பல்வேறு பழக்க வழக்கங்களையும் மனப்பாங்குகளையும் கருத்துகளையும் அனுபவரீதியாகக் கற்றுக் கொள்வதோடு தமது ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வளர்த்துக் கொள்கிறார்கள்.

அந்த வகையில் அழகியல் பாடங்களில் ஒன்றான நாடகமும் அரங்கியலும் பாடத்தை ஏனைய ஒருசில பாடங்களைப் போன்று போதனை முறையில் கற்பிக்காமல், பிரயோகமுறையில் கற்றல்செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அக்கற்றல் செயற்பாடுகளை கல்வியியல் அரங்க எண்ணக்கருவுடனும், அதனுடைய நுட்பங்களான களப்பயிற்சி முறைமைகள், பட்டறையரங்குகள் என்பவற்றிற்கூடாகவும் பிரயோக முறையில் நாடக அரங்கியல் பாடநெறி ஆசிரியர்கள் முன்னெடுக்கும் போது மாணவர்கள் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்த்துக் கொள்வதுடன் கற்பதில் ஆர்வமும் கற்பனை வளமும் அழகியல் சார்ந்த திறன்கள் என்பவற்றுடன் தாங்களாகவே எதையும் முன்வந்து செய்யும் திறன்கள் என்பவற்றையும் வளர்த்துக் கொள்வார்கள். அத்தோடு பாடசாலைக் கல்வி முறையானது தனியனே போதனை முறைக் கல்வியல்லாமல் பிரயோகமுறைக் கல்விமுறையாகவும் வளர்ச்சி நிலையை அடையும்.

## பாடசாலை அரங்கு:

1980-களின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக பாடசாலை அரங்கு என்ற அரங்கப் போக்கானது உருவாகியது. பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு நிகழ்த்தப் பெறுபவை பாடசாலை அரங்குகளாகும். மேலும் பாடசாலை நாடகங்கள் பாடசாலைச் சமூகத்தையே மையப்படுத்தி ஆற்றுகை செய்யப்படுகின்றன.

பாடசாலை அரங்குகளில் சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களுக்குரிய நாடகங்களும், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குரிய நாடகங்களும் உள்ளடங்கும். அப்பிரிவு நிலைகளுக்கேற்ப வேறுபட்ட கதைப் பொருட்களை உள்ளடக்கியதாக பாடசாலை நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. சில பாடசாலை நாடகங்கள் நடித்த மாணவர்களுடன் கலந்துரையாடி எழுதப்பட்டுள்ளன. பாடசாலை நாடகங்கள் கல்வி, மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், பெற்றோரின் கருத்து நிலைகள் என்பவற்றைக் கருப்பொருட்களாகக் கொண்டமைந்துள்ளன. இவ்வாறான கருப்பொருட்களைக் கொண்டமைந்துள்ள நாடகங்கள் 1979-ம் ஆண்டு கா.பொ.த உயர்தர வகுப்புகளில் நாடகமும் அரங்கியலும் பாடத்துறையாக அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் புதிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது எனலாம். பெரும்பாலான பாடசாலை நாடகங்கள் மாணவர்களது பிரச்சினைகளையே மையப்படுத்தியதுடன் பெண் கல்வி, மாணவர் ஒழுக்கம், பால்நிலைச் சமத்துவம், கல்விப் பிரச்சினைகள், சுய சிந்தனைக் கட்டுப்பாடு, பெற்றோர்கள் மாணவர்களினை புரிந்து கொள்ளல் போன்ற பிரச்சினைகளையும் கொண்டமைந்திருந்தன.

ஆரம்பத்தில் மகிழ்வளிப்பு நோக்கில் நிகழ்த்தப்பெற்ற பாடசாலை நாடகங்கள் காலப்போக்கில் கற்றல் ஊடகமாகவும், கல்விப்புலம் சார்ந்த பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் பரிணமித்தன. இதன் காரணமாகப் பாடசாலை அரங்கானது 'கல்விசார் அரங்காகவும்' நோக்கப்படுகின்றது.

## கல்வியியல் அரங்கு:

ஈழத்தில் 1980-களில் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட அரங்க முறைகளுள் ஒன்றே கல்வியியல் அரங்காகும். இவ்வரங்கானது பிரயோகநிலை சார்ந்த செயற்பாடுகளில் மிகக் காத்திரமான எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்ற அரங்க முறைமை எனும் வகையில் முதன்மை பெறுகின்றது. இன்றைய கல்விமுறைச் சூழல் பாடப் புத்தகங்களோடு மட்டும் மட்டுப்படுத்தி நிற்கும் மாணவர்களை உருவாக்கி விடுவதுடன், கல்வியானது பாடப் புத்தகத்தில் இருப்பதை பாடமாக்கி ஒப்புவித்தலோடு முடிவடைகிறது. அந்த வகையில் கல்வியியல் அரங்கானது அதற்கு மாறாக செய்து கற்றல் என்பதையே வலியுறுத்தி நிற்கின்றது. சுருங்கக் கூறின் 'செய்வதினூடாகக் கற்றல்' கல்வியியல் அரங்கின் சாராம்சமாகும்.

கற்றல் இடர்பாடுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுடைய கல்வித் தேவைகளை நிவர்த்தியாக்குவது ஆசிரியர்களின் கடமையாக உள்ளது. காரணம் மாணவர்களிடம் யாதாயினும் ஒரு திறமையாவது ஒளிந்து கொண்டிருக்கும். அந்த திறமை பல்வேறு காரணிகளால் மறைக்கப்பட்டிருக்கலாம், மழுங்கடிக்கப்பட்டிருக்கலாம். சிலவேளை, மாணவர்கள் அதை மறந்தும் இருக்கலாம். அல்லது அவர்களுக்கே தெரியாமலும் இருக்கலாம். இந்நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அதனை வெளிக்கொணர்ந்து சிறுகச் சிறுக அதனை ஊக்கப்படுத்தும் போது மாணவர்களும் தங்களைத் தாங்கள் உணர்வதோடு, தங்களிடமுள்ள திறமைகளை வெளிப்படுத்த முயற்சி செய்வார்கள். இப்பணி கல்வியியல் அரங்காலே சாத்தியப்படுத்தப்படுகின்றது.

அத்தோடு அரங்க ஆற்றுகைகளில் பங்கு கொள்ளும் மாணவர்களில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது. கூச்ச சுபாவமுள்ளவர்கள் அதிலிருந்து விடுபட்டனர், முன்வந்து கதைப்பதற்குத் தயங்கிப் பின்நின்றவர்கள் சரளமாக முன்வந்து கதைத்தனர், ஆடிப் பாடுவதற்கு அஞ்சியவர்கள் ஆடினார்கள், பாடினார்கள், எல்லாவற்றிலுமே தன்னையே முன்னிலைப்படுத்தி நின்றவர்கள் ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கும் வந்தனர். ஆக்கத்திறனில் பின்தங்கியிருந்த, தங்களின் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்த மாணவர்களும் நாடக அளிக்கைகளில் பங்குகொண்டதன் பின்னர் படிப்பிலும், ஏனைய சகல துறைகளிலும் உற்சாகமாகப் பங்குகொண்டு தமது ஆளுமைகளை வளர்த்துக் கொண்டனர்.

அரங்க ஆற்றுகைகளில் கலந்து கொண்ட மாணவர்கள் முன்பைவிட கல்வியிலும், பாடசாலையின் ஏனைய கருமங்களிலும் கூடியளவு ஆர்வத்தோடு ஈடுபட ஆரம்பித்தார்கள். முன்னர் படிப்பிலும், பாடசாலை நிகழ்வுகளிலும் ஆர்வம் காட்டாதிருந்த மாணவர்கள் இரண்டிலுமே ஆர்வம் கொள்ளத் தொடங்கியதை பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் அவதானித்தனர். இதற்கு அரங்க அனுபவம் அவர்களுக்கு ஆர்வத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வியியல் அரங்கு என்பது ஒரு இலக்குக் குழுவை வைத்துக்கொண்டு, அவர்களோடு வேலை செய்து, அவர்களுக்கூடாக ஒரு நாடகத்தை உருவாக்கி எடுப்பது ஆகும். உதாரணம்: குழந்தை ம. சண்முகலிங்கத்தினால் 'ஆரோடு நோகேன்' எனும் நாடகம் எழுதப்பட்டாலும், மாணவர்களுக்கு களப்பயிற்சி முறைமைகளை மேற்கொண்டு ஆடி, பாடி அவர்களிடமுள்ள திறமைகளை இனங்கண்டு, அவர்களுடைய உளத்தடைகளை நீக்கி கலந்துரையாடி சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளையும் குடும்பங்களில் உள்ள பிரச்சினைகளையும் கலந்துரையாடி அவர்களினூடாகவே கதை உருவாக்கப்படுகின்றது. அவர்களினுடைய சிந்தனைகள், ஆற்றல்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலமே இந்நாடகமானது உருவாக்கம் பெற்றது.

மாணவர்கள் குழு நிலையில் பங்குபற்றி விளையாட்டாகவும், கற்றலாகவும் ஈடுபடும் செயற்பாடுகள் மூலமாகத் தங்களது கற்பனைகளை, கருத்துகளை, உணர்வுகளை வெளிப்படுத்துவது, ஆற்றல்களைக் கண்டுபிடிப்பது, கொண்டாடுவது என்பதனூடாக சுயமான படைப்பாக்கத்திறன், சிந்தனைத்திறன்,

விமர்சன நோக்கு, செயற்பாட்டுத்திறன் என்பவற்றை வளர்த்துக் கொள்வது என செயல்மையக் கற்றல் முறைமை காணப்படுகின்றது.

## கல்வியியல் அரங்கின் முக்கியத்துவம்:

காலனித்துவத்தினுடைய வருகையால் இன்றைய கல்வி முறையானது பரீட்சை மையப்பட்டதாகவும், புள்ளிகளை நோக்கியதாகவும், சான்றிதழ் இலக்குடையதாகவும் காணப்படுகின்றது. இதனை மாற்றி அமைப்பதற்கு கல்வியியல் அரங்கு துணை புரிகின்றது.

கல்வியியல் அரங்கானது கல்வி முறைமை பற்றிய உரையாடல்களை நிகழ்த்தும் களங்களாக இருப்பதுடன், பல்வேறு திறமைகள் கொண்ட அரங்கவியலாளர்களையும் உருவாக்கும் தளங்களாகவும் காணப்படுகின்றது.

ஒவ்வொரு மாணவர்களினுடைய ஆளுமைகளையும் திறன்களையும் வெளிக்கொண்டு வருவதற்கும், எவ்விதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் அவர்களை சுதந்திரமாக இயங்க வைப்பதற்கும், சமூகத்தில் அவர்களை முன்நிறுத்துவதற்கும் கல்வியியல் அரங்கானது துணை புரிகின்றது.

இலங்கையின் கல்வி நிலையில் காணப்படும் தீவிர போட்டி நிலைகளும், பரீட்சைகளும் மாணவர்களதும், ஆசிரியர்களதும் தனித்துவங்களை இழக்கச் செய்யும் நடைமுறைகளும் மாணவர்களை ஒப்பு நோக்கலும் ஆசிரியரையும், மாணவரையும் மன அழுத்தங்களிற்குத் தள்ளி விடுகின்றன. இவ்வாறான அழுத்தங்களுக்குத் தீர்வாக கல்வியியல் அரங்கானது செயற்படுகின்றது.

அத்தோடு பங்குபற்றல் பண்பையும், சேர்ந்தியங்கும் திறனையும், விமர்சன நோக்கையும், படைப்பாக்கத் திறனையும், மதிப்பீட்டுத் திறனையும், பயில் முறையினூடாகப் பெற்றுக் கொள்ளும் வகையிலான செயற்பாடாக கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் அமைகின்றது.

## மாற்றுக் கல்வியாக கல்வியியல் அரங்கு:

கல்வியானது பாடசாலைகளில் பரீட்சை மையப்பட்டதும், சான்றிதழ் மையப்பட்டதும், புள்ளிகள் - பெறுபேறுகள் எனும் அடிப்படையில் பிழையான திசைக் கோட்படுத்தலை நோக்கி நகர்த்தப்படும் விடயமாகவே காணப்படுகின்றது. அத்தோடு பாடத்திட்டம், பாடத்திட்டத்திற்கு உட்பட்டு கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுதல் என நடைமுறைக் கல்வியில் கல்வியின் எல்லை சுருக்கி விடப்பட்டுள்ளது. காலனித்துவத்தினுடைய வருகையுடன் காலனிய கல்வி நடைமுறைகளைப் பேணுவதுடன், கல்விச் சமூகத்தை மாற்றிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும், மாற்றுக் கல்வி முறையாகவும் கல்வியியல் அரங்கு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வியியல் அரங்கானது, கல்வி பற்றிய விவாதங்களை, விமர்சனங்களை முன்னெடுப்பதுடன் மாற்றுக் கல்விமுறைமை பற்றிச் சிந்திக்கவும் தேடவும் வைக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக கல்வியியல் அரங்கே மாற்றுக் கல்வி முறையாகவும் தொழிற்படுகின்றது. கல்வி முறைமை பற்றிய உரையாடல்களை நிகழ்த்தும் களங்களாக கல்வியியல் அரங்கு இருப்பதுடன், அரங்கியலாளர்களை உருவாக்கும் தளங்களாகவும் விளங்கி வருகின்றன.

பாடத்திட்டம் மாத்திரம் கல்வி அல்ல என்பதையும், சமூகம் சார்ந்து செயற்படுகின்ற தன்மையினையும், எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்களை வழங்குகின்ற நிலையையும் கல்வியியல் அரங்கு சாத்தியப்படுத்தி நிற்கின்றது. எழுத்துப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகளில் நிலவும் சமமின்மைகள் களையப்பட்டு, கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ள தளமாகவும், மாற்றுக்கல்வி முறையாகவும் கல்வியியல் அரங்கு விளங்குகின்றது.

கல்வியியல் சார்ந்த பிரச்சினைகளை கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதன் ஊடாகவே தீர்வுகளை எட்ட முடியும். இந்த வகையில் கல்வியியல் அரங்கானது அதற்கான வாய்ப்புகளையும், சமமான பங்குபற்றல் வாய்ப்புகளையும், தமது சுய திறமைகளை வெளிப்படுத்துவதற்கான, வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் மாணவர்களுக்கு வழங்குகிறது. கல்விச் சூழலில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வாக இது இருப்பதுடன், எல்லோரையும் ஈர்க்கின்ற மாற்றுக் கல்வியாகவும் அமைகின்றது. கல்வியியல் அரங்கானது இன்றைய சூழலில் மாணவர்கள் எதிர்நோக்கும் தடைகள், கட்டிறுக்கங்களை விலக்கி, மாணவர்களைச் சுதந்திரமான செயற்பாடுகளில் ஈடுபடுத்தி, வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களை அவர்களுக்கு வழங்கி, ஆர்வத்துடன் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வைக்கும் மாற்றுக் கல்வி முறையாகவும் இருந்து வருகின்றது.

இவ்வாறான அரங்கியல் நுட்பங்களை முன்னெடுக்கும்போது, பொதுவாக மாணவர்களின் சுறுசுறுப்பாக செயற்படும் திறனை விருத்தி செய்தல், கூடிக் கற்றல், குழுவாக இயங்கும் திறனை விருத்தி செய்தல், முன்வைக்கும் திறனை விருத்தி செய்தல், ஞாபகப்படுத்தும் ஆற்றலை விருத்தி செய்தல், மனதை ஒருநிலைப்படுத்தி அவதானிக்கும் திறனை விருத்தி செய்தல், மகிழ்வோடும் இறுக்கமற்ற தளர்வு நிலையில் நின்று செயற்படும் ஆற்றலை விருத்தி செய்தல், பாடசாலையில் ஏனைய நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் என மாணவர்களின் ஒட்டுமொத்த கற்றல் தேவைப்பாடுகளும் நிறைவு செய்யப்படுகின்றன.

அந்த வகையில் களப்பயிற்சிகள், அரங்க விளையாட்டுகள், புதிதளித்தல், கலந்துரையாடல் என்பன மாணவர்களுக்குச் சுதந்திரமான உணர்வினை வழங்கி அவர்களை ஆக்கபூர்வமாகச் செயற்படுவதற்கு உந்து சக்தியைக் கொடுத்துள்ளது. இவ் வரங்க உத்திகளே மாணவர்களை வளப்படுத்தும் கல்வியியல் அரங்கின் அடிப்படை அம்சங்களாக இருந்துள்ளமையை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

## சிறுவர் அரங்கு:

சிறுவர் அரங்கானது சிறுவர்களை மகிழ்விப்பதற்கும், அவர்களை உளநெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வைப்பதற்கும் சிறுவர்களின் கற்பனை ஆற்றலை வளர்த்தெடுப்பதற்கும் நல்ல ஒழுக்க விழுமியங்களைக் கருத்திற் கொண்டு அவர்களை நல்ல சமூகப் பிரஜைகளாக மிளிர வைப்பதற்கும் உதவுகின்

றது. இதுவொரு நியம அரங்கென குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வரங்கில் சிறுவர்களே பார்வையாளர்களாகவும் இருப்பார்கள்.

சிறுவர் அரங்கு மூன்று வகையாகக் காணப்படுகின்றன. அவையாவன சிறுவர்களுக்காகச் சிறுவர்கள் நடித்தல் (நடிகர்கள் யாவரும் சிறுவர்கள்), சிறுவர்களுக்காக வளர்ந்தவர்கள் நடித்தல் (பார்வையாளர்கள் சிறுவர்கள், நடிப்பவர்கள் வளர்ந்தவர்கள்), சிறுவர்களும் வளர்ந்தவர்களும் இணைந்து சிறுவர்களுக்காக நடித்தல் என்பனவாகும். நாடக அரங்கக் கல்லூரி, அரங்கச் செயற்பாட்டுக் குழு, திருமறைக்கலாமன்றம், செயற்திறன் அரங்க இயக்கம் போன்றன இலங்கையில் சிறுவர்களின் அரங்க வளர்ச்சியில் முன்னின்று உழைக்கும் நிறுவனங்களாகும்.

கூட்டாகச் செயற்படும் பண்பு விருத்தியடையும். அவதானம், தற்துணிவு, தனித்துவம், தலைமை தாங்கும் பண்பு, கீழ்ப்படிவு, அகமகிழ்வு, அனுபவம், தன்னடக்கம், பொறுமை, தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், முன்வந்து செயற்படும் ஆற்றல், விட்டுக்கொடுப்பு, மற்றவர்களை ஏற்றுக் கொள்ளும் பண்பு என்பன சிறுவர் நாடகத்தை நடிக்கும் சிறுவர்களுக்கும், தயாரிப்பில் ஈடுபடும் சிறுவர்களுக்கும் ஏற்படும் நன்மைகளாகும். சிறுவர் நாடகத்தை உருவாக்கும்போது ஏமாற்றுதல், அடக்குமுறை, சண்டையிடுதல், தோல்வி, பழிவாங்கல், கொலை, களவு, நீண்ட உரைநடை, கொடூரத்தன்மையுள்ள பாத்திரங்கள், கூடிய கற்பனை என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

இலங்கைத் தமிழரங்கில் சிறுவர் நாடகங்களை அதிகளவிலும் பல்பரிமாணத் தன்மையுடனும் எழுதியுள்ளவர் குழந்தை ம. சண்முகலிங்கம் ஆவார். இவர் ‘கூடி விளையாடு பாப்பா’, ‘கண்டறியாத கதை’, ‘ஒற்றுமையின் சின்னம்’, ‘கண்மணிக் குட்டியார்’, ‘காட்டுராஜசிங்கம்’, ‘நட்பு’, ‘முயலார் முயல்கிறார்’, ‘கூடி வாழ்வோம்’, ‘பாலுக்குப் பாலகன்’, ‘இடுக்கண் வருங்கால்’, ‘ஆச்சி சுட்ட வடை’, ‘வேட்டைக்காரன்’, ‘பந்தயக் குதிரை’, ‘பஞ்சவர்ண நரியார்’, ‘குழந்தைகள் பாவனை செய்யும்’, ‘அன்னத் தடாகம்’, ‘ஒரு பூனையின் விலை என்ன ?’, “ஒற்றுமையே பலம்’, ‘மந்திரத்தால் மழை’, ‘அன்னையும் பிதாவும்’ போன்ற பல சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளார். பேராசிரியர் சி. மௌனகுருவும் ‘தப்பி வந்த தாடி ஆடு’, ‘வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்’ போன்ற சிறுவர் நாடகங்களையும் எழுதியுள்ளார். கலாநிதி சி. ஜெயசங்கர் அவர்களும் ‘பிள்ளை அழுத கண்ணீர்’ எனும் சிறுவர் நாடகத்தை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு கோகிலா மகேந்திரன், இராதாகிருஸ்ணன், பேராசிரியர் சி. சிவசேகரம், மாவை. நித்தியானந்தன், கலாநிதி க. ஸ்ரீகணேசன் போன்றவர்களும், இலங்கை சிங்கள அரங்க மரபிலே சோமலதா சுபசிங்க அவர்களும் தமிழ்நாட்டிலே வேலுசரவணன், இராமானுஜம் போன்றவர்களும் சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளார்கள். சிறுவர் அரங்கானது ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உறுதுணையாக நிற்கும் சாதனமாகும்.



rathikala@thaiveedu.com





# சமகாலத்தையும் எதிர்காலத்தையும் உருவாக்கும் எங்கள் பயணத்தின் குறிப்பிடப்பட வேண்டிய கண்ணி!

# 'குமரிக் கண்டமும் சங்கத் தமிழும்'

சி. ஜெயசங்கர்

'தமிழ் வாழ வேண்டும் என்ற தவிப்போடு பாண்டிய மன்னன் திருமாறன் தலையில் தமிழ் இலக்கிய, இலக்கணச் சுவடிகளைச் சுமந்த வண்ணம் வைகைக்கரையை வந்தடைகிறார்' எனக் கூத்துப் பனுவல் ஆக்குநரான சவிரிமுத்து மிக்கேல்தாஸ் அவர்கள், நூலின் கதிரோட்டம் பகுதியில் குறிப்பிடுகிறார். உண்மையில் தமிழ் மொழியினதும், தமிழ் கூறும் நல்லுலகினதும் சிறப்பை அவாவும் நூலாசிரியரினது ஆதங்கத்தின் பிரதிபலிப்பாக, மேற்கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. தமிழர்களது தொன்மையையும் சிறப்பையும் ஆய்ந்தறிந்து கூத்துப்பனுவலாக்கி, சமகாலத் தமிழர் வாழ்வின் சிறப்பிற்கு உழைக்க உந்தும் கலையாக்கமாகவே குமரிக் கண்டமும் சங்கத்தமிழும் கூத்துப்பனுவல் உருவாக்கம் இடம் பெற்றிருக்கிறது. கலையாக்கம் என்பது கற்பனை மட்டுமே என்றும்; அதி அற்புதர்களின் வரங்களில் வாய்க்கப்பெறுபவை என்றும் நிகழ்த்தப்படுகிற கதையாடல்கள் இருவகைகளில் கலையாக்கம் பற்றிய யதார்த்த சிதைப்பைச் செய்வனவாக இருக்கின்றன.

கலையாக்கம் என்பதன் மூலம் அறிவார்ந்த தொழிற்பாட்டை மறைத்துவிடுவது என்பது ஒன்று. கலையாக்கம் என்பது சிறப்பியல்பு வாய்க்கப்பட்ட சில மனிதர்களுக்கானது என்பது மற்றொன்று. இவ்வாறு கட்டமைப்பதன் வாயிலாக மனிதரின் சிறப்பியல்புகளான கற்பனை, சிந்தனை, படைப்பாற்றல், விமர்சன நோக்கு என்பவற்றை மறக்கச் செய்தலாகும். சவிரிமுத்து மிக்கேல்தாஸ் அவர்களின் குமரிக்கண்டமும் சங்கத்தமிழும் கூத்துப்பனுவல் தரும் வாசிப்பனுபவமானது படைப்புலகின் அறிவார்ந்த - கற்பனை தளங்களில் கொடுத்து வாங்கிச் செல்லும் பயணத்தினை உணர்ந்தறிய வைப்பதாக இருக்கின்றது. கலை இலக்கியம் அறிவுருவாக்கத்திற்கு வளமாக இருப்பதுடன், அறிவுருவாக்கத்தின் விளைவாக இருப்பதனைப் புரிய வைக்கும் உதாரணமாக மேற்படி கூத்துப்பனுவல் அமைந்திருக்கின்றது. கலை, இலக்கியம் அறிவுருவாக்கம் பற்றிய ஆழ்ந்தகன்ற உரையாடலிற்கு இந்நூல் மூலமாக அமையவல்லது என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது.

கலை இலக்கிய உருவாக்கத்திற்கு ஆய்வறிவு அவசியமானது. அதுபோல் ஆய்வுச் செயற்பாடாகவும் கலை இலக்கியம் அமையவல்லது. ஆற்றுகை ஆய்வாக(Performance as research), கலை ஆய்வாக(Art as research), இலக்கிய ஆய்வாக(Literature as research) என இவை அமைகின்றன. இந்த வகையில் தமிழரது தொன்மை வரலாறுகள், தொன்மை இலக்கியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய ஆய்வாக அமையும் பனுவலாகவும் குமரிக்கண்டமும் சங்கத்தமிழும் கூத்துப்பனுவலைக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆய்வின்றி அமையாது கலை இலக்கியம். உலகப் பரப்பில் இலக்கியங்கள், ஆற்றுகைகள், புகைப்படங்கள், திரைப்படங்கள், கேலிச்சித்திரங்கள் போன்றன ஆய்வு வெளிப்பாட்டு முறைகளாக அமைந்திருக்க, தமிழறிவுலகம் இன்னமும் மேற்கூறிய வெளிப்பாட்டு முறைகளை, வடிவங்களை கற்பனையின் வெளிப்பாட்டு முறைகளாகவும், வடிவங்களாகவுமே மனித நினைவுத் தட்டுகளில் நீக்க முடியாதபடிக்கு பதித்து வைத்திருக்கின்றது, அதன்படியே இன்னமும் இயங்கியும் வருகின்றது. நூலாசிரியரின் எதிர்பார்ப்பிற்கும், ஆதங்கத்திற்கும் எதிராகவே எமது யதார்த்தம் இருக்கின்றது என்பதும் நீக்கப்பட வேண்டிய துயரம்.

ஆய்வு என்பது உரைநடையில் காரணகாரிய ரீதியாக மட்டும் அமையும் விவகாரம் என்பது உணர்வைத் தொலைத்துவிடச் செய்கிறது. பாடலில், ஆடலில், சிற்பங்களில், கதைகளில், கட்டடங்களில் எனப் பல்வேறு வடிவங்களில் அறிவுருவாக்க மரபுகளைத் தொன்மைக் காலங்கள் முதல் கொண்டிருந்த தமிழ் சமூகங்கள் ஆய்வின், அறிவுருவாக்கத்தின் வடிவமாக உரைநடை மட்டுமே அமையும் என விடுவிக்க முடியாத கட்டுக்களுள் சிந்தனை முடக்கம் பெற்றுக் காணப்படுவது நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் சவாலானதாகும். ஆனால் இந்த ஆபத்தான நிலையே அறிவார்ந்ததான அங்கீகாரத்திற்கும், கொண்டாட்டத்திற்கும் உரியதாக இருக்கின்ற நவீன அறிவுச் சூழ்நிலையில் குமரிக்கண்டமும் சங்கத்தமிழும் கூத்துப்பனுவல் ஆய்வாக்க இலக்கியம்(Literature as research) என்பதாக அமைவது அதன் சிறப்பாகவும், ஆய்வு வெளிப்பாட்டு முறைகளின் பன்முகத்தன்மை பற்றிய அறிவார்ந்த உரையாடல்களுக்கான உதாரணமாகவும் இருக்கின்றது. இக்கூத்துப் பனுவலானது மற்றும் ஓர் அறிவார்ந்த உரையாடலுக்கு நம்மை இட்டுச் செல்ல வாய்ப்பளிக்கிறது.

தமிழர்தம் தொல்வரலாறுகள் இயற்கை பேரழிவுகளிற்கு ஆளாகி இருக்கிறது என்ற கருத்து நிலை கொண்ட சிந்த னைப் பள்ளிகளின் வாதங்கள் சமகால உலகின் காலநிலை மாற்றம், இயற்கை பேரனர்த்தங்கள் என்பவற்றுடனும் ஒப் பிட்டு நோக்குவதற்கும், கடந்த கால அனர்த்தங்களின் மூலங் களைச் சமகால அனுபவங்கள் அறிவு கொண்டு பார்த்துப் புரிந்து கொள்வதற்கும், சமகால வாழ்வை உருவாக்குதலில் கடந்த காலங்களிலிருந்து கவனத்தில் கொள்ள வேண்டியவற் றைக் கற்றுக் கொள்வதற்கும் தூண்டலாக அமைவது கவனத் திற் கொள்ளப்பட வேண்டியது. மேலும் உலக இலக்கியங்க ளைப் படிக்கும்பொழுது குறிப்பாக ஒவ்வொரு இனமும் தத்த மது தொன்மைகளைச் சமகால வரலாறுகளாக, இலக்கியங்க ளாக படைக்கும்பொழுது...

*உலகின் முதல் தோன்றிய அரசியல் ஆட்சி சின்னமாம்*
*மீன்கொடி விண்ணுயர் வீசிப் பறந்திட*
*பாண்டிய மாமன்னன் காய்சின வழுதி அவை - வருகின்றார்*

என சவிரிமுத்து மிக்கேல்தாஸ் பாடுவது போல, பாடப்படுவத னையும் எழுதப்படுவதனையும் பரக்கக் காணமுடியும். வர லாறு காணமுடியாத மாயவெளிக்கு அப்பால் தங்கள் தொன் மைகளைக் கொண்டு செல்வதிலும், கொண்டாடுவதிலும் அதீத பிரியம் கொண்டிருப்பதைக் காணமுடியும். அடக்குமு றைகளுக்கு ஆளாகிக் கொண்டு அதற்கு எதிரான கிளர்ச்சி யில் வரலாற்றின் முந்தைய கட்டத்தில் பிறர் மீது ஆதிக்கம் செலுத்தி, அதிகாரம் செலுத்தி, அட்டூழியம் செய்த காலம் மறுமலர்ச்சிக்கான பொற்காலமாகக் கொண்டாடும் முரண் எந்த அளவிற்கு ஏற்புடையது என்பதும் உரத்துச் சிந்திக்கப் பட வேண்டியது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' அந்த சங்கத் தத்துவத்தில் இருந்து சமகாலத்தை உருவாக்குவதா? அல்லது 'உள்ளம் பெருங்கோயில்' என்ற தொல்சித்தர் வாக்கிலிருந்து, அல்லது 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்ற நவகாலச் சுவாமியின் சிந்தனையில் இருந்து தொடங்குவதா? இவை யும் இவற்றுடன் இணைந்த சிந்தனைகளில் இருந்தும் சமகால உலகங்களின் உருவாக்கங்களுக்காக எமது வாழ்வின் வடிவ மைப்பு அமையப்போகிறதா? தோற்கடிக்கப்பட்ட மக்களது குருதிகளிலும், துயரங்களிலும் தீர்த்தம் ஆடப்பட்ட அல்லது முடிபறித்து சிரசின் மேல் ஏற்றப்பட்ட பாரக்கற்களில் எமது பண்பாட்டை உருவாக்கப் போகிறோமா? என்ற உலகு தழு விய உரையாடல்களில் சமகால தமிழர் நிலையும், நிலைப்பா டும் எதுவாக இருக்கப் போகிறது? ஏனெனில் வார்த்தைகள் வெற்றி வேட்டுக்களாக எப்பொழுதும் இருந்ததில்லை. அத னால் தான் 'தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாது நாவி னால் சுட்ட வடு' என்கிறார் வள்ளுவர்.

தமிழர்களின் அகவாழ்வு, புறவாழ்வு பற்றி எடுத்தியம்பும் இந் நூல், தமிழர் தம் அறிவுப் பண்பாடு பற்றி உரையாடும் இந் நூல், ஆண்-பெண் உட்பட்ட ஏற்றத்தாழ்வுகளைக் கேள்விக் குட்படுத்தும் இந்நூல், பெண்களின் குரலை வலுவாகக் கொண்டுவரும் இந்நூல், ஏற்றத்தாழ்வுகளைக் கேள்விக்குட்ப டுத்துவதை அறமாகக் காட்டும் இந்நூல் இன்று குறிப்பாகப் பழங்குடி மக்களின் இடத்தையும் சுட்டிச் செல்லும் இப்பனு வல் பல வகைகளிலும் முற்போக்குக் குணாம்சங்களைக் கொண்டிருப்பது அதன் வலுவாகும்.

*'மனிதர்களை மனிதர் கொல்லும்*
*வாழ்க்கை தன்னை வெற்றியென்றோம்*
*மனிதருடன் மனிதர் வாழும்*
*வாழ்க்கையல்லோ வெற்றியாகும்'*

எனும், மட்டக்களப்பில் சீலாமுனையில் நிகழ்த்தப்பட்ட சிம் மாசனப்போர் கூத்து மீளுருவாக்கப் பாடல் சுட்டுவது போல் வெற்றி, வீரம் பற்றிய காலாதிகால எண்ணக்கருக்களில் மாற் றம் தேவைப்படுகின்றது. இந்தவகையில் தமிழ் கூறும் நல்லு லகின் அறிவுருவாக்கம் பழங்குடி மக்களது சிந்தனைகள், பெண்ணிலைவாதச் சிந்தனைகள், சூழலியல் அல்லது சுற் றுச்சூழல் சார் சிந்தனைகளின் உள்வாங்கலுக்கான கதவுகள் திறக்கப்படுவதற்கான தேவை அவசியமானது. அதற்கான உரையாடல்களைத் திறந்து விடுவதற்கான வாய்ப்புக்களை இப்பனுவல் கொண்டிருக்கின்றது. தொல்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பான இருப்புக்கு அவாவும் இந்நூல் தமிழ் மொழி மூலமான அறிவுருவாக்கம் பற்றியும் பேசுவது குறிப்பி டத்தக்கது. இன்றைய நிலையில் தமிழ் கூறும் நல்லுலகின் இருப்பு என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலும் புழங்குநி லையிலுள்ள மொழிகளது சூழல்களிலும் வாழத் தலைப்பட்டி ருப்பது சாதகங்களுடனும், சவால்களுடனும் கூடியது. அத்த கைய புலம்பெயர் சூழலொன்றில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட கலை ஆளுமையின் வேர்விட்டு விழுதுகள்விடும் எதிர்பார்ப் புக்கான தேடலும் ஆக்கமுமாகக் குமரிக்கண்டமும் சங்கத்த மிழும் கூத்துப் பனுவல் அமைந்து காணப்படுகின்றது.

உருவகமாக அல்லது பூடகமாகச் சமகால அரசியலைத் தொனிக்கச் செய்யும் இப்பனுவலின் தொன்மை, பொற்காலப் புனைவுகளில் விழுங்கப்பட்டு விடாமல் சமகால அரசியல் இராஜ தந்திரங்களை எதிர்கொண்டு 'மனிதருடன் மனிதர் வாழும்' உலகைப் படைக்கும் உலகந்தழுவிய மக்கள் மைய வாழ்வியக்கத்தைத் தழுவுவது பற்றிய முனைப்புக் காட்டுவது பொருத்தமானதாக அமையும். அரங்கேற்றப்படும்பொழுது இதனைச் சாத்தியப்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொள் ளக்கூடியதாக இப்பனுவல் இருப்பது சாதகமானது. அடிப்ப டையானதொரு பொதுவெளி உரையாடலைத் திறப்பதற்கான ஓர் ஊடகமாக இப்பனுவல் காணப்படுகின்றது. இப்பனுவலை அரங்கேற்றுவது என்பது மேற்படி உரையாடல் களத்தை திறப்பதாகும். மேலும் இப்பனுவலின் வடிவம் சார்ந்த பொருத் தப்பாடு பற்றியும் பேசவேண்டியிருக்கிறது. ஈழத்தமிழர் அரங்கு; பாரம்பரியம், நவீனம் எனப் பிரித்து அணுகப்பட்டது. பாரம்பரியம், கடந்த காலத்திற்குரியது. முதுசொம். பேணப் பட வேண்டியது என்பதாக இருந்தது அல்லது செம்மைப்ப டுத்த, நவீனப்படுத்த வேண்டியது என்ற பார்வையும் காணப்ப டுகின்றது. ஆயினும் இன்றளவும் நவீன நாடகங்களிற்கு மேலாக மிகவும் அதிகளவில் ஆடப்பட்டு வரும் கூத்துகள் எந்த வகையில் கடந்த காலத்திற்குரியவை என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதது. கடந்த காலத்தில் சுகித்திருப்ப தற்கான மோக வடிவமாகக் கூத்து காணப்படுகின்றதா? அல்லது சமகால வாழ்விற்கான வாசிப்புகளை வழங்குவதால் அவை இன்றளவும் ஆடப்பட்டு வருகின்றனவா? என்றெழும் வினாக்களுக்கான விடைத்தேடல்கள் அவசியமானவை.

ஒவ்வொரு கூத்தும் ஆடப்படுவதற்கெனத் தெரியப்படும் பொழுது அது காரணகாரிய அடிப்படைகளில் நிகழ்வதை அதன் வாழிடங்களில் காணமுடியும். அதேபோல் நவீன காலனியக் கல்வி போல் அதனைப் பயிலும் மக்களிடத்து எதிரான விழுமியங்களைக் கொண்ட கூத்துகளையும் காணமுடியும். பெரும்பாலான புராண, இதிகாசக் கூத்துகள் இவ்வகையில் அடங்கும். இவற்றைச் சமூகமயப்பட்ட உரையாடல்கள் மூலமாக மீளுருவாக்கம் செய்யும் செயல்வாதம் ஈழத்து அரங்கில் 2000 ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்குச் சமாந்தரமாக நொண்டி நாடகம் போன்ற முற்போக்கான கூத்துகள் பரவலாக ஆடப்படுவதற்கான ஆற்றுப்படுத்தல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன் புதிய கூத்துப் பனுவல் உருவாக்கங்களும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதன் மற்றுமொரு கண்ணியாக குமரிக்கண்டமும் சங்கத்தமிழும் பனுவல் அமைந்திருக்கிறது. நவீன அரங்கு என்ற போர்வையில் மேற்கைரோப்பிய, அமெரிக்க அரங்கச் செல்நெறிகளிலிருந்து விடுபட்டு ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளது அரங்குகள் நோக்கிச் சிறகு விரித்துக் கொண்ட ஈழத்தமிழர் அரங்கு, பாரம்பரிய அரங்கு என்று சொல்லப்படுகின்ற உள்ளூர் அரங்குகளின் சமகாலத்தன்மையையும், அதனைச் சமகாலத்திற்குரிய சமூதாய அரங்காக மீளுருவாக்கும் அரங்க இயக்கத்தையும் முன்னெடுத்து வருகிறது.

இதன் பின்னணியில் அதன் ஆழவேர்கள் தேடி தொல்தமிழ் இலக்கியங்கள் வழி மற்றும் சிற்பம், கட்டடக்கலை உட்பட்ட கலை மரபுகளின் வழி தொல்தமிழர்தம் அரங்குகள் அறிவு உள்வாங்கப்பட்டு சமகாலத் தமிழர்தம் அரங்குகளுக்கான தேடல்களும், உருவாக்கங்களும் முனைப்புப்பெற்று வருகின்றன. இந்த வகையில் பண்டைத்தமிழர் வாழ்வில் அரங்கு என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நூலும் அரங்கத்திறம் என்ற இளைய பத்மநாதனுடைய நூலும் வழிப்படுத்துபவனவாக இருப்பது குறிப்பிடப்படவேண்டியது. இந்த தேடலினதும், பயணத்தினதும் மற்றுமொரு குறிப்பிட வேண்டிய படைப்பாக குமரிக்கண்டமும் சங்கத்தமிழும் நூல் அமைந்திருக்கின்றது. தொல்தமிழ் இலக்கியங்களில் இருந்து பொருத்தமான பாடல்கள் முழுமையாகவும், பகுதியாகவும் உள்வாங்கப்பட்டு இப்பனுவல் உருவாக்கப்பட்டிருப்பது இதற்கேயான சிறப்பாகும். தொல்தமிழர் இலக்கிய மொழிதலை ஆற்றுகையில் செவிநுகரும் அனுபவம் அலாதியான இன்பத்தையும், சிந்திப்பையும் தரவல்லது. இதனைச் சிறந்த அண்ணாவியம் கையாளும். ஆற்றுகைக்கான பயில்வில் இப்பனுவல் மேலும் பொலிவு பெறும். இளைய பத்மநாதன் அவர்களின் நாடகப் பனுவல்களின் வாசிப்பு மேற்படி போக்கைப் புரிந்து கொள்வதற்கு மேலும் வளம் சேர்ப்பதாக இருக்கும்.

சமகாலத்தையும், எதிர்காலத்தையும் எதிர்கொள்வதற்கான உருவாக்கங்களில் அரங்கு சார்ந்து ஈழத்தமிழர்தம் அரங்கப் பயணமானது சமஸ்கிருதமய, ஐக்கிய இராச்சியத்தின், ஐக்கிய அமெரிக்காவின் உலகமயமாக்கல் பார்வைகளில் இருந்தும் விடுவித்துக்கொண்டு மெய்யான உலகம் தழுவிய பார்வையுடன் அதனொத்த தமிழர்தம் தத்துவ நோக்குடனும் புலம் மற்றும் புலம்பெயர் வாழ்வின் பூகோள நிலவரங்களின் பின்னணியில் எல்லா மனிதர்களும் எல்லா உயிர்களுக்குமான இவ்வுலகின் மகிழ்ச்சிகரமான வாழ்வுருவாக்கத்தின் அம்சமான எமது பயணத்தின் கவனிப்பிற்குரிய கண்ணியாக இப்பனுவல் மொட்டவிழ்த்திருக்கின்றது. அதன் முழுமலர்ச்சி அது தரும் மகிழ்ச்சி பலரது கைகளில் இருக்கின்றது. இக்கூத்துப்பனுவலானது யாழ்ப்பாணத்து மேடையில் ஆடப்படும் கத்தோலிக்கக் கூத்தின் அடிப்படையில் ஆக்கம் பெற்றிருக்கின்றது. கத்தோலிக்கக் கூத்துகள் வட்டக்களரியில் ஆடப்படுவது, இன்றும் மட்டக்களப்பில் நடைமுறையில் இருந்து வரும் விடயமாகும். எனவே வட்டக்களரியில் ஆடும் நோக்கில் இக்கூத்துப்பனுவல் விரிவுபடுத்தப்படுவது மேலும் வலுவாக்கப்படுவதாக அமையும். மேலும் கூத்துப்பாடல்கள் பாடும் முறைமை கர்நாடக சங்கீத இராகங்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வட்டக்களரியில் ஆடப்படும் கூத்துகளிற்குரிய தமிழ்ப் பா வகைகளைக் கையாள்வது இப்பனுவலிற்குப் பொருத்தமாக இருக்கும்.

பொதுவாக கூத்துப்பனுவல்களில் அதன் பா வகைகள், ஆட்டக்கோலங்களிற்கான தாளக்கட்டுகள் எழுதப்பட்டிருப்பதில்லை. பொருத்தமான வகையில் பா வகைகளின் மெட்டுக்களையும், ஆட்டக்கோலங்களின் தாளங்களையும் கண்டுபிடித்து ஆற்றுகைக்கு கொண்டுவருவது அண்ணாவியாரின் கலையாகக் காணப்படுகிறது. குமரிக்கண்டமும் சங்கத்தமிழும் கூத்துப்பனுவலானது சிறந்த அண்ணாவியத்தின் ஆற்றுகையில் மேலும் வனப்புப்பெறும் என்பதும், வட்டக்களரிக்குரிய வகையில் அதன் விரிவாக்கம் ஈழத்தமிழர்தம் கூத்து மரபிற்கு சிறப்புச் சேர்க்கும் என்பதும் எனது அறிவார்ந்த நம்பிக்கை. மேலும் சிந்துவெளி நாகரிகம், இலக்கிய வழியிலான லெமூரியாக் கண்டம் என்ற தமிழர்தம் தொன்மைத் தொடர்புகளுடன் கீழடி அகழ்வாய்வுகளும் மேற்படி தொன்மையைத் தெரிவித்து நிற்கும் பின்னணியில் தமிழர்தம் சமகால இருப்புப் பற்றிய அவதானமும் செயற்பாடும் முக்கியமானது என்பது அடிப்படையானதாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. நவீனமானதும் உலகுக்குமானதாக அறிமுகப்படுத்தப்பட்ட மேற்கைரோப்பிய காலனிய அறிவின் மூலமாக நிறுவப்பட்ட கிரேக்கத்தின் சமகால இருப்பு மிகவும் மோசமானதாக இருப்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதாகவும் இருக்கிறது. சிங்கத்தின் வாலில் கட்டுண்ட நரியின் நிலையாகக் கிரேக்கத்தின் பொருளாதாரமும் அதன் காரணமாக பாதிப்புற்ற சமூக வாழ்நிலைமைகளும் காணப்படுகின்றன. இத்தகைய நிலைமைகளில் கலை இலக்கியங்களின் உருவாக்கம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலகு தழுவிய மனிதர்களின் இருப்புக்கான பின்னணியில் எமது நிலைமைகளும் நிலைப்பாடுகளும் அணுகப்படுவது பொருத்தமானதாக இருக்கும்.



Jeyasankar.S@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

**E-mail: info@thaiveedu.com** **Fax: 1-416-849-0594** **Tel: 1-416-857-6406**




நம் தலைமுறைக்கு முன்பு மறைந்த மாமேதைகளை நாம் ஓவியங்களிலும் புகைப்படங்களிலும் மட்டுமே பார்க்க விதிக்கப்பட்டிருக்கிறோம். மகாகவி பாரதியின் புகைப்படங்கள் மொத்தமே நான்கோ ஐந்தோதான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அதிலும் அவர் தலைப்பாகையும் கோட்டும் அணிந்த படங்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. அவை அணியாமல் பாரதியின் தோற்றம் எப்படி இருந்தது என்று அவர் காலத்திலேயே அவரை வரைந்தவர்களது சில கோட்டோவியங்கள் மூலமாகவே நாம் அறிந்து கொள்கிறோம். தலை வழுக்கையாக இருந்திருக்கிறார். இதனாலேயே அவர் குறித்த படங்களில் 24 மணி நேரமும் அவர் தலைப்பாகை, கோட் சகிதம் காட்சியளிக்கவேண்டியிருந்தது. முறுக்கு மீசையுடன் சில புகைப்படங்களும் மீசை தாடியுடன் ஓரிரு புகைப்படங்களும் இரண்டு வேறு தோற்றங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் இருந்திருக்கிறார் என்று புரிந்து கொள்ளலாம். பத்திரிகையாசிரியராக இருந்தும்கூட அவர் நிறைய புகைப்படங்கள் எடுத்துக்கொள்ளவில்லை என்பது ஒரு ஆச்சரியம்.

பாரதியாரின் 'பஸ்ட்' என்று அழைக்கப்படும் மார்பளவு ஓவியத்தை வரைந்து அந்த உருவத்தைப் பிரபலமாக்கியவர். அவரது அன்புக்குரிய புரட்சிக்காரராக இருந்த பாஷ்யம் ஆர்யா. பல திறமைகள் பெற்ற ஆர்யா, இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது பல சாகசச் செயல்களைப் புரிந்தவர். அவற்றில் ஒன்று, சென்னைக் கோட்டையில் இருந்த 200 அடி உயரம் உள்ள கொடிக்கம்பத்தில் இரவில் ஏறி தேசியக் கொடியைக் கட்டிப் பறக்கவிட்டதாகும். பாரதி மீது அவர் கொண்டிருந்த மரியாதையும் பேரன்பும் அற்புதமான ஓவியமாக வெளிப்பட்டது. இந்த ஓவியமே தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாரதி ஓவியமாகத் திகழ்ந்தது. பாரதியின் கண்களின் தீட்சண்யத்தையும் முகத்தில் வெளிப்பட்ட வீரத்தையும் ஓவியத்தில் அருமையாகக் கொண்டுவந்தார் ஆர்யா. பின்னர் அவருடைய முதிர் காலத்தில் நிறைய காந்தி ஓவியங்களை வரைந்திருக்கிறார்.

பாரதியார் முகம் பின்னர் காலண்டர் ஓவியர்களால் படாத பாடுபட்டது. எந்த வித உருவ ஒற்றுமையும் இல்லாமல் வெறும் தலைப்பாகையும், முறுக்கு மீசையும் கோட்டும் இருந்தால் பாரதி என்று நினைத்துக்கொண்டு, ரோஸ் பவுடர் அடிக்கப்பட்ட பாரதி உருவத்தை அச்சடித்துப் பரப்பிவிட்டனர். இதே கதி அவருடைய அன்புக்குரிய வ.உ. சிதம்பரம்பிள்ளைக்கும் பின்னர் நேர்ந்தது! இன்றும் கூட, சுதந்திரப் போராட்டத் தியாகிகள் சுப்ரமணிய சிவாவுக்கும் வ.வே.சு. ஐயருக்கும் பலருக்கு வித்தியாசம் தெரியாது என்பது ஒரு கசப்பான உண்மை. இருவரின் தாடிகளின் வித்தியாசத்தை கூகுள் தளம் கூட இன்னும் உணரவில்லை.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பாரதியின் உருவத்தையும், புகழையும் மக்களிடம் எடுத்துச் சென்றவர்களில் முக்கியமானவர்கள் பொதுவுடைமை இயக்கத்தினர்தான். அவர்கள் நடத்திய கலை இலக்கிய பெருமன்ற மாநாடுகளில் பாரதி, வ.உ.சி., திரு. வி.க. ஓவியங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டன. எனது தந்தை திரு என். வேலாயுதம் இந்த ஓவியங்களை வரையும்போது அவற்றை பார்க்கக்கூடிய தருணங்கள் அன்று சிறுவனாக இருந்த எனக்கு வாய்த்தன. பாரதி பிறந்த எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபம் திறக்கப்பட்டபோது, அங்கே காட்சிக்கு வைப்பதற்கான ஓவியங்களை வரையும்பணி அவருக்குத் தரப்பட்டது. பின்னர், காலம் அவற்றைக் காவுகொண்டமை ஒரு பெரும் வேதனை.

பாரதியார்தான் தமிழ்ப் பத்திரிகைகளில் கேலிச் சித்திரங்கள் என்றழைக்கப்படும் கார்ட்டூன்களை அறிமுகப்படுத்தியவர். இந்தியா பத்திரிகையிலும் பின்னர் சுதேசமித்திரன் பத்திரிகையிலும் பணி புரியும்போது, அதிகளவான கருத்துப் படங்களை வரைய வைத்துப் பிரசுரித்திருக்கிறார். சில கோட்டோவியங்களுக்கு அவரே மாடலாகப் போஸ் கொடுத்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். எழுத்துகளை விட பத்திரிகைகளில் கோட்டோவியங்கள் மக்களைச் சுலபமாகச் சென்றடையும் என்று அன்றே புரிந்து வைத்திருந்திருக்கிறார். 1908-லேயே, காந்தி தென்னாப்பிரிக்க அதிகாரிகளால் கொடுமைப்படுத்தப்பட்டதை, காந்தியை ஒரு பசுமாடு போலவும், அந்த அதிகாரிகளை சீறிப்பாயும் புலிகளாகவும் உருவகப்படுத்தி ஒரு கருத்துப்படத்தை வெளியிட்டிருக்கிறார் பாரதி. இந்த ஓவியங்கள் எல்லாம் வெகு நேர்த்தியான நுணுக்கமான கோடுகளால் உருவாக்கப்பட்டிருந்தன. அவை

லினோகட் முறையில் அச்சில் சுரண்டி செதுக்கப்பட்டனவா அல்லது பிளாக் மேக்கிங் முறையில் அச்சிடும் வகையில் உருவாக்கப்பட்டனவா என்பது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. இந்த ஓவியங்களையெல்லாம் அ.இரா. வெங்கடாசலபதி புத்தகமாக ஆவணப்படுத்தியிருக்கிறார்.



பாரதியாரை நிறைய ஓவியர்கள் வரைந்ததுண்டு. பழைய தீபாவளி மலர்களில் கோபுலு வரைந்த சில கோட்டுச் சித்திரங்களைப் பார்த்த நினைவு உண்டு. ஓவியர் ஆதிமூலம் அவருக்கே உரிய நவீன பாணியில் சில கோட்டுச் சித்திரங்களைக் கீறியிருக்கிறார். அதிகம் வரையப்படாத, தாடி வைத்த பாரதியையும் செல்லம்மாவையும் அவர் ஓவியமாக்கியதும் கையில் கோலுடன் இருக்கும், மீசை பாரதி ஓவியமும் புகழ் பெற்றவை. ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்கள் மினிமல் உத்தி என்றழைக்கப்படும் குறைந்த பட்ச கோடுகளால் வரைந்த பாரதியின் கோபப் பார்வை முகம் பலரால் உபயோகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். அது மிகவும் புகழ் பெற்ற ஓவியமும் கூட. எழுத்தாளர் ஞாநி வரைந்த பாரதி முகமும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒன்று. தன் அனுமதியுடனேயே பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை மீறப்பட்டபோது அதைப் பொதுவுடைமை ஆக்கிவிட்டார் ஞாநி. மணியம் செல்வன் வரைந்த பாரதி முகங்களும் பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அடுத்த தலைமுறை ஓவியர்களான சுந்தரன், கோபி ஓவியன் போன்றவர்கள் பாரதியை கோட்டோவியங்களாகவும் வண்ண ஓவியங்களாகவும் வரைந்து அலங்கரித்திருக்கின்றனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மலரில் பார்த்த பாரதி ஓவியம் சிறப்பாக இருந்தது.

எனது பங்கிற்கு நான் ஏராளமான பாரதி ஓவியங்களை வரைந்திருக்கிறேன். திரு. கிருங்கை சேதுபதியின் பாரதி குறித்த நூல்களுக்கெல்லாம் நான் வரைந்த ஓவியங்கள் அட்டைப் படங்களிலும், உள்ளே கோட்டோவியங்களாகவும் மிளிர்ந்தன. பாரதியார் பல்கலைக்கழக வெளியீடுகளிலும் நான் வரைந்த பாரதியின் ஓவியம் பயன்படுத்தப்பட்டது. கோவையிலிருந்து வெளிவரும் சிறுவாணி வாசகர் மையம் அமைப்பு, ஏ 3 அளவிலும் ஏ 4 அளவிலும் 20,000-இற்கும் அதிகமான பாரதியின் வண்ணப்படங்களை அச்சடித்து இலவசமாக வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பணி தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்த ஓவியத்தை வரைந்தவன் நான் என்ற முறையில் மிகவும் பெருமைப்படுகிறேன். நான் சென்ற வருடம் வாரணாசி சென்றபோது, பாரதி இளம் வயதில் அங்கு வாழ்ந்த இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கிருந்த அவரது உறவினர் திரு. கே.ஏ. கிருஷ்ணன் அறையில் நான் வரைந்த இந்த ஓவியம் மாட்டப்பட்டிருந்ததைக் கண்டு பெருமையின் உச்சத்திற்கே சென்றுவிட்டேன்.

கலையுலகம் பாரதியை வெகுவாகப் பயன்படுத்தியிருக்கிறது. ஏவிஎம் நிறுவனத்தினர் பாரதி பாடல்களின் உரிமையைத் தங்கள் வசம் வைத்திருந்தபோது, வேறு யாராவது அந்தப் பாடல்களைத் தங்கள் திரைப்படங்களில் பயன்படுத்தினால், உரிமையியல் வழக்கு தொடர்ந்துகொண்டு இருந்தனர். டி.கே.எஸ். சகோதரர்கள் தயாரித்த ‘பில்ஹணன்’ பட வெளியீட்டின் போதும் இதே பிரச்சினை கிளம்பியது. வழக்கு நீதிமன்றம் சென்று, படத்திற்கு தடை விதிக்க முடியாது என்று தீர்ப்பு வந்தது. இதன் தொடர்ச்சியாக பாரதி பாடல்களை நாட்டுடமையாக்க ஜீவா போன்ற கம்யூனிஸ்ட் தோழர்களாலும் இலக்கியவாதிகளாலும் பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. பாடல்களும் அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன. ஏவிஎம் நிறுவனம் வேறு வழியில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டியதானது. பின்பு நிறைய திரைப்படங்களில் பாரதி பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. 1940-லேயே மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த ‘உத்தமபுத்திரன்’ திரைப்படத்தில் பி.யு. சின்னப்பா ‘செந்தமிழ் நாடெனும் போதினிலே’ பாடலைப் பாடிக் கொண்டு வருவார். எனக்குப் பிடித்த இன்னொரு திரைப்பாடல் ‘நல்ல தங்கை’ படத்திற்க்காக இசையமைப்பாளர் ஜி. இராமநாதன் பாடிய ‘கூலி மிகக் கேட்பார்’! ‘கப்பலோட்டிய



This cartoon appeared in India dated 18-12-1908. Mahatma Gandhi is represented as a cow which is attacked by the tigers representing the officials of the South African Government.

தமிழன்', 'ஏழாவது மனிதன்' போன்ற படங்கள் முழுக்க முழுக்க பாரதி பாடல்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டன. 'பாரதி' வாழ்க்கையை திரைப்படமாக 'பாரதி' என்ற பெயரில் ஞான ராஜசேகரன் இயக்கினார். இதிலும் பாரதி பாடல்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தாலும் இரண்டு பாடல்களை மு. மேத்தாவும், புலமைப்பித்தனும் எழுதியிருந்தனர். திரைப் படங்களில் பாரதி வேடத்தைத் தாங்கி நடித்த நடிகர்களில் முக்கியமானவர்கள் எஸ்.வி. சுப்பையா (கப்பலோட்டிய தமிழன்), சிவாஜி கணேசன் (கை கொடுத்த தெய்வம்), நாகேஷ் (இரு கோடுகள்), சக்ரவர்த்தி (கொட்டு முரசே), சாயாஜி ஷிண்டே (பாரதி) மற்றும் அமிதாப் பச்சன். அமிதாப் இங்கே எங்கே வந்தார் என்று யோசிப்பவர்கள் 'கை கொடுத்த தெய்வம்' திரைப்படத்தின் இந்தி வடிவமான 'பியார் கி கஹானி' படத்தைப் பார்க்கலாம்! இவர்களில் பாரதியாக திரையில் வாழ்ந்தவர் எஸ்.வி. சுப்பையாதான் என்று அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். 'கப்பலோட்டிய தமிழன்' படத்தில் சன்னதம் வந்தது போல பாரதியின் பிரத்யேக குணச்சித்திரத்தை ஆவேசமாகவும் உயிர்ப்புடனும் சுப்பையா நிகழ்த்திக் காட்டினார்.

மேடை நடன நிகழ்ச்சிகளில் மற்றும் தனியான ஒலிப்பேழைகளிலும் இன்றும் பாரதி பாடல்கள் வாழ்ந்து வருகின்றன. 'தனது பாடல்களை பாரதியே ராகத்துடன் பல பொதுக்கூட்டங்களில் பாடியிருக்கிறார். தனது பல இசைப் பாடல்களுக்கு ராகம், தாளம், ஸ்வர வரிசையையும் கூட பாரதி எழுதி வைத்திருக்கிறார். எஸ்.ஜி. கிட்டப்பா போன்றோரின் அக்கால நாடக மேடைகளில் பாரதியின் பாடல்கள் ஒலித்துள்ளன' என்று எழுத்தாளர் சேக்கிழான் எழுதுகிறார். மகாராஜபுரம் சந்தானம் 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா' என்று பாடும்போது கேட்டுக்கொண்டே இருக்கலாம்! டி.கே. பட்டம்மாள் தொடங்கி ஹரீஷ் ராகவேந்திரா வரை பாரதி பாடல்களுக்கு உயிர் தந்தவர்கள் பலர். பாரதியின் கொள்ளுப்பேரன் ராஜ்குமார் பாரதியே ஒரு புகழ் பெற்ற பாடகர்தான்.

மேடைகளில் பாரதியின் பாடல்கள் கிட்டப்பா காலத்தில் இருந்து ஒலித்தாலும், 'பாஞ்சாலி சபதத்தை' முழுமையாக சேவா ஸ்டேஜ் சார்பில் மேடையேற்றியவர் எஸ்.வி. சஹஸ்ர நாமம். முத்துராமன், பீலிசிவம் போன்ற நடிகர்கள் உணர்ச்சிகரமாக கவிதை வரிகளை முழங்கினார்கள். எனது மாணவப் பருவத்தில் பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவை அரசினர் கலைக்கல்லூரி மைதானத்தில் தமிழக அரசு சார்பில் பாரதி ஒலி-ஒளி காட்சி ஒன்று நடைபெற்றது. அது போல ஒரு நிகழ்வை இன்னும் நான் கண்டதில்லை. அவ்வளவு அற்புதமான ஒளியமைப்பு, நகரும் மேடைகள், பாரதி பாடல்கள் என்று அனைத்தும் சேர்ந்த ஒரு அற்புத அனுபவம் அது. இசைக்கவி ரமணன் சமீப காலங்களாக உலகெங்கும் அரங்கேற்றி வரும் 'பாரதி யார்?' நாடகம், பாரதி நினைவுக்கு ஒரு அற்புதமான அஞ்சலி. வீணை மேதை எஸ். பாலச்சந்தரின் மகன் ராமன் இயக்கத்தில், பேரன் பரத்வாஜ் ராமன் இசையமைப்பில், ரமணனே பாரதியாகவும், திருமதி ராமன் செல்லம் மாவாகவும் நடிக்கிறார்கள்!

கலைகளிலும் பாரதி என்றும் வாழ்கிறார்!



jeeva@thaiveedu.com

# ஒளிமனம்

**- கருணாகரன்**



'மானுட விடுதலையில் புதுயுகமொன்று மலரவேண்டும். அதற்கான அகத்திறப்புகளைக் கலையும் இலக்கியமும் செய்ய வேண்டும்' என 1970-களில் இலக்கியத்திலும் கலைக் கோட்பாட்டிலும் ஒரு இடையீட்டைச் செய்தது 'மெய்யுள்'. (கலைக்கோட்பாடு என்பதே ஒரு வகையில் வாழ்க்கையைப் பற்றிய, அதை உள்ளும் புறமுமாகக் கட்டமைக்க விளைகிற உளநிலை மற்றும் அறிவியற் சிந்தனைதான்) கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட மெய்யுள், தமிழ் நவீன கலை, இலக்கியப் பரப்பில் சிறிய அளவில் அதிர்வை ஏற்படுத்தியது. இருந்தும் அதை அடுத்த நிலைக்கு வளர்த்தெடுப்பதற்குத் தமிழ்ச் சூழல் தவறியது.

இந்தச் சிந்தனையை முன்வைத்தவர், மு.த என்றழைக்கப்பட்ட, மு. தளையசிங்கம். மானுட விடுதலையைப் பிரபஞ்ச அளவிலான விடுதலையாக விரித்துச் சிந்தித்தார் தளையசிங்கம். இதற்கு அகவிழிப்பே - ஆன்மீக விழிப்பே - அவசியமானது எனக் கண்டார். மேற்குலகச் சிந்தனையின் வழியாக அகத்தூண்டலையும் சிந்தனைத் தொடக்கத்தையும் பெற்ற மு. தளையசிங்கம், அதை இந்திய ஞான மரபுடன் இணைத்துப் புதிய வெளியொன்றில் விடுதலைக்கான தன்னுடைய சிந்தனையை வெளிப்படுத்தினார்.

தளையசிங்கம் தன் காலகட்டத்தை பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

'தற்காலம் ஒரு புது யுகத்தை நோக்கி மாறிக்கொண்டிருக்கிறது. நாம் இரு உலகங்களுக்கிடையே கிடந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஒன்று செத்துக் கொண்டிருக்கிறது மற்றது பிறக்க முயன்றுகொண்டிருக்கிறது' என அதற்கேற்ற முறையில் உருவாக்கிய தனது கலைப்பார்வையைப் 'பிரபஞ்ச யதார்த்தம்' என்று சொன்னார்.

தளையசிங்கத்தின் பங்களிப்பை இலக்கிய விமர்சகரான எம். வேதசகாயகுமார் பின்வருமாறு இனம்காண்கிறார் - 'பூரண இலக்கியம் என்னும் கோட்பாட்டை விளக்க முயல்கிறார் தளையசிங்கம். பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகிய இரண்டிற்கும் அப்பாலான மெய்முதல்வாதத்தை முன்வைக்கும் தளையசிங்கம், 'மெய்யுள்' என்னும் புதிய இலக்கிய வடிவையும் சமகாலத்திற்கான வடிவமாகக் காண்கிறார். ஈழத் தமிழ் இலக்கிய விமர்சகர்களுள் தளையசிங்கத்தை பெரும் சிந்தனையாளராக இனம் காணவேண்டும்' என்றும் அவர் கூறுவார்.

புதுயுகத்துக்கான இலக்கியத்தையும் கலை வெளிப்பாட்டையும் தளையசிங்கம் 'மெய்யுள்' எனக் குறிப்பிட்டார். அதை பரிசோதனையாகத் தானே எழுதியும் பார்த்தார். அதன் பிரதிபலிப்பை அவருடைய புதுயுகம் பிறக்கிறது, ஒரு தனிவீடு, போர்ப்பறை, கலைஞனின் தாகம் முதலான நூல்களில் காணலாம். இதில் 'ஒரு தனி வீடு' என்ற அவருடைய கதைப் பிரதியை சமுத்திரன் முதலானோர் ஈழத்தமிழர்களுடைய தனி நாட்டுக்கான போராட்டத்தின் குறியீடாகக் குறிப்பிடுவதுமுண்டு. ஆனால், தளையசிங்கம் வலியுறுத்த விளைவது அதற்கும் அப்பாலான புதிய விடுதலையையே ஆகும்.

தளையசிங்கத்தின் சிந்தனையும் அவர் அறிமுகப்படுத்திய மெய்யுள் என்ற கோட்பாடும் தமிழில் உருவாகிய ஒரு முக்கியமான கலை வடிவம் என்று கருதிக்கொண்டு அது குறித்து சுந்தர ராமசாமி, ஜெயமோகன், எம். வேதசகாயகுமார், சி. மோகன், கி. ராஜநாராயணன், சு.வி, தேவதேவன், மு.பொ உட்படப் பலரும் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். 'மெய்யுள், விடுதலையின் புதிய அழகியல், புதிய அரசியல், புதிய தரிசனந் தானென்றாலும் நடைமுறைச் சாத்தியங்களை எட்ட முடியாத அதீதக் கற்பனாவாதமானது' எனச் சிலர் வாதிட்டனர். அதற்குப் பதிலளித்த மு. பொன்னம்பலம் 'அக விழிப்பினால் மனிதர்கள் விடுதலையின் புதிய எல்லைகளைத் தொடமுடியும். அகவிழிப்பற்ற விடுதலைப் பயணம், அதிகாரத்தின் குழியாகும் என்பதே மெய்யுளின் வழியாகும்' என்றார்.

மு. தளையசிங்கத்தின் சிந்தனையையும் அது அறிமுகம் செய்த 'மெய்யுள்' என்ற இலக்கியக் கோட்பாட்டுருவத்தையும் தன் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தவர் மு. பொன்னம்பலம். மு. தளையசிங்கத்தின் இளைய சகோதரரான மு.பொ, கலை, இலக்கியச் செயற்பாட்டில் 60 ஆண்டுகள் தொடர்ச்சியாக

இயங்கிய ஆளுமை.

*‘அன்பு அறிவு உண்மை*
*அவையே எம்முள் இறைவன்*
*பிரபஞ்சமே கோவில்*
*பொதுவாழ்க்கையே எம்தொழுகை’*



எனப் பிரபஞ்சத்தைத் தளமாகக் கொண்ட இந்தக் கொள்கை, நம்பிக்கை, நடைமுறையோடு வாழ்ந்தவர் மு.பொ என்றழைக்கப்படும் மு. பொன்னம்பலம். தளையசிங்கத்தின் மறைவுக்குப் பின்னரும் மெய்யுளைத் தொடர்ந்த எழுத்தாளராகவும் விமர்சகராகவுமே இருந்தார் மு.பொ. படைப்புகளிலும் விமர்சனங்களிலும் தளையசிங்கத்தைப் போலவே, பொன்னம்பலமும் எந்தச் சமரசங்களுக்கும் இடம் வைக்கவில்லை. தமிழ் மக்களுடைய அரசியல், சமூக விடுதலையை இருவரும் விரும்பியிருந்தபோதும், அதற்கான போராட்டங்களை முன்னெடுத்த வழிமுறைகளையும் அதை முன்னெடுத்த அரசியற் சக்திகளையும் கடுமையாக விமர்சித்தனர். சாதியப் போராட்டத்தை முன்னெடுத்த அன்றைய இடதுசாரிகளையும் தமிழின விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழரசுக் கட்சியையும் மு.த கடுமையாக விமர்சனம் செய்தார். இந்தத் தொடர்ச்சியோடு பின்னாளில் விடுதலை இயக்கங்கள் முன்னெடுத்த ஆயுதப்போராட்ட அரசியலையும் அரச பயங்கரவாதத்தையும் மு.பொ ஆட்சேபித்தார். மு.பொ வின் கவிதைப் பிரதிகளும் ‘சங்கிலியன் தரை’, ‘நோயில் இருத்தல்’ ஆகிய கதைப்பிரதிகளும் இதற்கு செழிப்பான உதாரணம். மு.த, மு.பொ உட்பட இந்த வழிமுறையைச் சேர்ந்த கவிஞர் சு. வில்வரெத்தினம், என்.கே. மகாலிங்கம் போன்றவர்களும் மெய்யுளைத் தழுவிய பிரபஞ்ச விடுதலையையும் சர்வோதயா அரசியலையும் பின்பற்றினர். இது தென்னிலங்கையில் உள்ள ஆரியரத்தினாவின் சர்வோதயமல்ல. மாறாகப் பூர்ண சர்வோதயம் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையிலானது.

*‘நீங்கள் வளர்ந்துவரும் வரை காலமில்லை*
*பொறுத்திருக்க நேரமில்லை*
*மீட்டெடுங்கள் மீட்டெடுங்கள்*
*இழந்த உங்கள் ராச்சியத்தை மீட்டெடுங்கள்*
*குழந்தையாய் இருக்கும்போதே, மீட்டெடுங்கள்*
*குறுஞ்சிரிப்பும், மழலையும்,*
*களங்கமின்மையும் இருக்கும்போதே*
*பெருந்திறனும் பேரறிவும் உமக்காகுக...’*
(குழந்தைகளே உங்கள் இழந்த ராச்சியத்தை மீட்டெடுங்கள்)

மு. பொன்னம்பலம், மு. தளையசிங்கம், சு. வில்வரெத்தினம் ஆகியோருக்கு ஆன்மீகக் குருவாக இருந்தவர், ஸ்ரீ நந்தகோ-பாலகிரி. இவர்களுக்கு அப்பால் ஸ்ரீ நந்தகோபாலகிரியின் செல்வாக்கு நிலாந்தன், என்.கே. மகாலிங்கம் போன்றோரிடத்திலும் உள்ளோடியிருக்கிறது. ஸ்ரீ நந்தகோபாலகிரியைச் சந்தித்த பின்னர் மு.பொ, மு.த இருவருடைய சிந்தனையிலும் புதிய தளமாற்றம் நிகழ்ந்தது. அதுவே அவர்கள் பூர்ண சர்வோதய மார்க்கத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கான வழியைத் திறந்தது. அரவிந்தரை நெருங்கிச் செல்வதற்கான சூழலையும் நந்தகோபாலகிரியின் அணுக்கமே உதவியது. ஸ்ரீ நந்த-கோபாலகிரியின் தொடர்பின் வழியாகவே மு.த கீழைத்தேயச் சிந்தனையின் (இந்திய ஞான மரபின்) ஆழத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தார் என எண்ணுகிறேன்.

இலக்கியத்தில் கோட்பாடுகள் பற்றிப் பலரும் ஆழமாக அறிந்ததுண்டு. மெய்யுள் பற்றிச் சிலரே அறிவர். அதுவும் மேலோட்டமான அறிதலாகவே. அதாவது மெய்யுள் வலியுறுத்த விளைந்த அடிப்படையைப் பற்றி, அதனுடைய சிந்தனைப் பெறுமதியைப் பற்றி அறிந்தோர் மிகக் குறைவு. ஆனால், ‘மெய்யுள்’ ஒரு புதிய இலக்கிய உருவமாகும். அது பூரண உருவமாகவும் இருப்பதால் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்ற பாகுபாடுகளை உடைத்தும் கடந்தும் செல்லும் ஓர் வடிவமாகவும் இருக்கும். செய்யுள், உரைநடை என்ற வித்தியாசங்களையும் அது மதிப்பதில்லை. ‘மெய்யுள்’ கற்பனைக் கோலங்கள் சகலவற்றையும் குலைத்துக்கொண்டு அவற்றின் தளங்களைத் தகர்த்துக்கொண்டு நித்திய சத்தியத்தை நோக்கிய நேரடி அனுபவ ரீதியான ஊடுருவல்களுக்குரிய கலை, இலக்கிய உருவமாகும்.

அது இதுகால வரையும் இருந்த கலை இலக்கியங்களை அழிக்கும் கலை, இலக்கியமாகவும் இருக்கும். அதேபோல் அது தத்துவ, சரித்திர, விஞ்ஞான உருவங்களாகவும் சமூக, பொருளாதார, அரசியல், ஆத்மீக மெய்வாழ்க்கை அனுபவங்களாகவும் அமையும், பூரண சர்வோதயத்துக்குரிய பிரபஞ்ச யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் என அதை உருவாக்கியளித்த மு. தளையசிங்கம் விளக்குவார். இதற்கமைய வகைமாதிரியான படைப்புகளையும் மு.த. உருவாக்கியளித்தார். அதைத் தொடர்ந்தார் மு.பொ. பின்நவீனத்துவம் உருவாக்

கிய புதிய உடைப்புகளின் மறுபக்கம் என்று இதை இன்னொரு வகையில் வரையறுக்க முடியும். பின்நவீனத்துவம் தளைகளை உடைத்து, மையத்தைச் சிதைத்து, விளிம்பு நிலைக்கு இடமளித்துப் புதிய வகையான கட்டுடைப்பைச் செய்கிறது. மெய்யுள் நவீனத்துவத்தை மீறி, அகநிலையில் உள்ளோடி விரிந்து, மரபின் சாற்றைக் குடித்து, புதிய வெளியில் விரிந்து, அனைத்து உயிரிகளின் விடுதலையை அவாவுகிறது. அதனால்தான் அது பிரபஞ்ச விடுதலை என்ற மாபெரும் விளைவைத் தன் வேட்கையாகக் கொண்டதாக உள்ளது.

மெய்யுள் பற்றித் தொடர்ந்தும் அவ்வப்போது சிறிய அளவிலேனும் எழுதப்படுகிறது. இளைய தலைமுறையில் ஒரு தொகுதியினர் மெய்யுளையும் தளையசிங்கத்தையும் ஆர்வத்தோடு பயில்கிறது. மு. தளையசிங்கம் தன்னுடைய படைப்புக்களில் பெருமளவுக்கு இருபதாம் நூற்றாண்டிற்குரிய பிரச்சினைகளையும் ஓரளவு இருபது நூற்றாண்டுகளின் சாரத்தையும் வெளிப்படுத்த முயன்ற ஒரு சிந்தனையாளர். 'உடல்கள் இருபதாம் நூற்றாண்டில் கிடந்து உழல, பிரக்ஞை முந்திய நூற்றாண்டு ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ கூறுபட்டுக் கிடக்க பிரச்சினைகளுக்கு எதிர்வினையாக வாய்க்கு வரும் சொற்களை உதிர்க்கும் நம் சிந்தனையாளர்களின் மத்தியில் விதிவிலக்காக வந்து சேர்ந்தவர் தளையசிங்கம்' என சுந்தர ராமசாமி கூறுவார். தளையசிங்கத்தின் அனைத்து எழுத்துகளும் (சிந்தனைகளும்) மு,பொ.வால் முழுதாகச் சேகரிக்கப்பட்டு நூலாக்கப்பட்டுள்ளன. முழுத்தொகுப்பை காலச்சுவடு முழுமையாக வெளியிட்டுள்ளது.

ஆனால், மெய்யுளின் அடுத்த கட்ட வளர்ச்சியையும் பரிமாணத்தையும் எட்டமுன் மு.த மறைந்து விட்டார். மு.த மறைந்தாலும் மெய்யுளின் ஒளிகுன்றவில்லை. அது சிறு சுடராக ஒளிர்ந்துகொண்டேயிருக்கிறது. அதை விரித்து அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லக் கூடிய சிந்தனையாளர் வந்தால் அதன் இன்னொரு நிலையை - வடிவத்தை - ஆழத்தை - விரிவை ஆழ்ந்துணரலாம். ஆனாலும் தன் வாழ்வின் இறுதி நாள் வரையில் மெய்யுளின் வழித் தொடரைத் தொடர்ந்து கொண்டிருந்தவர் மு. பொன்னம்பலம். வளர் தலைமுறையை மனதிற்கொண்டு அவரளித்த சிந்தனைகள் அகத் திறப்பிற்குரியவை. அவருடைய 'மாயை', 'காடு குடிபுகல்' முதலான சிறுகதைகளில் மு.தளையசிங்கம் வலியுறுத்தும் பிரபஞ்ச யதார்த்தவாதத்தை பிரக்ஞை பூர்வமாகக் கையாண்டார்.

பொன்னம்பலம், மெய்யுளின் தொடர்ச்சியைப் பல விதமாகப் பரிசோதித்ததோடு, தன்னுடைய தளத்தில் நின்று கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், சிறுவர் இலக்கியம், இதழியல் என்ற செயற்பாட்டுத் தளங்களில் தொடர்ச்சியாக, தீவிரமாக இயங்கியிருக்கிறார். ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேலாக. மெய்யுள் வலியுறுத்திய உருவத்தை உடைப்பதில், புதியவற்றைப் படைத்தளிப்பதில் மு.பொ எவ்வளவுக்கு பிரக்ஞைபூர்வமாகச் செயற்பட்டிருக்கிறார் என்ற கேள்வியிருந்தாலும் சிந்தனைப்போக்கில் மு.த வைத் தவறாமல் தொடர முற்பட்டார் என்பதை மறுக்க முடியாது. அதனுடைய வெளிப்பாடுகளாக அவருடைய பல தொகுதி எழுத்துகளைக் கூறலாம். அவருடைய சிறார் ஆக்கங்கள். மு.பொ வின் முதற்கட்டம், மு. தளையசிங்கத்தோடு தொடங்கியதும் இணைந்து செயற்பட்டதுமாக இருந்தது. தளையசிங்கத்தின் பிரபஞ்ச யதார்த்தவாதத்தில் மட்டுமல்ல, அவருடைய சமூக, அரசியல் நோக்கிலும் செயற்பாட்டிலும் ஒன்றாகி நின்றார் மு.பொ., மு.த விட்டுச் சென்ற, குறையில் நின்ற பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். ஆனால் தளையசிங்கத்தைப்போல நேரடியான அரசியலிலும் சமூகச் செயற்பாட்டிலும் மு.பொ. ஈடுபடவில்லை. தளையசிங்கம், களப்பணியில் நேரடியாக ஈடுபட்டு சிறைவரை சென்றிருக்கிறார். காவல்துறையினால் கைது செய்யப்பட்டு, மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அவருடைய மரணத்துக்குக் காரணம், அவர் போராட்டத்தின்போது காவல்துறையினால் தாக்கப்பட்டது என்று சொல்லப்படுவதுண்டு. தளையசிங்கம் அளவுக்கு மு.பொ.வுக்கு சமூக, அரசியல் ஈடுபாடு கிடையாது. அதேசமயம் அவரைப்போல செயற்பாட்டுத் தீவிரமும் மு.பொ.வுக்கில்லை. என்றாலும் உள்மன யாத்திரையிலும் கலையாக்க வெளிப்பாட்டிலும் மு.பொ. வுக்கு தீவிர ஈடுபாடு இருந்தது. மெய்யுளின் சிந்தனை வரையறையின்றித் தொடர்வது, அதைச் சமூக வளர்ச்சியின் அடிப்படையாக்க விளைவது என மு.பொவின் பணிகள் அமைந்தன.

இலக்கியக் கோட்பாட்டாளராகவோ விமர்சகராகவோ மட்டுமன்றி, சமூகச் செயற்பாடுகளிலும் தீவிரமாகச் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர் தளையசிங்கம். அவருடைய இலக்கியப் பார்வையும் அதுதான். வாழ்வென்பதே கலை என்றார் மு.த. 'கலைஞனின் தாகம்' என்ற கட்டுரையில் இதைத் தெளிவாக விளக்குகிறார், என்பதால் தான் முன்னரே குறிப்பிட்டுள்ளதைப்போல தீவுப்பகுதியில் (புங்குடுதீவில்) 1970-களில் சாதிய ஒடுக்குமுறை நடந்த போது, அதற்கெதிராக நின்றதோடு நில்லாது அதனையும் எதிர்த்தார் தளையசிங்கம். மேல் சாதியினராகக் கருதிக் கொண்டவர்களின் பிடியிலிருந்த கண்ணகை அம்மன் கோயிற் கிணற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் அள்ளக் கூடாது என்று தடுத்த நீதியின்மைக்கு எதிராகப் போராடினார். தளையசிங்கத்தோடு அன்று இளைஞராக இருந்த கவிஞர் சு. வில்வரெத்தினமும் போராட்டக்களத்தில் நின்றார்.

தளையசிங்கம் வாழ்ந்த காலத்தில் மெய்யுளின் கோட்பாட்டுருவாக்க விவாதத்திலும் செழுமையிலும் மு.த வோடு இணைந்து செயற்பட்ட மு.பொ, 1973-ல் தளையசிங்கம் நோய்ப்பட்டு இறந்த பின் தனித்து நின்று மெய்யுள் பற்றிய விவாதங்களை மேலெடுத்துச் சென்றார். ஆனாலும் அது மு.த வின் சிந்தனைத் தொடர்ச்சியாக - அதைப் பிரதி பண்ணுவதாக இருந்ததே தவிர மு.த வின் சிந்தனை விரிவாக அது இருக்கவில்லை என்பது கவனத்திற்குரியது.

மு. பொவின் இரண்டாம் கட்டம், மெய்யுளைத் தன் வழியில் பரிசோதித்துப் பார்ப்பதோடு, இலக்கியத்தின் பன்முக வெளிப்பாட்டில் தன்னை ஈடுபடுத்துவதாக இருந்தது. கவிதைகளில் அதிகமாகப் பரிசோதனை ரீதியான உடைப்பைச் செய்து பார்த்தார். அதனுடைய வெளிப்பாடே 'அகவெளிச் சமிக்கைகள்', விடுதலையும் புதிய எல்லைகளும், பேரியல் பின் சிற்றொலிகள் போன்றவை. கட்டுரைகளில்தான் (அவை கட்டுரைகள் இல்லை என்பதே மெய்யுளின் விவாதமாகும்) விரிவான உரையாடல்கள் நடந்தன. யதார்த்தமும் ஆத்மார்த்தமும், விசாரம் போன்ற நூல்கள் இதனைக் கண்டறியதவிநிற்கின்றன.

நாவல்களிலும் சிறுகதைகளிலும் மெய்யுளின் அடிப்படைகள் குறைவாகவே உள்ளன. மெய்யுளின் சிந்தனைப்போக்கைச் அவரால் உருவாக்கப்பட்ட நாவல்களில் ஓரளவுக்கு காணலாம். மு.பொவின் முக்கியமான பங்களிப்பு, அவர் முன்

வைத்த விமர்சனங்களாகும். மிகக் கூர்மையான விமர்சனங் கள் மு.பொ வினுடையவை. அதேவேளை பதட்டம் நிறைந்த வையும் உண்டு. எம்.ஏ. நுஃமான், அ. மாக்ஸ், வெங்கட் சாமி-நாதன், ஜெயமோகன் போன்றோருடன் காட்டமான தொனி யில் விவாதங்களையும் எதிர்வினைகளையும் ஆற்றியிருக்கி றார் மு.பொ. எதிர்நிலைப் பார்வைகளாக இருந்தாலும் விவா தங்கள் எப்போதும் அறிவெழுச்சிக்குரியவை என்ற அடிப்ப டையில் முக்கியமானவை. மு.பொ அதைச் செய்தே வந்திருக் கிறார். பின்னாளில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள், தகவற் தவறுகள், மதிப்பீட்டுக் குறைபாடுகளுக்கான அடிபாடுகளா கச் சுருங்கியதும் உண்டு. உதாரணம், ஈழக்கவிதைகளைப் பற் றிய ஜெயமோகனின் கருத்துகள் தொடர்பாக மு.பொ வின் கூற்றுகள்.

மு.பொ.-வினுடைய சிறுவர் கதைகளும், கவிதைகளும் (பாடல்களும்) முக்கியமானவை. மரபார்ந்த கற்பனைத் தளத் தில் அவற்றை உருவாக்குவதை விடப் புதிய கோணங்களில் சிந்திக்கும் வகையிலான அறிவியற் பண்பில் சிறார் இலக்கி யம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே அவருடைய நம் பிக்கை. அதைச் செய்தும் பார்த்தார். அதில் அவர் வெற்றிய டைந்தார் என்றே சொல்ல வேண்டும். ‘ஊஞ்சல் ஆடுவோம்’, ‘நான் அரசன்’, ‘உண்மையில் எழுதல்’ (நாடகம்), ‘செவ்வாய் மனிதன்’, ‘நீர்க்கோலங்கள்’, ‘முடிந்துபோன தசையாடல் பற் றிய கதை’, ‘யுகம் ஒன்று மலரும்’, ‘கலைகள் செய்வோம்’, ‘முற் றத்துப் பூக்கள்’ என்பவை மு.பொ. வின் சிறாருக்கான ஆக் கங்கள்.

பொன்னம்பலத்தின் இன்னொரு பரிமாணம், அவருடைய இதழியல் பங்களிப்பாகும். மு.த வினால் தொடங்கப்பட்ட பூர ணியில் பங்களித்திருக்கிறார். 1980-களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ‘திசை’ என்ற வாரப் பத்தி ரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். திசையில்தான் மு.பொ.வின் பங்களிப்புப் பெரியது. அ. யேசுராசா, நிலாந்-தன், மு. திருநாவுக்கரசு, ஏ.ஜே. கனகரத்னா, ரஞ்சகுமார், கொன்ரன்ரைன், ஸ்ரீதரன் என கலை, இலக்கியத்தில் புலமைத் துவமும் ஆற்றற் சிறப்புமுடைய அணியை திசையோடு இணைத்திருந்தார். இதனாலும் மு.பொ வின் ஆளுமையினா லும் சிந்தனைப் போக்கினாலும் வழமைக்கு மாறான வகை யில் திசை ஒரு மாற்றுப் பத்திரிகையாக வெளிவந்தது. பின் னாட்களில் கொழும்பிலிருந்து வந்த ‘சரிநிகர்’ வாரப் பத்திரி கைக்கு முன்னோடி திசையே. அரசியல், கலை, பண்பாடு, சமூகவியல், வரலாறு, இலக்கியம் ஆகியவற்றில் திசையின் பங்களிப்பு மிகப் பெரியது. இவற்றை விட A Country En-trapped (Poem - 2007) என ஆங்கிலக் கவிதைகளின் தொகுதி ஒன்றையும் மு.பொ. எழுதி வெளியிட்டார். இன் னொரு ஆங்கிலக் கவிதை நூல் ஏ.ஜே. கனகரட்னாவின் மொழிபெயர்ப்பில் வந்தது.

மு. பொன்னம்பலம் எழுதிய ‘திறனாய்வின் புதிய திசைகள்’ என்ற நூலுக்கு மலேசியாவில் தான் ஸ்ரீ சோமசுந்தரம் கலை, இலக்கிய அறவாரியம் 2010/2011-ம் ஆண்டுகளுக்கான அனைத்துலகப் புத்தகங்களுக்கான இலக்கியப் பரிசாக 10,000 அமெரிக்க டாலர்களை வழங்கியது. ‘தமிழ் நிதி’ விருதை கொழும்புத் தமிழ்ச் சங்கம் வழங்கிக் கௌரவித்தது. இதைவிட வேறு பல விருதுகளையும் மு.பொ பெற்றுள்ளார். அதில் அரச விருதுகளும் உண்டு. அரச விருதுகளை மு.பொ பெற்றுக் கொண்டதையும் பின்னாளில் மு.பொவிடம் ஏற்பட்ட சமரசங்களையும் அவருடைய நெருங்கிய சகாக்களான அ.யேசுராசா, நிலாந்தன் உள்ளிட்டவர்கள் கவலையுடன் நோக்குகின்றனர். 1970, 80-களின் மு.பொ-வுக்கும் 1990, 2000-க்குப் பிந்திய மு.பொவுக்கும் இடையிலான வேறுபாடு கள் துலக்கமானவை. முதற்கட்டம் யாழ்ப்பாணத்தைத் தளமா கக் கொண்டது. இரண்டாவது கட்டம், கொழும்பைத் தளமா கக் கொண்டமைந்தது.

12 வயதில் கவிதை எழுதி, இலக்கியத்தில் ஈடுபடத் தொடங் கிய மு.பொ, தன்னுடைய இறுதி நாட்கள் (86 வயது) வரை தொடர்ந்து எழுதிக் கொண்டும் விவாதித்துக் கொண்டுமே இருந்தார். இளையோரின் வெளிப்பாடுகளில் அவர் கொண்டி ருந்த ஆர்வமும் அவற்றைக் குறித்து எழுதிய பண்புடைய பங் களிப்புகளும் மதிப்புக்குரியவை. ஒரு முன்னோடியின் பங்க ளிப்புகளாகவும் பண்பாகவும் மு.பொவினுடைய அடையாளம் வரலாற்றின் நினைவில் அழியாதது. இன விடுதலை, ஈழப் போராட்டம், தமிழர் அரசியல் போன்றவற்றில் மு.பொ வின் பார்வை விமர்சனபூர்வமானதாக - உண்மையைக் கண்டறி யும் வேட்கையோடிருந்தது. இதனால் அவர் விமர்சனங்களை யும் எதிர்கொண்டார். அதையிட்டு வருத்தமேதும் அவருக்கி ருக்கவில்லை. பதிலாக மகிழ்ச்சியில் திளைத்தார். அதே வேளை சமூகத்துயர் அவரைப் படுத்தியது.

மு.பொ 1980-களில் எழுதினார், ‘ஒவ்வொரு மனிதனது விடுத லையும் அவனவன் அறிவுக்கேற்ப நடைபெறுகிறது. ஒரு சமூ கத்துக்கும் இனத்துக்கும் அப்படியே. அதனதன் அறிவுக் கேற்ப அது குறுகவும் விரியவும் செய்கிறது. விடுதலையின் எல்லைகள் எமதறிவின் எல்லையைச் சுட்டுகின்றன’. நாம் பட் டறிந்த வரலாற்றிற்கு இதை விட அருஞ்சொல் வேறென்ன? ஆனாலிதை முன்னுணர்ந்துரைத்திருந்தார் மு.பொ. அறிஞ ரின் இயல்பும் முதன்மையும் இதுவே. அதனாற்தான் ‘அறிவு பெருத்தவர் நோவு பெருத்தவர்’, ‘காலத்தை முன்னுணர்ந்த வர், கால முரணாற் துயருறுவர்’ என்று கூறப்படுவதுண்டு. மு.பொவின் எழுத்துகள் ஒரு வகையில் விடுதலைக்கான வேட்கை எனில், இன்னொரு வகையில் அது சமூகத்துயரி லும், காலத்துயரிலும் தோய்ந்தவையாகும்.

மு.பொ.வின் இறுதிக்கால எழுத்துகளில் முக்கியமானது, மு.தளையசிங்கத்தைப் பற்றி எழுதப்பட்ட ‘மு. தளையசிங்கம்: அடிபெயர்க்கும் நினைவுகள்’ என்ற வரலாற்று நூலாகும். இது தளையசிங்கத்தின் வாழ்வையும் வரலாற்றையும் ஆளுமை உருவாக்கத்தையும் அருகிருந்து பார்த்துணர்ந்தவரின் வெளிப்பாடு. இதைப் படிக்கும்போது மு. தளையசிங்கத் தைப் பற்றிய இன்னொரு பரிமாணம் நமக்குக் கிடைக்கிறது. கூடவே அன்றைய சமூகச் சூழலும் மு.பொவின் வரலாற்றிற் பாதியும்.

அன்பொழுக, எல்லோரையும் எவ்வுயிரையும் தன் நெஞ்சோட ணைத்துப் பேசும் தன்னியல்புச் சித்திரமாக வாழ்ந்த மு.பொ-வின் விடைபெறுதல், சத்தியத்தின் ஒளியை - மெய்யுளை - நம் நெஞ்சிலே ஏற்றுகிறது. ஒளியினால் வரைந்த சித்திர மொன்று நமக்குப் புலனாகிறது.



karunagaran@thaiveedu.com



# பண்ணாய் விசும்பில் படரும் சுருதி : மு. பொன்னம்பலம் நினைவாக...

– மு. புஷ்பராஜன்

பிற்காலத்தில் எனக்கு மிக நெருக்கமானவரும், இலக்கியத்தில், குறிப்பாக கவிதையில் பல புதிய திசைகளை உணர்த்தியவர்களில் ஒருவருமான மு.பொ. அவர்கள், வெறுப்பின் வழியாக அறிமுகமானார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை. காரணம், ஒருசிலர் அவ்வாறுதான் எனக்கு அறிமுகமாகியுள்ளனர். என் 'ராசி' அப்படி.

யாழ்ப்பாணத்தின் வீரசிங்கம் மண்டபத்தின் வெளிச்சுவரிலும் கண்ணாடி யன்னல்களிலும் மதியம் சாய்ந்த ஒளி படர்ந்துகொண்டிருந்தது. உள்ளே டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை' இதழ் பற்றிய ஆய்வு நடந்துகொண்டிருந்தது. எத்தனையாவது இதழ் என்பது ஞாபகத்தில் இல்லை. அவையோர்க்கான நேரத்தில் இளையவர் ஒருவர் மல்லிகையில் வெளிவந்த சிறுகதைகள் பற்றி பேசுகையில் சிறுகதைகள்... மௌனியின் சிறுகதைகள்போல்..., உணர்வு... உணர்வு... மென்மையான உணர்வு எனத் தடுமாறிக்கொண்டிருந்தார். தீடீரென பின் வரிசையிலிருந்து 'அதென்ன மென்மையான உணர்வு' என்ற குரல். சுத்தமான நக்கல் குரல்தான். பார்வையாளர்களில் பலர் சிரித்தே விட்டார்கள். பேசியவர் மேலும் தடுமாறிவிட்டார். மௌனியின் சிறுகதைகள் கிளர்த்தும் மன உணர்வுகளைத் தேர்ந்த வெளிப்பாட்டுத்திறன் உள்ளவர்களே பொருத்தமான வார்த்தைகளுக்குத் தவிக்கும்போது... நான் சினத்துடன் திரும்பிப் பார்த்தேன். மிக மெலிந்த தோற்றம், அடர்த்தியற்ற கேசம், பரந்த நெற்றி, ஊதலற்ற உட்குவிந்த கன்னம், முகத்திற்கு பொருத்தமற்ற தடித்த மீசை.

கூட்டத்தின் முடிவில் வழமைபோல் மண்டப வெளி முற்றத்தில் சிறு சிறு குழுக்களிடையிலான உரையாடல்கள். எனக்குள் எரிச்சலை ஏற்படுத்தியவர் மு. பொன்னம்பலம் என அந்த உரையாடல்கள் மூலம் அறிய முடிந்தது. இலக்கிய ஆர்வத்துடன் படைப்பாளிகளையும் சந்திக்கும் ஆவல் நிறைத்திருந்த காலம் அது. மு. தளையசிங்கத்தின் தம்பி என அறியப்பட்டவருடன் எனது எரிச்சலை வளர்ந்துகொள்ள முடியாது. அது அடங்கிவிட்டது. அதன் பின்னர் இருவருக்கும் இடையிலான நட்பின் செடி, செழுமையுடன் அடர்த்தியாய் இலைகளை விரித்து வளர்ந்தன.

அநேகமாக ஒவ்வொரு வாரத்தின் வெள்ளிக்கிழமைகளிலும் அவர் யாழ் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். யாழ் பஸ் நிலையத்தின் மேற்குப்புறமாக அமைந்திருந்த நவீன சந்தைக் கட்டடத்திற்கு எதிராகவுள்ள ஒரு கடைக்கு வந்து, பொருட்களை வாங்கிச் சேகரித்துக்கொண்டு புங்குடுதீவுக்குத் திரும்பிவிடுவார். தனியாகவும் வருவார். சில வேளைகளில் வில்வனுடனும் (சு. வில்வரத்தினம்) வருவார். இரண்டாவது அல்லது மூன்றாவது ஆளாக நான் இணைந்துகொள்வேன். நண்பகல் வெயிலின் வேர்வையிலும், முடிந்தால் மழையிலும் தொடரும் நடையில் தமிழகத்து, ஈழத்து இலக்கியங்களின் அலசல் எம்மோடு இழுபட்டுக்கொண்டு வரும்.

70-களில் மு.த.-வின் 'போர்ப்பறையும்', மு.பொ.-வின் 'அது' கவிதைத் தொகுதியும் அதே வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படுகிறது. 'போர்ப்பறை' விமர்சனம் செங்கையாழியானுக்கு. 'அது' இலக்கிய நட்பின் நெருக்கம் காரணமாக எனக்கானது. விமர்சனத்திற்காக அத்தொகுதியைத் திரும்பத் திரும்ப படித்தபோது அக்கவிதைகளின் வரிகள் என்னுள் ஏற்படுத்திய கிளர்ச்சியும் பிரமிப்பும் இன்றும் பசுமையானது. மனம் லயித்து நான் மீட்டிப்பார்க்கும் பலரது கவிதை வரிகளுள் மு.பொ.-வினதும் அடக்கம். 'விளக்கிய ஒளித்தரை மீதினில் பளிச்சென கோல வெளிச்சங்கள்', 'அந்திக் கருவானின் கூனல் முடிவில் குதிக்கும் சுழிப்பில்', 'யாரெங்கோ இன்துயர் யாழைப் பிழிந்துவிட இரவிங்கே மேவும் இசை போல', 'வருகிறாள் எனது காதல் வதிந்திடச் சமைந்த கோயில்', 'ஒடுங்கும் ஒளித்திரள்வின் ஓரக் கசிவு' என இப்படியே இவை நீண்டு செல்லக்கூடியவை.

விடுமுறை காலங்களில் யாழ் வருகையில் சிலவேளை புங்குடுதீவுக்குச் செல்வதும் மு.த. வீட்டில் தங்கி மறுநாள் காலையில் மீள்வதையும் நான் வழக்கமாகக் கொண்டிருந்தேன். இக்காலங்களில் மு.த, மு.பொ. ஆகியோருடன் வெகுநேரம் வரைக்கும் இலக்கிய உரையாடல்கள்தான். மு.பொ. கவிதை சார்ந்து மொழியின் தெரிவு பற்றியும் நேர்த்தி பற்றியும் அதன் மேலைத்தேய சிந்தனை மாற்றங்கள் பற்றியும் விபரிப்பார். படைப்பின் ஒற்றைப் பரிமாணத்திற்கு அப்பால் பல்பரிமாணங்

களையும் வலியுறுத்துவார். வில்வனுடன் சேர்த்து சுந்தரலிங்-கம், நா. தர்மலிங்கம் என இவர்களது சர்வோதய இளைஞர்களும், இவர்களது குருவான நந்தகோபாலகிரியின் துணைவியாரும் அறிமுகமானதும் இங்குதான். தளையசிங்கத்தின் வீட்டின் முன்னால் விரிந்திருந்த வயல் வரம்புகளில் அமர்ந்திருந்தபடி இலக்கிய உரையாடல்களும் வில்வனது இனிய கானங்களுமாய் அமைந்த அக்காலங்கள் இன்று இன்துயர் யாழை என்னுள் மீட்டுகின்றன. காலத்தின் கொடிய கரங்களினால் எப்படி எப்படியெல்லாம் திசைக்கொன்றாய் தூக்கி வீசப்பட்டிருக்கிறோம். எவர் எவரையெல்லாம் இழந்துவிட்டோம்.

மு.பொ. இயல்பிலேயே தனது 'நோயில் இருத்தல்' நாவலில் குறிப்பிடுவதுபோல் மிகவும் கூச்ச சுவாவமுடையவர்தான். மிக மெல்லிய இதயம் கொண்டவர்தான். அவர் கவிதைகளில் கையாளப்படும் குறியீடுகளில், கவிதை வரிகளில் அவர் கலந்துவிட்ட மெல்லிய ஒலிலயங்களில், அவர் இலயிக்கும் விடயங்களில் இதனைக் கண்டுகொள்ளலாம். முரண்பாடு உடைய விடயங்களில் தனது கருத்துகளுக்கு வலிமை கொடுத்து சொற்களில் சூடேற்றி பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆனால் நண்பர்களுடனான நேரடி விவாதிப்பின் போது, விவாதிப்பவர் நியாயமற்ற தமது நிலைப்பாட்டில் தெடர்ந்தும் நிலைகொண்டால் அவர் மௌனமாகிவிடுவார். இந்த மௌனத்தைச் சிலர் தமது வெற்றியாகவும் எடுத்துக் கொள்வார். சில உரையாடல்களில் இவ்வாறான மௌனத்தை தமது வெற்றியாக எடுத்துக்கொண்டு உள்ளூர மகிழ்ச்சி அடைந்தவர்களை அறிவேன். அது அவர்களின் வெற்றி அல்ல. வெற்றி பொன்னம்பலத்தினதே.

ஈழத்து இலக்கியத்தில் மார்க்சிய கோட்பாடு சார்ந்த முற்போக்கு இலக்கியம் அதற்கு அப்பால் இலக்கிய வட்டம் என இரு முனைகள் இயங்கிய போதிலும் மு.பொவும் அவரது சகோதரரும் ஆன்மீக அனுபவங்களைப் புதிய பரிமாணத்தில் மூன்றாவது முனையாக அழுத்தினார்கள். இவர்கள் முதன்மைபெற்ற இந்த இரண்டு முனைகளிலுமிருந்து விலகி, தனியாக எதனைச் சாதித்துவிடமுடியும் என நான் கருதியதுண்டு. எண்ணிக்கை, பலங்கள் ஆகியவைகளை மீறி, நம்பிக்கை மீதான செயற்பாடும் நேர்மையும் உறுதியும் அவர்களில் நிறைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அவர்களது ஆழ்ந்த ஆத்மார்த்த உணர்வு, இரத்த உறவு வழியாக அவர்களுக்கு கையளிக்கப்பட்ட பொறியின் பெருவிரிவு என்றே கொள்ளவேண்டும். 'தனக்கு யாரோ கொடுத்த தீட்சை மந்திரத்தை சதா உச்சரித்துக் கொண்டிருக்கும் தனது தாயைப் பற்றியும் அவள் சிறு வயதில் எதிர்கொண்ட ஞானிகளின் வெளிக்காட்டலையும் மு.பொ. தனது 'நோயில் இருத்தல்' நாவலில் பதிந்துள்ளார்.

மு.பொ.வை புற உலகை நிராகரித்து, அக உலகுக்குள் உள்ளொடுங்கிப்போன சராசரி ஆன்மீகவாதிகளில் ஒருவராகக் கருத முடியாது. ஆழ் மனதுள் உள்ளோடி, அக உலக அனுபவங்களின் ஒளியில், புற உலகைப் பார்க்கும் அவசியம் பற்றி அவர் அடிக்கடி குறிப்பிடுவார். இதனால்தான் அவர் ஆன்மீகத்துடன் கலை, இலக்கியம், அரசியல், தத்துவம், விஞ்ஞானம், உளவியல் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஈழத்தில் ஆயுதப் போராட்டம் முனைப்படைந்த காலத்தில், அவை வர்க்க நலனுக்கு எதிரானவை என பல மார்க்சிய கோட்பாட்டாளர்கள் கருதினார்கள். அவர்கள் முழு இலங்கைக்குமான தேசியம் பற்றி அழுத்திய வேளையில், தமிழர்களுக்கான தனித் தேசியத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் அதுசார்ந்த விமர்சனத்துடன் கூடிய ஆதரவையும் வழங்கினார். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம், தமிழீழத்தில் போராளிகளை வேட்டையாடிய காலத்தில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வாளர் ஒருவரின் தலைமறைவு வாழ்க்கைக்கு, இவரது வாழ்விடம்தான் அரணாக அமைந்திருந்தது. ஆனால் பிற்காலங்களில் அவர் கெழும்



பில் வாழ நேர்ந்ததன் பின்னர் அரசியல் சார்ந்தும் இலக்கிய மதிப்பீடுகள் சார்ந்தும் அவருள் ஏற்பட்ட தலைகீழ் மாற்றம் நான் முற்றிலும் எதிர்பாராத, ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றா

கவே இருந்தது.

மு.பொ. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தார். அவரே இவர்மீது நிறைய பாதிப்புகளையும் ஏற்படுத்தியிருந்தார். இவருடனான உரையாடலின்பொழுது இதை மிகத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். எனக்கு The Gospel Of Sri Ramakrishna என்ற நூலை வாசிக்கும் ஆர்வத் தினை ஏற்படுத்தினார். பின்னாளில் இவற்றை வாசித்தபோது இவர்கள் அழுத்திய சர்வமதங்களின் இணைவு, பூரணத்தை அடைவதற்கு தடையான அனைத்தையும் துறத்தல் என்பவை களின் மூல வேர்கள் இங்கிருந்துதான் ஆரம்பமாகியிருக்கி றது என்றே நான் கருதுகிறேன்.

இன்றைய நம் பாவனையிலுள்ள இலக்கிய உருவங்கள், மனி தமன அகம், புறம் ஆகிய அனுபவங்களின் வெளிப்பாட்டிற்கு போதாமையாக இருப்பதனால் இவை யாவும் சிதைவிற்கு உள்ளாகும் சூழல் ஆரம்பமாகிவிட்டது. பழைமையிலிருக் கும் எதிர்காலப் போக்கின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய கூறுக ளுக்கும் புதிய போக்கிற்கிடையிலும் ஒரு கலப்பு நிகழும். வர்க்கங்களைத் தாண்டுவதற்கு முன்னால் வர்க்கக் கலப்பு ஏற்படுவதுபோல, சாதிகளைத் தாண்டுவதற்கு முன்னால் சாதிக் கலப்பு ஏற்படுவதைப்போல, குணங்களைத் தாண்டுவ தற்கு முன்னால் குணக் கலப்புத் தோன்றுவது போல், பூரண பெருமதம் தோன்றுவதற்கு முன்னால் சர்வமதக் கலப்பு ஏற்ப டும் என்று நம்பிக்கையை வெளியிட்டனர். புறவாழ்வின் மேன் மைக்கு அசைய மறுத்துத் தடையாய் இருப்பவற்றையும் அக வாழ்வின் தேக்கங்களையும் உடைத்தலையே பேரிருப்பின் உணர்தலுக்கான வழியாகக் கண்டனர். இதன் இன்னெரு பரி மாணமான வெளிப்பாட்டை மு.பொ.வின் 'கவிதையில் ஏன் நாடகம் எழுத வேண்டும்' என்ற கட்டுரையில் கண்டுகொள்ள லாம். அதில் இன்றைய சிந்தனைப் பாய்ச்சலுக்கு வேண்டிய ஊடகம், வழமையான வசனமாகவோ செய்யுளாகவோ இருக் கமுடியாது எனக் குறிப்பிடுகிறார்.

மு.பொ. யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு இரும்புக்கடையின் மேல்மாடியில் 'சத்தியம்' பத்திரிகை வெளியிடுவதற்காகத் தங்கியிருந்தார். அங்கு எங்கள் உரையாடல் நிகழும், வாரத் தில் இரு தடவையாவது மு.த. வருவார். இருவரும் வெகுநேரம் உரையாடிக்கொண்டிருப்பார்கள். தமிழிலிருந்து ஆங்கிலத் திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குமாக மாறி மாறி ஒரு கலப்பு மொழியில் அவை நகரும். இருவரும் பழகும் விதம் சகோதரர்கள் என்பதை யாழ்ப்பாண சமூக உறவுமரபு ஏற்றுக் கொள்ளாது. நல்ல நண்பர்களாகவே புரிந்துகொள்ளப்படு வார்கள். இவர்களது உரையாடல்களை அவதானிக்கையில் உடனடியாக ஏதோ ஒரு பெரிய மாற்றம் நிகழப்போகிறது. அதை உணர்த்தியபடி யாரோ தம்முன்னால் நின்று வா வா என அழைப்பது போலவும் அங்கு செல்லத் தயாராக வேண் டும் என்பதான பாவமும் வேகமும் தென்பட்டது. இவ்வேகம் பின்னர் வெளிவந்த இவர்கள் நூல்களில் விரிவுபெற்றது.

'வர்க்க வேறுபாடுகளைத் தாண்டுவதோடு மனித பரிமாணம் நிற்கப்போவதில்லை. அது தனியாக முழுமையடையப் போவ தில்லை. சாதி, சமயம், இனம், மொழிப்பற்று எல்லாமே தாண் டப்படும் ஒரு புதுத்தளப் பாய்ச்சல் ஏக காலத்தில் ஏற்படப் போகிறது. அது மனிதரின் உடல், உயிர், மனம் ஆகிய வற்றை, அவர்கள் இதுவரை பரவலாக அறியாத விஞ்ஞானம யகோசம் ஆனந்தமயகோசம் ஆகியவற்றின் ஆத்மீக ஆளு கைக்கு உட்படுத்தி, முக்குணங்களை மீறும் அகத்தள-புறத் தள உணர்ச்சியினால் கொண்டுவரப்படவிருக்கிறது. சமூகத் தின் சகல துறைகளும் இன்று இவ்வழியிலேயே ஆற்றுப்படுத் தவேண்டும். இனிவரும் யுகத்தில் அறிவும் அனுபவமும் இது வரை காட்டாத புதுப் பிராந்தியங்களுள் நாம் புகப்போவதால் மிக மிகக் கூர்மையான சொல்லாட்சியும் எழுத்தாட்சியும் நடைபெறப்போகிறது' என்பதாக விரிவு பெற்றது.

உண்மையில் இவைபற்றி இன்றுவரை தெளிவற்ற குழப்பங் கள்தான் என்னுள் மிஞ்சியுள்ளது. ஆனால், இவற்றை போலித்தனமாக முன்வைக்கக்கூடிய இயல்புடையவர்கள் இல்லை என்பதை நான் அறிவேன். அறிவும் அனுபவத்தின் முன் இதுவரை காட்டாத புதுப்பிராந்திய அனுபவத்தை மு.த. தனது 'அண்டை வீடுகள்' படைப்பில் முன்வைத்ததுபோல் மு.பொ. முன்வைத்ததாக நான் அறியவில்லை. 'இரவு நேரங்க ளில் ஆழ்ந்த நித்திரையில் நான் என்னை விட்டுக் கழன்று ஓடுகின்ற அனுபவங்கள் பல' என 'நோயில் இருத்தல்' நாவ லில் மட்டும் குறிப்பிடுகின்றார்.

மு.பொ. பற்றி அதிக தகவல்களைத் தருவது அவரது 'நோயில் இருத்தல்'தான். அது ஒரு Semi Autobiographical நாவலேதான். மு.பொ.வுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் யார் யாரது பிரதி என் பதை இலகுவில் கண்டுகொள்ளலாம். வைத்தியசாலையில் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த இரு சந்தர்ப்பங்களில் வைத்தியசாலையின் சூழலை, அங்கு அனுமதிக்கப்பட்டி ருந்த நோயாளரின் செயற்பாடுகளை ஒரு பிறத்தியான் போக் கில் அவதானிப்பதை விபரிக்கின்றது. இந்த பிறத்தியான் போக்கு எப்போதும் அவருக்கு உவப்பானது. விடுபட்ட மனநி லையில், வைத்தியசாலை மட்டுமல்ல, இந்நாடே ஒரு நோய்க் கூறாக அவர்முன் விரிகின்றது. அதில் அரசியல், ஆன்மீகம், ஆயுதப் போராட்டம், புரட்சி ஆகிய அலசல்களுக்கிடையில் தன்னைப் பற்றிய குறிப்புகளையும் அங்கு வெளிப்படுத்திக் கொள்கின்றார்.

'ஒரு காக்கை குருவி இல்லாத வெறித்த வெளியில் என் பூரண அமர்க்களத்தைக் காண்பவன் நான், வெறுமையும், தனிமையும் என் மனநிலையின் உருவங்கள் என்பவன் நான்'.

'நான் எங்கு போனாலும் எதைச் செய்தாலும் அதை விடுபட் டுப் பார்த்து நிற்கும் ஒன்றை நான் எப்போதும் உணர்ந்திருக் கிறேன், அதன் அவதானிப்பினால் எப்பொழுதுமே, எதிலுமே என்னை அத்துமீறாமல் பார்த்துக்கொண்டிருக்கிறேன்'.

'வேறு நேரங்களில் எப்போதோ இறந்துபோன சிலர் என் னோடு நடத்தும் உரையாடல், சில சந்தர்ப்பங்களில் பூவுல கத்திற்கே அன்னியமான பிரகிருதிகளின் தோற்றங்களின் தொடர் உபாதை. அந்நேரங்களில் நான் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு என் முழுச்சக்தியையுமே விரயம் பண்ணியது போன்ற வேர்த்துக்கொட்டிய அனுபவங்கள்'.

‘வேண்டியபோது உடலைக் கழற்றிவிட்டு காற்று வெளியில் புகவும், தேவைப்படும்போது உடலில் புகுந்து வாழ்க்கையின் தித்திப்பைத் தொட்டுக்கொள்ளவும்கூடிய சித்தர்களாய் மாறுவது எப்போது’.

புறத்தளப் பார்வையாற்றிய இயங்கியல் விதியின்படி எல்லாமே மாற்றங்களிற்கு உள்ளாகிக்கொண்டிருக்கையில், ஒரு ஆன்மீகவாதியாய் வெளிமாற்றங்களை அங்கீகரிக்கும் வேளையில் உள்ளுலகில் ‘அது’ மாறுவதில்லை என இவர்களது அடிப்படையை, புற உலகு தவிர வேறெதுவும் இல்லை என நம்பும் ஒருவரும் நம்பப்போவதில்லை. இவர்களது இந்த நிலையை நோய் கூற்றின் வெளிப்பாடு என இலகுவாக கூறிவிட முடியும். சிலர் அவ்வாறுதான் கூறினார்கள். இதை மு.பொ.வே என்னிடம் கூறியுள்ளார். ஆத்மீகச் சாதனையாளனாவதற்கான குரு-சிஷ்ய முறையுள் ஏன் என்ற கேள்விக்கு இடமில்லை என்பதை இவரது ‘நோயில் இருத்தல்’ மூலம் அறிய முடிகிறது. இது ஒரு கடுமையான இராணுவ அமைப்பின் கூறுகளைக் கொண்டதாகவே தெரிகிறது. இரண்டிலும் கேள்விக்கு இடமில்லை. ஒன்றில் அர்ப்பணிப்பு என்ற ஆத்மீகம் சார்ந்த சொல். மற்றையதில் ஆணைக்குக் கீழ்ப்படிதல் என்ற அரசியல் சார்ந்த சொல். இதனால்தான் வியத்தகு அறிவைக் கொண்டிருந்த ரஜினீஸின் ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் ஸ்ரலின் கால சோவியத் ரஸ்சியாவை நினைவூட்டியது.

ஓகஸ்ட் 15-ல் நான் பக்கிங்காம் மாளிகையில் ஹிட்லர் உணவருந்த வேண்டும் என்ற சபதத்தைக் கேட்ட அரவிந்தர் எதிர்சபதம் எடுப்பதும், ஹிட்லருக்கு எதிராக அரவிந்தர் தனது பேர்மனப் பெம்பாட்மன்களை அனுப்புவதும், உயிர் ஊசலாடிய இங்கிலாந்தைக் காப்பாற்றி ஹிட்லரின் மனதை வேறு பக்கம் திருப்பிய கணப்பொழுதுகளை தீர்மானித்தது அரவிந்தரின் பேர்மன - சைக்கிக் பெம்பாட்மென்கள்தான் என மு.பொ. கருதுவதை நம்ப நமது மனம் மறுக்கிறது. இதை மு.பொ.வும் உணர்ந்ததால்தான் விஞ்ஞான வெளியுலகு இதை ஏற்குமா ? என்ற கேள்வியை முன்வைக்கிறார்.

மு.பொ. இலக்கியச் செயற்பாடுகள் பல துறைகளில் விரிந்திருந்திருக்கிறது. அவற்றில் கவிதை, இலக்கிய விமர்சனம் ஆகியவற்றிலேயே ஆழமான தடங்களைப் பதித்துள்ளார் எனக் கருதுகிறேன். அவரது ‘அரைநாள் பொழுது’, ‘மூடுபனி’ போன்ற ஆரம்பகாலச் சிறுகதைகளின் வெளிப்பாட்டுத் திறனை பிற்காலங்களில் ஏனோ கைவிட்டுவிட்டார். அதற்கு அவர் முதன்மைப்படுத்திய ஆத்மீகமும் அதை வளர்த்தெடுக்க அவர் மேற்கொண்ட விசார முறையும் காரணமாயிருக்கலாம். அவர் பிற்காலப் படைப்புக்கள் மு.த.-வால் முன்வைக்கப்பட்ட ‘மெய்யுள்’ளிற்கு வகைமாதிரியை அமைக்கும் முயற்சியாகவே முடிந்தது. அவைகள் வ.அ. இராசரத்தின் ‘ஒரு காவியம் நிறைவு பெறுகிறது’ போன்றோ டொமினிக் ஜீவா தன் தாயாரின் மரணம் பற்றி எழுதிய குறிப்புகளைப் போன்றோ உணர்வுகளில் உயிரேற்றவில்லை. மு.பொ. பெரிதும் அழுத்தும் ஆத்மீகத் தளங்களை வருடவில்லை. அவரது ‘வேட்டை’ மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாக வந்திருக்க வேண்டிய ஒன்று. ஆனால் அச்சிறுகதையின் இறுதிப்பகுதி, அதுவரை தொடர்ந்து வந்த ஜிம் காபெட்டின் கூர்மையை மழுங்கடித்ததுடன் அக்கதையின் பன்முகத் தளங்களையும் சிதைத்துவிட்டது. எல்லாச் சமயங்களின் இணைவைப் பெருந்தள விரிவாகப் பார்ப்பதுபோல், கலை இலக்கிய ஊடகங்களின் உடைவையும் எல்லாவற்றின் இணைவையும் தமது தத்துவார்த்தத்திற்குரிய வெளிப்பாட்டு முறையாக அவர் கருதியிருக்கலாம். இருந்தாலும், ஆத்மார்த்தத் தளத்தினுள் ஒரு கரைவின் தன்மையை அல்லது அதன் பொருள்சார்ந்து விரிவையோ எரிவையோ ஏற்படுத்தவேண்டும். ‘கடலும் கரையும்’ சிறுகதைத் தொகுதியை முன்வைத்தே இக்கருத்தைக் கூறுகிறேன். இத்தொகுப்பிற்குப் பின்னர் மு.பொ. எழுதிய சிறுகதைகளின் தொகுதி ஒன்று சமீபத்தில் தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அறிகிறேன். அவை என் கைவசம் இல்லாமையால் அவைபற்றி நான் எதுவும் முன்வைக்க முடியாதுள்ளேன்.

இவருடைய ‘யதார்த்தமும் ஆத்மார்த்தமும்’ தமிழில் மிக ஆழமாக எழுதப்பட்ட கட்டுரைகளில் ஒன்று. தமிழ் சூழலின், தமிழ் மண்ணின் அகச்சாரத்தில், படைப்பின் ஆழ்மன வேரில் ஒளியேற்றும் திரியினை சுட்டுகிறார். அது கலை, இலக்கியம் சார்ந்த மிக முக்கியமான தொகுதி. அத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் இன்றும் அதன் ஜீவிதத்தை கொண்டிருக்கிறது. இனியும் கொண்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட சமூக பொருளாதாரக் காலப் பின்னணியில் படைக்கப்பட்ட கலை, இலக்கியங்கள், அக்காலப் பின்னணி நீங்கிய பின்பும் சுவைக்கப்படக்கூடியதாக இருப்பதற்கு, கலை என்றால் என்ன என்ற கேள்வியையும் அதன் ஆத்மார்த்தத் தொடர்புகளையும் மேலைநாட்டு, கீழைநாட்டு படைப்புகள் மூலம் அவர் முன்வைக்கும் கருத்துகள் அவரது சுய சிந்தனையையும் தனித்துவத்தையும் சுட்டுகிறது. பொதுவாகவே தமிழில் வெளிவரும் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் மேலைத்தேய சிந்தனைக்கு இசைவாக அல்லது அதை நோக்கி தமிழ்ச் சூழலை முன்னகர்த்தும் முயற்சியாகவே அமைவதுண்டு. மு.பொ.வின் ஆத்மார்த்தத்தை அழுத்தும் இத்தொகுப்பின் பல கட்டுரைகள் கீழைத்தேய சிந்தனை மரபில் வேரோடி விரிகையில் அதற்கு ஒப்பான மேலைத்தேய படைப்புகளை தமது கருத்துக்கு வலிமையாக்குகிறார். இது சுய சிந்தனையின் வலிமையையே காட்டுகிறது.

மு. பொன்னம்பலம் சாராம்சத்தில் ஒரு கவிஞர்தான். அவரது ‘மார்கழிக் குமரி’ கவிதையை யார்தான் மறக்கமுடியும். அவர் கதை, கவிதை, நாவல், கட்டுரை, ஆத்மீக விசாரம் பத்திரிகை ஆசிரியர் என எல்லாத் துறைகளிலும் கால்பதித்திருந்தாலும் அதற்குள் மு.பொ. என்ற கவிஞன் தன்னைப் பல இடங்களில் வெளிப்படுத்திக்கொள்வதை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். இன்று புதுக்கவிதை தன் கவிதைத் தன்மையை இழந்து வெறும் வசனமாகவே மாறிக்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் புதுக்கவிதைக்கு மீளுயிர் கொடுக்க முனைகையில் கவித்துவங்களிற்கு முன்னுதாரணம் காட்டுவதற்கு குறிப்பிடப்படும் கவிதைகளில் மு. பொன்னம்பலத்தின் கவிதைகள் நிச்சயம் அடங்கும்.

*(நன்றி: காலம் - டிசம்பர்: 2010)*



pushparajan.m@thaiveedu.com



# அதிபர் பொ. கனகசபாபதி வாழ்வும் வரலாறும்

–குரு அரவிந்தன்

ஒருவரைப்பற்றி நினைவுகூரும்போது, அவர் பிறந்த நாளில் அதைச் செய்வதா அல்லது இறந்த நாளில் செய்வதா என்பதில் மாற்றுக் கருத்துகள் உண்டு. ஒருவர் சமூகத்திற்கு ஆற்றிய சேவை இனிக் கிடைக்காது என்பதால் பல நாடுகளிலும் அவர் இறந்த நாளையே நினைவுகூரும் நாளாகப் பின்பற்றி வருகின்றனர். ஆனால் அவர் இப்படியான சேவைகளைச் சமூகத்திற்குச் செய்வதற்கு அவர் இந்த மண்ணில் பிறந்தது தானே காரணம், அதனால் அவர் பிறந்த நாளையே மகிழ்ச்சியோடு கொண்டாடுவது நல்லது என்று இன்னொருசாரார் கருத்தை முன்வைக்கிறார்கள். அது எதுவாக இருந்தாலும், அவர் சமூகத்திற்கு விட்டுச் சென்ற சிறந்த பணியை எவ்வாறு நாங்கள் தொடர்கிறோம், அதைத் தொடர்வதற்கு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பது தான் இங்கே கவனிக்கப்பட வேண்டும்.

இதை நான் குறிப்பிட்டதற்குக் காரணம், மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆகின்றது.

இங்குள்ள நண்பர்களும், பழைய மாணவர்களும் இணைந்து அவரது நினைவாக, உள்ளூராட்சி மன்றத்தின் உதவியுடன் கனடா - ரொறன்ரோவில் உள்ள மல்வேன் பூங்காவில், அவரது நினைவாக நடப்பட்ட கென்ரகி கொபி மரக்கன்று (Kentucky Coffee Tree) ஒன்றை நட்டு, அதன் கீழ் ஒரு இருக்கையையும் வைத்திருக்கிறார்கள். இருக்கையிலும், நினைவு மரத்தின் கீழும் அவரைப் பற்றிய விபரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. பூங்காவுக்கு வருவோர் அதை வாசித்துச் செல்லும்போது, நினைவுத்தூபி போல, அவர் கனடாவில் வாழ்ந்த அடையாளத்தையும், ஆற்றிய சேவையையும் அது சுட்டிக் காட்டி நிற்கின்றது. புலம் பெயர்ந்த தமிழர் ஒருவருக்கு, அவர் தன்னலம் கருதாது ஆற்றிய பணிக்காகக் கிடைத்த பெருமையாக இது கருதப்படுகின்றது.

அதிபரின் பிறந்த நாளான செப்ரெம்பர் 4-ஆம் நாள் அவரது நண்பர்கள், பழைய மாணவர்கள், குடும்பத்தினரால் அந்த நாள் 'மல்வேன் பூங்கா'வில் நினைவு கூரப்பட்டது. இது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவதுதான்.

இந்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. க. புவனச்சந்திரன் அவர்களின் உரையில் 'பழைய மாணவர் சங்கத்தைக் கனடாவில் ஆரம்பித்து வைக்கக் காரணமாக இருந்த பெருமை, மதிப்புக்குரிய அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களையே சேரும். அவர் மகாஜனாவில் கற்பித்த காலத்தில் நானும் அங்கு ஆசிரியராக இருந்தேன். கனடாவில் 'அதிபர்' என்று அழைத்தால், தனது சிறந்த பண்புகளால் எல்லோரையும் கவர்ந்த இவரைத்தான் குறிப்பிடுவதாக எல்லோரும் புரிந்து கொள்வார்கள். இவர் புலம்பெயர்ந்த எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து ஆற்றிய சேவையால், தமிழ் இனம் இன்று கனடாவில் தலைநிமிர்ந்து நிற்கின்றது' என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

முன்னாள் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் செ. சந்திரசேகரி, அதிபரின் நெருங்கிய நண்பர் திரு. குமார் புனிதவேல், பழைய மாணவர்களான திரு. செல்வரத்தினம், திரு. முருகையா, திரு. க. முத்துலிங்கம், திரு. ஆர். ரவீந்திரன், திரு. குரு அரவிந்தன், அதிபரின் மகன் மணிவண்ணன், அதிபரின் மகள் மணிவிழி ஆகியோர் அவரைப் பற்றிய நினைவுரை ஆற்றினார்கள்.

குரு அரவிந்தனின் நினைவுரை அதிபரது வாழ்க்கையின் முக்கிய கட்டங்களை எடுத்துரைப்பதாக அமைந்திருந்தது. '1935-ஆம் ஆண்டு சண்டிலிப்பாயில் பிறந்த இவர், 1952-ம் ஆண்டு ஸ்கந்தாவில் படித்து அதன்பின் உயர்கல்வியை திருச்சியிலும், சென்னையிலும் பெற்றார். அங்கு இவருக்கு விலங்கியல் பாடத்தில் 'ஹோனேஸ் தங்கப்பதக்கம்' கிடைத்தது. 1957-ம் ஆண்டு மகாஜனாவில் ஆசிரியராக இணைந்தார். 1970-ல் ஏழாலை மகாவித்தியாலய அதிபராகவும், 1971-இல் சோமஸ்கந்தா அதிபராகவும் பொறுப்பேற்றார் 1976-ல் மகாஜனா அதிபராகப் பொறுப்பேற்றார். 1980-ல் நைஜீரியாவுக்குப் பயணமானார். 1986ல் நைஜீரியாவில் இருந்து கனடா வந்தார். 1990-ம் ஆண்டு முதல் தமிழ் வகுப்பை நோர்த்யோக்

கிலும், 1991-ம் ஆண்டு 'கிரடிட்கோஸ்' வகுப்புகளையும் ஆரம்பித்து வைத்தார். 1992-ம் ஆண்டு நோத்யோர்க்கில் 13 தமிழ் வகுப்புகளை ஆரம்பித்தார். 1994 நோத்யோர்க் கல்விச் சபைக்கான தமிழ்ப் பாட நூல்களைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றார். 1995-ம் ஆண்டு இவரது மணிவிழா கொண்டாடப்பட்டது. 1998 ரொறன்ரோ கல்விச் சபையில் தெற்காசிய பல்கலாசாரப் பிரிவின் பொறுப்பை ஏற்றார். 2010-ஆம் ஆண்டு செம்மொழி மகாநாட்டில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்தார். 2012-ல் தனது ஐந்து நூல்களைச் சர்வதேச நாடுகளில் வெளியிட்டார். 2013-ல் அதிபரைக் கௌரவிக்கும் முகமாக லான்ஸ்டவுனில் உள்ள தமிழ் கூட்டுறவு இல்லத்தினர் அங்குள்ள படிப்பகத்திற்கு 'அதிபர் பொ. கனகசபாபதி நூலகம்' என்று அதிபரின் பெயரைச் சூட்டியிருந்தனர். 2014-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் திகதி அவர் எங்களை விட்டுப் பிரிந்தார். 2015-ம் ஆண்டு மொன்றியல் மக்கள் நினைவஞ்சலி செலுத்தியபோது மகாஜனாவின் சார்பில் இங்கிருந்து பலர் சென்று அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோம். 2015-ம் ஆண்டு தமிழர் தகவல் விருது இவருக்கு வழங்கப்பட்டது. 2015-ம் ஆண்டு கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்து மதிப்பளித்திருந்தது. இந்த விருதுகளை அவரது பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர்.' குரு அரவிந்தனின் உரையைத் தொடர்ந்து, ரதி சாம்பவலிங்கத்தின் நன்றி உரையுடன் பிறந்த நாள் நினைவு நிகழ்வு சிறப்பாக முடிவுற்றது.

அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் பெயரில் நலன் விரும்பிகள் ஆரம்பித்து வைத்த நம்பிக்கைநிதியில் இருந்து அவரது துறையான விலங்கியல் துறையில் அதிக புள்ளிகள் எடுத்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் இலங்கையைச் சேர்ந்த, நிதி உதவி தேவைப்படும் தமிழ் மொழி மாணவர்களுக்கும், மகாஜனக்கல்லூரி மாணவருக்கும் நிதி உதவி செய்யும் திட்டம் முன் எடுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுவது பாராட்டப்பட வேண்டியது. அதிபர் பல நூல்களை வெளியிட்டு இருந்தாலும், கடைசியாக இவர் ஆக்கியளித்த 'எம்மை வாழ வைத்தவர்கள், 'மரம் மாந்தர் மிருகம்' என்ற நூல்கள் பலராலும் இன்றும் பேசப்படுகின்றன. 1995-ம் ஆண்டு இவரது மணிவிழாவின்போது, 'ஒரு அதிபரின் கூரிய பார்வை' என்ற நூலும், 1998-ல் 'பெற்றோர் பிள்ளைகள் உளவியல்', 2000-ம் ஆண்டு மாறன் மணிக் கதைகள், 2008-ம் ஆண்டு மாறன் மணிக்கதைகள்-2, மனம் எங்கே போகிறது, திறவுகோல், ஆகிய, எங்கள் சமூகத்திற்குப் பலன்தரும் பல நூல்களும் இவரால் வெளியிடப்பட்டன. இதைவிட மகாஜனக்கல்லூரியின் மிகப் பெறுமதி மிக்க 100வது ஆண்டுச் சிறப்புமலர் வெளியிட்டபோது, மலர்க் குழுவில் நானும் இடம் பெற்றிருந்தேன். அதிபர் அப்போது சர்வதேச இணைப்பாளராக இருந்து, பல பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு சிறப்பாகச் செயற்பட்டார்.

அதிபர் பொ. கனகசபாபதி அவர்களுடன் குறிப்பாக தினமும் தொலைபேசியிலோ, நேரடியாகவோ உரையாடிய டாக்டர் கதிர் துரைசிங்கம் குறிப்பிடப்பட வேண்டியவர். மகாஜனக் கல்லூரியில் கதிர் அவரது முதலாவது மாணவன் மட்டுமல்ல, எனது அக்கா கௌரியைச் சம்பிரதாயமாகப் பெண்பார்க்க அதிபருடன் வந்த நண்பரும் ஆவார். நைஜீரியாவிலும் இவர்களின் நட்புத் தொடர்ந்தது. இதைவிட அவரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர்களில் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன், மகாஜன க. முத்துலிங்கம் ஆகியோர் அடிக்கடி அவரை நலன் விசாரித்துக் கொள்வார்கள்.

திருமதி சிவஞானம், டாக்டர் கதிர் துரைசிங்கம், திரு. குமார் புனிதவேல், சிவபாலு மாஸ்டர், முனைவர் பார்வதி கந்தசாமி, சு. ராஜரட்ணம், அலக்ஸாந்தர் மாஸ்டர், செல்வா மாஸ்டர், ஞானம் லம்பேர்ட், ஜெசி லம்பேர்ட், திரு எஸ். திருச்செல்வம், கவிஞர் கந்தவனம் மாஸ்டர், ஆர்.என். லோகேந்திரலிங்கம், ஆர். ரவீந்திரன், டாக்டர் செந்தில்மோகன் போன்ற கனடிய சிநேகிதர்கள் அவ்வப்போது வருகை தருவதால், அவரது வீடு எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும். இவரது பூந்தோட்ட உதவியாளர் சின்னத்தம்பி மாஸ்டரும் குறிப்பிடப்பட வேண்டியவர். காங்கேசன்துறை குருவீதியில் அதிபர் எப்படி ஓர் அழகான பூங்காவை வைத்திருந்தரோ, அப்படியே கனடாவிலும் வைத்திருந்தார். விலங்கியல் கற்றவர் எப்படி மரங்களைப் பற்றி எழுதலாம் என்றும், விஞ்ஞானம் படித்தவர் எப்படித் தமிழ் கற்பிக்கலாம் என்றும், நானும் இலங்கையில் அதிபராகத்தான் இருந்தேன், என்னைப் பார்த்தால் அதிபராகத் தெரியவில்லையா என்றும் தங்கள் அறியாமையால் கேட்டவர்களும் இங்கே கனடாவில்தான் இருக்கிறார்கள்.



அதிபர் ஒரு உணவுப் பிரியர். அதனால் இவர்கள் எல்லோரும் வரும்போது ஏதாவது சிற்றுண்டி கொண்டு வருவார்கள். இனிப்புப் பண்டம் என்றால் ஒன்றுக்கு மேல் சாப்பிட அவரது பிள்ளைகள் விடமாட்டார்கள். அதனால் 'இங்கே இருந்தால் சாப்பிட்டு முடித்துவிடுவார், மாமி நீங்க கொண்டு போங்கள்' என்று, பிள்ளைகள் எனது மனைவியிடம் அதை அப்படியே கொடுத்து விடுவார்கள். எங்களுக்கும் அதில் பங்கு கிடைக்கும். உப்புக் காணாது என்றால், எதையும் மறைக்காது முகத்திற்கு நேரே சொல்லிவிடுவார். அவரைப் பற்றித் தெரிந்தவர்கள்தான் அனைவரும்.

அவரைப் பிரிந்து பத்து வருடங்கள் எவ்வளவு விரைவாக ஓடிவிட்டன என்பதை இங்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும்,



எமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றது. குறிப்பாகக் குறிப்பிட்ட நேரத்திற்கு நிகழ்ச்சிகள் தொடங்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் கவனமாக இருந்து, அதை நடைமுறைப் படுத்தியும் காட்டினார்.

அதிபரின் தந்தையும், எனது தாயாரும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த உறவினர்கள் என்பதால் அவரைச் சின்ன வயதில் இருந்தே எனக்குத் தெரியும். எங்கள் தந்தையை நான் மாணவப் பருவத்தில் இருக்கும் போதே இழந்து விட்டதால், எனது மூத்த சகோதரி கௌரி என்மீது அதிக பாசம் வைத்திருந்தார். அவரும் உயர்கல்வியை திருச்சி கொன்வென்ரில் பெற்றிருந்தார். அக்கா கௌரியின் கணவராக, எனக்கு அத்தானாக இவர் காங்கேசன்துறை, குரு வீதியில் உள்ள எங்கள் வீட்டிற்கு முதன் முதலாக வந்தபோது, எப்படிப் பட்டவரோ என்று இவரிடம் மதிப்புக் கலந்த ஒருவித பயம் எனக்கிருந்தது. புரிந்துணர்வுள்ளவராக அத்தான் இருந்ததால் அவர் மீது இருந்த பயம் தானாவே போயிவிட்டது. எங்கள் தந்தையாரும் நடேஸ்வராக்கல்லூரி கனிஸ்டபாடசாலை அதிபராக இருந்ததால், எங்களின் வீட்டை அதிபரின் வீடு என்றுதான் அழைப்பார்கள். அந்த வழக்கம் இவர் வந்ததும் அப்படியே தொடர்ந்தது, எங்கள் படிப்பு முதற்கொண்டு எங்கள் திருமணம் வரை அவரே முன்னின்று நடத்தி வைத்தார். இவரது பிள்ளைகளான அப்பு, நணா, பிள்ளை, தேனு ஆகிய நால்வரும் குருவீதி வீட்டில் தான் பிறந்து வளர்ந்தார்கள். மணிவண்ணன், மணிமாறன் மகாஜனாவின் பழைய மாணவர்கள். புலம்பெயர்ந்த இந்த மண்ணிலும் கடைசிவரை எங்கள் உறவுப்பாலத்தை இவர் கட்டிக்காத்தார். எங்கள் குடும்பத்தில் மூத்தவராகையால் அவரது வீட்டில் நெருங்கிய உறவினர், நண்பர்கள் எல்லோரும் புதுவருடம் பிறப்பதற்கு முன்பு சந்தித்து இரவு விருந்துண்டு அவரிடம் ஆசி பெறுவோம். அவருடைய மறைவால், அந்தப் பாக்கியம் இப்போது எமக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

இவர் யாழ்ப்பாணம், நெல்லியடி போன்ற இடங்களில் தனியார் வகுப்புகளை எடுத்ததால் பல மாணவர்களும் அறிமுகமானார்கள். வார இறுதி நாட்களில் உயர்வகுப்பு மாணவர்கள் பலர் கூட்டமாக வீட்டிற்கு வருவதால், அக்கா கௌரியின் விருந்தோம்பல் காரணமாக வீடு கலகலப்பாக இருக்கும். குறிப்பாக சுபாஸ், அப்பு (மகாஜன), கணநாதன், அதிபர் ஜெயரத்தினத்தின் மகன் குமார், ஆறுமுக மாஸ்ரரின் மகன் ரோசா, இ.எம். குமார், பத்மநாதன், சண்முகலிங்கன், தனபால சிங்கம் மாஸ்டர், சாரதா, அனுசூயா, கோகிலா, மலர்விழி, சசிகலா, டாக்டர் சிவசுப்ரமணியம், மற்றும் ஆசிரியர்களான திரு, திருமதி சுந்தரராஜன், முருகையா மாஸ்டர், ஆறுமுகராஜா மாஸ்டர் (எனக்குத் தமிழறிவு ஊட்டியவர்), ஆசிரியர் சுந்தரமூர்த்தி ஐயர், ஆறுமுகம் மாஸ்டர், தியாகராஜா மாஸ்டர், கன்ரீன் சங்கரப்பிள்ளை போன்றவர்களின் பெயர்கள் இப்பொழுதும் நினைவில் நிற்கின்றன.

அதிபர் எங்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக இருந்தார். இன்று கனடிய மண்ணில் தமிழ் மொழி தொடர்ந்தும் நிலைத்து நிற்பதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர். ஆரம்பகாலத்தில் இவரைப் போன்ற ஒரு சிலர் தன்னலம் கருதாது எடுத்த முயற்சியால்தான், எங்கள் தமிழ் மொழி மட்டுமல்ல, பண்பாடு, கலாசாரமும் இந்த மண்ணில் இன்று நிலைத்து நிற்கின்றது. 'கனடாத் தமிழரது வரலாற்றுத் தொடக்கத்தில் தமிழரது வாழ்வின் வடிவமைப்பில் ஆளுமை செலுத்திய சிற்பி இவர்' என்று சான்றோரால் தமிழ் இலக்கிய உலகில் பதிவு செய்யப்பட்டவர். இவர் நடுவழியில் எங்களைவிட்டுச் செல்லவில்லை. எங்களைத் தயார்படுத்தி விட்டுத்தான் பிரிந்தார். அவர் காட்டிய வழியைத் தொடர்வோம். தமிழர் என்ற ஒரு இனமாய், யாவரும் போற்றும் வண்ணம், எங்களை வாழவைத்த நாட்டையும் மதித்து, இந்த மண்ணில் தலை நிமிர்ந்து நிற்போம்.



kuruaravindan@thaiveedu.com

# ஒரு நட்பின் பயணம்

## – கதிர் துரைசிங்கம்



**1957** மே மாதம் 10-ஆம் திகதி திரு. பொ. கனகசபாபதி மகாஜனக்கல்லூரியின் H.S.C வகுப்பில் இருந்த எனக்கு விலங்கியல் ஆசிரியராக வருகிறார். இரண்டாம் நாள் வகுப்பு எடுக்க வந்த கனகசபாபதி மாஸ்ரர் 'வகுப்பின் உள்ளே மாத்திரம் நான் ஆசிரியர், வெளியே நான் உங்கள் நண்பன்' என்று பிரகடனம் செய்கிறார். மாத இறுதியில் சென்னை



சென்ற மாஸ்ரர், B.Sc. (Hons) Zoology-க்கான சான்றிதழோடு Madras Presidency-யின் முதல் மாணவனுக்கான தங்கப்பதக் கத்துடன் திரும்புகிறார்.

மறுநாள் மாஸ்ரர் வகுப்புக்கு வர, அவரின் பிரகடனம் ஞாப கத்திற்கு வந்தது. வகுப்பறைக்கு வெளியே மாஸ்ரரிடம் 'உங்கள் சாதனையைக் கொண்டாட எங்களைப் படம் பார்க்கக் கூட்டிச்சென்று விருந்துபசாரமும் செய்யவேண்டும்' என நான் கேட்டேன். கலரி, 3rd class மட்டும் தெரிந்திருந்த எங்களை 1st Class-இல் அமர்த்தி எங்களுடன் மாஸ்ரர் பார்த்து மகிழ்ந்த படம் 'வணங்காமுடி'. அன்றுதொட்டு இறுதியாத்தி ரைவரை வணங்காமுடியாக முழு'முடி'யுடன் திகழ்ந்தவர் எங்கள் கனெக்ஸ்.

1963-இல் நான் விடுமுறையில் மாஸ்ரரைச் சந்தித்தபோது தனக்குத் திருமணப் பேச்சு நடக்கிறது என்று சொல்லி, பெண்ணின் விபரமும் கூறினார். கொழும்பு சென்றதும் G.P.O Library-யில் ஒரு அங்கத்தவராகி அங்கு Librarian-ஆக பணி புரிந்த அமிர்த கௌரிநாயகியைக் கண்டு ஒரு நூல் பற்றிக் கேட்டதன் மூலம் அவரைப் புரிந்துகொண்டேன். எனது சிபாரிசை ஏற்ற மாஸ்ரர் அதே ஆண்டு கௌரியை மணந்தார். நட்பையும் நன்றியையும் வெளிக்காட்ட எனது திருமணத்தில் மணப்பந்தல் அலங்காரம், நிகழ்வொழுங்கு என்று பல பொறுப்புகளை மாஸ்ரர் ஏற்று அசத்தினார். எனது திருமண நாள், அவரின் பிறந்த நாள் (Sept 04) இரண்டும் ஒன்றாயின.

Nigeria-வின் Sokoto மாகாண அரசினால் ஆசிரியர்களாக ஒப்பந்த நியமனம் பெற்ற மாஸ்ரரும், அவரது மனைவியும் எனது துணைவியாரும் 1981-இல் Nigeria சென்றனர். தொழில் தேடி நானும் 1982-இல் Sokoto சென்றேன். தனியார் மருத்துவ மனையில் வைத்தியராக நான் நியமனம் பெறும் வரை எனது துணைவியாரும் நானும், மாஸ்ரர் மனைவி பிள்ளைகளுடன் ஒன்றாகவே இருந்தோம். கௌரியின் கைவண்ணத்தில் சமையலும் மாஸ்ரர் கௌரி தம்பதிகளின் விருந்தோம்பலும் பலருக்கு வரப்பிரசாதமாயிற்று. படம் பார்த்தல், சீட்டாடுதல், நண்பர்களுடன் கலந்துரையாடுதல் இவை யாவும் இருவ ருக்கும் நன்றாகப் பிடித்த பொழுதுபோக்கு.

ஆசிரியராக ஆரம்பித்த மாஸ்ரர் Sokoto மாகாண விவசாயக் கல்வி அதிகாரியாக உயர்ந்தார்.

எனது மருத்துவமனை 210 கி.மீ. தூரத்தில் இருந்தபோதும் வார இறுதியிலும் வசதி வரும்போதும் இரு குடும்பங்களும் சந்திப்பதை வாடிக்கையாக வைத்திருந்தோம். மாஸ்ரர் குடும் பமாக ஒருமுறை பயணிக்கும் போது விபத்தில் மோட்டார் வண்டி குடைசாய்ந்தது. எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்ப டவில்லை. கௌரி சொல்லி எனது மனதில் பதிந்த வாசகம் - 'மாஸ்ரருக்கு மனைவி பொருத்தம் அமைஞ்சிட்டுது. ஆனால், வாகனப் பொருத்தம் அங்கும் இல்லை, இங்கும் இல்லை.' கனடாவில் கனெக்ஸின் போக்குவரத்து வசதியை நிவர்த்தி செய்வதில் கணிசமான பங்கை நான் ஏற்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

Nigeria-வின் பொருளாதாரம் சுருங்குவதையும், இலங்கையின் நிலவரம் சீராக இல்லை என்பதையும் உணர்ந்த எம்மவர் கனடா வரத் தொடங்கினர். 87 ஜனவரியில் இரு குடும்பங் களும் ஒன்றாக அமெரிக்கா வந்து ஜன. 21 அதிகாலை Mon-treal-லில் அகதி நிலை கோரினோம். ஆசிரியராக, குடும்ப

நண்பனாக இருந்த மாஸ்ரர் சகமாணவனாகி French, Computer, Book Keeping என்று என்னுடன் படித்தார். ஜுலை-இல் S.I.N கிடைத்ததும் இருவரும் குடும்பமாக ரொறன்ரோ வந்தோம். இருவரும் பாதுகாப்பு தொழிலை ஒரே நிறுவனத்தில் மேற்கொண்டோம். பின்னர், மாஸ்ரர் Gas Station-இல் தனது தொழிலைத் தொடங்கினார். இதற்கு மத்தியில் சுவாசப்பையில் சத்திரசிகிச்சை பெற்ற கௌரிக்கு மீண்டும் சுவாசப்பை பாதிக்கப்பட்டு 1988 ஒக்ரோபரில் எம்மை விட்டுப் பிரிந்தார்.

வாழ்க்கையைச் சவாலாக எடுத்த கனெக்ஸ் தந்தையும் தாயுமாகி இயங்கினார். North York District School Board-இல் ஆசிரியராக ஆரம்பித்த கனெக்ஸ் Counselor ஆகி பின்னர் பல்கலாசார ஆலோசகராக நியமனம் பெற்றார். கனடாவில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்க மூலவேராக இருந்து தலைமை ஏற்று ஏழு வருடங்களாகக் கடமையாற்றினார். அவருடன் உபதலைவராக நான் பணியாற்றினேன். சங்க அங்கத்தவர்களில் 75 வீதமானவரை சேர்த்த பெருமை அவரையே சாரும். அங்கத்தவர்கள் அனைவரும் எனக்கும் நண் பர்களாகிவிட்டனர். இலங்கையில் ஒரு குறுகிய வட்டத்தில் இருந்து வந்த என்னுடன் பல் துறை நண்பர்களை கனடாவில் இணைத்த நண்பன் கனெக்ஸ். என்னை எழுதத் தூண்டி எதையாவது எழுதவைத்தவரும், பேசத்தூண்டி மேடையில் எதையாவது பேசவைத்தவரும் அவரே.

லண்டனில் இருந்து தொலைபேசியில் ஒரு நண்பர் 'Sir தனியாக இருக்கிறீர்களே அவசர தேவை என்றால் என்ன செய்வீர்கள்' எனக் கேட்டிருந்தார். கனெக்ஸ் சொன்ன பதில்: 'காலையும் மாலையும் கதிர் என்னுடன் தொடர்பு கொள்கிறார், தேவை என்று அழைத்தால் மறுகணமே வந்து விடுவார்'. இக்கூற்று நட்பை மட்டுமன்றி என்மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையையும் உணர்த்தியது. நட்பின் நிமித்தம் கனெக்ஸை சிலவேளைகளில் குறைகண்டு எடுத்துக் கூறியிருப்பேன். ஒரு முறை அவரைக்கண்டித்தும் விட்டேன். அமைதியாக இருந்து விட்டு, மறுநாள் 'நீர் என்னைக் கண்டித்த போது துன்பமாக இருந்தது. பின்னர் யோசித்துப் பார்த்தபோது உமது சாடலில் உள்ள உண்மையும் அக்கறையும் புலப்பட்டது' எனக் கூறி,

*'நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென் றிடித்தற் பொருட்டு'*

என்ற குறளின் பொருளையும் விளக்கினார்.

'சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடிந்த வரை முயல வேண்டும்,' 'அழைக்கப்பட்ட நேரத்திற்கு வைபவங்களுக்கு சமுகமளிக்க வேண்டும்' - இவ்விரண்டும் அவரின் தாரக மந்திரம். கனெக்ஸ் உடன் இணைந்து செல்லும் சந்தர்ப்பங்கள் பல எனக்கு அமைந்த காரணத்தால் நானும் இவற்றைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. அளவுக்கு மீறிய தூக்கம், சோம்பல், மறதி, காலம் தாழ்த்துதல் இவை நான்கும் கனெக்ஸ்க்குப் பிடிக்காதவை. எங்கள் நட்புக்கு இவை உதவின. ரொறன்ரோ என்றுமே கண்டிராத வகையில் கனெக்ஸின் நூல்களின் வெளியீடு இரு தடவை இடம் பெற்றது. நிகழ்வு ஒழுங்காளராக இரண்டிற்கும் என்னைப் பணித்தார். திட்டமிடல், நேரடி அழைப்பு, நினைவூட்டும் அழைப்பு, விழாவிற்கு வந்தவர்களை முகமலர்ச்சியுடன் கவனித்தல், மறுநாள் ஒவ்வொருவரையும் அழைத்து நன்றி கூறல் எல்லாவற்றையும் அவர்தான் செய்தார். ஆனால், விழாவின் வெற்றிக்கு கதிர் தான் காரணம் என்று மேடையில் தனது உரையில் கூறினார். நடந்ததற்கு நன்றிகூறல், பிடித்ததைப் பாராட்டுதல், இரசித்ததைப் பகிர்தல் ஆகிய நற்பண்புகளை சிலரிடம் தான் காணலாம். அவர்களில் முதல் இடம் வகிப்பவர் கனெக்ஸ்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு இலங்கை சென்ற அவர், எனது தாயாரைக் கொழும்பில் சந்தித்து உரையாடினார். எனது தந்தை, தாயார், சகோதரங்கள், துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நான்கு தலைமுறைகளுடனும் வயது வேறுபாடின்றி நட்புப் பேணிவந்தார்.

கர்நாடக இசை, மெல்லிசை இரண்டையும் கனெக்ஸ் நுட்பமாக இரசிப்பார். அவர் விரும் பிக்கேட்கும் பாடல்கள் எனக்கும் பிடிக்கும். இருவரும் இணைந்து இரசித்தவற்றுள் சில:

ராஜாஜியின் 'குறை ஒன்றும் இல்லை...' M.S சுப்புலட்சுமி பாடியது; M.M. தண்டபாணிதேசிகரின் 'தாமரை பூத்த தடாக மடி...'; பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ...' பாடலுக்கு தண்டபாணிதேசிகர் மெட்டு அமைத்தவிதம்; பாரதியாரின் 'தலைவாரி பூச்சூடி உன்னை...' P. பானுமதி பாடியது. இவற்றை எவர் பாடினாலும் கேட்டு மகிழ்வார்.

'கதிர் உலா' என்ற பாராட்டுப் பனுவலில் 'இருவரும் ஒன்றாகவே பிரயாணிக்கிறோம்' என்ற தலைப்பிலும் 'காதோடு காதாக' என்ற எனது நூலின் ஆசிரியர் அறிமுகத்தில் 'மாணவனே தோழனுமாகி' என்ற தலைப்பிலும் 'நண்பர்' என்ற எனது மணிவிழா மலரில் 'முதன்மை மாணவனா?' என்ற தலைப்பிலும் கனெக்ஸ் என்னை வியந்து பாராட்டி எழுதி இருந்தார்.

எனது பிறந்த தினத்தை ஒட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடந்த வைபவத்திற்கு நட்பின் நிமித்தம் கனெக்ஸ் 'Walker' உடன் வருகை தந்து உரையாற்றினார். பின்னர் நவம்பர் மாதம் மண்டபத்தில் நடந்த விழாவில் நகைச்சுவைததும்ப உரையாற்றிக் கௌரவித்தார். இரண்டு இடத்திலும் 'உங்களுக்காகவும் முக்கியமாக எனக்காகவும் கதிர் நீடு வாழவேண்டும்' என வாழ்த்தினார்.

நான் இரவு வேலை செய்யும் காலத்தில் இரவு 11.45-க்கும் பகல் வேலை செய்ய தொடங்கிய காலம் முதல் காலை 8.45 மணிக்கும் கனெக்ஸை தொலைபேசியில் தொடர்புகொள்வேன். 15 நிமிடங்களுக்கு மேல் நான் தாமதித்தால் அவர் அழைப்பார். கனடாவிற்கு வெளியே சென்ற வேளைகளிலும் இது தொடர்ந்தது. 27 ஆண்டுகள் இப்படிக் களித்துவிட்டேன். டிசம்பரில் இருந்து தொலைபேசியில் காலை தொடர்புகொள்வதோடு மாலையில் அவரின் வீடு சென்று சந்தித்தும் வந்தேன். 24-ஆம் திகதி காலை அழைத்தேன். அவர் பதிலளிக்காத முதல் அழைப்பு, எனது இறுதி அழைப்பாயிற்று.

'முதன்மை மாணவனா?' என்ற கட்டுரையின் இறுதியில் நண்பன் கனெக்ஸ் எழுதிய வரிகள்...

'... எங்கள் நட்பு தொடர்கிறது
தொடரும்!
அடுத்த பிறவியிலும் கூட ...'



kathir.thuraisingam@thaiveedu.com

# தாயக மண்ணின் தீராக் காதலன்

# மதிசூடி

*– பொன்னையா விவேகானந்தன்*



கடந்த 20-ம் நாள் இவ்வுலகை விட்டகன்ற திரு. மதிசூடி குலதுங்கம் அவர்களின் மறைவு கனடாவாழ் தமிழர்களை மட்டுமல்ல, உலகெங்கும் பரந்து வாழும் அவரோடு தொடர்புபட்ட அனைவரையும் துயரடையச் செய்திருக்கின்றது.

திரு. மதிசூடி அவர்கள் 1983-ல் தொடக்ககாலக் குடிவரவாளராகக் கனடாவுக்கு வந்தவர். இங்கு வருவதற்கு முன்பாகவே தாயகத்தில் தாயக விடுதலைச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தவர். இவர் கனடாவுக்கு வந்திருந்த பொழுதில் தாயக விடுதலை நோக்கிய செயற்பாட்டை மையப்படுத்தி, 1983-லேயே 'ரொறன்ரோ தமிழர் அமைப்பு' என்ற செயற்பாட்டுத்தளம் தோற்றம் கொண்டிருந்தது.

தாயகத் தலைமைகளுடன் தொடர்புகொண்டு இவ்வமைப்பைக் கட்டமைத்து முதல் பொறுப்பாளராக இருந்தவர் அபயகரன் இராமலிங்கம். அவர் வேறு பணிகளுக்காக இந்தியா சென்றபோது, அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்தான் திரு. மதிசூடி.

அக்காலத்தில்தான் தமிழர்கள் குறிப்பிட்டளவில் கனடாவுக்குப் புலம்பெயரத் தொடங்கியிருந்தார்கள். அவ்வாறு வந்தோர் பெரும்பாலும் குடியேறிய இடம் பார்லிமென்ட் & வெலஸ்லி சந்திப்பில் இருந்த கட்டடத் தொகுதிகளாகவே இருந்தன. அவ்விடத்தை மையப்படுத்தியே திரு. மதிசூடி தன் பணிகளை ஆரம்பித்தார்.

அக்காலத்தில் புலம்பெயர்ந்த இளைஞர்கள் பலரும் தாயக விடுதலை உணர்வால் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களுள்ளும் முரண்பட்ட தரப்புகளும் இருந்தன. அவ்வாறான இளைஞர்களுள் பலரையும் ஒருங்கிணைத்து அமைப்பின் வளர்ச்சியையும் மக்கள் திரட்சியையும் கருத்திற்கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார்.

தாயகத்தோடு நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருந்த மக்கள் பலரும் தாயகச் செய்திகளை அறியமுடியாது இடர்ப்பட்டமை இவர் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வேளை தொலைபேசி வழியாகச் செய்திகளை மக்கள் கேட்க வாய்ப்புண்டு என்பதை அறிந்த இவர், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து மக்கள் நாள்தோறும் செய்திகளைக் கேட்க வழி செய்தார். இதில் முக்கிய செய்தி வாசிப்பாளராக இருந்தவர் வானொலி அறிவிப்பாளர் ஞானபண்டிதன்.

மக்கள் செய்திகள், தகவல்கள் என்பவற்றை அறிய ஒரு வாசிப்பகம் தேவை என்ற கருத்தும் வலுப்படவே, வெலஸ்லி & யங் சந்திப்புக்கு அருகாமையில் சிறிய நூலகம் உருவாக வழிசெய்தார்.

1986-ல் தாயகத்தில் விடுதலைப் புலிகளால் ரெலோ இயக்கம் அழிக்கப்பட்டபோது, ரொறன்ரோவிலும் பெரும் பதட்டம் நிலவியது. ரொறன்ரோவில் இருந்த ரெலோ ஆதரவாளர்கள் பலரும் கொதிப்படைந்தனர். இது இங்கும் ஒரு மோதலை உருவாக்கலாம் என்ற அச்சம் இருந்தது.

அதைத் துணிச்சலோடு எதிர்கொண்ட திரு. மதிசூடி, திரு. பரமேஸ்வரனை அழைத்துக்கொண்டு, ரொலோ ஆதரவாளர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று, அவர்களைத் தணிவடையச் செய்ததை இன்றும் சிலர் நினைவுகூறுகின்றனர்.

இதையடுத்தே ரொறன்ரோ தமிழர் அமைப்பு என்ற பெயரை மாற்றவேண்டும் எனப் பலரும் கருதியபோது இவ்வமைப்புக்கு 'உலகத் தமிழர் இயக்கம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் பின்னணியிலும் மதிசூடியே இருந்தார். இலங்கை அரசு தாயகத்தில் தாக்குதல்களை மேற்கொண்டு, தமிழர்களைக் கொன்றபோதெல்லாம் இலங்கை அரசுக்கெதிரான எதிர்ப்பு வடிவங்கள் வெளிநாடுகளிலும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திய இவர், பலரையும் ஒட்டாவாவுக்கு அழைத்துச் சென்று, பல்வேறு ஆர்ப்பாட்டங்களையும் முன்னின்று நடத்தியிருக்கின்றார். அந்த ஆர்ப்பாட்டங்க



ளில் கலந்துகொண்ட சிலர், இதை இன்றும் நினைவுகொள் கின்றனர்.

இவ்வாறான பல பணிகளுக்குப் பணம் தேவைப்பட்டது. பல தொண்டர்கள் தமது சொந்தப் பணத்தில் பல செலவுகளைப் பொறுப்பெடுத்தனர். எனினும் பத்திரிகை, வானொலி என்பன வற்றுக்கு பெருந்தொகை தேவைப்பட்டது. அவ்வேளையில் தமிழ்ச் சமூகத்தில் ஒரு வீடு விற்பனை முகவர், ஒரு காப்பு றுதி முகவர் ஆகியவர்களோடு இரு கடைகள் என்பனவே இருந்தன. இவ்விருவரோடும் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்த மதிசூடி, அவர்களின் உதவிகளைப் பெற்றே ஊடகப் பணிகளைத் தொடர்ந்தார்.

அக்காலத்தில் குடியேற்றத் தமிழர்கள், அகதித் தமிழர்கள் என்ற இருவகைப் பகுப்புகள் இருந்தன. குடியேற்றத் தமிழர் கள் ஆங்கில அறிவு மிக்கவர்களாகவும் கனடாவின் குடி யேற்ற விதிமுறைகளையும் அடிப்படைச் சட்டங்களை அறிந் தவர்களாகவும் இருந்தனர். இவர்களுள் திரு. சிவலிங்கம், திரு. அருளையா போன்றோர் முக்கியமானவர்கள். இத்தகை யோரின் அனுபவத்தையும் அறிவையும் கொண்டு, அகதித் தமிழர்களின் இருப்பை வலுப்படுத்த வழிசெய்தவர் மதி என் பதை கனடாவின் முதல் காப்புறுதி முகவர் ஈசன் கிருஸ்ணா பதிவு செய்தின்றார்.

தாயகப் போராட்டம் தொடர்பான செய்திகளையும் தகவல்க ளையும் மக்கள் விரிவாக அறிந்துகொள்வதற்கு தொலைபே சிச் செய்திச்சேவை போதாது எனக் கருதிய இவர், வானொ லிச் சேவை ஒன்றை தொடங்குவதற்கான முயற்சிகளை மேற் கொண்டார். அக்காலத்தில் இருந்தவையெல்லாம் மைய ஒலி பரப்பு ஊடகங்களே. அவற்றுள் ஒன்றை அணுகி வாரத்துக்கு அரைமணி நேரம் ஒலிபரப்புச் செய்ய அனுமதி பெற்றார். அதுவே கனடாவில் ஒலித்த முதல் தமிழ் வானொலியாகிய ‘தமிழ்ச்சோலை’ ஆகும். இதனுடைய பொறுப்பாளராகத் தொடக்கத்தில் செயற்பட்டவர் எழுத்தாளரான ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்கள்.

இதே காலகட்டத்தில் தமிழர்களுக்கிடையே ஓர் அச்சு ஊடக மும் தேவை என்பதை உணர்ந்த இவர் ஒரு வாராந்த இத ழைத் தொடங்க முயற்சிகளை மேற்கொண்டார். அவ்வாறு தொடங்கப்பட்டதே ‘உலகத் தமிழர்’ பத்திரிகை. இதன் முதல் பொறுப்பாளராக இருந்தவர் தற்போதைய ஈழநாடு இதழ் ஆசிரியர் திரு. பரமேஸ்வரன் அவர்கள். அக்காலத்தில் இவ் விதழைத் தொண்டர்கள் தமிழர் வாழும் வீடுகள் தோறும் சென்று வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

அக்காலத்தில் கனடாவில் குடியேறிய, தாயகப் பற்றுமிக்க இளைஞர்கள் பலரையும் செயற்பாட்டாளர்களாக உருவாக் கிய பெருமையும் இவருக்கும் உண்டு. இன்று அமைச்சராக இருக்கும் ஹரி ஆனந்தசங்கரி மாணவனாக இருந்த காலத் தில் இவருக்குக் கீழ் தொண்டராகப் பணியாற்றியதையும் இங்கு குறிப்பிடலாம்.

90-களிலும் அதன் பின்னாலும் இவ்வமைப்பு பல்வேறு பொறுப்பாளர்களுடன் சிறப்பாக இயங்குவதற்குரிய அடிப்ப டைக் கட்டுமானங்களை உருவாக்கியவர் திரு. மதிசூடி என்

பதை எவரும் மறுக்க முடியாது.

ரொறன்ரோ தமிழர்களின் அக்காலப் பொழுதுபோக்குத் தேவைகளில் ஒன்று ஒலிவட்டுகளைப் பெற்று பாடல்கள் கேட்பதுவும் வீடியோ கசற்றுகளைப் பெற்றுத் திரைப்படங்கள் பார்ப்பதுந்தான். இவ்வேளை, தமிழ்நாட்டின் திரைபடத் தயாரிப்பு நிறுவனமாகத் திகழ்ந்த 'ஐங்கரன் இன்ரனெசனல்' நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி இங்கு அதன் கிளையாக ஐங்கரன் வீடியோ நிறுவனத்தைத் தொடங்கினார். அக்காலத்தில் இந்நிறுவனத்தைத் திறந்து வைத்தவர் நடிகர் விஜய-காந்த்.

சமூகத்தின் குரலாக ஒலிக்கவல்ல ஒரு முழுநேர ஒலிபரப்பு ஊடகம் சமூகத்துக்கு தேவை என்பதை உணர்ந்த உலகத் தமிழர் அமைப்பு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, 'கனடியத் தமிழ் வானொலி'யைத் தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தது. குறித்த கால இடைவெளிக்குப் பின்னர், கனடியத் தமிழ் வானொலியின் பொறுப்பாளராக மீண்டும் முன்னரங்குக்கு வந்தார் திரு மதிசூடி.

தொடக்க காலத்தில் பொருளாதார வழியிலும் கலைஞர்களைக் கட்டுப்பாடாக நடத்துவது தொடர்பிலும் பெருஞ் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பல்வேறு விளம்பரங்களைப் பெற்று வானொலியின் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளை ஈடுகட்ட வழிசெய்தார். கலைஞர்கள் தமக்குள்ளும் முரண்பட்டு, நிர்வாகத்துடனும் முரண்பட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்களைக் கையாள்வது மதம் பிடித்த யானைகளை அடக்குவதற்கு ஒப்பானது. ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் புன்னகை மாறாத முகத்தோடு அனைத்தையும் எதிர்கொண்டு, அனைவரையும் அரவணைத்து வானொலின் வளர்ச்சிக்குப் பெருந்தூணாக நின்றுழைத்தார். கலைஞர்கள் மட்டுமல்ல, பல நேயர்களின் அன்புக்கும் உரியவரானார். தான் நடத்திய ஐங்கரன் வீடியோ நிறுவனத்தின் மூலம் உடனுக்குடன் பாடல் ஒலிவட்டுகளை வழங்கிக்கொண்டிருப்பார்.

இவருடைய மறைவுக்குப் பின்னர், அக்காலத்தில் பணியாற்றிய கலைஞர்கள் பலரும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பகிர்ந்துவரும் செய்திகள், இவர், அவர்கள் நினைவுகளில் ஆழப் பதிவுற்றிருக்கின்றார் என்பதைப் புலப்படுத்துகின்றன.

இவர் கடும் கோபக்காரர் என நெருங்கிய சிலர் கூறக் கேட்டிருந்தாலும் சமூகச் செயற்பாடுகளில் அக்கறை கொண்டவர். கனிவோடும் பண்போடும் உரையாடக்கூடியவர்.

பின்னாட்களில் வானொலிப் பொறுப்பில் இருந்து அவர் விலகியிருந்தாலும் வானொலியின் வளர்ச்சியோடு இவர் இணைந்தே செயற்பட்டார்.

2009-க்குப் பின்னர் தாயக மக்களின் மீள் கட்டுமானத்திலும் இவருடைய பங்களிப்புகள் இருந்திருக்கின்றன என்பதை அங்குள்ள பல உறவுகளும் தற்போது அவரைப் பற்றி வெளிவரும் செய்திகளும் வெளிப்படுத்துகின்றன.

திரு. மதிசூடி குலதுங்கம் அவர்கள் இந்த மண்ணில் ஆற்றிய



பல்வேறு பணிகள், கனடியத் தமிழர்கள் தாயகத்தோடு இணைந்து இயங்குவதற்கு வழிசெய்தன. அவருடைய தாயகப் பற்றுமிக்க பல்வேறு செயற்பாடுகள் உணர்வுகள் என்பன தொடர்ந்து பயணித்தோருக்கும் வழிகாட்டின. தாயகத்தை மிக ஆழமாக நேசித்த தேசப் பற்றாளர் ஒருவரை நாம் இன்று இழந்திருக்கின்றோம். புலம்பெயர்தோர் பலரும் தம் வாழ்வை நிலைநிறுத்தப் போராடிய அக்காலத்தில், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டி, அவர்கள் வாழ்வு நிலைபெற உதவியவரும் இவரே.

இத்துயரப்பொழுதில், பிரிவால் ஆழத் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் தாய்வீடு குழுமம் தமது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்கள் துயரிலும் பங்குகொள்கின்றது.



vivekanandan.p@thaiveedu.com

# ஈழத்துப் பெரியார் தமிழறிஞர்
# கந்த. முருகேசனார்



**- வே. விவேகானந்தன்**

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், 'புலவர் ஒலி இடையறாது ஒலிக்கும் ஊர் புலோலி' என வர்ணிக்கப்படும், புலோலியூரின் தெற்குப் பகுதி, தென் புலோலி ஆகும். அங்கு விவசாயத் தொழில் செய்து குடும்பமாக வாழ்ந்துவந்த, கந்தப்பர் தெய்வானைப்பிள்ளை இணையருக்கு மகனாக, 1902-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி, கந்த முருகேசனார் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் முருகேசு.

இவர் தனது ஆரம்பக் கல்வியை தட்டாதெரு மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை என அழைக்கப்பட்ட, புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கற்றார். வறுமை காரணமாகப் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத முருகேசனார் தமிழில் பாண்டித்தியம் பெற்றவரும், ஈழமணி ஆசிரியர், புலவர் என அழைக்கப்பட்டவருமான க. முருகேசபிள்ளையிடம் கந்தபுராணத்தையும் நன்னூல் காண்டிகையுரையினையும் கற்றார். பின்னர் சுயமாகவே தொல்காப்பியத்தினையும் கற்றுத் தலைசிறந்த தமிழறிஞர் ஆனார்.

முருகேசனாரின் தமிழ்ப் புலமையை அடையாளம் கண்ட புற்றளை சாரதா வித்தியாலயம் (தற்போதைய புற்றளை மகா வித்தியாலயம்) அவரைத் தமிழ் ஆசிரியராக நியமித்தது. அங்கு 1921-ம் ஆண்டு முதல் 1933-ம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணி புரிந்தார். ஆசிரியப் பணியுடன் கோயில்களில் கந்தபுராணப் படிப்பு, பயன் சொல்லல் ஆகிய திருப்பணிகளையும் செய்து வந்தார். இவருக்கு இளம் வயதிலேயே வாத நோய் பீடித்து, இரு கால்களும் செயலிழந்தன. பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. கோயில் திருப்பணிகளைச் செய்ய முடியவில்லை. கோயில் திருப்பணிகளைச் செய்தும் தனக்கு இந்த நிலை ஏற்பட்டதே என மனமுடைந்த முருகேசனார், கடவுள் மறுப்புக் கொள்கையாளராக மாறினார்.

இறைவன் மீது அன்புடையவராக விளங்கிய இவர், புராணங்கள் படிப்பதையும் பயனுரை சொல்வதையும் விடுத்து ஈ.வே.ரா. பெரியாரின் பக்தரானார். புதிய வழியில் வாழத் தொடங்கினார். இதனால் சிலர் வெறுத்தனர், சிலர் விரும்பினர், சிலர் வியந்தனர், சிலர் ஊக்கப்படுத்தினர். எனினும், அவர் புதிய வழியில் இறுதிவரை வாழ்ந்தார். தொடர்ந்தும் தமிழ், சமயம், இலக்கியம் சார்ந்த நூல்களைக் கற்றார். ஆங்கில மொழியிலும் திறமையை வளர்த்துக் கொண்டார். அத்துடன் வாழ்க்கைத் தத்துவ நூல்களையும், பொதுவுடமைத் தத்துவ நூல்களையும் கற்று சிறந்த சிந்தனையாளராக மாறினார்.

தான் வசித்து வந்த வீட்டைத் திண்ணைப் பள்ளிக்கூடமாக்கி அதற்குத் 'தமிழகம்' எனப் பெயர் வைத்து, பள்ளிக்கூடத்தினை ஆரம்பித்தார். தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த அச்சுற்றாடலுக்கு 'ஒப்பிலாக் குடியிருப்பு' எனப் பெயருமிட்டார். அங்கு பாலர் வகுப்பு முதல் பண்டிதர் வகுப்பு வரை வகுப்புகளை நடத்தினார். தமிழ் மொழியுடன் சமயம், தர்க்கம், புவியியல், கணிதம் போன்ற பாடங்களையும் போதித்தார். கடவுள் கொள்கை மறுப்பாளராக மாறியபோதும் சமய பாட வகுப்புகளை ஆழ்ந்த ஞானத்தோடும் நுட்பமாகவும் உள்ளச் சுத்தியோடும் திறமையாகக் கற்பிப்பார். சைவம், வைணவம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களில் நிரம்பிய அறிவுடைய அவர், சமயங்கள் பற்றி மாணவர்கள் அபிப்பிராயங்கள் கேட்டால், கடவுள் இருக்கிறார் அல்லது இல்லை என்ற பிரச்சினை வேறு, நான் இராமலிங்க அடிகளாரைப் போல் 'மதம் என்னும் பேய் பிடியாதிருக்க வேண்டும்' என்ற எண்ணக் கருத்துடையவன் என்பார்.

முருகேசனாரின் திண்ணைப் பள்ளிக் கூடம் வெண்மணல் பரப்பப்பட்டு அழகாகவும் சுத்தமாகவும் பன்னசாலை போல் காட்சியளிக்கும். அங்கு ஒழுங்கு, கட்டுப்பாடு, அன்பு, அமைதி அனைத்தும் குடிகொண்டிருக்கும். அவரிடம் பாடம் கேட்க வரும் மாணவர்கள் அனைவரும் நிலத்தில் இருந்து படிக்க வேண்டும். அவரும் தரையில் இருந்து போதிப்பார். பிறப்பால் அனைவரும் சமமானவர்கள் என்ற கொள்கையை நடைமுறையில் செயற்படுத்திக் காட்டினார். ஏழை, பணக்காரர், உயர் குடியில் பிறந்தவர், ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என எந்தவொரு பாகுபாடும் பாராது சமத்துவமாகக் கல்வியைப் போதித்தார். இச்செயலுக்கு எதிர்ப்பும், கண்டனமும் வந்த போதிலும் தனது கொள்கையில் உறுதியாக நின்று

செயற்பட்டார். ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியை வழங்கு வதன் மூலம் அவர்களது வாழ்க்கையை மேம்படுத்த முடியும் எனவும், சமூக விடுதலையை அடைய முடியும் எனவும் திட மாக நம்பினார். ஏழை மாணவர்களுக்கு இலவசமாகவே பாடம் நடத்தினார். அதனால் அவரிடம் கற்ற பலர் பண்டிதர்க ளாகவும் வித்துவான்களாகவும் சித்தியடைந்து பட்டங்கள் பெற்றனர்.

கந்த முருகேசனார் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழு திய போதிலும் அவை நூலுருவில் வெளிவரவில்லை. அவர் 1930-ம் ஆண்டு எழுதிய 'நல்லை நாவலன் கோவை' என்னும் நூல் அறுபத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்னரே நூலாக வெளிவந்தது. அந்நாலில் இருந்து ஒரு பாடலை அவதானிக்க லாம்.

***நாவல னாம்பே ரதுயோக ரூடி நலமுடையோன்***
***பாவலர் மெச்ச மறுமுக னற்பதிப் பாலுறைவீர்***
***தூவலர் காந்தள் குறிஞ்சி துறந்து துணுக்குறுத்து***
***மேலவர் வென்ற கடலை யடைதலென்னே வியப்பே***

நாவலன் என்ற பெயரை காரண இடுகுறியாக உடையவரும், பாவலரால் மெச்சபடுகின்றவருமாகிய ஆறுமுகனாரின் நல் லையிலிருப்பீர். தேனைத் தூவுகின்ற காந்தள் மலர் தனக்கு ரிய குறிஞ்சியை விட்டு நடுக்கத்தைச் செய்கின்ற கடலை அடைதல் என்னே வியப்பு என்பது இதன் கருத்தாகும்.

செந்தமிழ்ச்செல்வி என்னும் இதழில் அவர் எழுதிய 'தமிழர் மணமுறை' என்ற கட்டுரையும் சமூக முன்னேற்றம் என்னும் இதழில் எழுதிய 'விதிகன்மம்' என்ற கட்டுரையும் தனிச் சிறப்பு டையனவாகும்.

கந்த முருகேசனாரின் கொள்கையைப் பல உயர்குடிக் கல்வி மான்கள் விரும்பாத போதிலும் அவரது கொள்கையை ஏற்று, நட்புப் பாராட்டியவர்களும் இருந்தனர். குறிப்பாக, முன்னாள் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினரும், தலைசிறந்த சோஷலிச வாதியுமான பொன். கந்தையா அவர்கள் முருகேச னாருடன் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். 1956-ம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின்போது, அரசியல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த, கம்யுனிஸ்ட் கட் சித் தலைவர்களுள் ஒருவரான பீற்றர் கெனமன் முருகேசனா ரைச் சந்திக்க விரும்பி, பொன். கந்தையாவின் உதவியுடன் அவரைச் சந்தித்து உரையாடி, மகிழ்ச்சி கொண்டார். தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நாஞ்சில் கி. மனோகரன், டி.கே. சீனிவாசன் போன்ற கல்விமான்களும் முருகேசனாரைச் சந்தித்துப் பெருமகிழ்வு கொண்டனர். அறி ஞர் அண்ணாத்துரை, இரா. நெடுஞ்செழியன் போன்றவர்களு டன் தபால் மூலம் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

முருகேசனாரின் அறிவும் ஆளுமையும் நகைச்சுவைப் பண் பும் அனைவரையும் கவர்ந்தது. இவரது மிக எளிமையான தோற்றத்தைக் கண்டு வியந்த பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் 'கிரேக்க ஞானியைப் போலக் காட்சியளிக் கிறார்' எனக் குறிப்பிட்டார். தென் புலோலியூர் மக்கள் வாழும் போதே இவரை கௌரவிக்க வேண்டும் எனக் கருதி 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முத்தமிழ் விழா ஒன்றினை ஏற்பாடு செய்து கந்த முருகேசனாரை வாழ்த்திப் பெருமிதம் அடைந்த னர். சிறந்த ஆசிரியர், தமிழ் அறிஞர், தமிழ் தாத்தா, முற் போக்குச் சிந்தனையாளர் எனப் பெருமதிப்புப் பெற்ற கந்த



முருகேசனார் 1965-ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் திகதி தனது 63-வது வயதில் அமரத்துவம் அடைந்தார்.

இளவயதிலேயே வாதநோய் காரணமாக இரு கால்களும் செயல் இழந்த நிலையில், பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற் கொண்டு கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். அவர் வாழ்ந்த வடமராட்சிப் பகுதியில், சமூக ஏற்றத் தாழ்வுகள் மிக இறுக்க மாகக் கடைப்பிடிக்கப்பட்ட காலகட்டத்தில், பல சவால்களை எதிர் கொண்டு சமத்துவக் கொள்கையை நடைமுறைப்படுத் திய புரட்சியாளர். இவரது நினைவாக புற்றளை மகா வித்தி யாலயம், புற்றளை சனசமூக நிலையம், மந்திகைச் சந்தி ஆகிய இடங்களில் உருவச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆதிக்க குடியில் பிறந்த முருகேசனாரின், புரட்சிகரக் கொள்கை காரணமாக அவரது படைப்புகளும் அவரது முக்கி யத்துவமும் மறைக்கப்பட்டதாகப் பரவலான கருத்துண்டு. அவரது படைப்புகளும் பணிகளும் முழுமையாக வெளிக் கொணர வேண்டியது இன்றைய தமிழ்ச் சமூகத்தின் தலை யாய கடமையும் பொறுப்புமுமாகும்.



vivekananthan.v@thaiveedu.com




# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி ‘சாயம் தோய்ந்த வரிகள்’ மும்மொழிகளிலும் வெளிவந்துள்ள மலையகக் கவிதை நூல்

53

– மல்லியப்புசந்தி திலகர்

‘மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி’ கடந்த இரு நூறு ஆண்டுகளாக எத்தகைய போக்கைக் காட்டி நிற்கிறது என்பதை ஆராய்ந்தறிய முற்பட்ட இந்த தொடர் ஆய்வுக் கட்டுரை, இனிவரும் காலங்களிலும் தொடரும் வாய்ப்புள்ளது. எனினும், மலையகம் 200-இனை எல்லையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்தத் தொடர் நான்கு ஆண்டுகளாக மாதாந்தம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சரியாக நான்கு ஆண்டுகள் நிறைவில் கடந்த செப்ரெம்பர் மாதம் மலையகக் கவிதை இலக்கியத்துக்கு மகுடம் வைத்தாற்போல அமைந்த ‘சாயம் தோய்ந்த வரிகள்’ தொகுப்பினை ஆராய்வதுடன் நிறைவுக்கு வருகிறது.

மலையகக் கவிதை இலக்கியம் நாட்டார் பாடல் வடிவில் ஆரம்பித்து நவீன கவிதை வடிவம் வரை எவ்வாறு பயணித்து வந்துள்ளது என்பதை இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய்ந்தளித்தது. அதில் நவீன கவிதை வடிவத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்திய நூலாக இன்றும் பேசப்படுவது சி.வி. வேலுப்பிள்ளையின் ‘இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே’ எனும் ஆங்கிலக் கவிதையே.

அதேபோல கவிஞர்கள் பலரின் தொகுப்பாக வெளிவந்த ‘குறிஞ்சிப்பூ’ இன்னுமொரு பாய்ச்சலைத் தந்தது. அதற்கடுத்ததாகக் ‘குன்றின் குமுறல்’ போன்ற கவிதைத் தொகுப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகளோடு வெளிவந்தன.

அந்த வரிசையில் ஒன்றுக்கு மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளமை மட்டுமன்றி அவை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கூட மொழி மாற்றம் செய்யப்பட்டு ஒரே கவிதைத் தொகுப்பாக வெளிவந்திருப்பது இதுவே முதற்தடவையாகும். மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியின் 200 ஆண்டு வரலாற்றுக் கால எல்லையைச் சிறப்பிக்கும் வகையில் இத்தகைய தொகுப்பு வெளிவந்திருப்பதும் சிறப்பாகும்.

‘சாயம் தோய்ந்த வரிகள்’ (Tea Stained lines) எனும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள இந்தக் கவிதை நூலை Pen Sri Lanka அமைப்பினர் வெளியிட்டுள்ளனர். மல்லியப்புசந்தி திலகர் பிரதம தொகுப்பாசிரியராக இருந்து, உபாலி ஜனக்க ஜயசிங்க, பெத்தும் விக்கிரமரத்ன, டொன் ஆனோல்ட், பேர்னி மிஹிந்துகுலசூரிய, கயனி பள்ளியாராச்சி ஆகியோரைத் துணை தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு மும்மொழிக் கவிதை நூலாக இந்த நூல் வெளிவந்துள்ளது.

இலங்கை மலையகத்தின் நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் இருந்து சுமார் இருபது கவிஞர்களின் கவிதைகள் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

கவிஞர் சு. தவச்செல்வன் எழுதிய ‘நாள் தொலைவிலில்லை’, எஸ்.என். கிருஷ்ணபிரியன் எழுதிய ‘உழைப்பின் வாசனை’, எஸ்.பி. பாலமுருகன் எழுதிய ‘நகல் பிரதிகூட இல்லாத நாங்கள்’, பிருந்தா ராஜகோபாலன் எழுதிய ‘மார்கழி’, நல்லையா சந்திரசேகரன் எழுதிய ‘கூட்டு ஒப்பந்தம் கூட வருமா ?’ எஸ். ரத்னஜோதி எழுதிய ‘சாதாரண மனிதனாய்’, மாரிமுத்து சிவ-குமார் எழுதிய ‘மலைக்கு பெயர் சூட்டும் விழா’ இராசையா கவிஷான் எழுதிய ‘கொழும்பில் அவன்’, புசல்லாவை கண-பதி எழுதிய ‘குடை பிடிப்பவனுக்கே கொண்டாட்டம்’, ஜெய-காந்த் ஜானு எழுதிய ‘ஒரு வேளை இப்படியாகக்கூட இருக்கலாம்’, சிவலிங்கம் சிவகுமாரன் எழுதிய ‘மின்வெட்டு’, ஜேசு பெர்னாண்டோ நான்சி எழுதிய ‘வாழ்க்கை’, சதீஷ் கிருஷ்ணப்பிள்ளை எழுதிய ‘மீள்பயணம்’, இந்திரா தேவி எழுதிய ‘கூட்டம்’, அன்னாள் குளோரி எழுதிய ‘ஊமைக் கனவு’, எம். புனிதா எழுதிய ‘மலையகப் பெண்’, மு. கீர்த்தியன் எழுதிய ‘மௌனம் அவிழ்கின்றபோது’, சண்முகம் சிவக்குமார் எழுதிய ‘அவள் கொழுந்து வாசம் வீசும் தேயா ஒளி’ ஆகிய கவிதைகளுடன் மல்லியப்புசந்தி திலகர் எழுதிய மாரியம்மனுக்கோர் மனு’, ‘உருமாறு’ ஆகிய கவிதைகள் முதலில் தமிழிலும் தொடர்ந்து சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தொகுக்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. கயனி பள்ளியராச்சி,

ஜெயகாந்த் ஜானு, சிவயோகேஸ்வரி, துஷினி பெரேரா ஆகியோர் மொழி பெயர்ப்பில் தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

2024 செப்ரெம்பர் மாதம், கொழும்பு, இந்திய கலாசார நிலையத்தில் பெரும்பாலான சிங்கள வாசகர்கள் மத்தியில் வெளியிட்டு வைக்கப்பட்ட இந்த நூல் தொடர்ந்து கொழும்பு சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டு பரவலாக வாசிப்புக்கும் உள்ளாகியுள்ளது. இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த Pen International அமைப்பின் உறுப்பினர்கள் இந்த நூலை இந்தி மொழியில் கொண்டுவரவும் ஆர்வம் கொண்டுள்ளனர். ஒக்ரோபர் மாதம் இங்கிலாந்தில் இடம்பெற்ற Pen International அமைப்பின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் இந்த நூல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒடுக்கப்பட்டோரின் குரலை உயர்த்தும் மலையகக் கவிதைகள் எனும் தலைப்பில் அமைந்த பிரதம தொகுப்பாசிரியரின் முன்னுரையும் சுதந்திர இலக்கியத்தின் இன்னுமொரு அத்தியாயம் எனும் தலைப்பிலான கயனி பள்ளியாராச்சியின் அறிமுகக் குறிப்பும் Pen Sri Lanka அமைப்பின் தலைவர் உப்புல் ஜனக்க ஜயசிங்க, மற்றும் செயலாளர் பெத்தும் பிரேமரத்ன, Pen International அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பமிந்தர் பிரபா ஆகியோரின் வாழ்த்துக் குறிப்புகளுடனும் மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையை நினைவுபடுத்தி Tea Pucker எனும் அவரது ஆங்கிலக் கவிதை சேர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கவிதை 1969-ம் ஆண்டு 'Afro Asian Writer Bureau' வெளியிட்ட தொகுப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் சி.வி. வேலுப்பிள்ளை குறித்த சிறு குறிப்பும் சேர்க்கப்பட்டுள்ளது.

'சாயம் தோய்ந்த வரிகள்' எனும் இந்தக் கவிதை நூலுக்கான அட்டைப்படம் மிகுந்த கவனயீர்ப்புக்கு உரியது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், கண்டியில் இருந்து ஆரம்பித்த - பெருந்தோட்டப் பொருளாதார செயற்பாட்டுக்காக அழைத்துவரப்பட்ட இந்தியத் தமிழ் மக்களை, இலங்கைக் குடிகளாக ஏற்றுக் கொள்ள மறுத்த இலங்கை மக்கள், அவர்களை அந்நியராகவே நோக்கினர். இன்றும் நோக்குகின்றனர்.

இந்த நிலையில் கண்டி இராச்சிய காலத்தில் அழைத்துவரப்பட்ட இந்த மக்கள் அப்போதே இலங்கையர்களாக எற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் கண்டி இராச்சிய கால கலை வடிவங்களில், ஓவியங்களில் அவர்கள் வெளிப்பட்டு இருப்பார்கள். அது அவ்வாறு இடம்பெற்றிருந்தால் கண்டி இராச்சிய ஓவியங்கள் எவ்வாறு இருந்திருக்கும் எனும் கற்பனையில் கண்டி இராச்சியத்தில் கொழுந்தெடுக்கும் பெண்களைத் தனது கற்பனையால் தீட்டி இருக்கிறார் ஓவியர் R.W.M.K. உதயங்கனி செனவிரத்ன. இந்த புத்தாக்க முயற்சியை விளக்கும் கயனி பள்ளியாராச்சியின் சமர்ப்பணக் கவிதை ஒன்றும் இந்த நூலை அலங்கரித்துள்ளது.

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியின் 200 ஆண்டு கால வரலாற்றினை மீட்டிப் பார்க்கும் இந்த ஆய்வு முயற்சியில் இப்படியான மலையகக் கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்து இருப்பதும் அதற்குப் பங்களிப்புச் செய்யக் கிடைத்ததும் பெருமகிழச்சியே. இந்தத் தொகுப்பில் அடங்கப்பெறும் கவிதைகள் 50 வயதுக்கு குறைந்தோர்களுடையதாக இருத்தல் வேண்டும் என்பது அதனை வெளியிட முன்வந்த Pen Sri Lanka அமைப்பின் வேண்டுகோளாக இருந்தது. அது இந்த இருநூறு வருடகால மலையகக் கவிதை வரலாற்றில் தற்போது மலையகக் கவிதைகள் எத்தகைய வெளிப்படுத்தலைச் செய்து நிற்கின்றன என்பதற்கான மதிப்பீடும் ஆகிறது. அந்த வகையில் இந்த நீண்ட கட்டுரைத் தொடரின் நிறைவுரையை பின்வருமாறு அமைத்துக்கொள்ளலாம்.

## முடிவுரை:

மலையக இலக்கிய செல்நெறியை எடுத்துக்கொண்டால் பொதுவாக அது பயணித்த பாதை என்பது ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு சமூகப் பிரக்ஞையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமையை அவதானிக்கலாம். மலையகக் கவிதை இலக்கியத்திலும் இதனைத் தரிசிக்க முடியும்.

- 1820-கள் முதல் 1920 வரை அது மக்கள் இலக்கியமாக மக்கள் கைகளிலேயே இருந்துள்ளது. நாட்டார் பாடல்கள் எனும் வாய்மொழி பாடல்கள் வழியே இக்காலத்தில் மலையக மக்கள் தாம் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வர நேர்ந்தமைக்கான காரணங்கள் மற்றும் இங்கு வரும்போது அடைந்த துன்பங்கள் துயரங்களைப் பதிவு செய்வனவாகவும் தமது வேலைத்தளங்களில் தாம் அனுபவித்த ஒடுக்குமுறைகளைப் பாடுவனவாகவும் அமையப்பெற்றுள்ளன.
- 1920-1948-ல் சுதந்திரமடையும் வரையான காலப்பகுதியில் வாய்மொழி இலக்கிய மரபாக இருந்த கவிதை இலக்கியமானது எழுத்து வடிவத்துக்கு மாறி வீறுபெற்ற காலம் என கொள்ளலாம். திரு/திருமதி நடேசய்யர் இணையரின் வருகையும் அவர்களது இலக்கிய முயற்சிகளும் பதிப்பித்தல் முயற்சிகளும் இதற்கான ஆரம்பத்தைக் கொடுத்தன. இதே காலப்பகுதியில் கல்விப் புலமையோடு இலக்கிய உலகுக்குள் பிரவேசித்த சி.வி. வேலுப்பிள்ளை மற்றும் கே. கணேஷ் ஆகியோர் இலங்கை சுதந்திமடைந்த காலப்பகுதியை ஊடறுத்து வந்தவர்கள். ஆதலால் வாய்மொழி பாரம்பரியத்தில் இருந்து தாம் பெற்ற அனுபவத்தை நவீன இலக்கிய வடிவங்களில் உலாவ விட்டவர்கள். இவர்களது ஆங்கிலப் புலமை மலையக இலக்கிய சூழலை புதிய செல்நெறிக்கு இட்டுச்சென்றது. இக்காலகட்ட பாடுபொருள் எல்லாமே தொழிலாளர்களின் வேலைச் சுமைகளையும், அவர்களது வாழ்விட வசதியின்மைகளையும், அவர்கள் மீதான சுரண்டல்களையும் பாடும் அவலச்சுவை கொண்டவை என்பதை மறுப்பதற்கில்லை. என்றாலும் எம் மக்கள் இந்தத் துயரங்களில் இருந்து மீண்டு எழுவர் எனும் நம்பிக்கை இந்தக் காலகட்டப் படைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- (1948) சுதந்திரமடைந்தது முதல் 1960-களின் நடுப்பகுதி வரையான காலகட்டத்தின் ஆரம்பத்தில் மலையக மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டதன் எதிரொலியை மலையக

கவிதை வெளிப்பாட்டில் தரிசிக்கலாம். இதனால் மலையக மக்களின் பிரஜாவுரிமைக்கான (சுதந்திரத்துக்கான) போராட்ட காலமாக இதனைக் கொள்ளமுடியும். இந்தக் கால படைப்புக்களில் இந்திய வம்சாவளி மக்களாகிய தாங்கள் 'மலையக மக்களாக' உருவெடுத்த காலம் என கொள்ளலாம். 1960-களில் இந்த முனைப்பினை பெருவீச்சில் தரிசிக்கலாம். ஏறக்குறைய இலக்கிய படைப்புகளின் ஊடே மலையகம் எனும் தொடரை தூவி விதைத்து மலையகம் எனும் உணர்வை எழுப்பிய காலமாக இது அமைகிறது. இக்கால படைப்புகளில், கவிதைகளில் இதனைத் தரிசிக்க முடியும். இரா. சிவலிங்கம் இக்காலத்தின் முக்கிய ஆளுமையாக வெளித்தோன்றினார். இக்காலத்தில் தொழிலாளர் மட்டத்தில் இருந்து எழுதிய குறிஞ்சித்தென்னவன், தமிழோவியன் போன்ற ஆளுமைமிக்க கவிஞர்களின் படைப்புகள் அதிகளவில் மக்களின் வாழ்வியலைப் பாடி நின்றுள்ளன. அதே நேரம் மலையகத்தில் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் பரவலாக முனைப்புப் பெற்ற இந்த காலத்தில் தொழிற்சங்கச் செயற்பாடுகளைப் போற்றியும் விமர்சித்தும் அதிகளவில் கவிதைகள் வெளிப்பட்டுள்ளன. அடுத்து வரக்கூடிய அனைத்து காலகட்டங்களிலும் தொடரும் போக்கு மலையகக் கவிதை இலக்கிய செல்நெறியில் காணக்கூடியதாக இருக்கிறது.

- 1965-ன் நடுப்பகுதி முதல் 1985 வரையான காலப்பகுதி இன்னுமொரு சமூக அவலத்தைப் பிரதானப்படுத்தி மலையகக் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. 1964-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையக மக்கள் நாடு கடத்தப்பட்டமையும் அதனால் மலையக மக்களின் குடும்பங்கள் சிதறடிக்கப்பட்டு மலையக தேசிய மக்கள் குடும்ப மட்டத்திலேயெ கூறுபோட்ட சோக வரலாற்றை பதிவு செய்கிறது. 1990-களில் மீதமிருந்த மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் வரை மலையக கவிதை இலக்கிய படைப்புகளில் அதன் தாக்கத்தை தரிசிக்கலாம். வெலிமடைக்குமரன், அல் அஸுமத், அரு. சிவானந்தன் போன்ற கவிஞர்களின் படைப்புகளில் இந்தியாவுக்கு (தாயகம்) திரும்பவதை மறுதலித்தும் இலங்கையையே நமது நாடாகவும், மலையகத்தையே தமது தேசமாகவும் கொள்ள வேண்டும் எனும் முனைப்பை எழுதிய கவிதைகளைத் தரிசிக்கலாம். மலையகத்தின் புதுக்கவிதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலமாகவும் (1976-சென்றுவருகிறேன் ஜென்ம பூமியே - வண்ணச்சிறகு அரு. சிவானந்தன்) இதனைக்கொள்ளமுடியும்.
- 1985 முதல் 2005 வரையான காலம்: 1977-க்குப் பின் மலையக அரசியலில் வேரூன்றித் தோன்றிய அரசியல் கலாசாரம் (அமைச்சுப்பதவிசார் அரசியல் தந்திரோபாயம்) மற்றும் ஏற்கனவே இருந்துவந்த தொழிற்சங்க செயற்பாடுகள், அதன் அரசியல் என்பவற்றை விமர்சிக்கும் போக்கு உக்கிரமடைந்த காலகட்டம் என கொள்ளலாம். இன்றுவரையான காலம் வரை இந்த அரசியல் விமர்சன கவிதைப்பாங்கு தொடர்ந்துகொண்டிருக்கிறது. முன்வந்த காலகட்டங்களில் மலையக மக்களுக்கு எதிராக வெளியில் இருந்த - அரச, இனத்துவ, முதலாளித்தவ ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கவிதை எழுதிய அல்லது இலக்கியம் படைத்த நிலைமை மாறி மலையகச் சமூகம் தனக்கான எதிரியாக தன்னையே -தமது அரசியல் தொழிற்சங்க அமைப்புகளை அடையாளப்படுத்தி இலக்கியம் படைத்த காலகட்டமாக இதனைக் கொள்ளலாம். இந்த அரசியல் செல்நெறியோ அல்லது செயற்பாடுகளோ விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதல்ல. அவை விமர்சனத்துக்கு உரியவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. எனினும், இது பொது எதிரியை மறந்து நமக்குள் நாமே முட்டிமோதிக்கொள்ளும் ஒரு நிலைமையை மலையகத்திற்குள் தோற்றுவித்தது. ஆளும் வர்க்க அரசையோ அல்லது அதனைப்போன்ற வெளித்தாக்க விரோதங்களை நமக்கெதிரான ஒடுக்கமுறையாக நுணுகிநோக்கி ஆராயத்தலைப்படாமல், மக்கள் தமது எதிரிகளாக அரசியல் தொழிற்சங்க தலைமைகளே செயற்படுகின்றன என்ற கருத்தினை பதிவு செய்யும் கவிதைகளே இந்த காலகட்டத்தில் அதிகம் வெளிவந்துள்ன. (உதாரணம்: மாடும் வீடும், புதிய தலைமுறை, மல்லியப்பு சந்தி). அதே நேரம் இதற்கு முன்னரான மலையகத் தியாகிகள் நினைவு கூரப்பட்டு இலக்கியம் படைக்கப்பட்ட ஒரு காலப்பகுதியாகவும் (தீவகத்து ஊமைகள் - கவிஞர் சு. முரளிதரன்) இதனைக்கொள்ளலாம். மறுபுறம் முன்னைய அளவில் தியாகிகளாக யாரையும் அடையாளம் காட்ட முடியாத ஒரு காலகட்டத்தை நோக்கி மலையகப் போராட்ட களங்கள் மாறிப்போனதையும் அவதானிக்கலாம்.
- 2005-க்குப் பின் இன்று வரை மலையகத்தில் வெளிப்படும் கவிதைகளிலும் முன்னைய காலப்பகுதியில் நிலவிய அதே தொழிற்சங்க அரசியல் தலைமைகளை விமர்சிக்கும் போக்கினைக் காணலாம். ஆனால் இந்த காலப்பகுதிக்குரியவர்களின் கவிதை வீச்சு நவீன இலக்கியச் சூழலில் புதுக்கவிதை பெற்றுவரும் மாற்றத்தையும் கட்டமைப்பையும் சொல்லாட்சியையும் உள்வாங்கிய கவிதை எழுதும் ஆற்றல் மலையக கவிதை இலக்கியத்தை புதிய தளத்துக்கு இட்டுச்செல்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

எவ்வாறெனினும் மலையகத்தில் எண்ணிக்கையில் குறைந்த கவிஞர்கள் அதிக எண்ணிக்கையிலான கவிதைகளை எழுதிய காலம் போய், அதிக எண்ணிக்கையிலான கவிஞர்கள் குறைந்த அளவான கவிதைகளை எழுதுகின்றனர். இலக்கியமும் மாற்றங்களும் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருப்பவை என்கிறதன் அடிப்படையில், மலையகக் கவிதை இலக்கியம் பல்வேறு பரிணாமங்களினது தொடர்ச்சியாக, பல்வேறு பரிமாணங்களைக்காட்டி உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது உறுதிபடத் தெரிகிறது.

(மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி தொடரும். இந்தக் கட்டுரைத் தொடர் இத்துடன் நிறைவு பெறுகிறது. வாசகர்களுக்கும் வாய்ப்பளித்த 'தாய்வீடு' ஆசிரிய குழுவுக்கும் நன்றி).



thilagar@thaiveedu.com




# றஷ்மியின்,
# ‘சற்றே பெரிய கதைகளின் புத்தகம்’
# வாசிப்பனுபவம்

– அருண்மொழிவர்மன்

ஓவியராகவும் நூல் வடிவமைப்பாளராகவும் கவிஞராகவும் நன்கறியப்பட்டவரான றஷ்மி நிறைய நூல்களின் அட்டைப்பட டங்களைத் தனித்துவமான அழகியலோடு உருவாக்கிக் கொடுத்திருப்பவர். பல எழுத்தாளர்கள், கலை இலக்கியச் செயற்பாடுகளின் கோட்டோவியங்களை அவ்வப்போது வரைந்தும் முகநூலில் பகிர்ந்துவருபவர். பலரது புரொஃ-பைல் படங்களாக றஷ்மி வரைந்த கோட்டோவியங்களே இருப்பதை அவதானித்திருக்கின்றேன். இதுவரை ‘காவு கொள்ளப்பட்ட வாழ்வு முதலாய கவிதைகள்’, ‘ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு’, ‘ஈதேனின் பாம்புகள்’, ‘ஈ தனது பெயரை மறந்துபோனது’, ‘அடைவுகாலத்தின் பாடல்கள்’ என ஐந்து கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவரது கவிதைத் தொகுதிகள் ‘அட இது என்னவாக இருக்கும்’ என்று அந்த நூலை வாசிப்பதற்கு ஆர்வமூட்டும் விதத்தில் அமைந்திருப்பன. சற்றே பெரிய கதைகளின் புத்தகம் என்கிற அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பும் அந்தவிதத்தில் அது என்ன பெரிய கதைகள்? என்று எண்ணத் தூண்டும் விதத்தில் அமைந்துள்ளது. 8 கதைகள் 200 பக்கங்கள் என்று பக்க அளவைப் பார்த்தாலும் பெரிய கதைகள் தான், ஆனால், அவை சொல்கின்ற மனிதர்களின் வாழ்க்கையும் பாடுகளும் நம்பிக்கைகளும் இந்தக் கதைகளை உண்மையிலேயே பெரிய கதைகள் ஆக்கிவிடுகின்றன.

மேரி மக்தலீனும் தீர்க்கதரிசியும் என்கிற முதலாவது கதை ‘இப்போது’ என்பதையே தலையாய சவாலாகக் கொண்டு வாழும் முடி, பாலியல் தொழிலைச் செய்யும், சிறைகளுக்குள் அகப்பட விரும்பாத சிறகுள்ளவளான ஜினா, முடியின் அறைத் தோழன் ஆன கதைசொல்லி ஆகிய பாத்திரங்களைக்கொண்டு புலம்பெயர் விளிம்புநிலை வாழ்வினைச் சொல்கின்றது. அந்தக் கணத்திலேயே வாழ்வை வாழ்ந்து செல்லும் முடி, வதிவிட உரிமை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஜினாவை மணந்துகொள்ளத் திட்டமிடுகின்றான். இதனைக் காதல் என்று சொல்லமுடியுமா? அல்லது தந்திரம் என்று சொல்லமுடியுமா? என்று தெரியவில்லை, ஆனால் ஜீனா மீது கொண்ட உடைமையுணர்வு காரணமாக அவளைக் கொன்றுவிடுகின்றான் முடி. அகதிகள் ‘சட்டவிரோதம்’ ஆக இருப்பது, ‘பாலியல் தொழில்’ சட்ட விரோதம் ஆக இருப்பது என்பவற்றின் மூலமாக நிகழும் குற்றச்செயல்கள் பற்றிய உரையாடல்களை இந்தக் கதை எனக்கு ஏற்படுத்தியது.

இந்தத் தொகுப்பில் உள்ள ஞானி என்கிற கதையும் நீலம் என்கிற கதையும் சிறுவர்கள் உளவியல் பற்றிய கனதியான உரையாடலைத் தொடக்குகின்றன. சிறுவயதில் நாம் சொல்வோமே புளுகன் என்று, அப்படியானதோர் புளுகனாக இந்தக் கதையில் குஞ்சான் இருக்கின்றான். சிங்கத்துக்குக் கொம்பு இருக்கின்றது என்றும் தனது தந்தை சிங்கத்தை வேட்டையாடி அதன் கொம்பை வீட்டில் கொழுவி வைத்துள்ளார் என்றும், தமது வீட்டில் ஒரு சிங்கக் குட்டியை வளர்க்கிறோம் என்றும், சிங்கத்தின் முட்டையில் இருந்தே சிங்கக் குட்டி பிறக்கின்றது என்றும், குதிரைக்குக் கொம்பும் இறகும் இருக்கின்றது என்றும் பல கதைகளை தன் சகமாணவர்களிடம் கூறுகின்றான் குஞ்சான். நம்பவே முடியாத விடயங்களை நம்பும்படி பிறரிடம் கூறி அதன் மூலம் தனக்குத் தேவையானவற்றைச் சாதித்துக்கொள்ளும் குஞ்சான் இந்தத் திறமை மட்டுமே அடிப்படை மூலதனமாகத் தேவைப்படும் சாமியாராக, ‘தானே தனது நெற்றியில் பிளந்து அறியாமை அகற்றிய’ ஞானியாக மாறுகின்றான். குழந்தைகளின் உலகம் மிகவும் நுட்பமானது, நுண்ணுணர்வுடன் அணுகவேண்டியது. குஞ்சான் படிப்பில் பின்தங்கிய மாணவனாக இருக்கின்றான், வகுப்பேற்றப் பரீட்சையில் கூட சித்தியடையாமல் இருக்கின்றான். அதேநேரம் அவனது ஆசிரியர் அவனைப் பாடம் நடந்துகொண்டிருக்கும்போதே வெங்காய ரொட்டியும் இஞ்சித் தேனீரும் வாங்கக் கடைக்கு அனுப்புகின்றார். அதற்கு ஆசிரியர் குஞ்சானைத் தேர்வுசெய்ய அவன் வயதில் மூத்தவன் என்பது மட்டுமல்லாமல் கல்வியில் பின்தங்கிய மாணவர்கள் மீது ஆசிரியர் காட்டுகின்ற அலட்சிய மனப்பான்மையும், வேட்டைக்குச் செல்பவரின் மகன் போன்ற சமூகவியல் காரணிகளும் இருக்கக் கூடும். இப்படியான மாணவர்களுக்குத் தேவையான காபந்தினையும் பாதுகாப்புணர்வையும் உறுதிப்படுத்தவேண்டிய பாடசாலைச் சூழல் மாறாக அவர்களை இன்னும் இன்னும் சோர்வடையச் செய்வதாக அமைவதை கதை சுட்டுகின்றது. குழந்தைகளின் வளர்ச்சியின் போது 2 வயது முதலே பொய் சொல்லத் தொடங்குகின்றன என்றாலும் பொய் சொல்வது ஒரு நோயாக (Pathological Lying) அமைவதற்கு புறக்கணிப்பு அல்லது துஷ்பிரயோகம் போன்ற குழந்தைப் பருவ அஞரோ (Trauma) அல்லது மனச்சோர்வோ காரணமாக இருக்கலாம். குழந்தைப் பருவத்தில் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள், அவர்கள் விரும்பும் அன்பையும் உறுதியையும் பெறுவதற்கான முயற்சி

யில், ஒரு சமாளிப்பதற்கான வழி முறையாக பொய் சொல்லத் தொடங்கலாம் என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதுபோல குழந்தைகளின் உளவியலில் எதிர்கொள்ளுகின்ற முக்கியமான 'கொடுமைப்படுத்தப்படல்' (Bullying) என்கிற பிரச்சினையை நீலம் கதை தொடர்புபடுத்துகின்றது. இந்தக் கதையில் மருந்தகம் ஒன்றில் வயாகரா அல்லது அதுபோன்ற மருந்தொன்றை வாங்குகின்ற மாத்தையா என்கிற கதாபாத்திரம் அதனைத் தான் கதைசொல்லியின் தந்தை கேட்டே வாங்




குவதாகச் சொல்கிறான். கடையில் பகுதி நேரமாக வேலை செய்த சிப்பந்திச் சிறுவனூடாக இது கதைசொல்லியின் பாடசாலைக்குப் பரவி, அவனைச் சகமாணவர்கள் அந்தக் குளிசையின் நிறம் நீலமென்பதால் நீலம் என்று அழைத்தும் ஆண்குறிகளின் படங்களை பாடசாலையிலும் வேறு பொது இடங்களில் வரைந்து நீலம் என்று எழுதியும் தொந்தரவு செய்கின்றனர். ஆசிரியர்களும் இதனை ஒரு பகடியாக எடுத்துச் சிரித்துக் கடந்து போகின்றனர். இது கதைசொல்லிக்குப் பெரும் மன அழுத்தத்தைக் கொடுப்பதுடன் அவனது படிப்பையும் பாதிக்கின்றது. அதுவரை வகுப்பில் முதல் மாணவனாக வந்தவன் பின்தங்கிச் சென்று, க.பொ.த சா/த பரீட்சை முடிவுகளைக் கூடச் சென்று பார்க்காமல் இருந்து விடுகின்றான். முதல் மாணவன் ஒருவன் கேள்விகள் கேட்கப்படாத, விடைகள் எதிர்பார்க்கப்படாத, ஆசிரியர்களால் எதிர்காலத்தில் மாடு மேய்க்கத் தகுதியானவர்கள் என்று ஆசீர்வதிக்கப்பட்ட கடைசி வரிசை மாணவன் ஆகின்றான். இங்கும் அந்த மாணவன் பாடசாலை முறைமையால் (School System) கைவிடப்படுகின்றான். 'கொடுமைப்படுத்தல்' போன்ற மிக கடுமையும் கொடுமையும் வாய்ந்தவற்றை பகடி என்று சொல்லும்போது அதனால் பாதிக்கப்படும் தரப்புகள் பற்றிய பிரக்ஞை உருவாகவேண்டியது அவசியம். (Unicef வெளியிட்ட Estimating the Prevalence and Drivers of BULLYING including CYBERBULLYING (2020) என்கிற அறிக்கையின்படி இலங்கையில் 47% மாணவர்கள் ஏதோ ஒருவிதமான 'கொடுமைப்படுத்தலிற்கு' ஆளாகுவதாகவும், பாடசாலைகளில் 30% மாணவர்கள் பகடி என்ற பெயரில் கொடுமைப்படுத்தலுக்கு உள்ளாவதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதை இங்கே கவனத்திற் கொள்ளலாம்)

இந்தக் கதையை றஷ்மி இன்னும் நுட்பமான தளத்துக்கு எடுத்துச் செல்கின்றார். தனது பின்னடைவைத்தான் இவர்கள் எல்லாரும் எதிர்பார்த்திருந்தனர் என்பதையும் அந்தப் பின்னடைவிற்கான காராணம் அந்தச் சூழல் தன்மீது ஏற்படுத்தியிருந்த அழுத்தம் என்பதையும் அவன் உணர்ந்து கடைச் சிப்பந்தியாகவும், பின்னர் பாலைவன நாடொன்றில் 20 வருடங்களும் மிக கடுமையாக உழைத்துப் பொருளாதார ரீதியில் முன்னேறுகின்றான். தன்னைவிடக் குறைவாகக் கல்வித்திறமை கொண்டவர்கள் படித்து நல்ல பதவிகளில் இருக்கின்றார்கள் என்பது தரும் கசப்பை, அவர்கள் பொறாமைப்படும் படியாக பொருளாதார ரீதியில் உயர்ந்து வெற்றிகொள்கின்றான். அவன் அடைந்த அத்தனை வலிக்கும் வேராக அமைந்த மாத்தையா மீது கூட கோபம் கொள்ளாமல் கடந்துவிடுகின்றான். விட்டுக் கொடுப்பையும் மன்னித்தலையும் சரிவு நிலையில் இருக்கின்ற போது செய்யும்போது அது இன்னும் ஒடுக்குமுறைக்கே இட்டுச் செல்லும் தன்னை நிரூபித்துக்கொண்டு அவன் மன்னித்து நகர்கின்றான்.

இந்த தொகுப்பில் இருக்கின்ற எனக்கு ஆகப்பிடித்த கதைகளில் ஒன்று நீலம், மற்றையது 'ஜ'. ஜவின் பத்தாவது பிறந்த தினம் அவளது பெற்றோரால் பெருமளவில் கொண்டாடப்படுகின்றது. 'என்னைக் கைவிட்டு விட்டு எல்லாரும் குடிப்பதிலும், சத்தமாகக் கதைப்பதிலும், சிரிப்பதிலுமே கவனமாகயிருப்பதாகத் தோன்றிற்று. எனது பிறந்தினம் அவர்களுக்குக் கொண்டாடித் தீர்க்கக் கிடைத்த ஒரு நாளாயிற்று' என்கிறாள் ஜ. அவள் களைப்புற்று உறங்கிய பின்னர் அவளது மாமாவான பேயால் அவள் வன்புணர்வு செய்யப்படுகின்றாள். பாலியல் குற்றங்களின்போது விசாரணை என்ற பெயரில் பாதிக்கப்பட்டவர்கள் மீது கேள்விகள் இன்னும் பெரிய வன்முறையாக அமைவதே வழக்கம். 'இத்தனை வருடங்கள் கழித்தும் அந்தப் படுக்கையில் இருந்து என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. எனக்கு அதுவரை நேர்ந்ததற்கு சற்றும் குறைவில்லாத வேதனையை அங்கு நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போதும் துக்க விசாரிப்புகளின்போதும் அனுபவித்தேன். ஆயிரம் வேறு வேறு சந்தர்ப்பங்களில் ஆயிரம் வெவ்வேறு ஆடிகளுக்குக் கதை சொல்ல வேண்டியதாயிற்று. 'என்கிறாள் ஜ. சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப அவள் விரும்பியபோதும் அந்த அஞரிலிருந்து அவளால் வெளிவரவே முடியவில்லை. இதனை ஜ பின்வருமாறு பதிவு செய்கின்றாள்.

*'நமது வேலையிடத்திற்கு என்னைக் காண வருகின்ற ஆண் நண்பர்களை நீ கடைக்கண்ணால் கவனித்துக்கொண்டிருப்பது எனக்குத் தெரியும். நீ என்ன நினைக்கிறாய்? அவர்கள்*

*எல்லாருடனும் நான் படுக்கையைப் பகிர்ந்துகொள்ளுகிறேன் என்றா? ஒவ்வொரு நாளும் நான் உணர்ந்துகொண்டிருக்கின்ற தனிமை பற்றி உனக்குத் தெரியுமா? ஒவ்வொரு ஆண்களிடமும் நான் நட்பினை உருவாக்க முயன்று தோற்றுக்கொண்டிருப்பதை நீ அறியமாட்டாய். அவர்களிடம் நட்பாக இருக்கின்றேன். சினிமாக்களுக்குச் செல்கிறோம். பொது இடங்களில் எங்களைக் காதலர்களாகப் பிறரிடம் அறிமுகம் செய்துகொள்கிறோம். அவர்களை என்னுடைய வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கிறேன். அவர்களுக்காகச் சமைத்துக் கொடுக்கிறேன், அவர்கள் மது அருந்த நான் பார்த்திருக்கிறேன். அவர்களைக் கன்னங்களில் முத்தமிட அனுமதிக்கும் நான் உதடுகளில் முத்தமிட்டுப் பெறமுடியாதவளாகியிருக்கிறேன். அவர்கள் எல்லாரிடமும் சிகரெட்டும் விஸ்கியும் கலந்த நாற்றம் வீசுகிறது. இதழ்கள் வெடிப்புற்று மேல்தோல் சொர சொரப்பதுபோல சிராய்க்கின்றன. அவர்களோடு நீண்ட நாட்களுக்கு உறவாயிருக்க என்னால் முடியவில்லை. புணர்தலைப் பகிர்ந்துகொள்ள ஒத்துழைக்காத பெண் நண்பியுடன் அவர்களுக்கும் நீண்ட நாட்கள் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. உனக்குத் தெரியுமா? இதுவரை என்னோடு பழகிப் பிரிந்துசென்ற எவரும் சண்டையிட்டுப் போனதில்லை. அவர்களால் என்னைப் புரிந்து கொள்ளமுடியாமல், அவர்கள் சொல்வதுபோல 'சரி செய்ய' முடியாமல்தான் இறுதியில் விலகிப் போனார்கள். இப்படி 'சரி செய்ய' முடியாத பழுது என்ன என்பது பற்றி அவர்களிடம் அரைகுறை விளக்கங்களே உள்ளது தவிர, முழு வரலாற்றை அவர்களோடு நான் பகிர்ந்துகொள்ளவில்லை. தேவையற்ற சுமைகளை அவர்களின் மீது ஏற்றிவைக்க எனக்கு விருப்பமில்லை. ஒவ்வொரு உறவு தொடங்கும் முதலாவது உணர்ச்சி வயப்படுத்துகின்ற பார்வையின்போதும் எனக்குத் தெரியும், அது துயரும் பிரிவும் கேள்விகளும் நிறைந்து தூரவாகி நடந்துபோகும் ஒரு உருவம் கண்ணீரில் கரைய முடியப்போவதை'.*

பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட ஒருவரின் ஆன்மாவை வெளிப்படுத்தும் விதத்தில் அறத்துடனும் அக்கறையுடனும் இது பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

கலை, இலக்கியம், வாசிப்பு என்பனவற்றை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புடுத்த வேண்டும். அவை வாழ்வு பற்றிய பார்வையை, சகமனிதர்கள் பற்றிய பார்வையிலும் நிலைப்பாட்டிலும் சலனத்தை ஏற்படுத்தவேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அண்மையில் ஈழத்தில் சிறுமியர் தங்க வைக்கப்பட்டிருந்த ஒரு மகளிர் விடுதியில் குளிக்கும் தொட்டிக்கு மேலாக சவைலன்ஸ் கமரா பொருத்தப்பட்டிருந்தது பற்றிய செய்திகள் வெளிவந்திருந்தன. இது எத்தனை பெரிய அழுத்தத்தை அந்த மாணவியர் மீது ஏற்படுத்தியிருக்க கூடியது? அந்த அகுரிலிருந்து அவர்கள் வெளிவருவது சவாலானது அல்லவா? ஆனால் இதைப் பற்றிக் கரிசனை இல்லாமல் இதனால் பிரபலங்களுக்கு கெட்ட பெயர் வந்துவிடும் என்றும் காய்ச்ச மரத்துக்கு கல்லடி என்றும் கடந்துபோனவர்களின் மனசாட்சியை எவ்விதம் விசாரணை செய்வது?

இந்தத் தொகுப்பில் உள்ள 'வாவிக்கரை வீட்டில் வாழ்ந்தவர்கள்', 'ஒரு காதல் கதை', 'இடையறாது ஆடும் ஊஞ்சலிலுள்ள முற்றம்', 'பெண்ணாள் கதை' ஆகிய கதைகளும் அன்பையும், ஆண் பெண் உறவுச் சிக்கலையும் காமத்தையும் பேசுகின்றன. இடையறாது ஆடும் ஊஞ்சல் உள்ள முற்றத்தில் வாழ்வின் அபத்தம் பேசப்படுகின்றது. பிறருக்குக் காட்டுவதற்கென்றும், பிறரது எதிர்பார்ப்புக்காகவும் வாழ்வை அமைத்துக்கொள்ளும் வாத்தி வாழ்க்கையைத் தொலைத்து விடுகின்றார். இருபது நிமிடங்கள் மட்டும் உணவு இடைவேளை கிடைக்கிற (அது பத்தொன்பது நிமிடமாயிருக்கலாம், ஆனால் இருபத்தொரு நிமிடமாய் இருக்காது) வேலையை வாத்தி செய்யும்படி நிலைமை அமைகின்றது. ஆனாலும் அவருக்கு உள்ளூர ஒரு பெரிய கனவு இருக்கின்றது, நிலத்திற்கு மேலே வெளிச்சம் படுகிற மாதிரி எங்காவது இடத்தில் மனிதர்களோடு பேசிப் புழங்கி ஒரு நாளைக்காவது வேலை செய்யவேண்டும் என்பதுதான் அந்தக் கனா என்பது மிகுந்த கழிவிரக்கம் தரும் ஒரு நிலையல்லவா?

தொகுப்பில் உள்ள கதைகள் அனைத்துமே துரோகத்தையும் வலியையும் ஏமாற்றத்தையும் பேசுகின்ற அதேநேரம் அவற்றைக் கடந்து எங்கிருந்தோ கிடைக்கும் அன்பையும் பரிவையும் கரிசனையையும் நம்பிக்கையையும் ஊட்டுவதாக இருக்கின்றன. 'பெண்ணாள் கதை என்கிற கதை' குறித்து மாத்திரம் எனக்கு இதில் மாற்றபிப்பிராயம் இருக்கின்றது. ஏற்கனவே திருமண உறவில் இருக்கின்ற பெண்ணாள் பையனுடன் உறவேற்பட்ட பின்னர் அவன் இடையில் உறவை முறித்துச் சென்றான் என்பதால் ஏற்பட்ட ஏமாற்றம் / கோபத்தால் அந்தப் பையனின் தந்தையான உத்தமருடன் உறவையேற்படுத்திக் கருவுற்றாள் என்று வருவது செயற்கையானதாக இருக்கின்றது.

தொகுப்புப் பற்றிச் சொல்லும்போது மிக முக்கியமாக குறிப்பிடவேண்டியது ரஷ்மியின் கவித்துமான நடையும், கதை சொல்லும் உத்திகளும். குறிப்பாக அனேக கதைகளில் கதை நடக்கின்ற இடங்கள் பற்றியும் அவர்களது இனம் மொழி பற்றியுமான அடையாளங்கள் சொல்லப்படாமலே கதைகள் அமைகின்றன. அதேநேரம், அது குறைபாடாகத் தெரியாமல் பொதுத்தன்மையைத் தருவதாக அமைந்திருப்பது சிறப்பு. அது தவிர படிமங்களும் உதாரணங்களும் புதிதாகவும் தனித்துவமாகவும் அமைகின்றன. உதாரணத்துக்கு நான் வெகுவாக ரசித்த மூன்றைச் சுட்டிக்காட்டுகின்றேன்:

- வானவில்லின் நிறம் கொண்டு காற்றில் பறந்த செதில்கள் (மீனில் உள்ள செதில்களை அரிவாளால் நீக்கும்போது சொல்லப்படுகின்றது)
- கிணற்று வாளியில் இடப்பட்டிருந்த ஓட்டையூடு நீர் நீள்வட்டமாகச் சிந்தி, படிப்படியாக ஆரை குறைந்து இறுதியில் ஓர் நேர்கோடாகச் சிந்திக்கொண்டிருப்பது கேட்கிறது.
- அவர் சிரிக்க எத்தனிக்கும்போது உதடுகளிடையே சிகரெட் ஓர் ஓரமாக ஒதுங்கும். அப்போது அவர் கண்களைப் பாதி மூடியவராகப் புகையிலிருந்து தப்பிக்க முயல்வார்.

இந்தத் தொகுப்பில் எந்த இடத்திலும் ரஷ்மி பேசவில்லை, கதை நிகழும்போது கதையே எம்முடன் உரையாடல்களை முன்னெடுக்கின்றது. அது சமூக ஒழுங்கு குறித்தும் வாழ்வின் அபத்தம் குறித்தும் பல கேள்விகளையும் எழுப்புகின்றன இந்தச் சற்றே பெரிய கதைகள்.



arunmozhivarman@thaiveedu.com



# தாகூரின் இன்னிசைக்கு ஒரு காட்டுமலர்: சி.வி. வேலுப்பிள்ளையின் ‘விஸ்மாஜினி’

மு. நித்தியானந்தன்

மலையகத்தின் முன்னோடி எழுத்தாளர் சி.வி. வேலுப்பிள்ளை (1914-1984) அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஓரங்க நாடகமான ‘Vismadgenee’, 1934-இல் வெளியாகி இன்று 90 ஆண்டுகள் கழிந்த நிலையில், இவ்வாண்டு அந்த ஆங்கில நூலின் மறுபதிப்பு, அந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்புடன் (விஸ்மாஜினி) முதல் தடவையாக வெளியாகிறது.

1982-ல் சி.வி. அவர்கள் தம் கைவசம் வைத்திருந்திருந்த அந்த நூலின் மிகச் சில பிரதிகளில் ஒன்றினை எனக்குத் தபாலில் அனுப்பியிருந்தார். அது ஓர் அரிய நூல் என்பதனை உணர்ந்து, நான் அதனைப் பேணி வைத்திருந்தேனாயினும், அசாதாரண சூழ்நிலையில் நான் இலங்கையை விட்டு வெளியேற நேர்ந்த நிலையில் அந்தப் பிரதியை நான் தொலைக்க நேர்ந்தது. அதன் பின்னர், அந்த நூலினைப் பெறுவதற்கு மிகப் பல நூல் நிலையங்களைத் தேடி அலைந்திருக்கிறேன். அந்த நூல் கிடைத்தற்கரிய நூலாகவிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் துணை விரிவுரையாளராக இருந்த வேளையில், சி.வி. அவர்களின் ‘வீடற்றவன்’ என்ற நாவலை 1981-ல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்டேன். தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில், அவரின் ‘நாடற்றவர் கதை’ என்ற கட்டுரைத் தொகுப்பைப் பதிப்பித்தேன். ‘மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்’ என்ற அரசியல் கட்டுரைத் தொகுதியைக் கலை ஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை வெளியீடாக 2022-ல் வெளியிட்டேன். சி.வி. அவர்கள் ‘தினகரன்’ பத்திரிகையில் 1962-ல் தொடராக எழுதிய ‘எல்லைப்புறம்’ என்ற நாவலை, 66 ஆண்டுகளின் பின், 2024-ம் ஆண்டில் கலை ஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை வெளியீடாகப் பதிப்பித்தேன். இன்று சி.வி.-யின் முதல் ஆங்கிலப் படைப்பை மறுபதிப்புச் செய்து, அதனைத் தமிழில் அளித்திடும் பணி நெஞ்சிற்கு நிறைவைத் தருகிறது. இது நாங்கள் வெளியிடும் சி.வி.-யின் ஐந்தாவது நூலாகும்.

சி.வி. அவர்கள் மீது நான் பெரும் மரியாதையும் அன்பும் கொண்டவன். 1972-ல் தலங்கம என்ற சிங்களக் கிராமமொன்றில் அமைந்திருந்த அவரது வீட்டிற்குச் சென்றிருந்தபோது, அவர் எனக்களித்த விருந்துபசாரம் அவரது மேன்மையைக் காட்டும். 1983-ல் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நான் சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தில் என்னைச் சந்திக்க வந்த அன்பு அவருடையது. சாந்தமும் நேர்மையும் கொண்ட பெருமகன். தொழிற்சங்க வாழ்வே அவரது வாழ்நாள் ஊழியமாக அமைந்தது. இத்தகைய நேர்மை கொண்ட மனிதர்களை இன்றைய மலையக அரசியலில் காணக்கிடைப்பதற்கில்லை.

1914-ஆம் ஆண்டில் பூண்டுலோயாவில் அமைந்திருந்த வட்டக்கொடை மடக்கும்புறவைப் பிறப்பிடமாகக் கொண்ட சி.வி., அட்டன் மெதடிஸ்ற் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு நாளந்தா கல்லூரியிலும் பயின்றார். சி.வி. தமது பதினெட்டாம் வயதில் நாளந்தாவில் கல்வி பயிலும் காலத்தில், ‘விஸ்மாஜினி’ என்ற நாடக நூலை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். கவி ரவீந்திரநாத் தாகூர் 1934-ம் ஆண்டு இலங்கைக்கு வருகைதரவிருந்தபோது, அவரிடம் தனது நூலைக் கையளித்து ஆசி பெறவேண்டும் என்ற பேரவாவில் ‘விஸ்மாஜினி’ என்ற நூலை அச்சிட்டு, காத்திருந்தவாறே குருதேவர் தாகூரிடம் கொடுத்து ஆசி பெற்றவர் சி.வி. அவர்கள்.

‘ஸ்ரீரவீந்திரருடைய புத்தகங்கள் பலப் பல இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. ஆனால், தமிழில் ஒரு சில சிறுகதைகளும் இரண்டு, மூன்று நவீனங்களும் வெளிவந்திருக்கின்றன. அவருடைய மேன்மையின் முக்கிய அம்சமாகிய அவருடைய காவியங்களைப் பற்றித் தமிழில் ஒன்றுமே கிடையாது. இந்தக் குறைக்குத் தமிழர்கள் எப்போது நிவர்த்தி பெறப் போகிறார்களோ? நாம் அறியோம்.’ என்று எழுதினார் கு.ப. ராஜகோபாலன் (சக்தி, ஜூலை 1940)

‘இலங்கையில் சிங்கள மொழியில் அவரது கீதாஞ்சலி, கிரெசெண்ட் மூன், நவ்க தூபி, கரே பாயிரே, போஸ்ட் ஆபீஸ், நாதிர் பூஜா, சண்டாளிகா, சதுரங்கா, கோரா, சோக்கேர் பாலி, சேஷேர் கவிதா, செலெ பாலா, சாருலதா ஆகிய நூல்களோடு அவரது சிறுகதைத் தொகுப்புகளும் பலமுறை வெளியாகியுள்ளன. அதைப்போன்றே அவரது வாழ்க்கை வரலாற்று நூல்களும் 1947, 1968, 2001 மற்றும் 2008-ம் ஆண்டுகளில் சிங்கள மொழியில் வெளியாயின’ என்று வங்க மொழிப் புலமை மிக்க வீ.பா. கணேசன் எழுதுகிறார்.

கொழும்பில் சிங்களக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மத்தியில் தாகூர் பிரபல்யம் பெற்றிருந்த அளவு, யாழ்ப்பாணத்தில் அவர் நன்கு அறியப்பட்டவராக இருந்திருக்கவில்லை என்

பதை, யாழ்ப்பாணத்தில் அவரது இசைநாடக நிகழ்விற்கு மண்டபத்தில் மிகக் குறைந்த அளவு மக்களே வந்திருந்தமையைச் சுட்டிக் காட்டுகிறார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் பிக்னல் பாதிரியார். (Rev.Dr. John Bicknell)

ஆயினும், யாழ்ப்பாணத்தில் தாகூரின் செல்வாக்கு புலமையாளர் மத்தியில் இருந்திருக்கிறது. மரபிலிருந்து மேலெழும் யாழ்ப்பாண, குறிப்பாக ஈழத்து நவீன இலக்கிய புலமைப் பாரம்பரியத்தில் தாகூர் தனது கவிதாமேதைமையால் உள்வாங்கப்பட்டிருக்கிறார். ஈழத்தின் முதலாவது நவீன இலக்கியச் சங்கமாகிய மறுமலர்ச்சிச் சங்கம் வெளியிட்ட, 'மறுமலர்ச்சி' இதழ், தாகூர் ஈழத்து எழுத்தாளர்கள் மீது செலுத்தியிருந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கிறது. பாரதியாரதும் தாகூரதும் கருத்தியலின் பிரதிபலிப்பை மறுமலர்ச்சி இதழ்களில் வெளியான படைப்புகளில் காண முடிகிறது. சுவாமி விபுலானந்த அடிகள் தாகூரின் படைப்பொன்றை மொழிபெயர்த்து, 'பூஞ்சோலைக்காவலன்' என்ற பெயரில் மறுமலர்ச்சி இதழில் தொடர்ச்சியாக வெளியிட்டிருந்தார். தாகூர் பற்றிய பல பதிவுகள் மறுமலர்ச்சி இதழ்களில் வெளியாகின. சோமசுந்தரப் புலவரது புதல்வர் சோ. நடராசன் அவர்கள் தாகூரின் கீதாஞ்சலியை முழுமையாக மொழிபெயர்த்திருந்தார். திரு. பூ. சோதிநாதன் அவர்கள் கீதாஞ்சலியை அறுசீர் விருத்த யாப்பில் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இன்னும், தாகூரின் இறுதி வெளிநாட்டுப் பயணமே யாழ்ப்பாணத்திற்குரியதாக இருந்ததும் சிறப்பிற்குரியது.



மலையகத்தில் தாகூர் ஆழ்ந்த பாதிப்பைச் செலுத்தியிருந்தார் என்பதற்கு சி.வி. வேலுப்பிள்ளை, சிவபாக்கியம் குமாரவேல், பரமஹம்சதாசன் போன்றோரின் படைப்புகள் சான்றாக விருக்கின்றன.

ரி.எல்.ஆர். சந்திரன், M.A., I.C.S. அவர்களின் முன்னுரையோடு கூடியது என்று முன் அட்டைக் குறிப்போடு, சி.வி. 'விஸ்மாஜினி' என்ற தமது நூலை வெளியிட்டுள்ளார்.

நான்கு வசனங்களோடு முடிகின்ற இந்த முன்னுரையில், 'நாடகத்தின் உணர்ச்சி வெளிப்பாட்டின் திறத்தினால் மட்டு மல்ல, அதன் மொழியாளுகையாலும் நான் ஈர்க்கப்பட்டேன்' என்கிறார் சந்திரன்.

சி.வி. அவர்களால் இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, முன்னுரை பெற்ற இந்த ரி.எல்.ஆர். சந்திரன் யார் ?

இலங்கையில் வாழும் இந்தியத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, 'இந்திய அரசாங்கத்தின் இலங்கை ஏஜெண்ட்' (The Agent of the Government of India in Ceylon) என்ற அமைப்பை,1923-ல் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இந்திய அரசு உருவாக்கியிருந்தது. இந்திய அரசு கடல் கடந்த நாடுகளில் உருவாக்கியிருந்த மிகப் பழமை வாய்ந்த இந்திய அரசு அலுவலகமாக இந்த ஏஜென்ட் நிர்வாகம் அமைந்திருந்தது. 2023-ல் இந்தியத் துணைத் தூதரகம் இந்த அமைப்பின் நூற்றாண்டு நிறைவினைக் கண்டியில் கொண்டாடியது. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கை வருகையின் 200 ஆண்டு நிறைவு நினைவு கூரப்பட்ட ஆண்டில் (2023), இந்த ஏஜென்ட் அமைப்பின் நூற்றாண்டும் நினைவு கூரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1923, ஒக்ரோபர் முதலாம் திகதி இலங்கைக்கான முதல் இந்திய ஏஜென்ட் ஆக சுப்ரமணியம் ரங்கநாதன் நியமிக்கப்பட்டார். 1948-ல் அந்த அமைப்பு இந்திய அரசின் விசா அலுவலமாக (Visa Office of Government of India) மாற்றப்படும் வரை, ஆளுமைமிக்க ராஜதந்திரிகள் பலர் இந்தப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 1930-ல் இப்பதவியில் அமர்ந்த கே.பி.எஸ். மேனன், சுதந்திர இந்தியாவின் முதல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றவர். சோவியத் தலைவர் ஸ்டாலினை இறுதியாகத் தனிப்பட்டமுறையில் சந்தித்த பெருந் தருணம் மேனனுக்கே கிடைத்திருந்தது. அவரின் 'மாஸ்கோ டயரி' (1952) தமிழில் நிறைய வாசிக்கப்பட்ட நூலாகும்.

1933-ல் கே.பி.எஸ். மேனனுக்கு அடுத்து அந்தப் பதவிக்கு நியமனம் பெற்றவர் ரி.எல்.ஆர். சந்திரன். 1922-ம் ஆண்டின் இந்தியர்களின் குடியகல்வுச் சட்ட விதிகள் எவ்வாறு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது பற்றி ரி.எல்.ஆர். சந்திரன் அவர்கள் கண்டியிலிருந்து இந்திய அரசுக்கு அனுப்பிய ஆண்டறிக்கைகள், முப்பதுகளில் இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலவரங்கள் குறித்த அற்புதமான ஆவணங்களாகும்.

'தொழிலாளர் நல அமைச்சர் பெரி. சுந்தரம் அவர்களுக்கு மக்கள் மத்தியில் பெருமதிப்பு காணப்படுவதுடன், எந்தச் சமரசத்திற்கும் இடங்கொடாத நேர்மைப் பண்பும் அவரிடம் குடிகொண்டுள்ளது. இந்தியத் தொழிலாளர்களின் நிலைமை பற்

றிய பூரணமான அறிவும், தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காக மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துத் தொழிலாளர்களுக்குமாகப் போராடும் இலட்சியமும் கொண்டவராகவும் அவர் திகழ்கிறார்' என்று ரி.எல்.ஆர். சந்திரன் கூறுகிறார். திவான் பகதூர் ஐ.எக்ஸ். பெரேரா, எஸ்.பி. வைத்திலிங்கம், இலங்கை-இந்தியர் சங்கத்தின் செயலாளர் ஜி.ஆர். மோத்தா ஆகியோரின் சேவைகளையும் சந்திரன் அவர்கள் பாராட்டியிருக்கிறார்.

இந்திய ஏஜெண்ட் பதவிக்குப் பின், இந்தியாவுக்குத் திரும்பிய சந்திரன், சி. ராஜகோபாலாச்சாரியாரின் ஆட்சிக்காலத்தில் மதுவிலக்குப் பிரிவின் முதன்மை விசேட அதிகாரியாக




நியமிக்கப்பட்டார் என்பது அவரது ஒழுக்கத்திற்கும் நேர்மைக்கும் சான்று பகர்வதாகும். இரண்டாம் உலகப் போரின்போது, அவர் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே மறைந்தமைக்காக, சேலத்தில் அவர் தியாகிகள் வரிசையில் கௌரவிக்கப்பட்டார்.

ரவீந்திரநாத் தாகூரைத் தமது குருதேவர் என்றே குறிப்பிட்ட சி.வி. என்ற இளங்கவி, வாழ்வெங்கும் நிலைபெற்றுத் தொடரும் தாகூரின் இன்னிசை, தம்மிலே திட நம்பிக்கையை ஊட்டி, ஒளிமயமான எதிர்காலக் கனவினை வழங்கி, தூய மன நிறைவைத் தந்து தன்னைச் செழுமையுறச் செய்தது என்று நெகிழ்ந்து போகிறார். தமது பூங்காவில் மலர்ந்த காட்டுப் பூவைக் கனன்றெழும் பூரண அர்ப்பணிப்புடன் படையலிடுவதாகத் தமது முதல் இலக்கியப் படைப்பைத் தாகூருக்குச் சமர்ப்பணம் செய்கிறார் சி.வி.

'தாகூர் உலகக்கவிஞர், பிரபஞ்சத்திற்கு உரிய மேதை. கடந்த அரை நூற்றாண்டில் தாகூரைப் போன்று எந்தக் கவிஞனும் சரி அல்லது எழுத்தாளனும் சரி, மனிதனது சிந்தனையை, அவனது வாழ்க்கையை ஆட்சி செய்தது கிடையாது' என்று சி.வி. எழுதினார்.

'உலகக் கவிஞர்' என்ற தலைப்பிட்டு, வீரகேசரியில் (7.5.1961) சி.வி. அவர்கள் தாகூர் பற்றி எழுதிய கட்டுரை, சி.வி.யை அணுகுவதற்குச் சிறந்த திறவுகோலாக அமைகிறது.

அக்கட்டுரையில் சி.வி. எழுதியிருப்பதைச் சற்று விரிவாகவே நோக்கலாம்.

'ரவீந்திரநாத் தாகூர் இசைப்பண்பு நிறைந்த கவித்துவத்தின் காரணமாக கதே(Goethe)யாகவும், இலக்கியத்தின் பல துறைகளில் சிறப்பான படைப்புகளை மேற்கொண்ட திறமையால் லியோனார்டோ டா வின்சி (Leonardo da Vinci)யாகவும் சமீபகாலத்திலிருந்து மதிப்பிடப்பட்டிருக்கிறார். விஸ்வபாரதியில் கிழக்கும் மேற்கும் இணைந்துள்ளன. தக்ஷசீலம், நாளந்தா பல்கலைக்கழகங்களைப் பின்பற்றி, முற்காலத்திய தபோவனத்தை இந்த நவீன கால உலகத்திற்கு அளித்த பெருமை தாகூரைச் சேரும். 'தமது கவிதாமேதாவிலாசத்தாலும், வாழ்க்கையின் தூய தனித் தன்மையினாலும் உலகத்தின் கணிப்பில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்திவிட்டவர்' என்று அண்ணல் காந்தி அடிகள் தாகூரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

உலகத்தின் பொறுக்கி எடுத்த நூறு பெரியார்களில் தாகூரைப்பற்றிப் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கிறது:

அவர் வெறும் பாட்டுப் புலவன் மாத்திரம் அல்லர். அவருடைய கண்ணியப் போக்கும், உயிர்க்கும் உண்மை உள்ளமும், இந்தியாவின் விடுதலைப்போரின்போது உலக மக்களது அனுதாபத்தைப் பெற்றுத்தரப் பெரிதும் உதவின.

ஆங்கில மேதை ஷேக்ஸ்பியர், மகாகவி காளிதாசன், கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஆகியோரின் பாரம்பரியத்தில் வந்த கவிஞர்தான் தாகூர். ஆம், தாகூரை முழுமையாக நோக்கித்தான் இதை நாம் கூறுகிறோம். அவரது சிருஷ்டியின் மேதாவிலாசத்தையும் அவரது ஆளுமையயும் சேர்த்து நோக்கும்போது இது தெரியவரும்.

'அவரது எழுத்தோவியங்கள் யாவற்றிலும் இந்தியக் கவிதைச் செல்வங்களுக்கே உரித்தான ஜீவப்பசையும் சாரமும் புத்துயிர் பெற்றுச் சுவாசிப்பதைக் காணலாம். தாகூர் ஒரு புது வியாக்யான கர்த்தாவாக, மிகப் பழமையான பிதிரார்-ஜித செல்வத்தின் உறுதியான சின்னமாகப் பிரகாசித்தார். தாகூரின் கவிதைகளில் மகாகவி காளிதாசனின் 'பருவ காலங்'(Seasons)களில் சர்வசாதாரணமாகக் காணப்படும் பிரமாதமான வர்ணனைகளோ, ஷேக்ஸ்பியரின் 'கிங் லீயரி'ல் (KIng Lear) இருக்கும் பெருவிறுவிறுப்போ, எலியட்டின் 'உவேஸ்ற்லான்ட்' (Waste Land)இல் இருப்பதைப்போன்ற

குறிப்புகளினால் தெரிவிக்கும் முறையோ இல்லையென்பது நமக்குத் தெரியும். தாகூரின் கவிதைகள் கீழ்த்திசை நாடுகளுக்குப் புதியனவையல்ல. அவர் தமது கவிதைத் திறமையால் வேத சுலோகங்களின் அமரத்துவம் வாய்ந்த பாடல்களின் சாரத்தை வடித்தெடுத்துத் தமது மேதாவிலாசத்துடன் இரண்டறக் கலந்து ஒளி ஏற்றியேவிட்டார்.

தாகூரின் கீதாஞ்சலியும் அவரது பல கவிதைகளும் தேவாரத்தைப் போன்ற பக்திப் பாடல்களே. அவை ஆத்மாவை உருக்கும் முறையில் அமைந்தவை. இங்கிலாந்து தேவாலயங்களில்கூட 'கீதாஞ்சலி' இசைக்கப்பட்டிருக்கிறது. 'வளர்பிறை' (The Crescent Moon), 'தோட்டக்காரன்' (The Gardener), 'கனி சேர்த்தல்' (Fruit-Gathering), கபீர்தாஸரின் பக்திமயமான நூறு பாடல்கள் (Songs of Kabir) ஆகியன இயற்கையான இசை நயமும், பக்திப்பண்பும் நிறைந்தவை. இத்தகைய சிறப்பு அம்சங்களை அவரது காதலின் படைப்புகளிலும் காணமுடியும். தமிழ் நாட்டின் நாயன்மார், ஆழ்வார்கள் போன்ற பக்த-பாவலர்களைப்போல, வங்கத்திலே சதா சுற்றிக்கொண்டிருக்கும் 'பவுல்' (Baul) என்னும் பக்தர்களாக்கிய பாடல்களின் இசைப்பண்பும், ஆரோகண-அவரோகண முறையும் தாகூரின் கீதாஞ்சலியில் இருப்பதைக் காணலாம். - இந்த நீண்ட வாசகங்கள் சி.வி. அவர்கள் தாகூரை எவ்வாறு மதித்துப் போற்றியிருக்கிறார் என்பதனை உணர்த்தும்.

உபநிடதங்களும் புத்தர் போதனைகளும் தமது படைப்புகளில் ஊடும் பாவுமாக இணைந்திருப்பதைத் தாகூர் ஏற்றுக்கொண்டுள்ளார். 'என் சொந்த வாழ்விலும் எனது பிரசங்கங்களிலும் அவற்றைக் கைக்கொண்டிருக்கிறேன்' என்று தாகூர் கூறியிருக்கிறார். 'பழம்பெரும் இந்திய ஞானத்தை நவீன உலகின் தேவைக்கேற்ப வார்த்தெடுத்ததுதான் தாகூரின் படைப்புகள்' என்று ஒரு சிந்தனைப் பள்ளி வலியுறுத்துகிறது.

'இந்தியாவின் பழமைதான் தாகூரின் இலட்சியவாதம் என்றும், அவரது தத்துவசாரம் முழுமையான இந்தியத்தன்மை கொண்டது' என்றும், எஸ். ராதாகிருஷ்ணன் 'ரவீந்திரநாத் தாகூரின் தத்துவம்' (The Philosophy of Rabindranath Tagore, 1918) மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நெருக்கமான உறவைத் தாகூர் போல வலியுறுத்திய ஒரு கவிஞன் இல்லை எனலாம்.' இந்தப் பூமி, நீர், ஒளி, கனிகள், மலர்கள் அனைத்துமே வெறுமனே பௌதிகப் பொருட்களாகப் பயன்படுத்திவிட்டு, வீசியெறிந்துவிட்டுப் போகிற பொருட்கள் அல்ல. இலட்சிய பூர்வமான பூரணத்துவத்தை அடைந்துகொள்வதற்கு இவை மிக அவசியமானவை'.

'உன் ஜன்னலுக்கு அருகே பிரபஞ்சம், வானம், விண்மீன்களின் கூட்டம், தட்டு நிறைய விளையாட்டுப் பொருட்கள் போல வந்து நிற்கின்றன' என்று 'கனி கொய்தல்' கவிதையில் பேசுகிறார் தாகூர்.

'இயற்கையின் மோனத்தில், ஆழ்ந்த அமைதியின் ஏகாந்தத்தில் மனித மனம் தன்னை இழந்து, தெய்வீக அருட்கிளர்ச்சியில் திளைக்கிறது 'என்ற தாகூரின் விளக்கத்தை 'கனி கொய்தல்' தருகிறது என்கிறார் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன். அன்றாடம் கேட்கும் கூச்சல் நிறைந்த உலகத்திலிருந்து விலகி நின்று, இயற்கையின் உன்னதங்களை அனுபவிக்கும் மனம் பற்றித் தாகூர் பேசுவதை எஸ். ராதாகிருஷ்ணன் எடுத்துக் காட்டுகிறார்.

பிரபஞ்சத்தைக் கடவுளின் வடிவமாகத் தாகூர் பார்க்கிறார். வானம் நமது கலைக்கூடம் என்கிறார் அவர்.

'வலி உணர்தல் இல்லாமல் அன்பில்லை என்கிற கருத்துத் தாகூரிடம் இருந்தது. பெரும் துயரங்களும் கீழ்மைப்படுத்தல் என்கிற அவமானங்களுக்கு உள்ளாவதும் ஒருவரை முழுமைப்படுத்துகின்றன என்றார் தாகூர்' என்கிறார், ஆர். பட்டாபிராமன் (நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள், 2018).

'வலியும் அலைக்கழிப்பும் நமது ஆத்மாவைத் தூய்மைப்படுத்துகின்றன. உலைக்களத்தில் வார்க்கப்படும் உலோகம் தான் பிரகாசமாக மின்னிக்கொண்டிருக்கிறது' என்கிறார் தாகூர். வதைபட்டுத் துயருறுவதன் மூலமே நம்மை அழுத்தும் சுமையிலிருந்து நாம் விடுதலை பெறமுடியும் என்பது தாகூரின் கருத்தாக இருந்தது.

'விஸ்மாஜினி' என்ற இந்த நாடகத்தின் முதற் காட்சி துறவி சந்திரவர்மன் என்ற கதாபாத்திரம் பாடிக்கொண்டிருப்பதாக அறிமுகமாகிறது. இப்பாடலைத் தமிழில் மொழிபெயர்த்து, தமிழறிஞரும் மொழிபெயர்ப்பாளருமாகிய செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்களின் பார்வைக்கு நான் அனுப்பியிருந்தேன். சைவ சித்தாந்தத்தில் தோய்ந்த, தமிழகத்தின் செம்மொழி மத்திய ஆய்வு நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்கிக் கலித்தொகை, பதிற்றுப்பத்து ஆகிய சங்க இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த, London School of Economics கல்விக்கூடத்தில் LLM பயின்ற சட்ட வல்லுநரான அவர், என் மொழியாக்கத்தையும் ஆங்கில மூலப்பிரதியையும் நுணுகி ஆய்ந்து, துறவி சந்திரவர்மன் முதற் காட்சியில் பாடும் பாடலானது மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் 'நீத்தல் விண்ணப்பம்' பகுதியில் வரும் முதல் இரண்டு பாடல்களின் மொழிபெயர்ப்பு என்பதனை எனக்குணர்த்தினார்.

சி.வி. அவர்களின் நாடகத்தில் முதற் பாடலின் ஒன்பது வரிகள் 'கடையவனேனைக் கருணையினால்...' என்று ஆரம்பமாகும் திருவாசகத்தின் நீத்தல் விண்ணப்பத்தின் முதலாவது பாடலின் ஆங்கில மொழியாக்கம். அதன்பின் தொடரும் எட்டு வரிகளும் நீத்தல் விண்ணப்பத்தின் இரண்டாவது பாடலான, 'கொள்ளேர்பிளவு அகலாத் தடம்...' என்ற பாடலின் ஆங்கில மொழியாக்கமாகும். இந்த இரண்டு திருவாசகப் பாடல்களும் சி.வி.-யின் கவித்துவ ஆங்கிலத்தில் பொலிந்திருக்கின்றன.

'நீத்தல் விண்ணப்பத்தில் வரும் ஐம்பது பாடல்களிலும் 'என்னை விட்டு விடாதே' என்ற ஒரே கருத்து மீண்டும் மீண்டும் பேசப்படுகிறது. நீத்தல் என்ற செயல் இப்பொழுது இறைவனைப் பற்றியதாகும். அடிகளாரை வேண்டாமென்று நீத்தல் செய்யும் ஆற்றலுடையவன், தலைவனாகிய அவன் ஒருவனே ஆவான். ஆதலின், தாம் எவ்வாறு இருப்பினும் தம்மைக் கைவிட்டுவிடவேண்டாம் என்று விண்ணப்பம் செய்கிறார்' என்றெழுதுகிறார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்.

'தாகூரின் கீதாஞ்சலியும் அவரது பல கவிதைகளும் தேவாரத்தைப் போன்ற பக்திப் பாடல்களே' என்று சி.வி. தாகூர் பற்றி எழுதுகையில் குறிக்கிறார். எவ்வாறு உபநிஷதங்களிலும் பகவத்கீதையிலும் தாகூர் ஆத்ம தரிசனம் பெற்றாரோ, அதே போன்று சி.வி. அவர்களும் நாயன்மார்கள், ஆழ்வார்

கள் போன்ற பக்த-பாவலர்களில் ஆத்ம தரிசனம் பெறுகிறார். 'சி.வி. தாகூர் வயப்பட்டதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை' என்று சாரல்நாடன் சரியாகவே கணித்திருக்கிறார். தாகூரின் இறை நோக்கிய பாடல்கள், சி.வி.-யின் கவியுள்ளத்தில் சுவறியிருக்கின்றன. சி.வி. தமது நாடகத்தின் முதல் காட்சியில், 'நற்கறுப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்த' திருவாசகப் பதிகத்தை மிகப் பொருத்தமாகவே இணைத்திருக்கிறார்.

'விஸ்மாஜினி' நாடகம் வடக்கே வாரணாசியில் பொ.ஆ.பி. 1780-ல் நிகழ்கிறது. 1775-ம் ஆண்டில் வாரணாசி பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டில் வீழ்கிறது. இந்த நாடகத்தில் ஆங்கிலக் கதாபாத்திரங்கள் வந்து போவதையும் காணலாம்.

'விஸ்வமாஜினி' என்ற ஓரங்க நாடகம் மூன்று காட்சிகளைக் கொண்டது. இந்த நாடகத்தில் முக்கியமான கதாபாத்திரங்கள் நால்வர். சந்திரவர்மன் என்னும் துறவி, அவரது மகள் விஸ்மாஜினி, இளவரசர் விஸ்வபதி, சோமசன்மன் ஆகியோர். இவர்களில் சோமசன்மன் ஆரம்பத்தில் ஆட்டிடையனாகத் தோன்றி, பின்னர் அவரே இளவரசர் விஸ்வபதியின் சகோதரன் இளவரசர் சோமசாமாவாகக் காட்டப்படுகிறார்.

மன்னாதி மன்னனாக இருந்த சந்திரவர்மன் இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன் தமது ராஜ்யத்தைத் துறந்து, தமது மனைவியையும் இழந்து, வாரணாசியின் அடர்காட்டில் தஞ்சம் புகுந்து, துறவு வாழ்க்கை பூண்கிறார். இருபத்தி இரண்டு வயதான தன் மகள் விஸ்மாஜினியை அந்த வனப்பிராந்தியத்திலேயே வளர்த்து வருகிறார். முதல் காட்சியில் துறவி சந்திரவர்மன் தனது கடந்துபோன வாழ்க்கையைத் தனது மகள் விஸ்வமாஜினியிடம் முதல் தடவையாக விபரிக்கிறார். தந்தைக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் வாழ்க்கை குறித்த விசாரமாகவும் அமைகிறது. கடவுள் இயற்கைக்கூடாகவே தன்னை வெளிப்படுத்துவதாகக் கருதும் தாகூரின் தத்துவச் சாயல் இந்த முதல் காட்சியில் வெளிப்படுகிறது.

கனவுகளின் மூலம் மண்ணகம் விண்ணுலகத்தைப் படைத்திட, காலம் காலமாக வானகம் தன்னை வெறுமையாக வைத்திருக்கிறது என்று கவிதை இசைத்தார் தாகூர். காது கொடுத்துக் கேட்கும் மேலுலகிடம் பேசுவதற்கு நிலம் எடுத்துக்கொள்ளும் எண்ணற்ற முயற்சிகளே மரங்கள் என்று தாகூர் நோக்கினார். விண்மீன்களை எட்டிப் பிடிக்கத் தங்கள் கைகளை உயர்த்தும் குழந்தைகளின் ஆர்வத்தைப் போன்றன மலைக் குன்றுகள் என்று மலைச் சிகரங்களை வர்ணித்தார் தாகூர்.

சி.வி. அவர்கள் பச்சைப் பசுங்காடுகளை, கனிமரங்களை, காட்டுவழிப் பாதைகளை, அங்கு உலாவும் மான்களை, மரைகளை, முயல்களை வெள்ளாடுகளை, வண்டுகளின் இடையறாத ரீங்காரத்தை, இடையனின் பாடலை மோகித்து எழுதும் இடங்களில் கவித்துவம் பளிச்சிடுகிறது.

முதலாவது காட்சியில் தமது கடந்த கால வாழ்க்கைப் புதிரை மகளிடம் அவிழ்க்கும் தந்தையைக் காண்கிறோம். இரண்டாவது காட்சியில் விஸ்மாஜினியின் வாழ்வில் அவளை அலைக்கழித்துக்கொண்டிருக்கும் புதிர் விரிகிறது. விஸ்மாஜினி கனவில் ஓர் இளம் இடையன் தன்னை அணைத்துத் தன் காதலை வெளிப்படுத்திய இடத்தை விபரிக்கும் இடத்தில் ஒரு முடிச்சு விழுகிறது. அக்கனவை அவள் நனவென்றே கருதி, வதையுறுகிறாள். அவமானத்துக்குள்ளாக்கப்பட்டதாகக் கருதி உலைகிறாள். அதனை அவள் கனவெனக் கருதவில்லை.

தாகூரின் 'இருண்ட அரண்மனை அரசன் '(The King of the Dark Chamber, 1914) என்ற புகழ் மிக்க நாடகத்தில் விகாரமான ஓர் அரசன் புற உலகிலிருந்து தன்னை முற்றாகத் தனிமைப்படுத்திக்கொண்டு, இருண்ட தன் அரண்மனையில், பிரஜைகள் யாரினதும் கண்களுக்குத் தெரியாமல் வாழ்வதாகக் கட்டமைக்கப்படுகிறது.

அரசனின் மனைவி சுதர்சனாவிற்கும் அரசன் தெரிவதில்லை. தனது சேவகி சுரங்கமாவிடம் 'நீ எப்படி அரசரைக் கண்டு கொள்கிறாய்?' என்று கேட்கிறாள். 'அவருடைய காலடி ஓசையை என் இதயத்தில் கேட்கிறேன். இந்த இருண்ட அரண்மனையில் நீண்ட காலம் பணிப்பெண்ணாகச் சேவையாற்றி வருவதால், அவரைக் காணாமலேயே என்னால் அவரை அறியவும் உணரவும் கூடிய உணர்வினை நான் வளர்த்து வந்திருக்கிறேன்' என்கிறாள் சுரங்கமா.

விஸ்மாஜினி கனவில் கண்டு அனுபவித்த காதலனைக் கானகத்தில் நள்ளிருளில் தேடி அலைந்து, அவனை அடைவதாகக் கதை நீள்கிறது.

'என்னைக் கைவிட்டுவிடாதே' என்று இறைவனைத் தேடி அலைதலில் ஆரம்பமாகும் இந்த நாடகத்தில், விஸ்மாஜினி அடர் காட்டில் அழுது புலம்பியவாறு தனது காதலனைத் தேடி அலைகிறாள். 'என்னருமைக் காதலரே! உங்களை நான் சந்திப்பது சாத்தியமா? என் தலைவா! என்று நான் உங்களை அழைக்கும்போது, இயற்கையே அடங்கிய ஆச்சரியத்துடன் அதனைச் செவிமடுத்து, தன் மோசமான முணுமுணுப்புகளை ஓசையடக்கி முறுமுறுக்கும்போது, நீங்கள் மட்டும் செவி சாய்க்காமல் இருக்கிறீர்கள்' என்று விஸ்மாஜினி 'என்னைக் கைவிட்டு விடாதே' என்று ஏங்குகிறாள்.

தனது கனவுலகுக் காதலனை அடர்காட்டில் கண்டுவிடும் போது, மகிழ்ச்சி மிகுதியில், 'என்னை உங்கள் கைகளால் தாங்கிப் பிடியுங்கள். அல்லாவிடில் நான் விழுந்து விடுவேன்' என்கிறாள்.

சி.வி. தமது நாடகத்தின் முதலில் இசைத்திருக்கும் நீத்தார் விண்ணப்பப் பாடலில், 'தளர்ந்தேன், எம் பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே' என்ற அடிகளைக் காண்கிறோம்.

'நான் உன்னுடைய தொண்டனாகவே உள்ளேன். உன்னை விட்டு நான் அகலவில்லை' என்று நீத்தார் விண்ணப்பத்தில் எழுங்குரலின் எதிரொலியை விஸ்மாஜினியிலும் கேட்கிறோம்.

மனிதரில் தெய்வீகத்தையும், தெய்வத்தில் மனிதத்துவத்தையும் வலியுறுத்திய தாகூரின் இறைக்கோட்பாட்டில் சி.வி. நம்பிக்கை கொண்டிருப்பதை 'விஸ்மாஜினி' கவித்துவத்தில் இசைத்திருக்கிறது.



nithiyananthan.m@thaiveedu.com

# ஏடகரும் ஊடகரும்

– செல்வத்தம்பி சிறீக்கந்தராசா



‘The journalists’, ‘The Media’ ஆகிய ஆங்கிலத் தொடர்களுக்கு, ‘ஏடகர்கள்’, ‘ஊடகர்கள்’ என்ற தமிழ்த் தொடர்கள் முறையே பொருந்துமா என்று பல சந்தர்ப்பங்களில் கேள்விகள் எழுகின்றன. அவை பற்றிச் சிந்திப்பது பயனுடையது என்று கருதுகிறேன். முதலில் மேற்படி ஆங்கிலத் தொடர்கள் பற்றி ஆராயலாம்.

Journal என்ற தொடரோடு சம்பந்தப்பட்டவைதான் Journalism, Journalist, Journals ஆகிய தொடர்கள். Journal என்ற தொடர், diurnalis என்ற இலத்தீன் மூலத்திலிருந்து பிறந்த ஆங்கிலச் சொல். Diurnal என்று ஓர் ஆங்கிலச் சொல்லும் உண்டு. இதன் பொருள் daily என்பது. ஒவ்வொரு நாளும் வெளியிடப்படுகின்ற ஓர் ஏட்டுக்கு Daily என்பது, பிற்காலத்தில் பெயராயிற்று. ஒவ்வொரு நாளும் எழுதப்படுகின்ற அல்லது குறித்துவைக்கப்படுகின்ற எழுத்துகளை அல்லது குறிப்புகளைக்கொண்ட புத்தகத்தினைக் குறிப்பிடுவதற்குத் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த journal என்ற சொல், பிற்காலத்தில் நாளாந்திரச் செய்திகளை அல்லது வாரச் செய்திகளை அல்லது மாதச் செய்திகளைத் தாங்கிவந்த ஏடுகளுக்கும் பிற்காலத்தில் பெயராயிற்று என்பது வரலாறு.

இங்கிலாந்திலே அச்சியந்திரம் வந்ததன் பின்னர், அதாவது 1471-ம் ஆண்டிற்குப் பின்னர், அச்சியந்திரம் அல்லது அழுத்தியந்திரம் அமைந்திருக்கின்ற இடமும் Press என அழைக்கப்படலாயிற்று. காலப்போக்கில், அழுத்தியந்திரம் அமைந்திருக்கிற இடத்தைக் குறித்துவந்த சொல், அந்த அழுத்தகத்தில் அச்சிடப்படுகின்ற செய்திகளை மட்டுமல்லாமல் அத்தகைய செய்திகளை எழுதுகின்றவர்களையும் குறிக்கின்ற ஒரு சொல்லாக மாறிவிட்டது. அதாவது, இன்று ஏடகர்களும் (Journalists), Press என்ற சொல்லால் சுட்டப்படுகின்றார்கள். ஆகவே ஏடகர்களை அழுத்தகர்கள் என்று கூறினும் பொருந்தும் என்று நினைக்கிறேன். ஆனால், இன்று ஏடகர்களை / அழுத்தகர்களைப் பத்திரிகையாளர்கள் என்று அழைக்கின்ற பழக்கமொன்று வழக்கத்துக்கு வந்துவிட்டது. அந்த வழக்கத்தை மாற்றவேண்டுமா என்பது கேள்வி.

விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இன்று, செய்திப் பரிமாற்றங்களைச் செய்யும் சாதனங்களையும் பரிமாற்றம் செய்வோரையும் குறிக்க Media என்ற சொல் ஆட்சிக்கு வந்திருக்கிறது. இது Medium என்ற சொல்லின் பன்மை. Media என்ற சொல் Mass Media என்ற வேறொரு சொல்லையும் ஈன்றிருக்கிறது.



பெருந்தொகையினரான மக்கள் பலவிதமான செய்திகளையும் களியாட்டுக்காட்சிகளையும் பேச்சுக்களையும் கேட்டு மகிழ்வதற்கும் அறிவதற்கும் சாதனமாக அமைகின்ற வழிவாய்க்காலுக்கு media என்பது பெயர். தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், கணினி, இணையம் ஆகியவற்றைத் தொழிற்படுத்திச் செய்திப் பரிவர்த்தனை செய்வோர் Media என்ற சொல்லுள் அடங்கும்.

Media என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக ஊடகம், ஊடகர் என்ற சொற்கள் வழங்கி வருகின்றன. எதனூடாக /எவற்றினூடாகச் செய்திகளும் செய்திகளோடு சம்பந்தப்பட்டவையும் பெருவாரியான மக்களை வந்தடைகின்றனவோ அவற்றை ஊடகம் என்ற சொல்லால் குறிப்பது மிகவும்




PRESS ROOM

பொருந்தும். அந்த ஊடகங்களில் பணிபுரிந்து, செய்திப் பரம்பல் செய்கின்றவர்களை ஊடகர் என்று சுட்டுவதும் பொருத்தமானதே.

ஊடு என்ற தமிழ்ச் சொல் பொருள் செறிந்த சொல். ஊடாட்டம், ஊடாடுதல், ஊடு செல்லுதல், ஊடறுத்தல், ஊடுருவுதல், ஊடுபற்றுதல், ஊடுபோக்குதல் என்பன ஊடு என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்த சொற்கள். அதாவது, through என்ற பொருள்தரும் ஊடு என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த சொற்கள். ஏதோவொன்று வேறெங்கோ போய்ச் சேர்வதற்கு வழிவாய்க்காலாக இருப்பது என்ற பொருளைக் கொண்டது, ஊடு என்ற தமிழ்ச் சொல். இதே பொருளைத் தருகின்ற சொல்தான் Medium என்ற சொல்லும். Medium என்ற சொல்லை விளக்குகின்ற ஆங்கில அகராதிகள், 'a way of communicating information etc to people, such as medium of radio, medium of television' என்று குறிக்கின்றன. இந்த வகையில்தான் electronic medium, audio-medium, video medium, visual medium, print medium என்ற ஆங்கிலத் தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. எதன் ஊடாக ஒரு செய்தி இன்னொருவரைப் போய்ச் சேருகின்றதோ அதுதான் ஊடு என்பது. அந்த ஊட்டினை ஏற்படுத்தித் தருகின்ற சாதனங்களும், அந்தச் சாதனங்கள் அமைந்துள்ள இடமும் Medium / Media எனப்படுகின்றன. தமிழில் இவற்றையே ஊடகம் என்கிறோம்.

அந்த ஊடகத்தில் பணிபுரிகின்றவர்கள் எல்லோரும் ஊடகரே. அதாவது, journalists தாம். அவர்கள் புரிகின்ற தொழில் journalism. இப்படிப் பார்க்கப்போனால், சாதாரணர்களுக்கும் இறைவனுக்கும் இடையே நின்று பணிபுரிகின்ற பூசகர்களும் ஊடகர்கள்தான். ஆங்கிலத்தில், ஆவியுலகத்தில் clairvoyant என்று பெயர் சுட்டப்படுகின்றவர்களும் பூசகர் போன்ற ஊடகங்கள்தான். மேற்கூறியவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கின்றபோது, journalist என்போரைக் குறிப்பதற்கு ஏடகர் என்ற சொல்லும், Medium என்பதைக் குறிப்பதற்கு ஊடகம் என்ற சொல்லும் பொருத்தமான சொற்களாகத் தோன்றுகின்றன.

பத்திரிகைத் துறையைக் குறிக்கின்ற Press என்பதற்கு இணையான தமிழ்ச் சொல்லாக இதழியல் துறை என்பதை வைத்துக்கொள்ளலாம். Press என்ற சொல், பத்திரிகைத் துறையில் பணிபுரிவோரைக் குறிப்பதாக வரும்போது, இதழாளர் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதால் பத்திரிகைத்துறை, பத்திரிகையாளர் என்ற சொற்களை இதழியல்துறை, இதழாளர் என்ற சொற்கள் வழக்கிழக்கச் செய்யுமா என்பதும் கேள்விக்குரியதே.



sriskandarajah.s@thaiveedu.com

# ஒரு நூலின் உருவாக்கம்:
## ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்

– என். செல்வராஜா

10

கடந்த மாதப் பதிவில், ஒரு நூல் வெளியீட்டில் வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் பணி பற்றிய விரிவான கருத்துகளைப் பதிவு செய்திருந்தேன். உண்மையில் நூலியல்துறையில் வெளியீட்டாளர் என்ற பதிவும், அச்சகப் பதிவும் மிக முக்கியமானவை என்பதை நான் கூறித்தான் ஒரு படைப்பாளி அறிந்திருக்கவேண்டும் என்பதில்லை. ஒரு நூல் வெளியிட்ட சில காலங்களின் பின்னர் அந்த நூலைப் பெறவிரும்பும் ஒரு வாசகருக்கு இத்தகவல்கள் அவசியமானவை.

### வெளியீட்டாளர் பதிவு:

நூலியல் பதிவை ஒரு நுலின் வேர்சோ பக்கத்தில் பதிவுசெய்யும்போது, வெளிப்படையாக ஒரு வெளியீட்டு நிறுவகம் அதில் சம்பந்தப்பட்டிருந்தால் வெறுமனே அந்த வெளியீட்டகத்தின் பெயரை மாத்திரம் பதிவு செய்வது தவறாகும். ஈழத்து நூலியல் துறையில் நீண்டகாலமாக வெளியீட்டாளர் பற்றிய அரைகுறைக் குறிப்புகளுடனும் சிலவேளை வெளியீட்டாளர் பற்றி குறிப்புகளே இல்லாமலும் பல நூல்கள் வெளிவந்திருப்பதை நாங்கள் கண்டு வருகின்றோம். இப்பகுதியை தெளிவாக விளக்குவதற்குப் பொருத்தமாக அண்மைக் காலத்தில் வெளிவந்ததொரு சிறுவர் நூலை மாதிரிக்காக எடுத்துக் கொள்கின்றேன்.

'ஆதித்தனும் அடர்ந்த காட்டுச் சாமியாரும்' என்ற சிறுவர் நூலொன்று நிலா தமிழின்தாசன் அவர்களால் (இயற்பெயர்: மிக்கேல் அருள்மொழிராசா) எழுதப்பெற்று 'கதிரவன் கலைக் கழகம்' என்ற அமைப்பால் வெளியிடப்பட்டிருந்தது. வேர்சோ பக்கத்தில் தெளிவாக நூலின் தலைப்பு, ஆசிரியர் பெயர் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட நூலின் பதிப்புரிமைக் குறிப்பில், 'உரிமை: ஆசிரியருக்கு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நூலின் உரிமைக் குறிப்பு இடும் முறை பற்றிய திட்டவட்டமானதொரு விதிமுறையைப் பிறிதொரு இதழில் விரிவாக விபரிக்கவுள்ளதால் இங்கு தேவை கருதி ஒரு விடயத்தை மாத்திரம் பதிவுசெய்ய விரும்புகின்றேன். பதிப்புரிமை பற்றி நூலில் ஆசிரியர் தெளிவுபடுத்த வேண்டியது பதிப்புரிமை, புலமைச் சொத்துக்கள் சட்டத்தின்படி முக்கியமானதாகும். அது அச்சகத்தினரின் பணி என்று உதாசீனம் செய்துவிடலாகாது. பதிப்புரிமைக் குறிப்பினை 'ஆசிரியருக்கு' என்று மேம்போக்காகக் குறிப்பிடக்கூடாது. மேலும் ஆசிரியரின் புனைபெயரான 'நிலா தமிழின்தாசன்' என்பது அவரது புனைபெயர் மாத்திரமே. புனைபெயர்களுக்குச் சட்ட அங்கீகாரம் கிடையாது. ஆசிரியர் குறிப்பில் புனைபெயரைக் குறிப்பிடும்வேளை, அவரது இயற்பெயரையும் (இயற்பெயர்: மிக்கேல் அருள்மொழிராசா) என்று அடைப்புக்குறிக்குள் குறிப்பிட வேண்டும். பதிப்புரிமைக் குறிப்பு (உரிமை) வெளிப்படுத்தப்படும்வேளை, அங்கு புனைபெயரைத் தவிர்த்து ஆங்கிலத்தில் சரியான உச்சரிப்புடன் நூலின் உரிமையாளரின் பெயரை கீழ்க்கண்டவாறு பதிவு




செய்ய வேண்டும். அதுவும் வேர்சோ பக்கத்திலேயே அந்தப் பக்கத்தில் மாத்திரமே 12 பொயின்ட் எழுத்துக்கு மேற்படாத

வகையில் குறிப்பிடவேண்டும்.

© Copy Right 2014 by Michael Arulmolirasa
© பதிப்புரிமை 2014 மிக்கேல் அருள்மொழிராசா

பதிப்புரிமைக் குறிப்பை பதிவுசெய்யும் வேளையில் கீழ்க் கண்ட உரிமைப் பிரகடனத்தையும் அதே பக்கத்தில் குறிப் பிட வேண்டும். பதிப்புரிமைக் குறிப்பும் பிரகடனக் குறிப்பும் இருவேறு பக்கங்களில் பிரித்து வழங்கக் கூடாது. 12 பொயின்ட்




எழுத்துக்கு மேற்படாத வகையிலும் இவை அமைய வேண்டும்.

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

என்று சட்டபூர்வமாகக் குறிப்பிடப் பழகிக்கொள்ள வேண்டும். அறியாமையால் விடப்படும் தவறுகளை வெளிப்படுத்தி ஆரோக்கியமானதொரு நூலியல் பதிவினையும் அதன் பின்பு லங்களையும் எழுத்தாளர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என் பதே எனது இத்தொடரின் நோக்கமாகும். தனிப்பட்ட முறை யில் ஒருவரையும் குற்றம் காண்பதற்காகவல்ல.

மேற்படி நூலில் வெளியீடு: என்ற குறிப்பில் 'கதிரவன் கலைக் கழகம்' என்று மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் வெளியீட்டுரையை கதிரவன் த. இன்பராசா என்பவர் எழுதியி ருப்பதால், அவரே நூலின் வெளியீட்டாளர் என்று ஒரு நூலக ரால் பட்டியலாக்கத்தின்போது யூகிக்கவேண்டியேற்படுகின் றது. அவ்வெளியீட்டுரையில் காணப்படும் புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு என்ற முகவரிக் குறிப்பை வைத்து, வெளியீட்ட கத்தின் முகவரி அதுவாகவே இருக்கும் என்றும் யூகிக்க வேண்டியுள்ளது. இத்தகைய யூகங்களுக்கு ஒரு படைப்பாளி ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. நூலியல் தகவல் என்பது ஒரு நூலின் அத்தியாவசியத் தகவல் பதிவு என்பதை இக்கட் டுரைத் தொடரின் கடந்த ஒன்பது அத்தியாயங்களிலும் பெரும்பாலும் வலியுறுத்தி வந்துள்ளோம். யூகங்களின் அடிப் படையில் தவறான நூலியல் பதிவுகளைப் பதிவு செய்வதற்கு வழி ஏற்படுத்தாமல் முழுமையான நூலியல் பதிவுகளை நூலின் படைப்பாளிகள் தமது நூலில் தெளிவாக வழங்க வேண்டும்.

பெரும்பாலும் இலங்கையில் ஒரு ஆசிரியரே தன் நூலின் வெளியீட்டாளராகவும் இருப்பதால் வெளியீட்டுக் குறிப்பு என் பது எதற்கு? என்ற கேள்வியை ஒரு நூலாசிரியர் எழுப்பி அதற்கு விடையாக வெளியீட்டுத் தகவல் எதனையும் குறிப் பிட முன்வருவதில்லை. இதனைத் தவறாக அவர் 'அவைய டக்கம்' எனவும் கருதியிருக்கக்கூடும். முன்னுரையின் இறுதி யில் மாத்திரம் தனது பெயரையும் வீட்டு முகவரியையும் தரு கின்றார். இந்த முகவரியையே ஆசிரிய-வெளியீட்டாளர் தனது வெளியீட்டக முகவரியாகவும் வெளிப்படுத்துவதே முறைமை யாகும். இத்தகைய சூழலில், வெளியீட்டகம் என்பது ஆசிரிய-வெளியீட்டாளரின் பெயராக அமைந்துவிடுகின்றது.

சிலர் கற்பனையில் ஒரு பெயரைத் தெரிந்து அதனையே வெளியீட்டகமாகக் குறிப்பிடுவதுமுண்டு. அதில் தவறேதும் இல்லை. ஆனால் அந்த வெளியீட்டகத்துக்கு ஒரு முகவரி வழங்குவதை நூலின் வேர்சோ பக்கத்தில் தவிர்க்க முயல் வது தவறாகும். செங்கை ஆழியான் தனது வெளியீடுகளுக் குத் தனது துணைவியாரின் பெயரை உள்ளடக்கி 'கமலம் பதிப்பகம்' என்றே குறிப்பிடுவது வழக்கம். நெல்லை க. பேரன் தனது நூல்களின் வெளியீட்டாளராக 'சர்மிளா பதிப்ப கம்' என்று குறிப்பிட்டு வந்துள்ளார். அவரது இளைய மகளின் பெயர் சர்மிளா என்பதாகும். திரு.தம்பிஐயா தேவதாஸ் தனது நூல்களை வெளியிடும்போது 'வித்தியாதீபம்' என்ற பதிப்ப கத்தைக் குறிப்பிடுகின்றார். இவை அனைத்தும் ஆசிரிய-வெளியீட்டாளர்கள் தமது விருப்பத்துக்குரியதாகத் தேர்வு செய்த பதிப்பகங்களின் பெயர்களாகும். நூலியல் தகவல்க ளைப் பதிவுசெய்யும்போது இப்பதிப்பகங்களும் ஆசிரியரின் முகவரிகளும் முக்கியத்துவம் பெறுவதுடன் நூலின் அதிகார பூர்வ வெளியீட்டு மையங்களாகின்றன.

ஒரு நூலைக் காணும் ஒரு வாசகர் அல்லது அந்த ஆசிரிய ரின் நூல் பற்றிய ஒருசில தகவலைப் பெற்றுக்கொள்ளும் வாசகர் ஒருவர், குறித்த அந்த நூலைக் கொள்வனவு செய்ய விரும்பினால், ஆசிரியரை நேரில் அறிந்திராத அவர் யாரிடம் போய் முதலில் கேட்பார்? வெளியீட்டகத்தைத் தானே அவர் முதலில் நாடுவார்? அதனால் நூலின் பரம்பலுக்கு வெளியீட் டகத்தின் தெளிவான முகவரி அத்தியாவசியமானது. நூலைப் பரவலாக வழங்க முறையாக முன்வராதவர்கள் வெற்றிகரமா கத் தமது கருத்துக்களைப் பாரிய வாசகர் கூட்டத்தை நாடிச் சென்று பகிர்ந்துகொள்ள வழியேது?

இலங்கையில் நூலை எழுதுபவர்களில் அரச சேவையில் பணியாற்றி வருபவரிடையே ஒருவகையான 'மனப்பிராந்தி'

நீண்டகாலமாக இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்த மனப்பிராந்தியும், முழுமையான நூலியல் தகவல்களை ஒரு நூலில் விளக்கமாகப் பதிவுசெய்வதற்கு எழுத்தாளரைத் தயங்கவைக்கின்றது.

அரச சேவையில் உள்ளவர்கள் நூலொன்றை வெளியிட்டுத் தனிப்பட்ட வருவாயைப் பெறுவது தவறா என்பதை அறியேன். அது சட்டச் சிக்கல்களிலும், வருமான வரி அதிகாரிகளின் சந்தேகப் பார்வையையும் தேவையற்ற வழியில் தம்மீது ஏற்படுத்தும் என்ற அவர்களது மனப்பிராந்தி உண்மையானது என்பதை உறுதிசெய்யும் அளவுக்கு ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகச் சூழலில் இதுவரை நூலாசிரியருக்கு எதிராக எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் ஆரம்பகாலம் முதல், ஈழத்து நூலியல் சூழலில் நீண்டகாலமாக இந்தப் பயம் இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக புனைபெயரிலேயே நூல்களை எழுதுவது, தமது துணைவியாரை, பெற்றோரை பதிப்புரிமைதாரிகளாக்குவது, முக்கியமான வெளியீட்டுத் தகவல்களை மறைப்பது என்று பல வழிமுறைகளை அரச பணியிலுள்ள சில எழுத்தாளர்கள் காலம் காலமாகப் பின்பற்றி வந்திருக்கின்றார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் பிரபல்யமான ஒரு அச்சகத்தினை நான் அணுகி நூல்தேட்டத்திற்காக அவர்கள் அச்சிட்ட நூல்களின் விபரங்களைக் கோரியபோது அந்த அச்சக உரிமையாளர் பயப்பிராந்தியுடன் எனக்கு அந்தத் தகவல்களை வழங்க மறுத்து விட்டதுடன், நூல்தேட்டத்தில் தமது அச்சகத்தை குறிப்பிட்டால் எதிர்காலத்தில் வருமானவரி தொடர்பான சட்டச் சிக்கல்களைத் தான் எதிர்நோக்கவேண்டிய நிலை வரும் என்று கவலையையும் தெரிவித்தார். இதன் காரணமாக இன்றுவரை தாமாக முன்வந்து தனது அச்சகத்தில் வெளியிடப்படும் தமிழ் நூல்களின் விபரங்களை நூல் தேட்டப் பதிவுக்காகத் தருவதைத் தவிர்த்து வந்துள்ளார்.

ஒரு நூலினை வெளியிட்டாரென்ற ஒரே காரணத்திற்காக வருமானவரி அதிகாரிகள் ஒரு படைப்பாளியின் வீட்டுக் கதவைத் தட்டிக் கணக்கு வழக்கைக் கேட்டதாக இலங்கையில் வரலாறே இல்லை. மேலும், மனைவியின் பெயரை உரிமையாளராகப் பதிவுசெய்வதால் மாத்திரம் கணவர் நூலின் உரிமையாளர் தானல்லவென்பதை நிரூபிப்பது சாத்தியமில்லை. அப்படியே ஒரு குருட்டு நம்பிக்கையை ஒரு நூலாசிரியர் கொண்டிருந்தால் கூட வெளியீட்டாளராகத் தனது மனைவியை அல்லது உறவினரைக் குறிப்பிடுவதில் தவறேதும் இல்லை. ஆயினும் இலங்கை உள்ளிட்ட உலகெங்கும் ஒரு எழுத்தாளரின் புலமைச்சொத்தின் பதிப்புரிமை என்பது அவர் வாழும் காலத்தில் அவருக்கும், அவரது மறைவின் பின்னரான 70 ஆண்டுகளுக்கும் அவரது சட்டபூர்வமான Next of Kin எனப்படும் படைப்பாளியின் அடுத்த வாரிசுக்கு உரித்துடையதாகும் என சட்டத்தின் மூலம் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த உரித்தை மற்றொருவருக்கு தாரைவார்த்துக் கொடுப்பதற்கு வரையறுக்கப்பட்ட சில விதிகளுக்கமைவாக அந்த எழுத்தாளர் எழுத்துமூலம் ஒரு ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும். அது ஒரு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு ஒப்பானதாகும். வாய்வழி ஒப்பந்தங்கள் இங்கு செல்லுபடியாகாது.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், ஒருஆசிரிய-வெளியீட்டாளரின் வெளியீட்டு முகவரி விபரம், அச்சக முகவரி விபரம் என்பன நிச்சயமாகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பதே. இலங்கையில் முழுநேர தமிழ் எழுத்தாளராக இருந்து கோடிக்கணக்கில் உழைத்து வருமானவரி கட்டியதாக எவரையும் குறிப்பிடமுடியாதுள்ளது. நூல் வெளியீடு என்பது இலங்கையில் ஒரு படைப்பாளியின் ஆத்ம திருப்திக்காகவே மேற்கொள்ளப்படுகின்றதேயன்றி, வர்த்தக நோக்கோடு மேற்கொள்ளப்படும் ஒன்றல்ல. இதற்கு விதி விலக்காக, பாடசாலைக் கல்வித் திட்டங்களுக்கமைவாக மேற்கொள்ளப்படும் உப பாடநூல் வெளியீடுகள் இலாப நோக்கம் கருதியதாக இருக்கலாம்.

எதிர்காலத்தில் ஒரு இதழில் சர்வதேச தராதர எண் வழங்கல் பற்றியும் குறிப்பிட இருப்பதால் இவ்விடத்தின் தேவை கருதி இங்கும் அது தொடர்பான சில குறிப்புகளை பதிவுசெய்ய விழைகின்றேன். International Standard Book Number என்ற சர்வதேச தராதர நூல் எண் என்பதை இன்றைய ஈழத்துப் படைப்பாளிகள் அனைவரும் தெரிந்துவைத்திருப்பார்கள். இது இலங்கை தேசிய நூலகத்தால் வழங்கப்படுவது. ஒரு குறித்த நூலுக்கு கணனி மயப்படுத்தப்பட்ட கொள்வனவுத் தேவைக்காக உலகளாவியரீதியில் மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் தனித்துவமான ஒரு கூட்டு இலக்கத்தின் வழியாக (Unique Numbers) ஒரு நூலுக்கான அடையாளத்தை வழங்குவதே இதன் நோக்கம். சட்டபூர்வமாக இலங்கை மண்ணில் வெளியிடப்படும் அனைத்து நூல்களும் ஐ.எஸ்.பீ.என். (ISBN)




எனப்படும் 13 இலக்க எண்ணொன்றை வேர்சோ பக்கத்திலும், பின்னட்டையின் கீழ்ப்பகுதியிலும் 14 பொயின்ட் எழுத்துக்களுக்குக் கூடாத வகையில் குறிப்பிடவேண்டும் என்பது தேசிய நூலகத்தின் கட்டளையாகும். இவ்வெண் இடப்படாத நூல்கள் தேசிய நூலகக் கொள்வனவுக்கும், சாகித்திய மண்டலப் பரிசுகள் உள்ளிட்ட தேசியரீதியான பல்வேறு பரிசுத் திட்டங்களுக்குள்ளும் உள்வாங்கப்படமாட்டாது என்பதன் காரணமாக, படிப்படியாக சர்வதேச தராதர நூல் எண்ணைப் பெற்றுக்கொண்டு வெளிவரும் நூல்கள் இலங்கையில் அதிகரித்த வண்ணம் உள்ளன. ஒரு நூலுக்கு சர்வதேச தராதர எண்ணை வழங்கி அதிக நூலகங்களை அந்நூல் அடைய வழிசெய்வதா இல்லையேல், அவ்விலக்கத்தைப் பெற்றுக் கொள்ளாமல் தனது நூலை அச்சிட்டு வெளியிடுவதா சிறந்தது என்ற தீர்மானத்தை எடுக்கும் உரிமை நூலாசிரியருக்கே உரியது. ஒருவர் தனது நூலை வெளியீட்டாளர் ஒருவரின் வாயிலாக வெளியிடமுனையும்போது, அத்தீர்மானம் வெளியீட்டகத்தால் எடுக்கப்படுகின்றது.

இந்த ஐ.எஸ்.பீ.என். (ISBN) எண்ணைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதி வெளியீட்டகங்களுக்கே உரியதாகும். இலங்கையில் ஒரு நூலாசிரியர் தானே வெளியீட்டாளராகவும் நின்று

செயற்படுமிடத்து, தனது வெளியீட்டகம் சார்பாக அந்த இலக்கத்தை தனிநபராக நின்று அவரால் பெற்றுக்கொள்ளமுடியும். இந்நிலையில் அதற்கான படிவத்தை நிரப்பும்போது வெளியீட்டகத்தின் பெயராகத் தனது சட்டபூர்வமான பெயரையே (புனைபெயரை அல்ல) குறிப்பிட்டு பதிவிலக்கத்தைப் பெறலாம். அல்லது தனக்கென ஒரு பதிப்பகத்தின் பெயரை வழங்கி தனது முகவரியின் கீழ் அதனையே வெளியீட்டகமாகப் பதிவுசெய்து சர்வதேச தராதர நூல் எண்ணைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு தடவை பதிவு செய்தால் அவர் அந்தப் பதிவிலக்கத்தை அடிப்படையாகக்கொண்ட பின்னைய தனது நூல்களுக்கும் தொடர்ச்சியாகப் பதிவிலக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பிரித்தானியாவில் ஒரு தடவை பதிவு செய்தால் அவருக்கு ஒரே தடவையில் பத்து இலக்கங்களை வழங்கிவிடுவார்கள். படைப்பாளியோ வெளியீட்டாளரோ தனது வெளியீடுகளுக்கு அந்தப் பதிவு இலக்கங்களை நூலுக்கொன்றாக, ஒழுங்காகக் குறிப்பிட்டு அச்சிடவேண்டும். இணையத்தளங்களின் வாயிலாக இவ்விலக்கங்களை Bar Code எனப்படும் தனித்துவமான கோட்டுக் குறியீடுகளையும் தரவிறக்கம் செய்து நூலின் பின்னட்டையில் பயன்படுத்தலாம். ஒரு வெளியீட்டாளருக்கு வழங்கப்பட்ட 10 இலக்கங்களும் பயன்படுத்தித் தீர்ந்ததும் மேலும் பத்து இலக்கங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

நூல் வெளியீட்டாளர்களாக இயங்கும் இலங்கை நூலாசிரியர்கள் இதுபற்றி இலங்கைத் தேசிய நூலகத்துடன் தொடர்பு கொண்டு சர்வதேச தராதரப் பதிவெண்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வெண்களைப் பிற படைப்பாளிகளிடமிருந்து கடன் பெறுவதோ இரவல் பெறுவதோ குற்றமாகும். ஒரே இலக்கத்தை இரு நூல்களுக்குக் குறிப்பிடுவதால் இவ்வெண்ணின் தேவையை அது குழப்பிவிடும். இது பற்றி பின்னர் ஒரு அத்தியாயத்தில் விரிவாகக் குறிப்பிடவுள்ளேன்.

ஏற்கனவே ஆசிரிய வெளியீட்டாளராக இருந்து ஒரு நூலைப் பதிப்பித்து வெளியிட்ட ஒரு நூலாசிரியர் பிறிதொரு நூலை வேறொரு வெளியீட்டாளரால் வெளியிடும்போது, புதிய நூலின் வெளியீட்டாளர் தனது வெளியீட்டக முகவரியை தவறாமல் குறிப்பிடுவதுடன் அந்நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண்ணை அவரே தனது வெளியீட்டகத்தின் பெயரில் பெற்றுப் பதிய வேண்டும். மீள் பதிப்புகள், ஒன்றுக்கு மேற்பட்ட பாகங்களில் வெளிவரும் நூல்கள் என்பன மீண்டும் முன்னைய பதிப்பின் இலக்கத்தையே தாங்கி வெளிவரலாம்.

இங்கு நான் அழுத்திக் கூற முனைவது என்னவென்றால், ஒரு நூலின் வெளியீட்டு முகவரி மறைக்கப்படக்கூடியதொன்றல்ல. தெளிவாக நூலியல் பதிவில் குறிப்பிடப்பட வேண்டும் என்பதேயாகும். வேர்சோ பக்கத்தில் அது தெளிவாகக் குறிப்படப்படவேண்டுமேயொழிய பிற பக்கங்களில் ஆசிரியர் விரும்பியவாறு அச்சிட முடியாது.

## அச்சக விபரக் குறிப்பு:

இலங்கையில் வெளிவரும் தமிழ் நூல்களில் பெருமளவில் காணக் கிடைக்காத நூலியல் பதிவுகளில் ஒன்று அச்சக விபரமாகும். 1960-களில் அச்சுத்தொழில் விருத்தியடையாத காலகட்டங்களில் நூலின் பக்கங்கள் ஒரு அச்சகத்திலும், மேலட்டை புளொக் உருவில் அதற்கான பிறிதொரு அச்சகத்திலும் அச்சிடப்பட்டு வந்தன. அவ்வேளைகளில் நூலின் விடயதானப் பக்கங்கள் அச்சிடப்பட்ட அச்சகத்தின் பெயர் நூலின் வேர்சோ பக்கத்தில் விரிவான முகவரியுடன் குறிப்பிடப்பட்டிருக்கும். அதே சமயம், மேலட்டை அச்சிடப்பட்ட மற்றைய அச்சகத்தின் பெயரும் முகவரியும், அந்த மேலட்டையின் பின் பக்க கீழ் மூலையில் சிறிதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இன்று நவீன அச்சுக்கலை வளர்ச்சியின் பின்னர் அச்சக விபரம் பெரும்பாலும் இடம்பெறாமல் தவிர்க்கப்படும் சாத்தியக் கூறுகளே காணப்படுகின்றன. மற்றைய உலக நாடுகள் போன்றே இலங்கையின் அச்சகப் பதிப்புச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு அச்சகமும் தான் அச்சிடும் துண்டுப் பிரசுரங்களில்கூட தனது அச்சகத்தின் பெயரைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்பது சட்டமூலமாக்கப்பட்டுள்ளது. அச்சக விபரம் குறிப்பிடப்படாமல் வெளிவரும் எந்தவொரு பிரசுரமும் சட்டவிரோதமானது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இந்நிலையில் ஒரு நூலில் அச்சக விபரம் குறிப்பிடப்படாமல் வெளியிடப்படுவதென்பது அந்த நூலுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர் வெளியீட்டாளர் இருவரையும் வீணான சட்டச் சிக்கலுக்குள் கொண்டுசெல்லும் ஆபத்தினை உருவாக்கும். தனது அச்சக விபரத்தை ஒரு நூலில் தெளிவாகக் குறிப்பிடுவதன் மூலமே குறித்ததொரு அச்சகமானது, குறித்த நூலினைத் தாமே அச்சிட்டதான சட்டபூர்வ உரிமையைக் கோருவதாகின்றது. அறியாமை காரணமாகவும், தம்மை வர்த்தக நிறுவனமாக முறையாகப் பதிவு செய்திராமையாலும், வருமான வரி திணைக்களத்தின் பார்வையிலிருந்து தப்புவதற்கான வழிமுறையாகவும் சில சிறிய அச்சகங்கள் நூலில் தமது பெயர் முகவரியைக் குறிப்பிட முன்வருவதில்லை.

சில அச்சகங்கள், தமது வருமானவரி ஏய்ப்புகளுக்காக திட்டமிட்ட வகையில் அச்சக விபரத்தைக் குறிப்பிடத் தவறுகின்றன என்ற சந்தேகமும் காணப்படுகின்றது. இதனை அறியாமை காரணமாக கவனிக்காமல் விடும் நூலின் ஆசிரியர் அந்நூல் வெளிவந்த பின்னர் அந்த நூல் விநியோகத்திலுள்ள எக்காலத்திலும் அநாவசியமான சிக்கலுக்குள்ளாகும் வாய்ப்பினைப் பெறுகின்றார். எனவே எதிர்காலத்தில் அவதானமாக, வேர்சோ பக்கத்தில் அச்சகத்தின் பெயர் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படுவதை ஆசிரிய வெளியீட்டாளர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். தமது பதிப்பகத்தின் பெயர் முகவரியைப் பதிவுசெய்யத் தயங்கும் அச்சகத்தை எதிர்காலத்தில் நாடிச்செல்வதை நூலாசிரியர்களும் வெளியீட்டாளர்களும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இதுவரை ஒரு நூலின் வெளியீட்டுக்கான அடிப்படைத் தகவல்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் உதாரண விளக்கங்களுடன் குறிப்பிட்டு வந்திருந்தேன். அடுத்ததாக ஒரு நூலுக்குப் பக்கங்களைக் குறிப்பிடும் பாரம்பரியம் எவ்வாறு அமைந்திருந்தது என்றும், பின்னாளில் ஏற்பட்ட அச்சக/வடிவமைப்புத்துறை மாற்றங்களை உள்வாங்கி பக்கங்களுக்கு எண்ணிடப்படும் முறைமை எவ்வாறு மாற்றங்கண்டது என்பது பற்றியும் பார்ப்போம்.

(இன்னும் வரும்...)



selvarajah.n@thaiveedu.com

## தேசபக்தன் கோ. நடேசய்யரின் நெடும் பயணம்

# சிலோன் முதல் சிம்லா வரை

## இதுவரை அறியப்படாத ஒரு நேர்காணல்

*– பெருமாள் சரவணகுமார்*



காலனிய இலங்கையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் சமூக மேன்மைக்காய் உழைத்தவர், கோ. நடேசய்யர் பிரிட்டிஷாரின் மிகக் கொடூரமான அடக்குமுறைக்குள் சிக்குண்டுக் கிடந்த மக்களின், விடுதலையின் பொருட்டு, பலத்தளங்களில் இயங்கியவர். தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் பெருந்தோட்டச் சமூகத்தின் பிரச்சினைகளை எடுத்துச் சென்றதோடு, அவற்றுக்கான தீர்வுகளை நோக்கிப் பயணிக்க வழி சமைத்தவர் பின் காலனிய இலங்கையில் ‘பெருந்தோட்டச் சமூகம்’ தம்மை ஒரு தேசிய இனமாகக் கட்டமைத்துக் கொள்வதற்கான பலமானதொரு அடித்தளத்தை அமைக்க, தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

தேசபக்தன் கோ. நடேசய்யர் இலங்கைவாழ் இந்தியத் தோட்டத் தொழிலாளர் தொடர்பில் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க செயற்பாடுகளுள் ஒன்றாகவே, 1922ம் ஆண்டு இந்தியா சட்டசபையில் குடியேற்ற நிரந்தர கமிட்டியின் முன், இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர்களுக்காகச் சாட்சியம் அளிக்கும் வரலாற்று நிகழ்வு இடம்பெற்றது. இந்தக் கமிட்டியின்முன் கோ. நடேசய்யர் சாட்சியம் அளிக்காது இருந்திருந்தால், இலங்கையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களது சமூக, பண்பாட்டு, அரசியல் வரலாறு தலைகீழாக அமைந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

காலனிய இலங்கையிலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகளை நோக்கி நடேசய்யர் முன்னெடுத்த செயற்பாடுகளுள் ஒன்றே சிம்லாவில் சாட்சியம் வழங்கியமையாகும். இந்தச் சிம்லா சாட்சியம் குறித்த வரலாற்றுச் செய்திகள் அவர் எழுதிய ஆங்கில எழுத்துக்கள் வழியும் அறியமுடியும். ஆயினும், தமிழில் அது பற்றிய விரிவான தகவல்களைத் தரும் ஆவணங்களுள் ‘கோ. நடேசய்யரின் இந்த நேர்காணல்’ ஒன்றே முக்கியத்துவம் மிக்கது எனலாம்.

இங்கு மீள்பிரசுரமாக இடம்பெறும் கோ. நடேசய்யரது நேர்காணல் 1922-ம் ஆண்டு சிம்லாவில் நடைபெற்ற இந்திய சட்டசபையில் குடியேற்ற நிரந்தர கமிட்டியின் விசாரணைக் குழுவில் கலந்துகொண்டதற்குப் பின்னர் சென்னையில் வைத்து எடுக்கப்பட்டது. சுதேசமித்திரன் இதழின் பிரதிநிதியால் நேர்காணல் செய்யப்பட்டது. ‘ஸிலோன் தூது’ என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்ற நேர்காணல், நடேசய்யர் இலங்கையில் நடத்திய முதலாவது பத்திரிகையான தேசநேசனிலும் வெளி வந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

பிரிட்டிஷ் ஆட்சியில், குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதன் பொருட்டும், இந்தியத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காய் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்



கலந்துரையாடுவதற்காக முன்னெடுக்கப்பட்ட பல்வேறுகட்ட முயற்சியின் விளைவாகவே சிம்லா மாநாடு நடைபெற்றது. குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியத் தொழிலாளர்களின் வரலாற்றிலும் இம்மாநாடு காத்திரமான தாக்கங்களைச் செய்துள்ளது. இந்தமாநாட்டில், இலங்கையில் வாழும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையிலிருந்து தோட்டக்கார்கள் சங்கம், தோட்டமுதலாளிகள் சங்கம், சிலோன் கவர்ன்மெண்டு சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக, கோ. நடேசய்யர் கலந்துகொண்டு சாட்சியம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட கோ. நடேசய்யர், பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை அடையாளப்படுத்தினார் இந்தியத் தொழிலாளர்களது உண்மையான வாழ்க்கை நிலையை வெளிப்படுத்தி

னார். தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக மேற்கொள்ள வேண்டிய பல முன்மொழிவுகளையும் சமர்ப்பித்துள்ளார் என்பதை இந்த நேர்காணல்வழி அறியமுடிகின்றது.

இம்மாநாட்டில் இலங்கை அரசின் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள், 'பெருந் தோட்டத் தொழிலாளர்கள், இலங்கையில் மிகவும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை வாழுகின்றார்கள்; தொழிலாளர்களுக்கான கூலி அதிகரிக்கப்பட்டுள்ளது; மாதமொன்றுக்கான செலவுகள் போக, 2.80 ரூபாய்க்கும் அதிகமாகவே சேமிக்கிறார்கள்; 1921-ம் ஆண்டு சட்டத்தின்படி தொழிலாளர்கள் பெற்ற கடன்தொகை ரத்து செய்யப்பட்டுவிட்டது; யாதொரு தடையுமின்றி இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வரமுடியும்' என்றவாறான தகவல்களை வழங்கினர். விசாரணைக் குழுவின்முன் தோட்டக்காரர்களின் பிரதிநிதிகள் வழங்கிய பொய் தகவல்களை எடுத்துக்காட்டி, இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களின் உண்மையான நிலையை கோ. நடேசய்யர் விசாரணைக் குழுவின் முன் எடுத்துரைத்துள்ளார். அவர் விசாரணைக்குழுவில் சுட்டிக்காட்டிய விடயங்களும், தொழிலாளர் சார்பாக முன்வைத்த பரிந்துரைகளும் வருமாறு:

- தொழிலாளர்களின் கடன்தொகைள் ரத்துசெய்யப்படவில்லை; புதிதாக அழைத்துச் செல்லப்படும் தொழிலாளர்களுக்கு இந்தியாவிலேயே கடன்கொடுக்கும் வழக்கமும் பத்திரம் எழுதிவாங்கும் முறைமையும் பழைய வழக்கப்படியே நடந்துவருகின்றன.
- தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு என்பது வெறும் 3, 4 சதம்தான். அதுவும், எல்லா இடங்களிலும் வழங்கப்படுவதில்லை.
- இலங்கையில் வாழும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு மிக மோசமான நிலையிலேயே உள்ளது. அதனை அபிவிருத்தி செய்வது அவசியம்.
- தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு 12வயது வரையில் கட்டாய இலவசக் கல்வி வழங்க வேண்டும்.
- பெருந்தோட்டப் பகுதிகளில் வைத்திய வசதிகளை மேம்படுத்த வேண்டும் பயிற்சி பெற்றவர்களை வைத்தியர்களாக அமர்த்த வேண்டும்.
- தொழிலாளர்களுக்குச் சட்டசபையில் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
- தொழிலாளர்களுக்கு சேமநிதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- இந்தியத் தொழிலாளர்களின் இலங்கை நோக்கிய வருகையைத் தடுக்க வேண்டும்.

முதலானவற்றை நடேசய்யர், வெளிப்படுத்தியுள்ளார்.

குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியத் தொழிலாளர்களின் நிலை குறித்த விசாரணைக்குழுவில், இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய நடேசய்யரின் சாட்சியம் மிக முக்கியமான ஒன்றாக இருந்தது. தோட்டத் தொழிலாளர்கள் மீது பிரிட்டிஷார் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளுக்குப் பிரதான காரணம் இந்தியத் தொழிலாளர்களின் தொடர்ச்சியான இலங்கை வருகை என்பதை உணர்ந்த நடேசய்யர், அதனை நிறுத்துவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார். இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதற்கு, அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களின் வருகையும் காரணமாக அமைந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, அதனை எப்படியாவது தடுக்க வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டார். இது குறித்து அவர் தேசநேசன், தேசபக்தன் பத்திரிகைககளில் எழுதிய பத்திரிகைத் தலையங்கங்கள் குறிப்பிடத்தக்கன.

இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர்கள் குறித்து, தென்னிந்தியக் கிராமங்களில் பரப்பட்ட பிழையான கருத்துக்களை எடுத்துக்கூற பல முயற்சிகளை நடேசய்யர் முன்னெடுத்தார். 'இலங்கையில் இந்தியத் தொழிலாளர்கள் மிகவும் மோசமான வாழ்க்கையை வாழ்கின்றார்கள்; உரிமையிழந்த மக்கள் கூட்டமாக இருக்கின்றனர். முறையான சுகாதார வசதி இல்லாமையால் அதிகளவான தொழிலாளர்கள் இறக்க நேரிடும் அவலம் உருவாகியிருக்கிறது, தோட்டத் தொழில் நிலைகளில் எவ்வித பாதுகாப்பும், உத்தரவாதமும் இல்லாமை, தொழிலாளர்கள் கடன்சுமையால் வாடுகின்ற அவலம்' என்பனவற்றை இந்திய அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நடேசய்யர் எடுத்துரைத்தார். காலனிய இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களின் உண்மை நிலைகளை நடேசய்யர் எடுத்துக்கூறியதால், இந்தியக் கூலிகளின் வருகையில் மாற்றங்கள் ஏற்பட்டன. தோட்டத் தொழிலாளர்கள் குறித்த ஓரளவு முறையான சட்டத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பது மனங்கொள்ளத்தக்கது. கோ. நடேசய்யரின் மேற்குறித்த கருத்துக்களும் முன்மொழிவுகளும் காலனிய இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கான விடுதலைக் குரலாகவும், பெருந்தோட்ட மக்களின் மேல்நோக்கிய அசைவுக்கான காத்திரமான பங்களிப்பாகவும் அமைந்திருக்கின்றமையை யாரும் மறுக்கமுடியாது. இலங்கையில் கோ.-நடேசய்யரின் சமூக வகிபங்கு எந்தெந்த நிலைகளிலெல்லாம் விரிந்திருந்தன என்பதை அறிவதற்கு அன்றைய இந்த நேர்காணல் வழிசமைக்கிறது.



**தேசபக்தன் கோ. நடேசய்யர் இலங்கையில் நடத்திய 'தேசநேசன்' பத்திரிகையில் 1922 செப்ரெம்பர் 27–இல் வெளிவந்த நேர்காணல்.**

**சிலோன் தூது:**

- ► **சிலோனிலுள்ள இந்தியத் தொழிலாளர்களின் சார்பாக சாட்சியம் கொடுக்கத்தானே நீங்கள் சென்றிருந்தீர்கள்?**

ஆம் தொழிலாளர் சார்பாகவே நான் சென்றேன்.

**▸ அவர்கள் உங்களைத் தெரிந்தெடுத்து அனுப்பினார் களா?**

சிலோனிலுள்ள தொழிலாளர்களுக்குள் பிரத்தியேக சங்க மொன்று இல்லாததால் அவர்கள் என்னைத் தெரிந்தெடுத்த னுப்ப முடியவில்லை. ஆயினும் தங்களுடைய குறைகள் வெளிபடாமல் போய்விடுமோ வென்று கவலை கொண்டு சில இந்தியத் தொழிலாளர்கள், நான் சென்று சாட்சியம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளின் பேரிலேயே நான் சென்றேன். என்னுடைய செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொண்டனர்.

**▸ கமிட்டியின் முன் சாட்சியம் கொடுக்க சிலோனிலி ருந்து வேறு யார் யார் வந்திருந்தார்கள்?**

தோட்டக்கார்கள் சங்கம், தோட்டமுதலாளிகள் சங்கம், சிலோன் கவர்ன்மெண்டு இவர்களுடைய பிரதிநிதிகளாக மென்ஸர்ஸ் டி.சி. வில்லியர்ஸ், இ.எல். வில்லியர்ஸ், ஹெவிலி (அட்வோகேட்) நிக்கல்சன் இவர்களும், ஆள் சேர்க்கும் கமி ஷனராகிய மிஸ்டர் நிக்கல்சனுக்கு லீகல் அட்வைஸரான ஸர் டி. தேசிகாச்சாரியாரும் வந்திருந்தனர்.

**▸ சிலோனிலுள்ள இந்தியர்கள் சார்பாகவாவது, இந்தி யத் தொழிலாளர் சார்பாகவாவது சிலோன் கவர்ன் மெண்டார் பிரதிநிதிகளை அனுப்பினார்களா?**

இந்தியத் தொழிலாளர் சார்பாக ஒருவரையும் அனுப்ப வில்லை. சிலோனிலுள்ள இந்தியர்கள் பிரதிநிதியென்ற ஹோதா வில் இந்தியச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியான ஸ்ரீமான் லாரி முத்துக்கிருஷ்ணாவை சிலோன் கவர்ன் மெண்டார் தங் களுடைய செலவில் அனுப்பினர். அதுவும் இந்தியா கவர்ன் மெண்டார் தந்திக் கொடுத்து வற்புறுத்தியதனாலேயே அனுப் பினர்.

**▸ தோட்டத் தொழிலாளர் சார்பாக வெகு காலமாக உழைத்துவரும் ஸ்ரீமான் பெரிசுந்தரம் கமிட்டியின் முன் சாட்சியம் கொடுக்க வரவில்லையா?**

அவர் வரவில்லை. அவர் இலங்கை இந்தியச் சங்கத்தைச் சேர்ந்தவர். அவர் சென்ற மாதம் 15-ம் தேதிவாக்கில் சென் னைக்கு வந்திருந்து கவர்ன்மெண்டு மெம்பர்களையும் கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவரான ஸ்ரீமான் டி. ரெங்காச்சாரியாரை யும் கண்டு பேசினார். அவர் கண்டு பேசியதன் பலனாக முடி வில் இந்திய சங்கத்தின் பிரதிநிதியொருவரைத் தேர்ந்தெ டுத்தனுப்ப வேண்டுமென்று சிலோன் கவர்ன்மெண்டுக்குத் தந்தி அனுப்பினார்கள். அதன்மேலதான் ஸ்ரீமான் லோரி முத் துக்கிருஷ்ணாவை சிலோன் கவர்ன்மெண்டார் அனுப்பினார் கள். இந்திய கவர்ன்மெண்டார் இலங்கை இந்தியப் பிரதிநிதி ஒருவரை அனுப்ப வேண்டுமென்று மீண்டும் தந்தி கொடுத்த னர். ஆனால் காலதாமதமாகி விட்டதென்றும் இனி அனுப்ப சாத்தியப்படாதென்றும் அவர்கள் பதில் அனுப்பிவிட்டனர்.

**▸ இந்தியா கவர்ன்மெண்டார் தந்திக் கொடுத்த பிறகுகூட ஒருவரைத் தெரிந்தெடுத்தனுப்பியிருந்தால் அவர் கமிட்டியின் முன் விசாரணை காலத்தில் ஆஜராயி ருக்க முடியாதா?**

ஆஜராகி விடக்கூடும். ஆகஸ்டு மாதம் 29-ம் தேதி முதல் செப்டெம்பர் மாதம் 10-ம் தேதி வரையில் பல நாட்களில் கமிட்டியார் விசாரணை நடத்தியிருக்கிறார்கள். சிலோன் கவர்ன்மெண்டார் ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுத்தனுப்பியி ருந்தால் அவர் விசாரணை முடிவதற்குள் சிம்லாவிற்கு வந்து சாட்சியம் கொடுத்திருக்கக்கூடும். ஸ்ரீமான் பெரிசுந்தரம் வரக் கூடுமென்று அவரை அறிந்த கமிட்டியின் அங்கத்தினர்கள் எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் முடிவில் ஏமாற்றமே அடைந் தனர். இதனாலும் நான் கமிட்டியின் முன் சாட்சியம் கொடுக் காமல் தடுக்க வேண்டியோ அல்லது என்னுடைய சாட்சியத் தின் மதிப்பைக் குறைக்க வேண்டியோ நான் கிளர்ச்சிக்கார னென்று சிலோன் கவர்ன்மெண்டார் தோட்டக்கார்கள் சார் பாக இருக்கிறார்களென்கிற எண்ணம் கமிட்டி அங்கத்தினர்க ளில் சிலருக்கு ஏற்பட்டது.

**▸ தோட்டக்காரர்களுடைய பிரதிநிதிகள் தெரிவித்துக் கொண்டதென்ன?**

1921-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நிறைவேறிய சட்டத்திற் குப் பிறகு தொழிலார்களுடைய கடனை ரத்து செய்தாகிவிட் டதென்றும் அவர்களுக்கு யாதொருவிதமான நிர்பந்தமுமில் லையென்றும், அவர்களுடைய கூலி உயர்த்தப்பட்டிருக்கிற தென்றும், ஆகவே யாதொருவிதமான தடையுமின்றி இலங் கைக்கு இந்தியத் தொழிலாளர்கள் வர அனுமதிக்க வேண்டு மென்றும், தெரிவித்துக்கொண்டனர். அத்துடன் இரண்டு குழந் தைகளுடன் கூடிய புருஷன் பெண்சாதி இருவரும் மாத மொன்றுக்கு சராசரி 21 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கி றார்களென்றும், அவர்களுடைய குடுப்பத்திற்கு மாதமொன் றுக்கு ரூபா 17.80 தான் செலவாகுமென்றும், ஆகவே, அவர்க ளுக்கு மாதம் 2.80 ரூபாக்கு மேல் மிஞ்சுகிறதென்றும் சொன் னார்கள். ஆனால், பிறகு அவர்களைக் கமிட்டியார் குறுக்கு விசாரணை செய்தபோது ஒரு குடும்பத்திற்கு மாதம் 23.80 வேண்டியிருக்கு மென்று ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

**▸ நீங்களாகவே தொழிலாளர் சார்பாக சாட்சியம் கொடுக்க வந்திருப்பதாகத் தெரிவித்துக் கொண்டீர் களா?**

ஆம், என்னையும் சாட்சியாக விசாரிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டேன். அதற்கு சில இடையூறுகளேற்பட்டு, கடைசியாக என்னை விசாரித்தார்கள்.

**▸ நீங்கள் கமிட்டியாரிடம் என்ன தெரிவித்துக்கொண்டீர் கள்?**

கடன் தொகைகள் ரத்துசெய்துவிடப்படவில்லையென்றும், புதிதாக அழைத்துச் செல்லும் தொழிலாளர்களுக்கு இந்தி யாவிலேயே கடன்கொடுத்து, தொழிலாளர்களிடமிருந்தும் கங்காணிகளிடமிருந்தும் பிராமசரி நோட்டுகள் வாங்கிக் கொண்டு பழைய வழக்கப்படியே காரியங்களை நடத்தி வரு கிறார்களென்றும், கடன்களை ரத்து செய்துவிட்டதாகச் சொல்லுவது உண்மையை அறியாதவர்களை மயக்கிவிடுவ தாகச் சொல்லும் தந்திர வார்த்தையே யென்றும் 1920-ம் வரு ஷத்தில் சிலோன் கவர்ன்மெண்டார் தயாரித்த மசோதாவில் கண்டபடி கடன் தொகைகளை அடியுடன் தள்ளிவிட்டாலன்றி பலனில்லையென்றும், இப்பொழுதிருந்துவரும் கூலி விகி தத்தை உயர்த்தினாலன்றி பழைய கடன்களைத்தள்ளியும் பிரயோஜனமேற்படாதென்றும், இப்பொழுது கூலியை உயர்த் தியிருப்பதாகச் சொல்லுவதும் சில இடங்களில் மாத்திரமே யென்றும் இதுவும் 3, 4 சதம்தானென்றும், குடியிருப்பு வச

தியை அபிவிருத்தி செய்து கொடுக்க வேண்டுமென்றும் , தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு 12 வயது வரையில் கட்டாய இலவசப் படிப்புக் கொடுக்க வேண்டுமென்றும், வைத்திய சிகிச்சைக்குப் பயிற்சியில்லாதவர்களை இப்பொழுது வைத்திருப்பது போலல்லாமல் பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு சட்டசபையில் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும், கூலிகளுக்கு சேமநிதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், தொழிலாளர்களின் இரட்ஷகரராகத் தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழரொருவரை இந்தியா கவர்ன்மெண்டார் நியமித்து, தொழிலாளர்களுடைய விஷயங்களைக் கவனித்து வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அவருக்குதவியாக இந்தியர்கள் அதிகமாகவுள்ள ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டுமென்றும், கங்காணிகள் தொழிலாளர்களுக்குத் தோட்டங்களின் நன்மையை உத்தேசித்தே கடன் கொடுத்திருப்பதாலும், அதை அவர்கள் திரும்ப அடையவேண்டுவது நியாயமானதாலும், ஏழைத் தொழிலாளர்களை அவர்கள் இம்சிக்க இடமிருக்கக்கூடாதாதலாலும், 1920 வருஷத்திய மசோதாவில் இந்தக் கடன்தொகைளைத் தோட்டக்கார்களே கொடுக்க வேண்டுமென்பதை சிலோன் கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொண்டிருப்பதாலும் இந்தத் தொகைகளைத் தோட்டக்கார்களே கொடுக்கும்படி செய்து, கங்காணிகளுடைய பாத்தியதையைப் பூர்த்திசெய்வதுடன் தொழிலாளர்களுடைய தொல்லையை நிவர்த்திக்க வேண்டுமென்றும், நான் வற்புறுத்தினேன்.

**▸ தொழிலாளர்களுக்கு இப்பொழுது தோட்டக்கார்கள் கொடுக்கும் சம்பளம் போதுமானதா?**

இல்லை, ஒரு புருஷன், பெண்ஜாதி, இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு இந்தச் சம்பளம் போதாமல் வருஷம் 1க்கு 60, 70 ரூபாய் கடன் ஏற்படும். கங்காணிகளிடம் கடனாக வாங்கிக்கொள்ளக் கூடியவர்கள் இந்தத் தொகையைக் கடன்வாங்கிக் கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் வேறு விதியின்றி வயிற்றை ஒடுக்கி கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

**▸ இதை நிவர்த்திக்க என்ன ஏற்பாடு செய்வது உசிதமாக விருக்கும்?**

குறைந்தது எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரே நிவர்த்தாரணம் செய்தவிட வேண்டும். இலங்கையிலே பகுதிக்குப் பகுதி வித்தியாசமான சம்பள விகிதத்தை அந்த இடத்தின் நிலைமைக்குத் தகுந்தபடி ஏற்படுத்தக் கூடுமென்றும், அவ்விதம் நிர்ணயிப்பதற்காக ஒரு போர்டை ஏற்படுத்த வேண்டு மென்றும் சொல்லப்படுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே விகிதத்தை நிவர்த்தாரணம் செய்துவிட்டு அந்தப் பகுதியின் சவுகரியா சவுகரியத்தையும் சமான்களின் விலை விகிதங்களையும் பொறுத்து அதிகக் கூலி தேடக்கூடிய சுதந்திரத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். போர்டார் கூலி விகிதத்தை நிர்ணயித்து அதற்குத் தொழிலாளர்கள் கட்டுப்பட வேண்டு மென்பது சரியல்ல.

**▸ சிலோன் சட்டசபையில் இப்பொழுது இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவமிருந்து வருகிறதா?**

சிலோன் ஜனத்தொகையில் 45 லஷத்தில இந்தியர்கள் 6.5 லட்சமிருந்தும் வர்த்தகரின் பிரதிநிதியென்று ஒருவரை கவர்ன்மெண்டாரே நியமனம் செய்திருக்கிறார்கள். இந்தியர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. புதிய சீர்திருத்த பிரேரணைகளிலும் இந்தியர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். கவர்ன்மெண்டு உத்தியோகங்களையும் இந்தியர்கள் பெறமுடியாது. சிலோன் சிவில் சேர்விஸீக்குக் கூட சென்ற 2 வருஷ காலமாக இந்தியர்கள் அபேஷகர்களாக நிற்க இடமில்லை. சிலோனில் இந்தியர்கள் அரிசி வியாபாரம் செய்வதிலும் பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தியர்களுக்குப் பொதுவாகச் சொல்லின் ஒரு வித சுதந்திரமுமில்லை. இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு பிழைக்க வேண்டியிருக்கும் தோட்டக்கார்களை ஆதரித்து நிற்கும் சிலோன் கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமைகளை அளிக்க மறுத்திருப்பது அநியாயமாகவே இருக்கிறது. இந்தியத் தொழிலாளர்களை அழைத்துப்போக அவர்களுக்கு உரிமை வேண்டுமாயின் தொழிலாளர்களுடைய ஷேமலாபங்களைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு சட்டசபையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஓட்டுரிமை கிடைக்கும் வரையில் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு வரவேண்டும் மற்றும் இந்தியர்களுக்கிருந்துவரும் இதர நிர்ப்பந்தங்களும் நீக்கப்பட வேண்டும்.

**▸ கமிட்டி மெம்பர்களுடைய மனோபாவம் எப்படி இருக்கிறது?**

இரண்டொருவர் தவிர மற்றோர் இந்தியத் தொழிலாளர்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்ய விரும்புகின்றனர். கூடுமான வரையில் தொழிலாளர்களுக்கு அனுகூலமான ஏற்பாடுகளை அவர்கள் சிபார்சு செய்வார்களென்றும் நம்ப இடமிருக்கிறது. சட்டசபையின் இதர அங்கத்தினர்களையும் நான் கண்டு பேசினேன். அவர்கள் தொழிலாளர்களிடம் அனுதாபமாக இருக்கின்றனர். இந்த விஷயம் சட்டசபையில் பிரஸ்தாபத்திற்கு வருகையில் தொழிலாளர்களுடைய விஷயங்களைத் தங்களுக்கு நன்கு அறிவிக்க வேண்டுமென்றும், சவுகரியப்படின் நானே வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். மலாயிலிருந்து வந்திருந்த தூதினர் தொழிலாளர்களுக்குத் தாங்கள் இதுவரையில் செய்துள்ள சவுகரியங்களைக் குறிப்பிட்டு இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லுகிற இதர ஏற்பாடுகளையும் தாங்கள் செய்து கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் இப்பொழுது ரப்பர் தொழில் படுத்தியிருப்பதால் மறுபடியும் தொழில் வளர்ச்சி பெற்றபின் குறைந்தது எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டு மென்கிற விகிதத்தை நிர்ணயிக்க சித்தமாக இருப்பதாகவும் தெரிவித்துக் கொண்டனர். அவர்கள் காட்டிய மனோபாவம் திருப்திகரமாகதாகவே இருந்தது.

**குறிப்பு:**

கோ. நடேசய்யர் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளில் ‘சிம்லா விசாரணைக்குழுவின் சாட்சியம்’ ஒரு மைல்கல். அதன் வரலாற்று முக்கியத்துவம் கருதியும் நடேசய்யரது இதுவரை அறிப்படாத ஒரு நேர்காணல் என்ற வகையிலும் இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.



sarawanakumar.p@thaiveedu.com

# மார்க்சிசமும் சமூக விஞ்ஞான முறையியலும் முழுமை என்னும் கருத்தாக்கம்



ஆங்கில மூலம் ஜயதேவ உயன்கொட

தமிழாக்கம்: கந்தையா சண்முகலிங்கம்

3

நேர்க்காட்சிவாத முறையியல் பற்றிய மார்க்சிய விமர்சனம் ஊடாக மார்க்சிய முறையியல் குறித்து விளக்கம் பெற்றுக்கொள்வதற்கான கருத்தாக்கங்கள் பல எமக்குக் கிடைக்கின்றன. அவ்வாறான கருத்தாக்கங்களில் ஒன்று முழுமையும் ஸ்தூலமானதும் (Totality and Concrete) என்பதாகும். சமூகத் தோற்றப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கு பொருண்மைகளை அருவமானவையாகவும், தனிமைப்படுத்தப்பட்டனவாயும் (Abstract and Isolated Entities) பார்க்காமல், முழுமையுடன் (Totality) இணைத்துப் பார்க்கவேண்டும் என்பது மார்க்சிய சமூக விஞ்ஞானம் கற்றுத் தந்துள்ள மிக முக்கியமான கருத்தாகும். விடயங்களைத் தனியன்களாகத் தனிமைப்படுத்தி நோக்காது முழுமையின் ஓர் அங்கமாக அல்லது ஒரு கூறாக அவற்றைப் பார்க்கும்போதே, அவற்றைச் சரியான அர்த்தத்தில் நாம் புரிந்து கொள்கிறோம். 20-ஆம் நூற்றாண்டின் மார்க்சியக் கோட்பாட்டாளரான ஜோர்ஜ் லூகஸ் (George Lucacs) மார்க்சிய கருத்தாக்கமான சமூகமும் வரலாறும் குறித்த முழுமை (Social and Historical Totality) பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டார்.

*‘வரலாற்றைப் பற்றி விளக்கும்போது மார்க்சிய சமூக விஞ்ஞானத்துக்கும் பூஷ்வா சிந்தனைக்கும் உள்ள வேறுபாடு முழுமை (Totality) என்ற கருத்தாக்கத்திற்கு மார்க்சியம் கொடுக்கும் முக்கியத்துவத்தால் எழுகின்றது. சமூகத்தின் அங்கங்களான பகுதிகளைவிட, ஒட்டு மொத்தமான சமூக முழுமை யாவற்றையும் தழுவியது; முதன்மையானது என்று மார்க்சிய விஞ்ஞானம் வலியுறுத்துகிறது. பொருளாதாரம் என்பது அச்சமூக முழுமையின் பகுதியாகும். ஆகையால் மனிதரை இயக்கும் பொருளாதார ஊக்கி (Economic Motive) என்பதைவிட சமூக முழுமை (Social Totality) யாவற்றையும் தழுவிய முக்கியத்து வமுடையது.’*

இக்கருத்தை மார்க்ஸ் ஹெகலிடம் இருந்து இரவல் பெற்று அதனை மார்க்சிய சமூக விஞ்ஞானத்தின் அடிப்படைக் கருத்தாக மாற்றினார். இதுபற்றி லூகஸ் விளக்கும் போது, மனித அறிவுத் தேடலின் இலக்கு முழுமையைப் பற்றியதே எனவும், சமூகம் பற்றிய ஒரு நேர்வு முழுமையுடன் இணைத்துப் பார்க்கப்படும் போதுதான் அது சமூக நேர்வு (Social Fact) என்னும் தகுதியைப் பெறுகிறது என்றும் கூறினார். சமூக நேர்வுகளின் இருப்பு, சமூக முழுமையின் பகுதியாக அமைவதில் தான் தங்கியுள்ளது. ஒரு சமூக உருவாக்கத்தினைக் குறிப்பிட்ட தொரு உற்பத்தி முறைமையாகவே (Mode of Production) அடையாளம் காண்கிறோம். அவ்வாறே தனி நபர்களும் தனிமைப்படுத்தப்பட்ட தனியன்களாகக் கருதப்படுவதில்லை. தனி நபர் என்பது ஒரு அருவமன (Abstract) கருத்து அன்று, சமூக வர்க்க உறவுகள், உற்பத்தி உறவுகள், பரிவர்த் தனை உறவுகள் என்ற சமூக முழுமையின் பகுதியாகத் தனி நபர்கள் இருப்புக் கொண்டுள்ளனர் என்றே பொருள் கொள்ளப்பட வேண்டும் எனவும் லூகஸ் குறிப்பிட்டார்.

முழுமை (Totality), ஸ்தூலமானது (Concrete) என்ற இரண்டும் மார்க்சிய சமூக விஞ்ஞான முறையின் பிரதான கருத்தாக்கங்களாகும். ‘மூலதனம்’ என்ற பெருநூலை மார்க்ஸ் எழுதத் தொடங்கு முன்னர் அதற்காக எழுதிய குறிப்புகளில் ‘முழுமை’, ‘ஸ்தூலமானது’ என்ற இரண்டைப் பற்றியும் அவர் விளக்கமாகக் குறிப்புக்களை எழுதி வைத்திருந்தார். அவரது இக்குறிப்புகள் ‘Grundrisse’ நூலில் உள்ளடகப்பட்டுள்ளன. மார்க்ஸ் முழுமை (Totality) என்ற கருத்தாக்கத்தை விளக்குவதற்கு ‘Real’, ‘Concrete’ என்ற வேறு இரு கருத்துக்களையும் துணையாகக் கொள்கிறார். உதாரணமாக சனத்தொகை (Population) என்பது அருவமான ஒரு கருத்தைக் குறிப்பது. அதனை நீங்கள் கண்ணால் காண முடியாது, தொட்டு உணர முடியாது. ஆயினும், அது உண்மையானது (Real) அல்லவா? அவ்வாறே அது ஸ்தூலமானதாக (Concrete) இருத்தல் சனத்தொகையில் சமூக வர்க்கங்கள் (Social Classes) உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற உண்மையையும் தெளிவுபடுத்துகிறது.

சனத்தொகையின் ‘ஸ்தூலமானது’ என்ற தன்மையை நாம் உணரத் தவறினால் சமூக வர்க்கங்களின் இருப்பை எம்மால் உணரவோ, புரிந்து கொள்ளவோ முடியாது. சனத்தொகை என்பதன் சமூகப் பண்பு (Social Character) ஸ்தூலமான நிலையில் இருப்பதை நாம் உணரத் தவறி விடுகிறோம். இது போன்றே ‘மூலதனம்’ (Capital) என்பது ஒரு அருவமான கருத்தாகும். அதனை கூலி உழைப்பு (Wage Labour), மதிப்பு (Value), விலை (Price) போன்ற பிற அருவமான, அதே

வேளை ஸ்தூலமான கருத்துக்களுடன் இணைத்துப் பார்க் கும்போது தான் 'மூலதனம்' என்பதன் உண்மையான அர்த் தத்தை நாம் விளங்கிக் கொள்ள முடியும். *'Thus, understanding something concretely, in connection with its Social relations, is the 'Scientificatlly correct method', Marx Asserts, The concrete is concrete because it is the Concentration of many determinations. Hence the unity of the Diverse'.* இக்கூற்றின் பொருள் 'ஒரு விடயத்தை நாம் ஸ்தூல




மாகப் புரிந்து கொள்கிறோம் என்றால் அதனைச் சமூக உறவு களின் பாகமாகத் தொடர்புபடுத்திப் பார்க்கிறோம் என்பதே பொருள். ஸ்தூலமானது பலவற்றை ஒருமையாக்கித் தருவது (Unity in Diversity), அதனுள் பல தீர்மானமான கூறுகள் பிணைக்கப்பட்டிருக்கும். அவ்வாறான ஒன்றுசேர்க்கை (Concentration) அதற்கு ஸ்தூலமான இருப்பை வழங்குகிறது. இக்கருத்தை மார்க்ஸ் அழுத்திக் கூறினார்.

'மூலதனம்' நூலில் மார்க்ஸ் அருவமான சமூகம் (Abstract Society) என்ற கருத்தை ஆய்வு செய்யவில்லை. நவீன முத லாளித்துவ சமூகம் (Modern Capitalist Society) எனும் ஸ்தூ லமான குறிப்பிட்டதொரு சமூகத்தையே அவர் ஆராய்ந்தார். லூசியோ கொலத்தி (Lucio Colletti) என்னும் இத்தாலிய மார்க்சிய அறிஞர் ஒரு நூலில் (1975) இதனைப் பின்வருமாறு குறிப்பிட்டார். *'மார்க்ஸ் சமூக வளர்ச்சி பற்றிய விதிகளைக் கண்டு பிடித்தார் என்று கூறும்போது, பொதுமைப்பட்ட அருவ மான 'சமூகம்' பற்றிய விதிகளைக் கண்டுபிடித்தார் என்ற கருத்தில் அல்லாமல், முதலாளித்துவ சமூகத்தின் (Capitalist Society) வளர்ச்சி விதிகளைக் கண்டு பிடித்தார் என்ற கருத் திலேயே கூறுகிறோம்'.*

## யதார்த்தம் (Reality):

மார்க்சீய உள்ளதன் இயலில் (Ontology) 'சமூக யதார்த்தம் (Social Reality) என்னும் எண்ணக்கரு அடி ஆதாரமான கருத்தாக உள்ளது. இவ்வெண்ணக்கரு மார்க்சிய முறையின் மீது நல்விளைவுகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. மார்க்கிஸ்டுகள் மனிதர்களின் அகநிலைக்குப் புறத்தே புறநிலையில் ஒரு யதார்த்தம் (Reality) உள்ளது என்பதை ஏற்கின்றனர். இந்த யதார்த்தம் புறநிலையாக இருப் பதோடு அது மனிதரில் இருந்து சுதந்திரமாக இயங்குவது, இருப்புடையது என்பதையும் மார்க்சிஸ்டுகள் ஏற்றுக்கொண் டுள்ளனர். உதாரணமாக எமக்குப் புறத்தே சமூக வர்க்கங் கள் (Social Classes) உள்ளன, எமக்குப் புறத்தே பொருளா தார உறவுகள் என்னும் புறநிலை யதார்த்தம் உள்ளது, இத னைவிட உற்பத்திச் சக்திகள் (Forces of Production) எமக் குப் புறத்தே உள்ளன. இவையாவும் சேர்ந்த யதார்த்தம் (Reality) என்பது புறநிலையானது. எம்மில் இருந்து சுதந்திரமாக இயங்குவது. இச்சக்திகளின் ஒன்றிணைவால் உருவாக்கம் பெறுவதே 'ஸ்தூலமான உலகம்' (Concrete World) ஆகும். இத்தகைய சமூக யதார்த்தத்தை (Social Reality) நாம் ஏற் றுக்கொள்ளும் போது இக்கருத்தின் உள்ளுறையாக அமைந் துள்ள மூன்று துணைக்கருத்துக்களையும் நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். அவையாவன:

- யதார்த்தம் எமது உணர்வு நிலையில் (Consciousness) இருப்புக் கொண்டதன்று: அது பகுதிபகுதியாகத் துண்டா டப்பட்டும் இருப்பதில்லை, அது முழுமையாக (Totality) புறத்தே உள்ளது. இந்த முழுமைதான் மனித வாழ்க்கை யின் பொருண்மியக் கூறுகளை உருவாக்கும் சமூகக் கட்ட மைப்பை (Social Structure) உருவாக்குகிறது.
- இரண்டாவதாக இந்த யதார்த்தத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் நாம் வெறும் தோற்றத் திற்கு அப்பால் செல்லவதுடன் (Go beyond it's mere appearance), சமூக உறவுகளை (Social Relations) ஊடுருவி ஆராய்ந்து பார்க்கவும் வேண்டும்.
- .வெளித்தோற்றம் (Appearance) யதார்த்தத்தைத் திரித் துக்காட்டுவதாக இருப்பதால் (Since the appearance mystifies the reality) ஆய்வாளரின் கூர்மையான விசா ரணை மூடுதிரையைக் கிழித்து யதார்த்தத்தின் உள்ளடக் கத்தை வெளிப்படுத்துகிறது. மூலதனம் தொகுதிக்கான முன்னுரையில் கார்ல் மார்க்ஸ் 'Discover the rational kernel within the mystical reality" என இக்கருத்தை எடுத் துக் கூறினார். இவ்விடத்து மார்க்ஸ் அறிவொளிக்காலத் தின் பகுத்தறிவு (Rationality) என்னும் கருத்தை, (அதா வது எந்த விடயத்தையும் வெளித்தோற்ற அளவில் ஏற்றுக் கொள்ளாத, பகுத்தறிவு கொண்டு உண்மையை ஆராய்ந்து அறி என்று) தமது நயம் பொருந்திய வார்த்தைகளில் கூறி

னார். இதுவரை கூறியவை மார்க்சிய முறையின் உள்ளதன் இயலைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

## செயலியும் அமைப்பும் என்னும் விவாதம்:

'செயலியும் அமைப்பும்' என்னும் விவாதம் (Agency Structure Debate) 20-ஆம் நூற்றாண்டின் சமூக விஞ்ஞானிகளால் விவாதிக்கப்பட்ட முக்கியமானதொரு விடயப்பொருள் ஆகும். இது பற்றி மார்க்ஸ் என்ன சொல்லியிருக்கிறார் என்பது சுவாரசியமானது. லூயி அல்தூசர் (Louis Althuser) என்பவர் பிரஞ்சு தேசத்து மார்க்சிய சிந்தனையாளர். இவர் மனிதச்செயலியை (Human Agency)விட அமைப்பு (Structure) முக்கியமானது, அமைப்புத்தான் தீர்மான சக்தியாகும் என்று கூறினார். அமைப்புக்கு அழுத்தம் கொடுக்கும் அவரது அமைப்பியல் விளக்கம் (Structural Interpretation) 1970-களில் ஐரோப்பிய மார்க்சிஸ்டுகளிடையே பெரும் விவாதப் புயலைக் கிளப்பியது. E.P. தோம்சன் (E.P. Thomson) என்னும் ஆங்கில நாட்டினரான மார்க்சிய வரலாற்றாசிரியர் அல்தூசர், மார்க்சின் கோட்பாட்டை 'அமைப்பியல் குறுக்கல்' வாதமாகத் (Structuralist Reductionism) தாழ்த்தி விட்டதாகக் கண்டனம் செய்தார். தோம்சனின் 'கோட்பாட்டின் வறுமை' (Poverty of Theory) என்ற நூல் அல்தூசரின் அமைப்பியல் வாதம் மனிதச் செயலியை (Human Agency) வரலாற்றில் இருந்து அகற்றிவிட்டது; வரலாற்றுச் செயல்முறையில் மனிதர்களின் செயல்களுக்கு இடமில்லாமல் செய்யப்பட்டது எனக் குற்றம் சாட்டுவதாக அமைந்தது. மார்க்சியத்தின் சமூகம் பற்றியதும், வரலாறு பற்றியதுமான விளக்கத்தை இரு வகையிலும் வாதிப்பதற்கு இடமுண்டு. அதாவது மனிதச் செயலிற்கு இடமில்லை; யாவும் சமூகக் கட்டமைப்பால் (Social Structure) தீர்மானிக்கப்படுகின்றன எனவும் வாதிக்கலாம். அதுபோலவே சமூகக் கட்டமைப்பு முக்கியமில்லை; மனிதர்களே வரலாற்றைப் படைக்கிறார்கள் என்றும் விளக்கம் கூறலாம். வரலாற்றுச் செயல் முறையில் அமைப்பு மனிதச் செயலி என்ற இரண்டிற்கும் சமத்துவமான அளவு முக்கியத்துவம் உண்டு என்பதே மார்க்ஸின் கருத்தாகும். 1851-1852 காலத்தில் மார்க்ஸ் எழுதிய லூயி பொனபாட்டின் பதினெட்டாவது புருமயர் (Eighteenth Brumaire of Louis Bonaparte) என்னும் நூலின் இருந்து பெறப்பட்ட 'Men make their own history' - மனிதர்களே தமது வரலாற்றைப் படைக்கிறார்கள் என்னும் கூற்று இவ்வுண்மையை அழுத்திக் கூறுவதாகும். 'மனிதர்களே வரலாற்றைப் படைக்கிறார்கள்' என்று கூறும் மார்க்ஸ், மனிதச் செயலியின் முக்கியத்துவத்தை அழுத்திக் கூறினார். அதனையடுத்து 'மனிதர்கள் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் அச்சூழலுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகிறார்கள் என்றும், புறநிலையான அமைப்புக்களை மனிதர் தம் சுய விருப்பின்படி உருவாக்கிக் கொண்டு சுயத்துவமாகச் செயற்படமுடியாது என்றும் கூறுவதன் மூலம் அமைப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

(தொடரும்...)



shanmugalingam@thaiveedu.com






சங்ககாலப் பெண்கள் பிற்காலப் பெண்களைப்போல அரண்மனைக்குள்ளும் இல்லத்திற்குள்ளும் தமது நடமாட்டத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை. குறுக்கிக் கொள்ளவில்லை. தினைப் புலத்திலும், கடற்கரையிலும், காட்டிலும், மழையிலும் பாலை நிலத்திலும் பெண்கள் தாராளமாக நடமாடி இருக்கின்றனர். வேலை செய்திருக்கின்றனர்.

வெறுமனே காதல் கிளத்தியராக மட்டும் இவர்கள் சித்தரிக்கப்படவில்லை. வீரமங்கைகளாகவும் உழைப்பவர்களாகவும் உற்பத்தியில் பங்கெடுப்பவர்களாகவும் புலவர்களாகவும் பாடினிகளாகவும் இருந்திருக்கின்றார்கள். சில சான்றுகளோடு இந்தப் பதிவில் பெண்களின் அன்றைய நிலையை உற்று நோக்கலாம்.

ஆண் புலவர்களுக்கு நிகராகப் பாடும் முப்பது பெண் புலவர்கள் சங்க காலத்தில் இருந்திருக்கின்றனர். ஔவையார், ஆதிமந்தி, காக்கைபாடினியார் எனப் பலர் வாழ்ந்துள்ளனர். இவர்களுள் ஔவையாரை எடுத்துக்கொண்டோமானால் மிகவும் ஆளுமை பெற்றவராக இருந்திருக்கின்றார். ஆணான அதியமானுடன் நட்புப் பாராட்டி இருந்திருக்கின்றார். நெஞ்சுரம் கொண்டு போரை நிறுத்தத் தூது போய், அந்தப் போரை அதியமான் நெடுமான் அஞ்சிக்காக நிறுத்தி இருக்கின்றார்.

பெண் என்பவள் முதன்மை இடத்தில் இருந்திருக்கின்றாள் என்பதற்கு ஒரு பாடலை இங்கு முன் வைக்கலாம். அகநானூற்றில் எண்பத்தாறாவது பாடலை நல்லாலாவூர்கிழார் பாடுகின்றார். அன்றைய திருமண நிகழ்வை நமது கண் முன் அவர் கொண்டு வருகின்றார். பெரிய பந்தலினை மணல் பரப்பி, விளக்கேற்றி, மாலைகளால் அலங்கரிக்கின்றனர். தண்ணீர் நிறைந்த பானைகளுடன் முன்னுக்கும் பின்னுக்கும் பெண்கள் வர மணமகள் மனப்பந்தலுக்கு வருகின்றாள். ஆனால், இப்போது தோழிகள் சூழ்ந்து வர பெண் நடனமாடி மணப்பந்தலுக்கு வருகின்றாள் என்பது வேறு விடயம். அதைவிடுத்து நாம் சங்க காலத்துக்குள் வருவோமானால், வயது முதிர்ந்த பெண்டிர் ஈரமான பூவும் நெல்லும் தூவி ‘பெரும் மனைக் கிழத்தியாக வாழ்வாயாக!’ என வாழ்த்தித் திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். சங்க காலத்தில் அந்தணர் இல்லை; தாலி இல்லை; முழுக்க முழுக்கப் பெண்களே முன்நின்று திருமணத்தை நடத்தியிருக்கின்றனர். இதிலிருந்து அன்றைய பெண்ணின் முதன்மை நிலையினை நாம் அறிந்து கொள்ளலாம்.

அதுபோலவே, பெண் வீரமங்கையாக வலம் வந்திருக்கின்றாள். புறநானூறு 279-ல் ஒக்கூர் மாசாத்தியார் எனும் புலவர் கூறுகின்றார்.’ இரண்டு நாள் முன்னர் இவளது அண்ணன் யானையை வீழ்த்திப் போரில் மாண்டான். நேற்று நடந்த போரில் இவளது கணவன் பகைவரின் அணிவகுப்பு பிளவுபடும்படி முன்னேறிப் பாய்ந்து மாண்டான். இதோ இன்று, போர்ப் பறை கேட்டவுடன் ஆவலோடு தன் ஒரே மகனை அணைத்து, தலை சீவி, வெண்ணிற ஆடை அணிவித்து, வேல் கொடுத்து அனுப்புகின்றாள் அந்தப் பெண்’ எனப் பாடுகின்றார்.

அடுத்து மகட்பாற் காஞ்சி என்றொரு துறை இருக்கின்றது. சங்க காலத்தில் பெண் தர மறுக்கும் மன்னர்களுக்கு எதிராக பெரும் போர்கள் நடந்திருக்கின்றன. தனது மகளைப் பெண் கேட்டு வரும் தலைவனுக்கு எட்டு வகையான ஒழுக்கங்கள் இருக்கின்றனவா? என மன்னனாக இருக்கும் தந்தை பார்த்திருக்கின்றார். அப்படியில்லாத பட்சத்தில், பெண் கொடுக்க அவர் மறுக்கும்போது, பெண் கேட்டு வந்த மன்னன் போர் தொடுத்திருக்கின்றான். இப்படியான போர் நடைபெறும் போது, மகள்களைப் பெற்ற தந்தையர் மடிந்திருக்கின்றனர். இது அரசர்களுக்குத் தானே! சாதாரண குடிப்பெண்கள் எப்படி வாழ்ந்திருக்கின்றார்கள்? என்ற கேள்வி எங்களுக்குள் தோன்றலாம்.

சங்ககாலத்தில் பெண்ணுக்கு ஆண்தான் வரதட்சனை கொடுத்து திருமணம் செய்திருக்கின்றான். அகநானூறு 280-இல் ‘இந்தப் பெண்ணை, பெறற்கரிய பொருள்களைக் கலம் கலமாக கட்டிக் கொடுத்தாலும் இவளைப் பெற முடியாது. ஆக, நான் எனது ஊரை விட்டு வந்து, இவள் தந்தை உப்பு உழவு செய்யும்போது, உடனிருந்து உழைக்கலாம். கடலில் இவள் தந்தையோடு மீன்பிடிக்கச் செல்லலாம். அவனோடு படுத்து உறங்கலாம். பணிந்து நடக்கலாம். அவனோடு கூட இருக்கலாம். அப்படி இருந்தால் அவன் பெண் தரக்கூடும் என நினைக்கின்றேன். ஏனெனில், கடலில் எடுக்கும் முத்துக்களைத் தரையில் பங்கிட்டு கொடுக்கும் பண்பாளன் அவன்.’ என அந்தப் பாடலில் வருகிறது. எப்படிப் பெண்ணானவள் பெறற்கரியவளாக இருந்திருக்கின்றாள்? என இந்தப் பாடல் மூலம் நாம் காணலாம்.

ஆனால், பின்நாளில் ஆரியத்தாக்கம் வந்ததால், பதிவிரதை தர்மம் வருகின்றது. நளாயினி கதை நமக்குள் புகுத்தப்படுகின்றது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று, ஆண்டாண்டு காலம் அடக்கப்பட்ட பெண்ணை மீண்டெழப் பாடிய புலவர்களாகப் பின்னர் தமிழ் மண்ணில் தோன்றினர். இருண்ட காலம் என இலக்கியங்களுக்கு உண்டு. அது போலவே, இருண்ட

காலம் எனப் பெண்களுக்கும் இருந்திருக்கின்றது என கூறலாம்.

இன்று பல இடர்களைக் கடந்து வந்து வீறு நடை போடும் ஒவ்வொரு பெண்ணுமே, ஆளுமை கொண்டவள் தான். இன்றைய பெண்ணைப் பற்றிய இலக்கியங்கள் பலப் பல வர வேண்டும். இப்போது நாம் சங்க காலப் பெண்ணைப் பற்றிப் பேசுவது போல, பின்னாளில் பேசப்பட வேண்டும். ஆண், பெண் என்ற பாகுபாட்டுச் சிந்தனை அழிந்து போக வேண்டும்.

பிரசவ வலியை விட எந்த வலியும் பெரிதல்ல என்பது அறிஞர்கள் கண்ட உண்மை. அப்படியானவள் எதைச் சாதிக்க முடியாது என்ற கேள்வியை வைத்து முடிகிறது இந்த பதிவு.



jeyasri@thaiveedu.com





# பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதம்

– சிவா மாலதி

2

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இஸ்ரேல் தொடர்ச்சியாக பலஸ்தீனத்தின்மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றது. மக்கள் தொகையாகக் கொல்லப்பட்டுள்ளதுடன், அவற்றில் அநேகர் பெண்கள் மற்றும் சிறுவர்கள். இஸ்ரேல் மனிதாபிமான உதவிகளைத் தடைசெய்து வருவதனால் பசி, பட்டினியினாலும், வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவத்துறையினர் இலக்குவைத்துத் தாக்கப்படுவதனால் போதிய மருந்துகளோ மருத்துவ பராமரிப்போ இன்றிய நிலையிலும் குழந்தைகள் உட்பட பலர் உயிரிழக்கும் நிலை நிலவுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் விசேட குழுவின் கண்டுபிடிப்பு முடிவுகளின்படி இஸ்ரேலின் யுத்த முறைகள் இனப் படுகொலையுடன் தொடர்புபட்டிருப்பதாக தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையானது, இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் பலஸ்தீனப் பெண்கள் மற்றும் சிறுமியர்கள்மீது மேற்கொள்ளப்படும் பாலியல் மற்றும் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளை மேற்கொண்டுள்ளதாக வெளிப்படுத்தியுள்ளது.

பெண்கள் மாதாந்த குருதிப்போக்கு ஏற்படும் காலங்களில் பழைய துணிகள், துடைக்கும் துண்டுகள் (towels) மற்றும் அவர்கள் வசிக்கும் கொட்டகைகளின் மூலைப் பகுதிகளை அணையாடைகளாகப் பயன்படுத்துகின்றனர். இந்தக் கால கட்டத்தில் அணையாடைகள், சுத்தமான நீர், அந்தரங்கத்தினைப் பேணக்கூடிய நிலை மற்றும் ஏனைய சுகாதார வசதிகள் இல்லாது பெண்கள் யுத்தம், இடப்பெயர்வு, பட்டினி, தொடர்ச்சியான பாதுகாப்பின்மை, பயம் மற்றும் பதட்டம் போன்றவற்றிற்கு மேலதிகமாக மாதாந்த குருதிப்போக்கினால் ஏற்படும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர். இத்தகைய நிலையினைச் சமாளிக்கும்பொருட்டு மாதாந்த குருதிப்போக்கினை பிற்போடுவதற்கான மாத்திரைகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர். இம்மாத்திரைகள் பக்கவிளைவுகளைக் கொண்டிருக்கின்றன. காஸாவில் 700,000 பெண்களும் சிறுமியரும் மாதாந்தம் குருதிப்போக்கினை அனுபவிக்கின்றனர். பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உதவி முகவரான Unrwa-இனால் அளிக்கப்படும் தங்குமிடங்களில் சராசரியாக 486 பேருக்கு ஒரு மலசலகூடமே உள்ளது. தற்போது இந்த அமைப்பும் இஸ்ரேலினால் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், பெண்கள் எதிர்கொள்ளும் அவலம் மேலும் அதிகரித்திருக்கும் நிலையே காணப்படுகின்றது. யுத்த சூழலின் காரணமாக பெண்களின் ஹோர்மோன் மாற்றங்களினால் ஏற்படும் உடல் மற்றும் உளரீதியான அவஸ்தைகள் அதிகரித்திருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட குழுவின் கண்டுபிடிப்பு முடிவுகளானவை, அத்தியாவசியப் பொருட்கள்மீதான அதிகளவிலான தடை மற்றும் சுகாதார பராமரிப்பு வசதிகள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றின் காரணமாக காஸாவில் கருச்சிதைவுகள் மற்றும் தாய்மாரின் இறப்பு போன்றவை மூன்று மடங்காக அதிகரித்திருப்பதாகவும், இறந்து பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் காஸாவிலுள்ள ஒரேயொரு மகப்பேற்று சிகிச்சை நிலையமும் தாக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிட்டுள்ளது.

சாதாரண வாழ்க்கையை வாழ்ந்த மக்கள் இன்று நிலமற்று, அடிப்படை வசதிகளற்று, தினமும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களோடும், உயிர் அச்சுறுத்தல்களோடும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் சூழலில் இங்கு வாழும் பெண்களின் நிலை மேலும் அவலத்திற்குரியதாயிருக்கின்றது. அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு ஆயுதம் மற்றும் ஏனைய ஆதரவுகளை வழங்கி வருகின்றது.

பல இஸ்லாமிய நாடுகள் பெண்கள் உரிமைகள் தொடர்பில் பிற்போக்கானவையாக எடுத்துக்காட்டப்பட்டாலும், இலங்கை போன்ற ஆசிய நாடுகள் முதல் அமெரிக்கா போன்ற மேலைத்தேய நாடுகள்வரை ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்றே கூறவேண்டும். கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இஸ்ரேல் பலஸ்தீனத்தின் மீது தாக்குதல்களை நடத்துவதற்கும், இன அழிப்பினை மேற்கொள்வதற்கும் உடந்தையாயிருக்கும் அமெரிக்கா தனது நாட்டுப் பெண்களுக்கு இருந்த கருக்கலைப்பிற்கான அரசியலமைப்புச் சட்டரீதியான பாதுகாப்பினை 2022-ல் நீக்கியிருக்கின்றது. அமெரிக்காவில் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும் பெண்களின் கருக்கலைப்பிற்கான உரிமை தொடர்பான விவாதம் மேலெழுவதனையும், இந்த விடயம் தொடர்பில் வேட்பாளர்களின் நிலைப்பாடானது அவர்களை அமெரிக்கர்கள் தேர்வு செய்வதில் செல்வாக்குச் செலுத்துவதனையும் காணலாம். இந்தமுறை இடம்பெற்ற தேர்தலிலும் பெண்களின் உடல் தொடர்பான முடிவுகளை அவர்களே மேற்கொள்ள வேண்டும் என்கின்ற pro-choice எனும் நிலைப்பாட்டினை ஜனாதிபதி வேட்பாளரும் முந்திய அமெரிக்க துணை ஜனாதிபதியுமான கமலா

ஹாரிஸ் கொண்டிருந்தார். தற்போது ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் இதற்கு முற்று முழுதாக எதிரான நிலைப்பாட்டினை, அதாவது pro-life எனப் படுகின்ற உயிருக்கான ஆதரவு நிலைப்பாட்டினை கொண்டிருந்தார். pro-life என்பது கருக்கலைப்பிற்கு எதிரான நிலைப் பாடாகும். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் பாலியல் வன்கொடுமை குற்றவாளி



யாக நிரூபிக்கப்பட்டவராவார். pro-life எனும் நிலைப்பாடு வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும் 'உனது உடல் எனது தெரிவு' - 'your body my choice' எனும் அடிப்படையினைக் கொண்டதாகும். இதன் பின்னணியினைப் புரிந்துகொள்வதற்கு Roe Vs Wade வழக்கு தொடர்பில் அறிந்துகொள்வது அவசியமாகும். பெண்களுக்கு அவர்களின் உடலைக் கட்டுப் படுத்துவதற்கான முழு உரிமையும் (Autonomy) உண்டு, அதனடிப்படையில் கருவைக் கலைக்கும் உரிமையென்பது பெண்ணின் உடல்சார் உரிமை என்பதை அங்கீகரித்து ஐக்கிய அமெரிக்காவின் உயர் நீதிமன்றமானது கருக்கலைப்பிற்கான உரிமையானது அரசியலமைப்புச் சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை என்கின்ற வரலாற்று முக்கியத்துவமுடைய தீர்ப்பினை 1973-ம் ஆண்டு Roe Vs Wade வழக்கில் வழங்கியது. அமெரிக்க உச்ச நீதிமன்றமானது ஏறக்குறைய 50 ஆண்டு காலமாக நடைமுறையிலிருந்த கருக்கலைப்பு உரிமைக்கான அரசியலமைப்புச் சட்டரீதியான பாதுகாப்பினை 2022-ம் ஆண்டு ரத்துச் செய்தது. அதன் பின் அமெரிக்காவிலுள்ள மாநில அரசுகள் கருத்தடையினை மேற்கொள்வதில் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன. கருக்கலைப்புமீதான தடையின் காரணமாக இதுவரை பல பெண்கள் உயிரிழந்திருக்கின்றார்கள், கருச்சிதைவு ஏற்படும் சந்தர்ப்பங்களில்கூட மருத்துவப் பராமரிப்பினை வழங்க மறுத்ததன் காரணமாக ஏற்பட்ட இறப்புக்கள் தொடர்பிலும் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண்ணிலைவாதிகள் சுட்டிக்காட்டியவண்ணமே உள்ளனர்.

ஈராக் சிறுமியர்கள் சட்டரீதியாக திருமணத்திற்கான சம்மதத்தினை வழங்குவதற்கான வயதினை 18-லிருந்து 9-ஆகக் குறைப்பதற்கான திருமணச்சட்ட மாற்றத்தினை முன்மொழிந்துள்ளது. தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டத்தின்படி ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமான திருமண வயது 18-ஆக இருப்பதுடன், திருமணத்தினை மேற்பார்வை செய்யும் பொறுப்பு நீதிமன்றத்திற்கு இருப்பதனையும் உறுதிப்படுத்துவதுடன் பல்தாரமணம் தொடர்பிலும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தத்தின்படி ஆண் பிள்ளைகளுக்கான திருமண வயது 15-ஆகவும், பெண் பிள்ளைகளுக்கான திருமண வயது 9-ஆகவும் குறைக்கப்படுவதுடன், திருமணத்தினை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை சிவில் நீதிமன்றத்திலிருந்து மத நிறுவனங்களுக்கு கைமாற்றுகின்றது. இச்சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படுகையில் அது பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை மீறுவதாக அமைவதுடன் மிகவும் அவசியமான உரிமைகளான விவாகரத்து (Divorce), கட்டுக்காவல் (Custody) மற்றும் வழியுரிமை (Inheritance) போன்ற பெண்களின் உரிமைகளையும் அது நீக்குவதாக அமையும். இது பெண்கள் உரிமைகளையும் பால்நிலை சமத்துவத்தினையும் பின்னோக்கி நகர்த்தும் ஒரு முனைப்பாகும். ஜேமன் (Yeman) போன்ற சில நாடுகளிலுள்ள சில குடும்பச் சட்டங்கள் 9 வயதான சிறுமியர் திருமணம் செய்வதை அனுமதிக்கின்றன. இலங்கையில் 1995-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தமானது திருமண வயதினை 18-ஆக அதிகரித்திருக்கின்ற போதிலும், இலங்கையில் வழக்கில் உள்ள முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுமியரின் திருமண வயது வரையறுக்கப்படவில்லை. பொதுவாக முஸ்லிம் பெண்களின் திருமண வயது 12 ஆக நம்பப்படினும் நடைமுறையில் 12 வயதுக்குக் குறைந்த முஸ்லிம் சிறுமியர் காதி நீதிபதியின் சம்மதத்துடன் திருமணஞ் செய்து கொடுக்கப்படலாம். அந்த வகையில் இலங்கையையும் இவ்விடயத்தில் வேறுபடுத்த முடியவில்லை. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பான கோரிக்கைகள் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பெண்கள் மற்றும் சிறுமியர் தொடர்ந்தும் இதனால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆயினும் இத்தகைய பாரபட்சமான சட்டங்களைத் திருத்துவதற்கான உடனடித் தேவை அரசாங்கங்களினால் இன்னும் உணரப்படாததொன்றாகவே இருப்பதென்பது பெண்கள் மற்றும் சிறுமியர்களின் உரிமைகள் சார்ந்து நிலவும் பக்கச்சார்பு மற்றும் அலட்சியப்போக்கினையே வெளிப்படுத்துகின்றது.

இவை தவிர ஆப்கானிஸ்தானில் தலிபான்களினால் மேற கொள்ளப்படும் பெண்கள் மீதான அடக்குமுறைகள், பெண்கள் மீதான தீண்டாமை (gender apartheid), ஈரான் அரசாங்கத்தின் பெண்கள் மீதான அடக்குமுறைகள்.., உதாரணமாக, பொது வெளிகளில் ஹிஜாப் (முக்காடு) அணிவதை கட்டாயமாக்கும் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத பெண்களுக்கென மனநல சிகிச்சை நிலையங்களை உருவாக்குவதற்கான திட்டங்களை கொண்டிருப்பதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளமை போன்றவை அரசு எவ்வாறு, எந்த அளவிற்கு பெண்களையும் பெண்களது உடல்களையும் கட்டுப்படுத்துகின்றது என்பதற்கான மேலும் சில உதாரணங்களாகும். இதுபோல, லிபிய அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஹிஜாப் (முக்காடு) அணிவதை கட்டாயமானதாக்குதல், பெண்கள் உரிமைகள் மற்றும்



அடிப்படை சுதந்திரங்களை மட்டுப்படுத்தும் திட்டங்களானவை சட்டமாக்கப்படலாம் எனும் பயம் அங்கு வாழும் பெண்கள் மத்தியில் நிலவுகின்றது. இதனால் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதுடன் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகள் அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது.

பெரும்பாலும் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகள் முன்னிறுத்தப்பட்டாலும், இவை பெண்கள் மீதான கட்டமைப்புரீதியான வன்முறைகளிலிருந்து திசைதிருப்பும் ஒரு செயற்பாடாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது. பெண்களின் உடல் மீதான அரச பயங்கரவாதம், அரச கட்டுப்பாடு போன்றவவை பெண்களின் மனித உரிமைகளை எந்தவொரு விதத்திலும் கருத்தில் கொள்பவையாக அல்லாமல் பெண்களை வெறுமனே மகப்பேற்றினை மேற்கொள்ளும் இயந்திரங்களாக அணுகுவதுடன், அவர்களின் உடல் மீதான கட்டுப்பாடுகளையும் சட்டங்களையும் ஏற்படுத்தி அவற்றினை மத நம்பிக்கைகளினூடாக மேலும் மேலும் வலுப்படுத்தி வருகின்றது. இதில் அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், இலங்கை என்ற வேறுபாடுகள் இல்லை. மதம் பெண்கள் மீதான அரச ஒடுக்குமுறைகளுக்கெதிரான அங்கீகாரத்தினை மக்கள் மத்தியில் பெற்றுக் கொடுப்பதுடன், இத்தகைய ஒடுக்குமுறைகள் தொடர்ந்திருப்பதையும் உறுதிப்படுத்துகின்றது. ஓர் இனத்தினை அழிப்பதற்கும் பெண்களின் மகப்பேறுசார் சுகாதாரம் இலக்கு வைத்து தாக்கப்படுவதன் மூலம் கருவியாக்கப்படுவதைக் காண்கின்றோம். ஒரு சமூகத்தை இழிவுபடுத்துவதற்கான குறியீடாக அச்சமூகத்தைச் சேர்ந்த பெண்களையும், பெண்களின் உடல்களையும் இழிவுபடுத்துவதைக் காண்கிறோம். உதாரணமாக, சூடானில் இடம்பெறும் உள்நாட்டு யுத்தத்தில் ஆயுதக் குழுக்களினால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுவதிலிருந்து தப்புவதற்காக 130-க்கு மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளார்கள்.

அந்த அடிப்படையில் 16 நாள் செயல்வாதமென்பது பெண்களின் உடல்மீதான தன்னாட்சியினைக் கேள்விக்குட்படுத்துகின்ற சக்திகளுக்கெதிரானதாகும், பெண்களின் உரிமைகளை மீறுகின்ற சக்திகள் - அது தமது நாட்டு அரசாக இருப்பினும், காலனித்துவ ஆக்கிரமிப்பு சக்திகளாக இருப்பினும் அதற்கு எதிரானதாகும், யுத்தம், இராணுவமயமாக்கம், ஆயுதவியாபாரம், ஏகாதிபத்திய காலனித்துவம் போன்றவற்றிற்கு எதிரானதாகும்.

பூகோளரீதியாக வடக்கிலுள்ள நாடுகள் மற்றும் தெற்கிலுள்ள நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி அடையாத நாடுகள் என்கின்ற வேறுபாடுகள் எவையும் பெண்கள் மீதான வன்முறை மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு இல்லை என்பதனையே காணக்கூடியதாக உள்ளது. அந்தந்த நாட்டின் வளங்கள், ஒவ்வொருவரதும் கலாசாரம், வர்க்கம், இனம் போன்ற அடையாளங்களினடிப்படையில் இந்த அனுபவங்களில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், அடக்குமுறை மற்றும் வன்முறை என்பது பெண்களாக, சிறுமியராக அனைவரும் வெவ்வேறு மட்டங்களில் அனுபவிக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இவை தவிர அன்றாடம் இடம்பெறும் வன்முறைகள் இணைய வழியிலும் பிரதிபலிக்கப்படுவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் இந்த ஆண்டிற்கான 16 நாள் செயல்வாதம் எத்தகைய ஒன்றிணைவினைக் கோரி நிற்கின்றது ?

(தொடரும்...)

**உசாத்துணை:**

- https://iwda.org.au/what-are-the-16-days-of-activism-and-why-should-you-care/#:~ :textஸ்ரீIn%20June%201991%2C%20the%20Centre,Activism%20Against%20Gender%2DBased%20Violence.
- https://www.ohchr.org/en/documents/reports/ahrc5719-situation-human-rights-sri-lanka-comprehensive-report-united-nations
- https://www.npr.org/sections/goatsandsoda/2024/01/11/1224201620/another-layer-of-misery-women-in-gaza-struggle-to-find-menstrual-pads-running-wa#:~ :textஸ்ரீThe%20U.N.,toilets%20because%20of%20the%20war.
- https://www.ohchr.org/en/press-releases/2024/11/un-special-committee-finds-israels-warfare-methods-gaza-consistent-genocide
- https://timesofindia.indiatimes.com/world/rest-of-world/women-in-sudan-resort-to-suicide-to-escape-rapes-sexual-violence-amid-conflict/articleshow/114843480.cms



siva.malathy@thaiveedu.com

# கூட்டுக் கவிதைத் தொகுப்பு

## - சி. ரமேஷ்

கூட்டு அல்லது கூட்டுக் கவிதைத் தொகுப்பு என்பது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டு வெளிவந்த ஆக்கபூர்வமான கவிதைகளின் தொகுப்பெனலாம். 1980களுக்குப் பின் ஈழத்தின் பல்வேறு பெண் கவிஞர்களின் கவிதைகளை மட்டுமே தாங்கி வெளிவந்த தொகுப்புக்களாகச் சொல்லாத சேதிகள் (1986), மறையாத மறுபாதி (1992), கனல் (1997), உயிர்வெளி(1999) எழுதாத உன் கவிதை (2001), வெளிப்படுத்தல்(2001), மை(2007), பெயல் மணக்கும் பொழுது(2007), இசை பிழியப்பட்ட வீணை(2007), ஒலிக்காத இளவேனில் (2009) முதலானவற்றைக் கூறலாம். பறத்தல் அதன் சுதந்திரம்(2001), மை(2007) முதலான தொகுப்புக்கள் தமிழ்நாட்டுப் பெண் கவிஞர்களின் கவிதைகளையும் தாங்கி வெளிவந்தது.

சொல்லாத சேதிகள் சுவட்டில் வெளியான 'மறையாத மறுபாதி' புகலிடத்திலிருந்து பதினெண் பெண் கவிதாயினிகளின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த முதல் தொகுப்பாகும். பெண் விடுதலையின் தார்மீகக்குரலாய் எழுந்த இத்தொகுப்பு இதுவரை ஈழத்தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள் எழுதத் தயங்கிய விஷயங்களையும் எழுப்பத் தவறிய கேள்விகளையும் வெளிப்படுத்தி நின்றது. பெண் ஒடுக்கு முறைக்கு எதிரான ஆணாதிக்க வழிவந்த பழமைவாதக் கோட்பாட்டின் வகுப்புவாத ஏற்றத்தாழ்வுகளையும் வெளிப்படுத்தும் வண்ணம் எழுந்த மறையாத மறுபாதி பெண்ணுரிமை, பெண் அகதி, பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், யுத்தம், போலிச் சமூகக் கட்டுமானம், ஆண்ணாதிக்க எதிர்ப்பு, சீதனக்கொடுமை, கல்யாணச் சந்தையில் தரகர்களால் விலை பேசி விற்கப்படும் பெண்களின் உளநெருக்கடிகள் முதலான இன்னோரன்ன விடயங்களையும் பேசுகின்றன. பெண்ணியக் கருத்துக்களினூடாகப் பெண்மன உணர்வுகளையும் அதன் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் கூறிநிற்கும் இத்தொகுப்பு உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் அதிலிருந்து விடுபடுதலையும் விளக்கி நிற்கிறது. சொல்லாதசேதிகளில் இருந்த கனதியையும் காத்திரத்தன்மையையும் இத்தொகுதியில் காணமுடியவில்லை. தெளிவான விடயஞானமின்றி கவிதை குறித்தான ஆழமான பரிட்சயமுமின்றி உரிமைகளை மட்டுமே பிரகடனங்களாகவும் கோசங்களாகவும் வெளிப்படுத்தும் இத்தொகுப்பில் உணர்வுச் செறிவும் கவிதையின் கட்டிறுக்கமும் தளர்ந்தே காணப்படுகின்றன. தமிழ் எழுத்தாளர்கள், குறிப்பாகப் பெண் எழுத்தாளர்கள் பலர் எழுதத் தயங்கிய விடயங்கள் பலவற்றை இத் தொகுப்பு உரைத்தது. இத்தொகுப்பில் வெளிவந்த கவிதைகள் பெண்விடுதலை குறித்தான சிந்தனைகளையும் நிறவெறிக்கெதிரான எதிர்ப்பின் குரலையும் பதிவு செய்தன.

மல்லிகாவின் கவிதை, பேச்சுரிமைக்கூடாக நாங்களும் மனிதர்கள் என்பதை நினைவூட்ட கோசல்யாவின் 'ஒருசத்தியம்', மல்லிகாவின் 'ஏனிந்த வித்தியாசங்கள்', கல்யாணியின் 'பல மான கேள்விகள்' முதலான கவிதைகள் இளம் பருவத்தில் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

*உயிர் தப்ப வேண்டுமானால்*
*ஊரைவிட்டு ஓடுவோம்.*
*ஆனால் விலை கொடுத்து*
*வாங்கியவனுடன் மட்டும்*
*ஓட நான் தயாரில்லை...*

என்ற உமையாளின் வரிகள் சீதனக் கொடுமைகளைச் சாடுபவையாகக் காணப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட பெண்களின் அறச்சீற்றமாக ஒலிக்கும் இத்தொகுப்பு அநீதிக்கெதிரான போர்குரலாகவும் வெளிப்படுகிறது.

தமிழகத்திலிருந்து முதன்முதலில் வெளிவந்த 'பறத்தல் அதன் சுதந்திரம்' தொகுப்பு இலங்கை, இந்திய, புலம்பெயர் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. ஐம்பத்திரண்டு பெண்கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வந்த இத்தொகுப்பு பெண்ணிருப்பைத் தனக்கான இயங்கு வெளிக்குள் மொழியினூடாக சாத்தியமாக்கியுள்ளது. சமூக மறுதலிப்பும் நிராகரிப்பினூடாக எழும் வலியும் ஆற்றாமையின் துயர்களாக இத்தொகுப்பெங்கும் விரவிக் கிடக்கின்றன. காவ்யாவால் வெளியிடப்பட்ட இத்தொகுப்பின் தொகுப்பாசிரியர் க்ருஷாங்கினி, உதவியாசிரியர் மாலதிமைத்ரி ஆவார். பெண்களது சுயாதீனம், தனித்துவம், சுய இயல்பு, காதலுணர்வு, காமவேட்கை, உடலரசியல், ஆணாதிக்க எதிர்ப்பு, எனத்தனித்துவ அடையாளங்களுடன் வெளிவந்த இத்தொகுப்புக்கு கனதியான முன்னுரையை வ. கீதா எழுதியுள்ளார். இத்தொகுப்பில் ஆழியாள், ஊர்வசி, ஔவை, சங்கரி, சன்மார்க்கா, சிவரமணி, சுமதிரூபன், செல்வி, ரஞ்சனி, ரேவதி போன்றோரின் ஈழத்துக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. ஆயினும் இத்தொகுப்பு எழுத்துப் பிழைகளுடனும் ஆள்மாறாட்டக் கவிதைகளுடனும் (சிவரமணியின் 'வையகத்தை

வெற்றி கொள்ள' என்னும் கவிதை கவனக் குறைவால் சன் மார்க்காவின் கவிதை எனப் பிரசுரிக்கப்பட்டது) வெளிவந்தது. இதுபோல சங்கரி, ஊர்வசி, ஔவை ஆகியோரின் கவிதைகளில் வசனங்கள் விடுபட்டும் சில அடிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டும் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் போராட்டச்சூழலில் இருபத்தாறு பெண்களின் அனுபவங்களை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்திய தொகுப்பாக 'எழுதாத உன் கவிதை'யைக் கூறலாம். போராளிகளின் வாழ்வையும் போருக்குள் வாழ்பவரின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் எடுத்துரைக்கும் இந்நூல் கட்டிறுக்கமற்று எளிமையான மொழி நடையில் இயல்பான நடைமுறை வாழ்வைச் சித்திரித்துச் செல்கின்றது. தாம் வாழ்ந்த காலத்தில் தம்முடைய மனத்தில் ஏற்றி வளர்த்த தீ அணையக்கூடாது என்பதற்காவும் தாம் நடந்து வந்த கரடு முரடான பாதையை அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் வகையிலும் உருவாக்கப்பட்ட தொகுப்பே 'எழுதாத உன் கவிதை' எனலாம்.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் நேரடித்தன்மையானவை. புதிய உணர்திறனின்றி பெண்களால் படைக்கப்பட்ட எளிமையான கவிதைகள். உண்மைநிலைகள் உணரப்படவேண்டும் என்ற உத்வேகத்தில் களத்தில் நின்ற பெண்களாலும் சமூகத்தில் பொதுச் சிந்தனையுடன் இயங்கிய பெண்களாலும் படைக்கப்பட்டன. இக்கவிதைகள் சாதாரண வாசகரைச் சென்றடையவேண்டும் என்ற நோக்கத்துக்கமைய எழுதப்பட்டவை. ஈழப்பெண் போராளிகளின் நட்பு, பொறுப்புணர்வு, உயிரிழப்பு, இடம்பெயர்வு, வாழ்வின் வலி, என விரியும் இக்கவிதைகள் மக்கள் வாழ்க்கையே புரட்டிப் போட்டது. தேசவிடுதலைக்கான எத்தனமாகவும் அடக்குமுறைக்கு எதிரான குரலாகவும் விளங்கும் இக்கவிதைகள் இனத்துவப் பிணக்குகளின் புண்உமிழ் குருதியில் எழும் போர்ப் பரணியாய் துலங்குகின்றன. தேசவிடுதலையை, உயிர் வாழ்வதற்கான போராட்டத்தை அரசியல் நெடி கலந்து வெளிப்படுத்தும் இத்தொகுப்பு ஈழத்துப் பெண்கவிஞர்களின் பிறிதொரு பரிமாணத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. இலட்சியத்துக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் இனத்துவம், தேசியவாதம் என்ற அடிப்படையில் வன்முறைகளுடன் பொது எதிரியை அணுகும் பெண்ணிலைவாதச் சிந்தனையின் கூட்டு மனோபாவத்தை இத்தொகுப்பு துல்லியமாக வெளிப்படுத்தி நின்றது. காலாதிகாலமாகப் பேணிவந்த மரபுகளை, பாரம்பரிய விழுமியங்களை, இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை இத்தொகுப்பு அர்த்தமற்றதாக்கியது.

சமூகம் தந்த வலிகளையும் தாய்மண் தந்த ஆறாத பற்றுகளையும் சொல்லிலும் செயலிலும் சுமக்கும் பெண்ணுணர்வுகளின் வெளிப்பாடே 'பெயல் மணக்கும் பொழுது' ஆகும். ஆமிரபாலி (ஹரிஹரசர்மா), ஆதிரா(கற்சுறா), நாச்சியாதீவு பர்வீன், யூவியா தவிர்ந்த எண்பத்தெட்டு பெண்கவிஞர்களின் (கற்பகம் யசோதரா, பிரதீபா தில்லைநாதன் இருவரும் வெவ்வேறு நபர்களாகத் தொகுப்பில் குறிப்பிட்டிருந்தாலும் அவ்விருவரும் ஒருவரே) கவிதைகளை 280 பக்கங்களில் அ. மங்கை அவர்கள் தொகுத்துத் தந்துள்ளார். ஆயினும் ஈழத்துக் கவிதைகளுக்கூடாக நன்கு அறியப்பட்டவர்களாகக் கருதப்படும் கமலா வாசுகி, மாதுமை, சிமோன்தி, சலனி, மலரா, சாரங்கா, ஜெபா, மதனி, பாலரஞ்சனிசர்மா போன்ற கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்படாமல் போனது குறைபாடாகவே உள்ளது.

கமலா வாசுகியின் அட்டை படத்தைத் தாங்கி வெளிவந்த இத்தொகுப்பில் ஆழமான உணர்ச்சி செறிவும் மொழிச்சிக்கனமும் கொண்ட நேர்த்தியான கவிதைகள் பலவற்றைக் காணலாம். போர்க்காலத்தின் நெருக்கடிகளுக்கும் கருத்துச் சுதந்திர மறுப்புகளுக்கும் மத்தியில் இராணுவரீதியான வன்முறையையும் மரணத்தையும் அதனால் விளையும் வலியையும், மக்கள் எதிர்நோக்கிய இடம்பெயர்வையும், பெண்ணின் சுய இருப்பையும் உள்ளுணர்வின் அகத்தில் பதியும் காதலையும் இத்தொகுப்பு பாடிநிற்கிறது. மண்ணுக்கான போராட்டத்தில் வன்மமே வாழ்வாகிப் போன சூழலில் மதம், பண்பாடு, கலாசாரம், குடும்பம், ஒழுக்கம், சாதியம், இயக்கம் போன்றன பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடுகின்ற வன்முறையையும் அவ்வதிகார மறுதலிப்புக்கான இருப்பையும் இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் பதிவு செய்கின்றன.

பெண்களின் படைப்புக்களை ஊக்குவித்து, அவர்களின் கவிதைகளை வெளிப்படுத்தும் நோக்கில் 'மை', 'இசை பிழியப்பட்ட வீணை', 'பெயரிடப்படாத நட்சத்திரங்கள்' போன்ற தொகுப்புக்கள் வெளிவந்தன. 'ஊடறு' வெளியீடாக வெளிவந்த இத்தொகுப்புக்களில் 'மை' 2004 காலப்பகுதியில் இருந்து 2007 காலப்பகுதி வரை ஊடறு இணையத்தில் எழுதிய 35 கவிஞைகளின் 105 கவிதைகளைத் தாங்கி வந்த தொகுப்பாகும். இந்தியா, இலங்கை, மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் பெண்களின் உள்ளுணர்வுகளின் தடத்தில் எழுந்த இக்கவிதைகள் பெண்ணிய சிந்தனாவழிக் கட்டமைக்கப்பட்டவை. உள்முரண்பாடுகளாலும் போர் அழுத்தங்களாலும் சுயமிழந்து இயல்பு வாழ்வை அவாவும் இக்கவிதைகள் ஆண்மையவாதத்தின் எதிர்ப்பின் குரலாகவும், போருக்குள் உழன்று அதன் துன்பங்களை அநுபவித்த பெண்களது வேதனைகளின் பிரதிபலிப்பாகவும், சுயமிழந்து தம் வாழ்வை மீளக் கட்டமைத்துக் கொள்ளும் பெண்களின் மனக்கொதிப்புக்களாகவும், அதிகார மையவாதத்தை உடைத்து சிறகடித்துப் பறக்க விளையும் பெண்ணுணர்வுகளின் வெளிப்பாடாகவும் அமைந்தன. துயரம் நிறைந்த அனுபவங்களில் இருந்து தன்மானத்துடனும் வலுவுடனும் எழும் பெண்களின் நுண்ணிய மனவோட்டத்தை இத்தொகுப்பெங்கும் காணலாம்.

இலங்கையில் மலையகத்தில் எழுத்துப்பதிப்பு முயற்சிகள் அருகிப்போன சூழலில் பெண் எழுத்துக்களுக்குக் களம் அமைக்கும் முயற்சியாக உருவாக்கப்பட்ட தொகுப்பே 'இசை பிழியப்பட்ட வீணை' ஆகும். பெருந்தோட்டத்துறை கலாசார பண்பாட்டுச் சூழலில் ஆணாதிக்க ஒடுக்குமுறைக்குள்ளாகி அல்லற்பட்டு வாழும் பெண்களின் வாழ்வியலை இத்தொகுப்பில் இடம்பெறும் ஐம்பத்துமூன்று கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. பேரினக் கொடுமைக்குள்ளும் வர்க்கப் பிளவுக்குள்ளும் அகப்பட்டு, நலிவுற்று உழைப்பு பிழியப்பட்ட மலையகப் பெண்களின் வாழ்க்கையையும் அரசியல், பொருளாதாரத்தை அண்டிப் பிழைக்கும் அவர்களின் மனோபாவத்தையும் இத்தொகுப்பு எடுத்துரைக்கிறது. 'இசை பிழியப்பட்ட வீணை' என்ற சொற்றொடரின் பின்னால் மலையகப் பெண் தொழிலாளிகளின் உழைப்புச் சுரண்டலும் வன்முறைக்குள் அகப்பட்ட அவர்களின் வாழ்வும் வலியும் காணப்படுகின்றன. அதாவது ஆணாதிக்க ஒடுக்குமுறைக்குள்ளாகி கொழுந்துக் கூடைச் சுமையை முதுகிலும், குடும்பச் சுமையை தலையிலும் சுமந்தபடி வாழும் பிறவி உழைப்பாளர்களான மலையகப் பெண்களின் உழைப்பு வீட்டுக்குள்ளும், வெளியிலும் சுரண்டப்பட்டு அவர்களின் வாழ்வு கசக்கி பிழியப்படுவதை

இத்தொகுப்பு நுண்மையாகச் சித்திரிக்கிறது. மேலாதிக்க வர்க்கத்தின் ஒடுக்குமுறையையும் தொழிலாளர்களாகப் பணிபுரியும் பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும் மலையகச் சிறார்கள் மீது பிரயோகிக்கப்படும் துஷ்பிரயோகங்களையும் மேலாதிக்க வெறியர்களால் கட்டமைக்கப்பட்ட சாதியத்துக்கான எதிர்ப்புகளையும் இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் பேசிச்செல்கின்றன. தற்போதைய அரசியல், அனுதாபங்கள், அடையாளங்கள், கருத்தாக்கங்கள் என வெளிநிலைப் போக்கை வெளிப்படுத்தும் பெரும்பாலான கவிதைகளில் கவிதையின் புறக்கட்டமைப்பு நேர்த்தியற்றுக் காணப்படுகின்றது. மலையகத்தில் கவிதை இலக்கியம் வீரியமான முறையில் பெண்களால் வளர்த்தெடுக்கப்படவில்லை. அமுக்கப்பட்ட சிறுசமூகத்தின் ஒட்டு மொத்தக் குரலாக ஒலிக்கும் இக்கவிதைகள் மரபுக்குள் சிக்குண்டு நாட்டார் பாடல் வடிவில் காணப்படுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னரே மலையகம் கவிதைத் துறையில் ஆழவேரூன்றியிருந்தாலும் இத்தொகுப்பில் உள்ளடங்கும் கவிதைகளில் நவீன கவிதைச் செல்நெறியைக் காணமுடியவில்லை. பெரும்பாலான கவிதைகளில் உணர்வும் வார்த்தைகளுமே மிஞ்சிநிற்கின்றன. ஆயினும் கவித்துவத்துக்கு அப்பால் இக்கவிதைகள் சூழலையும் வலியையும் ஆழமாய்ப் பேசுகின்றன.

நகுலா எழுதிய கவிதையின் தலைப்பைத் தாங்கி வெளிவந்த ‘பெயரிடாத நட்சத்திரங்கள்’ எனும் தொகுப்பில் 26 கவிஞைகளின் 70 கவிதைகள் உள்ளன. களத்தில் நின்று போராடி மக்களின் விடுதலைக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த இத்தொகுப்பை ஊடறுவும் விடியல் பதிப்பகமும் இணைந்து வெளியிட்டு இருந்தன. கள அனுபவங்களில் எதிர் கொண்ட இடர்களையும் அரச பயங்கரவாதத்தால் எதிர்கொண்ட விளைவுகளையும் பேசும் இக்கவிதைகள் பெண் உழைப்பைச் சுரண்டி வாழும் ஆணாதிக்க மனோநிலையையும் எதிர்க்கிறது.

**எம் இதயம் நேசிக்கும்**
**தேசத்து விடுதலை**
**எமக்கு எட்டும்போது - அங்கே**
**பெண்ணடிமைக்கு**
**சமாதி கட்டப்படும்...**

கப்டன் வானதியின் வரி கொண்டு இதனைக் கண்டுணரலாம். எதிரியோடு களமுனையில் போராடும்போது பெண் போராளிகள் எதிர்கொண்ட வாழ்வியல் சிக்கல்களை ‘நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு’ என்னும் வானதியின் கவிதை உணர்வுபூர்வமாக உரைக்கிறது. ஆயுதமேந்திய போராளியை சக போராளி விரும்பும்போது மனத்தில் எழும் உன்னத தருணங்களை, காதலின் புதிய பரிமாணங்களை கவிதை எடுத்துரைக்கிறது.

**எப்போதாவது தெருவில்**
**அவசர இயக்கத்தில்**
**கண்டுவிட நேர்கையில்**
**சந்திப்பை வரவேற்பதாய் அவன்**
**கண்கள் ஒருமுறை விரியும்**
**மறுகணம் ஆழ்ந்து மூடிக்கொள்ளும்**
**அவனுக்குத் தெரியும்**
**எனக்கு அது போதுமென்று**



இலங்கை இந்திய ஒப்பந்தம், இந்திய அமைதிப் படையின் காலத்தில் பெண் எதிர் நோக்கிய வாழ்வாதாரச் சிக்கல்கள், ஆனையிறவுச் சமர், சூரிய கதிர் நடவடிக்கைகள், ஓயாத அலை காலகட்டத்தில் மக்கள் பட்ட அவலங்கள் என விரியும் இத்தொகுப்பு செம்மணி படுகொலை குறித்தும் பேசுகிறது. மாற்றுடையின்றி உணவின்றி உறுதியுடன் ஆயுதமேந்திச் சமராடிய பெண்போராளிகளின் வாழ்க்கையினை இத்தொகுப்பு ஆவணப்படுத்தி இருக்கிறது.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் உயிர்வெளி, கனல், வெளிப்படுதல், கவிதைகள் பேசட்டும், pulse, கண்ணாடி முகங்கள் என ஆறு தொகுப்புக்கள் பெண்ணுணர்வுகளையும் பெண்ணியற் சிந்தனைகளையும் தாங்கி வெளிவந்தன. ஈழவிடுதலைக்காகப் பேராடிய போராளிக்கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த இத்தொகுப்பு இன ஆக்கிரமிப்பால் மக்கள் எதிர் கொண்ட இன்னல்களையும் விடுதலை வேட்கையால் மக்கள் எதிர்கொண்ட சவால்களையும் ஏதிலிகளாய் மக்கள் அலைந்துலைந்து வாழ்ந்த அனுபவங்களையும் எடுத்துரைக்கிறது. சமூக அடக்கு முறைக்கு எதிரான குரலாக ஒலிக்கும் இத்தொகுப்பு பெண்அடிமைத் தளைகள் அறுத்தெறியப்படவேண்டிய அவசியத்தையும் பெண்ணை அடக்கி ஒடுக்கி அல்லற்பட வைக்கும் சமூக மரபுகள் மற்றும் சீதனங்கள் களையப்படவேண்டிய தேவையையும் உணர்த்தி நிற்கிறது.

ஆங்கில, சிங்கள, தமிழ் கவிதைகளை உள்ளடக்கி 'பாலின கற்கை மையம், pulse' (நாடித்துடிப்பு) என்ற பெயரில் களனிய பல்கலைக் கழகம் ஒரு தொகுப்பை வெளியிட்டது. இக்கவிதைகள் எம்மொழியில் எழுதப்பட்டனவோ அம் மொழியில் அது பிரசுரிக்கப்பட்டன. எழுதப்பட்ட சூழ்நிலை, காலம் முதலானவை மும்மொழியிலும் பிரசுரிக்கப்பட்டன. இத்தொகுப்பில் சங்கரி, சிவரமணி, பெண்ணியா, விஜயலட்சுமி சேகர், குகநிதி குகநேசன், சிவமோகன் சுமதி முதலிய தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளையும் ஜயனி சந்திரிக்கா சேனநாயக்க, ருக்ஷானி வீரசூரியா, ரம்யா ஜரசிங்க, கமனி ஜயசேகர, சொனாலி சமரசிங்க, ரம்யா ஜீரசிங்க, விவிமரி வன்டபூர்டன், முதலான சிங்களக் கவிஞர்களின் கவிதைகளையும் தாங்கி வெளிவந்தது. ஆயினும் இத்தொகுப்பில் நிந்தவூர் ஷிப்லி, அனுரா மனதுங்க ஆகிய ஆண் கவிஞர்களின் கவிதைகளும் காணப்படுகின்றன. சமூகக் கட்டமைப்புக்கள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள் பெண்களைத் தொடர்ந்தும் எவ்வாறு அடிமைகளாய் வைத்திருக்கின்றது என்பதையும் இக்கவிதைகள் உணர்த்தி நிற்கின்றன. சமூக ஏற்றத் தாழ்வுகள் பெண்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் இக்கவிதைகள் மனிதாபிமான அடிப்படையில் பேசிச் செல்கின்றன. ஜயனி சந்திரிக்கா சேனநாயக்காவின் 'chopping Onions' என்னும் கவிதை வெங்காயம் நறுக்குவது எவ்வாறு கண்களில் கண்ணீரை வழவழைக்கின்றதோ அவ்வாறே காதலும் கண்ணீரைத் தருகின்றது என்பதைக் கூறிச் செல்கிறது. நிரந்தரமான சக்திக்குள் உழன்று தவிக்கும் பெண்ணின் எழுச்சியை சிவரமணியின் கவிதையிலும் பெண்களின் இன்றைய வகிபாகம் என்ன என்பதை ரம்யா ஜயசிங்கவின் 'சீதாவின் கதை' என்னும் கவிதையிலும் சமுதாயத்தில் திருமணமாகாது கருவுற்று விளங்கும் பெண்ணின் நிலையை ருக்சனி வீரசூரியாவின் கவிதையிலும் காணலாம். ருக்சனியின் 'சிப்பி' என்ற கவிதை ஆணின் நிர்ப்பந்திப்பாலும் சமூக வரைமுறையாலும் பெண் தனக்குரிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனக்குள் ஒடுங்கிக் கொள்வதை, கூண்டினுள் சிறைப்பட்டுக் கொள்வதை விளக்கி நிற்கிறது. அடக்குமுறைக்கு எதிரான பெண்ணின் எதிர்ப்பின் குரலை பெண்ணியாவின் 'வேட்பாளனின் மனைவி அல்லது ஓட்டுரிமை' என்ற கவிதையில் காணலாம். ஈழயுத்தத்தின் வடுக்களையும் அவை கற்றுத்தந்த பாடங்களையும் காவலரண்ணில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இக்கவிதைகள் பேசிநிற்கின்றன.

ஆண்டாள், வெள்ளிவீதியார் தவிர்ந்த பதினொரு ஈழத்துப் பெண்கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுப்பே 'உயிர்வெளி' ஆகும். 'Love Poems by Women' என்ற தொகுப்பு ஏலவே ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த நிலையில் தமிழில் அதனைப் போலவே ஒரு தொகுப்பு வெளிவரவேண்டும் என்ற நோக்கில் வெளிவந்த உயிர்வெளி, காதலின் பல்வேறு பரிமாணங்களை எடுத்துரைக்கிறது. பெண்களின் மென்னுணர்வுகளைக் கலை வெளிப்பாட்டுடன் காட்சிப்படுத்தும் இத்தொகுப்பு பெண்கள் ஆண்களின் மீது கொண்ட காதலைப் பாடுகிறது. பெண்களது சுயாதீனம், தனித்துவம், சுய இயல்பு, அடையாளம் ஆகிய சிந்தனைகள் இன்று மேலோங்கி வருகின்ற நிலையில் உயிர்வெளித் தொகுப்பு காதல் பிரிவையும் பிரிவினால் நிகழும் காதல் அனுபவத்தின் முரண்பாடுகளையும் முரண்பாட்டினால் எழும் ஏக்கத்தையும் ஏக்கத்தினால் விளையும் பிரிவுத் துயரையும் எடுத்துக் கூறுகின்றது.

சமூக மட்டத்தில் பெண் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பெண்சிந்தனாவழி பெண்ணிருப்பை வலியுறுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்ட தொகுப்பே 'வெளிப்படுத்தல்' ஆகும். பதினெட்டுப் பெண் கவிஞர்களால் எழுதப்பட்டு வெளிவந்த இக்கவிதைநூல் பெண்சமத்துவம் பெண்ணுரிமை தொடர்பாகவும் பேசுகிறது. யுத்த சூழலின் தாக்கத்தையும் அது பெண்களின் மனத்தில் ஏற்படுத்திய உணர்வுப் பரிமாற்றத்தையும் வெளிப்படுத்தும் இக்கவிதைகள் ஆதிக்க சிந்தனை கொண்ட ஆண் வர்க்கத்தின் நடத்தைவாத முறைகளையும் கேள்விக்குட்படுத்துகிறது. சமூக உள்ளடக்கம், பாலின சமத்துவம், பெண்களுக்கான அதிகாரம், பெண் உரிமைகள் குறித்துப் பேசும் இத்தொகுப்பு சமூகக் கட்டமைப்பில் பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டிய அவசியத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது. ஆணும் பெண்ணும் சமம் என்ற பெண்ணியச் சிந்தனையை வலியுறுத்தும் 'வெளிப்படுத்தல்' தொகுப்பு பெண், ஆண்களுக்கு நிகரானவள், உரிமை மிக்கவள் பெருமை மிக்கவள், வையகத்தைப் புதுமையுறச் செய்பவள் முதலான விடயங்களையும் பேசிநிற்கிறது.

சுதாகரி சுப்பிரமணியம், விஜயலட்சுமி கந்தையா, ஜெயந்தி தளையசிங்கம், சுதாகினி சுப்பிரமணியம் உள்ளிட்ட நான்கு பெண்கவிஞர்களின் பதின்மூன்று கவிதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுப்பே 'கனல்'ஆகும். ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தி நிற்பதுடன் பெண்விடுதலை குறித்தும் பேசுகிறது. பெண் பற்றிய மரபுரீதியான படிமத்தை உடைத்து பெண்ணின் சொந்த இயல்பையும் அவளின் தார்மீக இருப்பையும் இக்கவிதைகள் பேசிநிற்கின்றன. பெண்ணிலைவாதச்

சிந்தனைகளை உள்வாங்கி எழுதப்பட்ட இத்தொகுப்பு பெண் எதிர்கொள்ளும் நெருக்கடி, அவளுடைய அகவுணர்வுச் சிக்கல்கள், தனிமை, வாழ்வு குறித்தான நிதர்சனமின்மை முதலானவற்றையும் கூறிச்செல்கிறது. ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்ற சமூகத்தின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கும் இத்தொகுப்பு கட்டிய கணவனுக்குக் கொத்தடிமையாய் வாழாது பெண்சுதந்திரமாய் தன் உரிமை குறித்து சிந்திக்க வேண்டும் என்பதையும் கூறிநிற்கிறது. பெண் தன் இலட்சியப்பாதையில் தளர்வற்று நெஞ்சில் உறுதியுடன் போராடித் தன் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதையும் 'கனல்' தொகுப்பு எமக்குணர்த்துகிறது.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் வெளிக்கொண்டு வரப்பட்ட 'கண்ணாடி முகங்கள்' தொகுதி குமுதினி முதல் மஷூரா உட்பட பதினாறு பெண்கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. சமூக அநீதி கண்டு பொங்கும் பெண்ணின் உள்ளக்குமுறல்களையும் வெளிப்படையாகக் கதைக்க அஞ்சி தனக்குள்ளே ஒடுங்கி மாயும் எண்ணச் சிதறல்களையும் இத்தொகுப்பு வெளிப்படுத்தி நிற்கிறது. உளத்தில் எழும் அறச்சீற்றத்தையும் சீதனக்கொடுமை கண்டு பொங்கும் பெண்ணின் மன உணர்வுகளையும் குமுதினி தன் கவிதைகளில் ஆழ வெளிப்படுத்துகிறார். புரட்சி, போராட்டங்கள் யாவும் தோற்றுப்போய் புகழிடமற்று வெறுமையாய் உழலும் உள்ளத்தின் வெளிப்பாடே குமுதினியின் கவிதைகள். அதிகார எதிர்ப்பின் வெளிப்பாடாக உருத்திராவின் கவிதைகள் அமைகின்றன. அம்மாவைப் பிரிந்த துயர் பாலையின் நீட்சியாய் வருத்துகிறது. சொல்லடுக்கின் இணைவும் மொழியின் கனதியும் உருத்திராவின் கவிதையை அர்த்தமுள்ள தாக்குகிறது. கொதிக்கும் மனஅடுக்குகளில் இருந்து விரியும் அனாரின் அகவெளி காலாதி காலமாகக் கட்டப்பட்ட மரபுகளைக் கட்டுடைத்துப் புதிய அர்த்தத் தளத்தை உருவாக்குகிறது. ஆழ்மனஉணர்வின் நுண் இழைகளில் இருந்து கிளர்த்தும் மொழி, கவிதைக்கு புதுப்பொலிவை அளிக்கிறது. காத்திருப்புகளும் அதில் இழையோடும் சோகமும் ஜெயந்தி தளையசிங்கத்தின் கவிதையாய் பரிணமிக்கிறது. அன்றாட வாழ்வில் நிகழும் சோகங்களின் பிரதிமைகளே விஜயலட்சுமி சேகரின் கவிதைகள். இருண்ட பொழுதில் இலக்குகள் அற்றுத் திரியும் மனித மனத்தின் நிகழ்நிலைகளைக் காட்சிப்படுத்தும் விஜயலட்சுமியின் கவிதைகள் உள்ளத்தில் நமைத்துக் கொண்டிருக்கும் ஏக்கங்களாய் விரிகின்றன. கலைமகள் தன் எழுத்தை ஆயுதமாக்குகிறார். தான் கண்ட, அனுபவித்த, பட்டறிந்த வாழ்க்கை அனுபவங்களை கலைமகளின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. குகநிதியின் கவிதைகள் எளிமையானவை. ஆற்றொழுங்கான நடையில் எழுதப்பட்டவை. அடக்குமுறை கண்டு கனக்கும் உளமும் வெஞ்சினமும் மின்னலாய் தோன்றி மறைகின்றன. அழிவுகளின் சிதிலங்களில் எழும் ஆரையூர் தாமரையின் கவிதைகள் புண்பட்ட மனத்தின் துயராய்க் கவிகிறது. பெண்ணின் வலியையும் மனஉளைச்சலையும் இவரின் கவிதைகளில் காணலாம். வாசுகி குணரத்தினத்தின் கவிதைகள் ஆழமும் சொற்செறிவும் கொண்டவை. உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் சமூக மறுதலிப்பு, நிராகரிப்பினூடாக எழும் மனக்கொந்தளிப்பையும் வாசுகியின் கவிதைகள் விளக்கி நிற்கின்றன. மனத்தில் எழும் எண்ணங்களை நேரடியாக வெளிப்படுத்த முடியாது உள்ளத்தில் புழுங்கி அதனை அடக்கி கொண்டு வாழும் பெண்மையின் இருப்பை மஷூராவின் கவிதைகளில் காணலாம். அதிகாரக் கட்டமைப்புகளுக்கு எதிரான கருத்தாக்களையும் அதிகாரக் கட்டமைப்பைத் தகர்க்கும் உணர்வுநிலை வெளிப்பாட்டையும் 'கண்ணாடி முகங்கள்' தொகுப்பு வெளிப்படுத்தி நிற்கிறது.

தான்யா - பிரதீபா கனக தில்லைநாதன் ஆகியோரால் தேசம் - யுத்த நிறுத்தம், பெண் வாழ்வியல், புலம்பெயர்வு குடும்பம் (தங்கத்தட்டில் தந்திட்ட சுதந்திரம்), புலம்பெயர்வு - மாணவம், தேசம் - யுத்தகாலம் என்ற ஐந்து தலைப்புக்களின் தொகுத்து வெளிவந்த 'ஒலிக்காத இளவேனில்' ரேவதி முதல் றெஜி வரை பதினேழு பெண்கவிஞர்களின் எழுபத்தொன்பது கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. நேரடிப் புலக்காட்சி வழி தொகுப்பின் எண்ணிக்கை பதினெட்டு என உணர்த்தினாலும் பிரதீபாவும் யசோதரவும் ஒருவராகக் கருதப்படுகின்ற பட்சத்தில் கவிஞர்களின் எண்ணிக்கை பதினேழு ஆகும்.

இத்தொகுப்பில் காணப்படும் பெரும்பான்மையான கவிதைகள் சுயசார் அனுபவங்களின் வழி தனிமனிதத் துயரத்தையும் தன்னிரக்கத்தையும் தாயகம் மீதான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. பெண்ணானவள் புலம் பெயர் சூழலில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் இத்தொகுப்பு எடுத்துரைக்கிறது. இத்தொகுப்பில் உள்ளடங்கும் கவிதைகள் அழகியல் வெளிப்பாடாகவோ, ரசனை குறிப்புக்களாகவோ அறிவார்த்த பறைசாற்றலாகவோ இல்லாமல் சமூகப் பண்பாட்டின் பெண் இருப்பை வலியுறுத்தும் கவிதைகளாகவே காணப்படுகின்றன. காதலையும் பெண்ணுடல் மீதான ஆக்கிரமிப்பையும் சுயமழிப்பையும் அந்நியமாதலையும், ஆதிக்க அழிப்புக்கள் குத்திக் கிழித்த ரணங்களையும் வன்கொடுமைகளையும் அதனைச் சுமந்தலையும் வலிகளையும் 'ஒலிக்காத இளவேனில்' பேசுகின்றது. உணர்வுத் தெறிப்பும் நேரடித்தன்மையும் கொண்ட இக்கவிதைகள் அதிகார மீறலுக்கான எதிர்ப்பின் குரலாகவும் ஒலிக்கிறது. இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் படிமங்களாகவோ மொழிக்குறியீடுகளாகவன்றி சம்பவங்களின் திரட்சிகளாகவும் அனுபவங்களின் மீட்டுருவாக்கலாகவும் யதார்த்த வாழ்வின் பிரதிபலிப்புக்களாகவும் அமைகின்றன.

பெண்களின் புரட்சிகர எழுத்துக்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தி நிற்கும் கூட்டுக் கவிதைத் தொகுதிகள் பெண்களின் சமூகஇருப்பையும் அவர்களின் நிதர்சனமான வாழ்வையும் இனமுரண்பாட்டின் கொடுமையான தருணங்களையும் அதற்கு முகம் கொடுத்த மக்களின் வாழ்க்கைப்பாடுகளையும் காலவோட்டத்தில் அல்லலுற்று அலைந்த ஈழத்தமிழர்களின் நிதர்சனமான வாழ்க்கை நிலைகளையும் புடம் போட்டுக்காட்டுகின்றன. பெண் விடுதலை மூலம் பாலின வேறுபாடுகளைக் களைந்து சமத்துவமான சமூக அமைப்பைக் கட்டி எழுப்பமுடியும் என்பதையும் இத்தொகுப்புகள் உணர்த்தி நிற்கின்றன.



ramesh.s@thaiveedu.com

# இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள்

– கோட்டி திருமுருகானந்தம்



இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள் என்ற கட்டுரை இலங்கைக் கவிதைச் சஞ்சிகைகளில் காணக்கிடக்கும் மகளிர் கவிதைகளை அறிமுகம் செய்கிறது. இதற்கு ஆய்வுக்களமாக இலங்கையிலிருந்து வெளிவந்துள்ள கவிதைச் சஞ்சிகைகள் அமைகின்றன. இக்கட்டுரை இலங்கையின் மூத்த தமிழ் இதழ், இலங்கையின் தொடக்க காலச் சஞ்சிகைகள், கவிதைச் சஞ்சிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள் போன்றவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது.

### இலங்கையின் மூத்த தமிழ் இதழ்:

இலங்கையின் மூத்த தமிழ் இதழ் 1841-ம் ஆண்டு தோற்றம் கண்டுள்ளது. இதனால் இலங்கைத் தமிழ் இதழியல் வரலாறு ஏறக்குறைய 182 கால வரலாறுடையது. 1841-ம் ஆண்டு அமெரிக்க மிஷன் வெளியிட்ட உதயதாரகை இலங்கையின் முதலாவது தமிழ்ப்பத்திரிகை என்ற பெருமையுடையதாகும். இப்பத்திரிகை தொடர்ந்து வந்து இலங்கைத் தமிழ் இதழியல் உலகில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றிருக்கிறது. இதையடுத்து வெளிவர ஆரம்பித்த சத்தியவேத பாதுகாவலன், முஸ்லீம் நேசன், இஸ்லாம் மித்திரன், இந்து சாசனம் முதலான பத்திரிகைகள் மதப்பிரசார நோக்கமுடையவையாகவும் செய்திப் பத்திரிகையாகவும் தோன்றின. இவற்றுள் உதயதாரகை, சத்தியவேத பாதுகாவலன், இந்து சாசனம் ஆகிய மூன்று இதழ்களும் மூன்று சமய நிறுவனங்களால் மதப்பிரசாரத்திற்கென யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டாலும் அவைகள் விட்டுச் சென்ற தடங்கள் ஆழமானவை.

### இலங்கைத் தமிழ்க் கவிதை இதழ்கள்:

தமிழகத்தைப் போல இலங்கையில் இருந்தும் கவிதை இதழ்கள் வெளிவந்துள்ளன. இலங்கைக் கவிதை இதழ்களுக்கு எழுபது வருட வரலாறு உண்டு. 1955-ம் ஆண்டு புரட்டாதி மாதம் தேன்மொழி என்ற கவிதை இதழ் வெளிவந்துள்ளது. இதுவே இலங்கையின் முதலாவது தமிழ்க் கவிதை இதழாகும். மஹாகவி, வரதர் ஆகிய இருவரும் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னமாகத் தேன்மொழியை வெளியிட்டுள்ள னர். இதற்கேற்ப இவ்விதழ் சிலகாலம் இலங்கை இதழியல் வரலாற்றில் வலம் வந்துள்ளதைக் காணமுடிகிறது. இதுவே இலங்கையில் தோன்றியுள்ள முதல் தமிழ்க் கவிதை இதழ் என இலங்கை ஆய்வாளர்கள் கருத்துரை நல்கியுள்ளனர். தேன்மொழி(1955), நோக்கு(1964), கவிஞன்(1969), அக்னி, பொன்மடல்(1975), தூது(1983), பூபாளம்(1982), புள்ளி(1993), கவிதை(1994), யாத்ரா, நிலம் (2000), இரண்டாவது பக்கம், இருப்பு, கவிதேசம்(2002), நடுகை(2004), தவிர, வடம்(2005), ஓசை, அகசலனம்(2006), நீங்களும் எழுதலாம்(2007), மறுபாதி(2009), கவிஞன் (2010), பேனா(2011), வாசல்(2023), நவயுகம், க-வி-தை போன்ற கவிதை இதழ்கள் இலங்கைத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு உரமாக இருந்துள்ளன. இவை தவிர வேறு கவிதை இதழ்களும் தோன்றி இருக்கலாம்.

உலகில் பிறந்த அனைவருமே வாழ்வில் உயரவேண்டும், முன்னேறவேண்டும், வளரவேண்டும் என விரும்புகின்றனர். இதற்கு உயர்ந்த குறிக்கோள் ஒன்றை வரையறுத்துக் கொண்டு உழைக்கத் தயாராகி விடவேண்டும். உழைப்பு இல்லையெனில் உயர்வு இல்லை. கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு ரகசியம் வேறு இல்லை எனலாம். பெரிய மனிதர்கள் உயர்ந்த நிலையை அடைந்தார்கள் என்றால் அதன் பின்னணியில் உழைப்பே இருக்கும். ஒரு மனிதர் தன்னுடைய வாழ்க்கையில் நல்ல பாதையில் செல்ல வேண்டும் எனில் கடுமையாக உழைக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தில் சாதனைபுரிய நாம் செய்ய வேண்டிய மூலதனம் உழைப்பு ஆகும். ஒருவர் ஆசைப்படுவதை அடைவதற்கு உழைப்பு முக்கியமாகிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் உழைப்பே முக்கியத்துவமானது. பலசாதனை மிக்க கண்டுபிடிப்புகளுக்குப் பின்னால் உழைப்பே உள்ளது. எச்செயலும் உழைப்பினால் சிறப்பு அடைகிறது. வெற்றியை உருவாக்குவதில் உழைப்பு மிகப் பெரிய மூலதனம் ஆகும். உழைப்பு ஒன்றுதான் ஒருவரை வெற்றிப்பாதைக்கு அழைத்து செல்லும். சோம்பல், சலிப்பு, மறதி போன்றவற்றை ஒழித்து முழுமனதுடன் உழைக்கும்போதுதான் வாழ்வில் உயரமுடியும். நாம் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என எண்ணுவது பெரிதல்ல, அதைச் செயல்படுத்தி அதற்கேற்ப எல்லோரும் உழைக்க வேண்டும். கடுமையான உழைப்பிற்கு இணை எதுவுமில்லை. இப்படி நாளும் உழைக்கும் உழைப்பாளர்களின் உன்னதத்தைக் கவிஞர்கள் பாராட்டியுள்ளார்.




இலங்கையில் வாழும் மக்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் எப்படி இருக்க வேண்டும், எப்படி வாழவேண்டும் என்ற தகவல்களையும் கவிஞர்கள் பாடியுள்ளனர். காடு கழனிகளை மட்டும் அழிக்காமல் நாட்டையும் அழிக்கும் மக்கள் இதையெல்லாம் விடுத்து நல்வழியில் வாழவேண்டும். இன்றைய நிலையில் மக்கள் தமிழை மறந்து பிறமொழிகளைக் கற்கத் துடிக்கின்றனர். பிறமொழிகளைக் கற்றுத் தேர்வதில் தவறில்லை. ஆனால் தமிழர் தம் தாய்மொழியை ஒருபோதும் மறக்காமல் போற்றி வாழவேண்டும். கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகத் தமிழர் வாழ்ந்தால் அவர்களை உலகம் போற்றும். இது போல பற்பல பண்புகளைக் கொண்டவர்களாகத் தமிழர் இருக்க வேண்டும் என்பதையும் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

***'காடுகள் கொன்று கழனிகள்பாழ் செய்துபிற***
***நாடுகள்மீ தாவல் நடுநிறுத்தி- ஈடிலாது***
***தாங்கிடும் மண்ணையும் தாய்த்திருவை யும்மறந் தெம்***
***பாங்கெலாம் செய்தோம் பதர்***

***ஓங்கிய எம்தமிழ் உம்பல் உழக்கி நாவில்***
***தேங்கிய மேற்கின் திமிர்வளர்ந்தால்-நீங்காக்***
***கொலுகொண்ட கொஞ்சுமெழில் கோலமொழி எஞ்ஞான்றும்***
***கொலையுண்டு போயிடுமோ கூறு***

***கல்வியின் ஈற்றில் கடவுள் அடையாது***
***சல்லிகள் கௌவுதலிற் சஞ்சரித்தே-வல்லமை***
***குன்றியே வாழ்வது கொல்லிகள் கொள்ளவே***
***குன்றெனக்கை கள்கொடுப்ப தோ***

***தொண்டு புகழ்அறத்துாய் மைநூல் தமைநெஞ்சில்***
***நின்று நிறுத்தும் நினைவுதப்ப அந்தோ***
***சிலுவையோடெம் ஆசாரம் சின்னப் படவே***
***கழுவிற் கலாசாரங் காண்***

***ஆறாம் அறிவுதனை யாமே அழித்ததனால்***
***சீறி மடமை செறிந்ததனால்-சீர்மல்கும்***
***தாழாத் தமிழுடைச் செல்வர் தலைகவிழ்ந்தோம்***
***நாலா புறமும்நைந் தோம்***

***உழுதுழக்கி நின்ற உயிரச்சம் ஓட்டி***
***அழுது தவித்தவாழ்வு ஆற்றிப்-பொழுதையெலாம்***
***இன்பம் மெழுகி இறைத்துமே வைத்தினி***
***எம்விதியை இப்படிநெய் வோம்***

***ஒடுங்கியது போல்ஒழிந்தே போகட்டும் அந்தக்***
***கொடுங்கைகொள் போர்க்கூற்றே ஆவி-நடுங்கி***
***வழிந்தவாழ்வு எம்வரும் வம்சம் கொளவேண்டாம்***
***அழிந்தது போதும் அமர்***

***எங்கள் விழுமியம் அன்பென் றெழுதிவைத்துத்***
***தங்கமனக் காரன் தமிழனென்றே-எங்கும்***
***உலகெமை கைகூப்ப, ஓர்மத்தில் வெண்மை***
***துலக்கி நிமிர்வோம் துணிந்து***

***போர்நினைந்த போதுமது பொய்யான போதுமடா***
***யார்முனைந்த போதும் ஜகம்வென்று பேர்கொழித்துத்***
***தம்பலம்தா ழாதே தளிர்த்த தமிழ்ச்சீரை***
***அம்பலம் காண அவிழ்***

***புடம்போட்ட செல்நெறி சற்றும் புரளாத்***
***திடம்கொண்ட மாண்பு திரட்டித் தடம்மாறிச்***
***சென்றஎம் சீர்த்தனங்கள் சேர்த்துலகைச் செந்தமிழால்***
***வென்று வருவோம் விரை'***

- லுணுகலை ஸ்ரீ, யாத்ரா இதழ் 21, பக். 30-31

எனக் கவிஞர் வாழும்வகை குறித்துப் பாடியுள்ளார். இப்படிப்பட்ட கவிஞர்கள் இங்கு இருக்கிறார்கள் என்பதைக் காட்டும் வண்ணம் இக்கவிதைகள் அமைந்துள்ளன. இவர்களை உலகிற்குக் காட்டும்வண்ணம் இவ்விதழ்கள் இக்கவிதைகளை வெளியிட்டு உள்ளன எனலாம்.




தங்கள் இளமைக் கால அனுபவங்களைக் கவிஞர்கள் கவிதைகளாகத் தந்துள்ளனர். இந்த வகையில் அஷ்வினி வையந்தி படைத்துள்ள கவிதை அவர் தம் இளமைக் கால அனுபவங்களைச் சொல்லி இது போன்ற அனுபவங்கள் எம்மை நினைத்துப் பார்த்து ஏங்க வைக்குமோ எனக் கவிதையை முடித்துள்ளார்.

**‘புழுதி பறக்க / பற்றைக் காட்டில்**
**ஒற்றைக் காலில் / ஓடியாடிய ஞாபகம்**

**உச்சி மரத்தில் / ஏறிக் கொண்டு**
**பறவையாய் நானும் / மாறிய ஞாபகம்**

**தோப்புக்குள் / மாங்காய் பறித்து**
**மாட்டிக் கொண்ட ஞாபகம்**

**கால்நடையாய் / பல தூரம்**
**நடந்து சென்ற / ஞாபகம்**

**தோழியோடு / சின்னச் சமையல்**
**சமைத்த ஞாபகம்**

**காத்திருந்து / தூண்டிலில் மீன்**
**பிடித்து மகிழ்ந்த / ஞாபகம்**

**அடம்பிடித்து / ஒற்றை ரூபாய்க்கு**
**மிட்டாய் வாங்கிய / ஞாபகம்**

**அம்மா கையால் / பிரம்படி வாங்கிய / ஞாபகம்**
**வாத்தியார் தலையில் / கொட்டு வைத்து திட்டிய ஞாபகம்**

**காய்ச்சல் என்று / பொய் சொல்லி**
**பள்ளிக் கூடத்திற்கு / விடுமுறை எடுத்த / ஞாபகம்**

**ஞாபங்ககளாய் / பல நிகழவுகள்**
**வாழ்க்கை என்னும் / நதியினிலே**

**இன்னும் எத்தனை / ஞாபகங்கள் எம்மை /**
**தாலாட்டுமோ / இன்னும் எத்தனை**
**ஞாபகங்கள் எம்மை / ஏங்க வைக்குமோ’**

- அஷ்வினி வையந்தி, நடுகை இதழ் *5*, ப. *14*

எனக் கவிஞர் இளமையின் ஏக்கங்கள் நெஞ்சில் நிழலாடும் பாங்கினைக் கவியாகத் தந்துள்ளார். இதைப் போல பல கவிஞர்களுக்கும் இவ்விதழ் வளர வாய்ப்பளித்துள்ளது.




பொருளாதாரத்தின் அடிப்படையில் நம் வாழ்க்கை அமைந்துள்ளது. இதற்காகக் கணவனும் மனைவியும் ஓடியோடி உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்கையிலிருந்து நாம் மாறுபட்ட வாழ்க்கை முறைகளைத் தெரிந்தோ தெரியாமலோ வாழத் தொடங்கிவிட்டோம். இக்காலத்தில் வாழ்வாதாரம், வாழ்க்கைச் செலவினங்கள், வாழ்க்கைமுறை என்பன மாபெரும் மாற்றங்களைக் கண்டு உள்ளது. இதிலிருந்து நாம் விலகமுயன்றாலும் விலக முடியாது தவிக்கிறோம். இதனால் மனைவியும் பணியாற்றி பொருளாதார நிலையைச் சமன்படுத்த வேண்டியநிலை ஏற்படுகிறது. கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் ஒருவேளை பொருளாதாரப் பிரச்சினை இல்லாமல் இருக்கலாம். ஆனால் மற்ற பிரச்சினைகள் இல்லையெனச் சொல்லமுடியாது. இத்தகைய சூழலில் பணிக்குச் செல்லும் பெண்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற எண்ணங்ளையும் கவிஞர்கள் பாக்களாகத் தந்துள்ளனர்.

**அறியாமல் சுவைத்து**
**அவஸ்தைப்படும் / மருந்தாகியது**
**இந்த வேலை பார்க்கும் / வேண்டாத வாழ்வு**

**உபாதைகள் கடந்து / உணர்வுகள் உயிரிழந்து**
**குடும்பமும் / தொழிலுமாய்**
**இருமுனைத் தாக்குதல் வாழ்வு**

**தாரமென்ற / பல குறையும்**
**தாயென்ற பல குறையும்**
**தொழில் புரிந்து / திரும்புகையில்**
**தொலைந்து போகும் நிம்மதி**

**எவருக்கும் திருப்தி இல்லை**
**எனக்கும் திருப்தி இல்லை**
**கஷ்டங்கள் நீங்கவென்றே**
**இஷ்டம் போல் / தொழில் செய்ததில்**
**நஷ்டம் போனது யாவும்**
**வாழ்வு நொந்தது நாளும்**
**வீட்டிலும் தொழிலுமாய் / இயங்கி இயங்கியே**
**இயக்கமில்லா / இயந்திரமாய் இதயம்**
**வீட்டு வேலைகள் / முதுகின் மேல் சுமையாகும்**

*தொழில் எப்போதும் / மூளை ரணமாகும்*
*சதக்காசும் மிச்சமின்றி / சதாவும் சுழன்று செல்லும்*
*மாதக் கடைசிகள் என்னை / மனமின்றி மிரட்டிச் செல்லும்*

*சமத்துவம் வேண்டாமே / சாதனைகள் வேண்டாமே*
*விட்டு விடுங்கள் / வீட்டில் என்னை / மனையாள மகிழ்வாக*

- பூக்கொடையூர் அஸ்மா பேகம், ஓசை இதழ் 27

எனப் பணியாற்றும் பெண்களின் ஏக்கங்களை அஸ்மா பேகம் கவிதையாக்கியுள்ளார். இத்தகைய பெண்கள் இன்று உலகம் முழுவதும் இருந்தபோதிலும் தமிழ்ப் பெண்கள் அதிகளவில் மனபாதிப்புக்கும் உடல் பாதிப்புக்கும் உள்ளாகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். இல்லப் பெண்களாக இருந்து தங்கள் கடமைகளை ஆற்ற விரும்பும் பெண்களின் ஒட்டுமொத்த குரலாக இக்கவிதையைக் கொள்ளலாம்.



## ஜெனீரா ஹைரூல் அமான்

இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவே வாழவிரும்புகின்றனர். ஆனால் இவர்களில் ஒரு சிலர் தாம் மட்டும் மகிழ்ச்சியாக வாழ்ந்தால்போதும் என்ற சிந்தையுடன் இருக்கின்றனர். இவர்கள் வாழ்வியல் முரண்பாடுகளைக் கவிஞர்கள் பாடியுள்ளனர். இவர்கள் மற்றவர்களுக்காகப் பாடுபடாவிட்டாலும் தொல்லை தராமல் இருந்தாலே போதும். இத்தகைய மனிதர்களைப் பற்றியும் கவிஞர்கள் பாடி உள்ளனர் எனத் தெரிகிறது.

*'ரமழானில் நோன்பினை நோற்கிறாய்*
*நடு இரவில் தஹஜ்ஜத்தும் தொழுகிறாய்*
*தர்மத்தைச் சரியாகக் கொடுக்கிறாய்*
*தொழுகையை நேரத்துக்குத் தொழுகிறாய்*
*வார்த்தையில் நஞ்சினைக் கலக்குறாய்*
*வம்புகள் வளர்ந்திடத் தூண்டுகிறாய்*
*உறவைப் பெரிதாய் மதிக்கிறாய்*
*உழைப்பினில் சாதனை படைக்கிறாய்*

*புறம் கூறுவதை விரும்புகிறாய்*
*பிறர் உயர்வினை வெறுக்கிறாய்*
*தரம் பார்த்தே நட்பாகிறாய்*
*தன்னலம் கொண்டு நீ நடக்கிறாய்*
*வட்டியை வாடிக்கையாய் பெறுகிறாய்*
*வஞ்சக மனசோடு நோக்குகிறாய்*
*போட்டி பொறாமையுடன் வாழ்கிறாய்*
*பெருமை பேசியே மகிழ்கிறாய்*

*மட்டமாய் மனிதனைப் பார்க்கிறாய்*
*மரியாதை செய்வதாய் நடக்கிறாய்...*

*மறை வானதை அல்லாஹ் அறிவதனை*
*மறந்தும் நாளும் செயற்படாதே*
*கறை படிந்த கல்பினை - தினமும்*
*கண்ணீர் மல்க இறைஞ்சிடுவாய்*
*மறை கூறும் வழி நடந்தால்*
*மறுமையில் ஈடேற்றம் பெற்றிடுவாய்'*

- ஜெனீரா ஹைரூல் அமான், பேனா ஏழாம் இதழ், ப. 10

என ஜெனீரா ஹைரூல் அமான், மக்கள் பிறருக்காகவும் வாழ வேண்டியதைப் பாடி உள்ளார். ஆனால் இப்படி இருப்பவர்கள் மற்ற மக்களுக்குத் துன்பந்தாரமல் இருந்தால் நல்லது. ஆனால் மக்கள் நலத்திற்குப் புறம்பான செயல்களையல்லவா செய்கிறார்கள்.



## ஆரையூர் தாமரை

மலையக மக்கள் இலங்கையில் காலடி வைத்து இருநூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. அன்றைய சிலோன் தேசத்திற்குச் சென்ற இந்தியத் தமிழ் தொழிலாளர்களுக்குத் துரைமார்களும் கங்காணிகளும் கொடுத்த துன்பங்களுடனே அவர்களது வாழ்க்கை கழிந்தது. நாட்டினைத் துறந்து, கால்நடையாகவும் பாதுகாப்பற்ற படகு மூலமாகவும் தலைமன்னார் துறைமுகத்தை வந்தடைந்து, அங்கிருந்து மாத்தளை வழியாக மலைநாட்டுத் தோட்டங்களுக்குச் சென்ற பின்பும் தொடர்ந்தன. அந்நேரத்தில் அவர்களுக்குச் சொற்ப பணமும் உணவும் அவசியத் தேவையாக இருந்தது. இதனைக்கூட முழுமையாகப் பெறமுடியாது அலைக்கழிக்கப்பட்டு, கொடூரத் தண்டனைகளால் அவர்களது காலம் கடந்ததெனலாம். தொழிலாளர்கள் வெளியிடங்களுக்குச் செல்வது இலகுவான காரியமில்லை. இவர்களைத் தோட்ட நிர்வாகத்தினர், கங்காணிகள், துரைமார்கள் ஆகியோர் உன்னிப்பாகக் கண்காணித்தனர்.

வீட்டுக்குத் தேவையான அரிசி, தேங்காய், கள்ளுக்கடை போன்றன அருகில் இருந்த பெட்டிக்கடைகளில் கிடைத்த தால் அவர்கள் வெளியில் செல்வதற்கான தேவையும் ஏற்பட வில்லை. அரசும் இதை விரும்பவில்லை. அவர்களுக்கு ஏற்ப டும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பவர்களாக கங்காணி களும் துரைகளும் காணப்பட்டார்கள். கங்காணி சொல்வதே நீதியாக இருந்தது. சில பிரச்சினைகள் துரை வரை போனாலும் துரை பெரும்பாலும் கங்காணியைப் பகைத்துக் கொள்ள விரும்ப வில்லை. இதனால் அத்துமீறல்களும் அடக்கு முறையும் உச் சத்தில் இருந்தன. இருநூறு ஆண்டுகளுக்குமுன், இங்குக் குடியேறியபோது இருந்த 'தானுண்டு தன் வீடுண்டு' எனும் மனநிலை இன்றும் மலையக மக்களிடம் குடிகொண்டுள்ளது. இந்த மனப்போக்கே தேசிய நீரோட்டத்தில் இன்னமும் இணையாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கிறது. இன்று கூட படித்த இளைஞர்களால் போராட்டங்கள், அரசியல் விழிப்பு ணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், தொடர்ந்தும் பசப்பு வார்த்தைகளை நம்பி வாக்களிக்கும் நிலையே காணப்படுகின்றது. இதற்குத் தீர்வு காணவேண்டு மெனில் சுயசிந்தனை வளர்க்கப்பட வேண்டும். சலுகை களைப் புறக்கணித்து எதிர்காலத்திற்காகச் சிந்தனை செய் யும்போக்கு வலியுறுத்தப்பட வேண்டும். புத்தெழுச்சியும் புதிய சிந்தனையும் மலையக மக்கள் ஒவ்வொருவரின் மத்தி யிலும் எழவேண்டியது காலத்தின் தேவையாகும். இத்தகைய சிந்தனைகளைக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**'தேயிலைத் தோட்டத்துப் பூங்குயில்களே-உங்களைத்**
**தேடினேன் கொஞ்சம் நில்லுங்களே**
**ஒயிலாடும் தோட்டத்துத் தேவதைகளே- நீங்கள்**
**ஒரு நிமிடம் சோகம் சொல்லுங்களேன்**

**வெயில் வந்து தூங்கிடும் குளிர்களே-குளிர்ப்**
**பனிவந்து தூங்கிடும் பயிர்களே**
**பயிர் வந்து தூங்கிடும் மலைகளே-தினம்**
**துயில் வந்து தூங்காத விழிகளே**

**மலையோரம் ஊர்ந்தோடும் ஈரங்களே-வந்து**
**விழியோரம் சேர்ந்தோடும் பாருங்களே**
**தலையோரம் கயிரோடும் தூரங்களே-தேய்ந்து**
**நிலை மாறும் மடுவாகும் பாருங்களே**

**ஈரைந்து கிலோமீற்றர் மலைமேலே-ஒரு**
**நாள்தோறும் நடக்கோணும் பாருங்களே**
**ஈர்பத்துக் கிலோகிராம் தேயிலைகளே-ஒரு**
**நாள் போதும் பறிக்கோணும் பாருங்களே**

**கொழுந்துகள் பறித்திடும் கரங்களே-கருந்**
**தழும்புகள் கைசேரும் கணங்களே**
**கூடையால் கூனலேறும் முதுகுகளே-மலை**
**நாட்டோட முதுகெலும்பும் நீங்களே**

**இரத்தங்கள் உறிஞ்சிடும் அட்டைகளே-மனித**
**உருக்கொண்டு உழைப்பினை உருஞ்சுங்களே**
**துரத்துங்கள் வாழ்க்கையின் அடிமட்டங்களே-இந்த**
**உருத்தேய்ந்தாலும் பிறையாக ஒளிருங்களே**

**லயத்தோரம் வாழ்ந்திடும் குயில்களே-கங்காணியிடம்**
**சுயகௌரவம் இழக்காது வாழுங்களே**
**வயித்தோரம் தவழ்ந்திடும் பிள்ளைகளே-கல்வியால்**
**உயர்ந் தேற்றம் பெற்றிட்டால் இன்பங்களே'**

- ஆரையூர் தாமரை, கவிஞன் இதழ் 10, ப.6

என்ற பாடல் அவர்கள் துயரைச் சொல்கிறது. உலகம் வேக மாக மாறிவிட்டது எனச் சொல்கிறோம். இருந்தும் இவர்கள் வாழ்க்கை இன்னும் பாதாளத்திலேயே இருக்கக் காண்கி றோம்.


தம்பிலுவில் ஜெகா

பெண்ணின் அவஸ்தை என்ற கவிதை காலந்தோறும் பெண்களின் பருவங்களைச் சொல்லி அவர்களடையும் வலிக ளையும் சொல்கிறது. அதாவது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற எழுவ கைப் பருவ மகளிர் அனுவவிக்கும் இன்னல்களை எளிய மொழியல் சொல்கிறது. கருவறையிலேயே பெண் சிசுக்களை அழிக்கும் செயல் உலகில் இருந்து வருகிறது. தவறிப் பிறந் துவிட்டால் கள்ளிப்பால் கொடுத்து அப்பெண் குழந்தை யைக் கொன்று விடுகிறார்கள். இத்தகைய வழக்கம் இருந் துள்ளது. ஆனால் இன்று அதிகம் இல்லை என்றாலும் அறவே இல்லை எனச் சொல்லமுடியாது.

**'கருவில் இருப்பது பெண் என்றால்**
**கருச்சிதைவு செய்யவும் துணிந்திடுவார்**
**உருவாகி வெளியில் வந்து விட்டால்**
**உடனே கள்ளிப்பால் கொடுத்திடுவார்**

**பேதைப் பருவம் வந்துவிட்டால்**
**பாதை மாற்றித் தடை விதிப்பார்**
**பெதும்பை வயதை அடைந்தால்**
**அரும்பும் உணர்வுக்கு அணையிடுவார்**

**தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

E-mail : info@thaiveedu.com | Fax: 1-416-849-0594 | Tel : 1-416-857-6406

*மங்கைப் பருவம் மலர்ந்த போது*
*மனதில் சுமைகள் ஏராளம்*
*மடந்தையாக வளர்ந்த வேளை*
*மடங்கும் திறமை இல்லத்துள்*

*அரிவைப் பருவம் அடைந்தாலோ*
*அடக்கு முறைகள் ஏராளம்*
*தெரிவைப் பருவப் பெண்ணுக்கு*
*தொல்லை பலவும் வந்து சேரும்*

*பேரிளம் பெண்ணின் இறுதிவரைக்கும்*
*பிள்ளைப் பேறு இல்லையென்றால்*
*பாரினில் பெண்கள் படும் அவஸ்தை*
*பாவில் சொல்ல முடிவதில்லை'*

- தம்பிலுவில் ஜெகா, நீங்களும் எழுதலாம் இதழ் 24, ப. 22

எனக் கவிஞர் பெண்களுக்காக வாதாடும் கவிதையில் பெண்கள் படும் தொல்லைகள் அதிகம் என வருத்துமுடன் முடித்துள்ளார்.



எம். எல். பாத்திமா றிஸ்வானா

இந்த உலகில் மனிதநேயம் மலரவேண்டும் எனக் கவிஞர்களும் மகான்களும் காலம் காலமாகச் சொல்லியுள்ளனர். இன்றும் மனிதநேய அமைப்புகள் உலகின் பல பாகங்களில் செயல்பட்டு வருகின்றன. ஆனால் மனிதநேயம் மக்களிடம் முழுமையாக மலர்ந்துவிட்டது எனச் சொல்ல முடியவில்லை. தனி மனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் எனப் பல நிலைகளில் மனித நேயம் போற்றப்பட வேண்டும். இல்லையேல் இதேநிலை நீடிக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. புத்தர், ஏசுபிரான், சங்கரர், நபிகள் நாயகம் போன்றோர் இவ்வுலகம் சமதர்ம சமுதாயமாக விளங்க வேண்டும் என ஆசைப்பட்டு அதற்காகப் பல நல்லறங்களைக் கூறி சென்றார்கள். ஆனால் நாம் அந்த நல்லறங்களைப் பின்பற்றி வாழ்கிறோமா என்பது ஐயமே. இவ்வாறு மனிதநேயக் கருத்துகள் அடங்கிய பாக்களைக் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

*'மனித நேயம் மலர்திடவே-சீராய்*
*மானில வாழ்வும் புலரந்திடவே*
*புனித உறவை வளர்த்திடுவோம்-என்றும்*
*புன்மை உணர்வைக் களைந்திடுவோம்*

*புத்தர் யேசு சங்கரரும்-வையம்*
*போற்றும் நபிகள் நாயகரும்*
*சித்தம் துலங்கும் மார்க்கமதைத்-தந்தார்*
*சமரச மென்றும் தீர்க்கமுற*

*ஒருவரை ஒருவர் தாக்குவதும்-என்றும்*
*ஓயாப் பகையை ஊக்குவதும்*
*பெருமை தருவ தில்லையடா-பிரிவினைப்*
*பேதமே வாழ்க்கைத் தொல்லையடா*

*சீப்பில் ஒருபல் லொடிந்தாலும்-உருளும்*
*சகடக் கால்கள் சொடிந்தாலும்*
*கோப்புக் குலைவது கண்கூடு வாழ்வில்*
*கூடிச் சிறப்போம் பண்போடு*

*உலகம் எங்கும் பகைமூட்டம் பெருகி*
*உறுத்தும் அழிவோ திகைப்பூட்டும்*
*கலகம் ஒன்றே குறியானால்-வாழ்வில்*
*கயமைத் தனமே நெறியாகும்*

*வல்லர சாதிக்கக் கெடுபிடியும் வன்மம்*
*வலுக்கும் யுத்தத் தொடர்பிடியும்*
*புல்லரை உலகில் பெருக்குவதோ வளரும்*
*பூதல வளத்தைக் கருக்குவதோ*

*யுத்தப் பேரிகை முழங்காமல்-வாழ்வில்*
*யாதும் தீங்கு விளங்காமல்*
*நித்தம் அன்பை வளர்த்திடுவோம்-கூடா*
*நீசத் தனத்தைத் தளர்த்திடுவோம்*

*உள்ளங் கைபோல் இலங்கையிலே-தொடர்ந்து*
*ஓயாப் போரே துலங்கையிலே*
*பள்ளத் துள்ளோர் அகதிநிலை-அவர்தம்*
*போக்கிடம் யாவும் சகதியிலே*

*பலரும் ஒருதாய்ச் சோதரராய் பழகும்*
*பண்பில் மிகைத்த நீதரராய்*
*உலவும் காலம் வெளித்திடணும்-எங்கும்*
*ஒற்றுமை உறவே துளிர்த்திடணும்*

*சினத்தைப் பகையை கொன்றிடுவோம்-எதிர்ப்படும்*
*செகத்தின் சவாலை வென்றிடுவோம்*
*மனதில் தூய்மை புலர்ந்திடவே இணைவோம்*
*மனித நேயம் மலர்ந்திடவே'*

- எம். எல். பாத்திமா றிஸ்வானா, ஓசை இதழ் 06

எனக் கவிஞர் பாத்திமா றிஸ்வானா தம் உள்ளக் குமுறலைக் கவிதையாக வடித்து உள்ளார். மனிதநேயம் என்பது இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் உரியதன்று. இது உலகெங்கும் வாழும் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒன்றாகும்.



kotti.thirumuruganadam@thaiveedu.com




பதின் மூன்றாம் நூற்றாண்டில் நாவல் இலக்கியம் தோற்றம் பெற்றது என இலக்கிய ஆய்வாளர்களில் ஓர் சாரார் கூற, பதினேழாம் நூற்றாண்டிலேதான் நாவல் இலக்கியம் தடம் பதித்தது எனப் பிறிதொரு சாரார் கூறுவர். 'காவியத்தின் பரிணாம வளர்ச்சியே 'நாவல்' இலக்கியம்' எனப் பேராசிரியர் க. கைலாசபதி கூறுவார். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது 1879-ல் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பட்ட 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலே தமிழில் எழுந்த முதல் நாவலாகக் கொள்ளப்படுகிறது. 'தமிழில் இம்மாதிரி உரை நடை நவீனம் பொதுமக்களுக்கு இதுவரை அளிக்கப்பட வில்லை. ஆகையால் இந்த நூல் வாசகர்களுக்கு ரசமாகவும், போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப் பெருமை கொள்கிறேன்.' என பிரதாப முதலியார் சரித்திரம் நாவலின் முன்னுரையில் வேதநாயகம்பிள்ளை கூறுவார்.

மேனாட்டாரின் வருகையைத் தொடர்ந்து இந்த இலக்கிய வடிவம் தமிழில் நிலைபெறத் தொடங்கியது. 'ஓர் இலக்கிய வடிவம் புதிதாகத் தோன்றுவதென்றால் அதற்கோர் இன்றியமையாமை இருக்கிறது என்பது பொருள்' என்பார் கலாநிதி க. கைலாசபதி அவர்கள். உலக அரசியல் மாற்றத்தில் புதிய உந்துதலை ஏற்படுத்தியதில் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. உலக இயங்கியலில் அதிகார கட்டமைப்புகளை ஜனநாயக மயப்படுத்துவதில் நாவல் வடிவம் பெரிதும் தாக்கத்தை செலுத்தியுள்ளது. மேட்டுக் குடியினரின் வாழ்வியலை, வரலாற்றைச் சித்திரிக்கும் காவிய மரபிலிருந்து விலகி மக்கள் இலக்கியமாகப் பரிணமித்த நாவல் மக்கள் சார்ந்த வரலாற்றை, அவர்களின் வாழ்க்கை முறைகளை, அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளைப் பதிவு செய்யும் முக்கிய ஊடகமாக அமைகிறது. சுயம் சார்ந்த போராட்டங்களை முதன்மைப்படுத்தி மக்கள் மயப்படுத்துவதிலும் நாவல் இலக்கியங்கள் தடம் பதித்துள்ளன. வரலாறுகளை ஆவணப்படுத்துவனவாகவும் நாவல்கள் அமைகின்றன.

உலகில் வாழும் வெவ்வேறு இனக் குழுமங்கள் தங்கள் இருப்பை நாவல் ஊடாக உறுதி செய்துகொண்டுள்ளார்கள். தென்னிந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் இரு நூறு வருடங்களுக்கு முன்னர் பல நாடுகளுக்குப் புலம்பெயர்கிறார்கள். அவ்வாறு புலம்பெயர்ந்தவர்களுள் இலங்கை நோக்கி வந்தவர்களின் நிலைபற்றிய அவதானம் முனைப்பாக கவனத்தில் கொள்ளப்படுகிறது. இப்புலம்பெயர்வின் பின்னர் இலங்கை அரசியலில், பொருளாதாரத்தில் வரலாற்றில் பல மாறுதல்கள் நிலவுகின்றன. அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழினக் குழுமம் தங்களின் அடையாளத்தை நிலை நிறுத்துவதில் இரு வேறுபட்ட கருத்து நிலைகளைக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சட்ட ஏற்பாடுகளில் 'இந்திய வம்சாவளி தமிழர்கள்' என்ற அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் இத்தமிழர்கள் தங்களை மலையகத் தமிழர்கள் என அடையாளப்படுத்தப்படுவதில் வேட்கை கொண்டுள்ளனர். தென்னாசிய நாடுகளில் தம் ஆதிக்கத்தைச் செலுத்திய மேலை நாட்டவர்களில் பிரித்தானியர்களே தென்னாசிய நாடுகளை முழுமையாக ஆட்சிக்குட்படுத்துகிறார்கள். பிரித்தானியர்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்கள் குழுமம் 1823-ல் இலங்கையில் நிலைபெறத் தொடங்குகிறார்கள். இவர்களின் வரவு, வரவுக்கான பின்னணி, காரணங்கள் முதலானவை மிகக் கவனத்திற்குரியதாகும். இலங்கையில் 200 வருடத்தில் தடம் பதிக்கும் ஆண்டாக 2023-ம் வருடம் அமைவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

முதலில் தமிழ் நாவலை எழுதியவர் வேதநாயகம் பிள்ளை என உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவ்விடயம் குறித்த சர்ச்சை நிலையை நாம் அறிவோம். அவ்வாறே முதலாவது என வரும்போது ஈழத்து தமிழ் நாவல்களிலும் அச்சர்ச்சை தொடர்கிறது. பலரது நாவல்கள் முதலாவதாகும் என்ற வாதப் பிரதிவாதங்கள் ஈழுத்திலும் நிலவுகின்றன. ஈழத்து தமிழ் நாவல் தொடர்பில் சில்லையூர் செல்வராசன், ஆ. சிவநேசச் செல்வன், கோ. சிவபாதசுந்தரம், எஸ்.எம். கமாலுதீன், நா. சுப்ரமணியம், மயில்வாகனம் இரகுநாதன் ஆகியோர் 'ஈழத்து தமிழ் நாவல்' என பொதுமைப்படுத்தி தங்கள் பார்வையைச் செலுத்தியிருக்கிறார்கள். இந்த பொதுமைப்படுத்தப்பட்ட பார்வைகளில் மலையக நாவல் இலக்கியம் குறித்தான முயற்சிகள் பெரிதும் தாக்கத்தைச் செலுத்தவில்லை. இது மலையக நாவல் இலக்கியம் தொடர்பில் மட்டுமல்ல மலையக இலக்கிய வடிவங்கள், அரங்கியல் தொடர்பிலான ஆய்வுகளி

லும் அவ்வாறான நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தொடர் பாதிப்பு நிலைக்குள்ளான இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வியல், வரலாறு மற்றும் அவர்கள் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள், இறப்பு தொடர்பான காரணங்கள் பின்னணியாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. இலங்கையின் அரசியலில் முரண்பட்ட நிலை தோன்றுவதற்கும் தொடர்வதற்கும் இவ்விடயங்களும் தக்கசான்றாக அமைவதைக் காணலாம்.

இலங்கையின் இன பகுப்பில் 'இந்திய வம்சாவளி தமிழர்கள்' என்ற அடையாளத்திற்குட்பட்டே இன்று வரையில் இம்மக்கள் அணுகப்படுகிறார்கள். மாறாக கலை, இலக்கிய சமூகச் செயற்பாட்டாளர்களின் பின்னணியில் 'மலையகம்' என்ற சொற்பதம் விரும்பி இம்மக்களால் சூடிக்கொண்ட நாமமாகிறது. முற்போக்குச் செயற்பாட்டாளர் இளஞ்செழியன் அவர்களின் செயற்பாட்டு அரசியலின் தொடக்கத்தோடு அறுபதுகளின் பின்னெழுந்த மலையக ஆத்திர பரம்பரை செயற்பாட்டாளர்களின் உத்வேக செயற்பாடுகள், எழுத்துக்கள் மற்றும் கலை அம்சங்கள் மலையகம் என்ற பதத்தை இச் சமூகத்தோடு வேரூன்ற செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொண்ணூறுகளின் பின்புதான் மலையக இலக்கியம் தொடர்பிலான ஆய்வுகள் விருத்தியடைந்தன. அச்சூழலில் அது தொடர்பான ஆவணப்படுத்தல் செயற்பாடுகளும், எழுத்துக்களும் நிலைபெறத் தொடங்கின. புலம்பெயர்வு, புலம்பெயர்ந்த பின்னர் இலங்கையில் நிலைபெற எடுத்த முயற்சிகள், வாழ்க்கை முறை என்பது பற்றிய பதிவுகளை மலையக நாட்டார் பாடல்கள் ஊடாக தெளிவாக அறியலாம். பின்னர் அப்பாடல்கள் கவிதை வடிவங்களாகவும், சிறுகதை வடிவிலான புனைவுகளாகவும் வளர்ச்சி பெற்றன. நாட்டார் பாடலுக்கும் கவிதை வடிவங்களுக்கும் இடைப்பட்ட தன்மையை வலியுறுத்துவதாக மலையக வீதிப்பாடல்கள் முக்கியத்துவம் பெறுகிறது. இதன் வரிசையிலேயே மலையக நாவலுக்குரிய தேவையையும் அதன் தனித்துவ தன்மையையும் அறிய முடிகிறது.

இலங்கையின் தமிழ் நாவல் குறித்து பல சர்ச்சைகள் எழுந்தாலும் சித்திலெப்பையின் 'அசன்பே சரித்திரம்' என்ற நாவலே ஈழத்தில் எழுந்த முதலாவது நாவலாகக் கொள்ளப்படுகிறது. 'இந் நாவல் தமிழின் முதல் நாவலாகக் கருதப்படும் பிரதாப முதலியார் சரித்திரம் போன்று வீரசாகச செயல்களுடன் தொடர்புடையது. ஆரம்ப காலத்தில் வெளிவந்த மற்றுமொரு நாவலான 'திக்கற்ற இரு குழந்தைகள்' மர்மச் சம்பவங்களுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்நாவல் முஸ்லிம் மக்களது வாழ்வியலைப் பிற்புலமாகக் கொண்டது.

1885-ல் 'அசன்பே சரித்திரம்' வெளிவருகிறது. கோ. நடேசய்யரின் 'மூலையில் குந்திய முதியோன்' 1924-ல் மலையகம் என்ற பிரக்ஞையில் தேசபக்தன் இதழில் தொடராக வெளிவந்தது. இந்நாவல் நூலுருப் பெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை. தொடர்ந்து ஈழத்து நாவல் இலக்கியப் பரப்பில் பல நாவல்கள் வெளியாகின. இதன் தொடர்ச்சியாக மலையகத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் நாவல்களும் வெளிவரத் தொடங்குகின்றன. வீரகேசரியின் இதழின் ஸ்தாபக ஆசிரியர் எச். நெல்லையா மலையக நாவல் இலக்கியத்துறைக்கு வலிமை சேர்த்தார். 'சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி' (1934), 'இரத்தினாவளி அல்லது காதலின் மாட்சி' (1938), 'காந்தாமணி அல்லது தீண்டாமைக்கு சாவுமணி' (1938), 'சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு' (1940), 'பிரதாபன் அல்லது மகாராஸ்ர நாட்டு மங்கை' (1941), போன்ற இவரது நாவல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவைகளாகும். 'லட்சுமி அல்லது அரிஜனப் பெண்' போன்ற இரட்டைப் பெயரில் தமிழ்ப் படங்கள் வெளிவந்த பாணியில் மேற்குறித்தவாறு மலையக நாவல்களும் வெளிவந்தன. மலையகத்தின் முதல் நாவலாசிரியரான ஏ. போல் அவர்களுடைய 'சுந்தரமீனாள் அல்லது காதலின் வெற்றி' எனும் நாவலும் இப்பாணியிலேயே அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே மிக நீண்ட நாளையின் பின்னர் இவ்வாறான ஓர் தலைப்பில் தெளிவத்தை ஜோசப் அவர்களும் நாவல் ஒன்றை எழுதியுள்ளார். அந்நாவலின் தெலைப்பு 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983' ஆகும். இந்நாவல் இலங்கையில் 1983-







இல் ஏற்பட்ட இன வன்முறையின் ஒரு பக்கத்தைக் காண்பிப்பதாக அமைகிறது.

கோப்பி பயிர்ச்செய்கைக்குத் தியாகம் செய்த மலையக சமூகத்தின் சமகால வாழ்வியல் வரலாற்றைப் பதிவு செய்ததில் மலையகத்தின் முதல் நூலான 'கோப்பி சிருஸ்டி கும்மி' முக்கிய இடம் வகிக்கின்றது. முதலாளிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் ஏப்ரகாம் ஜோசப்பின் கவி வரிகள் இந்நவலில் புனையப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து இக் கால மலையக மக்களின் வாழ்வியலை மேற்கத்தேய எழுத்தாளர்களின் எழுத்துக்களே ஆவணப்படுத்தியிருப்பதைக் காணலாம். வில்லியம் நைட்டனின் Forest life in Ceylon என்னும் நினைவுக் குறிப்பு சொர்க்கத்தின் பசுமையான, கவர்ச்சியான மலையகத்தை வனப்பகுதி வழியாக காட்சிப்படுத்துகிறது. Donvan Moldrich இன் Bitter berry bondage என்னும் நூல் மலையகத்தில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த கோப்பித் தொழிலாளரின் வாழ்வை ஆவணப்படுத்துகிறது. கிறிஸ்டின் வில்சனின் Bitter Berry நாவலை 2010-ம் வருடம்

இரா. சடகோபன் கசந்தகோப்பி என்ற பெயரில் மொழிபெயர்த்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 'கோப்பியின் அழிவிலிருந்து தென்சாம்பல் மேட்டிலிருந்து எழுந்ததுதான் தேயிலை' என்பார்கள். அந்த கோப்பி காலம் பற்றி, கோப்பித் தோட்டம் உருவாக்கம் பற்றி, கொண்டு வந்த காசை எல்லாம் கோப்பி தோட்டங்களில் கொட்டிவிட்டு, அது பலன்தர ஆரம்பிக்கும் வரையில் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் அவர்கள் திண்டாடிய நிலைமைகளைப்பற்றி, பலனலிக்காமல் கோப்பிப் பயிர்ச்செய்கை படுத்துவிட்ட பிறகு திரும்பவும் லண்டன் சென்றுவிட பணமின்றி தவித்துப்போன துரைமார்கள் பற்றியெல்லாம் யாரும் அறிந்திருக்கவில்லை. 'கசந்த கோப்பி' என்கிற இந்த நாவல் வாசித்து அறியப்படாத அந்த பக்கங்களின் பெரும் பகுதிகளை ரத்தமும் சதையுமாக ஒளிவு மறைவின்றி காட்டுகிறது. 'பொருளாதாரத்தின் எழுச்சியினை மையமாகக் கொண்டே இந்நாட்டில் தோட்ட தொழிலாளர்கள் அல்லது மலையக மக்கள் என வழங்கப்படும் ஒரு சமூகத்தின் வரலாறு உருவாக்கம் கொள்கிறது' என்பார் தெளிவத்தை ஜோசப் (கசந்த கோப்பி மொழிபெயர்ப்பு நூலுக்கான முன்னுரை), இந்நாவல் மலையக மக்களின் வாழ்வுக்கூடாக இலங்கைப் பொருளாதாரத்தின் சாதக பாதக அம்சங்களைப் பேசுகிறது. மலையக மக்களின் அவலங்கள், உழைப்பு, தொழில் மீது அவர்கள் கொண்ட ஈடுபாடு தொடர்பிலான பதிவுகளையும் இந்நாவல் உட்சுமந்துள்ளது. அவ்வாறே பொருளாதார முயற்சிகளில் ஈடுபட்டு அதற்கு இரையாகும் முதலாளிகளின் வாழ்வும் இந்நாவலில் சித்திரிக்கப்படுகிறது.

இலங்கையில் கோப்பிக் காலத்தின் பின்னரான தேயிலைப் பயிர்ச்செய்கையின் நிமித்தம் தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்படும் தமிழர்களின் நிலைகுறித்தான பதிவுகளை வரலாற்று நாவல்கள் ஊடாக அறியலாம். அதிகளவான ஆட்களை ஏற்றிவரும் படகுகள் கடலுக்குள் அமிழ்ந்து போன சம்பவங்களை நாவல்கள் சித்திரித்து நின்றன. ஆதிலெட்சுமி என்ற கப்பல் கடலில் மூழ்கியதால் 120 பேர் செத்து மடிந்தனர் என்ற வரலாறும் இருக்கின்றது. இவ்வாறு வலிசுமந்த பயணங்களின் துன்பியல் நிகழ்வுகளையும் நாவல்கள் கூறிநின்றன. புலம்பெயர்வு நிர்ப்பந்தம், புலம்பெயர்வின் பின்னரான அவஸ்தைகள், காட்டு வழிப் பயணம், அவ்வாழ்வியலோடு இணைந்த பண்பாட்டு நெறிமுறைகள், கலை அம்சங்கள் என்பவற்றை பேசும் செல்நெறியை நாவல்கள் தோற்றுவித்தன. அவ்வாறான வரலாறை வலியுறுத்தும் நாவல்களில் கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப்பச்சை' மு. சிவலிங்கத்தின் 'பஞ்சம் பிழைக்க வந்த சீமை' மாத்தளை சோமுவின் 'கண்டிச்சீமை' போன்றன முக்கியமானவை. இந்த வரலாற்றை நாவல் வடிவில் ஆவணப்படுத்துவதில் மாத்தளை சோமு, மு. சிவலிங்கம் வெற்றி பெற்றவர்களாவர்.

வாழ்வியல் அம்சங்களை வரலாற்றோடு தொடர்புபடுத்தும் பாங்கினை பல நாவல்கள் உட்சுமந்துள்ளன. அவ்வாறான நாவல்களின் வரிசையில் புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' மலையக மக்களின் வாழ்வியலை பேச விளைந்ததையும் அறிய முடிகிறது. 'மாணிக் கங்கை' நாவலில் ராஜம் கிருஷ்ணன் மலையக மக்களின் வாழ்வை எடுத்துக் காட்டியுள்ளார். கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப்பச்சை' மூன்று தலைமுறையினரின் வாழ்வியலைப் பதிய முனைவதையும் அவதானிக்கலாம். பல நாவல்களில் இளம் உள்ளங்களின் காதல் நிலைகள் கூட அவலச்சுவையுடனே வெளிப்படுமாற்றைக் காணலாம். மாறாக இராஜகோபாலன், பாலா சங்குப்பிள்ளை ஆகியோரது அண்மைக்கால நாவல்கள் காதலை இரசனையோடு பதிவுசெய்கிறது.

மலையக மக்களின் போராட்ட குணாம்சங்கள் அவர்களின் இயல்பான நடத்தைவாத முறைகளின் வாயிலாக நாவல்களில் எடுத்துக் காட்டப்படுகிறது. அன்று முதல் இன்று வரை மலையக மக்கள் பொருளாதார வசதியின்றி கஷ்டப்படுகின்றனர். இன்னமுமே வேதன உயர்வைச் சரிவரத் தீர்மானித்துக் கொள்ளமுடியாத நிலையே காணப்படுகிறது. எதிர்ப்புணர்வை மலையக மக்களிடத்தில் தூண்டுவதில் மலையகத் தலைமைகளும், நாட்டின் தலைமைகளும் வெற்றி கண்டுள்ளார்கள். இன முரண்பாட்டுச் சூழ்நிலையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை மேலும் மேலும் தூண்டிவிடும் முயற்சிகள் தொடர்ந்தும் அரங்கேறிய வண்ணமுள்ளன. கண்டிக்கத்தக்க இப்போக்குகள் மிக வேதனைக்குரியது. அவ்வப்போது பெரும்பான்மையினர் கொள்கின்ற ஆத்திரப் போக்குகளுக்குள் மலையக மக்கள் பலியாகின்ற, பாதிப்புக்குள்ளாகின்ற நிலைகள் வருந்தும் வண்ணம் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. இவ் இனவெறி தாக்குதலுக்கு உதாரணமாக பதுளை பிந்துனுவெவ, இரத்தினபுரி வேவல்வத்தை முதலான இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக் குறிப்பிடலாம். அவ்வாறான சம்பவங்கள் பலவற்றை நாவல்கள் பேசுவதையும் காணலாம். அவற்றுள் சார்ல்நாடனின் 'பிணந்தின்னும் சாத்திரங்கள்', தி. ஞானசேகரனுடைய 'கவ்வாத்து', 'குருதிமலை' போன்ற நாவல்கள் இவ்வாறான போராட்டங்களையும் முதன்மைப்படுத்துவதைக் காணலாம்.

மலையக மக்களோடு பின்னிப் பிணைந்த தொழிற்சங்க நடைமுறைகள் பல நாவல்களில் இணைக்கப்படுகின்றன. தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களின் நாவல் இலக்கிய முயற்சிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும். அவ்வாறானவர்களுள் நாவலாசிரியர்களாக பரிணமித்தவர்களான சி.வி. வேலுப்பிள்ளை, மாத்தளை ரோகினி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். சி.வி. வேலுப்பிள்ளை மலையக சமூக இலக்கிய முயற்சிகளில் தனித்துவ ஆளுமையாக விளங்குகிறார். இவர் வாய்மொழிப் பாடல் தொகுப்பு, கவிதை, பத்தி எழுத்துக்கள் மூலமாகவும் தடம் பதித்தவர். இவர் 'வீடற்றவன்', 'இனிபடமாட்டேன்', 'வாழ்வற்றவர் வாழ்வு' ஆகிய நாவல்கள் ஊடாக மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும் ஆவணப்படுத்தியவர். ஒன்றிணைந்த தொழிற்சங்கச் செயற்பாடுகள் இம்மக்களுக்கு முக்கியம் என்பதை இந்நாவல்கள் பதிவு செய்கின்றன. காதலை முதன்மைப்படுத்தி எழுந்த மாத்தளை ரோகினியினுடைய 'இதயத்தில் இணைந்த இரு மலர்கள்' நாவலில் தொழிற்சங்கத்தில் ஏற்படும் புரிந்துணர்வு பற்றிய செய்திகளையும் காணலாம்.

மலையக மக்களது ஒன்றிணைந்த எழுச்சியின் வெளிப்பாடுகளை எடுத்துரைப்பதில் தி. ஞானசேகரனின் நாவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வாறு இவர் எழுதிய மலையக நாவல்கள் முதன்முதலாக இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பின் உசாத்துணை நூலாக கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இனங்களுக்கிடையிலான சுமூக உறவு

கள் பற்றியும், தொழிலாளர்களின் எழுச்சி செயற்பாடுகள் பற்றியும் தி. ஞானசேகரனின் நாவல்கள் பேசுகின்றன.

உள்ளக முரண்பாடுகளின் குறுக்குவெட்டு முகத்தை உணர்வதாக தி. ஞானசேகரனின் நாவல்கள் அமைகின்றன. இவர் வடபுலத்தைச் சேர்ந்தவர். தொழில் நிமித்தம் மலையகத்தில் வாழுகின்றபோது தாம் பெற்ற அனுபவத்தை தத்துருபமாக நாவல்களில் படைத்துள்ளார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். அவ்வாறே வடபுலத்தினைச் சேர்ந்த 'மலைக்கொழுந்து' தந்த நந்தி, 'மூட்டத்தினுள்ளே' தந்த புலோலியூர் சதாசிவம் போன்றோரின் நாவல்த்துறைப் பங்களிப்பும் குறிப்பிடத்தக்தாகும். இவர்களது நாவல்கள் மலையக மக்கள் பற்றிய இன்னோரன்ன பிரச்சினைகள் பற்றி தெளிவுறுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மாத்தளை மண் மலையகப் புனைவுகளில் காத்திரமான பங்கினை வழங்கியுள்ளது. மலையக நாவல் இலக்கியத்தை முக்கியத்துவப்படுத்துவதில் மாத்தளை நாவலாசிரியர்கள் கவனத்திற்குரியவர்கள். மாத்தளை மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை வடிவேலன், மாத்தளை ரோகினி முதலானவர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். மாத்தளை சோமுவின் 'தொடுவானம்', 'எல்லை தாண்டா அகதிகள்', 'அந்த ஊரில் இந்த மனிதர்கள்', மாத்தளை கார்த்திகேசுவின் 'வழி பிறந்தது' போன்ற நாவல்கள் அப்பிரதேச இனமுரண்பாட்டுச் சூழ்நிலையைச் சித்திரிப்பதோடு இன நல்லுறவை வலியுறுத்துகின்றது.

மாத்தளை மலரன்பனின் அண்மைக்கால நாவல் முயற்சியில் 'பால்வனங்களில்' நாவல் தனித்துவத்திற்குரியது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் சிக்கல் நிலைகளைப் பேசும் இந்நாவல் இதனுடன் தொடர்புடைய இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் சிக்கல்களையும், இடர்பாடுகளையும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறது. மலையக எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் தேயிலைத் தோட்டம் சார் வரலாற்றை, வாழ்வியல் பண்பாட்டு கலாசார அம்சங்களை நுட்பமாக எடுத்துக்காட்டுகின்றனர் என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே நிலவி வருகிறது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் மலரன்பனின் இந்த நாவல் முயற்சி வரவேற்கத்தக்கதாகும். அவ்வாறே அண்மையில் வெளிவந்த பெனி. யோசே அவர்களுடைய 'பால்மரக்காடு' இறப்பர் தோட்டங்களை மையப்படுத்தி கல்வி தளத்தை முதன்மைப்படுத்தி சமூக முரண்பாடுகளைப் பேச விளைகிறது.

தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கைகளுக்கு அப்பால் பல உற்பத்தி பொறிமுறைகள் இந்த சமூகத்தின்பால் திணிக்கப்படுகிறது. அவ்வாறான ஒரு முயற்சியில் சிக்கித் தவிக்கும் இச்சமூகத்தின் அவலங்களைப் பிரமிளா பிரதீபனுடைய 'கட்டுப்பொல்' நாவல் பேசுகின்றது. இலங்கையில் தென் மாகாணத்தில் மலையக மக்கள் எவ்வாறு தம் வாழ்க்கை அடையாளத்தை இழக்கிறார்கள் என்பதை இந்நாவல் கூறிச் செல்கிறது.

இன முரண்பாடுகளால் மலையகத் தமிழ் மக்கள் அனுபவித்த கஷ்டங்களையும் அவர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளையும் பல நாவல்கள் பேசுகின்றன. இந்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்ற முப்பது வருடகால யுத்தம் மக்களின் இயல்பு வாழ்க்கையினைச் சிதைத்தது. வர்க்க அரசியல் போராட்டத்தில் ஆட்சியாளர்களால் போராளிகள் பலர் அழிக்கப்பட்டமையையும் யுத்தத்தால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் இழப்புகளையும் இக்காலப் பகுதியில் தோன்றிய சிங்கள மற்றும் தமிழ் நாவல்கள் பேசுபொருளாக்கியமையும் குறிப்பிடத்தக்கது. இந்நாட்டில் சிங்கள, பூர்வீர்கத் தமிழர்கள் மலையக மக்களின் பிரச்சினைகளை அவர்களது நாவல்களில் எவ்வகையான புரிதலுடன் சித்திரித்துள்ளார்கள் என்பது யோசிக்க வேண்டிய விடயமாகிறது. 1983 மற்றும் இது போன்ற இனக்கலவரச் சூழல் மலையக மக்களில் பெரும் பாதிப்பு நிலையை ஏற்படுத்தி இருந்தமையும் குறிப்பிடத்க்கக்கது. குடும்பக் கட்டுப்பாடு என்ற போர்வையில் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஆர்வங்காட்டிய செயற்பாடுகள் மலையக மக்களின் விகிதாசாரத்தை தடைப்படுத்தியது. அதில் இலங்கை அரசு பெரிதும் வெற்றிகண்டமையும் குறிப்பிடத்தக்கது. இக்கருவினை மையப்படுத்தி நாவல் எதுவும் இதுவரையும் வெளிவரவில்லை. ஆயினும் சிறுகதைகள் தாராளமாகவே இதனைப் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரதேச வாதங்களை அந்த சூழலுக்கான முரண்பாடுகளுடன் பதிவதில் ஈழத்துப் புனைவுகளுக்கு தனியிடமுள்ளது. சிங்கள நாவல்களில் கரையோரச் சிங்களவர், கண்டிய சிங்களவர் என்ற வேறுபட்ட முரண்பாட்டுச் சூழல் காலங் காலமாக காணப்பட்டுவருவதனைக் காணலாம். அவ்வாறே காலத்தால் முறபட்ட இயக்கர், நாகர் வழிவந்தவர்கள் வடக்கிலும், கிழக்கிலும் நிலைக்கொண்டுள்ளார்கள். அவ்வாறே கொழும்பை சூழ வாழும் மக்களிடையே இடப்பெயர்வுக்குட்பட்ட தமிழர்களின் அசைவியக்கம் வேறுபட்டதாக காணப்படுகின்றது. இலங்கையில் இச்சூழ்நிலையில் செறிந்தும், சிதைந்தும் வாழ்கின்ற மலையக மக்களின் சமூக நிலைப்பட்ட முன்நகர்வுகளை நாவல்கள் சித்திரிக்கின்றன. எடுத்துக்காட்டாக செ. தமிழ்ச்செல்வனின் 'தேயாத முழு நிலவு' மலையகத்துக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான முரண்பாட்டு நிலையை எடுத்துரைப்பதைக் காணலாம்.

பெரும்பான்மை இனத்தவர்கள் என்ற வகையில் மலையக மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டதன் விளைவாக உபாலி லீலரத்ன, பந்துபால குருகே, சுஜித் பிரசங்க முதலியோர் மலையக மக்களின் வாழ்வியலை நாவலாக்கும் பணியில் முன்னின்று உழைத்தனர். பந்து பால குருகேயின் 'உழைப்பால் உயர்ந்தவர்கள்' நாவலை இரா. சடகோபன் தமிழாக்கினார். சுஜித் ப்ரசங்கவின் 'சாமி மலை' நாவலை சிங்கள மொழியில் இருந்து ரிஷான் ஷெரீப் தமிழாக்கினார். மலையகம் என்ற பிற்புலத்தில் அமைந்த தமிழ் மொழி மூல நாவல்களும் சிங்கள மொழியிலான மொழிபெயர்ப்பு முயற்சிகளும் குறிப்பிடத்தக்க பணியைச் செய்துள்ளன. இப்பணியில் மடுள்கிரிய விஜேரத்ன, ஏமசந்திர பத்திரன, வெளிகன்னகே ஆகியோரது பங்களிப்புகள் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

வரலாறையும், சமகாலத்தையும் மலையக நாவல்கள் சித்தரிப்பதில் படிமுறைவளர்ச்சி காணப்படுகிறது. சமகாலத்தில் இச்சமூகத்திலிருந்து உருவாகிய மத்தியதர வர்க்கத்தினரின் வாழ்வைப் பதிவதில் வெற்றிடம் நிலவிய நிலவிய சூழலில் சித்தி சண்முகநாதன், மாலதி பாலேந்திரன் ஆகியோர் இது குறித்த பதிவுகளை நாவல்களில் மேற்கொண்டனர். இவ்

வாறே மலையக பின்னணியில் உருவான நாவல்களில் ப. ஆப்தீன், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், அல் அஸூமத் போன்ற முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்புகளும் குறிப்பிடத்தக் கவைகளாகும். பெனடிக் பாலனின் 'சொந்தக்காரன்' மலையக மக்களின் பிரச்சினைகளை உளவியல் ரீதியிலான பார்வையுடன் அணுகியிருப்பதை அறிய முடிகிறது. புலம் பெயர்வின் வேதனைகள் பல நாவல்களில் ஊடுருவப் பெற்றாலும் மு.சி. கந்தையாவின் 'குறு நதிக் கரையில்' மிகுந்த வலியோடும், வலிமையோடும் மலையக மக்களின் வாழ்க்கையைத் தொட்டுக்காட்டுகிறது. 1964-ம் வருடம் ஸ்ரீமா சாஸ்த்திரி ஒப்பந்தம் தந்த ஆற்றொண்ணா வேதனைகளைப் பதிவுசெய்வதில் இந் நாவல் வெற்றியடைந்துள்ளது. பல்கலைக்கழகச் சூழலை மையப்படுத்தி மொழிவரதனால் எழுதப்பட்ட 'ஒரு நாடும் மூன்று நண்பர்களும் என்ற குறுநாவல் இளைஞர்களிடம் நல்லிணக்கத்தையும் சகோதர ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் முனைப்போடு படைக்கப்பட்டது எனலாம்.

பொதுவாக மலையக நாவல்கள் வாழ்வாதாரத்துக்குப் போராடும் மக்களின் இருப்பின் ஏக்கங்களைப் பதிவு செய்கின்றன. பிரித்தானியக் காலனித்துவம் தொடக்கம் சுதந்திர இலங்கையின் இன்றைநாள் வரை பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்கிய மலையக சமூகம் இன்று வரை வாழ்வாதார இருப்புக்குப் போராடும் சமூகமாகவே காணப்படுகிறது. தொழிலாளர் உழைப்புக்கு உத்தரவாதமின்றி தொழிற்துறையின் வேதனத்துக்காக கையேந்தி நிற்கும் நிலையே மலையகத்தில் இன்றும் காணப்படுகிறது. மத்தியதர வர்க்கமாக உயர்ந்தவர்களிடத்தே பொது நலன் கருதி ஒன்றிணைந்த செயற்பாடுகள் அரிதாகவே காணப்படுகிறது. பல நாவல்களில் பாலியல் வக்கிரங்களும், உழைப்பு சுரண்டல்களும் மேலோங்கி இருப்பதையும் காணலாம். இந்நாட்டில் ஏற்பட்ட உள்ளக இடப்பெயர்வுகள், மலையக மக்களைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றியதைப் பேராசிரியர் விஜேசந்திரனின் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. அவ்விடப்பெயர்கள் தந்த அவலங்களையோ, முன்னேற்றங்களையோ சித்தரிக்கும் நாவல்கள் இதுவரையில் எழுதப்படவில்லை. இதனால் இதனோடு தொடர்புபட்ட வாழ்வியல் பதிவுகளை மலையக நாவல்கள் சுட்டிக் காட்டவேண்டும். உள்ளக இடப்பெயர்வுகள் வன்முறைகள், அபிவிருத்தியை முதன்மையாகக் கொண்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் என்பன மலையக மக்களின் இருப்பைச் சிதைப்பதில் பெரிதும் தாக்கத்தைச் செலுத்தின. இவ்விடயங்கள் பற்றிய ஆவணப்பதிவுகள் மலையக நாவலிலக்கியத்திற்கு சிறந்த கதைக்கருக்களாக அமையலாம். இவ்விடயங்கள் குறித்தும் மலையக நாவலாசிரியர்கள் கவனஞ் செலுத்தவேண்டும்.

புலம்பெயர்வு, புலம்பெயர்வு நிர்ப்பந்தம், பிரஜாவுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு, கல்விக்கான வாய்ப்பு மறுப்பு, 1964-ம் ஸ்ரீமா சாஸ்த்திரி ஒப்பந்தம் மூலம் உறவுகள் பிரிப்பு என மலையக மக்கள் அனுபவித்த துயரம் அதிகம். இதன் மூலம் இலங்கையில் இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளமும் இந்தியாவில் இலங்கை காலனியினர் என்ற அடையாளமும் மலையக மக்களைத் தொடர்ந்து வருத்துகின்றன.

இவ்வாறான அந்நிய உணர்வுநிலைகள் இம்மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. புலம்பெயர்ந்து இச்சூழலில் வாழப் பழகிய, வாழ விரும்பிய நிலையில் மக்கள் நெருங்கிய உறவுகளை விட்டுப் பிரியும் நிலை ஏற்பட்டது. இவ்வாறான சமூக அவலம் மக்களின் வாழ்வியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த அவலங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் தீவிர செயற்பாடுகளில் முனைப்பு பெற்றதன் பின்னரே நிறைவேறியமை கவலைக்கிடமான உண்மையாகும். இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழ் அரசியலமைப்பு மாறிய தன் பின்னர் ஆட்சியாளர்களுக்கு ஒத்துழைக்கும் நிர்ப்பந்தம் கருதியே மலையக மக்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமை, மீளவும் உறுதிப்படுத்தப்பட்டன. இவ்வகையில் இதன் ஊடாக ஏற்படும் சமூகச் சிதைவுகளும் மறுக்கப்படும் அரசியல் உரிமைகளும் மலையக மக்களின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. மலையகத்தின் விளைநிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்நிலங்களிலிருந்து மலையக மக்கள் மனதளவில் விலகி நிற்கும் நிலையே இன்று காணப்படுகிறது. உளவியல் சார்ந்த முரண்நிலைகள் அதிகரித்து வரும் சூழலில் பாடசாலை இடைவிலகல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. போதைப் பொருள் கலாசாரமும் குற்றவியல் நடவடிக்கைகளும் தடுக்கப்படவேண்டிய சூழலில் மலையக நாவலின் பேசுபொருளில் மாற்றங்கள் நிகழவேண்டும். அதேசமயம் எழுத வேண்டிய நாவல்களுக்குரிய கதை அம்சங்களும் மாறவேண்டும். மலையக நாவல்களின் செல்நெறிகளின் போக்கைத் தீர்மானிக்கும் எண்ணக்கருக்களிலும் மாற்றங்கள் அவசியமாகும். அவ்வாறே நீண்டகாலம் உள்ளூராட்சி மன்றங்களுக்குள் சேர்க்கப்படாத தோட்டப்புறங்கள், பின்னர் 33-வது திருத்தத்தில் சேர்க்கப்பட்டும் செயற்பாட்டிற்குட்படாத நடைமுறைகளே காணப்படுகின்றன. இது குறித்த உரிமை சார்ந்த அவலங்களும் மலையக நாவல்களின் பேசுபொருளாக்கப்படல் வேண்டும். நாவல், குறுநாவல், நெடுங்கதை, வரலாற்று நெடுங்கதை என விரியும் நாவல் வடிவம் மலையக மக்களின் இன்றைய வாழ்வோடு இணைந்து வரும்போதே அது கனதியாகவும் காத்திரமாகவும் அமைந்து நிலைபெறும்.

**உசாத்துணை:**


- வேதநாயகம் பிள்ளை (2009) பிரதாபமுதலியார் சரித்திரம், நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.
- சித்திலெவ்வை மரைக்கார் எம்.சி அசன்பே சரித்திரம், புனைவகம்.
- கைலாசபதி.க (1999) தமிழ் நாவல் இலக்கியம், குமரன் புத்தக இல்லம்.
- மயில்வாகனம்.இ (2004) ஈழத்து தமிழ் நாவல்களில் சமுதாய சிகல்கள், தென்றல் வெளியீடு.
- சுப்ரமணியன்.நா (2009) ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம், குமரன் புத்தக இல்லம்.
- மலையக தமிழாராய்ச்சி மாநாடு (1997) ஆய்வுக் கட்டுரைகள், மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு செயற்பாட்டுக் குழு, கலாசார அமைச்சு.
- நித்தியானந்தன்.மு (2014) கூலித்தமிழ், க்ரியா
- சடகோபன்.இரா (2010) கசந்த கோப்பி, சூரியா வெளியீடு.
- சாரல் நாடன் (2014) மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள், குமரன் புத்தக இல்லம்.




letsumanan.a@thaiveedu.com



# புலம்பெயர் தமிழ்த் தேசியக் கருத்தியலும் இலங்கைத் தமிழ்த் தேசியமும்

– விதுர்ஷா கமலேஸ்வரன்

இலங்கையானது, வட - கிழக்கில் செறிவான தமிழ்பேசும் மக்களும் அதேபால் மத்தியில் மலையகத் தமிழ் மக்களும் தெற்கில் செறிவான சிங்கள மக்களும் ஏனைய பிரதேசங்க ளில் அனைத்து இனமக்களும் சிதறி வாழும் ஒரு பன்மைத் துவ நாடு. தமிழ்த் தேசியம் என்பது இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழ் பேசும் இனங்களையும் பிரதிநிதித்துவப்ப டுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், அது யாழ்ப் பாண சைவ வேளாள ஆண்மைய தேசியவாதமாகவே தோற் றம் பெற்று, இன்றுவரை செயற்பட்டுவருகின்றது. இதுவே தேசியத்திற்குள் தேசியம் என்ற அடிப்படையில், மலையகத் தேசியவாதம் மற்றும் இஸ்லாமியத் தேசியவாதம் என்பவற் றின் அடிப்படையாகவும் அமைந்தது.

இலங்கையின் போர் முடிவடைந்து பதினைந்து வருடங்கள் கடந்த பின்னரும் இனப்பிரச்சினை தீரக்கப்படவில்லை. இன் றுவரை தமிழ் மக்களுக்கான அரசியல், பொருளாதார, சமூக உரிமைகள் முழுமையாகக் கிடைக்கப்பெறாதமையால், அவர்கள் பொருளாதாரரீதியிலும் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்குகின்றனர். அத்துடன் தமிழ் மக்களது தேவை களை நிறைவு செய்வதில் போருக்குப் பின்னர் செயற்பாட் டுத்தளத்தில் இருந்த அரசியல் கட்சிகளும் தோல்வியடைந் துள்ளன.

இச்சூழலில் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள் இலங்கை மக்களது இனப்பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. சர்வதேச சமூகத்தில் இலங்கையில் போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்கக் கோரி ஒரு பிரதான அழுத்தக் குழுவாகச் செயற்படுகின்றனர். இதனால் இவர்களது செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. அத்துடன். புலம்பெயர் நாட்டவர்களது பொருளா தாரரீதியான பங்களிப்பும் தமிழ் மக்களது வாழ்வில் பிரதான வருவாயான அந்நியசெலவணியை நாட்டிற்கு ஏற்படுத்திக் கொடுக்கும் காரணியாக உள்ளது.

குறிப்பாகப் போருக்குப் பின்னரான சூழலில் இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பான, இலங்கை அரசு மற் றும் தமிழ் அரசியல் கட்சிகளது செயற்பாட்டில் தமிழ் மக்க ளுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியானது, தமிழ் மக்கள் மத்தி யில் தமக்கான புதிய தலைமை ஒன்றை நோக்கி நகர்வதற் கான தேவையைத் தோற்றுவித்துள்ளது. இச்சூழலில் பொரு ளாதார ரீதியாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களது வாழ்வியல் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் புலம் பெயர் தமிழர்கள் முன்நிலை வகிக்கின்றனர். அத்துடன் சர்வ தேச சமூகத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வேண்டி புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்து செயற்பட்டு வரு வதாலும் புலம்பெயர் தமிழர்களது தமிழ்த் தேசியக் கருத்திய லில் இலங்கைத் தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்நம்பிக்கைநிலை புலம்பெயர் தமிழர்களது தமிழ்த் தேசி யக் கருத்தியலை இலங்கைத் தமிழ்த் தேசியக் கருத்தியலாக ஏற்றுக் கொள்கின்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தேசியவாதம், ஒரு கருத்தியல் என்ற அடிப்படையில் சிக்கலா னதும், குழப்பகரமானதும், பல்தன்மையில் வெளிப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. 'Nation' என்பது 'nation' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து தோற்றம் பெற்ற இச் சொல் 'பிறந்தது.' 'தென்னாசியாவில் காலனித்துவத்திற்குப் பிற்பட்ட காலத்தில் தேசியவாதம், தேசிய இனத்துவம், தேசிய அரசு என்பவற்றுடன் தொடர்புபட்டது'(Smith G. Sabhlok, 2002).

இலங்கையில் தமிழ்த் தேசியக் கருத்தியல் என்பது வரலாற்று நெடுங்காலம் முதலே காணப்படுகின்றது. சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையிலான இனத்துவ பிளவுகளின் அடிப்படை யில் இது வரையறுக்கப்பட்டது. பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கைகளின் வரலாற்றுப் பின்னணியோடு இது அதிகரித் தது (திருநாவுக்கரசு,1991). இலங்கை சுதந்திரமடைந்த பின் உருவான சோசலிச ஜனநாயகக் குடியரசில் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் செயற்பாடுகள் சமூக மற்றும் அரசியல் ரீதி யான விடயங்கள் அதிகரிக்கத் தொடங்கின. இது ஏனைய இனங்களின் இருப்பு சார்ந்த அச்சுறுத்தலாக அமைந்தது. பெரும்பாலான சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மை மைய

நீரோட்ட அரசியலில் இணைந்து தம் கலாசார அடையாளங் களை மறைத்து வாழ்கின்றனர். ஆனால் இரண்டாவது மூன்றா வது பெரும்பான்மை இனங்கள் என்ற அடிப்படையில் தமிழ், முஸ்லீம் மக்களது அரசியல் போக்கு என்பது பெரும் பான்மை அரசியல் செயற்பாடுகளுக்கு மத்தியில் தம் மரபு, கலாசார மற்றும் அடையாளங்களின் தனித்துவங்களைப் பேணிக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துகின்றது (வில் சன்,1999). இது சிங்கள மற்றும் தமிழ் மக்கள் இடையிலான இனத்துவ அடிப்படையிலான தேசிய இனப் பிரச்சனையாக முகிழ்ந்து கொண்டது.

சிங்களத் தேசியவாதத்திற்கு எதிர்ப் பிரதிபலிப்புத் தேசியவா தமாகத் தோற்றம் பெற்ற தமிழ்த் தேசியவாதம் தனக்குள் காணப்படும் உள்ளக மற்றும் வெளியக ரீதியான அடக்குமு றைகளை மறைமுகமாக ஆதரித்தது. தமிழ்த் தேசியவாதத்தி னுள் பெண்கள், பிள்ளைகள், மாற்றுவலுவுடையோர், பால் பல்வகைமையினர், தலித்துக்கள் போன்றோர் யாழ். சைவ வேளாள ஆணாதிக்க தமிழ்த் தேசியத்தால் அடக்குமு றைக்கு உட்பட்டனர். அத்துடன் மத ரீதியாக முஸ்லீம் மக்க ளும், பிரதேச ரீதியாக இந்திய வம்சாவழித் தமிழர்களும் தமிழ்த் தேசியவாதத்தில் இருந்து அரசியல் நீக்கம் செய்யப் பட்டனர். பிரதேச ரீதியாக யாழ்ப்பாணம் மட்டுமே தமிழ்த் தேசியவாதத்துக்கான மையமாகக் கருதப்பட்டதோடு, ஏனைய பகுதிகளில் சிதறி வாழ்ந்த தமிழ் மக்களது உரிமை கள் மற்றும் தேவைகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அத்துடன் தமிழ் இனம் அல்லாத ஏனைய சிறுபான்மைக்கு ழுக்கள் அடக்குமுறைக்கு உட்பட்டன. குறிப்பாக சிலோன் ஆபிரிக்கர்கள், வேடுவர்கள், ஏனைய பழங்குடி மக்கள் போன்ற இனக் குழுமங்கள் தமிழ்த் தேசிய ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழ்த் தேசியத்தால் நேரடியான அடக்குமுறை களை எதிர்கொண்டனர்.

உள்ளக ரீதியான அடக்குமுறைகளைப் பேணிய தமிழ்த் தேசியவாதத்தினால் அதன் நிலைத்த தன்மையினைப் பேணிக் கொள்ள முடியவில்லை. சூழலுக்கேற்ப அது கட்சிக ளாலும், ஆயுதக் குழுக்களாலும் வழி நடத்தப்பட்டன. திரு. செல்வநாயத்தினால் கட்சி ரீதியாக ஆரம்பத்தில் வழிநடத்தப் பட்டு வந்தது. கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சியாக அமைந்தாலும், சிங்களப் பெரும்பான்மை யின் நோக்கில் தமிழர்களது உதவி இல்லாமலே சட்ட மாற் றங்களை மேற்கொள்ள முடிந்தது. காலனித்துவ ஆட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கையில் கொண்டுவரப்பட்ட அதிக ளவான சட்டங்கள் சிறுபான்மையினரது இருப்பிற்கு ஆபத்தா னதாக அமைந்தது. குறிப்பாக 1948 பிரஜாவுரிமைச் சட்டம், 1956 தனிச் சிங்களச் சட்டம், 1974 பல்கலைக்கழக மாவட்ட கோட்ட முறைமை போன்றன குறிப்பிடத்தக்கன. இது போன்ற சட்ட உருவாக்கம் மற்றும் அமுல்படுத்தல்களால், தமிழ் மக் கள் மத்தியில் அதிகளவான போராட்ட எண்ணங்கள் மற்றும் எதிர்ப்பு இயக்கங்கள் தோற்றம் பெற்றன. 1950-களுக்கு முன் னர் இனப் போராட்டமாக அமைந்த விடயம், 1970-களில் தேசியஇன விடுதலைப் போராட்டமாக மாறியது (குணசிங் கம்,மு 2003). பெருமளவிலான ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்று இலங்கை அரசிற்கு எதிராகச் செயற்பட்டன. 1970-கள் தொடக்கம் 2009 இறுதிக்கட்ட யுத்தம் முடிவடையும் வரை தமி ழர்களைப் பொறுத்தவரை ஈழத்தேசியவாதம் என்பதன் அடி யாக ‘சுயநிர்ணய உரிமை’ ஒரு பிரதான அடைவாக எதிர் பார்க்கப்பட்டது. பெரும்பான்மையான இலங்கைத் தமிழர் மற் றும் உலகளாவிய தமிழர்களின் பார்வையில் தமிழ்த் தேசிய வாதம் என்பதே இலங்கைத் தமிழர்களுக்கான சிறந்த முடி வாக எதிர்பார்க்கப்பட்டது.

1980-களில் ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்றன. இவற்றி னால் ஆயுத முனையில் தனித் தமிழ் நாட்டினை முன்வைத்து இலங்கைத் தமிழ்த் தேசியம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. அரச தரப்பு மற்றும் தமிழ் விடுதலை இயக்கங்களிடையி லான ஆயுதக்குழு மோதல் தமிழ்த்தேசிய சிந்தனைகளை வன்முறைக் கலாசாரத்தினுள் இட்டுச் சென்றது. இது இனங்க ளிடையிலான அதிகரித்த பகைமை உணர்வு தோன்றக் கார ணமாக அமைந்தது. சர்வதேச ரீதியில் ஒரு அரசாக அங்கீகா ரம் பெற்ற நாடான இலங்கை சிறுபான்மை உரிமைக்காகப் போரிட்ட போராட்ட குழுக்களை தீவிரவாத அமைப்பாக அடையாளப்படுத்தியது. இதன் காரணமாக தமிழ் ஆயுதக் குழுவின் நடவடிக்கைகள் சிங்களப் பேரினவாத இராணுவத் தால் தோற்கடிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியம் எனும்போது. தனித்து ஒரு குறிப்பிட்ட இனத்தை மட்டும் மையப்படுத்தி இது முன்வைக்கப்படுவத னால் ஏனைய அடக்குமுறைகள் தொடர்பில் இத்தேசியவா தம் கவனம் கொள்ளவில்லை. குறிப்பாக சாதிய அடக்கு முறை, பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, மாற்றுவலுவு டையோருக்கு எதிரான அடக்குமுறை, பால்பல்வகைமையின ருக்கு எதிரான அடக்குமுறை, சமய ரீதியான அடக்குமுறை (முஸ்லீம் மக்கள், கிறிஸ்தவ மக்கள்) மற்றும் பிரதேச ரீதி யான அடக்குமுறைகள், பழங்குடியின மக்கள் கவனத்தில் கொள்ளப்படாமை மற்றும் ஏனைய சிதறிவாழும் சிறுபான்மை இனக்குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவற் றைக் குறிப்பிடலாம். குறித்த இனத்திற்குள் காணப்படும் இவ் வாறான உள்ளக அடக்குமுறைகளைக் கவனத்தில் கொள் ளாத ஒரு தேசிய வாதம் அதிகாரத்துவப் பிரிவினைவாதத் தின் ஆரம்பகட்ட முயற்சியாகவே அமையும். குறிப்பாக சாதிய ஒடுக்குமுறையுடனான ஒரு தமிழ்த் தேசியவாதத் தையே புலம்பெயர் நாட்டவர்களும் கொண்டிருந்தனர். ஆனா லும் போர்க்காலச் சூழலில் உணர்வு ரீதியாக தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தனிநாடான ‘ஈழம்’ ஒரு அடையாளத் தேவையாகப் புகுத்தப்பட்டிருந்தது.

போர்முடிவடைந்த சூழலில் இலங்கையின் அடிமட்ட தமிழ் மக்களினது வாழ்வாதாரம், உயிர்வாழ்வதற்கு போதுமான பாதுகாப்பு, அத்தியாவசிய தேவைகளினை நிறைவேற்ற வேண்டிய சூழல், போரினால் ஏற்பட்ட இழப்புகள் என்பன தமிழ்மக்களை நல்லிணக்கம் தொடர்பாகச் சிந்திக்க வைத் துள்ளது. அதுமட்டுமல்லாது, இன்று மக்கள் மத்தியில், தமிழ்த் தேசியம் தொடர்பான கருத்தியலில் உள்ள நடைமு றைக்குச் சாத்தியமாகாத விடயங்கள், உயர்குழாமினரின் தீர் மானம் எடுக்கும் சக்திகள், ஆதிக்க சக்திகளின் இரட்டைத் தன்மை, தேசியவாதத்தின் போலித்தன்மை மற்றும் அரசியல் இலாபம் தேடும் தலைமைகள் போன்ற விடயங்கள் விமர்ச னப் பார்வையுடன் நோக்கப்படுகின்ற சூழல் அதிகரித்துள் ளது (நிலாந்தன் 2020). ஆனால், இன்று வரையிலும் தேர்தல் காலங்களிலும், முக்கியமான சமூகப் பிரச்சினைகள் எழு

கின்ற போதும் தமிழ் தரப்பு அரசியல்வாதிகள் தமிழ்த் தேசியத்தை ஒரு தீர்வாக முன்வைக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கப் பிளவுகள் உச்சம் பெற்ற ஆயுத போராட்டத் தொடக்க காலமான, 1980-களில் அதிகளவான தமிழ் மக்கள் ஆயுதப் போராட்ட சூழலை விட்டு உள்நாட்டின் பலபகுதிகளுக்கும், வெளிநாட்டிற்கும் இடம்பெயர்ந்தனர். இவர்கள் இடப்பெயர்வின் தன்மைகளைப் பொறுத்து அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவ்வாய்வின் நோக்கத்திற்கு அமைய, போர்ச்சூழலின் காரணமாக தூண்டப்பட்டு இடப்பெயர்வை மேற்கொண்ட புலம்பெயர் தமிழர்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றனர். 1980-களின் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் சென்று பிரஜாவுரிமை பெற்றவர்கள் புலம்பெயர் தமிழர்கள் எனக் குறிப்பாக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இவர்கள் போர்க்காலச் சூழலில் தமிழ்த் தேசியவாத உருவாக்கம் தொடர்பான செயற்பாடுகளில் பங்களித்தவர்களாகவும் காணப்படுகின்றனர்; போர் முடிந்த பின்னர் இன்றுவரை தமிழர்களுக்கான உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச ரீதியில் அழுத்தம் கொடுத்தும் வருகின்றனர்; ஈழத்தின் தேசிய தனி உரிமை தொடர்பாகவும் இவர்கள் பேசி வருகின்றனர். குறிப்பாக ஈழவிடுதலை, போர்க்குற்ற விசாரணை, காணாமலாக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டோருக்கான நீதி, நல்லிணக்கப் பொறிமுறைகளின் சாதகத் தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்துவது, செயற்படுவது மட்டுமல்லாது சர்வதேச ரீதியில் உள்ள அமைப்புக்களுக்கு நீதியான விசாரணையை மேற்கொள்ளக் கூறி தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றனர். வன்முறையற்ற வழியில் தமிழ் தேசியம் ஒன்றினை அடைவதனைப் பிரதான இலக்காகக் கொண்டு இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக, ஈழம் என்ற சொல்லினைப் பாவிப்பது, மீண்டும் மீண்டும் இலங்கையில் இடம்பெறும் அனைத்து அரசியல் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவது, அது தொடர்பாக அறிக்கையிடுவது, போர்க்கால அனுபவங்களை எழுதுவதும் சர்வதேச அங்கீகாரம் பெறுவதும், முள்ளிவாய்க்கால் நினைவுதினம் உட்பட அனைத்து விடுதலைப் போரின் நினைவு தினங்களையும் நினைவு கூர்வது, இலங்கையில் இடம்பெறும் போராட்டங்களை ஆதரித்து புலம்பெயர் தேசங்களிலும் போரட்டங்களை மேற்கொள்வது என இலங்கையின் தமிழ்த் தேசியவாதம் தொடர்பான அழுத்தங்களை உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் முன்னிலைப்படுத்தி வருகின்றனர்.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுக்குப் பொருளாதாரரீதியான பங்களிப்பனை வழங்குகின்றோம் என்ற நிலையில், இலங்கையின் இறைமை மற்றும் ஏனைய தமிழ் மக்களின் வாழ்வாதாரம், வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் போன்ற விடயங்களைக் கவனத்தில் கொள்ளாது, ஒரு தேசிய வாதத்தினை முன்வைக்கின்றனர். இலங்கை புலம்பெயர் ஈழத்து தமிழர்களின், அவர்களது தாய்நாடு தொடர்பான அரசியல் இன்றைய காலத்தில் விவாதத்திற்கு உரிய ஒன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாகச் சமகாலத்தில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு, புலம்பெயர் ஈழத்து தமிழர்களின் செயற்பாடானது முரண்பாடான பார்வையில் நோக்கப்படுகின்றது. நீண்ட தூரத் தேசியவாதத்தின் அடிப்படையில் வேறு நாட்டில் வசிப்பவர்கள் அங்கிருந்தபடி தாய்நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் மற்றும் அரசியல் விடயங்களில் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கின்றனர். (அன்டர்சன்).

புலம்பெயர் தமிழர்களின் வாழ்வில் பெருமளவான பொருளாதாரத் தேவைகள் இலங்கை வாழ் தமிழர்களுடன் ஒப்பிடும் போது திருப்திகராமாகத் தீர்க்கப்பட்டவை. பெரும்பாலான புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் பொருளாதார நிலைமைகளில் அதிகளவான பங்களிப்புச் செய்கின்றனர். அந்நியச் செலாவணியை இலங்கையை அதிகளவில் பெற்றுக் கொள்வதில் பங்களிக்கின்றனர் (சிறிரஞ்சன் 2005). அரசியல் விடயங்கள் எனும்போது இலங்கை வாழ் மக்களின் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்தும் பேசிவருகின்றனர். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது தமிழ்த் தேசிய ஈழவிடுதலையே தமிழர்களுக்கு ஒரு தீர்வாகும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளும் மக்களும் மாகாணசபையின் கீழ் ஒரு வலுவான அதிகாரம் கொண்ட ஆட்சி முறையினைக் கோரிக் கொண்டு நல்லிணக்க மற்றும் நீதி தொடர்பான விடயங்கள் தொடர்பில் அழுத்தம் கொடுத்துவருகின்றனர். ஆனாலும் புலம்பெயர் நாட்டவர்களினால் முன்வைக்கப்படும் தமிழ்த் தேசியவாதம் என்பது வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளையே அடிப்படையாகக் கொண்டது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களது வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகளை இவர்கள் கருத்தில் கொண்டார்களில்லை. குறிப்பாக முஸ்லீம் சமூகம், மலையகத் தமிழர்கள், ஏனைய பகுதியில் சிதறிவாழும் தமிழர்கள் இத்தேசியத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

புலம்பெயர் வாழ் மக்களின் தமிழ்த் தேசியவாதம் இலங்கையில் தற்கால அரசியல் செயற்பாடுகளில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்கள் கடந்த நிலையிலும் நீதியான சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கையை இது இட்டுச் செல்லவில்லை. மாறாக அவர்களால் முன்வைக்கப்படும் அறிக்கைகளும் செயற்பாடுகளும் இலங்கையில் உள்ள தமிழர்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவே அமைகிறது. அதே வேளை, ஒரு நீதியான விசாரணை மற்றும் பாதிக்கப்பட்டோர் தொடர்பான நீதி என்பன அவசியமான போதும் புலம்பெயர் தமிழர்களினால் முன்வைக்கப்படும் கருத்துகள் போர்க்குற்ற விசாரணைகளில் பெருமளவில் இலங்கையில் எந்த தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை. ஆனாலும் அதன் பக்கவிளைவுகள் அதிகளவாக காணப்படுகின்றது.

இலங்கையில் தமிழ்த் தேசியவாதம் தொடர்பான கருத்தியலில், நடைமுறைக்குச் சாத்தியமாகாத விடயங்கள், போலித் தன்மைகள், அரசியல் இலாபம் தேடும் விடயங்கள் போன்றவை இனங்காணப்பட்டுள்ளன. ஆனாலும் இன்று வரை தேர்தல் காலங்களிலும், முக்கிய பிரச்சினைகள் எழுகின்ற

போதும் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் மற்றும் இலங்கை அரசியல் ஆய்வாளர்களில் பலர் இன்றுவரை தமிழ்த் தேசியத்தை ஒரு பிரதான தீர்வாக மேடைகளில் முன்வைக்கின்றனர். இலங்கையில் களத்தில் உள்ள அடிமட்ட பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளாது ஒரு தேசியவாதத்தினை வலியுறுத்தி வரும் புலம்பெயர் தமிழர்களது தமிழ்த் தேசியக் கருத்தியலானது இலங்கையில் வாழும் மக்கள் மீதும் அரசியல் அறிஞர்கள் மற்றும் கொள்கைவகுப்பில் பிரதான இடம் வகிக்கும் சிவில் சமூகம் மீதும் நேர்மறையான தாக்கம் செலுத்துகின்றது.

போர் முடிவடைந்த காலப்பகுதியில் இலங்கைத் தமிழர்களது தமிழ்த் தேசியவாதக் கருத்துகளுக்கான செயற்பாட்டுத் தளங்கள் குறைக்கப்பட்டன. தமிழ்த் தேசியவாதம் ஒரு மௌனிக்கப்பட்ட தேசியவாதமாகக் காணப்படுகின்றது. ஆனாலும் இலங்கை அரசின் அதிகார அடக்குமுறைகள் உரிமை மீறல்களுக்கு எதிராக தமிழ் மக்கள் மனங்களில் மீள ஓர் எதிர்ப் பிரபலிப்புத் தேசியவாதம் தோற்றம் பெறுகின்ற சூழலை அண்மையகாலங்களில் இனம்காணமுடிந்தது, ஆனாலும் தேர்தல் அதற்கெல்லாம் எதிரான ஒரு சாட்சியாக அமைந்துள்ளது. மக்கள் மாற்றத்திற்கான வழியினைத் தேடத்தொடங்கியுள்ளனர். தமிழ் அரசியல் கட்சிகளில் மக்களது நம்பிக்கை நிலை குறைவடைந்துள்ளது. எதிர்கால அரசியல் நகர்வுகளில் தமிழ் மக்களது உரிமை நிலை தொடர்பாக சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

போரின் முடிவுகளும் இழப்புக்களும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சோர்வினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் தமிழ்த் தேசியக் கருத்தியலின் அடிப்படையில் மக்களை வழிப்படுத்த ஓர் உறுதியான அமைப்போ, கட்சியோ உள்நாட்டில் இன்று வரை தோற்றம் பெறவில்லை. போரின் பின்னரும் தமிழ் மக்கள் இனரீதியான அடக்குமுறையினை எதிர்கொண்ட போதும். தமது எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியாதவர்களாகவே உள்ளனர். இன்றைய சூழலில் புலம்பெயர் தமிழர்களின் தாயகம் தொடர்பான செயற்பாடுகள் முக்கியமானவையாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இவர்கள் சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளக்கூறி செயற்படும் பிரதான அழுத்தக் குழுக்களாகச் செயற்படுகின்றனர். இந்த அடிப்படையில் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் இனப் பிரச்சனைக்கான தீர்வுகளை தமிழ்த் தேசியவாதக் கருத்துகள் ஊடாக அடைவதில் உறுதியாக உள்ளார்கள்.

மேலும் ‘சிங்கள பௌத்த பேரினவாத தேசியவாதம்’ இலங்கையில் சிறுபான்மை இனக் குழுக்களினை தொடர்ச்சியாக அடக்குமுறைக்கு உள்ளாக்கி வருகின்றது. போர் முடிவடைந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அதன் தன்மைகள் வெளிப்படையாகக் குறைந்திருந்தாலும் 2020 ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசின் அடக்குமுறைக் கருவிகள் வெவ்வேறுபட்ட தளங்களில் வெளிப்படையாகவே செயற்படத்தொடங்கியுள்ளது. குறிப்பாக 2015-2019 வரையான நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களிடையிலான நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் அதன் வினைத்திறன் மிகக் குறைந்தளவே காணப்பட்டன. ஆனாலும் நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியவாதம் மறைந்துபோகும் ஒரு சூழல் காணப்பட்டது. 2020-ம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் தமிழர்களின் நினைவுச் சின்னங்கள் அழிப்பு, தமிழ் மக்களின் பிரதான நினைவு தினங்களை நினைவுகூற அனுமதியின்மை, அரசாங்க சேவையில் இணைவதில் மாணவர்களுக்கான பாரபட்சம், முன் அறிவித்தல் இன்றி கைது செய்யப்படுவது, நில ஆக்கிரமிப்பு, இராணுவமயமாதல், பௌத்த மயமாதல், 13-ஆம் சீர்திருத்தம் அகற்றுதல் தொடர்பான உரையாடல்கள், சுயாதீன ஆணைக் குழுக்கள் நீக்கப்பட்டமை, ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமை, தேர்தலில் வெற்றியீட்டிய பின் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான விரோத உணர்வை வெளிப்படுத்திய ஜனாதிபதியின் கன்னியுரை முதலானவை இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றன. அத்துடன் அரசின் அடக்குமுறைப் பொறிமுறைகள் அதிகரித்து வரும் சூழலில் மீண்டும் இலங்கைத் தமிழர்களிடம் எதிர்ப் பிரதிபலிப்புத் தமிழ்த் தேசியவாதக் கருத்துகள் மேலெழுகின்றன. ஆனாலும். மக்கள் இன்னொரு போரை சந்திப்பதில் விருப்பற்றுள்ளனர்.

மேலும், போரின் முடிவுகளும் இதற்கு முன்னர் இருந்துவந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளும் மக்களை அவர்களது உரிமைகள் தொடர்பாக கேள்வி எழுப்ப முடியாத ஒரு சூழலைத் தோற்றுவித்திருந்தது. குறிப்பாக மக்கள் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பொறுப்புக் கூறலையோ அல்லது நீதியான போர்க்குற்ற விசாரணைகளையோ முன்னெடுக்க வலியுறுத்த அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவோ பேரம் பேசவோ முடியாத சூழ்நிலையினை இலங்கை அரசாங்கம் தோற்றுவித்திருந்தது.

இலங்கையின் 2024 தேர்தலின் பின்னராக அரசாங்க மாற்றம் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக வடக்கில் இருந்த ராணுவம் மூலமான வீதித்தடைகளை அகற்றியமை, மாவீரர் தினத்தை கொண்டாடுவதற்கு எந்த தடையுமற்ற சூழுலை உருவாக்கியுள்ளமை போன்றன மக்கள் மத்தியில் நல்லிணக்கத்திற்கான ஒரு பாதையை உருவாக்கியுள்ளது. ஆனாலும் மட்டக்களப்பு தேர்தல் முடிவுகள், தமிழ்த் தேசியவாதம் மீதான மக்களது உணர்வு பூர்வமான தேவையை வலியுறுத்துகின்றது.

தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றமானது தழிழ் இனத்திற்கு எதிரான பெரும்பான்மையின சிங்கள அடக்குமுறையில் இருந்து தன் உரிமைகளைப் பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவுமே தோற்றம் பெற்றது. குறுந்தேசியவாதம் நடைமுறையில் தன்னுள் காணப்பட்ட ஏனைய சிறுபான்மை அடையாளங்களை அடக்குமுறைகளை கேள்விகேட்கத் தவறியது. குறிப்பாகத் தமிழ்த் தேசியவாதக் கருத்தியலை முன்னெடுத்துச் சென்ற ஆதிக்கக் குழுக்கள் காலாதிகாலமாக தமக்குள் இருந்த சாதிய அடக்குமுறைகள், பால்நிலை அடக்குமுறைகள், பிரதேச அடக்குமுறைகள், மத அடக்குமுறைகளை எதிர்க்கவில்லை. மாறாக, தமிழ்த் தேசியவாத கருத்தியலின் கீழ் இவ்வடையாளங்கள் ஒடுக்குமுறைக்கு உட்பட்டன. இதன் அடிப்படையில் இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் ஒற்றைப் பரிமானத்தினை வலியுறுத்தும் பிற்போக்குக் குறுந்தேசியவாதமாகவே இன்றுவரை செயற்பட்டு வருகின்றது.

இலங்கைத் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் நாடுகளில் முன்

னெடுக்கப்பட்ட தேசியவாதம், இலங்கைத் தேசியவாதத் தினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டாலும் இரண்டு கருத்தியலும் சமகால ஆய்வுகளில் வேறுபட்ட தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் சமகாலத்தில் இலங்கைத் தழிழ் தேசியவாதம் மற்றும் புலம்பெயர் தமிழ்த் தேசியவாதம் ஆகிய இரண்டு கருத்தியலும் வேறுறோக அடையாளப்படுத் தப்படுவதற்கான பிரதான காரணம் புவியியல்ரீதியாக இவை கள் வேறு வேறு செயற்பாட்டுத் தளங்களினைக் கொண்டுள் ளமையாகும். இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்துடன் ஒப்பி டும்போது புலம்பெயர் தேசியவாதம் என்பது காலத்தால் பிந் தியது. ஆனாலும் அது 1980-களில் இலங்கையில் நிலவிய தமிழ்த் தேசியத்தினை அடிப்படையாகக் கொண்டே தோற் றம்பெற்றாலும், இன்று பல்வேறு வடிவங்களில் வெளிப்படு கின்றது. அந்த வகையில் போர்க்காலச் சூழலின் பின்னர் ‘இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்துவதனை தவிர்த்துள்ளது’. மாறாக இலங்கை அர சாங்கத்தினுள் ஒரு முறையான அதிகாரப் பங்கீட்டினைக் கோருகின்றது. அதேவேளை புலம்பெயர் தமிழ்த் தேசியவா தம் இன்றும் தமிழர்களுக்கான தனிநாடு ‘ஈழம்’ ஒன்றை அடைந்து கொள்வதே உயர்ந்தபட்ச இலக்காக தமிழ்த் தேசி யவாதத்தினை அடையாளப்படுத்துகின்றனர். இதன் அடிப்ப டையில் போருக்கு பின்னரான சூழலில் இலங்கைத் தமிழ்த் தேசியவாதமும் புலம்பெயர் தமிழ்த் தேசியவாதமும் புவிசார், கருத்தியல்சார் மற்றும் காலம்சார் வரையறைகளால் வேறுபட் டவை. இலங்கை அரசின் அடக்குமுறைகள் அதிகரித்து வரும் சூழலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியவாதம் ஒன்றின் தேவையினை உணர்கின்றனர். இந்நிலையில் தனக்கு எதிரா கச் செயற்படும் இலங்கை அரசாங்கத்தின் இறைமையைக் கேள்வி கேட்கக் கூடிய நிலையில் உள்ள அமைப்புகளை மக்கள் பின்தொடர்கின்றனர். அந்த அடிப்படையில் புலம்பெ யர் தமிழர்கள் இலங்கை அரசின் இறைமையை சர்வதேச சமூ கத்தின் உதவியுடன் சவாலுக்கு உட்படுத்துகின்றனர். இந்நி லைமை தமிழ் மக்கள் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாட்டி னையும் கருத்தியலையும் நோக்கி நகரத் தூண்டியுள்ளது.

அத்துடன் புலம்பெயர் தமிழர்களின் கருத்தியலில் உள்ள விடயங்களை, புலம்பெயர் தமிழர்கள் இலங்கைத் தமிழர்க ளின் தமிழ்த் தேசியமாக ஏற்கின்ற தன்மை அதிகரித்து வருவ துடன், புலம்பெயர் தமிழர்களின் பொருளாதாரரீதியான பங்க ளிப்புக்களும் இலங்கையில் அதிகரித்து வருகின்றது. அரசியல் ரீதியாக இலங்கை அரசை சவாலுக்குள்ளாக்கும் நிலைப்பாடும் சர்வதேச சமூகத்தில் பெரும்பான்மை ஆதரவி னைப் பெற்றுள்ளது. அத்துடன் போரின் பின்னரான சூழலில், இலங்கைத் தமிழ்த் தேசியக் கருத்தியலில் புலம்பெயர் தமி ழர்களின் கருத்தியல் நேர்மறையான தாக்கத்தினைச் செலுத் துகின்றது. அத்துடன், அண்மைய தேர்தல் முடிவுகள் இலங் கையில் மக்கள் மத்தியில் தமிழ் சுயாட்சிக்கான் தேவை இல்லை என்பதனை தெளிவுபடுத்திக் காட்டியுள்ளபோதும், அது மீண்டும் வடக்கை மையப்படுத்திய ஒரு முடிவாகவே பார்க்கப்படுகின்றது. தமிழர்கள் செறிந்து வாழும் மட்டக்க ளப்பு மாவட்டம் இன்னமும் சுயாட்சிக்கான கோரிக்கையில் இருந்து பின்வாங்கவில்லை என்பது தேர்தல் முடிவுகளைக் கொண்டு கணிப்பிட முடிகின்றது.

ஆனாலும் இன்னமும் தமிழ் மக்கள் மத்தியில் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்கின்ற நிலை அதிகமாகவே உள்ளது. பலர் இதனை தமது அரசியல் உரிமைப் போராட்டத்துடன் இணைத்துப் பார்க்கின்ற போதும், ஒரு பகுதி மக்கள்இலங்கையில் இருந்து புலம்பெ யர்ந்து ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில்; கிரீன் காட் பெறுவ தற்கான ஊடமாகப் பாவிக்கப்டுகின்ற போக்கும் அதிகரித் துள்ளது. இவ் இரண்டு சூழ்நிலையும் இலங்கைத் தமிழர்க ளின் தமிழ்த் தேசியக் கருத்தியலில் புலம்பெயர் தமிழர்களின் சிந்தனா மற்றும் செயற்பாட்டுத் தாக்கம் அதிகரிப்பதோடு, புலம்பெயர் மக்களின் செயற்பாடுகளையும் கருத்தியலையும் தமிழ் மக்கள் தமக்கான கருத்தியலாக திரிவுபடுத்திக் கொள் கின்ற நிலை உருவாகின்றது.

புலம்பெயர் தமிழர்களின் முதலாம் தலைமுறையினர் உறுதி யான தமிழ்த் தேசியவாதக் கருத்துகளைப் பற்றி நிற்கின்ற போதும், புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறையி னர் தமிழ்த் தேசியவாதக் கருத்துக்களைப் புரிந்து கொண் டுள்ள முறையும் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான சாத்தியங்களும் திரிபடைந்துள்ளன. அவை உணர்ச்சிகர மாக கோசமிடுகின்ற போதும், அதன் அரசியல் சித்தாந்த மும், நிலைத்த தன்மையும் கேள்விக்குரியதாக உள்ளது. எனவே புலம்பெயர் தேசத்தவர்களால் முன்னெடுக்கப்படும் தமிழ்த் தேசியவாதமும் மிகக் குறுகிய ஆயுட்காலத்தினையே கொண்டது.

அதேவேளை நடைமுறையில் பல்வேறு குறைபாடுகளை உடைய ஒரு தேசியவாதத்தினை மீளகட்டியெழுப்புவதும் அதனையே பற்றிக்கொள்வதும் தமிழ்ப் பரப்பில் மட்டுமல் லாது இலங்கையின் சிறுபான்மைக் குழுக்களது இருப்பிற் கும், இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கும் அச் சுறுத்தலாக அமையும். எனவே, இன முரண்பாட்டினைத் தீர்க்க கூடிய வகையில் உள்ளக அடக்குமுறைகள் இல்லாத, எதிர் பிரதிபலிப்புத் தன்மையில் இருந்து விடுபட்ட ஒரு முற் போக்குத் தமிழ்த் தேசியவாதம் இலங்கையில் தோன்ற வேண்டிய தேவையும் அது காலத்தின் தேவைக்கு அமைய முற்போக்கான சமகால அரசியல் சூழலுடன் இணைந்து பயணிக்க வேண்டிய தேவையும் உள்ளதை யாரும் மறுக்க முடியாது.



vithursha@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

**E-mail: info@thaiveedu.com** **Fax: 1-416-849-0594** **Tel: 1-416-857-6406**



## மல்லாவியில் கிடைக்கப்பெற்ற
# ஈழத்தமிழர் தொன்மையை உணர்த்தும் சுடுமண் உருவங்கள்

– சானுஜன் டனுஷா வாசன்

இலங்கைத்தீவின் வடமாகாணத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள பிரதேசமே துணுக்காய் ஆகும். 21 கிராம அலுவலகர் பிரிவுகளைக் கொண்ட இப்பிராந்தியமானது அக்காலப்பகுதியில் அடங்காப்பற்று வன்னியின் ஒரு பகுதியாக துணுக்காய்ப் பிரதேசம் உள்ளடங்கியிருந்தது. இத்துணுக்காய்ப் பிரதேச எல்லைக்குட்பட்ட இடங்களில் மன்னர்கள் அமைத்த குளங்கள், ஆலயங்களின் வழிபாட்டுச் சின்னங்கள், செங்கல் அழிபாடுகள், கருங்கற் தூண்கள், சுடுமண் உருவங்கள் என்பன காணப்படுகின்றன. இவ்வாறு இப்பகுதியில் ஆங்காங்கே தொல்லியற் சின்னங்கள் சிதறிக்கிடந்தாலும் அவை தொல்லியற் திணைக்களத்தினால் ஆவணப்படுத்தப்படவில்லை.

துணுக்காய் பகுதிக்குட்பட்ட கிராமமான மல்லாவியிலும் தமிழர் தொன்மையை உணர்த்தும் வகையில் தொல்லியல் எச்சங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அதாவது ஆரம்ப காலம் தொட்டே தமிழர்கள் வாழ்ந்தமைக்கு மிகமுக்கிய காரணம் இப்பிரதேசத்தின் எல்லையில் ஓடும் பாலியாறு. பாலியாற்றிற்கு குறுக்கே அணை கட்டப்பட்டு புராதான நீர்த்தேக்கம் ஒன்று அமைந்துள்ளது. இதுவே மகாவம்சம் கூறும் பொலிவாவி எனப்படும் வவுனிக்குளமாகும். இப்பாலியாற்றங்கரையினை அண்டி ஆதிக் குடியிருப்புகள் இருந்தமைக்கான சான்றுகளாக இப்பகுதியில் சிதறிக் கிடக்கும் கருப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், சுடுமண் சிற்பங்கள், கற்றூண்கள் என்பனவற்றைக் கூறலாம். இவற்றின் அடிப்படையில் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே இங்கே ஆதிகாலக் குடிகள் வாழ்ந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

அக்காலப் பகுதியில் மல்லாவிக்குளம், ஆலங்குளம், தேறாங்கண்டல்குளம், பட்டம்கட்டிக்குளம் என்பனவற்றை அண்டியே ஆதிகுடியிருப்புகள் தோற்றம் பெற்றன. இதனை இங்கு கிடைத்த மட்பாண்டங்கள், சமயச் சின்னங்கள் செங்கற்கள் உறுதிசெய்கின்றன. குறிப்பாக சுடு மண்ணாலான 20-இற்கு மேற்பட்ட மனித முக உருவங்கள், 10-ற்கு மேற்பட்ட விலங்குகளின் முகபாகங்கள், ஒரு பறவையின் வடிவம் 5 நாக உருவங்கள், 50-இற்கும் மேற்பட்ட கொம்புகள், 45-இற்கும் மேற்பட்ட கால் உருவங்கள், உடைந்த பாத்திரங்கள், கெண்டியுடன் கூடிய பானை, சட்டி, மூடிகள் என்பன மல்லாவியின் வயல் வெளியிலும், காடுகளிலுமிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட குளங்களை அண்டிய வயல் பகுதிகளில் 2004-ம் ஆண்டு ஐந்து சுடுமண் மனித உருவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பகுதியின் வயல் வெளிகளிலுள்ள பட்டங்கட்டி குளத்தினை அண்மித்த பகுதி ஒன்றில் ஒரு சிவன் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்து இப்பிரதேச வாழ் மக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர். இவ்வாலயத்திற்கு அண்மையில் ஒரு சிறிய கிணறு கண்டுபிடிக்கப்பட்டது. மல்லாவியின் பாலியாற்றங்கரையை அண்மித்த வயல் வெளியில் அரச மரத்தின் கீழ் வட்ட வடிவிலான கருங்கல்லில் நாகபாம்பு போன்ற ஒரு வடிவம் செதுக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளது. இன்றும் மக்கள் வழிபட்டு வருகின்ற ஆலயமாக அது காணப்படுகின்றது. பெரிய செங்கற்கள், தூண் தாங்கு கற்கள் என்பன இவ்வாலயத்தைச் சுற்றிக் காணப்படுகின்றன.

இவ்வாறான சான்றுகளின் அடிப்படையில் மல்லாவிப் பிரதேசத்தில் நாக இனக்குழுக்கள் வாழ்ந்திருக்க வேண்டும். இக்கருத்தை வலுப்படுத்தும் நம்பத்தகுந்த ஆதாரங்களாக கருங்கல்லில் செதுக்கப்பட்ட நாக வடிவமும் மற்றும் சுடுமண்ணாலான ஐந்து நாக உருவங்களும் உள்ளன. வன்னி பிராந்தியத்தில் மாமடுவ, கட்டுக்கரை, பெரியபுளியங்குளம், மாதோட்டம் போன்ற இடங்களில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுவதால், மல்லாவிப் பிரதேசத்தின் தொடக்ககால மக்கள் பெருங்கற்கால மக்களாக இருக்கலாமெனக் கருதமுடிகின்றது. ஏனெனில், பெருங்கற்காலக் குடியிருப்புகள் குளங்களை மையப்படுத்தியே தோற்றம் பெற்றன. அதனை உறுதிப்படுத்தும் வகையில் மல்லாவி, உயிலங்குளம், ஐயங்கன்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், அனிச்சியங்குளம் போன்ற இடப்பெயர்கள் விளங்குகின்றன. இவ்விடங்களிலுள்ள குளங்களை அண்மித்த பகுதியில் அதிக தொல்லியற் சான்றுகளும் காணப்படுகின்றன. எனவே இதன் அடிப்படையில் பெருங்கற்காலத்தைத் தோற்றுவித்த நாகர்கள் இங்கு ஆதிகாலம் தொட்டே வாழ்ந்திருக்கக்கூடுமெனக் கருத இடமுண்டு.

தமிழர்களிடையே பாம்புப் புற்றை வழிபடும் மரபு மிகவும் தொன்மைக்காலங்தொட்டுக் காணப்படுகின்றது. அதாவது மரநிழலின் கீழ் உள்ள பாம்புபுற்றுக்குப் படையல் செய்து வழிபட்ட மக்கள் காலப்போக்கில் ஆலயம் அமைத்து கர்ப்பக்கிரகங்களில் வைத்து வழிபடுகின்றனர். மல்லாவிப் பிரதேசத்தின் ஆதிகால மக்கள் இப்புற்று வழிபாட்டை வழிபட்டமைக்கு சுடுமண்ணாலான புற்றுவடிவில் அமைக்கப்பட்ட சிற்பம் கிடைத்துள்ளமை சான்றாகும். மற்றும் இப்பிராந்தியத்







திற்கு அண்மையில் உள்ள புத்துவெட்டுவான் ஆலயத்தில் இன்றும் புற்று வழிபாடு சிறப்பாக இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனவே மல்லாவிப் பிராந்தியத்தில் வாழ்ந்த ஆதிகால மக்கள் நாகவழிபாட்டினை மேற்கொண் டுள்ளமை புலப்படுகின்றது. இதற்குச் சான்றாக இப்பிரதேசத் திற்கு அண்மையிலேயே நாகபடுவான் தொல்லியல் மையம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் சிவ வழிபாட்டினை மேற் கொண்டுள்ளமைக்குச் சான்றாக. சிவனுடைய சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சிலையினை, இங்குள்ள யோகாம்பிகை ஆலயத்தில் வைத்து இன்றும் பூசித்து வரு கின்றனர். மற்றும், பீடத்துடன் கூடிய ஒரு தெய்வ உருவச் சிலை வயல் வெளியில் கண்டுபிடிக்கப்பட்டது. இதில், நடு வில் ஓர் உருவமும் அதன் இரு மருங்கிலும் வெவ்வேறு உரு வங்களும் இணைந்த வகையில் காணப்படுகின்றன. இதனை யும் அக்கால மக்கள் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தி உள்ள னரெனக் கருதமுடியும்.

இதே போன்று, சுடுமண்ணாலான குதிரையின் காதுகள், கால் கள் மற்றும் யானை முகங்கள், கால்கள், தும்பிக்கைகள் எனப் பல உடைந்த எச்சங்களும் பல விலங்குகள், பறவைக ளின் உருவங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

காதணி, கழுத்தணி, காற்சலங்கை, வளையல்கள் அணிந்த படி சுடுமண் உருவங்கள் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றை வைத்து நோக்கும்போது, இப்பிரதேச ஆதிகால மக்கள் ஆபரணங்கள் அணிவதிலும், கலைகளிலும் ஆர்வமு டையவர்களாக இருந்துள்ளைமையை அறிய முடிகின்றது.

சுடுமண்ணாலான இசைக்கருவி மற்றும் கெண்டியுடன் கூடிய பானை என்பனவற்றோடு, மட்பாண்டங்கள் சட்டிகள், மூடிகள் என்பவற்றில் பல வடிவங்கள் கிடைத்துள்ளன. கோட்டலங்கா ரம், சங்கிலி அலங்காரம் மற்றும் சதுர பெட்டி அலங்காரமென பல அலங்கார வேலைபாடுகளுடன் மட்பாண்டங்கள் கிடைத் துள்ளன. எனவே இவற்றிலிருந்து ஆதிகால மக்கள் கலைந யம் மிக்கவர்களாகக் காணப்பட்டுள்ளனர் என்பதையும் விளங்கிக்கொள்ளலாம்.

இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில், குறிப்பாக ஐயங் கன்குளம் கற்சிதைவுகள், புத்துவட்டுவான் செங்கல் இடிபாடு கள், கோட்டைகட்டியகுள எச்சங்கள், பழையமுறுகண்டி கட் டட இடிபாடுகள், தென்னியன்குள அழிபாடுகள், ஆலங்குள தொல்லியல் எச்சங்கள், கல்விளான் அழிபாடுகள், அனிச்சி யன்குள கருங்கல், பாலியாற்றங்கரையை அண்மித்துக் காணப்படும் மட்பாண்டங்கள் என்பனவற்றைப் பார்க்கும் போது, மல்லாவிப் பிரதேசத்தில் ஆதிகால மக்கள் குளங் களை அண்டிக் குடியேறி வாழ்ந்துள்ளமை தெளிவாகின்றது

மல்லாவியில் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றிக் காடுகளிலும், வீதியோரங்களிலும் நீர் வடிந்தோடுவதற்கென வெட்டப்பட்ட கால்வாய்களிலும் அதிக மட்பாண்டங்கள் ஓடுகள் காணப்படு கின்றன. எனவே இவற்றின் அடிப்படையில் மல்லாவிப் பிரதே சத்தில் ஆதி மக்கள் பரவலாக வாழ்ந்துள்ளமை புலனாகின்றது.

மல்லாவியில் மேலாய்வில் கிடைத்த சுடுமண் உருவங்களில் இருந்து தமிழர்களின் புராதன குடியிருப்பு ஒன்று இப்பிராந்தி யத்தில் காணப்பட்டுள்ளமை உறுதியாகத் தெரிகின்றது. குளத்தை அண்டியே இச்சின்னங்கள் காணப்படுவதில் இருந்து குளத்தை மையப்படுத்திய நிலையில் தோன்றிய குடியிருப் பாக அமைந்துள்ளது. மேலும் இதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் இப்பிரதேசத்திற்கு வடக்கே பூநகரியும் தெற்கே கட்டுகரை போன்ற வரலாற்று தொன்மை வாய்ந்த குடியிருப்பு மையங்களும் காணப்படுவதனால், இவற்றினை அடிப்படையாகக் கொண்டு மக்கள் பரந்துபட்ட அளவில் மல் லாவி பிராந்தியத்தில் வாழ்ந்துள்ளமையை அறிய முடிகின்றது.

மல்லாவிப் பிரதேசத்தில் கிடைத்த சுடுமண் சிற்பங்களையும், மட்பாண்டங்கள், கருங்கல்லில் உள்ள நாக உருவம் என்ப வற்றையும் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்கள் நேரடியாக வருகைதந்து பார்வையிட்டுக் கருத்துக் கூறுகையில், மல்லா விப் பிரதேசத்தில் பரவலாக ஆதிக்குடிகள் குளங்களை அண்டி குடியேறி வாழ்ந்துள்ளதுடன், இவர்கள் நாக வழிபாட் டினை மேற்கொண்டுள்ளனர் என்பதும் புலனாகின்றது எனக் கூறினார்.

எனவே, இவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்து, மல்லா விப் பிரதேசமானது நகர நாகரிகத்தைத் தோற்றுவித்த பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த பிராந்தியமாக காணப்படுகி றது. சுடுமண் உருவங்கள், கருங்கற்கள், கருங்கல்லில் நாக உருவம், தூண்தாங்கு கற்கள், செங்கற்கள், மாட்பாண்ட ஓடு கள் என்பன இப்பகுதியில் இருந்து பரவலாக கிடைத்ததிலி ருந்து இங்கு வாழ்ந்த ஆதிகாலமக்கள் தமிழர்களாக இருக்க லாம் என ஊகிக்கமுடிகிறது. இம்மக்கள் நாகவழிபாடு, ஐய னார் வழிபாடு, சிவவழிபாட்டினை மேற்கொண்டவராகவும், கலை ஆர்வம் மிக்கவர்களாகவும் இருந்துள்ளமை புலனா கின்றது. எனவே, இவர்கள் பெருங்கற்காலத்தை தோற்று வித்த நாக இனக் குழுவாக இருக்கலாமெனவும் ஊகிக்க இட முண்டு. இருப்பினும் இங்கு கிடைத்த சான்றுகளின் அடிப்ப டையில் மக்கள் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே குளங்களை அண்டி குடியேறி வாழ்ந்துள்ளமை ஐயத்-திரிபுபட நிருபணமாகின்றது.



shanujan.danusha.vasan@thaiveedu.com



# சோழராட்சியின் பின்னர் இலங்கையில் வணிக கணங்கள்

– வி. துலாஞ்சனன்

14

சோழராட்சியை விசயவாகு வென்ற பின்னர் சோழப்படை இலங்கையை விட்டு நீங்கினாலும் அதன் பின் தொடர்ந்த நூற்றைம்பது ஆண்டுகள் சோழப்பேரரசு தமிழகத்தில் வீழும் வரை, சோழரின் ஆதிக்கம் இலங்கையில் முற்றாக மறைய வில்லை. சோழராட்சி இலங்கையில் ஏற்படுவதற்குக் காரண மாக அமைந்த வணிககணங்கள் அவர்கள் இலங்கையை விட்டு நீங்கிய பிறகும், அடுத்த நூற்றாண்டு முழுவதும் பெரும்பலத்துடன் நாடு முழுவதும் திகழ்ந்தன என்பதைக் காண்கிறோம்.

வணிக கணங்கள் என்பவை பல்வேறு வணிகர்கள் இணைந்த ஒரு கூட்டமைப்பு. இதில் வணிகர் மாத்திரமன்றி வணிகப் பொருட்களுக்கான காவல் படைவீரர்கள், கம்மாளர், நெசவா ளர் முதலிய வணிகப்பொருட்களை உற்பத்தி செய்வோர், எல்லோரும் இணைந்து ஒரு அமைப்பாக இயங்குவர். இவர் கள் வணிகம் செய்த பொருட்களில் துணிகள், தானியங்கள், நகைகள், ஆயுதங்கள், வாசனைத்திரவியங்கள், உணவுப் பொருட்கள், போர்விலங்குகளான யானை, குதிரை என்பன அடங்கும். வரலாற்றுக் காலத்தில் இயங்கிய வணிக கணங்க ளில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்செயர், நானாதேசி கள் முதலியோர் குறிப்பிடத்தக்கோர். நானாதேசிகளும் திசை யாயிரத்து ஐந்நூற்றுவரும் ஒன்றாகவும் தனித்தனியாகவும் இயங்கியிருக்கிறார்கள் என்பதும், இருவரும் ஒருவரே என் றும் ஆய்வுலகக் கருதுகோள்கள் உண்டு.

வணிககணங்களில் பலவிதமான வீரர் படையினர் அங்கம் வகித்திருந்தார்கள். வீரக்கொடி, வேளைக்காரர், எறிவீரர் என் போர் இவர்கள் பணிக்கு அமர்த்தியிருந்த இத்தகைய படைப் பிரிவுகளில் சில. இப்படையினர் வணிககணங்களிலிருந்து ஊதியம் பெற்று கடலில் கடற்கொள்ளையரிடமிருந்தும், தரை யில் வழிப்பறிகொள்ளையரிடமிருந்தும் அவர்களுக்குப் பாது காப்பு அளித்திருக்க வேண்டும்.

வணிக கணங்கள் அரசர்களிடம் திறை அல்லது பரிசுப்பொ ருட்கள் செலுத்தி வணிக நகரங்களை அமைத்திருந்தனர் என்றும் அவற்றில் அவர்கள் அரசரின் தலையீடு இன்றி வரி அறவீடு, நிருவாகம், அபிவிருத்தி முதலிய அதிகாரங்களு டன் சுயாட்சி செலுத்திவந்தனர் என்றும் தெரிகின்றது. வணிக ரும் ஏனைய இடங்களில் மன்னனுக்கு மக்கள் செலுத்திய வரி களைத் தாங்கள் பெற்றுப் பொருளாதார நன்மைகளை அடைந்திருக்கிறார்கள். வணிக நகரங்களில் வணிகரல்லாத அக்காலச் சமூகத்தில் செல்வாக்கு மிக்க செல்வந்தர்களும் வசித்து வந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகின்றது.

வணிகர் மூலம் உரிய திறைப்பொருட்கள் அல்லது பரிசுப் பொருட்கள் கருவூலத்தில் சேர்ந்துகொண்டிருந்ததாலும், அர சனது இறைமைக்கு இந்த வணிக கணங்களால் பாதிப்பு ஏற் படாதவாறான பாதுகாப்பு ஒப்பந்த ஏற்பாடுகள் அக்காலத் தில் நீடித்திருக்கும் என்பதாலும், அரசர் - வணிகர் உறவா னது, ஒரு ஒன்றியவாழி அமைப்பாகவே நீடித்திருக்கின்றது. அநுராதபுர அரசின் இறுதிக்காலத்தில் ஏற்பட்ட ஆட்சிக்குழப் பங்களால் இந்த அமைப்பு உடைந்திருந்ததாலேயே வணிகர் களின் ஆதரவைப் பெற்று சோழர்கள் உள்நுழைந்திருக்கி றார்கள் என்பதையும் அறியமுடிகின்றது.

இந்த வணிக நகரங்கள் மக்கள் செறிந்து வாழ்ந்த குடியிருப் புகளுக்கு அருகிலோ தலைநகரங்களுக்கு அண்மையிலோ அமைந்திருந்தன. சில வணிக நகரங்கள் புதிதாக அமைந்த தன் பின்னர் அங்கு புதிய மக்கள் குடியிருப்புகள் உருவா கின என்றும் கொள்ளமுடியும். இதில் முதல் வகை நகரங்க ளுக்கு அனுராதபுரம், பொலனறுவை, திருக்கோணமலை ஆகிய தலைநகரங்களுக்கு அருகே இருந்த வணிக நகரங்க ளையும், இரண்டாம் வகை நகரங்களுக்கு பதி (பதவியா), குருநாகல், அம்பலாந்தோட்டை, கல்லுத்துறை ஆகிய இடங் களில் அமைந்திருந்த நகரங்களையும் உதாரணமாகச் சொல்லலாம். இந்த வணிக நகரங்கள் ஐயப்பொழில்புரம், எறிவீரபட்டினம் முதலிய பல்வேறு பெயர்களால் அழைக்கப் பட்டன. உதாரணமாக பதவியாவில் அமைந்திருந்த வணிகந கரம் 'ஐயப்பொழில்புரப் பட்டினம்' என்று அழைக்கப்பட்டது.

சோழர் காலத்தின் பின்னர் யாப்பகூவை, தம்பதெனியா, குருநாகல் ஆகிய மூன்று வடமேற்கிலங்கை நகரங்கள் சிங்களவரின் தலைநகராக விளங்கியதற்கு அப்பகுதியில் திடுதிப்பென ஏற்பட்ட வணிக நகரங்களின் அதிகரிப்பே காரணம் என எண்ணத்தோன்றுகின்றது. வடமேற்கிலங்கையில் மட்டும் விகாரேகின்ன, புதுமுத்தாவை, கல்தம்பிட்டி, தெதியமுல்லை என்று நான்குக்கும் மேற்பட்ட இடங்களில் ஐந்நூற்றுவரின் வணிகநகரங்கள் அமைந்திருந்தன.

பதினொராம் நூற்றாண்டில் பொலனறுவையில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வசித்திருக்கிறார்கள். கோட்டையின் வடக்கு வாசலிலிருந்து ரன்கொத் விகாரம் வரையும் இருபுறம் நெடுகிலும் அக்காலம் நீடித்த சந்தைக் கட்டடங்களின் இடிபாடுகளைக் காணலாம். அவற்றினிடையே அமைந்துள்ள எட்டாம் இலக்க சிவாலயத்தின் அருகே இருந்த ஒரு தமிழ்க்கல்வெட்டு 'பகிசிந' என்ற இடத்தில் இருந்த போலாப்பள்ளி என்ற புத்த வழிபாட்டுத்தலம், ஐந்நூற்றுவரால் பேணப்பட்டதைச் சொல்கின்றது. பொல னறுவையிலேயே அதிகூடிய எண்ணிக்கையிலான சைவப்படிமங்கள் கண்டெடுக்கப்பட்டதும், மிகப் பெரிய நிலப்பரப்பில் பரந்து விரிந்து கிடப்பதுமான ஐந்தாம் இலக்க சிவாலயத்தின் உண்மைப்பெயர் 'ஐந்நூற்றுவர் ஈச்சரம்' என்பது அங்கு அண்மையில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டொன்றால் அறியப்பட்டிருக்கிறது.

ஐந்நூற்றுவர்களின் கல்வெட்டுகள் இலங்கையில் 15ற்கும் குறையாமல் கிடைத்துள்ளன. அவற்றில் வீரசாசனக்கல்வெட்டுகள் என்று அடையாளப்படுத்தப்படும் ஆறு கல்வெட்டுகள் வட இலங்கையில் வெவ்வேறு இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றை ஒத்த வீரசாசனக்கல்வெட்டுகள் தமிழகம் முதலிய தென்னிந்தியப்பகுதிகளிலும் கிடைத்துள்ளன. அவற்றிலுள்ள ஐந்நூற்றுவரின் வடமொழி மெய்க்கீர்த்தி 'சிறீ சமச்த புவனாச்-ரய பஞ்சதச வீரசாசன லட்சணாங்க்ருத வக்சச்தல புவன பராக்கிரம வாசுதேவ கண்டளி மூலபத்திரோத்பவ சிறீ ஐயப்பொழில்புர பரமேசுவரிக்கு மக்களாகிய' என்று துவங்குகின்றது. கன்னட நாட்டின் வடவெல்லையில் ஐகொளே என்ற இடத்தில் கோவில் கொண்டிருக்கும் கொற்றவை, 'ஐயப்பொழில்புர பரமேசுவரி' என்று முற்காலத்தில் போற்றப்பட்டாள். அவளது மைந்தர்களான வாசுதேவன், கண்டளி, மூலபத்திரன் ஆகிய மூவரைத் தங்கள் குலமுன்னோர் என்று ஐந்நூற்றுவர் கூறிக்கொண்டார்கள்.

ஐந்நூற்றுவர், பதினெட்டு பட்டினங்களும், முப்பத்திரண்டு வேளாபுரங்களும், அறுபத்துஇரண்டு கடிகைத் தாவளங்களும் கொண்டவர்கள் என்று இக்கல்வெட்டுகள் சொல்கின்றன. இவற்றை முறையே பெருநகரங்கள், சிறுநகரங்கள், சந்தை நகரங்கள் என்று பொருள்கொள்ளலாம். ஐந்நூற்றுவரில், செட்டிமார், செட்டிபுத்திரர், கவறைச்செட்டி, பசும்பைக்காரன், காமிண்டசுவாமி, அங்கக்காரன், ஆவணக்காரன், மஞ்சன், கொங்கவாளர், கொற்றக்குடைப்பன்மை, அத்திகோசம் என்று பல தரப்பினர் அல்லது பல சமூகத்தினர் இணைந்திருந்தனர் என்பதை அதே கல்வெட்டுகள் சொல்கின்றன. அவர்கள் பொதுவாகச் செட்டிகள், வீரக்கொடியார் என்று அழைக்கப்பட்டனர்.

ஆறு வீரசாசனக் கல்வெட்டுகளில் மூன்று, குருநாகல் மாவட்டத்தில் கிடைத்தன. குருநாகலின் நிக்கவரெட்டி ஊருக்கு வடமேற்கே புதுமுத்தாவை எனும் சிற்றூரொன்று அமைந்துள்



ளது. அதன் அருகில் இன்று காணப்படும் 'மாகலவாவி' எனும் குளத்துக்கருகே ஐந்நூற்றுவர் அமைத்திருந்த 'மாகலான விக்கிரமசலாமேகபுரம்' எனும் வணிகநகரம் பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் இயங்கிக்கொண்டிருந்தது. சோழர் மீதான படையெடுப்பில் இந்த மாகல் நகரை விசயவாகு வென்று தன் கீழ் கொணர்ந்திருக்கிறான். அதன் பின் சிலகாலம் அது தொடர்ச்சியாக இயங்கிவந்திருக்கிறது.

விசயவாகுவின் தங்கை மகனான மானாபரனன் காலத்தில், இந்நகரில் காவற்கடமை செய்துவந்த வீரக்கொடி படைப்பிரிவினருக்கு வேறொரு படைப்பிரிவினருடன் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்நிலையில் விக்கிரமசலாமேகபுரத்தின் தலைமையகத்தில் பணியாற்றிய பெருமக்கள் வீரக்கொடிக்குச் சார்பான நிலைப்பாடெடுத்து, அவர்களது எதிரிகளைக் காட்டிக்கொடுத்து குத்திக்கொன்றனர் என்பது கல்வெட்டொன்றின் மூலம் தெரியவருகின்றது. அதற்கு நன்றிக்கடனாக அங்கிருந்த 'ஐயம்பொழில்புர பரமேசுவரி' அம்மன் கோவிலுக்கும், 'ஐந்நூற்றுவன்பள்ளி' என்ற விகாரத்திலிருந்த 'லோகப்பெருஞ்செட்டியார்' எனும் முருகன் கோவிலுக்கும் தங்களுக்குரித்தான ஊதியமான விளக்கெண்ணெய், பணத்தை விட்டுக்கொடுத்து, பதினெண்பூமி வீரக்கொடியினர் ஒரு கல்வெட்டு நாட்டியுள்ளனர்.

அதே குருநாகல் மாவட்டத்திலுள்ள இன்னொரு கல்வெட்டு, பல விதங்களிலும் புதுமுத்தாவைக் கல்வெட்டை ஒத்தது. இரண்டும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் பொறிக்கப்பட்டவை எனலாம். குருநாகல் மாவட்டத்தில் பாண்டிவாசநகரி (பண்டுவசுநுவர) ஊருக்குத் தெற்கே மூன்று மைல் தொலைவில் முன்பு தெதியமுல்லை என்றோர் ஊர் அமைந்திருந்தது. அங்கிருந்த புத்த விகார வளாகத்தில் வீரக்கல்லொன்று கண்டெடுக்கப்பட்டது. அப்போது 'சிறீபயங்கரபுர நானாதேசிய பட்டினம்' என்று அழைக்கப்பட்ட ஐந்நூற்றுவர் நகரத்தில் பகைவரால் பல துன்பங்கள் நேர்ந்தபோது அந்த நகரப் பெருமக்கள் வழங்கிய உபகாரத்துக்கு நன்றியாக வீரக்கொடியினர் தங்கள் வரிகள் சிலவற்றை விலக்கி அங்கிருந்த பரமேசுவரி கோவிலுக்கும் லோகப்பெருஞ்செட்டியார் கோவிலுக்கும் அளித்தனர்.

குருநாகலில் மூன்றாவதாக, இப்பாகமுவைக்கு அருகில் கல்தம்பிட்டி எனும் இடத்தில் மிகவும் சிதைந்த வீரக்கல்லொன்று கிடைத்துள்ளது. முழுமையாக வாசிக்கமுடியாதபோதும், இங்கும் நகரப்பெருமக்கள் வீரக்கொடியாரைப் பகைவரிடமிருந்து காத்ததற்கு நன்றியாக அவர்கள் வழங்கிய வரிவிலக்குகள் பற்றியே குறிப்பிடுவதாகத் தெரிகின்றது.

வட இலங்கையின் வேறு பகுதிகளில் இத்தகைய ஐந்நூற்றுவரின் மெய்க்கீர்த்திகளுடன் கல்வெட்டுப் பொறிப்புக் கொண்ட வணிகநகரங்களாக பதி (பதவியா), வாகல்கடை, விகாரேகின்ன என்பன திகழ்ந்தன. பதியில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் திசையாயிரத்து ஐந்நூற்றுவரின் 'தென் ஐயம்பொழில்புரப் பட்டினம்' அமைந்திருந்தது. அங்கிருந்த சிவாலயங்களுக்கு அவர்கள் ஏராளமான கொடைகள் வழங்கியிருந்ததுடன், அங்கு 'விக்கிரம கடிகைத் தாவளம்' என்ற பெயரில் சந்தை ஒன்று காணப்பட்டது. ஐந்நூற்றாவர் கணத்தில் பணியாற்றிய வீரக்கொடி எனும் படைப்பிரிவினர் அங்கிருந்த சிவாலயத்துக்கு வழங்கிய கொடைகளை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

திருக்கோணமலை மற்றும் அநுராதபுர மாவட்டங்களின் எல்லையில் கொரவப்பொத்தானை நகருக்கு வடக்கே சில கிமீ தூரத்தில் வாகல்கடை என்றோர் ஏரி அமைந்துள்ளது. அந்த இடத்தில் அமைந்திருந்த கட்டனேரி என்ற பண்டைய நகரில் 'நானாதேசிய வீரபட்டினம்' ஒன்று காணப்பட்டது. அங்கு அதிக வரி விதிப்பின் காரணமாக நகர் கைவிடப்படும் ஆபத்து ஏற்பட்டமையால், அங்கு வசித்த செட்டிகளும் வீரக்கொடி படைப்பிரிவினரும் வரி விலக்குக்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தம்புள்ளை நகருக்குத் தென்மேற்கேயுள்ள விகாரகின்ன பழங்காலத்தில் மகாசேனகாமம் என்று அழைக்கப்பட்டது. அங்கு ஐந்நூற்றாவரின் 'தன்மசாகரப்பட்டினம்' அமைந்திருந்தது. அந்த ஊரின் நிருவாக சபையில் இருந்த பெருமக்கள், நானாதேசியாண்டான் என்பவனை வேணாட்டார் சிறைசெய்தபோது மீட்டுக்கொடுத்ததால், நானாதேசி வீரர்கள் அவ்வூருக்கு வரிவிலக்கு அளித்தனர்.

வீரசாசனக் கல்வெட்டுகள் ஆறில் ஐந்து பகைவரின் தாக்குதலைப் பற்றிச் சொல்வதைக் காண்கிறோம். இவை எல்லாமே பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சொல்லிவைத்தாற்போல், இவை எல்லாமே வீரக்கொடியார் யாரோ ஒரு பகைவரால் தாக்கப்பட்டதும், அதை நகரத்தாரின் உதவியுடன் அவர்கள் வென்றதும் சொல்லப்படுகிறது. புதுமுத்தாவையில் கிடைக்கும் வேறு தமிழ்க்கல்வெட்டு விசயவாகுவின் சகோதரி மகன் மானாபரணனைப் பற்றிக் குறிப்பிடுவதாலும் கல்தம்பிட்டிக் கல்வெட்டில் 'பாண்டி...' என்ற சிதைந்த சொல் வருவதாலும், இவை மூன்றுமே வீரப்பெருமாள் பாண்டித் தேவர் என்று அறியப்பட்ட மானாபரணன் காலத்தைச் சேர்ந்தவை என்பதை ஊகிக்க முடிகின்றது.

மானாபரணன், சிங்களப் பேரரசன் மகா பராக்கிரமபாகுவின் தந்தை. அவன் காலத்தில் பொலனறுவையில் ஆட்சி புரிந்தவன் விசயவாகுவின் மைந்தனான விக்கிரமபாகு. விக்கிரமபாகுவுக்கும் மானாபரணனுக்கும் இடையே ஆட்சிப்பூசல்கள் தொடர்ந்திருந்ததால் நாடு நன்னிலையில் இருக்கவில்லை என்பதையும் மக்கள் 'ஆலையில் சிக்கிய கரும்பு போல' பிழியப்பட்டனர் என்றும் மகாவம்சம் சொல்கிறது.

புத்த விகாரங்களுக்கு உரித்துடைய நிலங்களை விக்கிரம-பாகு 'வெளிநாட்டு வியாபாரிகளுக்கு' கொடுத்ததால், புத்த துறவிகள் கோபித்து தந்ததாதுவை எடுத்துக்கொண்டு உரோகணத்துக்குச் சென்றார்கள் என்பதை ஓரிடத்தில் மகாவம்சம் சொல்லும். இதே காலத்தில் பழந்தீவிலிருந்து (மாலைதீவு) ஆரிய வம்சத்தைச் சேர்ந்த வீரதேவன் என்பவன் இலங்கை மீது படையெடுத்து வந்ததும், அவனை மானாபரணன் வென்றதும் மகாவம்சத்தில் விவரிக்கப்படுகின்றது. எனவே விசயவாகுவின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட ஆட்சிக்குழப்பங்கள் காரணமாக ஐந்நூற்றுவரின் வணிகம் தளம்பல் நிலையைச் சந்தித்ததையும் அது ஒருவாறு மீண்டெழுந்ததையும் இந்த வீரக்கல்வெட்டுகள் சொல்வதாக நாம் ஊகிக்கலாம்.

(தொடரும்...)



thulanchanan.v@thaiveedu.com




வரவேற்பு நடனம் முடிந்ததும் அங்கு கூடியிருந்த அனைவரும் ஆலயத்திற்குள் சென்றனர். முன்னே சென்றுகொண்டிருந்த அறிவாட்டி, சிறிய மண்டபம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த காளை வடிவிலான சிலையினை வணங்குவதைப் பார்த்த மூவரும் அதனை வணங்கினார்கள்.

நந்தி தேவரா பாட்டி? என்றாள் ஆதினி. அறிவாட்டிப் பாட்டி பலமுறை சொல்லியிருந்தபோதிலும் முதன்முதலாக அப்போதுதான் நந்தி தேவரைப் பார்க்கிறாள் ஆதினி.

ஆம் என்பதுபோல தலையை ஆட்டிய அறிவாட்டியைப் பார்த்து, சிலையில் காதைக் கொஞ்சம் பெரிதாக வைத்திருந்தால் இன்னும் வடிவாக இருந்திருக்கும் என்று கோதை கூறினாள். அவசர அவசரமாக அவள் வாயைப் பொத்தினாள் கோதையின் தாய்.

மூன்றடிக்கு மேலான உயரமுள்ள அந்தப் பெரிய சிலையை பிரமிப்பு நிறைந்த கண்களால் பார்த்தவாறு, யார் பாட்டி இந்தச் சிலையைச் செய்தது என்று கேட்டாள் ஆதினி.

சிற்பி யார் என்று தெரியாது. சோழ இலங்கேஸ்வரர் வீரசோழ மன்னனால் கோணேச்சரத்தின் கர்ப்பக்கிரகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாக சொல்வார்கள். அந்த நேரத்தில் வீரசோழ மன்னர் இந்த நந்தி சிலையை அமைத்து நிறுவினார் என்று ஆலயப் பிரசங்கம் ஒன்றில் கேட்டதாக ஞாபகம் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

ஏன் பாட்டி எல்லோரும் நந்தியின் காதுக்குள் ஏதோ ஒன்றை இரகசியமாக சொல்லிவிட்டுச் செல்கிறார்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கோதை.

தங்களுடைய வேண்டுதல்கள் பலிக்க வேண்டும் என்று இரகசியமாக நந்தி தேவரின் காதிற்குள் சொல்வது இங்கு வரும் பக்தர்களின் வழக்கம் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

வதனமார் சாமிக்கு வைக்கிற மடையில, எங்கட வேண்டுதல்கள் எல்லாத்தையும், பூசாரி, கூடி இருக்கிற ஊர் மக்கள் எல்லோருக்கும் கேட்கிற மாதிரித்தானே கூவிச் சொல்லுவம். இங்க ஏன் இப்படி? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கோதையின் தாய்.

கஸ்டப்பட்டு உழைக்கிற மக்கள் கடவுளிட்ட வாய்விட்டுக் கேட்கிறாங்க. வசதி படைச்சவங்க உரத்துக் கேட்க கூச்சப்படுகிறாங்க போல இருக்கு என்றாள் கொடுப்புக்குள் சிரித்தவாறே அறிவாட்டிப் பாட்டி.

வசதி படைச்ச சாமி என்றதால வசதியானவங்க இரகசியமாகச் சொல்றதுகூட வடிவா விளங்குது போல, அன்று சிரித்தபடி கூறினாள் ஆதினி.

எனக்கு என்னவோ எல்லாம் கனவில் நடக்கிறது போல ஒரே

பிரம்மையாக இருக்கிறது என்றாள் கோதையின் தாய். கோதையின் தாயின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளில் இருந்த வியப்பு ஆதினியினதும், கோதையினதும் கண்களிலும் தெரிந்தது. மூவரும் அந்தப் பிரமாண்ட ஆலயத்தை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நந்தி மண்டபத்திற்கு நேரே அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பல நூறு தூண்கள் கொண்டமைந்த மகா மண்டபம் அமைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து சிறிய அர்த்த மண்டபமும், அதனை அடுத்து கருவறையில் மூலவரும், அதன் மேல் கலையம்சம் நிறைந்த விமானமும் அமையப்பெற்றிருந்தது.

ஆயிரம் கால் மண்டபம் என்று சொல்வது இதைத்தானே பாட்டி என்று கோதை கேட்டாள். அத்தோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு கற்தூணையும் எவ்வளவு அழகாகச் செதுக்கியிருக்கிறார்கள் என்று தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாள். ஆமதிப்பதுபோல் தலையசைத்த அறிவாட்டிப் பாட்டி, தூண்களில் அழகிய வேலைப்பாடுகள் மட்டுமில்ல கருவறைச் சுவர்களில் எழுத்துக்களும் பொறிச்சிருக்கிறார்கள். போய்ப் பார்த்தால் ஆச்சரியப்பட்டுப் போவாய் என்றாள்.

ஆயிரம் தூண்கள் இருக்குமா என்று சந்தேகத்தோடு கேட்டாள் கோதையின் தாய்.

கந்தளாய் வேள்வியில எண்ணிப் பன்னீராயிரம், எண்ணாமல் பன்னீராயிரம் வெற்றிலை, பாக்கு வைத்து நாம வழிபடுறது இல்லையா ?. அதுபோல, இது எண்ணாமல் ஆயிரம் தூண்கள் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

கருவறைக் கற்சுவர்களில அப்படி என்னதான் எழுதி இருக்கிறாங்க பாட்டி என்று கேட்டாள் ஆதினி.

இராசாக்கள் கோயிலுக்குச் செய்த திருப்பணிகளை விபரமாக எழுதி வைச்சிருக்கிறார்கள். உனக்கு ஒன்று தெரியுமா, இராஜ இராஜ சோழ மகாராசா கோயிலுக்கு குடுத்த தானத்தைப் பற்றியும் நீளமான கல்லில எழுதி இருக்கிறாங்க. என்னால ராஜ ராஜ என்ற சொல்ல மட்டுந்தான் பச்ச இலச்சாறைப் பாவிச்சு வாசிக்க முடிஞ்சிது என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

நான் உங்களுக்கு ஒரு இரகசியம் சொல்லவா என்று கேட்டாள் அறிவாட்டிப் பாட்டி. மூவரும் ஆர்வத்தோடு அவர் அருகில் சென்றனர். சொல்லுங்க பாட்டி, சொல்லுங்க பாட்டி என்று ஆதினியும், கோதையும் கிசுகிசுத்தனர். கோணேச்சரத்துக்கு இராசாக்கள் கொடுத்த நிறைய பொன், வெள்ளி, வைரம், வைடூரியம், மாணிக்கம், நவரத்தினம் பதித்த ஆபரணங்கள், பாத்திரங்கள், விளக்குகள் எல்லாம் நாம இப்ப நின்று கொண்டிருக்கிற கோணமாமலைக்கு கீழ இருக்கிற ஏழு குகைகளில பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வச்சிருக்கிறதா சொல்லுவாங்க என்றாள் அறிவாட்டிப் பாட்டி. இது தவிர திருவிழாக் காலங்களில சுவாமிக்குத் தேவையான ஆடை, ஆபரணங்கள், பட்டுப் பீதாம்பரங்கள், குடை, ஆலவட்டம் போன்ற அலங்காரப் பொருட்களும் குகைகளில இருக்குமாம். நாளாந்தப் பூசைகளுக்கு மேலதிகமாக இருக்கும் அரிசி, விளக்கெரிக்கும் எண்ணை எல்லாம் பெரிய அளவில் அந்தக் குகைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருக்குமாம் என்றுகூறி அறிவாட்டிப் பாட்டி முடிக்கும் முன்னம், இதெல்லாம் யார் பாட்டி உங்களுக்குச் சொன்னா என்று ஆதினி கேட்டாள்.

நான் திருமால் கோயில்ல பணி செய்த காலத்தில் அங்கு ஒரு வயதான ஓதுவார் இருந்தார். அவர்தான் இதெல்லாம் எனக்குச் சொன்னார் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

ஓதுவார் என்றால் யார் பாட்டி என்றாள் கோதை.

அவங்களும் கோயில்ல பரம்பரை பரம்பரையா தொழும்பு செய்யிற பணியாளர்கள்தான். கோணேச்சரத்தில இருக்கிற ஓதுவார்கள் தேவாரம், திருவாசகங்களைப் பண்ணிசைத்துப் பாடுவாங்க. திருமால் கோயில்ல இருக்கிற ஓதுவார்கள் ஆழ்வார் பாசுரங்களைப் பண்ணிசைத்துப் பாடுவாங்க. ஓதுவார் சொன்ன இன்னொரு தகவல் சுவாரசியமானது. கோணேசருக்குச் சொந்தமான விலை உயர்ந்த அற்புதமான அழகுடைய மரகத இரத்தினம் பதித்த முக்கோண பதக்கம் ஒன்று உள்ளதாம். ஆலய உற்சவ காலங்களில் மட்டும்தான் அத வெளியில் எடுத்து சுவாமிக்கு அணிவிப்பாங்களாம் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

விலை உயர்ந்தது என்றால் எவ்வளவு இருக்கும் பாட்டி என்று கோதை வியப்போடு கேட்டாள். அறிவாட்டிப் பாட்டி சிரித்துவிட்டு நானும் அந்தப் பெரியவரிடம் அப்படித்தான் கேட்டேன். உன் ஊர் எது என்று கேட்டு விட்டு, அந்தப் பெரியவர் உங்கள் ஊரில் உள்ள அனைவருக்கும் பல வருசம் உட்கார வச்சு சாப்பாடு போடக்கூடிய அளவு விலை இருக்கும் என்று சொன்னார் என்றாள்.

அப்ப மலைக்கு மேலே கண்ணால நாங்க பார்க்கிற கோயில்ற பிரமாண்டத்தை விட மலைக்குள்ள இருக்கிற குகைக்குள்ள இருக்கிற திரவியங்கள் பல மடங்கு பெருசாக இருக்குமோ பாட்டி என்றாள் ஆதினி.

யாருக்கு தெரியும் இந்த அளவில்லாத செல்வங்கள்தான் ஒரு காலத்தில் இந்த ஆலயத்திற்கு பிரச்சனையாக வருமோ என்று ஓதுவார் பெருமூச்சு விட்டபடி சொன்னது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

அவசர அவசரமாக ஆலய பணியாளர் இருவர் இவர்களை நோக்கி ஓடி வருவதைக் கண்ட அறிவாட்டி அவர்களை நோக்கி நடந்து சென்றார். அறிவாட்டியைக் கண்டதும்தான் அவர்களுடைய வேகத்தில் சற்று குறைவு ஏற்பட்டது. நிதானத்திற்கு வந்தவர்களாக அறிவாட்டியுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர். சற்று நேரம் பதட்டமான கோதையும், அவள் தாயும், ஆதினியும் அவர்களுக்கு அருகில் இருந்த நந்தியை மீண்டும் வணங்கினார்கள். தங்களுடைய வேண்டுதல்களை இரகசியமாக நந்தி தேவரின் காதிற்குள் அவர்கள் சொல்லிக்கொண்டார்கள்.

(தொடரும் ...)



jeevarajah@thaiveedu.com




## அறிமுகக் குறிப்புகள்:

போர்கள் நியாயமாக நடப்பதில்லை. அவை நியாயத்துக்காக நடப்பதுமில்லை. எந்தவொரு முரண்பாட்டுக்கும் போர் தீர்வல்ல என்பதை வரலாறு தொடர்ந்து உணர்த்திக்கொண்டே இருக்கிறது. ஆனாலும் போர்கள் நடக்கின்றன. அதற்கான நியாயங்கள் சொல்லப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் தோற்றம் பெற்றதுதான் நியாயமான போர் (Just War) என்ற கருத்தாக்கம். இலங்கையின் இறுதிப்போரின்போது இந்தக் கருத்தாக்கம் பேசுபொருளாக இருந்தது. போரை நிறுத்தச் சொல்லிக் குரல்கள் எழுந்தபோதெல்லாம் இலங்கை அரசாங்கம் 'நியாயமான போர்' என்ற கருத்தாக்கத்தைச் சான்று காட்டியது. இந்தக் கருத்தாக்கம் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தபோதும் அது கடுமையான விமர்சனங்களையும் சந்தித்து வந்திருக்கிறது. நியாயமான போரின் பெயரால் மக்கள் கொல்லப்படுவதையும் அதனிலும் மேலாகப் படுகொலை செய்யப்படுவதையும் எவ்வாறு விளங்குவது என்பதும் நியாயமான போரின் பெயரால் கூட்டுக் கொலைகளையும், போர்க் குற்றங்களையும், இனப்படுகொலைகளையும், மனித குலத்துக்கும் எதிரான குற்றங்களையும் எவ்வாறு அனுமதிப்பது என்பதும் முக்கிய பேசுபொருட்களாகவுள்ளன.

'நியாயமான போர்' என்பது போரைத் தூண்டும் தார்மீக மற்றும் நெறிமுறை கேள்விகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு கட்டமைப்பாகும். ஒரு குறிப்பிட்ட அல்லது முன்மொழியப்பட்ட போரின் சரி அல்லது தவறு பற்றிய விவாதத்தில் ஈடுபடுவோர் அனைவருமே அதைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் என்று கருதுவது நியாயமானது. இரண்டாம் உலகப் போர் ஏன் நல்ல போராகப் பலரால் கருதப்படுகிறது? 1994 ருவாண்டா இனப்படுகொலையை நிறுத்த சர்வதேச சமூகம் இராணுவத்தை நிலைநிறுத்தியிருக்க வேண்டுமா? 2003 ஈராக் படையெடுப்பு நியாயமானதா? அது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலால் அங்கீகரிக்கப்படவில்லை என்பது முக்கியமா? காசா மீதான இஸ்ரேலிய நடவடிக்கை உரிய கவனத்துடன் நடத்தப்பட்டதா? நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானில் செய்ததில் என்ன தவறு? இந்த வகையான கேள்விகள் பொதுவாக மக்களை நியாயமான போர் என்ற கருத்தாக்கம் குறித்த கோட்பாட்டு வினாக்களுக்கு இட்டுச் செல்கின்றன.

இவை அடிப்படையில் குறித்த கருத்துருவாக்கத்தின் அறம் சார்ந்த பிரச்சினைகளை எழுப்புகின்றன. இந்தக் கேள்விகள் பொதுவாக மூன்று வேறுபட்ட, ஆனால் இடைத்தொடர்பான துருவங்களாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவது, போரைப் பயன்படுத்துவதைப் பற்றி பேசுகிறது. வலுக்கட்டாயமாகப் போரைச் செய்வதற்கான நியாயமான காரணம் என்ன? அதைத் தொடங்க யாருக்கு அதிகாரம் உள்ளது? என்ன நோக்கங்கள் அதை வழிநடத்த வேண்டும்? போர் முன்மொழியப்படுவதற்கு முன்னர் மற்ற அனைத்து விருப்பங்களும் தீர்ந்துவிட்டதா? மேலும் இது தீமையை விட பெரிய நன்மையை கொண்டுவரும் என்று நியாயமாக எதிர்பார்க்க முடியுமா?

இவ்வினாக்களுக்கான விசாரணையின் இரண்டாவது துருவம், போரின் நடத்தை பற்றி பேசுகிறது. தமது போரிடும் பலத்தைப் பயன்படுத்த யாருக்கு உரிமை உண்டு? இராணுவ நடவடிக்கைக்கான சட்டபூர்வ இலக்காகத் தகுதி பெற்றவர் யார்? என்ன ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம்? என்ன தந்திரோபாயங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன? மிதமிஞ்சிய அல்லது அதிகப்படியான வன்முறை என எது கணக்கிடப்படுகிறது? இந்தக் கேள்விகள் ஒன்றாகச் சேர்ந்து போர் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது.

விசாரணையின் மூன்றாவது மற்றும் இறுதித் துருவமானது, போரின் முடிவுடன் தொடர்புடையது. போரை எப்படி முடிக்க வேண்டும்? பகைமைகளுக்குப் பிறகு பல்வேறு போர்க்குணமிக்கவர்கள் என்ன பொறுப்புகள் மற்றும் உரிமைகளைப் பெறுகிறார்கள்? பழைய எதிரிகளுக்கு இடையே ஒரு நியாயமான மற்றும் நீடித்த சமாதானத்திற்கான உறுதியான பாதை எது? இந்தக் கேள்விகள் ஒரு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சரியான வழியைப் பற்றி நாம் எவ்வாறு சிந்திக்கிறோம் என்பதை வழிகாட்டுகின்றன.

இந்தக் கேள்விகள் குறித்தும் கேட்கப்படும் கேள்விகளின் வகைமைகள் குறித்தும் நிறையக் கூறலாம். ஆயினும் இந்தக் கேள்விகள் குறித்து மிக நீண்ட உரையாடல்களின் பின்னரே உள்ளடக்கப்பட்டன என்பதும் அறம்சார் கொள்கைகளையும் ஒழுங்கு முறைகளையும் நடைமுறைப்படுத்துவதையே இவை நோக்காகக் கொண்டவை என்பதுவும் முக்கியமானவை. அதேநேரம் இவை சில சமயங்களில் போரை நியாயப்படுத்துவதில் திருப்தியடையும் வாய்ப்புகளையும் வழங்கிவிடுகின்றன.

நியாயமான போர்க் கோட்பாடு எங்கிருந்து வந்தது என்பது அடுத்த கேள்வி. நியாயமான போர் என்ற எண்ணத்தின் தோற்

றம் குறித்தும் காலப்போக்கில் அது எவ்வாறு உருவானது என்பது பற்றியும் சுவாரசியமான கதையொன்று சொல்லப்படுகிறது. இந்தக் கதை பொதுவாக கிபி நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த செயிண்ட் அகஸ்டினின் அரசியல் இறையியலுடன் தொடங்குகிறது, குறிப்பாக இராணுவ சேவையின் குடிமைக் கடமையை கிறிஸ்தவ நம்பிக்கையின் கட்டளைகளுடன் சமரசம் செய்வதற்கான அவரது முயற்சிகளில் இது அடித்தளமிட்டிருக்கிறது. இந்தக் காரணத்திற்காகவே அகஸ்டின் நியாயமான போர் என்ற யோசனையை வகுத்தார். அவரது கருத்தினடிப்படையில் நியாயமான போர்கள் காயங்களுக்குப் பழிவாங்கும் என்று வரை யறுக்கப்படுகிறது. அத்துடன் ஒரு தேசமோ அல்லது அரசோ யாரை எதிர்த்துப் போரிட்டாலும் அதன் குடிமக்கள் செய்த தவறைத் தண்டிக்க அல்லது அவர்களிடமிருந்து தவறாக எடுக்கப்பட்ட ஒன்றைத் திருப்பித் தரவேண்டும் என்பதையும் புறக்கணித்தார். அகஸ்டினின் குறித்த கருத்துருவாக்கம் பின்னர் போர் பற்றிய தேவாலயப் போதனையின் மூலக்கல்லானது.

அரிஸ்டாட்டிலிய அரசியல் கோட்பாட்டின் கூறுகளை உள்ளடக்கிய சிந்தனையாளர் தாமஸ் அக்வினாஸால், நியாயமான போர் பற்றிய அகஸ்டினின் வரையறை, பதின்மூன்றாம் நூற்றாண்டில் முறைப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டது. ஆரம்ப கால நவீன காலத்தின் விடியலுக்கு முன்னால், அக்வினா-ஸின் கருத்துக்கள் விரிவடைந்து திருத்தப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரான ஹ்யூகோ க்ரோடியஸ், சர்வதேச சட்டமாகவும் ஆயுத மோதல் சட்டமாகவும் நியாயமான போர்க் கோட்பாட்டைக் குறியீடாக்குவதற்கான அடித்தளத்தை அமைத்தார். இந்த வரலாற்றுப் பின்னணியில்தான் மைக்கேல் வால்சர் 1977-ல் வெளியிட்ட தனது புகழ்பூத்த, நியாயமான மற்றும் நியாயமற்ற போர்கள் (Just and Unjust Wars) என்ற நூலின் மூலம் நியாயமான போர் என்ற கோட்பாட்டைப் புதுப்பித்தார்.

இதற்கிடையில், குறித்த கோட்பாட்டுருவாக்கம் தொடர்பாகச் சொல்லப்படுகின்ற கதை மீதான தீவிர விமர்சனங்கள் உள்ளன. அவற்றில் மூன்று மிக முக்கியமானவை. முதலாவது, இந்தக் கதையின் எல்லைகள் எவற்றை உள்ளடக்கியுள்ளன, எவற்றைத் தவிர்க்கின்றன என்பது. மேலும் நியாயமான போர்க் கோட்பாட்டின் வரலாற்றுத் தேவைக்குப் பல காரணங்கள் இருக்கின்றபோது அதனை அகஸ்டினுடன் தொடங்குவது சரியானதா என்று பல அறிஞர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர்களின் எதிர்வாதம் என்னவென்றால், இப்போர்க் கோட்பாட்டின் வேர்கள் பண்டைய கிரேக்க, உரோம அரசுகளிலும் அதற்கப்பாலும் கூட கண்டறியப்படலாம் என்பதற்கான சான்றுகள் உள்ளன என்பதாகும். இந்த வினவல் முதல் பார்வையில் பொருத்தமற்றதாகத் தோன்றலாம், ஆனால் நியாயமான போர் என்ற கோட்பாடு ஒரு கிறிஸ்தவக் கோட்பாடாக சரியாகப் புரிந்து கொள்ளப்படுகிறதா இல்லையா என்பது பற்றிய விவாதங்களை இது முன்வைக்கின்றது. எனவே நியாயமான போர்க் கோட்பாடு கலாசார ரீதியாக மேற்கத்தைய நாடுகளுக்கு உரியதா, அல்லது உலகளாவியதாக உரிமை கோரும் ஒரு குறுக்குக் கலாசாரச் சிந்தனை அமைப்புக்குரியதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. சில அறிஞர்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள வரலாற்றுச் சிந்தனையாளர்களுக்கு வழங்கப்படும் விசேட அந்தஸ்தையும் குறிப்பிடத்தக்க முக்கிய நபர்கள் மீது கவனம் செலுத்தாமையையும் கேள்வியெழுப்பி விமர்சித்துள்ளனர். நியாயமான போர் என்ற கோட்பாட்டை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதும், காலப்போக்கில் அதன் வளர்ச்சியும் அதைச் சொல்பவர்களின் தேர்வுகளிலும் அவர்கள் சொல்ல விரும்பும் கதைகளிலேயே தங்கியிருக்கின்றன என்பதை இந்தக் கேள்விகள் எமக்கு நினைவூட்டுகின்றன.

இரண்டாவது, ரோமானிய இடைக்கால மனிதநேய சிந்தனையை மையப்படுத்தி அறிஞர்கள் முன்மொழிந்த 'வழமையான போர்' என்ற கருத்துருவாக்கம் பற்றிய எந்த விவாதத்தையும் நியாயமான போர்க் கோட்பாட்டின் முக்கிய வரலாறு மறைக்கிறது என்பது கவலைக்குரியது. இந்த அணுகுமுறையின் முக்கிய அம்சம் அரசுகள் ஒன்றுக்கொன்று எதிராக மேற்கொள்ளும் தனித்தனியான ஒருதலைப்பட்சமான படைச் செயல்களை உள்ளடக்கியதாக அல்லாமல் இறையாண்மையால் தொடங்கப்பட்டதும் அவர்களுக்கு இடையே நிலவிய ஒரு வகையான அரசு அல்லது பின்னணி நிலையின் அடிப்படையில் போரைப் புரிந்துகொள்வதாகும். ஒரு போர் நிலையைத் தொடங்குவதன் மூலம், அரசுகள் தங்கள் தகராறை ஆயுதங்கள் மூலம் தீர்க்க ஒப்புக்கொள்வதுடன் மறுதரப்பு அதை நிறுத்தும்வரை அவர்களை எதிரிகளாக வரித்துக் கொள்ளவும் அந்த மோதலின் முடிவை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளவும் செய்கின்றன. இந்தக் கண்ணோட்டத்தை நிராகரித்ததே நியாயமான போர்க் கோட்பாட்டின் மையமானது. ஒரு நியாயமான காரணத்தை வைத்திருப்பதைக் கட்டாயப்படுத்துவதற்கான தேவையை இந்த நியாயமான போர்க் கோட்பாடு கட்டாயமாக்கியது.

மூன்றாவது, நியாயமான போர்க் கோட்பாடு கடந்தகாலப் போர்க் கோட்பாடுகளில் வகிக்கும் பங்கைப் பற்றியது. சமகால நியாயமான போர்க் கோட்பாட்டிற்கு நியாயமான போர் பற்றிய வரலாற்றின் பொருத்தம் இங்கு பிரச்சினையாக உள்ளது. சில அறிஞர்கள் வரலாற்றுப் பதிவை நிகழ்காலக் கோட்பாட்டின் உண்மையான பணிக்கான கண்கவரும் பயிற்சியாகக் கருதினாலும், இந்த அணுகுமுறை சிக்கலாகத் தோன்றுகிறது. மிகவும் உணர்ச்சிவசப்பட்ட, அவசரமான, முன்னோடியான ஒரு திறந்த கேள்வியை முன்வைக்கிறது: காலப்போக்கில் போர்க் கோட்பாடு உருவாகும்போது, அது அதன் வரலாற்றைக் கொண்டு வருகிறதா, அல்லது அதை விட்டுவிடுகிறதா? என்பதை நோக்கவேண்டும். இங்கே கருத்தில் கொள்ள வேண்டிய இரண்டு மறுபக்கங்கள் உள்ளன. ஒருபுறம், நியாயமான போர்க் கோட்பாட்டின் சமகால வெளிப்பாடுகள் முந்தைய நியாயமான போர்க் கோட்பாடுகளுடனான தொடர்புகளால் கறைபட்டவை. முந்தைய நியாயமான போர்க் கோட்பாடுகளில் சில குழப்பமான நம்பிக்கைகளை முன்வைக்கின்றன. உதாரணமாக, மத காரணங்களுக்கான போரின் பொருத்தம், பழங்குடி மக்களின் நிலங்களுக்கான போர்கள், மற்றும் கிறிஸ்தவ நாகரிகத்தின் மேன்மை போன்றன. இந்தப் பார்வையில் கடந்த காலம் ஒருபோதும் இறக்கவில்லை, அது கடந்த காலமும் இல்லை. மறுபுறம், சமகால நியாயமான போர்க் கோட்பாடு அதன் சொந்த சிக்கலான கடந்த காலத்திலிருந்து விடுபட்டு, அதன் உண்மையான பாவத்தின் கறையை இனிச் சுமக்கவில்லையா? இந்த சாத்தியக்கூறுகளுக்கு இடையில் தீர்ப்பதற்கு எளிதான வழி எதுவுமில்லை. ஆனால் அவற்றைப் பற்றி நாம் சிந்திப்பது முக்கியம். இந்தப் பின்புலத்திலேயே இலங்கையின் 'நியாயமான போரை' அணுக வேண்டியுள்ளது.

## தத்துவார்த்த அடித்தளம்:

போர் பற்றிய மிக ஆரம்பகால அணுகுமுறை இப்போது 'போர் யதார்த்தவாதம்' என்று அழைக்கப்படுகிறது. ஒழுக்கத் திற்குப் புறம்பாக யுத்தம் நிகழும் என்பதும், போர் என்பது இயற்கையானதும் இயல்பானதுமான ஒரு செயற்பாடு என்ப தும் போர் நடக்கும்போது அதில் வெற்றிபெறுவதும் அதன் பின்னர் தார்மீகமாக இருப்பது பற்றிக் கவலைப்படுவதுமே முக்கியமானது என்பதாகவே போர் பற்றிய யதார்த்தவாதம் இருந்து வந்திருக்கிறது. 'காதலிலும் போரிலும் எல்லாமே நியாயமானது' என்ற பழமொழி, வழக்கமான தார்மீக தரங்களி லிருந்து போரை விலக்கி, தார்மீக அடிப்படையில் அவ்வாறு செய்வதை நியாயப்படுத்துவதற்கான முயற்சியாகும்.

ஒருவேளை சுயநலத்திற்காகவோ அல்லது போரில் பாதிக் கப்பட்டவர்களின் துன்பங்களைத் தார்மீக ரீதியாக அங்கீக ரிப்பதற்காகவோ, போரை மேற்கொள்வதிலும் நடத்துவதிலும் தார்மீகக் கட்டுப்பாடுகள் வரலாற்றின் ஆரம்பத்தில் வெளிப் பட்டன. ஹோமரின் காவியமான இலியட் போன்ற பழங்கால நூல்கள் போர் விதிகள் தொடர்பான நடத்தை விதிகளை வெளிப்படுத்துகின்றன. பண்டைய உலகின் மத மையமான டெல்பியை பராமரிக்கும் நோக்கத்திற்காகவும், போர் விதி களை கடைப்பிடிப்பதற்காகவும் பன்னிரண்டு கிரேக்க பழங்கு டியினர் சம அடிப்படையில் ஒன்றிணைந்த ஆம்ஃபிக்டியோ-னிக் கவுன்சிலைப் பற்றி சிசரோ குறிப்பிடுகிறார். போரின் கொடுமையை ஒழிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஆரம்ப கால ஐரோப்பிய அமைப்பு இதுவாகும். பிளாட்டோ தனது குடியரசு நூலில் போரின் ஆரம்பகால முறையான கோட்பாட் டுக் கணக்கை வழங்குகிறார். இதில் போரில் தார்மீகக் கட்டுப் பாட்டிற்கான காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. பண் டைய கிரேக்கர்களின் கடுமையான சுதந்திரமான நகர-அரசு கள் மகா அலெக்சாண்டரின் வெற்றியில் ஒருங்கிணைக்கப் பட்டன, ஆனால் ரோமானியப் பேரரசு கிரேக்க உலகத்தை விழுங்கியதால் மத்தியதரைக் கடலிலும் ஐரோப்பாவின் பரந்த இராணுவ ஆதிக்கம் வந்தது. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சி வரை, பேரரசு தொடர்ந்து போரில் ஈடுபட்டது. ரோமன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய போதி லும், ஆரம்பகால கிறிஸ்தவ தேவாலயம் அமைதி வாதத்தை ஏற்றுக்கொண்டாலும், 313-ல் பேரரசர் கான்ஸ்டன்டைன் மத மாற்றத்திற்குப் பிறகு, தேவாலயமும் அரசும் நியாயமான போர் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதில் ஒன்றுபட்டன.

ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட புனித அகஸ்டினின் போர் பற்றிய போதனைகள், தலைமுறை தலைமுறையாகத் தேவாலயத்தின் தரநிலைகளாக மாறின. அவை சிசரோ மற்றும் பிளாட்டோவின் பண்டைய குறியீடுகளி லிருந்து உருவாக்கப்பட்டன. ஆனால் கிறிஸ்தவ சேர்க்கைக ளுடன், கொலையையும் கிறிஸ்தவ அன்பையும் அகஸ்டினுக் காக ஒன்றாகச் சொல்ல முடியும், ஏனெனில் உடலின் வாழ்க்கை முக்கியமானதல்ல, இரட்சிப்பே முக்கியமானது. சரி மற்றும் தவறுகளின் இருப்பிடம் அணுகுமுறைகளேயன்றிச் செயல் கள் அல்ல. வெறுப்பைத் தவிர்ப்பதே குறிக்கோளாக இருந்த தால் உடலின் அழிவு கூட பாவிக்கு நன்மை பயக்கும். நியாய மான நோக்கத்துடன், போர் நீதியை நிரூபிக்க முடியும். அட்டு ழியங்கள் இல்லாமல் போரிட்டால், போர் அமைதியை உரு வாக்கும். அகஸ்டின் முந்தைய தலைமுறையினரிடமிருந்து மதிப்புகளை ஒருங்கிணைத்துக் கட்டியெழுப்பியது போலவே, அவரது வழிகாட்டுதல்கள் சுத்திகரிக்கப்பட்டு, விரிவுபடுத்தப் பட்டு, பரந்த கலாசாரத் தரநிலைகளாக இன்று செயற்படுகின்றன. தற்போது உருவாகியுள்ள மேற்கத்திய நியாயமான போர் பாரம்பரியம் இரண்டு வேறுபட்ட ஆனால் தொடர்புடைய கருப் பொருள்களால் ஆனது:

- போருக்குச் செல்வதற்கான தார்மீக நியாயம் (Jus in bello)
- போரில் நடத்தைக்கான தார்மீக வழிகாட்டுதல்கள் (jus ad bellum).

இவை ஒவ்வொன்றும் பல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இந்தப் பாரம்பரியத்தின் கீழ் ஒரு போரை நியாய மான போராகக் கருதுவதற்குப் போரை நாடுவதை நியாயப்ப டுத்தும் நிபந்தனைகளையும் போரில் நடத்தையை நியாயப்ப டுத்தும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

போருக்குச் செல்வதற்கான நியாயம், ஆறு வேறுபட்ட நிபந் தனைகளை உள்ளடக்கியது:

- காரணம் நியாயமானதாக இருக்க வேண்டும்.
- போருக்குச் செல்வதற்கான முடிவை அதற்கான அதிகாரம் உள்ளவர்களே எடுக்க வேண்டும்.
- போருக்குச் செல்லும் குழுக்கள் சரியான நோக்கத்துடன் போருக்குச் செல்லவேண்டும்.
- கடைசி முயற்சியாக மட்டுமே போரை மேற்கொள்ள வேண் டும்.
- போரின் இலக்கு சமாதானம் ஒன்றைச் சென்றடைவதற் கான சாத்தியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- போர் விகிதாசார சமநிலை கொண்டதாக இருக்கவேண் டும், அதாவது போரினால் வரக்கூடிய மொத்த தீமை ஒரு நியாயமான போரினால் அடையப்பட்ட நன்மையை விட அதிகமாக இருக்க முடியாது.

இந்த நிபந்தனைகள் ஒவ்வொன்றும் போருக்குச் செல்வது மட்டுமே என்று முடிவெடுப்பதற்கு முன்பு சுயாதீனமாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

## நியாயமான காரணம்:

நியாயமான போர் மரபு, ஆக்கிரமிப்பை அனுமதிக்க முடியா தது என்றும் ஆக்கிரமிப்புக்குப் பதிலளிக்கும் வகையிலேயே போர் நியாயமாக மேற்கொள்ளப்படுகிறது என்றும் கூறுகிறது. ஒரு அரசின் அரசியல் இறையாண்மை அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிராக மற்றொரு அரசின் சக்தியைப் பயன்படுத்துவது அல்லது அச்சுறுத்துவது ஆக்கிரமிப்பு ஆகும். தற்காப்பு என்பது போருக்குச் செல்வதற்கான தெளி வான காரணம். ஆனால் நியாயமான காரணத்தின் கொள்கை யானது ஆக்கிரமிப்புக்கு எதிராக மற்றொரு அரசைப் பாது காப்பதற்கும், படுகொலைகளால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்கும் தலையீடு செய்வதற்கும், பிரிவினைவாதி களுக்கு உதவுவதற்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான சாத்தியமான முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகளுக்கும் கூட விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## சரியான அதிகாரம்:

வரலாற்று ரீதியாக சரியான அதிகாரம் என்பது அரசாங்கத் தின் முறையான முடிவெடுப்பவர்களைக் குறிக்கிறது. இது

பல்வேறு சூழல்களில் அரச தலைவர்கள், ஆட்சியாளர்கள், மன்னர்கள், ஜனாதிபதிகள், தளபதிகள், பிரதமர்கள், சட்ட மன்ற அமைப்புகள் உள்ளிட்ட பலரை உள்ளடக்கியது. கடந்த சில நூறு ஆண்டுகளில், சரியான அதிகாரம் என்ற கொள்கையானது, தனி நபர்களுடன் மட்டுப்படாமல், குறித்த போரின் சாத்தியமான ஆதாயங்களாலும் சுமைகளாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டு விருப்பத்துடன் இணைந்ததான நிலைக்கு மாறியுள்ளது. புரட்சிகரப் போர்கள், சுரண்டலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான தற்காப்பு முறையீடுகள், சுய-ஆட்சி உரிமைகள் ஆகியவற்றுடன் பாதுகாப்புக்கும் சுதந்திரத்திற்கான உரிமைகள் ஆகியவற்றின் மூலமும் நியாயப்படுத்தப்படுகின்றன.

### சரியான நோக்கம்:

நியாயமான போருக்கான ஒரே சரியான நோக்கம் ஆக்கிரமிப்பு என்ற தவறைச் சரிசெய்து அமைதியைக் கொண்டுவருவதற்கான விருப்பமாகும். பழிவாங்கும் நோக்கம், ஆதிக்கம், தீங்கு, கொடுமை, தனிப்பட்ட அல்லது தேசிய சுயநலம் போன்றன எப்போதும் தவறானது.

### கடைசி முயற்சி:

போர் நியாயமாக நடைபெற வேண்டுமானால், ஆக்கிரமிப்பு என்ற தவறைச் சரிசெய்வதற்கான அனைத்து வழிகளும் முதலில் தீர்ந்துவிட்டிருக்க வேண்டும். நியாயமான போர் மரபு, போரின் தார்மீக வெறுப்பை ஊகிப்பதுடன் முடிந்தால் போரைத் தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

### சமாதானத்தின் அவசியம்:

நியாயமான போர் மரபு நிலையான அமைதிக்கான நிலைமைகளை உருவாக்கக்கூடியதாக இருந்தால் மட்டுமே போர் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய நிலைமைகள் அமைதியைக் குலைக்கும் ஆக்கிரமிப்பைத் தூண்டும் பிரச்சினைகளை சரிசெய்ய வேண்டும்.

### விகிதாசார சமநிலை

இறுதியாக, போரினால் வரக்கூடிய ஒட்டு மொத்த விளைவு நன்மையாக இருப்பது சாத்தியமான இடத்தில் தொடங்கப்படும் போர் மட்டுமே நியாயமாக எடுக்கப்படுகிறது. போர் உருவாக்கும் மொத்த தீமையை விட கிடைக்கும் நன்மை அதிகமாக இருக்க வேண்டும். திட்டமிடப்பட்ட போரின் விலை, அனைத்து மனித, பொருளாதார மற்றும் கலாசார செலவுகள் உட்பட மொத்த இடப்பெயர்வு, துன்பம் மற்றும் இறப்பு ஆகியவற்றில் மிக அதிகமாக இருந்தால், அதனால் வரக்கூடிய நன்மைகளுடன் ஒப்பிடுகையில், மீண்டும், சாத்தியமான அனைத்து ஆதாயங்களையும் கருத்தில் கொண்டே முடிவு எடுக்கப்படல் வேண்டும்.

இந்த ஆறு காரணிகளைக் கருத்திற் கொண்டு எப்போது போருக்குச் செல்வது என்பதைத் தீர்மானிப்பது சிக்கலானதும் கடினமானதுமான பணியாகும். போரொன்றினை சூத்திரங்களையும் கேள்விக் கொத்துகளையும் வைத்து அளவிடுவது எளிமையான விஷயம் அல்ல. இந்த விவாதத்தில் கருத்து வேறுபாடுகளும் விளக்கத்தில் வேறுபாடுகளும் ஏற்படும். போருக்குச் செல்வதை நியாயப்படுத்துவதற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்று முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளவர்களால் உடன்பாடு எட்டப்பட்டால், அதனைத் தொடர்ந்து போரில் நடத்தை பற்றிய வழிகாட்டும் நிபந்தனைகளுக்கு கவனம் செலுத்த வேண்டும். அதாவது, ஒரு போர், நியாயமான முறையில் போருக்குச் செல்வதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாலும், போரில் நடத்தைக்கான தார்மீக வழிகாட்டுதல்களும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அது நியாயமான போர் அல்ல.

போரில் நடத்தைக்கான தார்மீக வழிகாட்டுதல்கள், மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கின்றன:

- பாகுபாடு, அல்லது அப்பாவிகளின் காப்புறுதி,
- இரட்டை விளைவு, அல்லது திட்டமிடப்படாதவற்றிலிருந்து வேறுபட்டது, மற்றும்
- மீண்டும் விகிதாசாரம், இந்த முறை போரின் ஒட்டுமொத்த விகிதாச்சாரத்தை விட போருக்குள்ளான குறிப்பிட்ட செயல்களைப் பற்றியது.

### பாகுபாடு:

பாகுபாட்டுக் கொள்கை என்பது போரில் ஈடுபடாதவர்கள் போரின் தாக்குதல்களில் இருந்து விடுபட வேண்டும் என்பதாகும். அப்பாவிகளைக் கொல்வது எப்போதுமே தவறு, மேலும் நியாயமான போரில் பங்கேற்பவர்கள் போர்ச் செயல்களின் முறையான, சட்டவிரோத இலக்குகளுக்கு இடையில் பாகுபாடு காட்ட வேண்டும். போரிடாதவர்களையும், எதிர்க்க வலுவற்றவர்களையும் காத்தல் என்ற கருத்தின் தோற்றம் தார்மீக உணர்திறனில் இல்லை, மாறாக இடைக்காலத்தில் இருந்து வீரியம் என்ற நெறிமுறையில் உள்ளது. மாவீரர்கள், தொழில்முறை வீரர்கள், மாவீரர் அல்லாதவர்களுக்கு எதிராக ஆயுதம் எடுப்பதில் பெருமை இல்லை. விவசாயிகள், வேலைக்காரர்கள், கைவினைஞர்கள், வணிகர்கள் போன்றோர் நாட்டின் செல்வத்தின் ஆதாரமாக இருந்தனர். ஊழியர்கள், தொழிலாளர்கள் மற்றும் போரில் ஈடுபடாத குடிமக்கள் மீது தாக்குதல் மூலம் ஒரு மாவீரரை மறைமுகமாகத் தாக்குவது கோழைத்தனமாகக் கருதப்பட்டது.

குழந்தைகள், முதியவர்கள், உடல் நலம் குன்றியவர்கள் அனைவரும் இராணுவ நடவடிக்கையின் பொருத்தமற்ற இலக்குகள் என்பது இன்று தெளிவாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், போரிடாத, எதிர்க்க வலுவற்றோர்களாகிய இவர்களும் இலக்கு வைக்கப்படுகின்றனர். தற்காப்பு என்ற பெயரில் அவர்கள் பொதுவாக முறையான இலக்குகளாகக் கருதப்படுகிறார்கள். சாதாரண மக்களும் அவர்களது குடும்பங்களின் குடியிருப்புகளும் பாரம்பரியமாகப் போரிலிருந்து விலக்கை அனுபவித்து வருகின்றன. ஆனால் நவீன போர்ப் பாரம்பரியமானது எதிர்க்க வலு இல்லாதவர்களின் சுற்றுப்புறங்களைத் தாக்குவதை ஊக்குவிக்கின்றது என்ற அடிப்படையில் மாறியுள்ளது.

### இரட்டை விளைவு

போரின் தவிர்க்க முடியாத ‘துணை விளைவு’ என்பது இடைக்காலத்தில் கிறிஸ்தவர்களால் இரட்டை விளைவுக் கொள்கையாக உருவாக்கப்பட்டது. இக்கருத்தின் அடிப்படை உந்துதல் என்னவென்றால், அப்பாவிகளின் காயம், மரணம் போன்றன எப்போதும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருக்கின்ற அதேவேளை போர் நடவடிக்கை தொடக்கப்பட்டதன் நோக்கம் அவை இல்லை என்றால் மன்னிக்கப்படலாம் என்பதாகும். போர்ச் செயல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதுதான் இதன் விளக்கம். முறையான இராணுவ இலக்கின் காயம் அல்லது மரணம் என்பது

இங்கே இரண்டாவது விளைவு. போர்ச் செயல்கள் குறி வைத்து அப்பாவிகளின் காயம் மற்றும் இறப்பை நோக்கமாகக் கொண்டிராத வரை, அவை திட்டமிடப்படாத அல்லது இணையான இழப்புகளாக மன்னிக்கப்படலாம்.

இரட்டை விளைவுக் கொள்கை சிக்கலானதாக இருப்பதுடன் முரண்பாடான நிலைமைகளையும் தோற்றுவிக்கின்றது. உதாரணமாக, ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தியது போரிடாதவர்களின் காயம் அல்லது மரணத்தை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்று கூறலாம், இதனால் இரட்டை விளைவுக் கொள்கை நூறாயிரக்கணக்கான காயங்கள் மற்றும் இறப்புகளை நியாயப்படுத்தும். ஆயினும்கூட, இதுபோன்ற உயிரிழப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எதிர்பாராத மற்றும் முன்னறிவிக்கப்பட்ட உயிரிழப்புகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்வது கடினம்.

## விகிதாசாரம்:

இறுதியாக, நியாயமான போரை நடத்துவது விகிதாசாரக் கொள்கையால் வழிநடத்தப்படுகிறது. மேலே போருக்குச் செல்வதை நியாயப்படுத்துவது போல, போரின் தீமையை போரினால் அடையக்கூடிய நல்ல விளைவுகளுக்கு எதிராக எடைபோடுவதும் சிரமமானதாகும். ஆனால் போருக்குச் செல்வதில் உள்ள மொத்த நன்மை, தீமைகளைக் கருத்தில் கொள்வதற்குப் பதிலாக, இங்கே கருத்தில் கொள்ளப்படுவது கொடுக்கப்பட்ட செயல், ஒரு குறிப்பிட்ட பிரசாரம், ஒட்டுமொத்தப் போரின் ஒரு பகுதியாகக் கருதப்படும் ஒரு குறிப்பிட்ட நிகழ்வு என்பனவே. இந்த வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு செயலும் விகிதாசாரச் சோதனையைச் சந்திக்க வேண்டும். கொடுக்கப்பட்ட செயலைச் செய்வதால் ஏற்படும் தீமை, செயலில் இருந்து கிடைக்கும் நன்மையால் ஈடுசெய்யப்படுமா? இல்லையெனில், இந்தச் செயல் விகிதாசாரமற்றது, எனவே தடைசெய்யப்பட்டுள்ளது.

போரில் ஈடுபடுவதையும், போரில் நடத்தையையும் நியாயப்படுத்தும் கூறுகள் ஒன்றாகப் பொருந்துகின்றன. இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே ஒரு போர் நியாயப்படுத்தப்படலாம். எந்தவொரு நிபந்தனையும் நிறைவேற்றப்படாவிட்டால், போர் தார்மீக ரீதியாக நியாயப்படுத்தப்படாது. இதன் பொருள் முதலாவது ஆறு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும், இரண்டாவதன் நிலைமைகளின் வழிகாட்டுதலின் கீழ் போரை நடத்த முடியாது. அவ்வாறு நடத்தப்படும் போர் நியாயமானது அல்ல, எனவே அதை மேற்கொள்ளக்கூடாது. நியாயமாகப் போராடக்கூடிய போர்களுக்கும் இதைச் சொல்லலாம், இவை, போருக்குச் செல்வதை நியாயப்படுத்துவதற்கான தரநிலைகளைச் சந்திக்கத் தவறினால் அவை நியாயமான போர்கள் அல்ல.

நியாயமான போர் மரபு என்பது சிக்கலான, நுட்பமான, வாழ்க்கைத் தரங்களின் தொகுப்பாகும். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உருவாகி, தார்மீகக் கருத்தில் போர்கள் தங்களை முன்வைக்கும்போது தொடர்ந்து உருவாகி வருகிறது. இது அனுபவ ரீதியாகச் சோதிக்கப்படக்கூடிய தெளிவான, அளவிடக்கூடிய நிலைமைகளைக் கொண்ட நேரடியான கோட்பாடு அல்ல. பாரம்பரியம் பல்வேறு சூழ்நிலைகள் மற்றும் நோக்கங்களுக்காக வெவ்வேறு நபர்களால் பல்வேறு விளக்கங்களைப் பெறுகிறது. எந்தவொரு குறிப்பிட்ட போரையும் நியாயப்படுத்த அல்லது மறுப்பதற்காகப் பாரம்பரியத்தைப் பயன்படுத்துபவர்கள், ஒன்றோடொன்று தொடர்புடைய கொள்கைகளின் சிக்கலான தொகுப்பை விளக்க வேண்டும். மேலும் அவ்வாறு செய்யும்போது அவர்கள் தவிர்க்க முடியாமல் பாரம்பரியத்தின் பல்வேறு அம்சங்களை வித்தியாசமாக எடைபோடுகிறார்கள்.

மரபு ரீதியாகப் போரையும் நடத்தைகளையும் மதிப்பிட்டுக் கொள்வதற்கான ஒரு பரந்த, பொதுவான வழிகாட்டியை வழங்கியிருந்தாலும் அவற்றின் மூலம் ஒரு கேள்விக்கும் திட்டவட்டமாக பதிலளிக்க முடியாது. போரின் தார்மீகத் தீர்ப்புகளை எடுக்க வேண்டிய சுமையை மக்கள் சுமக்கிறார்கள். இதற்கு நியாயமான போர் பாரம்பரியம் உதவ முடியும், ஆனால் இறுதிப் பொறுப்பு நம்முடையது. இலங்கை அனுபவமும் அதுதான்.

நியாயமான போருக்கான வரையறைகளும் அதன் கோட்பாட்டுருவாக்கமும் இலங்கையின் இறுதிப் போர் 'நியாயமான போர்' என்ற வரையறைக்குட்பட்டதா என்ற வினாவை எழுப்புவது தவிர்க்கவியலாதது. போர் நியாயமானதாக இல்லாத போது, குற்றங்கள் புதிய எல்லைகளைச் சட்டரீதியாகவும், யதார்த்த ரீதியாகவும் எட்டுகின்றன. இவ்வாறு நியாயமான போர் என்ற பெயரில் எல்லோரும் போர் தொடுக்கும்போது இலங்கையும் அதனைப் பயன்படுத்திக் கொண்டது.

## தொடரும் குறிப்புகள்:

இலங்கை அனுபவத்தையும் கடந்த கால்நூற்றாண்டு கால வரலாற்றையும் பார்க்கும்போது இயல்பாக எழுகின்ற கேள்வி ஒன்றுண்டு. நியாயமான போர் என்று ஒன்று இருக்கிறதா? இக் கேள்வி மனிதர்களுக்கு எதிராக ஆக்கிரமிப்புச் சக்தியைப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகளையும் சட்டபூர்வத்தன்மையையும் போரைக் கொண்டு நடத்துவதையும் பற்றியது. போரைப் பற்றிய தார்மீகப் பிரதிபலிப்பானது, இது ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறை என்றும் வேண்டுமென்றே திட்டமிட்டு மரணத்தையும் அழிவையும் ஏற்படுத்துவது என்றும் வாதிடுகிறது. எனவே இந்தத் தார்மீகப் பிரதிபலிப்பைக் கொண்ட மதங்களை முன்னிறுத்தும் நாடுகள், நியாயமான போரை ஏன் நடத்துகின்றன? அந்நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் இதை ஏன் ஆதரிக்கின்றனர்?

குறிப்பாகச் சொல்வதாயின் நியாயமான போர் என்ற கருத்தாக்கம், கிறிஸ்தவ இறையியல் புலமையிலிருந்து உருவான கருத்து. அது மேற்கத்தைய சமூக, அரசியல் அகராதியின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. இவ்விறையியல் புலமையில் இருந்து வேறுபட்ட - ஆபிரகாமியல்லாத - நம்பிக்கையான பௌத்தம் நியாயமான போர் என்ற சிந்தனையை எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதை இலங்கை அனுபவத்தின் வழி பார்க்க முடியும். இலங்கை மட்டுமன்றி, பௌத்த நாடுகளில் மதம் மற்றும் அரசியல் தொடர்பான பிரச்சினைகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதற்கான ஒரு உதாரணமாக நியாமான போர் என்ற கோட்பாட்டை பௌத்தத்தைப் பெருந்தேசியவாத அகங்காரமாக வளர்தெடுத்த இலங்கை எவ்வாறு பயன்படுத்தியது என்பதன் வழி அடுத்த கட்டுரையில் பார்க் லாம்.



meenilankco@thaiveedu.com




சை. பீர் முகமது மலேசியாவின் மூத்த எழுத்தாளர். மலேசிய நவீனத் தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் சென்றவர்களில் மிக முக்கியமானவர். ஆரம்பத்தில் தீவிரமாக இயங்கிய பீர் முகமது குடும்பத்தைப் பொருளாதார ரீதியாக மேலெடுக்க வேண்டி உழைத்தார். இருபது ஆண்டு காலம் குடும்பத்திற்காக உழைத்த பீர் முகமது, மற்றபடி 1995-லிருந்து இலக்கியச் செயற்பாட்டில் தீவிரமாக இறங்கினார். மலேசியாவில் தமிழ்ப்பணி சார்ந்து பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்தார். முன்னோடிகளையும் இளைஞர்களையும் இணைத்து செயலாற்றினார்.

தமிழ்ச் சிறுகதைகளில் மலேசியத் தமிழர்களின் வாழ்க்கைப் பாடுகள் பதிவு பெற்றிருக்கும் விதத்தைத் தொகுத்துப் பார்க்கும் பெரும் முயற்சியில் இறங்கி உழைத்து 'வேரும் வாழ்வும்' என்ற தலைப்பில் மூன்று தொகுப்புக்களை 1999, 2001, 2001 வாக்கில் கொண்டுவந்தார். அவரோடு மலேசியாவில் மூன்று நாட்கள் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. அதை தனியே எழுதவேண்டிய ஒன்று. இங்கு முதல் தொகுப்பை மட்டும் கவனப்படுத்துகிறேன்.

சை. பீர்முகமது 1999-ல் தொகுத்த 'வேரும் வாழ்வும்' என்ற முதல் தொகுப்பில் 43 கதைகள் உள்ளன. நூல் மித்ர வெளியீடாக வந்திருக்கிறது. தமிழகத்து வாழ்க்கைப்பாடுகளை ஒத்த குடும்பச் சிக்கல்களையும் வாழ்க்கை நெருக்கடிகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் பல கதைகள் பேசுகின்றன. நிகழிடம் மட்டும் இக்கதைகளில் வேறாக இருக்கின்றன. புலம்பெயர்ந்து மலேசியாவில் நிரந்தரமாக வாழ்ந்தாலும் தமிழகத்துடனான தொப்புள்கொடி உறவுகள் 70-பதுகளுக்கு முன்னான கதைகளில் அறுபடாமல் ஏதேதோ வகையில் பிணைந்திருக்கின்றன. அதே சமயம் 50-களிலிருந்து மலேசிய நிலத்து வாழ்க்கை சன்னமாக சில கதைகளில் எதிரொலித்தபடி வந்து 80-களுக்குப் பின் ஈழத்து இலக்கியம்போல மலேசியத் தமிழ் இலக்கியம் அந்தப் பண்பாட்டின் பின்னலோடு உருவாகத் தொடங்குகின்றன. தொண்ணூறுகளுக்குப் பின்னான மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் 'மலேசியத் தனித்துவம்' வெளிப்படத் தொடங்குகின்றது.

வாழ்வதற்கு எளிய கனவுகளைச் சுமந்தபடி மலேசியா சென்ற தமிழ் இனம் அவமானத்தாலும் அதிகாரத்தாலும் சிக்குண்டு 200 ஆண்டுகள் அடிமைகளாய் வாழ்கின்றனர். இரண்டாம் உலகப்போர்ச் சூழலில் குடும்பங்களை விட்டுப் பிரித்து ராணுவத்தினர் சிதைக்கின்றனர். கொடுமையான அனுபவங்களிலிருந்து தமிழ் இனம் மெல்ல மீண்டு வருகிறது. இந்த மலேசிய மக்களிடமிருந்து சிறுகதை போன்ற நவீன இலக்கியம் தோன்றுகிறது. புதிய நாட்டில் புதிய சூழலில் புதிய நெருக்கடியிலிருந்து எழுதப்பட்ட கதைகளில் பல ரொம்ப மேலோட்டமானவைகளாக இருக்கின்றன. இதனை எழுதியவர்கள் வேதனையின் கொடியிலிருந்து வந்தவர்கள் அல்லர். தமிழ் வாத்தியார் வேலை வாங்கப் பெற்றுக் கேட்டறிந்து எழுதியவர்கள். கலை, ஆவேசம் அற்றுப் பெயர் விருப்பத்திற்காக எழுதியவர்கள். பொய்மையைச் சாடுவதாகவும் நேர்மையை வற்புறுத்துவதுமான எளிய தளங்களில் சாதாரண நடையில் எழுதினர். ஆனால் இவர்களால்தான் மலேசியம் காலூன்றியது என்பதும் உண்மை.

சங்கு சண்முகம் எழுதிய 'இரை தேடும் பறவைகள்' இளஞ் செல்வன் எழுதிய 'சேதாரம்' இரண்டு கதைகளிலும் கட்டிய பெண்ணை ஏமாற்றிவிட்டு வேறு வாழ்க்கையை நாட விரும்பிய கணவன்மார்களின் மனமாற்றத்தைச் சொல்கின்றன. உள்நாட்டிலே புலம்பெயர்ந்து சயாம் ரயில் பாலம் அமைக்கச் சென்று மரணமடைந்த பெற்றோர்களின் பிள்ளைகள் ஆதரவற்று உருண்டு புரண்டு நிலைகொள்ளும் வாழ்க்கைப் பின்னணியிலும், தமிழ்நாட்டிலிருந்து வேலை தேடி மலேசிய வந்து தொழில் செய்கிற பின்னணியிலும் இவ்விரு கதைகள் அமைகின்றன. பெரும்பாலான மலேசியக் கதைகளின் அமைவு இவ்விதமானவைகளே. திருமணம் செய்த மலேசியத் தமிழ் ஏழைப் பெண்ணைக் கழற்றிவிட்டு தமிழ்நாட்டில் வளமாக வாழ ஆசைப்படுகிறவன் தமிழ்நாட்டில் மனைவியை ஏமாற்றிவிட்டு மலேசியாவில் பழைய காதலியைச் சேர்த்துக் கொள்ள நினைக்கிறவன் - இறுதியில் நல்லவர்களாக மனம் மாறுவது கதை. இந்த இரு கதைகளுக்குள் மலேசிய நிகழ்விடம் பேசப்பட்டாலும் வாழ்க்கைக் கண்ணோட்டம் மரபான விசயத்தைப் போற்றுகின்றது. உண்மையின் நேர்முகத்தை பூசி மெழுகும் ஜனரஞ்சகப் பத்திரிக்கைக் கதைகளாகவே இருக்

கின்றன. நல்வழிப்படுத்தும் காரியத்தை விட்டு உண்மையின் நேர்முகத்தை மட்டும் சொல்லியிருந்தால் நல்ல கதைகளாக உருவாகியிருக்கும்.

அதே சமயம் கோவிந்தசாமியின் 'உடல் மட்டும் நனைகிறது' கதை தோட்டத் தொழிலாளிகளாக வேலை செய்த தமிழர்களிடையே ஏமாற்றுக்காரன் எப்படி அற்ப புத்தியுடன் பணத்தின் மீது வெறியாக இருக்கிறான் என்பதை அனாதை அப்பாவுக் கிழவன் இறப்பை மையமாக வைத்து பேசுகிறது. நல்லவனாக உழைக்கிற சாமிக்கண்ணு நல்லடக்கச் செலவிற்கு வசூலித்த பணத்தில் பாதியை ஒதுக்கி பதுக்குவதைக் காட்டுகிறது. அப்துல் ரசாக்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட பச்சைப் புத்தகத் திட்டத்தின் கீழ் சிறிய அளவு நிலம் பெற்ற கூலித் தமிழர்கள் ஐந்து ரிங்கிட்டுக்கும் பத்து ரிங்கிட்டுக்கும் விற்று குடித்து ஏப்பம் விட்டவர்களையும் அதைப் பயன்படுத்தி நிலம் சம்பாதித்த காரியவாதிகளையும் இணைத்தே சொல்கிறது.

சை. பீர்முகமதுவின் 'பாதுகை' மலேசியாவிலும் தமிழ் சினிமா மோகம் பிடித்தாட்டுவதை வருத்தத்துடன் சொல்கிறது. பிய்ந்த கேன்வாஸ் சூவை மாற்றித்தர உதவாத தகப்பனும் அண்ணனும் எம்.ஜி.ஆர், சிவாஜி, கமல், ரஜினி சினிமா மோகத்திற்குப் பணத்தைச் செலவழிக்கின்றனர். 'உடல் மட்டும் நனைகிறது', 'பாதுகை' போன்ற கதைகளில் பிழைக்கப் போன இடத்திலும் மனிதனின் சல்லித்தனம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. மேற்சொன்ன பத்திரிகை கதைகளையும் யதார்த்தக் கதைகளையும் தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் ஏற்கனவே எழுதிவிட்டதாகவே படுகிறது.

ப.கு. சண்முகத்தின் 'ஐந்தடியில் ஓர் உலகம்' சீ. முத்துசாமியின் 'இரைகள்' ரெ. கார்த்திகேசுவின் 'கொப்பளங்கள்' மா. சண்முக சிவாவின் 'வீடும் விழுதுகளும்' இந்த நான்கு கதைகள் அசலான மலேசியத் தமிழ்க்கதைகள். தமிழ்நாட்டு எழுத்தாளனால் எழுத முடியாத அனுபவங்களை வெளிப்படுத்தும் மலேசிய நிலத்துக் கதைகள். மகத்தான - சிறந்த - கதைகள் என்று சொல்ல முடியாவிட்டாலும் நல்ல தரமான சிறுகதைகள் இவை.

தமிழ்நாட்டை விடச் சுகமாக வாழலாம் என ஆசைப்பட்டு வந்த தமிழ்க் குடிகள் மலேசியக்காட்டை வளப்படுத்த ஆங்கிலேயர் களால் வதைக்கப்பட்டு சிதைந்து போனவர்கள். இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பானியர்கள் புகுந்து தமிழர்களை அடிமைகளாக அள்ளிப்போட்டு சயம் ரயில் பாதை அமைக்க வேலை வாங்குகின்றனர். நோயாலும், பசியாலும், பணிப் பளுவாலும் மடிகின்றனர். மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சியைப் பிடிக்க சயாம் (மரண) ரயில் பாதையில் வேலை செய்தவர்களில் செத்தவர்கள் போக மீந்த தமிழர்களை அள்ளி ரப்பர்த் தோட்டக் கூலிகளாக வீசுகின்றனர். சிலர் சாலை அமைக்கும் பணிக்குத் தள்ளப்படுகின்றனர். தார் குழியில் விழுந்து சாகின்றனர். பஞ்சைப் பராதிகளாக மலேசிய மண்ணில் இழுத்தடிக்கப்பட்ட தமிழர்களின் கதையைச் சொல்கிறது 'கஞ்சிக்கூலி' முக்கியமான கதைதான். சிறுகதை என்ற வடிவருபத்தில் விரியும் ஒற்றைப் புள்ளியின் அடர்த்திக்குள் பயணிக்கவில்லை. ஒரு நாவலின் சுருக்கம் போல் சொல்லப்பட்டிருக்கிறது. கோபால் பரதம் என்ற சிங்கப்பூர் எழுத்தாளர் எழுதிய 'ஒரு தீவின் தனிப்பட்ட வரலாறு' கதைக் கட்டுரை என்றே சொல்லலாம். சிங்கப்பூர் உருவான விதம், அதில் தமிழர்களின் நிலை பற்றிய கருத்தாடல்கள் முன் வைக்கப்படுகின்றன. இந்தக் கதையில் தமிழர்கள் அநீதிகளின் முன் குரல் எழுப்பாமல் அடக்க ஒடுக்கமாக வாழ்ந்தும் - வாழ நேர்ந்தும் வந்ததை துயரத்துடன் வெளிப்படும் இறுதிப் பகுதி மட்டும் படைப்புக்குரிய குணாம்சத்தைக் கொண்டிருக்கிறது.

பிரஜா உரிமை பெறாத, பெறுவதற்கு முயற்சிக்காத (எப்படியும் தமிழ்நாட்டிற்குத்தானே திரும்பப் போகிறோம் என்ற கனவும் மெத்தனமும்) மூத்த தலைமுறையின் பிள்ளைகள், குறிப்பாகப் பெண்கள் தோட்டத் தொழிலாளியாக நீடிக்கப்பட்ட அல்லல்கள், கண்காணிகளாலும், முதலாளிகளாலும் பட்ட பாலியல் தொந்தரவுகள், காதலை இழந்து கணவனை இழந்து குழந்தை குட்டிகளை வளர்க்க அதிகாரச் சுரண்டலுக்குள் தன்னை இழந்து பசியாற்றும் அவலத்தை - தமிழச்சிகள் வாழ்ந்த வாழ்க்கையை அடர்த்தியான வாழ்க்கைப்பாடுகளுடன் மலேசியச் தோட்டத் தொழிலின் உடல்நோவுடன் உருவாகி வந்திருக்கும் சி. முத்துசாமியின் 'இரைகள்' சிறுகதை மிக முக்கியமானது.

இக்கதையின் மற்றொரு விழைவாக ப.கு. சண்முகத்தின் 'ஐந்தடியில் ஓர் உலகம்' கதையைச் சொல்லலாம். மலேசியச் தமிழ்ச் சிறுகதையில் ஒரு மைல்கல் இக்கதை. தோட்டத் தொழிலில் சிவப்பு அட்டை அனுமதி காலக்கெடு முடிய பிரஜா உரிமம் பெற முடியாது துரத்தப்பட்டவர்கள், தலைநகரக் குடிசை ஒழிப்பின் நற்காரியத்தால் குடிசை இழந்தவர்கள், உறவுகளற்ற அனாதைகள் என வாழ வழியற்றுத் துரத்தப்பட்ட தமிழர்கள் கூடி வாழுமிடம் குவாலலும்பூரின் சென்ரல் மார்க்கெட் ஒட்டிய ஐந்தடி அகலம் கொண்ட தெரு. கைவிடப்பட்ட அனாதைகளின் இருட்டு வாழ்க்கையைச் சொல்கிறது. திருடர்கள், விபச்சாரிகள், விதவைகள், குடிகாரர்கள், சூதாடிகள், குழந்தைகள், அம்மாக்கள், நோயாளிகள் என ஆகிப் போன தமிழர்களின் சங்கம் இத்தெரு. ஒட்டுத் திண்ணைகளில் முடங்கியபடி இவர்களின் ஆசாபாசங்கள் வெளிப்படுகின்றன. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்குடி மலேசிய மண்ணில் 1960-களில் வாழ நேர்ந்த 'நேர்த்தி' இது.

1969 மே மாதம் மலேசியாவில் இனக்கலவரம் மூண்டு தமிழர் வாழ்வில் சாவின் சூறைக்காற்று வீசுகிறது. இதன் நெடி வெவ்வேறு இடங்களில் புகைகிறது. பிரச்சினைகளை உண்டுபண்ணுகிறது. இம்மாதிரிச் சூழலில் எழுதப்பட்ட கதை 'வீடும் விழுதும்', பெரிய எஸ்டேட்டுகளை மற்றொரு பெரிய பணக்காரனுக்கு விற்கும்போது அந்நிலத்தில் கூலிகளாக நீண்ட காலம் இருந்த தமிழர்கள் துரத்தப்படுகின்றனர். குடிநீர், மின்சாரம் போன்ற அத்தியாவசியத் தேவைகளைத் துண்டிக்கின்றனர். வேறு வழியில்லாமல் நகரங்களுக்குப் பொட்டி சட்டிகளுடன் குழந்தைகளைச் சுமந்துகொண்டு புலம்பெயர்கின்றனர். ஏற்கனவே வெளிஉலகத் தொடர்பற்று தோட்டத் தொழிலாளிகளாக வாழ்ந்த பெண்கள் முதிர்கன்னிகளாகவே இருக்க நேர்வதும், லாரிகளில் சரக்கேற்றவரும் நகர ஓட்டுநர்களை நம்பி



ஓடிச் சீரழிவதும் நடக்கிறது. தோட்டத் தொழிலாளியாக இருக்க முடியாமல் விதவை செல்லம்மாள் இரண்டு குழந்தைகளுடன் கோலாலம்பூருக்குச் செல்கிறாள். அவளின் தோழி கோவிந்தம்மாள் லாரி ட்ரைவரால் ஏமாற்றப்பட்டு வேசியாக இருக்கிறாள். அவள் செல்லம்மாளுக்கு வாய்க்கால் கரையோரம் ஒரு இருப்பிடத்தை உண்டாக்கி நல்வாழ்க்கை அமைத்துத்தர முயல்கிறாள். அது ஒரு புறம்போக்கு நிலம் என்று சீனன் இடித்துத் தள்ளுகிறான். செல்லம்மாள் வேறு வழியில்லாமல் குழந்தைகளை வளர்க்க கோவிந்தம்மாளின் வழியில் செல்லத் துணிகிறாள். அரசியல் நெருக்கடியில் விளைந்த சிறந்த கதை இது.

இந்தக் கதைகளைப் படிக்கும்போது சீன, மலாய மக்கள் அதிகாரம் பெற்ற இனங்களாகவும் தமிழ் இனம் அடிமைக் கூலிகளாக ஒடுக்கப்பட்ட இனமாக வாழநேர்ந்த அவலத்தைக் காணமுடிகிறது. இது வெள்ளைக்காரன், ஜப்பான்காரன் தொடங்கி சீனக்காரன் வரை ஏறி மிதித்து சீரழித்த வரலாற்று நிகழ்வாகவும் உள்ளமைந்திருக்கிறது.

மலேய நாட்டில் வாழ்ந்தாலும் மூத்த தலைமுறையினரிடையே வெளிப்பட்ட பொறுப்பற்ற தன்மையையும் இளந்தலைமுறையினரின் உழைப்பையும் ரெ. கார்த்திகேசு தமது கதைகளில் கவனப்படுத்துகிறார்.

எழுபதுகளில் ஏழைத் தமிழ்ப் பெண்கள் நகரங்களில் வேலை தேடிச் செல்லவேண்டிய சூழலும் குடும்ப நிர்ப்பந்தமும் முடுக்குகிறது. இதனை 'கொப்பளங்கள்' கதை சொல்கிறது. கணவனின் சூதாடித்தனம், சினிமா மோகத்தால் பள்ளி மாணவனிடம் தலை தூக்கும் திருட்டுத்தனம், அதன் விளைவாக பள்ளியிலும் குடும்பத்திலும் எழும் பூசல், மாணவனுக்குத் தரும் சூட்டுக்கோல் சூடு தண்டனை, மாணவனைத் தகப்பன் வன்கொடுமை செய்ததால் சிறைத் தண்டனை, எனச் சீரழிவதையும், மலேசியச் சட்டம் உண்டாக்கிய வாழ்க்கை முறையும் இயைந்து உருவான கதை இது. காதல், சென்டிமெண்ட்டிலிருந்து விடுபட்டு ஒரு பெண் தன்நிலை உணர்வதும், கல்வியின் முக்கியத்தை அறிவதும் கட்டாயத்தேவை என்பதை

வெளிப்படையாக முன்வைக்கிறது. புதிய தலைமுறை மலேசியத் தமிழனாகக் காலூன்றும் சூழல் இந்த எழுபதுகளில் நிகழ்கிறது.

ரெ. கார்த்திகேசுவின் பெரும்பாலான கதைகள் குடும்ப உறவுப் பிரச்சினைகளைச் சொன்னாலும் மலேசியப் பின்னணி வலுவாக உருவாகி வந்திருக்கிறது. மலேசிய நாட்டின் அரசியல், பண்பாட்டு உறவுகளின் ஊடே தமிழர், தமிழர் குடும்பம், என்ன விதமாய்ப் பொருந்தி இயங்குகிறது என்பதே இவரின் கதைகளின் அடிப்படை, 'மாணிக்கம் காணாமல் போனான்' கதைகூட தகப்பனின் பொறுப்பற்ற தன்மையால் பிள்ளைகளிடம் ஏற்படும் சிக்கலைச் சொல்கிறது. அண்ணன் வீட்டில் தங்கிப் படிக்கும் தம்பி குறைவான மதிப்பெண் பெறுகிறான். கிட்டத்தட்ட தோல்வி. மேல்படிப்பிற்கு இடம் கிடைக்காது. காணாமல் போன தம்பியை திகில் எண்ணங்களுடன் தேடுவதுதான் கதை. அப்பா மூத்தமகன் வீட்டிற்கு வந்து திட்டுகிறார். சுற்றியிருக்கும் சீனர்களும் மலேயர்களும் வந்து வேடிக்கை பார்க்கின்றனர். மலேய நாட்டில் மூத்த தலைமுறையினர் நடந்து கொண்ட அற்பத்தனங்களைச் சுட்டுகிறது.

கார்த்திகேசு சமீபத்தில் எழுதிய 'ஒரு சுமாரான கணவன்' தமிழ் நாட்டவரின் மனதில் சொர்க்க பூமியாகத் தோன்றும் மலேசியாவை நொறுக்கி தமிழ்நாட்டைப்போல அதுவும் அல்லல்களுடன் மனிதர்கள் வாழும் இடம்தான் என்கிற யதார்த்தம் தரை உராயக் காட்டுகிறது. தரமான கதை. குவாலலும்பூரின் அருகில் ஸ்தாபாக் பக்கத்தில் விசாலமான இடத்தில் வாழ்ந்த பெண், பினாங்கு நகரில் வேன் ஓட்டுகிறவனுக்கு வாழ்க்கப்பட்டு வருவது கதை. பழைய அடுக்குமாடிக் குடியிருப்பில் லிப்ட் வேலை செய்யாத, சுத்தமற்ற, சீனர்கள் ஆதிக்கமும் அதிகாரமும் உள்ள, திருடர்கள் சகஜமாக இருக்கிற, குப்பைகூழங்கள் அம்பாரமாகக் கிடக்கிற, மூத்திரவாடை மூக்கைத் துளைக்கிற, நூலாம்படையும் தூசியும் நிறைந்த பல்வேறு சிக்கல்கள் சூழ்ந்த பத்தாவது மாடியில் கணவனோடு குடி நடத்த வருகிறாள். விசாலமான சூழலிலிருந்து படுமோசமான ஒரு நகரச் சூழலைக் கண்டதும் கணவன் மீது ஏமாற்றம் ஏற்படுகிறது. மூட்டை முடிச்சுகளை வீட்டில் போட்டுவிட்டு கம்பெனிக்கு உடனடியாக வண்டி ஓட்ட ஓட வேண்டிய சூழல். அச்சூழலிலும் மனைவியின் பசியை நினைவில் வைத்து உணவிற்கு ஏற்பாடு செய்துவிட்டு வேலைக்கு ஓடும் ஓட்டம் அவளுடைய வாழ்க்கையில் அர்த்தமுள்ளதாக மாறுகிறது. ஏமாற்றம் மறைந்து அன்பு மலர்கிறது. மலேசியப் புற உலகப் பின்னணி வலுவாக உருவாகி வந்த கதை இது.

தற்போது எழுதும் இளம்தலைமுறை மலேசிய எழுத்தாளர்களில் ஏ. தேவராஜன், இந்திரஜித் இருவரையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். 'நான் பார்த்த கடவுள் செத்துப்போய்விட்டார்', 'உள்ளோசை கேட்காத பேரழுகை' என்கிற தேவராஜனின் கதைகளில் இன்றைய வேறுபட்ட இரண்டு மனப்போக்குகளைக் காட்டுகிறார். கைவிடப்பட்ட நோயுற்ற நாய், பூனைகளைப் பராமரிக்கிற ஒருவனின் கதை 'நான் பார்த்த கடவுள் செத்துப்போய்விட்டார்'. இக்கதையில் வருபவனின் முப்பாட்டன் சயாம் மரண ரயில் வேலையில் மாண்டவர். தோட்டத் தொழிலாளியாக இவன் அம்மா வளர்க்கிறாள். பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு ஜெயிலுக்குச் செல்கிறான். பின் 'கேங்'கில் சேர்ந்து ஒதுங்குகிறான். சிங்கப்பூரில் வேலைக்குச் செல்கிறான். திருமணம் செய்தவள் இவனை விட்டு வேறொருவனுடன் ஓடுகிறாள். விசா இல்லாததால் திரும்ப மலேசிய தோட்டத் தொழிலில் ஈடுபடுகிறான். பழைய அத்தனை தீய செயல்களில் இருந்தும் மனதார விலகிக் கனிவுமிக்க மனிதனாக வாழத்தலைப்படுகிறான். மகத்தான மனிதனாக மாறிய அவனை அவன் செழிக்கச் செய்த தோட்டத்தை விட்டுத் துரத்தி அடிக்கிறான் கங்காணி. கீழ்மையிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு மகத்தான மனிதனாக ஒருவன் மாறினாலும் பொருள் மோகம் உள்ள உலகில் அதற்கு மதிப்பில்லாமல் போய்விடுகிற துக்கத்தை முன்வைக்கிறது.

'உள்ளோசை கேட்காத பேரழுகை' பாலியல் பிறழ்வுகள் நடக்கும் காலச்சூழலைச் சொல்கிறது. தாயின் இரண்டாவது கணவன் (அபு) அவளுடைய பள்ளி செல்லும் மூத்த மகளோடு சந்தர்ப்ப சூழலை பயன்படுத்தி பாலியல் உறவு கொள்கிறான். பள்ளியிலும் வீட்டிலும் பாலியல் தொடர்பான காட்சிகள் அவனை வந்து தாக்குகின்றன. உடன்படிக்கும் மாணவர்கள் கைபேசிகளிலும், பேச்சு பாவனைகளிலும் அதையே காட்டுகின்றனர். வேலை இழந்து வீட்டில் இருக்கும் அம்மாவின் கணவன் தொலைக்காட்சியில் பாலியல் படத்தைப் பார்ப்பதை இவள் பார்க்கிறாள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளை வீழ்த்துகிறான். சிக்கல் பெரிதாக அவள் பள்ளியைவிட்டு வேறு இடத்திற்குச் செல்ல தாய் ஏற்பாடு செய்கிறாள். இன்றைய நவீனக் கருவிகள் மதிப்பீடுகளை, மாண்புகளை நொறுக்கித் தூள் தூளாக்கும் காலச்சிக்கலைச் சொல்கிறது. இந்தக் கதை மலேசியாவில் நடந்தாலும் தமிழ்நாட்டின் இன்றைய நிலையும் அதுதான். உலக முழுவதும் உள்ள நெருக்கடியும் இதுதான்.

இந்திரஜித்தின் 'வீட்டுக்கு வந்தார்' கதை கங்காணியாக இருந்த அப்பா, ஜப்பான்காரனுக்குக் கையாளாக இருந்து சயாம் மரண ரயில் அமைப்பதற்குத் தோட்டத் தொழிலாளியாக இருந்தவனை ஏமாற்றி அடிமையாக அனுப்புகிறார். அந்த ரயில் பாதை அமைத்ததில் உயிர் பிழைத்தவன் கிழவனாக அதே ஊருக்கு வருகிறான். கதை சொல்லியின் அப்பாவை சந்திக்கிறான். பழி வாங்கவோ, வருத்தமோ, துளியும் இல்லாமல் அப்பாவைச் சந்தித்துவிட்டு இரவு சாப்பாடும் உண்டுவிட்டு குழந்தைகளோடு விளையாடி பின் பழைய தோட்டத்திற்குச் செல்கிறான்.

ஒரு துரோகியை (அப்பா) மன்னித்து எந்த களங்கமும் இல்லாமல் அது காலத்தின் நிர்ப்பந்தமாகத் தெளிவுபெற்று வருகிற கிழவன் அசாத்தியமான மனிதத் தன்மையை வெளிப்படுத்துகிறான்.

இப்படியாக இன்றைய மலேசியக் கதைகளில் ஆழமும் செறிவும் தனித்தன்மையும் கொண்ட கதைகள் வருகின்றன. முந்தைய சிறுகதையாசிரியர்களிடம் தனித்துவமான கலை நுட்பங்கள் கூடிவரவில்லை. கருத்துச் சொல்லும் கதைகளாக இருந்தன. இளந்தலைமுறை எழுத்தாளர்கள் சிலரிடம் படைப்புக்கலையின் நுட்பங்களும், புதிய உத்திகளும் பொருந்த கூடி வருகின்றன.



venugopal@thaiveedu.com



# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

6

**சென்ற இதழ்களில்...**

- பொ.ஆ.மு 6-ம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில், வேள்வித் தீயில் ஆடு, மாடு முதலிய உயிரினங்களைப் பலி யிடுதல், வைதீகச் சடங்குகள், சாதியம் முதலிய வைதீகக் கொள்கைகளுக்கு எதிராகச் சில மக்கள் பிரிவுகளும் கொள்கைகளும் உருவாயின. அவைதீகர்கள் எனப்பட்ட இப் பிரிவுகள், தத்துவ சிந்தனை மரபாகவும், மதங்களாகவும் உருமாறின. இந்த வகையில் தோன்றிய மதங்கள் 1. உலகாயதம் 2. ஆசீவகம் 3. பௌத்தம் 4. ஜைனம் ஆகும்.
- இவற்றால், வைதீகர்கள் தம்மை ஒருங்கிணைத்து ஒரு மதமாக உருவானார்கள். பொ.ஆ.பி. 5-ம் நூற்றாண்டளவில் வேதங்கள் முறையாக உருவாகித் தொகுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. 'கர்மா' என்னும் கொள்கையைப் புகுத்தியவர்களே வைதீக மதத்தவர்தான்.
- பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில் ஆசீவகம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்கள் வடக்கே இருந்து தெற்கே பரவத் தொடங்கின.
- இது, அசோகர் காலத்தில் பௌத்தம் தென்னகத்திற்கும் ஈழம் முதலிய நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறும் அசோகச் சக்கரவர்த்தியின் இரண்டாம் பாறைக் கல்வெட்டுத் தகவலுடன் ஒத்துப்போகின்றது.

## ஈழத்தில் தமிழ் பௌத்தர் பற்றி அறிவதற்கான சான்றுகள்:

- ஈழமன்னர் வமிசாவளியை மையமாகக் கொண்ட மகாவம்சம், தீபவம்சம் ஆகிய பாளி நூல்கள்
- தொல்பொருட் சின்னங்கள்
- பிராமிக் கல்வெட்டுக்கள்
- தமிழ் இலக்கியச்சான்றுகள், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, வீரசோழியம், குண்டலகேசி முதலியவை

## மகாவம்சம், தீபவம்சம்:

இது ஒரு வரலாற்று நூல், பொ.ஆ.பி. 3-ம் நூற்றாண்டின் பின் எழுதப்பட்ட வரலாற்று நூல். ஈழத்து வரலாற்றைக் கூறும் சமகால ஆவணமாகக் கொள்ளமுடியாவிட்டாலும் ஈழத்து வரலாற்றை அறிந்துகொள்வதற்குரிய ஒரு அடிப்படை ஆவணமாகக் கொள்ளலாம். இவற்றில் கூறப்படும் தகவல்களின் உண்மைத் தன்மையை 'உவப்பு காழ்ப்பின்றி' ஆராயவேண்டியது வரலாற்று ஆய்வாளர் கடன்.

தேவநம்பியதீசனால் கட்டப்பட்ட மகாவிகாரையில் பௌத்த பிக்குகள் தங்கியிருந்து, பௌத்தம் இந்தியாவில் தோன்றி, வட இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளுக்குப் பரப்பிய வரலாற்றையும், ஈழத்தில் பௌத்த மதம் கொண்டுவரப்பட்டு வளர்ந்த வரலாற்றையும், கௌதம புத்தர் வரலாற்றையும், பௌத்தமதம் மக்களிடையே பரப்பப்பட்டமையையும் கதை கதையாக எடுத்துச் சொன்னார்கள். பௌத்தத்துடன் ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்ட 'பாளி' மொழியில் செய்யுள் வடிவில் இக் கதைகள் 'அட்டகதா' என்னும் பெயரில் பாடப்பட்டு வந்தன.

உலக வரலாற்றில், அவ்வவ் மொழி இலக்கியங்களின் தொடக்கநிலை நாடோடிப் பாடல்களே. சங்கத் தமிழ் இலக்கியங்களும் இத்தகையதொரு தொடக்கநிலையைத்தான் கொண்டிருக்க வேண்டும் என்பது பேரா. கைலாசபதி அவர்களது ஊகம். மக்கள் மத்தியில் பேசப்பட்டு வந்த கதைகள் காலக்கிரமத்தில் பாடற்பொருளாகி நாட்டார் பாடல்களாக ஆகியிருக்கக் கூடிய சாத்தியம் உண்டு.

இத்தகைய நாட்டார் பாடல்கள் காலக்கிரமத்தில், கால வரிசைப்படி ஒருங்கிணைக்கப்பட்டு 'அட்டகதா மகாவம்சம்' என்னும் பெயரால் தொகுக்கப்பட்டது. இக் கதைத் தொகுப்பின் அடிப்படையில் பொ.ஆ.பி. 4-ம் நூற்றாண்டளவில் தீபவம்சமும் பொ.ஆ.பி. 6-ம் நூற்றாண்டளவில் மகாவம்சமும் தொகுக்கப்பட்டன. இதைத் தொகுத்தவர் மகாநாமதேரர் என்பவர் என்றும் அவர் இவற்றைப் பாளி மொழியில் தொகுத்தார் என்றும் கூறப்படுகிறது.

எனவே, இவ்விலக்கியங்கள் வரலாற்று நூல்கள் என்று கொள்ளப்படுமளவுக்கு உண்மைத் தன்மையுடையவை என்று கொள்வது கடினமாக இருந்தாலும் இந் நூல்கள் கூறும் தகவல்களைத் தரம்கண்டு பிரித்தெடுக்கும் அளவுக்கு அறிவி யல் ஆய்வு வளர்ந்திருக்கிறது. இலங்கை வரலாற்றை அறிந்து



கொள்வதற்கு இதுவாவது இருக்கிறதே என்று மகிழ்ச்சிய டைய வேண்டியது தான்.

தமிழ் நாட்டு வரலாற்றைக் கூறுவதற்கு இத்தகையதொரு வர லாற்று ஆவணம் என்று சொல்லக் கூடிய அளவு ஒன்று இல் லைத்தான். ஆனால், எனது அபிப்பிராயப்படி, சங்கத் தமிழ் இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்றவற்றையும் 'இவை போன்று' வரலாற்று ஆவணங்களாகவே கொள்வது பொருத்த மானது. சங்கத் தமிழ் இலக்கியங்கள் கதைகள் ஊடாக வர லாற்றைத் தருகின்றன. ஈழத்தில், 'சங்க இலக்கியங்களை' ஒத்த நாட்டார் பாடல்களை அடியாகக் கொண்டு 'வரலாறு' என்று கூறும் மகாவம்சமும் தீபவம்சமும் தொகுக்கப்பட்டிருக் கின்றன. சங்கத் தமிழ் இலக்கியமான 'பதிற்றுப் பத்தை' இவற் றுடன் ஒப்பிடலாமா ? ஏன் கூடாது. பதிற்றுப்பத்து, பத்துச் சேர மன்னர்களின் வீரம், போர், வெற்றி, கொடை முதலாய சிறப் புக்களைக் கால அடிப்படையில் தொடர்ந்து பாடும் இலக்கி யமாகும். அவ்வாறே, பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை இப்படி எத்தனை. புறநானூற்றுப் பாடல்கள் ஒவ்வொன்றும் தமிழ் மன்னர்களின் பெருமைகளைக் கதைகளாகச் சொல்ல வில்லையா ? எனவே, தமிழிலும் மகாவம்சம், தீபவம்சத்தை ஒத்த நாட்டார் பாடல் தொகுப்புக்கள், இலக்கியங்களாக அறியப்படுகின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

எனது சிறு வயதில், ஏழாம் வகுப்பிற்கு முற்பட்ட காலப்பகுதி யில், நான் அனுராதபுரம் கன்னியாஸ்திரி மடம் என்று அழைக் கப்படும் Holy Family Convent இல் படித்த காலத்தில், தமிழ் புத்தகம் என்றால் அது இலங்கை வரலாற்றைக் கூறும் புத்த கம். மாணவர்களுக்கு விஜயன் இலங்கைக்கு வந்தது, குவே னியை மணந்தது, சிங்களவரது தொடக்கம், துட்டகைமுனு ஒருக்கழித்துப் படுத்திருந்ததற்கான காரணம், 'தெற்கும் மேற் கும் கடலும், வடக்கே தமிழரும் தன்னை நசுக்குகிறார்கள்' என்று தாயாரிடம் கூறியது, எல்லாளன், துட்டகைமுனு ஆகிய இருவரிடையே நடந்த போர் முதலிய கதைகள் மிக நன்றா கவே தெரிந்திருந்தன. சிறுவயதிலேயே குழந்தைகள் மனத் தில் இக் கதைகள் ஆழமாகப் பதிய வைக்கப்பட்டிருந்தன.

வரலாற்று ஆவணங்களாகப் பார்க்கப்பட்ட மகாவம்சம், தீப வம்சம் ஆகிய இரண்டு நூல்களும் இன்று மொழிமாற்றம் செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. தமிழ ருக்கு எதிரான உணர்வுகள், சிங்கள மன்னனான மகாசேனன் (206-302) வரை காணப்படவில்லை. மகாவம்சம், தீபவம்சம் ஆகிய இரு நுல்களும், எல்லாளன், சேனன், குட்டகன் ஆகிய தமிழ் மன்னர்களைப் பொறுத்தவரை அவர்கள் நெறி தவ றாது ஆட்சி செய்தனர் என்கின்றன. வேறு எந்த மன்னரும் இவ்வாறு கூறப்படவில்லை என்கிறார், பேரா. சிவ. பத்மநா- தன். பெரும்பாலும், இக் காலப்பகுதி வேறுபட்ட இன உணர்வு கள் தோன்றியிராத காலமாக இருந்திருக்கலாம். ஆயினும் தற்கால வரலாற்று நூல்கள் எல்லாளன், துட்டகாமினி ஆகி யோரிடையே நடந்த போரைச் சிங்களவர் தமிழரிடையேயான போராகச் சித்தரிக்கின்றன.

மகாவம்சம் எந்த ஒரு பிரிவினரையும் ஆரியர் என்று குறிப்பிட வில்லை. ஆனாலும் விஜயன், பண்டுவாசுதேவன் ஆகியோர் பற்றிய புனைகதைகளை ஆதாரமாகக் கொண்டு இலங்கை யில் ஆரியக் குடியேற்றங்கள் ஏற்பட்டதான கதையை இன் றைய வரலாற்று ஆய்வாளர்கள் வரலாற்று நூல்களில் புகுத்தி யிருக்கிறார்கள்.

மன்னர்கள் ஆட்சிக் கால நிகழ்ச்சிகளைக் கால அடிப்படை யில் குறிப்பிடும் மகாவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்களில் தமிழர் குடியிருப்புக்கள் பற்றிய தகவல்களை எதிர்பார்க்க முடியாது.

## பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருதக் கல் வெட்டுக்களில் தமிழர் பற்றிய செய்திகள்:

வரலாற்று மூலங்களாக நாம் கொள்பவற்றுள் மிகமுக்கியமா னவை கல்வெட்டுக்கள். இன்று கண்டு பிடிக்கப்பட 2000க்கு மேற்பட்ட பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்ட கல்வெட்டுக்க ளில் பெரும்பாலானவை மிகச் சிறியவை. இவற்றில் பெரும்பா லும் அறியப்படும் தகவல்கள்:

- தமிழ் சமூகப் பிரிவுகளின் பெயர்கள்
- பிராகிருத மயமான தமிழ்ச் சொற்கள்
- தொழில்சார் சமூகப் பிரிவுகள் சார்ந்த சமூகக் கட்டமைப்பு.
- உற்பத்தி முறை
- பௌத்தசமயச் செல்வாக்கு

பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் - இவை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன. தென்னிந்தியாவிலிருந்து பரவிய இரும்புக்கால மக்களே முதன் முதலாக உற்பத்தி முறை ஒன்றினை இலங்கையில் பரப்பினார்கள். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகக் கருதப்படுபவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்:

- பயிர்ச்செய்கை
- நீர்ப்பாசனம்
- உலோகவார்ப்பு
- மட்கல உற்பத்தி
- கிராம, நகர அமைப்புக்கள்
- பண்டமாற்று
- சந்தைப்படுத்தல்

மொத்தத்தில் ஈழ நாகரிகத்தின் அத்தியாவசிய அம்சங்கள், தேவைகள் யாவும் தென் இந்தியாவிலிருந்தே இறக்குமதியாகி யிருக்கின்றன. இந்தியாவிலிருந்து குடியேறிய மக்கள் இவற்றைத் தம்முடன் கொண்டுவந்திருக்கிறார்கள். தென்னிந்தியாவின் அண்மைக்கால ஆய்வுக்களமான கீழடி, ஆதிச்ச நல்லூர் முதலிய இடங்களின் கண்டுபிடிப்புக்களுடன் இவை ஒத்துப்போவது நோக்கத்தக்கது. இந்தியாவிலிருந்து கொண்டுவரபட்டு சமகாலத்தில் ஒத்த பண்பாடு நிலவியிருக்கிறது.

இன்று எமக்குக் கிடைத்துள்ள புராதனமான தமிழ்க் கல்வெட்டுக்களில் 90 விழுக்காடுகளுக்கும் அதிகமானவை நாகர் பற்றியவை. அளவில் சிறியவை, பெயர்ச் சொற்களால் ஆனவை. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தான் முதன் முதலாகத் தமிழ் பிராமி எழுத்துக்கள் அடையாளம் காண முடிந்தது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரையிலும் எழுவான் கரையிலும் அவை காணப்பட்டன. அம்மாவட்டத்தின் வட, தென் பகுதிகளில் வயல் வெளிகளிலும் மலைகளிலும் காடுகளிலும் அவை பரந்து காணப்படுகின்றன. இவ்வகையான கல்வெட்டுக்கள் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களிலும் உள்ளன.

கல்வெட்டுக்கள் வரலாற்றுச் சான்றுகளாகவும் பண்பாட்டுச் சின்னங்களாகவும் சிறப்புப் பெறுகின்றன. மலைப் பாறைகளிலும் நூற்றுக்கணக்கான தூண்களிலும் பிராமி வரிவடிவத்தினாலான சொற்கள் காணப்படுகின்றன. கல்லில் பொழிந்த செக்கு, உரல், ஆட்டுக்கல், அம்மி முதலியவற்றிலும் காணப்படுகின்றன. பித்தளை விளக்கு, இரும்புவிளக்கு முதலியவற்றிலும் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.

பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருத மொழிக் கல்வெட்டுக்கள், குகைத் தளங்களில் நீர் வடி விளிம்புகளில் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவை காணப்படும் இடங்கள் பெரும்பாலும் பௌத்தமத பிக்குகளின் தங்குமிடங்களாகவே உள்ளன. தனிமையை விரும்பும் பௌத்த துறவிகள் பெரும்பாலும் மனித நடமாட்டம் குறைந்த இடங்களில் தங்கியிருந்திருக்கிறார்கள். பண்டைக் காலத்தில் தமிழகத்திலும் துறவிகள் மலைக் குகைகளிலேயே பெரும்பாலும் தங்கியிருந்திருக்கிறார்கள் என்பது அறியக்கிடக்கிறது.

இம் மலைக்குகைப் படுக்கைகளைப் பணம் படைத்த செல்வந்தர்கள் பௌத்ததுறவிகளுக்காகப் பொழிவித்திருக்கிறார்கள். இவை யாவும் பௌத்த மதம் தொடர்பானவை. இக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும், அத்தளம் யாருக்காகப் பொழியப்பட்டதோ அத் துறவியின் பெயர், அத் தளத்தைப் பொழிவதற்குப் பணம் கொடுத்து உதவிய உபகாரியின் பெயர், அத்தளத்தைப் பொழிந்த தொழிலாளியின் பெயர் ஆகிய தகவல்களே காணப்படுகின்றன. இவை மூலமாகப் பெறப்படும் தகவல்கள் வருமாறு-

- பௌத்தமதம் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்திருக்கிறது.
- இனவேறுபாடற்ற நிலையில் பௌத்தம் மக்களால் பின்பற்றப்பட்டிருக்கிறது.
- பௌத்தத் துறவிகள் வாழ்விடங்களில் பிராமி வரிவடிவம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
- கல்வி, தொழிலாளர் மட்டத்தில் வழக்கில் இருந்திருக்கிறது.
- தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்பானவை.

ஆதி இரும்புக்காலப் பண்பாட்டு மக்களின் ஈமத்தலங்களிலுள்ள கல்லறைகள், தாழிகள் முதலியவற்றில் தமிழ் மொழி வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஈழத்தில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் பெரும் தொகையான தமிழ்ப் பிராமி வடிவங்களில் அமைந்த தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இலங்கை வரலாற்றிலும் இலங்கைத் தமிழரின் உற்பத்தி பற்றிய சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது என்கிறார் பேரா. சி. பத்மநாதன் அவர்கள்.

இலங்கையில் மூன்றில் ஒரு பாகத்தில் தமிழ்ச் சமூகம் பொது ஆண்டுக்கு முன்னர் இரு நூற்றாண்டுகளிலும் உருவாகிவிட்டது என்பதையும் தொடர்ச்சியான ஒரு நிலப்பகுதியில் தமிழ் மொழி பேசும் மக்கள், வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கி விட்டனர் என்றும் சொல்லும் காலம் வந்துவிட்டது. நாகர் தமிழ் மொழி பேசினார்கள் என்றும் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டை அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் என்றும், பொ.ஆ.மு. 7-ம் நூற்றாண்டு முதல் ஈழத்தில் தமிழ் மொழி பேச்சு மொழியாக நிலைபெற்றுள்ளது என்றும் ஊகிக்கலாம்.

அடுத்த இதழில் தொல்பொருட் சின்னங்கள் மூலம் அறியப்ப டும் தமிழர் வாழ்வியல் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com



# பாரதி பாடிய வீரர் பிரான்

– கிருங்கை சேதுபதி

மகாகவி பாரதியாரின் பன்முகத்தன்மையைத் தரிசனப்படுத்தும் பலரது படைப்புகள் தமிழில் மிகுதியாக வெளிவந்துள்ளன. குறுகிய கால எல்லைக்குள் தோன்றி மறைந்த அவர், தன் இருப்புக் காலத்தில் எடுத்த முயற்சிகளும், முடித்த பணிகளும் நூற்றாண்டுச் செழுமை கொண்டவை. ஆழ, அகலப் பரிமாணங்கள் மிக்கவை.

கவிஞராக, கதாசிரியராக, இதழாளராக, அரசியலாளராக, கட்டுரையாளராக, சொற்பொழிவாளராக, மொழிபெயர்ப்பாளராக, குடும்பத் தலைவராகப் பன்முகப் பரிமாணம் கொண்ட மனிதராக விளங்கிய பாரதிக்குள் இருந்த சித்த மனோபாவம் மொத்தமாக வெளிப்பட்ட இடம் புதுச்சேரிதான். அதனைத் தொட்டுத் துலக்கிய குருமார்கள் அவருக்கு அங்கேதான் கிடைத்தார்கள். அவர்களுள் பாரதியைப் பெரிதாக ஆட்கொண்டு அவருடன் பல்வேறு சூழல்களில் இணங்கி, இணைந்து இருந்து நெறிப்படுத்தியவராகக் குள்ளச்சாமி தெரிகிறார். பாரதி அறுபத்தாறு கவிதைகளிலும், கட்டுரைகளிலும், கதைகளிலும் பாரதியால் குறிப்பிடப்படுகிற குள்ளச்சாமி குறித்துப் பாரதியன்பர்களும் தத்தம் நினைவுப் பதிவுகளில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

குள்ளச்சாமியை அடுத்துப் பாரதியால் குறிப்பிடப்பெறுகின்ற சித்தர்கள், கோவிந்தசாமியும், யாழ்ப்பாணத்துச் சாமியும் ஆவர். அவர்களை, பாரதிக்கு அறிமுகப்படுத்திய பெருமையைத் தனதாக்கிக் கொண்ட குவளையூர்க் கிருஷ்ணமாச்சாரியார், அவரைக் குவளைக் கண்ணன் என்று குறிப்பிட்டு, அவர்தம் புகழினையும் பாரதி, தனது ‘பாரதி அறுபத்தாறு’ நூலில் இசைத்திருக்கிறார்.

இளவயதுமுதலே புதுச்சேரி வாசியான குவளையூர்க் கிருஷ்ணமாச்சாரியார், பாரதியின் வாழ்வில் இன்றியமையாத உறுப்பினர் ஆனவர். ‘1939 செப்டம்பர் முதல் வாரத்தில் சென்னையில் காலமான அவர், ‘படிப்பாளியல்ல. ஆனால், பாரதியிடம் ஊன்றிப்போன பக்தி கொண்டிருந்தார். அவருக்கு வியக்கத்தக்க ஞாபகசக்தி, 1939-லும் இருந்தது. தாம் பாடிய பாடல்களைப் பிரதியெடுக்கச் செய்து, மனப்பாடம் செய்யும்படியும் குவளைக் கண்ணனுக்கு, பாரதி கட்டளையிட்டார். (‘கண்ணன் என் சீடன்’ என்ற பாட்டில் இந்த உண்மைச் சம்பவத்தை பாரதி பாடியிருக்கிறார்.) அக்காலத்தில் தாம் மனனம் செய்த பாடல்களை 1939-களிலும், முப்பதாண்டுகளுக்குப் பிறகும் - பிழையின்றிப் பாடுவார் குவளை. குவளை மகாதீரர்’ என்று வியந்து பாராட்டுவார் ரா.அ. பத்மநாபன். (சித்திரபாரதி, ப.54) காரணம், 1921-ல் சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையின் காலடியில் பாரதி கிடந்த சமயம், தாவி எடுத்துக் காத்தவர் இவர்.

புரட்சி வீரராகப் புகலிடம் தேடி வந்த பாரதியை மகாகவியாகவும் மகானாகவும் மாற்றிய பெருமை புதுச்சேரிக்கு உண்டென்றால், அதற்கு உற்றுழி உதவித்தக்க சீடனாய், அமைந்து நண்பனாய், சேவகனாய், பண்பிலே தெய்வமாய் மிளிர்ந்தவர் குவளைக் கண்ணன் என்பதனையும் நினைவில் கொள்வது அவசியமாகிறது. அதுகுறித்த தேடலாய், இக் கட்டுரை விரிகிறது.

## புதுவைக்கு வந்த புரட்சி வீரர் பாரதி:

பத்திரிகையாளராகவும், தீவிர அரசியலாளராகவும் சென்னையில் இயங்கிவந்த பாரதியை, ஆங்கிலேய அரசு கைது செய்து சிறையில் தள்ள முயற்சிசெய்த காலத்தில் தலைமறைவாகிவிடுகிறார், அவர்.

தன்னொத்த புரட்சியாளர்களையும், தலைவர்களையும் போலச் சிறைசெல்ல விரும்பிய பாரதியை, வெளியில் இருந்து பணி செய்ய வற்புறுத்துகின்றனர், அவர்தம் நண்பர்கள். அதன்படி, புலம்பெயர்ந்து செல்லும் இடம் புதுச்சேரி என்பதைத் தெரிவு செய்துகொண்டாலும் முன்பின் அறிமுகமில்லாத அவ்வூருக்கு, ஆங்கிலேயக் காவல் அதிகாரிகள், ஒற்றர்கள் அறியாமல் செல்வது எப்படி ?

யாருக்கும் தெரியாதவண்ணம், சைதாப்பேட்டையில் ரயில் ஏறிப் புதுவைக்குப் போனார் என்று செல்லம்மாளும், பாரதியின் நண்பர்களும் சொல்கிறார்கள். ஆனால், அவர் படகேறிப் பயணம் செய்து மரக்காணம் வந்து இறங்கிப் புதுவையில் புகுந்தார் என்பது நீதியரசர் தாமோதரராவ் தரும் வரலாற்றுப் பதிவு. இவர், டாக்டர் நஞ்சுண்டராவின் பேரர்.

## படகில் பயணம் செய்து புதுவை வந்த பாரதி:

நள்ளிரவில் பக்கிங்காம் கால்வாய் வழியாக, சரக்கேற்றி வரும் படகின் அடித்தளத்தில் படுத்துக்கொண்டு பயணம் செய்து வந்த பாரதியின் தோற்றம் பக்கிரி போல் இருந்தது. அதற்கு அவர் உடுத்திய பழைய கோட் உதவியது. ஆபத்து



வந்தாலும் அரணாகிப் பாதுகாக்க, இராமன் நாயர் என்னும் காப்பாளரை உடன் அனுப்பிப் பத்திரமாக ஊர் சேர்த்துவரச் சொன்ன டாக்டர் நஞ்சுண்டராவ், இராமன் நாயர் திரும்பி வந்து உறுதிப்படுத்திய பின்னரே உறங்கப் போனார் என்பதை உடனிருந்து பார்த்த அனுபவத்தை, தாமோதரராவ் தன் நாட்குறிப்பில் பதிவிடுகிறார். (காண்க. சேதுபதி, 'பாரதி தேடலில் சில புதிய பரிமாணங்கள்', என்.சி.பி.எச். வெளியீடு, 2016)

ஒருவழியாகப் புதுவை வந்து சேர்ந்த பாரதி, பெருமாள் கோயில் தெருவில் சிட்டி குப்புசாமி ஐயங்கார் இல்லத்திற்குச் சென்று தான் சென்னையில் இருந்து கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்து அறிமுகமாகி, அவர் இல்லத்தில் இரு நாட்கள் தங்கியிருந்திருக்கிறார். அதற்குள் சென்னையில் இருந்து தப்பிய பாரதி புதுவை சேர்ந்துவிட்டார் என்பதை அறிந்த சென்னைக் காவலர்கள் பாரதி இருப்பிடம் அறிந்து அவர்க்கு அடைக்கலம் கொடுத்த ஐயங்காரைப் பலவிதமாகப் பயமுறுத்தத் தொடங்குகின்றனர். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்த ஐயங்காருக்குச் சங்கடம் தராமல் வெளியேற வழிதேடி, பாரதி தவித்த போதுதான் குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் பாரதியின் வாழ்வில் வந்து ஒன்றுகிறார்.

### பாரதி – குவளைக்கண்ணன் முதற்சந்திப்பு:

துணை வேறின்றிப் புதுவையில் புகுந்த பாரதி, பெருமாள் வீதியில் உள்ள ஒரு வீட்டின் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார். உடுப்பும் தோற்றமும் அவர் அவ்வூருக்கு அந்நியர் என்பதை உறுதிப்படுத்திவிடுகின்றன. அந்த வீடு, குவளைக் கிருஷ்ணமாச்சாரியாரின் மைத்துனியார் வீடு. குவளைக் கிருஷ்ணன் தன் மாமனார் வீடு சென்று திரும்புகிறபோது, அவ்வீட்டின் மேலண்டைப் பக்கமாக இருக்கும் மைத்துனியார் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கும் இப் புதியவரை, 'யார் ?' என வினவுகிறார். தன் பெயர் எதுவும் சொல்லாமல், தான் சென்னைவாசி என்றும், புதுவைக்குப் புதிதாக வந்திருப்பதாகவும் மட்டும் சொல்லியிருக்கிறார் பாரதி.

1908-ம் ஆண்டு ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் நிகழ்ந்த பாரதியார் உடனான இச் சந்திப்பினைப் பின்னர் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு நினைவுகூரும் குவளைக் கிருஷ்ணன், 'ஸ்ரீ.சி. சுப்பிரமணிய பாரதியாரை நான் மகான் என்று தெரிந்துகொள்ளாமலே முதன்முதல் தரிசனம் செய்ய நேர்ந்தது' என்று குறிப்பிடுகிறார். அதன் பின்னர் மேற்கண்டவாறு பாரதியுடன் கேட்டுப் பெற்ற தகவலை அடுத்து சுமார் ஒரு மணிநேரத்திற்குக் குறையாமல் அவர்களது உரையாடல் நீண்டிருக்கிறது.

‘சுமார் 30 வருஷங்களுக்கு முன் நடந்த சம்பாஷணைகள் எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வரவில்லை. சம்பாஷணை யின் இடையே, ‘இந்த ஊரில் ‘இந்தியா’ பத்திரிகையை யார் வரவழைக்கிறார் தெரியுமா ?’ என்று அவர் என்னைக் கேட்டார். எனக்குத் தெரிந்த ஒருவர் வரவழைப்பதாகச் சொன்னேன். ‘அவரைத் தமக்குக் காட்ட முடியுமா ?’ என்று கேட்டார்.

‘கூட வந்தால் காட்ட முடியும்’ என்றேன். அவர் உடனே ஆவலு டன் என்னுடன் வந்தார். அப்போது சுந்தரேசய்யர் வீட்டில் இருக்கிறாரா என்று பார்க்கப்போனேன். சுந்தரேசய்யர் ஆபீசி லிருந்து வீட்டிற்கு இன்னும் வரவில்லையென்று அவர் வீட்டில் சொல்லக் கேட்டேன். புதுச்சேரியில் மணிலாக்கொட்டை வியாபாரிகளில் ஒருவரான ஸ்ரீ எஸ். குப்புசாமி அய்யர் கிடங் கில் இந்தச் சுந்தரேச ஐயருக்குக் கணக்கு வேலை. நான் சந் தித்த அந்தப் புதியவரும் நானுமாக மேற்படி கிடங்குக்குப் போனோம். கிடங்குக்கு அருகில் வீதியில் அவரை நிறுத்தி விட்டு நான் தனியாகச் சந்தரேசய்யரிடம் போய், ‘ஐயா, தங்க ளைச் சென்னையிலிருந்து ஒருவர் பார்க்க வந்திருக்கிறார்’ என்று சொன்னேன். சுந்தரேசய்யர், ‘அவர் எங்கே இருக்கி றார் ?’ என்று என்னைக் கேட்டார்.

‘தாங்கள் என்னுடன் வெளியே வந்தால் அவரைப் பார்க்க லாம்’ என்று சொன்னேன். உடனே அவர் ஆபீசை விட்டு என் பின்னால் வந்தார்.

நான் சுந்தரேசய்யருக்கு என்னுடன் வந்தவரைக் காட்டினதும் இருவரும் தனியாகத் தூரத்தில் போய், ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அன்று இரவு நான் அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றேன். பிறகு இரண்டு மூன்று தினங்கள் கழித்துச் சுந்தரேசய்யரை நான் பார்த்தபோது, ‘எங்கே ஐயா நான் தங்களிடம் அழைத்து வந்த கனவான் ?’ என்று கேட்டதற்கு, தன்னுடைய ஆதரவில் ஒரு வீட்டில் அவர் இருப்பதாகச் சுந்தரேசய்யர் சொன்னார்.

எனக்கும் அவருக்கும் சிநேகிதம் ஆரம்பித்து ஓர் வருஷத்திற் கும் பிறகுதான், அவர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் என்றறிந் தேன். ஸ்ரீ சுந்தரேசய்யர் ஆதரவில் புதுவையில் ஆறு மாதம் அல்லது ஒரு வருஷம் இருந்தபின், சென்னை சர்க்கார் ஹிம் சையால் நின்றுபோன ‘இந்தியா’ பத்திரிகையைப் புதுவையில் நடத்த அவர் முயன்றார். பிறகுதான் பாரதியாரின் சென்னை நண்பரான ஸ்ரீ ஆச்சாரியார் மூலம் ஏற்பாடுகள் நடைபெற்றன’ என்று குவளைக் கிருஷ்ணன் குறிப்பிடுகிறார். (ரா.அ. பத்ம நாபன், பாரதியைப் பற்றி நண்பர்கள், பக்.63-64)

இவ்வாறு, தனிநபராய்ப் புதுவைக்கு வந்த பாரதியை முதன் முதலில் சந்தித்த குவளைக் கண்ணன், பாரதியாரின் குடும் பத்தில் ஒருவராகவே திகழ்ந்த தன்மையை, பாரதியின் மனைவி செல்லம்மா பாரதி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

‘எங்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள் நெருக்கடியான சந்தர்ப்பங்கள், ஏற்பட்டதுண்டு. அந்தச் சம யங்களில், நாங்கள் நம்பிக்கையெல்லாம் இழந்த பிறகுங் கூட, யாராவது ஒரு நண்பர் சமய சஞ்சீவியாகத் தோன்றி, ஒத் தாசை செய்வது சாதாரணமாக நடந்துவந்தது. அம்மாதிரியே, பாரதியார் மேற்கண்ட விதம் பெரிய சங்கடத்துக்குள்ளாகியி ருந்தபோது, அகஸ்மாத்தமாகக் குவளை கிருஷ்ணமாச்சாரி யார் எங்கிருந்தோ வந்து தோன்றினார். பாரதியாருடன் கலந்து பேசி நிலைமையைத் தெரிந்துகொண்டார். மற்றுமொரு நண்ப ரான சுந்தரேசய்யரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வேறு வீட்டிற்கு பாரதியார் குடிபுக சுந்தரேசய்யரால் ஏற்பாடு செய்



யப்பெற்றது. இருள் நீங்கிற்று. ஒளி பிரகாசித்தது. இந்தச் சம் பவத்தைத்தான், ‘கண்ணன் என் சேவகன்’ என்னும் பாட்டில், ‘எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி நான் என்றான்’ என்று சந் தோஷமாகக் கூறியிருக்கிறார் பாரதியார்.’

### பாரதி பாடிய அறுபத்தாறு:

இப்படி பாரதி வாழ்வில் ஓர் இன்றியமையாத அங்கத்தினராக வந்து ஒன்றிய குவளைக் கிருஷ்ணனைக் கண்ணனாகவே கண்டு போற்றிய பாரதியின் உளப் பாங்கைக் கண்ணன் பாட் டில் குறிப்பாகக் காணலாம். அந்நூலின் தோற்றத்திற்கும்,

மேலும் சில பாடல்களின் பிறப்பிற்கும் குவளைக் கண்ணன் ஒருவகையில் காரணராகத் திகழ்ந்திருக்கிறார்.

இளவயது முதலே புதுவையில் வாழ்ந்த குவளைக் கண்ணன், கலவை பள்ளியில் பத்தாண்டுகள் பயின்றவர். அப்பள்ளித் தலைமை ஆசிரியர் உதவியினால், 'இந்தியா' இதழைத் தொடர்ந்து வாசித்து வந்தவர். தனக்கும் பாரதியாருக்கும் இடையிலான அனுபவங்களை அவ்வப்போது எழுதிவந்திருக் கிறார். 1938-ம் ஆண்டு வெளியான தினமணி ஆண்டு மலரில், 'எனது முதல் சந்திப்பு' என்ற தலைப்பின் கீழ், குவளை எழுது கிறார்:

'ஒருநாள் பாரதியார், 'கிருஷ்ணா, இந்த நாலாயிரம் எத்தனை ஆழ்வார்கள் சேர்ந்து பாடியது?' என்று கேட்டார். அதற்கு நான், 'பதினொரு ஆழ்வார்களும், ஆண்டாளும் திருவரங்கத் தமுனாரும் சேர்ந்து பாடியது நாலாயிரத் திவ்வியப் பிரபந் தம்' என்றேன்.

'பன்னிரண்டு பேர் சேர்ந்து நாலாயிரம் பாடினார்களா? நான் ஒருவனே ஆறாயிரம் பாடுகிறேன் பார்' என்றார். உடனே நான், 'உங்கள் ஒருத்தரால் ஆறாயிரம் பாட முடியாது. ஏனெ னில், கலி முற்ற முற்ற, மனிதனுக்கு ஆயுசு குறைவு. கலி முற் றிய காலத்தில் சிறிய மனிதர்கள் நாம். ஆகையினால் முடி யாது' என்றேன். 'நான் இவ்வாறு சொல்வதனால் உங்களுக் குப் புத்தி குறைவென்று நான் எண்ணுவதாக நீங்கள் நினைக் கக்கூடாது' என்றும் சொன்னேன்.

'நல்லது பார்' என்ற அவர், 'பாரதியார் ஆறாயிரம்' என்ற நூல் எழுத ஆரம்பித்தார். இதனிடையில், குடும்பக் கவலை, சச்ச ரவு, வறுமை, வியாதி, முடிவில் மரணம். இவற்றினிடையே அறுபத்தாறு பாடல்களே பூர்த்தியாயின. அவர் பாட விரும் பிய ஆறாயிரம் பாடல்களின் சாரமும், அர்த்தமும் அறுபத் தாறு பாடல்களில் பொதிந்துகிடப்பதாக அடியேன் அபிப்பி ராயம். அவர் காலத்திற்குப் பின் இதை அச்சிட்டவர்கள் இந்த நூலுக்கு, 'பாரதி அறுபத்தாறு' என்று பாடல்களைக் கணக் கிட்டுப் பெயரிட்டு அச்சிட்டார்கள் போலும்.' (ரா.அ. பத்மநா- பன், பாரதியைப் பற்றி நண்பர்கள், பக்.79-80)

உண்மைதான். பாரதியின் கையெழுத்துப் பிரதியாக, இத னைக் கண்டு 1923-ம் ஆண்டு, பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையில் பெயர் சூட்டி வெளியிடப்பெற்றிருக்கிறது. 'முதற் காண்டம்' என்று இப்பகுதியைக் குறித்த பாரதியார் மேலும் தொடர்ந்து எழுதத் திட்டமிட்டிருந்தது தெரியவருகி றது. இடையில் ஏற்பட்ட நெருக்கடிகளை, குடும்பக் கவலை, சச்சரவு, வறுமை, வியாதி என ஓரிரு சொற்களில் குவளைக் கண்ணன் குறிப்பிட்டிருப்பது மிகச் சரியான உண்மை. இந்த நூல் எழுதப்பட்ட காலத்தில் நேர்ந்த நெருக்கடிகள், சோத னைகள், அவற்றிற்கிடையே பாரதியார் தனக்குத்தானே விதித்துக்கொண்ட மௌன விரதம், பயன்படுத்தத் தொடங் கிய லாகிரிப் பொருள்கள் முதலியவற்றை, முன்னர் வெளி வந்த 'மகாகவி பாரதியாரும் மகான் குள்ளச்சாமியும்' குறித்த கட்டுரைகளில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

குள்ளச்சாமி குறித்த தகவல் எதுவும் சொல்லாத குவளைக் கண்ணனுக்கு, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி ஆகி யோருடன் நல்ல தொடர்பு இருந்திருக்கிறது. பாரதியின் வாழ் வில் இம் மகான்களைக் கொண்டுவந்து இணைத்த பெருமை யும் குவளைக் கண்ணனைச் சார்கிறது. அது கருதியே, 'குருக் கள் ஸ்துதி' என்று 'குள்ளச்சாமி புகழ்' பாடிய பாரதி, பின்னர், 'கோவிந்த ஸ்வாமி', 'யாழ்ப்பாணத்துச் சுவாமி' ஆகியோரின் புகழ் பாடி, குவளைக் கண்ணனின் புகழினையும் பாடுகிறார்.

### பாரதி பாடிய குவளைக் கண்ணன் புகழ்:

*'... பார்மேல்*

***கனத்த புகழ்க் குவளையூர்க் கண்ணன் என்பான்***
***பார்ப்பாரக் குலத்தினிலே பிறந்தான் கண்ணன்***
***பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டான்***
***தீர்ப்பான சுருதிவழி தன்னில் சேர்ந்தான்***

***சிவனடியார் இவன்மீது கருணை கொண்டார்.***
***மகத்தான முனிவரெலாம் கண்ணன் தோழர்;***
***வானவர் எல்லாம்கண்ணன் அடியார் ஆவார்;***
***மிகத்தானும் உயர்ந்ததுணி வுடைய நெஞ்சின்***
***வீரர்பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான்'***

என்று அடையாளப்படுத்துகிறார். முற்றுப் பெறாத இந்நூலில் இன்னும் என்னென்னவெல்லாம் பாரதி பாட நினைத்திருந் தாரோ, நாம் அறியோம். அப்பாடல்கள் வளர்ந்திருந்தால், அவற்றில் குவளைக் கண்ணன் குறித்தும் கூடுதல் தகவல்கள் இருந்திருக்கலாம். அதன்வழி மேலும் பல அரிய அனுபவங் கள் அவற்றில் பதிவாகி இருக்கலாம். ஆனால்...?

வரலாற்றிற்குத்தான் இந்த 'ஆனாலுக்கு' இடம் இல்லையே. ஆனாலும் தேடுதலை விடமுடியுமா, என்ன? தேட விரியும் செய்திகளின் ஊடாக, பாரதியின் சித்தர் திருத்தோற்றம் மேலும் துலக்கமாகும் அல்லவா? அதற்குக் குவளைக் கண் ணன் பாத்திரம் இன்றியமையாததாகிறது.

'எங்கிருந்தோ வந்து' பாரதியின் புதுவை வாழ்வில் இணைந் துகொண்ட குவளைக் கண்ணன், பாரதியாரின் சென்னை வாழ்விலும் துணையாகி நின்றது அதிசயம்.

வழிப்போக்கனாய் வந்து பாரதியின் சீடனாகி, குருநிகர்த்த தெய்வதம் ஆகி மிளிர்ந்த குவளைக் கண்ணனை, பாரதியின் கண்ணன் பாட்டில் ஒருசில இடங்களில் குறிப்பாக - கண்ணன் என் சீடன் பாடலிலும், பாரதி அறுபத்தாறில் இரு பாடல்களி லும் வெளிப்படையாகக் கண்டுணர முடியும். ரா.அ. பத்மநாப னின் 'சித்திர பாரதி'யில் முகம் காட்டும் குவளைக் கண்ண னின் அகத்தை, பாரதியின் பாடல்களே சிறப்பாகச் சித்திரப்ப டுத்துகின்றன. அவ்வாறே, பாரதியிடம் துலங்குகிற மகாமே தைத்துவத்தைத் தனது கட்டுரைகளில், பேட்டிகளில் ஆங் காங்கே குவளைக் கண்ணனும் சொல்லிச் செல்கிறார். அவற் றையெல்லாம் ஒருசேரத் தொகுத்துப் பார்ப்பது, பாரதியின் சித்தர் திருத்தோற்றத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் என்பது உறுதி.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் ஒன்பதாவது படலமாகிய பள்ளி படைப்படலத்தில் கம்பரின் கவிவண்ணம் காட்டும் செய்யுள்கள் சிலவற்றை இரண்டு பகுதிகளாக எடுத்துச் சுவைக்கக் கொடுத்திருந்தேன். இந்தக் கட்டுரையில் அயோத்தியா காண்டத்தின் 10-வது படலமாகிய ஆறுசெல் படலத்திலுள்ள சில செய்யுள்களை எடுத்து வருகிறேன். பரதன் இராமனைக் காணச் சித்திரகூடத்திற்குப் பயணமாகப் புறப்படும் செய்திகளைச் சொல்வது ஆறுசெல்படலம். சில பிரதிகளில் இது ஆற்றுப்படலமென்றும், பரதன் எழுச்சிப் படலமென்றும் காணப்பட்டாலும், பல ஏட்டுப்பிரதிகளில் ஆறுசெல் படலம் என்றே காணப்படுவதாலும், ஆறு என்பதற்கு வழியெனப் பொருள் படுவதால் இராமன் சென்ற வழியே அவனைத் தேடிப் பரதனும் செல்வதால். இப்பெயர் பொருத்தமாகக் கொள்ளப்படுகிறது. வசிட்டமுனிவனும், அமைச்சர்களும் பரதன் இருக்குமிடம் வந்து அவனை வணங்கிச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

> **கதிரவனில்லாத பகலையும்,**
> **முழுநிலவு இல்லாத இரவையும்,**
> **உயிரில்லாத உடலையும்**
> **அரசனில்லாத நாட்டுக்கு**
> **உவமையாகக்**
> **கம்பர் கூறியிருக்கும் சிறப்பை**
> **இச்செய்யுளில் காண்கிறோம்.**

***சுற்றினர் இருந்துழிச் சுமந்தி ரப்பெயர்ப்***
***பொற்றடந் தேர்வலான் புலமை யுள்ளத்தான்***
***கொற்றவற் குறுபொருள் குறித்த கொள்கையான்***
***முற்றுணர் முனிவனை முகத்து நோக்கினான்.***

*கம்ப. அயோத்தி. 954*

வசிட்ட முனிவனும், அமைச்சர்களும் பரதனைச் சூழ்ந்திருக்க, அறிவிலே புலமை மிக்கவனும், தேரோட்டுவதில் வல்லவனுமாகிய சுமந்திரன் பரதனிடமுள்ள எண்ணத்தைக் குறிப்பினால் உணர்ந்த கொள்கை உடையவனாய், அக்கருத்தைப் பலரும் அறியப் பரதன் வாயாலேயே வெளிப்படுத்துமாறு செய்வதற்காகப் பரதனை அரசாட்சியை ஏற்று நடத்துமாறு பணிக்க வேண்டுமென்ற குறிப்புடனே முற்றும் அறிந்த வசிட்ட முனிவனின் முகத்தை நோக்கினான். சுமந்திரனின் குறிப்புணர்ந்த வசிட்டன் பரதனை நோக்கிப் பலவாறு சொல்லுவான்.

***வள்ளுறு வயிரவாள் அரசில் வையகம்***
***நள்ளுறு கதிரிலாப் பகலும் நாளொடும்***
***தெள்ளுறு மதியிலா இரவும் தேர்தரின்***
***உள்ளுறை உயிரிலா வுடலும் ஒக்குமே***

*கம்ப. அயோத்தி. 958*

ஆராய்ந்து பார்க்குமிடத்து உறையுட் பொருந்தும் தன்மையுள்ள உறுதியான வாட்படையைக் கொண்டுள்ள அரசனை பெற்றிராத வையகம், யாவரும் விரும்புகின்ற கதிரவனைப் பெற்றிராத பகல் பொழுதையும், விண்மீன்கள் சூழ்ந்திருக்கக் குளிர்ந்த ஒளிக்கதிர்களை வீசும் முழுமதியில்லாத இரவுப் பொழுதையும், உள்ளே உறைந்திருக்கின்ற உயிரில்லாத உடலையும் ஒத்ததாகும் என்று அரசனில்லாது அயோத்தி இருக்கும் நிலையை வசிட்டன் பரதனுக்கு உணர்த்துகின்றான். கதிரவனில்லாத பகலையும், முழுநிலவு இல்லாத இரவையும், உயிரில்லாத உடலையும் அரசனில்லாத நாட்டுக்கு உவமையாகக் கம்பர் கூறியிருக்கும் சிறப்பை இச்செய்யுளில் காண்கிறோம். அரசனில்லாத நாடு எப்படியிருக்கும் என்று பலவாறு எடுத்துரைத்த வசிட்ட முனிவன் மேலும் கூறுவான்.

***உந்தையோ இறந்தனன் உம்முன் நீத்தனன்
வந்ததும் அன்னைதன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரரசு அளித்தி! அன்னது
சிந்தனை எமக்கெனத் தெரிந்து கூறினான்***

*கம்ப. அயோத்தி. 962*

மைந்தனே! அரசனாகிய உன்தந்தையோ இறந்துவிட்டார். உன்முன்னவனான இராமனும் காடு சென்றுவிட்டான். உன்தாயாகிய கைகேயியின் வரத்தினால் உனக்குக் கிடைத்திருக்கின்ற எல்லையில்லாத பெருமைமிக்க இந்தப் பேரரசை நீ கட்டிக்காக்க வேண்டும். இது குறித்தே யாம் இங்கு கூடியுள்ளோம். அயோத்தியின் அரசாட்சியை ஏற்று நடத்துவாயாக என்று வசிட்டன் வேண்டுகின்றான். உன் தாயால் வேண்டப்பட்டு வாய்மை தவறாது இந்த நிலத்தை உனக்குக் கொடுத்துவிட்டு உன் தந்தை இறந்து போயினான். இராமனும் அறத்தின் வழிநின்று தந்தையின் கட்டளையை ஏற்றுக் கானகம் சென்றான். இவ்வாறு அவர்களின் பெருமையையும் எடுத்துரைத்து உன்தாயின் வரத்தாற் பெற்றதாயினும் அவர்கள் இல்லாததாலே இந்நாட்டை ஆளும் கடமை உனக்கு இருக்கின்றது. என்று பரதனுக்கு முனிவன் வாயிலாக அறநெறி முறைமையைக் கம்பர் கூறுவதைக் காண்கிறோம்.

***நடுங்கினன் நாத்தடுமாறி நாட்டமும்
இடுங்கினன் மகளிரின் இரங்கும் நெஞ்சினன்
ஒடுங்கிய உயிரினன் உணர்வு கைதரத்
தொடங்கினன் அரசவைக்கு உள்ளம் சொல்லுவான்.***

*கம்ப. அயோத்தி. 964*

வசிட்ட முனிவன் சொன்னதைக் கேட்டுப் பரதன் நஞ்சுண்டவனைப்போல் நடுநடுங்கி, நாக்குத் தழுதழுத்து, கண்களும் சோர, பெண்களைப் போல இரங்கும் நெஞ்சினனாக, உயிரும் ஒடுங்கப்பெற்று, மூர்ச்சித்துப் பின் தெளிந்து அரசவைக்குத் தனது உள்ளத்திலுள்ளதைச் சொல்லத் தொடங்குகின்றான்.

***மூன்றுல கினுக்கொரு முதல்வ னாய்முதல்
தோன்றினன் இருக்கயான் மகுடம் சூடுதல்
சான்றவர் உரைசெயத் தரும மாயதே
ஈன்றவள் செய்கையில் இழுக்குண் டாகுமோ.***

*கம்ப. அயோத்தி. 965*

மூன்றுலகுக்கும் முதல்வனாய் என் முன்னவனாகிய இராமன் இருக்க நான் மகுடம் சூடுதல் தருமமென்று சான்றோரும் சொல்கிறீர்களே! இவ்வாறாயின் என்தாயான கைகேயியின் செய்கை இழுக்குள்ளதாகுமோ? மூத்தவன் இருக்கையில் நான் முடிபுனைதல் அறமேயென்று வசிட்டர் சொல்வாரானால், தன்தாயின் செயலும் தவறாகாதே என்று தன்னை அரசுபுரியுமாறு கூறும் வசிட்டரைப் பழிப்பதுபோல பரதன் கூறுவதாகக் கம்பர் மொழிவதைக் காண்கிறோம்.

***நன்னெறி யென்னினும் நானிந் நானிலம்
மன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக்கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூட்டல் கண்டிரால்.***

*கம்ப. அயோத்தி. 968*

ஒருவேளை நான் அரசு புரிவது நன்நெறியே என்று யார் கூறினாலும் நான் இவ்வரசை ஏற்று இந்நாட்டிலுள்ள உயிர்களைப் பாதுகாக்கும் பாரத்தைத் தாங்கிக்கொண்டிருந்து வாழ உடன்படேன். இராமனைக் காட்டிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து தொன்று தொட்டு வந்த அறத்தின் வழியே முடிசூட வைப்பேன்.| என்று கூறிய பரதன் இராமன் அதற்கு இணங்காவிடின் அவனுடன் காட்டிலே வசிப்பேன். இல்லையெனில் உயிர்துறப்பேன் என்று மேலும் கூறித் தனது கொள்கையில் உறுதியாக நிற்கிறான். பரதன் இவ்வாறு கூறக்கேட்ட சபையோர் மகிழ்வுற்று அவனை வியந்து நிற்கிறார்கள். பரதன் சத்துருக்கனை அழைத்து இராமனை அழைத்து வரச் செல்வது பற்றி முரசறைந்து படையையும் புறப்படத் தயார் செய்யுமாறும் பணிக்கின்றான்.

***எழுந்தது பெரும்படை ஏழு வேலையின்
மொழிந்தபே ரூழியின் முழங்கி முந்தெழ
அழிந்தது கேகயன் மடந்தை ஆசைபோய்க்
கழிந்தது துயர்நெடுங் காதல் தூண்டவே.***

*கம்ப. அயோத்தி. 976*

முன்னர் நூல்களிற் கூறப்பட்டதைப் போன்று ஏழு பெருங்கடல்களும் எழுந்ததைப்போலப் பெரும்படையொன்று கிளர்ந்தெழுந்து பெரும் ஆரவாரத்துடன் முன்னே புறப்படக் கைகேயியின் ஆசையானது நிலையழிந்து போயிற்று. அந்நாட்டினர் இராமன் மீது கொண்டிருந்த அன்பு தூண்டப்பெற்று இராமன் திரும்ப வருவான் என்ற எண்ணத்தில் அந்நாட்டினரது துயரமும் நீங்கியது என்பது செய்யுளின் பொருள். இராமனை அழைத்துவரப் பரதன் செல்லப்போவதையும், பெரும்படை ஊழிக்காலத்துக் கடல்போல் பொங்கியெழுந்து புறப்பட்டு விட்டதையும் உணர்ந்து, தன்மகன் அரசாட்சிசெய்வதைக் காணலாம் எனக் கைகேயி கொண்டிருந்த எண்ணமும் அழியப்பெற்றாள் என்றும், யாவரும் புறப்படும்பொழுது, இராமன் மீதுள்ள அன்பு தூண்டப்பெற்றுத் தனது செயலுக்காக கழிவிரக்கம்கொண்டு துயர் நீங்கியவளாக இராமனை அழைத்துவருதற்கு அவளும் முன்னே சென்றாள் என்றும் சில உரையாசிரியர் இச்செய்யுளுக்குப் வேறு பொருள் காண்பர். இந்தச் செய்யுளில் தமிழின் சிறப்பு எழுத்தான ழகரத்தையுடைய சொல்லாட்சி மிகுந்து காணப்படுகின்ற சிறப்பையும் காண்கிறோம். இராமனை அழைத்து வருவதற்காக பெரும்படையும், அந்நகரத்து மக்களும் புறப்பட்டுச் சென்றதனைப் பல செய்யுள்களிலே கம்பர் வருணனை செய்கின்றார்.

***பண்ணின புரவிதேர் பகடும் பண்டியும்
மண்ணினை மறைத்தன மலிந்த மாக்கொடி
விண்ணினை மறைத்தன விரிந்த மாத்துகள்
கண்ணினை மறைத்தது கமலத் தோனையே.***

*கம்ப. அயோத்தி. 977*

அணிவகுத்துக் குதிரைகளும், தேர்களும், யானைகளும், வண்டிகளும் புறப்பட்டுச் செல்வதால் இம்மண்ணுலகை வெற்றிடமில்லாதவாறு மறைத்துக்கொண்டன. படைவீரர்கள் கைகளிலே ஏந்தியிருந்த பெரிய கொடிகள் விண்ணையே மறைத்தன. இவையெல்லாம் செல்லும்போது எழுந்த தூளிப் படலம் தாமரையில் அமர்ந்திருப்பவனாகிய பிரமனின் கண்க

ளையே மறைத்தன என்பது செய்யுளின் பொருள். இராமனை அழைத்துவரப் புறப்பட்டுச் சென்ற படையணிகள் மக்கள் கூட்டம் ஆகியவற்றின் மிகுதியைக் கம்பர் இவ்வாறு சிறந்த சொல்லாட்சியுடன் தொடர்பு உயர்வுநவிற்சி அணிநயம் பொருந்தக் கூறியுள்ளது சிறப்பு மிக்கது. எழுந்து புறப்பட்ட பெரும்படையுடன், அந்நாட்டு ஆடவரும் மகளிரும் பெருங் கூட்டமாகப் புறப்பட்டுச்சென்ற காட்சிகளைப் பல செய்யுள்க ளில் வருணித்த கம்பர் அவையெல்லாம் எவ்வித அலங்கா ரங்களும், அழகூட்டும் ஒப்பனைகளும், அணிகலன்களு மற்று, பொலிவும், களிப்புமற்று மிக எளிமையாகக் காணப்பட் டதாகக் கூறுகிறார்.

***கோமகன் பிரிதலிற் கோல நீத்துள***
***தாமரைச் செல்வியும் தவத்தை மேவினாள்***
***காமனும் அருந்துயர்க் கடலில் மூழ்கினான்***
***ஆமென நிகழ்ந்ததவ் வளவில் சேனையே.***

*கம்ப. அயோத்தி. 993*

அரசகுமாரனாகிய இராமன் நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்றதனால் அழகு கெட்டுள்ள தாமரை மலரிலிருந்து திரு மகளும் தவம் செய்ய விரும்பி அவ்விடத்தை நீங்கிவிட்டா ளென்றும், மகளிர்க்கும், ஆடவர்க்கும் காதல் நோயை விளை விக்கவல்ல மன்மதனும் கடப்பதற்கரிய துன்பக் கடலிலே மூழ்கிவிட்டான் என்றும், கண்டோர் கருதும்படி அச்சேனையா னது பொலிவும், உள்ளக் களிப்பும் அற்றதாக இருந்தது என் றும் செய்யுள் பொருள் தருகிறது. செல்வச் சிறப்பும் ஆடவ ரும் மகளிரும் கூடிக் களித்தலுமின்றி அச்சேனை பொலிவற் றிருந்ததைக் காட்சிப்படுத்தத் தற்குறிப்பேற்றத்துடன் கம்பர் இச்செய்யுளை வடித்துள்ளார். மேலும்,

***அலைநெடும் புனலறக் குடித்த லால்அகம்***
***நிலைபெற நிலைநெறி நிறுத்த லானொடு***
***மலையினை மண்ணுற வழுத்த லால்தமிழ்த்***
***தலைவனை நிகர்த்ததத் தயங்கு தானையே.***

*கம்ப. அயோத்தி. 995*

இச்சேனை செல்லும் வழியிடையேயுள்ள அலைகளையுடைய நதிநீரைக் குடித்து வற்றச் செய்ததாலும், பூமி ஒருபுறந்தூக் காது நிலைபெறும்படி நிலையான முறைமையில் நிற்கச் செய்ததாலும், தான் செல்லும் வழியேயுள்ள மலைகளைத் தன்னுடைய பாரம்மிகுதியால் பூமியினுள் செல்லுமாறு அழுந் தச் செய்ததாலும் தமிழ்த் தலைவன் அகத்தியனை அச் சேனை ஒத்திருக்கிறது என்பது பொருள். இது சிலேடை பற்றி வந்த உவமையணி நயமாகும். இந்த உவமைக்குக் கம்பர் தொன்மத்தை எடுத்தாண்டுள்ளார். முன்னொரு காலத்தில் பூமியின் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தபோது அத னைச் சரியாக நிலைநிறுத்துவதற்காகச் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட ஏட்டுப் பிரதிகளுடன் அகத்தியன் தக்கணத் திலுள்ள பொதிய மலைக்கு வந்து தமிழுக்கு இலக்கணம் செய்து, தொல்காப்பியன் முதலிய பன்னிரு மாணவர்களுக் குக் கற்பித்தருளித் தமிழ்மொழியைத் தளைத்தோங்கச் செய் தானென்பது புராணமாகும். அதனால் அகத்திய முனிவனைக் கம்பர் தமிழ்த் தலைவன் என்றார். இதேபோல அகத்தியர் கடல்நெடும்புனல் குடித்ததற்கும், விந்தியமலையை நிலத்தி னுள் அழுத்தித் தாழ்ந்து கிடக்கச் செய்ததற்கும் புராணக் கதைகள் உள்ளன. அந்தச் சேனையுடன் பரதனும், சத்துருக் கனும் செல்லும் காட்சியைக் கம்பர் இவ்வாறு கூறுவார்.

***இன்னண நெடும்படை யேக ஏந்தலும்***
***தன்னுடைத் திருவரைச் சீரை சாத்தினான்***
***பின்னிளை யவனொடும் பிறந்த துன்பொடும்***
***நன்னெடுந் தேர்மிசை நடத்தன் போயினான்.***

*கம்ப. அயோத்தி. 1003*

இப்படி அப்பெரும் படைசெல்ல, பெருமையிற் சிறந்தோனா கிய பரதனும், தனது அழகிய அரையிலே மரவுரியைத் தரித்த வனாக தன்பின்னே நடந்து வருகின்ற தம்பியாகிய சத்துருக்க னுடனும், மனதிலே தோன்றிய துயரத்துடனும் அழகிய பெரிய தேரின்மீது செல்லத் தொடங்கினான் என்பது பொருள். சேனையைத் தொடர்ந்து தன்தம்பியுடன் பரதன் செல்லும் போது தன்னால்தான் இராமனுக்கு காட்டில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டதே என்ணி வருந்தியவனாக உள்ளத்தில் ஏற் பட்ட துயரத்துடன் தேரிற் சென்றான் என்கிறார் கம்பர்.

அவர்களுடன் சுற்றமும், அமைச்சர்களும் பரிவாரங்களும் தொடர்ந்துவர, மந்திரை என்னும் கூனியும் அக்கூட்டத்தில் சேர்ந்து வந்ததைச் சத்துருக்கன் கண்டு சினங்கொண்ட போது பரதன் அவனைத்தடுத்து இராமன் என்மீது கோபங் கொள்வானென்றே அறமுறையைக் கெடுத்த பாவியாகிய என்அன்னையை ஒன்றும் செய்யாமல் விட்டேன். அதனாலே இவளையும் விட்டுவிடு என்று அவனுக்கு அறிவுறுத்துகிறான். பின்னர் பரதன் எல்லோருடனும் சென்று ஒரு சோலையை அடைகிறான். இது இராமன் காடு சென்றபோது தங்கியிருந்த சோலையென்று அறிந்து அங்கே இராமன் தங்கியிருந்த போது படுத்திருந்த புற்படுக்கையில் படுத்திருந்து பின்னர் அங்கிருந்து புறப்படுகிறான்.

***ஆண்டுநின்று ஆண்டகை அடியின் ஏகினான்***
***ஈண்டிய நெறியெனத் தானு மேகினான்***
***தூண்டிடு தேர்களும் துரக ராசியும்***
***காண்டகு கரிகளும் தொடரக் காலினே.***

*கம்ப. அயோத்தி. 1010*

அவ்விடத்திலிருந்து ஆண்மை மிக்கவனான இராமன் முன் னர் அந்த வழியிலே காலால் நடந்து சென்றான் என்ற கார ணத்தால் செலுத்தப்படும் தேர்களும், குதிரைத் தொகுதிக ளும் காண்டற்கினிய யானைகளும் தொடர்ந்துவரப் பரதனும் காலினால் நடந்தே சென்றான் என்பது பொருள். இராமன் நடந்து சென்ற வழியிலே தான் தேரில் செல்வது தகாது என்று பரதனும் நடந்தே சென்றான் என்கிறார் கம்பர். இத்துடன் ஆறுசெல் படலம் முற்றுப் பெறுகிறது. அடுத்த இதழில் இரா மனைக் காட்டிலிருந்து மீட்டுக் கொண்டுவரப் புறப்பட்ட பர-தன் குகனை எதிர்கொள்ளும் செய்தியைக் கூறும் பல சுவை மிக்க செய்யுள்களுடன் இணைந்து கொள்வோம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 109

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | ■ | ■ | ■ | 2 | ■ | 3 | ■ | ■ |
| 4 | | | 5 | | | | | | 6 |
| | ■ | ■ | | ■ | | ■ | | ■ | |
| 7 | | ■ | | ■ | ■ | 8 | | | |
| ■ | ■ | 9 | | | ■ | ■ | | ■ | |
| 10 | | ■ | | ■ | ■ | 11 | | | |
| | ■ | ■ | | ■ | 12 | | ■ | ■ | |
| ■ | 13 | | | | ■ | 14 | | ■ | ■ |
| ■ | | ■ | | ■ | ■ | | ■ | 15 | ■ |
| ■ | | ■ | ■ | 16 | | | | | ■ |

## தமிழ்வலை-109 வினா

### இடமிருந்து வலம்

4 இலங்கை ஆளும் கட்சி

7 குறிப்புணர்த்தும் செயற்பாடு

8 பழம்பெரும் தமிழக திரைப்பட இயக்குநர்

9 ஒருவகை வைர மரம்

10 அரைவாசி

11 பெருந்தகை

12 பிரணவம்

13 மேழி

14 முரசு

16 ஒருவகைச் சங்கு

### மேலிருந்து கீழ்

1 உண்

2 ஏதிலி

3 ஏனோதானோ என வாளாவிருத்தல்

4 பாடகர் செல்லப்பாவின் அடைமொழி

5 இலங்கையில் ஒரு மாவட்டம்

6 சுற்றுமாற்று

10 வழி

11 பாதி முதிர்ந்த கனி

13 பாக்கு மரம்

15 குதிரை

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-108-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | க | ட | 2 க | வி | ■ | 3 ம | ■ | 4 ப | ■ |
| ழை | ■ | ■ | ட் | ■ | 5 ம | லை | ய | க | ம் |
| ■ | 6 கொ | ட் | ட | ம் | ■ | ப் | ■ | வா | ■ |
| ■ | டை | ■ | ளை | ■ | 7 அ | பி | ம | ன் | யு |
| 8 ப | ■ | 9 சி | ■ | ■ | ■ | ர | ■ | ■ | ■ |
| 10 து | வ | க் | கு | ■ | 11 பூ | ச | க | ர் | ■ |
| க் | ■ | கு | ■ | ■ | ■ | ங் | ■ | ■ | 12 பா |
| 13 க | ழை | ■ | ■ | 14 கா | ன | க | ம் | ■ | த் |
| ல் | ■ | 15 சா | ■ | ப் | ■ | ம் | ■ | ■ | தி |
| ■ | ■ | டு | ■ | 16 பு | சி | ■ | 17 அ | ரி | மா |

## தமிழ்வலை-108 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சுதர்சன் ஜெயலக்சுமி, மருதனார்மடம்
த.செ. நடராசா, ரொறன்ரோ.
அரவிந்தன், இலண்டன்
உமா கதிர், ஏஜக்ஸ்.
விநோதா வசீகரன், மார்க்கம்.
மேரி ஜூட், நோத்யோர்க்
உமா கதிர், ஏஜக்ஸ்.
சிவகுமார் கம்சிகா, சுன்னாகம்.
சபா குகநாதன், பாரிஸ்,

### பரிசுபெறும் போட்டியாளர்

## ஏ.எஸ். மகாலிங்கம்,

### ரொறன்ரோ.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






எனக்கு யாத்திரையையும் காட்டையும் அறிமுகப்படுத்தியவர் சித்தாண்டி அப்பு. எனது தந்தையின் தோழர். சித்தாண்டியில் பெரிய போடியார். பத்துக்கும் அதிகமான குழந்தைகள், வீடுகள், காணி-பூமிகள், வாகனங்கள், சொத்துகள், எண்ணிலடங்கா ஆடுகள், மாடுகள், எருமைகள், கோழிகள், நாய்கள் என்று அவருக்கு எல்லாமே எக்கச்சக்கம்.

இருப்பினும், ஒரு மாற்றுடையையும் முருகன் தேவாரங்களையும் தவிர அவர் எதையும் தன்னுடன் வைத்திருந்ததில்லை. ‘மனே (மகன்), இந்த உலகத்துல நமக்கு எதுவும் சொந்தமில்லை. எல்லாத்தையும் விட்டுடனும்டா’ என்பது அவரது தாரக மந்திரம்.

அவர் பிபிலைக்கு எங்களிடம் வரும்போது துணியிலான ஒரு சிறு பையுடன் வருவார். அதனுள் ஒரு வேட்டி, வெற்றிலைப் பெட்டி, மஞ்சள் பட்டுத்துணி சுற்றியதொரு சிறிய வேல் மட்டுமே இருக்கும்.

காலையில் குளிப்பதற்கு முன் வேட்டியைத் துவைத்துப்போடுவார். கச்சையுடன் குளித்து முடியும்போது வேட்டி காய்ந்திருக்கும். மேலாடையேதும் அவர் அணிவதில்லை. அவரது நீண்ட தலைமுடி காய்ந்தபின் குடுமி போட்டு, திருநீறு சந்தனம் பூசிக்கொள்வார்.

என்னிடம், அவரிடமிருந்த மதப்பற்று இல்லை. அன்பு உங்களை வழிகாட்டும் என்பதே எனது பாதை.

ஸ்பெயின் நாட்டில் இருக்கும் சன்தியாகோ டீ கொம்பொஸ்தெல்லா (Santiago de Compostela) தேவாலயத்திற்கு இரண்டு நாடுகளின் நான்கு வெவ்வேறு நகரங்களிலிருந்து நான்கு தடவைகளும், அதே தேவாலயத்திற்குச் செல்லும் 1600 கி.மீ Via Podiensis என்னும் பாதையில் நான்கிலொரு பகுதி நடந்து முடிந்தபடி இருக்கின்றன எனது யாத்திரைகள். இனிவரும் காலங்களில் மீதியையும் நடந்து முடிக்க வேண்டும். ஏறத்தாழ மொத்தமாக 5 யாத்திரைகளில் இதுவரையில் 3200 கி.மீ நடந்திருக்கிறேன். இவற்றுடன் இலங்கையில் உகந்தையிலிருந்து குமண, யால வனப்பகுதிகளின் ஊடாகக் கதிர்காமத்திற்கும் நடக்கக் கிடைத்திருக்கிறது.

சன்தியாகோ தீ கொம்பொஸ்தெல்லாவுக்கு 2012-ம் ஆண்டு பயணப்பட்டபோது எனது முதுகுப் பை 14 கிலோ நிறையுடையதாக இருந்தது. ஒரு மாதப் பயணத்திற்கு அவசியமானவை என்று கருதிய அனைத்தையும் எடுத்துச் சென்றிருந்தேன். 800 கி.மீற்றர்கள் காடு மலை என்று 14 கிலோ சுமையைக் காவித்திரிந்தபோது வலி தாங்க முடியவில்லை. அந்நாட்களில்தான் யாத்திரையின் தத்துவம் மெல்ல மெல்லப் புலப்படத் தொடங்கியது.

ஒவ்வொரு முறையும் நடக்கும்போதும் எடுத்து வந்தவை அதிகம் என்றே உணர்ந்திருக்கிறேன். சென்ற வருடத்தின் நடையின்போதும் அநாவசியமானவை என்று உணர்ந்தவை இருக்கத்தான் செய்தன. இது பொருட்களுக்கு மட்டும் அல்ல, மனச் சுமைக்கும் பொருந்தும்.

இறுதியாக நடந்தபோது யாத்திரைக்கான பொருட்களை முதுகுப் பைக்குள் எடுத்துவைத்தபின் நிறுத்துப் பார்த்தேன். நிறை 4.6 கிலோ என்கிறது எடை அளக்கும் கருவி. இதில் முதுகுப் பையின் நிறை ஏறத்தாழ 1.3 கிலோ.

இரண்டு மேலாடைகள், குளிரைத் தாங்க மெல்லிய கம்பளி மேலாடை ஒன்று. ஒரு முழுக் காற்சட்டை, முழங்காலளவுக் காற்சட்டைகள் இரண்டு, உள்ளாடைகள் மூன்று, இரண்டு சோடி காலுறைகள், ஒரு சாறம், உடல் துடைக்க ஒரு துண்டு. இவற்றைவிட மருந்துகள், முதலுதவிப் பொருட்கள், தொலைபேசி, நாளாந்த தேவைக்கான பொருட்கள் என்பவற்றைத் தவிர்த்து வேறு எதையும் எடுத்துவரவில்லை. நடந்து முடிந்தபோது குறைவாக எடுத்துவந்திருக்கலாம் என்ற உணர்வு ஏற்பட்டதையும் மறைப்பதற்கில்லை.

12 வருடங்கள் இளமையாக இருந்தபோது எடுத்துச் சென்றவற்றில் பலதும் அநாவசியமானவை என்பதை வாழ்க்கையனுபவத்திலிருந்து பெற்றிருக்கிறேன். யாத்திரைகளில், தினசரி வாழ்வின் மீதான அநாவசிய அச்சம் அகன்று, என்னில் எனக்கு நம்பிக்கையும் வாழ்வில் சந்திக்கப்போகும் அனைத்திற்கும் அணை கட்டிச் செல்லவேண்டியதில்லை என்பதும் புரிய ஆரம்பித்திருக்கிறது.

பிரபல எழுத்தாளராக Paulo Chelho எழுதிய The Pilgrimage இன் நோர்வேஜிய மொழிபெயர்ப்பை வாசிக்கச் சொன்னார் இந்த யாத்திரைக் கனவை எனக்கு அறிமுகப்படுத்திய நண்பர். Santiago de Compostela யாத்திரை பற்றிய அந்நூலும் நான் இந்த யாத்திரைகளை மேற்கொள்வதற்கான உந்துதலைத்தந்தது.



இந்த யாத்திரைகள் பல மனிதர்களின் வாழ்வுபற்றிய போக்கினை, சிந்தனைகளை, தீர்மானங்களை, வழிமுறைமுறைகளை, முற்றிலும் மாற்றியிருக்கின்றன. வாழ்வு மீதான எனது பார்வையையும் வேறு கோணத்தில் சிந்திக்க வைத்திருக்கிறது.

இப்பயணங்களின்போது சந்தித்த சில மனிதர்களின் கதைகளை மிகவும் குறுகிய வடிவில் கீழே பகிர்ந்திருக்கிறேன். அவை உங்களுக்கு இந்த யாத்திரை, மனிதர்களையும் மனங்களையும் எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதனை உணர்த்தும் என்று நம்புகிறேன்.

2012-ம் ஆண்டு எனது முதலாவது யாத்திரையின்போது மட்ரீட் நகரத்தில் பிறந்து வளர்ந்து, புகழ்பெற்ற வழக்கறிஞராக, பணம், பொருள், சமூகத்தின் அனைத்து இடங்களிலும் தொடர்பு, அந்தஸ்து, அழகிய மனைவி என்று வாழ்ந்திருந்த ஒருவரைச் சந்தித்தேன்.

அவர் வேலையே கதி என்று கிடந்த நாட்களில், சப்தமற்ற கால்களுடன் நரகம் அவரது வீட்டின் கதவைத் தட்டியிருந்தது. கால்களில் கொட்டிய பணமும் புகழும் வசதி வாய்ப்புகளும் மறைந்தமையினால் ஓராண்டுக்குள் வாழ்வு புரண்டு விவாகரத்தாகித் தனித்துப்போய் விரக்தியில் சன்தியாகோவுக்கு நடந்துகொண்டிருந்தார்.

பல நாட்கள் இணைந்து நடந்தோம். மாலைப் பொழுதுகளில் உண்டபடியே உரையாடிக்கொண்டிருப்போம்.

யாத்திரை முடிந்தபோது தன் வாழ்வு பற்றிய ஒரு தீர்மானத்திற்கு அவர் வந்திருந்தார். ஒரு கிராமத்தில், சுற்றாடலைப் பாதிக்காத, மறுசுழற்சி முறையிலான ஒரு பண்ணையினை அமைத்துக்கொண்டு அமைதியாக வாழத் தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்.

கண்பார்வையற்ற ஒரு இளம் பெண் தனது நாயுடன் சுவிட்சர்லாந்தில் இருந்து சன்தியாகோ தீ கொம்பொஸ்தெல்லாவுக்கு நடந்திருக்கிறார் என்று அண்மையில் அறிந்தேன். 'சாத்தியமற்றது எதுவுமில்லை' என்பதை தனது இந்தப் பயணம் கற்றுத்தந்தது என்றும், கண்பார்வையற்ற தான் நாயின் கண்களுடன் நடந்தேன் என்றிருந்தார் அவர். அதேபோன்று ஆறு மாதங்கள் தொடர்ச்சியாகத் தனது நாயுடன் நடந்த இன்னுமொரு இளம் பெண்ணின் கதையையும் அறிவேன்.

ஸ்பெயின் நாட்டின் முதலாவது உதைபந்தாட்ட லீக்-இல் சிறந்த வீரராக இருந்து, போதைப்பொருளுக்கு அடிமையாகி அனைத்தையும் இழந்து சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்திருந்த ஒருவரை, வீதியில் சந்திக்கும் ஒரு சக யாத்ரீகர் அவரைச் சன்தியாகோ தீ கொம்பொஸ்தெல்லாவுக்கு அழைத்துச் செல்கிறார்.

அவர்களின் யாத்திரையின் முடிவில் போதைப்பொருட்களிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைக்கும் ஒழுங்கு செய்துவிட்டு, அந்த யாத்ரீகர் சென்றுவிடுகிறார். சிகிச்சை பெற்று, புதிய வாழ்வில் வாழ்ந்துகொண்டு, யாத்ரீகர்களுக்கு கைவினைப் பொருட்களை விற்றபடி, ஒரு மடத்தில் சமையற்காரராக வாழ்ந்திருந்தபோதுதான் நான் அவரைச் சந்தித்தேன். நான் சுகயீனமுற்று தங்க இடமில்லாது தடுமாறிய பொழுதில் தனது அறையில் எனக்கு இடம் தந்திருந்தபோதுதான் அவரது கதையை அறியக் கிடைத்தது.

ஒரு நாள் காலை, அன்றைய மாலை தங்குவதற்கு மடங்கள் ஏதும் இருக்கின்றனவா என்று தேடிக்கொண்டிருந்தேன், மடங்கள் அனைத்தும் நிரம்பியிருந்தன. தங்குவதற்கு இட

மில்லை என்ற நிலையில் Air B&B இணையத்தளம் நான் செல்லும் இடத்திற்கு நான்கு கி.மீற்றர்களுக்கு அப்பால், ஒரு வீட்டில் யாத்ரீகர்கள் தங்கும் வசதி இருக்கிறது என்று காண்பித்தது.

அவர்களுடன் தொலைபேசியில் உரையாடியபோது 'வாருங்கள், இடமிருக்கிறது' என்றார்கள். கடும் வெய்யிலில் 30 பாகை வெக்கையைத் தாங்க முடியாது வேர்த்துக் களைத்து அவர்களிடம் சென்றபோது, அழகியதொரு பழங்காலத்துப் பண்ணை வீட்டில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு வசதிகளைச் செய்திருந்தார்கள். அந்த வீட்டின் உரிமையாளர்களான தம்பதிகளும் அதே வீட்டின் மாடியிலேயே குடியிருந்தார்கள்.

நான் இலங்கையைச் சேர்ந்தவன் என்பதால் அன்று மாலை இந்திய சமையல் வகையில் சோறும், கோழிக் கறியும் பரிமாறப்பட்டன. அன்றைய மாலையுணவு நேரத்தில் அப் பெண் தனது கதையைப் பகிர்ந்துகொண்டார்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னதாக நவ நாகரிகத்தின் உச்சம் என்று கருதப்படும் பாரீஸ் நகரத்தில் வாழ்ந்திருந்தபோது மனச்சோர்வுடனும், அயர்ச்சியுடனும் வாழ்வு அலுத்திருந்த பொழுதில் யாத்திரை செல்ல மனம் தூண்டியதால் சந்தி-யாகோ தீ கொம்பொஸ்தெல்லாவுக்குகான யாத்திரையை ஆரம்பித்திருக்கிறார்.

தற்போது அவர் வாழும் ஊரின் ஊடாக நடந்துகொண்டிருந்த போது பாழடைந்து சிதிலமடைந்து கிடந்த இந்த இடத்தில் மனதைப் பறிகொடுத்ததாகவும், மறு வருடம், வேலையை இராஜனாமா செய்துவிட்டு, பாழடைந்த குதிரை இலாயமாக இருந்த இந்தக் கட்டடத்தையும் அருகிருந்த நிலத்தையும் வாங்கி, ஒரு பண்ணை வீடாக மாற்றி, சுற்றாடலைக் கலைநயமிக்க அழகிய பகுதியாக மாற்றியிருக்கிறார். நீச்சல் தடாகமொன்றும் இருக்கிறது. காலப்போக்கில் அவரது இணையரும் இங்கு இடம்பெயர்ந்ததால், தற்போது யாத்ரீகர்களுக்குத் தங்குமிடம் வழங்குவதால் வரும் வருமானத்திலும், விவசாயத்தினாலும் வாழ்ந்து வருவதாகவும் அறியத்தந்தார். 'அப்பிள் ஜூஸ்' என்றழைக்கப்படும் நாயும் அவர்களுடன் வாழ்கிறது.

அவர்களின் வீட்டுக்கு அருகில் தெற்கு பிரஞ்சு மலைகளின் பள்ளத்தாக்குகளில் பாயும் லொட் என்னும் பேராறும், படகுப் பயணங்களும், ஆற்றோரத்து உணவகங்களும், வீட்டின் அருகே பழங்காலத்துக் கத்தோலிக்க ஆச்சிரமம் ஒன்றின் எச்சங்களும், கட்டடங்களும் காணப்படுகின்றன. அவர்களது பண்ணை வீடு மிகவும் அழகாகவும் அருகே பழங்காலத்துக் கட்டடங்களைக் கொண்ட கிராமமொன்றும் இருப்பதனால் விடுமுறைக்கு வருபவர்களும் அவர்களின் பண்ணை வீட்டில் தங்குவதற்கு விரும்பி வருவதால் வருடத்தில் ஒன்பது மாதங்கள் வருமானம் கிடைக்கிறது.

அவர்களது தோட்டத்தில் பூச்சி நாசினி, செயற்கை உரம் போன்றவற்றைத் தவிர்த்து, இயற்கை முறையிலேயே விவசாயம் செய்கிறார்கள். அங்கு கிடைக்கும் மரக்கறிகளையே உணவாக்குகிறார்கள். இதைவிட வசந்த காலத்தில் பழரசம் தயாரித்து விற்பனை செய்கிறார்கள். இவ்வாறு அனைத்தையும் திட்டமிட்டு வருமானம் கிடைக்கும்படி மாற்றிக்கொண்டிருப்பதால் வாழ்க்கை அமைதியாகவும் பரபரப்பின்றியும் செல்கிறது. இதற்கு சந்தியாகோ தீ கொம்பொஸ்தெல்லாவுக்கு சென்ற யாத்திரையே காரணம் என்றார் அவர்.

யாத்திரை மனிதர்களை முற்றிலுமாக மாற்றியமைக்கிறது என்பதற்கு இந்த ஐந்து யாத்திரைகளிலும் நான் சந்தித்த பல மனிதர்களின் கதைகள் சாட்சியங்களாக இருக்கின்றன.

யாத்திரையின்போது நம்ப முடியாத சம்பவங்களும் நடந்திருக்கின்றன. யாத்திரையின் போது நீங்கள் சக மனிதருக்கு உதவவேண்டும் என்ற ஐதீகமிருக்கிறது. ஆச்சரியம் தரத்தக்க வகையில் வழியெங்கும் யாத்ரீகர்களும், உள்ளூர் மக்களும் கனிவுடனும், நேர்மையாகவும், மனிதநேயத்துடனும் நடந்துகொள்கிறார்கள்.

ஒரு நாள் தொலைபேசி மின்சாரமின்றி ஓய்ந்துபோன பொழுதில் வழிமாறியபோது, கடும் காற்றும் மழையும் சேர்ந்துகொண்டன. அருகே நீண்டு விரிந்திருந்த அத்திலாந்திக் சமுத்திரத்தைத் தவிர்த்து எதுவும் தெரியாத பொழுதில் அந்



தகாரமும் சூழ்ந்துகொண்டது. பயம் மனதைச் சூழ்ந்துகொள்ள, ஏதாவது கட்டடம் தெரிந்தால் தங்கலாம் என்று தேடிக்கொண்டிருந்தபோது ஒரு நாயொன்று எங்கிருந்தோ வந்து என் முன்னால் நடக்கத் தொடங்கியது. அதைச் சில மணிநேரங்கள் பின்தொடர்ந்தேன். அது அழைத்துச் சென்ற வீட்டின் மனிதர் என்னை ஒரு தங்குமடத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்.

வேறு ஒரு சந்தர்ப்பத்தில் காற்கொப்பளங்களால் நடக்க முடியாது தடுமாறிய ஒரு ஜப்பானியப் பெண்ணை காட்டின் நடுவே சந்தித்தோம். அருகிருந்த நகரத்திற்குக் குறைந்தது இருபது கி.மீற்றர்களாவது இருக்கும். என்னுடன் நடந்த ஜேர்-மன் நாட்டு மனிதர் அருகே உள்ள வீட்டிலிருந்த மிதிவண்டி

யைப் பெற்று அப்பெண்ணை ஏற்றிச்சென்று வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு வந்தார். மறுநாள் அவரது முதுகுப் பையைக் காவிச்சென்று வைத்தியசாலையில் ஒப்படைத்தார்.

நடக்கச் சிரமப்படும் யாத்ரீகர்களின் முதுகுப்பைகளைக் காவிச்சென்று உதவிய மனிதர்களையும் அறிவேன்.

இந்த யாத்திரையை மாற்றுத் திறனாளி மாணவர்களுடன் நடந்த இரண்டு நோர்வேஜிய ஆசிரியர்களின் மனவிலாசம் என்னைப் பல விடயங்களிலும் சுயவிமர்சனம் செய்துகொள்ளத் தூண்டியிருக்கிறது.

நானும் பல தடவைகள் பணப் பையை, தொலைபேசியை, கடவுச்சீட்டை, உடைகளை தொலைத்திருக்கிறேன். அனைத்தும் மீளக் கிடைத்தன. ஒருமுறை ஒரு கடையில் பணப் பையை மறந்துவிட்டிருந்தேன். யாத்ரீகர்கள் நடக்கும் பாதையை அறிந்த கடைக்காரர் பல கி.மீற்றர்கள் மிதிவண்டியில் தேடி வந்து பணப்பையை ஒப்படைத்தார்.

யாத்திரையின்போது, 'நல்லதையே நினையுங்கள். நல்லதையே செய்யுங்கள். உங்களுக்கு அவை துணைசெய்யும்.' என்னும் எழுதப்படாத விதியிருக்கிறது.

அவ் வார்த்தைகள் உண்மையானவை என்றும், அவை யாத்திரைக்கு மட்டுமானவையல்ல என்பதையும் புரிந்துகொண்டிருக்கிறேன்.

இந்த யாத்திரைகள் எனக்குள்ளும் சில மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றன என்பது உண்மைதான். வாழ்க்கைக்கு அதிகம் தேவையில்லை என்ற எண்ணமும் தேவைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இந்த யாத்திரைகளை மேற்கொள்ளத் தொடங்கியபின் எனக்குள் வளரத் தொடங்கியுள்ளன.

தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு அதிகமாக நடந்தால் அது வாழ்வின் போக்கினை முற்றிலுமாக மாற்றிவிடும் என்று யாத்ரீகர்கள் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் சந்தித்த ஒருவர் ஜேர்மனியிலிருந்து தொடர்ச்சியாக மூன்று தடவைகள் இத் தேவாலயத்திற்கு வருவதும் செல்வதுமாகக் காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தார். அவருக்கு எழுபது வயதுக்கு அதிகமிருக்கும். 'நான் இந்த யாத்திரையில் சந்திக்கும் மனிதர்கள் என்னை நடக்க வைக்கிறார்கள்' என்றார் அவர்.

இந்த யாத்திரையை பதினேழு தடவைகள் மேற்கொண்ட ஒருவரையும், யெருசலேம் நகரத்திலிருந்து நடந்துகொண்டிருந்த ஒருவரையும் சந்தித்திருக்கிறேன். இளைஞன் ஒருவன் 800 கிலோ மீற்றர்களை 14 நாட்களில் ஓடியும் நடந்தும் கடந்ததாக அவரே சொல்லக் கேட்டேன். அவரது கதை தந்த உந்துதலினால் நெதர்லாந்து யாத்ரீகர் ஒருவரும் நானும் மறுநாள் 52 கி.மீற்றர்களை 17 மணிநேரங்களில் நடந்து முடித்தோம்.

பல மாதங்கள் தொடர்ந்து நடப்பவர்களைப் போன்று குறைந்தது மூன்றிலிருந்து ஐந்து மாதங்கள் தொடர்ந்து நடக்க வேண்டும் என்ற கனவும் எனக்குள் உயிர்த்திருக்கிறது. யாத்திரை பற்றிய இணையத்தளங்கள், முகப்புத்தகக் குழுமங்களில் என்னை இணைத்துக்கொண்டிருப்பதால் தினமும் யாத்திரை பற்றியதொரு செய்தி, புகைப்படம், காணொளி ஆகியவற்றுடன் பயணித்துக்கொண்டிருக்கிறேன். 88 வயதான பெண்ணொருவர் இந்த யாத்திரையை மேற்கொள்கிறார் என்ற செய்தியையும் இங்குதான் அறிந்தேன்.

யாத்திரைகளை ஆரம்பிப்பதற்கு முன், சாதாரண வாழ்வில் நீர் பற்றிய பிரக்ஞையே இன்றி நீரை உபயோகித்து வந்திருக்கிறேன். நீர் கிடைத்துக்கொண்டே இருக்கும் என்ற ஓர் எண்ணம் எங்கிருந்து வந்து என்னிடம் ஒட்டிக்கொண்டது என்று தெரியவில்லை. ஆனால், யாத்திரைகளின்போது எடுத்துச் சென்ற நீர் தீர்ந்து, தாகமெடுத்து, நா வரண்டு பல மணிநேரங்கள், கிலோமீற்றர்கள் நடந்து நீர் தேடித் தடுமாறும்போதுதான் நீரின் தார்ப்பரியம் புரிகிறது. அந்நேரங்களில் கிடைக்கும் சொட்டு நீரின் அருமை தங்கத்தைவிட பெறுமதியானது என்றும், நீர் பற்றாக்குறையுடன் வாழப் பழகிக்கொண்ட மனிதர்களில் பெரு மரியாதையும் அவர்களால் எதையும் தாங்கிக் கொள்ள முடியும் என்றும் தோன்றுகிறது.

கதிர்காமத்திற்கு நடந்த ஒரு நாள் குளிப்பதற்கு நீர் கிடைக்காமையினால் 4-5 போத்தல் நீரில் குளித்த நினைவு மறக்க முடியாதது. அதே போலத்தான் உணவும். வயிறு நிறைய உண்ணக் கிடைக்காது. பசிக்குத்தான் உணவு என்னும் தத்துவம் புரிந்த நாட்கள் அவை. எமக்கான உணவு, நீர், உடைகள், பாய், படுக்கைகள் என்று அனைத்தையும் நாம்தான் காவ வேண்டும்.

ஒருவருக்கு சுகயீனம் என்றால் அவருக்கு ஆறுதலாகவும் உதவியாக இருப்பதும், அவரது பொதிகளைப் பிரித்துக் காவுவதும், நாம் மறந்துவிட்டிருக்கும் பல அடிப்படை மனித விழுமியங்களை எமக்கு நினைவூட்டும். பகிர்தல் என்பது பெறுவது மட்டுமல்லவே. உணவு தயாரிக்கும் பொழுதில் ஒருவர் அடுப்புக்குத் தோதான இடத்தைத் தேட, மறையவர் விறகு தேடிச் செல்ல, இன்னுமொருவர் சமையலுக்கு ஆயத்தம் செய்ய, வேறு சிலர் நீர் எடுத்துவர என்று அனைத்திலும் அனைவரும் ஈடுபடும்போது தோழமையுணர்வும், அன்பும், பாதுகாப்புணர்வும், கூட்டுணர்வும் யாத்திரிகளை இணைக்கிறது.

அத்தியாவசியமானது என்று நான் கருதுபவை, வயது ஏற ஏறக் குறைந்துகொண்டே செல்கின்றன என்ற உண்மையை இந்த யாத்திரைகளில் இருந்துதான் பெற்றுக்கொண்டேன்.

வயது மனதைப் பக்குவப்படுத்துகிறது என்பது உண்மைதான். நல்நினைவுகளைச் சேமிக்கலாம், துர்நினைவுகளைக் காவுவதால் பலன்தான் என்ன என்னும் பக்குவப்பட்ட சிந்தனைகளையும் யாத்திரைகள்தான் தந்திருக்கின்றன.

இப்போதெல்லாம் அநாவசியமாகப் பொருட்களைச் சேர்க்காதே என்று ஒரு குரல் பிரக்ஞையில் குந்தியிருந்து எப்போதும் கத்திக்கொண்டே இருக்கிறது. 'எனக்குப் பின், என்னை அகற்றவே நேரமும் சக்தியும் அதிகம் தேவையாக இருக்கும், எனது பொருட்களை அல்ல' என்பது பெரும் ஆறுதல்.

'ராசா, இந்த உலகத்துல நமக்கு எதுவும் சொந்தமில்லை. எல்லாத்தையும் விட்டுடனும்டா.' என்று சித்தாண்டி அப்பு சொன்னதன் அர்த்தம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்திருக்கிறது.



Sanjayan@thaiveedu.com



# வாழ்வுரிமை

## – மா. சித்திவிநாயகம்

16

கரடிப் போக்கிலிருந்து உருத்திரபுரம் போகின்ற வாய்க்கால் மதவிலிருந்து பெரும் ஆற்றைப் போல வெள்ளைநுரை இரைந்தபடி ஓடிக் கொண்டிருந்து. சுழிச்சுழியாக ஓடும் வாய்க்காலின் அயலில் வளர்த்திருந்த பாலைமரம் வாய்க்கால் மேல் தாழ்ந்து கிளை பரப்பி மஞ்சள் பழங்களால் நிறைந்து தொங்கியது. குறுக்கே நீண்டிருந்த கொப்பிலேறி குரங்குகளும் சிறுவர்களும் போட்டிக்குப் பழம் பறித்துக் கொண்டிருந்தார்கள்.

பாலை மரக்கிளையின்மேல் கால் பதித்து நடந்து நடந்து, பாலைப் பழங்களைப் பைகளுள் போட்டுக்கொண்டிருந்தான் திரவியம். காலிரண்டையும் ஒன்றோடு ஒன்று பொருந்த வைத்து அந்த மரக்கிளையில் அவன் நடந்தபோது வாய்க்காலின் எதிர்ப்புறத்தே அந்த வெண் நுரையோடு வெண் புறாவாக அந்தப் பேரழகி உட்கார்ந்து குளித்தபடியிருந்தாள். வெள்ளத்துள் ததும்புகிற பெரிய மார்பகங்களோடும், சிவந்த முகத்தோடும் குளித்தடி இருந்த அவள் அவன் கண்களில் நிறைந்தாள். அந்த அழகுப் பதுமையை நோக்கி திரவியத்தின் கவனம் செல்ல, அவன் கால் லேசாகச் சறுக்குகிறது.

வாய்க்காலில் நிலை தடுமாறி விழப் போனவன் மரக்கிளையில் தன் கைகளால் இறுகப் பற்றியபடியே இறங்கி மெதுவாக அவளருகே சென்றான். அவள் வேறுயாருமல்ல, அவனது காதல் மனைவி ஸ்ரெவனிதான். அவளைச் சுற்றி விலங்குப் பண்ணையின் விலங்குகள் வாய்க்கால் கரையில் நின்றிருந்தன. அவள் வளர்க்கிற பாசமுள்ள அணிலும், அமாயா நாயும் கூட அருகே நின்றிருந்தன. அணிலென்றவுடன் எல்லோர் மனதிலும் இன்று நின்று நிழலாடுவது அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்ப் அவர்களை வெல்ல வைத்த 'பீநாட்' எனப்படுகிற அணில்தான்.

இராமர் இலங்கைக்கு பாலங்கட்டியபோது உதவிய அணிலுக்கு முதுகில் இராமன் மூன்று குறியிட்டதாகச் சொல்கின்றார்கள். ஆனால் அமெரிக்க அணில்களுக்கு முக்குறியில்லை. 7 வருடமாக அமெரிக்கர் ஒருவர் வளர்த்த அந்த பீநாட் என்ற பெயருள்ள அணிலை சமூக இணைய வலைகளில் அதன் சாகசங்களைத் தினமும் கண்டு களித்து மகிழ்ந்தவர்கள் பல லட்சம் பேர். ஆனாலும், அது வளர்ந்த வீட்டைச் சுற்றியுள்ளவர்கள் சுகாதாரக்கேடு என்றும், அது அபாயம் நிறைந்த மிருகம் என்றும், அது சிலரைக் கடிக்கிறது என்றும் புகார் கொடுத்ததைத் தொடர்ந்து, வனத்துறை அதிகாரிகளால் அந்த அணில் கொல்லப்பட்டுவிட்டது. இத்தனை வந்தேறிகளால் நிறைகிற அமெரிக்காவில் ஒரு அமெரிக்க அணிலுக்கு மட்டும் உயிர் வாழஉரிமையில்லையா என்கிற பலத்த கேள்வியைக் கேட்டு, அதைப் புரட்சியாக்கி, அமெரிக்காவில் புதிய ஜனாதிபதிக்கு வாக்கிட்டு வெல்ல வைத்திருந்தது அமெரிக்க அணில் சமூகம்.

அணிலைக் கொன்றது குற்றமென்றழுதவர்கள் பலரும் மாட்டைக் கொன்று அதன் தோலில் சப்பாத்தும், அதன் இறைச்சியையே முழு நாளும் உண்பவர்களாயிருந்தார்கள். இத்தனைக்கும் அந்தப் புதிய ஜனாதிபதி நல்லவரா... இந்தத் தேர்தல்கள் மிகக் காமெடியானவை. ஒரு சின்ன வேலைக்குப் போவதற்குக் கூட குற்றவாளியா (criminal record check) என்று துருவித் துருவி ஆராய்கிற நாட்டில், நான்கு குற்றவியல் குற்றச்சாட்டுகள், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் தனிப்பட்ட அவதூறுகளுக்காக அவரை குற்றவாளியெனத் தீர்த்த தீர்ப்பு இருந்தது.

வணிகப் பதிவுகளைப் பொய்யாக்கிய 34 குற்றச் செயல்களில், நியூயார்க் நடுவர் மன்றம் ட்ரம்ப் அவர்களைக் குற்றவாளி எனக் கண்டறிந்திருந்தார்கள். குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட முதல் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி அவர். ஆனாலும், மக்கள் பெருமளவில் வாக்களித்து அவரை வெல்ல வைத்திருந்தார்கள். அவர் பதவியில் இருந்த இறுதி நாட்களில், இரண்டு முறை பதவி நீக்கம் செய்யப்பட்ட முதல் ஜனாதிபதி என்று பெயர் பெற்றவர். பைடன் வென்றபோது அமெரிக்க கேபிட்டலில் கிளர்ச்சியைத் தூண்டிப் பெரும் கலவரம் செய்தவர்.

என்ன திரவியம் சாமி தலிபான்களைவிடவும் கொடுமைக்காரன்களோ உங்கட அமெரிக்கன் ஆட்கள். எதிர்த்தாப்பில ஒரு பெண் வேட்பாளர் என்றதற்காக, குற்றவாளியையே ஜனாதிபதியாக்குவாங்களோ சாமி என்றான் தெருவால் வந்த கிறுக்கன் சண்முகம்.

ஏன் அப்படிச் சொல்கின்றாய் என்றான் திரவியம்.

இல்லைச்சாமி முந்தி கிளாரி கிளின்டன் 30 இலட்சம் மக்கள் விருப்பு வாக்கு ட்ரம்பை விடக் கூடுதலாய்ப்பெற்றும் தேர்வு வாக்கால தோற்றதும், இப்போ ஜனநாயகம் பேசிய கமலா ஹரிஸ் தோற்றுப் போனதும் தற்செயலாக நடந்த மாதிரியில்



லையே ? பெண்கள் ஆளுமை இல்லாத ஆட்கள் என்று ஒதுக்குகிற சமூகமாகவல்லவோ கிடக்கு சாமி என்றான் அவன். சண்முகத்தின் கேள்விக்குத் திரவியத்திடம் பதிலில்லை. பெண்ணியம், பைபிள் பெல்ற், கருக்கலைப்பு விவாதம், பாலினப் புதினர்களின் சுதந்திரம் என்று பலவகைக் காரணிகளில் எதைச் சரியென்பது, எதைப் பிழையென்பது ?

பெண்ணாக மாறிய ஆணும், தன் பெண்ணும் ஒரே கழிவறையை உபயோகிக்கவும், தன் பெண்ணோடு ஆணாக இருந்து பெண்ணாக மாறியவன் எப்படி ஒன்றாக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிப்பேன் என்கிற அமெரிக்கத் தந்தைகளின் வாக்குகளால் ட்ரம்ப் வாக்குப் பெட்டி நிறைந்தது என்பதை எப்படி நான் சொல்லுவேன் ?

என்ன திரவியம் சாமி இந்த தேர்தல் விசயத்தில் உலகில் ஜனநாயகம் பேசுகிற அமெரிக்காவின் போலி ஜனநாயக முகம் உலக அரங்கில் கேள்விக்குறியாகவும், கேலிக்கூத்தாகவும் மாறிப் போச்சே ஐயா ? என்று நக்கலாகச் சொல்லிய படியே சண்முகம் கடந்து போனான்! சண்முகம் படிக்காத, ஆனால் அறிவுள்ள கிறுக்கன். அவனோடு தர்க்கப்பட்டுப் பயனில்லை.

சிந்தித்தபடியே வந்த திரவியத்தின் சட்டையில் ஓடி வந்து உட்கார்ந்தது ஸ்ரெவ்வனியின் அணில். பையில் இருந்த

பாலைப் பழத்தை அணிலுக்கு எடுத்தூட்ட அது அதனை விரும்பி உண்டது. அமெரிக்காவின் அரசியலைப் பார்த்து அழுகிறம். இங்குள்ள அரசியலும் அதுதான். இந்தப் பொங்கி நுரைக்கின்ற வாய்க்காலில் தான் எத்தனை கோடி சோகங் கள் புதைந்து கிடக்கின்றன.

எத்தனை ஆயிரம் பிரேதங்களை வயது வித்தியாசமின்றி மிதத்திச் சுமந்தது. இதில் காயங்களோடு தடம்புரண்டு ஜலச மாதி ஆகியவர்கள் எத்தனை பேர். வேண்டு மென்றே கொல் லப்பட்டவர்கள் எத்தனை பேர். அந்தக் கண்கெட்ட புரட்சி யின் பெயரால் தமிழர் நிலம் புரட்டிப் போடப்பட்டபோது தப்பி யோடியவன் தானே நானும்.

சொந்த மக்களின் விடுதலைக்காகப் போராடிய காரணத்திற் காக இந்த மக்கள் பட்ட பாடும், கொடுத்த விலையும், உயிர்ப் பலியும் கொஞ்ச நஞ்சமல்ல. மனித உயிர்களை மதிக்கின்ற, பயந்த சுபாவம் கொண்ட பண்பாடுள்ள இந்தச் சமூகம் இன்றைக்குப் பாழ்பட்டுநிற்கின்றது. ஒவ்வொருவரும் தம்மினத்து ஒவ்வொருவரையும் இகழ்ந்து துப்பிப் போகிற மன நோயாளியாய் மாறி நிற்கின்றார்கள். நிமிர்ந்து கிடந்து துப்புகிற துப்பல்கள் ஒவ்வொன்றும் தம் மீதே விழுகிறதென் பதை அறியாத மூடர்களாயிருந்தார்கள் அவர்கள்.

அப்பாவியான திரவியமும் தான் துவக்கு ஏந்தி, தனக்கு என் றைக்கும் அறிமுகம் இல்லாதவர்களையெல்லாம் சுட்டுக் கொன்றொழித்த அந்த நாட்களை நினைத்துப் பார்த்தான். எதற்காக அந்தச் சூடுகள்? அவற்றால் வந்தபயன் என்ன? அந்தக் காலத்தே தன்கையில் பட்ட விழுப்புண் தழும்பு இன் னமும்கூட உண்டு.

அன்றைக்கு ஆமியோடு பொருதி உயிர் தப்பி வந்த அவ னைப் பாராட்டிய சமூகம் இன்றில்லை.

சுயநலச் சூட்சிகளுக்காக, தாங்கள் பேசிய தமிழ்த்தேசியத் தையும், தமிழையும் குழி தோண்டிப் புதைத்துவிட்டார்கள். தமிழின் அனைத்துப் பெருமைகளையும் கேள்வியாக்குகின் றார்கள். போட்டி பொறாமைகொண்டு, பொங்கியெழும் காழ்ப்புணர்வால் தன்னினத்தைக் குழி தோண்டும் பணியில் இன்றுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களா கவில்லை. தமிழின விடுதலையென்கிற ஒற்றைப்போர் இன்று ஓராயிரம் கட்சிகளாகி மாண்டுபோகும் தறுவாயில் இருக்கி றது. தமிழின விடுதலைக்காகப் போராடி மாண்டவர் மாண்டு போக, எஞ்சியோர் கொடுஞ் சிறையில் கிடந்து மீண்டுள்ள னர். அப்பேற்பட்ட போராளிகளின் மறுவாழ்க்கை கூட இங்கு பெரும் போராட்டமாக இருக்கிறது. எந்த மக்களுக்காகப் போரிட்டார்களோ அந்தப் பகுதி மக்களே போரில் ஈடுபட்டுத் தோற்றுத் தப்பித்த இவர்களைப் பயங்கரவாதிகளைப்போல, தீவிர வாதிகளைப் போலவே பார்க்கின்றார்கள்,

அவர்களோடு பெரும்பாலான மக்கள் பேசுவது கூட இல்லை. அவர்கள் ஏதோ வேற்றுக்கிரக வாசிகள்போலவும், வேண்டாத வர்களைப் போலவும் பார்க்கப்படுகிறார்கள். அவர்களின் பிள்ளைகளோடு, தம் ஊர்ப்பிள்ளைகள் பேசுவதைப், பழகு வதை, நேசிப்பதை அவர்கள் அறவே தவிர்க்கிறார்கள்.

எந்த இனத்திற்காக, அதன் விடுதலைக்காக தம் வாழ்நாளை அழித்தார்களோ, அந்த இனத்தவரே இவர்களை ஏதோ பெரும் குற்றம் செய்து விட்டு சிறை சென்று வந்தவர்களைப் போலவே பார்த்தது. அது மட்டுமன்றி அவர்களைப் பற்றி மிக கேவலமான கொடூரமான இல்லாத கதைகளையெல்லாம் சொல்லி சமூகத்திலிருந்து பிரித்து வைக்கத் துடித்தார்கள். ஆனாலும் அவர்களைக் காரணங்காட்டிப் பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராகத் துடித்தனர் அந்தக் கேவல மான சுயநல இழி பிறப்புகள்.

சீரழிந்த பொருளாதாரத்தால், இராணுவ ஆட்சிகளின் கொடு மைகளுக்குப் பயந்து சொந்த நாட்டைத் துறந்து விசா இல் லாமல் விதி முறைகளை மீறி அமெரிக்காவில் வந்து வேலை பார்க்கிற பல இலட்சக்கணக்கான மக்களைத் துரத்தி விட வேண்டுமென வாக்குபோடுகின்றவர்கள், அவர்களைப் போலவே களவாக வந்த சிற்றிசனாகியுள்ள பழைய அகதி அமெரிக்கர் கள்தான். அவர்களைப் போலவே மாறியிருந்தார்கள் இன் றுள்ள தமிழர்கள்.

விலங்குப் பண்ணையின் பக்கவாட்டில் முனகல் சத்தம் கேட் டது. பண்ணைப் பசுமாடு பிரசவ வலியால் துடித்தது.

அதையும் தாண்டிப் பக்கத்து வயலில் ஒருவரது வயலுக்குப் பாய்ந்த தண்ணீரை மற்றவன் மறித்துக் கட்டி தன்வயலிற்குப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். அவனே உரத்த குரலில் சண் டித்தனமும் பேசினான், அவனுக்கு ஒத்தாசையாக கமஓவசி யன் அவனிடம் காசு வாங்கிக்கொண்டு ஒத்துப் பாடினான். நாசமாப் போவாங்கள். இந்த அறுவான் கம ஓவசியனை நீக் கச் சொல்லி நான் இனி யாரிட்டைப் போய்முறையிடுவேன்?. இங்க உள்ளவன் அத்தனைபேருங் கள்ளனாய் இருக்கிறாங் களே கடவுளே அந்தஅப்பாவிக் கமக்காரன் குரலை எவனும் அங்கு கேட்பதற்கில்லை.

பிரசவ வலியால் துடித்த பசுமாடு அழகான கன்று ஒன்றை ஈன்றிருந்தது. மாடு தன் நாக்கால் நக்கி கன்றைச் சுத்தப்ப டுத்தி அதனை உடனேயே எழுந்து நிற்க வைத்துப் பாலூட்டி யது. மிருகங்கள் மனிதர் போல சோம்பேறிகளல்ல.

பண்ணை வேலையாள் முருகன், மாட்டின் இளங்கொடியை அறுத்தெடுத்து பனைஓலையில் பார்சலாக்கி அதனை ஆலம் விழுதில் கட்ட விரைந்து கொண்டிருந்தான்.

ஏண்டா டேய், இதில கொண்டாந்து மாட்டுக் கழிவை கட்டு றாய் மூதேவி என்றான், கீழே அசதியாய் படுத்திருந்த கிறுக் கன் சண்முகம்.

பண்ணைக்கார முருகன் சொன்னான், அண்ணே மாட்டின் இளங்கொடியை ஆலமரத்தில கட்டினால் மாடு நன்றாகப் பால்சுரக்கும். அதால தான், ஆலில கட்டிறன்.

அறிவு கெட்ட நாயே உங்கொம்மா தலையில கொண்டு போய்க் கட்டடா அதை... என்று தடியெடுத்து அவனைக் கலைக்கத் தொடங்கினான் கிறுக்கனான சண்முகம்.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



# மேலிருந்து கீழ் - வலமிருந்து இடம்

– உஷாதீபன்

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். மகிழ்ச்சியான இந்தத் தமிழர் திருநாளில், இனிப்பான பொங்கலைச் சுவைத்துக் கொண்டிருக்க வேண்டிய தறுவாயில், மிகவும் கசப்பான அனுபவங்களோடு, மிகுந்த மன வேதனையில், நான் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். என் மன வேதனைகளை யாரிடமேனும் கொட்டித் தீர்க்க வேண்டுமென்று நான் யோசித்தபோது, அதை உடன் தோள் கொடுத்துச் சுமக்க என் மனைவி தயாராயிருந்தாள் எனினும், இந்தச் சமூகத்திற்கு எவ்வகையிலேனும் அது போய்ச் சேர வேண்டும் என்று என் மனம் தீராத ஆற்றாமையில் வெந்து கொண்டிருந்தது. எந்த வழியில் இதைத் தீர்த்துக் கொள்வது என்று மன உளைச்சலோடு நான் நிம்மதியற்று அலைந்து கொண்டிருந்தபோது, அதற்கும் வழி சொன்னவள் என் துணைவியார்தான் என்பதை இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்வேன்.

குடும்பம் என்கிற அருமையான அமைப்பில், இந்தப் பெண்களின் பங்கு எத்தனை பொறுப்புமிக்கதாய் இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த முக்கியமான கால கட்டத்தில் என் மனைவி மூலம்தான் நான் உணர நேர்ந்தது. இதை எழுதுவதற்கு முந்திய பல மாதங்களில்கூட, இவைபற்றியெல்லாம் ஒருவகையான போலித்தன்மை என்னிடம் படிந்திருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அம்மாதிரியான ஒரு மனப்பான்மை என்னிடம் படிவதற்கு எனது வாழ்க்கை முறை முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இந்த இடத்தை நான் எழுதும்போது ஒரு பழைய திரைப்படப் பாடல் என் நினைவுக்குத் தவிர்க்க முடியாமல் வருகிறது. கொடுத்தவனே பறித்துக் கொண்டாண்டி - மானே, வளர்த்தவனே வெறுத்து விட்டாண்டி...!

பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி என்று ஊடகங்கள் எத்தனையோ வகைகளில் மக்களுக்கு உடனுக்குடன் செய்திகளைக் கொண்டு செல்கின்றனவெனினும், மனித வாழ்க்கையின் உள்ளீடுகளைப் பிரதிபலிக்கும் வகையில், வாழ்க்கையின் அடி நாதமான, ஆதார ஸ்ருதியான விழுமியங்களைப் போற்றுவனவாக அவை அமைவதில்லை என்பதை ஆத்மார்த்தமாக நான் உணர முற்பட்டபோதுதான், என் மன உணர்வுகளை யாரிடமேனும் கொட்டித்தீர்க்க வேண்டுமென்ற நிலைக்கு வந்தேன். இந்த விழுமியங்கள் பற்றியதான பிரக்ஞை எனக்கே இதுநாள் வரை இல்லாமல்தான் இருந்தது என்பதை வெட்கமின்றி ஒப்புக் கொள்கிறேன். அவையெல்லாம் வெறும் உபயோகமற்ற பழங்கதை என்றும், காலத்துக்கும் மாறாத புலம்பல்கள் என்றும், கால விரயத்தை உண்டு பண்ணுபவை என்றும், மனிதர்களின் சுதந்திரத்தைப் பறிப்பவை என்றும், அவற்றினால் எள்ளளவும் பயனில்லை என்றும்தான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவை வாழ்க்கையின் வெவ்வேறு படிமங்களைப் பொறுப்புடன் எதிர்கொள்வதற்கும், மனத் தைரியத்துடன் கடந்து செல்வதற்கும், தன்னம்பிக்கையோடு தளராது தன் முனைப்போடு செயல்படுவதற்கும், கைகோர்த்துக்கொண்டு நம்மோடு வாழ்நாள் பூராவும் கூட வருபவை என்பதைப் பின்னாளில்தான் உணர நேர்ந்தது. இன்றும் கூட நான் இந்நிலையை எட்டாவிட்டால் அதை நினைத்து உருகுவேனா என்பதைச் சொல்லமுடியாதுதான். எட்டுவது என்பது உயரங்களைத் தொடுவது மட்டும்தான் என்று கற்பனை செய்து கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். கீழே விழுவதும் கூடத்தான் இல்லையா? ஆனால் ஒன்று, எனது இன்றைய நிலையில் எனக்கு உறுதுணையாக நிற்பவை அவைதான். என் தன்னம்பிக்கையைத் தளராது பிடித்து நிறுத்தியிருப்பவை அவைதான். மிக மிகச் சாதாரண விஷயங்கள்தான். கடைப்பிடிக்க முடியாது என்று எதுவுமேயில்லை.

காலத்தை ஒழுங்கு செய்து கொள். அன்றாடப் பணிகளைத் திட்டமிட்டுக்கொண்டு செயல்படு... எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கைக் கட்டாயமாக, பிடிவாதமாகக் கடைப்பிடி...' இப்படியெல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு சிறு சிறு காரியங்களைக்கூட நான் அலட்சியம் செய்ததால், அவை நான் கற்கும் கல்விக்கு முற்றிலும் சம்பந்தமில்லாதவை என்பதாகத் தவறுதலாக உணர்ந்து கொண்டு ஒதுக்கியதால், அந்த அடிப்படையான ஒழுக்க சீலங்களை நான் கற்க மறுத்ததன் விளைவினைப் பின்னாளில் அனுபவித்தேன். வாழ்வின் உயரத்தில் எவையெல்லாம் என் துணை நின்று உதவி புரியுமோ, என்னை முன்னெடுத்துச் செல்லுமோ, அவை எல்லாம் எனக்கு உதவாமல் போய்விட்டன என்பதுதான் உண்மை. வாழ்ந்து முடித்த, அனுபவத்தின் உச்சத்தில் இருந்த என் தந்தையின் வழிகாட்டுதல்களை, அதன் அடிப்படையான மெம்




மைகளை நான் படிப்படியாகத்தான் உணர்ந்தேன். என் திற மைகள், என் உழைப்பு, என்மேன்மை முதலானவை அடிப்ப டையான ஒழுங்குகளை நான் சீராகக் கடைப்பிடிக்க ஆரம் பித்த பிறகுதான் துளிர்விட்டு வளர்ச்சி பெறத்தொடங்கின, ஊக்கமுடன் செயல்பட, உத்வேகம் பெறக் காரணமாயின என்று நான் சொல்வேன்.

ஆனால் அப்படியான வெற்றிமுகத்தை நோக்கிய என் பயணத்தின்போது இப்படியானதொரு திடீர் வீழ்ச்சி ஏற்படும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பள்ளிப் பருவ காலத்திலேயே இந்த முறைமைகளையெல்லாம் நான் பின்பற்றியிருப்பேனாகில், ஒரு வேளை இன்றைய என் செயற்பாடு எல்லோரையும் பின்தள்ளிக்கொண்டு மிகவும் முன்னே நிற்பதாக அமைந்திருக்கக்கூடும். என் திறமைகளைப் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தக்கூடிய ஒரு முழுமையான, தவிர்க்க முடியாத நபராக நான் இருந்திருப்பேனோ என்று இன்று நான் நினைத்துப் பார்க்கிறேன். அம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் எனக்கு இன்றைய பின்னடைவு ஏற்பட்டிருக்காதோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. எதையோ சொல்ல வந்து என் சொந்தக் குமுறல்களையெல்லாம் சற்று அதிகமாகவே கொட்டித் தீர்த்து விட்டேன் என்று நினைக்கிறேன். அவையும் சொல்லப்பட வேண்டியவைதான் என்பதை மறுப்பதற்கில்லை. அதற்காகத்தானே இந்தக் கடிதமே துவக்கப்பட்டது.

மனித வாழ்க்கை எந்த அஸ்திவாரத்தில் கட்டமைக்கப்படுகிறது என்கிற ரீதியில் நாம் சிந்திக்க முற்பட்டோமானால், எல்லாவிதமான நற்பண்புகளையும், மதிப்புமிக்க விழுமியங்களையும், பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னே நிற்பது பணம்தான் என்பதை உணரலாம். பணம் என்பது வாழ்க்கையின் ஒரு காரணி. அதுவே வாழ்க்கையல்ல என்கிற நேர்மை, ஒழுக்கத்தின்பாற்பட்ட தத்துவார்த்தங்களெல்லாம் இன்று பின்னுக்குத் தள்ளிவிட்டன. அவையெல்லாம் வெறும் பிதற்றல்கள் என்பதுதான் சரி என்ற நிஜம்தான் இன்று முன்னே நின்று கோலோச்சுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். சுவாசிப்பதற்குக் காற்று, குடிப்பதற்குத் தண்ணீர், அதுபோல் வாழ்க்கையின் பல்வேறு தேவைகளுக்கு உபயோகப்படுவது பணம் என்பதாகக் கொள்ள ஒருவரும் தயாரில்லை என்பதுதான் இன்றுள்ள சத்தியமான உண்மை. பணத்தை முன்வைத்து அந்தப் புள்ளியிலிருந்துதான் கிளைகள் பிரிகின்றன.

இந்த எல்லாவற்றிற்கும் ஆதாரமான பணம் என்கிற காரணி, அறிவியல் தொழில்நுட்பம் தலை தூக்கி நிற்கிற இந்தக் காலகட்டத்தில் எத்தனை மதிப்புமிக்கதாய் நம் இளைஞர்களையும், இந்த சமுதாயத்தையும் ஆட்கொண்டிருக்கிறது? ஆட்டிப் படைக்கிறது? பணம் ஒன்றுதான் வாழ்க்கையின் எல்லாவிதமான சந்தோஷங்களையும் அளிக்கவல்லது என்று நடப்பு உலகின் எல்லா இளைஞர்களையும் போலத்தான் நானும் இயங்கிக் கொண்டிருந்தேன். வாழ்க்கை சந்தோஷமிக்கதுதான், அதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதை இயன்றவரை அனுபவித்துத் தீர்த்துவிட வேண்டும் என்கிற நோக்கில்தான் எனது குடும்ப வாழ்க்கையும் நேற்றுவரை பயணித்துக் கொண்டிருந்தது.

ஆனால் இப்படியொரு திடீர் வீழ்ச்சி என் வாழ்க்கையில் ஏற்படும் என்று கனவிலும் நான் கருதவில்லை. எந்த உயர்வினைப் பார்த்து என் பெற்றோர் மகிழ்ச்சியிலும், நிறைவிலும் திளைத்தார்களோ, எந்த மேன்மையைக் கண்டு என் உற்றாரும் மற்றோரும் மனதுக்குள் பொறாமை கொண்டார்களோ, எந்த வசதி வாய்ப்புகள் என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியதோ, எந்த ஆதாரம் எனது அன்றாட நிகழ்வுகளைச் சந்தோஷ மயமாக்கியதோ, எந்தத் தேவை என்னை எப்படிப் பயன்படுத்திக் கொண்டாலும் குறையாத அட்சய பாத்திரமாக நின்று என்னை யோசிக்க விடாமல் பண்ணியதோ, எந்த ஆதாரப் புள்ளி என்னை உற்சாகமாகவும் ஊக்கமாகவும் இயக்கியதோ, அதுவே இன்று என் காலடியில் படுத்து, தன் படத்தைச் சுருக்கிக் கொண்டிருக்கிறதை நினைக்கிறபோது, எனக்கு நானே ஆறுதல் சொல்ல முடியாதவனாக, என்னை நானே தேற்றிக் கொள்ள இயலாதவனாக நின்று கொண்டிருக்கிறேன்.

பணத்தை முன்வைத்து எங்கெல்லாம் காரியங்கள் நிகழ்த்தப்படுகின்றனவோ, அங்கெல்லாம் எல்லா போற்றுதல்களும் தன் மதிப்பிழந்து நிற்கும் என்பதற்கு எனது இன்றைய நிலையே சாட்சி. எனது திறமைகளின் அடிப்படையில்தான் இவையெல்லாம் மதிப்புப் பெற்றன என்ற இறுமாப்பில் இருந்தேன் நான். அந்த வீரியத்தில்தான் இத்தனை நாட்கள், இத்தனை வருடங்கள் பணியாற்றினேன். எந்த நிறுவனம் எனது எல்லாத் திறமைகளுக்கும் அடிப்படையாக இருந்ததோ, எந்த நிர்வாகம் எனது திறமைகளனைத்தையும் வெளிக் கொணர உற்சாகப்படுத்தியதோ, எந்த ஆதாரம் எனது வாழ்க்கையின் சுய நிர்ணயத் தடத்தை உறுதிப்படுத்தியதோ, எதை முழு மனதோடு கொடுத்தோமானால், எதில் நம்மை முழுமையாக அர்ப்பணித்தோமானால் மேலே மேலே செல்ல முடியும் என்று எனக்கு நானே நிர்ணயித்துக்கொண்டு என்னை நானே முழுமையாக அர்ப்பணித்தேனோ, அந்த இடம் எனக்கில்லை என்றபோது, நான் ஆடிப் போய்விட்டேன். இதைப் பகிரங்கமாக இங்கே வெளியிட்டுக் கொள்வதில் எனக்குத் துளியும் வெட்கமில்லை. இதை உங்களிடம் சொல்வதுதான் பொருத்தம் என்றுதானே எழுதத் துணிந்தேன். எனது பணியில் நான் நேரம் பார்த்ததில்லை. காலம் கணித்ததில்லை. என் உடல் சோர்வு, மனச் சோர்வு, சொந்தச் சூழல், இப்படி எதையுமே பொருட்படுத்தியதில்லையே! இது என் பணி. எனக்கான பணி. என் வாழ்வாதாரத்திற்காக, அதன் சந்தோஷத்திற்காக, அதன் மேன்மைக்காக, எனக்குக் கிடைத்திருக்கக் கூடிய பெரும் சொத்து. இதை நான் உண்மையாக, நேர்மையாக அணுக வேண்டும். மனசாட்சிக்கு விரோதமில்லாமல் என்னைக் கொடுக்க வேண்டும். என்னை முழுமையாக இதன் முன்னேற்றத்திற்காக, வளர்ச்சிக்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். உழைப்பு, உழைப்பு. உழைப்பு, அது ஒன்றுதான் என் மனதில் படிந்திருந்தது.

ஆனால் இன்றோ எல்லாம் பொய்யானது. எல்லாமும் கைவிட்டுப் போனது. எதுவும் மதிக்கப்படவில்லை. எதுவும் பொருட்படுத்தப்படவில்லை. எதுவும் நினைக்கப்படவில்லை. 'உறல்லோ...' என்று எது துள்ளலோடு கை கொடுத்ததோ அதுவே கையைப் பட்டென்று உதறிக் கொண்டது. தோளில் விழுந்த கைகள் தானே விலகிக்கொண்டன. பார்த்து, சிரித்து, பழகி, கை கொடுத்து மகிழ்ந்த நண்பர்கள் இன்று பார்க்காதது போல் விலகிப் போகிறார்கள். உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பதுபோல் அவர்களின் பார்வை கவனிக்காதது போல் கடந்து செல்கிறது. யார் யாருக்கெல்லாம் நான் வழிகாட்டியாய் இருந்தேனோ, எவர் எவரெல்லாம் என் ஆலோசனைகளை அவ்வப்போது பெற்றார்களோ, அவர்களெல்லாம் என்னைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தன் பணியில் கவனமாகி விட்டார்கள். மென் பொருள் இளைஞர்கள் மென்மையற்றுப் போனார்கள். மேன்மையற்றுப் பிறழ்ந்தார்கள். 'பணம் பந்தி

யிலே, குணம் குப்பையிலே, இதைபார்த்து அறிந்து நடக்காத வன் மனிதனில்லே...' என்று ஒரு பாடலை என் தந்தை அடிக் கடி வீட்டில் பாடிக் கொண்டிருப்பார். அப்பொழுதெல்லாம் அதை அழுகுணிப் பாட்டு என்று நினைத்தவன் நான். அதற் கான முழு அர்த்தம் சமீபத்தில்தான் எனக்குத் தெரிய ஆரம் பித்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். 'இன்னிக்கு ஆபீஸ் போறேன் திரும்பி வரும்போது என்னமா வருவேன்னு சொல்ல முடியாது.' இப்படித்தான் சொல்லிவிட்டு என் மனை வியிடம் விடை பெற்றுக் கொண்டேன் நான். எந்த அதிர்ச் சியை என் மனையாளுக்குக் கொடுத்துவிட்டு வீட்டை விட்டுக் கிளம்பினேனோ, அதே அதிர்ச்சி என் அலுவலகத்தின் வாச லிலேயே எனக்காகக் காத்திருந்தது. அந்தச் செய்தியே அதிர்ச்சிதான். அப்படி நிகழலாம் என்ற எதிர்பார்ப்பில்தான் நானே என்னை இயக்கிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது எனக்கு அறிவிக்கப்பட்ட விதம், அதன் மேன்மை, அப் பப்பா...! என்னைச் சுக்கு நூறாக நொறுக்கிப் போட்டுவிட்ட தய்யா!

தினமும் உள்ளே நுழைகையில் கால்களை அட்டென்ஷனில் வைத்து சல்யூட் செய்யும் அந்த செக்யூரிட்டி சொன்னார் 'சார், நீங்க கொஞ்சம் காரிடார்ல வெயிட் பண்ணுவீங்களாம்...'

'எதுக்கு...?'

'தெரியாது சார்... இப்டி இருங்க...'

அதற்கு மேல் எந்த உரிமையோடு நான் உள்ளே அடியெ டுத்து வைப்பேன்?

நான் ஓடியாடித் திரிந்த அந்த நிறுவனம், அந்தக் கணத்தி லேயே எனக்கு இல்லாமல் போனதுதான் பெரிய சோகம். என் னைக் கடந்து செல்லும் என் நண்பர்கள் ஒரு உறலோ கூடச் சொல்லாமல், அதற்கான அவசியமில்லை என்பதுபோல், பார் வையில் படாதவராகச் சென்று கொண்டிருந்தார்கள். எந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்காக இரவு பகல் பாராமல் நான் உழைத்தேனோ, மற்ற எவராலும் நிகர் செய்ய முடியாத உழைப்பைக் கொட்டினேனோ, அந்த நிறுவனம் ஒரு நிமிடத் தில் என்னைத் தூக்கிக் கடாசி விட்டது மூலையில். மிகக் கேவலமான முறையில் வாசலிலேயே நிறுத்தி விட்டது.

எந்தவொரு முன்னறிவிப்புமில்லாமல், எந்தவொரு சைகையு மில்லாமல், எந்தவொரு பண்பாடுமில்லாமல், ஒரு தொழிலா ளிக்கான எந்தவொரு மரியாதையுமில்லாமல்... என் உழைப்பு நினைக்கப்படவில்லை, மதிக்கப்படவில்லை. என் செயல்க ளுக்கான அங்கீகாரம், என் திறமைகளுக்கான ஒப்புதல், என் தன்முனைப்பிற்கான பீடம் எல்லாமும் அடித்து நொறுக்கப் பட்டன. எல்லாமும் தராசில் நிறுத்து மூலையில் போடப்பட்ட பழைய பேப்பர்க் கட்டுகளாயின. எனக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய கூலி கூட ஏமாற்றப்பட்டது.

'அக்ரீமென்ட்ல சைன் பண்ணியிருக்கீங்களே, கவனிச்சதில் லையா...? ஒன் தேர்ட் இஸ் அலவ்ட் தட்ஸ் ஆல்'.

எப்பொழுது என்னை அவர்கள் வேண்டாம் என்றார்களோ, எப்பொழுது என்னை உதற முற்பட்டார்களோ, பிறகு எனக் கென்ன வந்தது? எல்லாமும் அறிவேன் நான். அனைத்தும் உணர்ந்துதான் இந்த நிறுவனத்திற்குள் அடியெடுத்து வைத் தேன் என்பதுபோல் எனது உரிமைக்காகப் போராடினேன். எனது பக்க நியாயங்களை முன் எடுத்து வைத்தேன். அதில் அவர்கள் தோற்றதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. எனக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை வாங்கிக் கொண்டுதான் நான் என்னை விடுவித்துக் கொண் டேன்.

அங்கே எனது போராட்டம் ஒரு மாபெரும் சக்தியாக மிளிர்ந் தது. எனது உரிமைகள் பறிக்கப்பட்டபோது எனக்குள் கிளர்ந் தெழுந்த கோபம், அந்தத் தார்மீக நெறி அவர்களைச் சுட்டி ருக்க வேண்டும். அவர்களால் எதுவும் பேச முடியாமல் போயிற்று. எதுவும் செய்ய இயலாமல் நிலையற்றுப் போனார் கள் அவர்கள். இந்த நேரத்தில்தான், இந்த இடத்தில்தான், நான் அதை நினைத்துக் கொண்டேன். இந்த நியாயமான உரி மைகளுக்கென்று ஒரு அமைப்பு இருந்திருக்குமேயானால் எனக்கு, என்னைப் போன்ற பல்லாயிரம் பேருக்கு இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? என்று சிந்திக்க முற்படுகி றேன் நான். அதை ஏன் ஏற்படுத்த முடியாது? ஏன் ஏற்படுத் தக் கூடாது? என்ற கேள்விகள் என் மனதில் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

தனி மனிதனாகப் போராடி, எனக்கான ஏமாற்றுதல்களிலி ருந்து என்னைக் காப்பாற்றிக் கொண்ட நான், ஒரு அமைப் பாக இருந்து செயல்பட்டிருப்பேனேயானால் எத்தனை பேருக்கு என்னால் இயன்றதைச் செய்திருக்க முடியும்? எத் தனை பேர் மனதில் சந்தோஷத்தை ஏற்படுத்தியிருக்க முடி யும்? எத்தனை பேருடைய நஷ்டத்தைத் தவிர்த்திருக்க முடி யும்? எனது சிந்தனைகள் நியாயமானவைதான் என்று நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்றே நினைக்கிறேன். இவற்றை ஏனோ உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது எனக்கு. இந்தச் சிந்தனைகள் உங்களுக்குத் தோன்றியிருக் காது என்று அல்ல. ஒத்த சிந்தனைகளோடு உள்ளவர்களோ டுதான் கலந்து கை கோர்க்க முடியும் என்ற நேச உணர் வோடு, மனித நேயச் சிந்தனையோடு தோன்றிய கருத்து இது. எனது இந்தக் குமுறல்களைத் தயவுசெய்து உங்கள் இதழில் வெளியிட வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் என் ஆன்மாசாந்தியடையும். இது சத்தியம்.

கடைசியாக ஒன்று. இன்றைய இறக்க நிலையை நான் அடைந்த இந்த வேளையில்தான் எனக்கே இந்தச் சிந்தனை வந்திருக்கிறது என்பதை வெட்கமின்றி உங்கள் முன் ஒப்புக் கொள்கிறேன். அதற்காக மனமார வருந்தவும் செய்கிறேன். 'தொட்ட பின் பாம்பு என்றும், சுட்டபின் நெருப்பு என்றும், பட் டபின் அறிவதே என் பழக்கமென்றானபின்பு...' என்ற கவியரச ரின் பாடல் வரிகள்தான் எனக்கு நினைவுக்கு வருகின்றன. நன்றி!

அன்புடன்,
வேணு கார்த்திக்
முகவரி அற்றவன்



ushadeepan@thaiveedu.com

# பூப்பு நீராட்டு விழா

– அ. கந்தசாமி



கண்ணன் வீடு வந்தபோது வெளிச்சம் இருளோடு கலந்து கொண்டிருந்தது. அநேகமாக களைத்த முகத்தோடு இரவு எட்டு, ஒன்பது மணியளவில்தான் வீட்டுக்கு வருவார்.

கண்ணன் ரொறன்ரோ வங்கி ஒன்றில் லிகிதர். பல படிகளில் ஏறி, சிலவற்றில் சறுக்கி, இறுகிய முகத்தினரான மேல் மட்டத் தினர்க்கு அவ்வப்போது கையூட்டென்ற மறைவடிவத்தில் கறைபடியா சில அன்பளிப்புகளையும் இடைக்கிடை ரெட் லேபல்களையும் மற்றவர் கண் படாமல் சிரமப்பட்டுக் கொடுத்து, இருக்கின்ற படியைக் காத்துக்கொள்வது ஒரு பகு திநேர வேலைதான்.

இந்த மாதிரியான அன்பளிப்புப் படலங்களுக்கு மத்தியானச் சாப்பாட்டு இடைவேளை மிக உசிதம். எல்லாரும் கண்டீனுக் குள்ளை இருப்பினம்.

இடைக்கிடை அடுத்தவருக்குக் கேட்காமல் மேல் மட்டத்தை நெருங்கி, பல்வகை வணக்கங்கள் வைத்து, 'ஹாவ் எ நைஸ் வீக் எண்ட்' என்பது போன்ற சம்பிரதாயச் சொற்களை உதிர்த்து..

இப்படிப் பல திறுக்கீஸுகள்.

நண்பன் ஒருவன் குழம்பினான்...

'வாங்கிறதிலை பாதியை இவங்களுக்குத் தாரை வார்த்தா, வீட்டுச் சிலவுக்கு என்னப்பா செய்வாய்? பக்கத்து வீட்டு ஓட் டைப் பிரிக்கிறியா? இல்லை அடுத்தவன் வீட்டுத் தென்னை யிலை புல்லுப் பிடுங்கிறியா?'

உன்ரை ஆதங்கம் புரியுது. ஒண்டை மறந்து போனாய் போலை. இங்கை தென்னை மரங்களை வெளியிலை காண வாய்ப்பில்லை. குறைய பட்ஜட்டைச் சரிசெய்ய வார விடுமு றையைத் தாரை வாத்தா போச்சு. இருக்கவே இருக்கு செக்கு ரிட்டி வேலை. இரவுநேரமாய்க் கிடைச்சா நித்திரைக்கும் பங்க மில்லை, காசுக்கும் காசு.

திருவாளர் கண்ணனின் குடும்பம் மெத்தவும் சிறிசு. அங்கத்தி னர் எண்ணிக்கை ஒரு கையின் மூன்று விரல்களோடு முடிஞ்சு போகும்.

மனிசி பூரணி அரைவாசி நேரம் கைபேசிச் சிநேகிதிகளோடை. புருசன்மார் வேலையாலை வர அதுகள் பிச்சுகொண்டு போயிடும். உவளவை போனா என்ன? இருக்கவே இருக்கு விஜய் டிவி. நித்திரைக்கு போகும் வரை அது தாக்காட்டும்.

ஒரே ஒரு பெண்பிள்ளை.

தாயைப்போல கடுஞ் சிவப்பி. வயது பதினைஞ்சை தாண்டிட் டுது எண்டு சொன்னா மற்றவை நம்பாயினம். நல்ல வளத்தி. படிப்பிலை விச்சுழி.

வீட்டு வாசலைத் தாண்டினா பள்ளிக்கூடம், திரும்பினா அறையுக்குள்ள சாத்திக்கொண்டு ஒரே படிப்பு. சகல பாடங்க ளும் தொண்ணுறுக்கும் நூறுக்கும் இடையிலை.

எல்லாம் சரி. மனுசிகாரிக்கு, ஏன் அவருக்கும்தான் பெரும் ஏக் கம். மனவருத்தமும்தான்.

எப்ப பெட்டை கரிக்கோட்டுக்கு பக்கத்திலை மாசா மாசம் படுப்பாளெண்டு. அவளோ உனக்கும் பேப்பே... உன்ரை மனி சிக்கும் பேப்பே... எண்டு திரியிறாள்.

பூப்பு நீராட்டு விழாக் கனவுகளைக் கலர் கலராக் கண்டு கொண்டிருக்கும் பூரணிக்கு இது பெரும் மனக்குறை.

மகள் பிறந்து ஒரு வயசிலை கடனடாவுக்கு வந்தாச்சு. சொந் தக்காறர், சிநேகிதர் கண்டவை கண்டவை எண்டு எல்லாற்ற கொண்டாட்டங்களுக்கும் போய் நூறுக்குக் குறையாமல் மொய் வைக்கிறது இங்க தவிர்க்க முடியாத வழக்கம்.

குடுத்த காசுகளை எப்ப திருப்பி எப்ப எடுக்கிறது?

பூரணிக்கு ஏகப்பட்ட சிநேகிதியள். இப்ப கைபேசி கிணுகி ணுத்தால் நெஞ்சித்துடிப்பு எகிறுது. லைனிலை வாறவளெல் லாம் பிக் பாஸ்சிலை துவங்கி எல்லா விண்ணாணங்களையும் சளாப்பிற்று, முற்றுப்புள்ளிக்கு முதல் 'நித்தியா எப்பிடி இருக் கிறா, இன்னும் குந்திற எண்ணம் இல்லப்போலை' எண்டு ஒரு கிண்டலாய்க் கேட்ட பிறகுதான் போனை வைக்கிறாளுகள். வாயிலை சுடு சூடு எண்டு வரும். என்னசெய்ய? என்ரை தலைவிதி.

பெத்த பிள்ளையிட்டை 'கெதியா சாமத்தியப்படடி' எண்டு சொல்ல முடியுமே?

அண்டைக்கு கண்ணன் வழக்கத்துக்கு மாறா கொஞ்சம் வெள்ளணவா வேலையாலை வந்திட்டார். நித்தியா எப்பவும் போல சாத்தின அறையுக்குள்ளைதான்.

குடுத்த பால் கோப்பியை உறிஞ்சிக்கொண்டு சோபாவிலை சாஞ்சபடி ‘நித்தியா எங்கை’ எண்டு கண்ணாலை கேட்டார்.

பூரணி சாத்தியிருந்த அறைக்கதவை விரலால் சுட்டினாள். ‘பெரிய கோலாப் பாக்கவேணும்’ சம்மந்தம் இல்லாமல் முன கினார்.

பூரணிக்குப் பிடிபடயில்லை.

‘கெலிக்கொப்டறிலை கொண்டந்து கோல் வாசலிலை இறக்கி விடுறதெல்லாம் பழைய பாஸன்’... பூரணிக்கு இப்ப விளங்கிட் டுது. மனிசன் நித்தியாவின்ரை பூப்பு நீராட்டுவிழா நடக்கிற மண்டப வாசலிலை நிக்கிறார்.

இது பூரணிக்கு மிகப் பிடிச்ச தலைப்பாச்சே... பக்கத்திலை போய் நிண்டு கொண்டாள்.

‘ஓமோம் அதெல்லாம் அதரப் பழசு பாருங்கோ. நாங்கள் வித் தியாசமா மற்றவை நினைக்காத மாதிரிச் செய்யவேணும். ஒரேயொரு பெட்டை. எங்களுக்கு எல்லாம் அவள்தானே’.

‘ஷால்ரன்கெஸ்ரன் நடிச்ச பென்ஹர் எண்ட இங்கிலீஸ் படம் பாத்தானாங்கலெல்லோ’ எண்டு கண்ணன் சொல்ல, பூரணி முமுசினாள். விஜய் டிவியிலை அப்பிடி ஒரு படம் பார்த்ததா அவளுக்கு நினைவில்லை.

‘அவன்தானப்பா டென் கொமாண்மென்சிலை நடிச்ச மெல் லிய நெடுவல்’ பூரணிக்கு இதுக்குமேல் தாக்குப்பிடிக்க முடி யவில்லை. கடுப்பேறிய முகத்தோடு கண்ணனைப் பார்த் தாள்.

நானும் நீரும் அப்ப றீகல் தியேட்ரிலை சீஸ் துண்டும் கிறாக்க சும் திண்டுகொண்டு இந்தப் படத்தைப் பார்த்ததை மறந்து போனீர்.

பூரணியின் கண்கள் இயல்பிலேயே கண்ணாடிக் குண்டுகள் போல. இப்போது முழி வெளியே வந்து விடும்போல் இமைக ளுக்குள் பிதுங்கிற்று.

அக்காலத்தில் கண்ணன் அருகில் இருக்கும்போது பத்தும் மறந்து போகும் அவளுக்கு. இதிலை... அந்த இங்கிலீசுப் படம் ஞாபகத்துக்கு வாறத்துக்கு வாய்ப்பே இல்லை.

‘சரியான அறணையப்பா நீர். அந்தப் படத்திலை ஒரு ஷரியற் ரேஸ் வரும். ஷரியற் எண்டுறது தேர். நாலு வெள்ளைக் குதி ரையளைப் பூட்டின அப்பியான ஒரு ஷரியற்ரை சிம்மாசனம் மாதிரி அலங்கார இருக்கையோடை கொண்டு வந்து மகளை இறக்கிறன் பார்.’

பூரணி கண்ணனை உற்றுப் பார்த்தாள். இவருக்கு என்ன ஆச்சு?

கண்ணன் கண்களைப் பாதி மூடியபடி தொடர்ந்து பேசினார்.

‘பிள்ளையை அம்மனை அலங்கரிக்கிற மாதிரி அலங்கரிச்சு, பக்கத்திலை நானும் நீயும் இருந்து கொண்டு, இந்த உலகத் துக்குக் காட்சி கொடுக்கவேணும்.’

அந்தக் கற்பனையில் பூரணியும் கலந்தாள்.

கடவுளே! நித்தியாவுக்கு ஒரு வழியைத் திறந்து விடு.

இருவருமாகக் கற்பனையில் உலகம் வியக்கும் ஒரு பூப்பு நீராட்டு விழாவை நடத்தி முடித்தார்கள்.

கற்பனாவெளியை விட்டுப் பூரணி வெளியே வந்து யோசனை யில் ஆழ்ந்தாள்.

இந்தமுறை பெற்றோர் தினக் கூட்டத்திற்கு இவர்கள் போயிருந்தபோது மிஸிஸ் லொக்வூட் இவர்களோடு பேசி னாள்.

‘நித்தியாவின் படிப்பில் எந்தக் குறையும் சொல்ல முடியாது நல்லாவே படிக்கிறாள். ஆனால் சமீப நாட்களாக அவள் (இன்றாவேர்ட்டாக) உள்ளுறங்கும் நிலையில் இருப்பதாக ஆசிரியர்களில் பலர் குறிப்பிட்டார்கள். வகுப்பில் கலகலப் பாக இருப்பதில்லை. பாடங்களை அவதானிக்கிறாள். அதில் கேள்விகள் கேட்டால் சரியான விடைகளை அவளால் தரமுடி கிறது. ஓய்வு நேரங்களில் வகுப்பை விட்டு வெளியே தலை காட்டுவதில்லை. அவளுடைய நோட்டுப் புத்தகங்களின் பல பக்கங்கள் கோட்டோவியங்களால் நிறைந்துள்ளன. அவள் மனச்சிதைவை நோக்கி நகர்கிறாளோ என்று அச்சப்படுகி றேன்.’

தலைமை ஆசிரியர் கதைத்த பல விஷயங்கள் வழக்கம் போல பூரணிக்குப் புரியவில்லை. புருசனின் முகத்தை பார்த் தாள். அதில் நீரோட்டம் இல்லை. கட்டிபட்டு உறைந்திருந் தது. இது ஒன்றும் புதிதில்லை. வழக்கமாகவே அவர் முகம் அப்படித்தான்.

இருவரும் வீடு திருப்பும்போது, பூரணி பல வினாக்களோடு அவனைப் பார்த்தாள். ‘இல்ல..., அவள் சாமத்தியப்பட்டால் எல்லாம் சரியா வந்திடும்’ என்றான் கண்ணன்.

நித்தியா தானும் தன்பாடும். இருக்கிற அசுமாத்தமே தெரி யாது. அறையை விட்டு அத்தி பூத்தாப்போல் தான் வெளி யிலை தலை காட்டுவாள். தகப்பன் இருந்தால் அதுவும் இல்லை. குகைக்குள் இருப்பது போன்ற சூழலை அவள் உரு வாக்கிக் கொண்டிருக்கிறாள்.

பூரணிக்கு மனசுக்குள் குமுறல்தான்.

ஒரு பிள்ளையை பெத்தம். வடிவான சிவலைப் பெட்டை.

கலியாணம் காட்சிக்கு சாதகத்தை கமக்கட்டுக்குள்ளை சொருகிக் கொண்டு திரியத் தேவையில்லை. உனக்கு எனக் கென வரிசைகட்டி நிப்பானுகள்.

அதுக்கு முதல்...?

பல கோயில்களுக்கு நேர்த்தி வைச்சாச்சு. ஐயர்மார் ஆற்றை பேருக்கு அரிச்சனை எண்டு கேக்கேக்க கொஞ்சநேரம் திகைப்பூண்டிலை மிதிச்சிட்டுத்தான் நித்தியா எண்டு முனக வேண்டி இருக்கு.

நாக்கிலை வேல் குத்தி மொட்டை போடலாம் என்றால் இப் பவே கண்ணனுக்குக் காதோரமா பிடரிப் பக்கம் நரை கலந்த கொஞ்சமுடிதான் மிஞ்சி இருக்கு.

சந்நிதியானே எல்லாத்துக்கும் ஒரு வழியை காட்டப்பா!

ஆரும் விசயம் தெரிஞ்ச டொக்டர்மார்ரெட்டை காதும் காதும்



வைச்சாப் போலை காட்டிப் பாக்கலாம்தான். அதுக்கு அவள் பொடிச்சி ஒத்துக்கொள்ள வேணுமே.

சுத்திச் சுழண்டும் கடசிலை சுப்பற்றை கொல்லையுக்கதான்.

கனவும் நினைவும் திரும்பத் திரும்ப அங்கைதான் கொண்டு போய் விடுகுது.

சாமத்திய வீட்டின்ரை எல்லா அடுக்குகளும் தனித்தனியாச் செய்யவேணும். ரொறன்ரோவில எந்த ரெஸ்ரூரன்ரிலை வித்தியாசமான சாப்பாடுகளை மேசைக்குக் கொண்டுவாறாங்களோ அவங்களுக்கு இப்பவே முன்பணத்தைக் குடுத்து புக் பண்ணவேணும்.

இருக்கிறதோ ஒரே பெட்டை. காசைத் சேர்த்து ஆருக்கு?

இப்படிப்... பெருக்கெடுக்கிற ஆசைகள் ஆயிரம்.

அதுக்கு..., அவள் குந்தவேணுமே!

அமெரிக்காவிலை, பிரான்ஸ்ஸிலை, அவுெர்திரேலியாவிலை எண்டு எங்கடை நெருங்கிய சொந்தங்கள் கனபேர் இருக்கினம். சொல்லாமல் விட்டால் துலைஞ்சம். வாறவையைத் தங்க வைக்கிறதுதான் பெரிய பிரச்சினை. பாப்பம். காசைப் பாக்கேலாது. நல்ல ஹோட்டல்களிலை தங்க வைக்கவேணும்.

**கா**லை பத்து மணி. நித்தியாவின்ர பள்ளிக்கூடத்திலை இருந்து ஓர் அழைப்பு. ‘பெற்றோர் மதியச்சாப்பாடு இடைவே

ளையிலை பள்ளிக்கு வந்து அதிபரைச் சந்திக்க வேண்டு மாம்' எண்டு அழைப்புக் கூறியது.

பூரணிக்குப் பதட்டம். கண்ணனையும் வரச்சொல்லி இருவரும் பள்ளிக்குப் புறப்பட்டார்கள்.

வெளிக்கிடும் போதுதான் பல கேள்விகள் பூரணிக்குள் கிளைத்தன.

'ஒரு வேளை பிள்ளை பெருசாகிற்றாளோ? இருக்காது. இந்த ஊரிலை உதுகளைப் பெரிய விசயமாப் பறையமாட்டினம். எங்களுக்குத்தான் மனப்பாரம். ஏதும் தேவையெண்டா, அவ ரோடதானே கதைப்பினம். இண்டைக்கு என்னையும் ஏன் கூப் பிடுகினம்.

மட்டுப்படுத்தபட்ட எண்ணங்களுக்குள்ளேயே கட்டுப்பட்டுப் பழகிப்போன அவள் மனம், கூண்டு திறந்திருந்தாலும் வெளியே போக மறுத்தது.

கண்ணனும் பூரணியும் தலைமை ஆசிரியையின் அறைவா சலை அடைந்தபோது... நித்தியாவும் அங்கே இருந்தாள். தாய்க்காரி என்ன, ஏது என்று பதட்டத்தோடு கேட்க, நித்தியா பதில் பேசாமல் விலத்தித் தூரமாய் நகர்ந்து சென்றாள்.

பூரணியின் பற்கள் உதட்டுக்குள் நறுநறுத்தன. அடிச்சு வழக் காத குறை. இந்த ஊரிலை அதுக்கும் வழியில்லை.

திருமதி. லொக்வூட்டின் முன்னால் மூவரும் போய் இருந்த போது, அவர் நித்தியாவைப் பார்த்து தலையசைத்து மெல்லி சாகப் புன்னகைத்தார். லொக்வூட் சட்டெனப் பேசவில்லை. கதிரையில் தலையை சாய்த்து மேல்முகட்டை சிறிது வெறித் தார். தனக்குள்ளாகவே கதைத்துக் கொள்ளும் பாவனையில் தலையை அசைத்துச் சிரித்துக் கொண்டார்.

இமைகளிரெண்டையும் தாண்டிப் பிதுங்கின பூரணியின் விழி கள்.

கண்ணனால் பொறுமை காக்க முடியவில்லை.

'மேடம்'... என்று கண்ணன் திறந்த வாயை மூடுமுன், திருமதி லொக்வூட் அவரை மவுனமாக இருக்கும் படி சைகை செய் தார். கண்ணனுக்கு ஆத்திரம் உச்சி மயிரைத்தேடி அங்கு காணாமல் பிடரி மயிரைப் பிய்த்து கொண்டிருந்தது.

'இந்த மனிசி எங்களைப் பற்றி என்ன நினைச்சுக்கொண்டிருக் கிது. ஸ்கூல் போர்ட்டுக்கு ரிப்போட் பண்ண வேணும். இல் லையெண்டா, நித்தியாவை வேறை பள்ளிக்கூடத்துக்கு மாத் தவேணும். அதுவும் லேசில்லை நடக்காது.

கண்டறியாத நாடும் வாழ்வும்... பேசாம... ஊரோடையே இருந் திருக்கலாம்.'

திருமதி லொக் மவுனம் கலைத்தார்.

'மிஸ்டர் கண்ணன், இப்ப உங்களுக்கு என்ன பிரச்சனை. பிள் ளையின்ர பூப்பு நீராட்டு விழாவை பெரிசா, மிகப் பெரிசா செய்யவேணும் எண்டுறதுதானே.

கண்ணன் ஆசுவாசமானார். முகம் சற்றே மலர்ந்தது.

ஓம்... எங்கட ஒரே பிள்ளை... எங்கட சொந்தபந்தங்களை ஒன் றாய்ச் கூட்டுறத்துக்கு இதைவிட வாய்ப்பு இல்ல. பெரிய ஹோல்... ஒரு ஆயிரம் பேர். தேர் எல்லாம் வரும். உங்களுக் கும் சொல்லுவம். எங்கட பண்பாட்டை நீங்களும் பார்க்க வேணும்.

பூரணி எல்லாம் விளங்கியவள் போல் தலையை ஆட்டினாள். நித்தியா நிமிரவே இல்லை.

திருமதி லொக் இடைமறித்தார்.

உது உங்கட ஆசை. பிள்ளையோடை உதுகளைப் பற்றிக் கதைச்ச நீங்களோ.'

பெற்றார் இப்படிச் செய்ய எங்கட பிள்ளை குடுத்து வைச்சி ருக்கோணும். அவளுக்கு இதிலை பெருஞ் சந்தோஷமாய் இருக்கும்.

இல்லை. அவளுக்கு இதிலை விருப்பமில்லை. நீங்கள் இப்ப டியெல்லாம் செய்யக்கூடாது எண்டுறதை தன்னாலை உங்க ளுக்குச் சொல்ல முடியாது எண்டுதான், உங்களைக் கூப் பிட்டு என்னைச் சொல்லச் சொன்னாள்.

கண்ணன் நாடி நரம்புகள் எல்லாம் உறைய அதிர்ந்து போனார். அறைகுறையாக விளங்கிய பூரணி கண் கலங்கி னாள்.

குனிந்த தலையை நித்தியா நிமிர்த்தவேயில்லை.

'சரி... மேடம், பிள்ளை இன்னும் சாமத்தியப்படேல்லை. அதுக் குப் பிறகு நாங்கள் பிள்ளையோட பேசிச் செய்யுறம்.' நாங்க போயிட்டு வாறம்.'

என்ன! என்ன சொல்லுறியள்? அவள் பெரிய பிள்ளையாகி ஒரு மூண்டு வருசம் இருக்கும். இங்க... இங்கதான் பள்ளிலை நடந்தது. உங்களுக்குத் தெரியாதா?

கண்ணனுக்கும் பூரணிக்கும் அந்த அறை மட்டுமல்ல, உல கமே இருண்டது.

சட்டென எழுந்த நித்தியா அறையை விட்டுச் சென்றுவிட் டாள்.

'நீங்கள் ஊர் மாறித்தான் வந்திருக்கிறியள். உங்கடை உள் ளங்கள் மாறவேல்லை. இங்க பிள்ளைகளோட உணர்வுக ளுக்குப் பெரிய மதிப்பு இருக்கு. சட்டமும் அதுக்குத் துணை. நாங்கள் என்ன நடக்குது எண்டுறதைக் கவனிச்சுக்கொண்டி ருப்பம். நீங்கள் போயிட்டு வாங்கோ.

திருமதி லொக் கதையை முடித்துக்கொண்டார்.

பூரணி இருக்கையை விட்டெழ முயற்சித்தாள். முடியவில்லை.

கண்ணன் எழுந்து நடந்தார். அவரது இயல்பான கம்பீரம் அவரை விட்டு விலகியிருந்தது.

அது தடியூன்றி நடக்கும் தள்ளாட்டம்.



kandasamy.a@thaiveedu.com



# சூனியக்காரி

– ஷேளி ஜக்சன்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

புகையிரதப் பெட்டி ஏறக்குறைய ஆட்களின்றி வெறுமனே இருந்தது. அதனால் அந்தச் சின்னஞ்சிறிய சிறுவனுக்கே நீண்ட இருக்கை முழுவதும் சொந்தமாகியது. அவனுடைய தாய் அந்த இருக்கைக்கு எதிரே இருந்த இருக்கையில் அவனுடைய சிறிய தங்கையுடன் இருந்தாள். அக்குழந்தை ஒரு கையில் ஒரு துண்டுப் பாணையும் மறுகையில் கிலுகிலுப்பை ஒன்றையும் வைத்திருந்தது. அவளது குழந்தை இருக்கையில் பத்திரமாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தாள். அதில் அவள் நிமிர்ந்திருக்கலாம். தன்னைச் சுற்றிப் பார்க்கலாம். அவள் எப்போதாவது ஒரு பக்கமாக மெதுவாக நழுவத் துவங்கினால் கட்டியிருந்த வார் அவளை இறுகப் பிடித்துக் கொள்ளும். தாய் திரும்பிப் பார்த்து திரும்பவும் இறுக்கிக் கட்டும் வரை அப்படியே அக்குழந்தை இருக்கும். சின்னஞ்சிறிய சிறுவன் யன்னலால் வெளியே பார்த்துக் கொண்டு ஒரு பிஸ்கட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தாய் அமைதியாக வாசித்துக் கொண்டிருந்தாள். சிறுவன் கேட்கும் கேள்விகளுக்கு அவனைப் பார்க்காமலேயே பதில்களையும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'நாங்கள் இப்போது ஒரு ஆற்றின்மேல் போய்க் கொண்டிருக்கிறோம். இது ஒரு ஆறு. அதன் மேல் நாம் போய்க் கொண்டிருக்கிறோம்,' என்றான் சிறுவன்.

'சரி,' என்றாள் தாய்.

'நாங்கள் ஆற்றின் மேலுள்ள பாலத்தின் மேல் போகிறோம்,' என்றான் தனக்குத்தானே.

புகையிரதத்தில் இருந்த ஒரு சிலர் வண்டியின் அடுத்த பக்கத்தின் கடைசியில் இருந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் எவராவது நடைபாதையால் வந்தால் சிறுவன் அந்தப் பக்கம் 'ஹாய்,' என்பான். அந்நியனும் பொதுவாக 'ஹாய்,' என்று திருப்பிச் சொல்லுவான். சிலவேளைகளில் அந்த அந்நியன் அந்தச் சிறுவனைப் பார்த்து ரயில் பயணத்தை நீ நன்றாக அனுபவிக்கிறாயா? என்று கேட்பான். அல்லது நீ ஒரு பெரிய ஆள் என்று சொல்லுவான். இந்த வகையான குறிப்புரைகள் அந்தச் சிறுவனை எரிச்சல் படுத்தின. எரிச்சலடைந்து யன்னல் பக்கம் திரும்பிப் பார்ப்பான்.

'அங்கே ஒரு பசு நிற்கிறது.' என்று சொல்லுவான். அல்லது 'இன்னும் எவ்வளவு தூரம் நாங்கள் போக வேணும்,' என்று சொல்லி பெருமூச்சு விடுவான்.

'இன்னும் கன தூரம் இல்லை,' என்று ஒவ்வொரு முறையும் தாய் சொல்லுவாள்.

இதுவரை மிகவும் அமைதியாகவும் தன்னுடைய கிலுகிலுப்பையுடனும், தாய் அடிக்கடி கொடுத்த பாணுடனும் சுறுசுறுப்பாக இருந்த குழந்தை இப்போது ஒரு பக்கமாக வெகு தூரம் சரிந்து தலையை முட்டிக் கொண்டு அழத் துவங்கியது. ஒரு நிமிசம் தாயின் இருக்கையைச் சுற்றிச் சத்தமும் சலனமுமாக இருந்தது. சிறுவனும் தன் இருக்கையிலிருந்து நழுவி கீழே போய் இடை கழியாக ஓடிச் சென்று தன் தங்கையின் பாதங்களைத் தடவிவிட்டான், அவளை அழாமல் இருக்கச் சொல்லிக் கெஞ்சினான். இறுதியில் அந்தக் குழந்தை சிரித்து விட்டுப் பாணைச் சாப்பிட்டது. சிறுவனுக்கும் ஒரு லொல்லிப்பொப் இனிப்பை தாய் சாப்பிடக் கொடுத்தாள். அவன் திரும்பவும் யன்னலடிக்குப் போய் இருந்து கொண்டான்.

ஒரு நிமிசத்திற்குப் பின், 'நான் ஒரு சூனியக்காரியைக் கண்டேன்,' என்று தாய்க்குச் சொன்னான். 'வெளியே அசிங்கமான முதிய, கெட்டதொரு சூனியக்காரியைக் கண்டேன்,' என்றான்.

'சரி,' என்றாள் தாய்.

'அவள் பெரியதொரு அசிங்கமான சூனியக்காரி. நான் அவளைப் போ என்று சொன்னேன். அவள் போய் விட்டாள்,' என்று அந்தச் சிறுவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டே இருந்தான், அமைதியாகக் கதை சொல்லும் பாணியில். 'அது திரும்பி வந்து, 'உன்னை நான் சாப்பிடப் போகிறேன்,' என்றது. 'இல்லை, நீ என்னைச் சாப்பிடக் கூடாது,' என்று சொல்லி அந்த கெட்ட முதிய இழிவான சூனியக்காரியைக் கலைத்து விட்டேன் என்றான்.

அவன் பேசுவதை நிறுத்தி விட்டு, வண்டியின் வெளிக் கதவைப் பார்த்தான். அதைத் திறந்து கொண்டு ஒருத்தன் உள்ளே வந்தான். அவன் ஒரு முதியவன். தலைமுடி வெண்மையாக இருந்தது. இனிய முகம். அவன் அணிந்திருந்த நீல நிற ஆடை நீண்ட ரயில் பயணத்தால் சற்றுக் கசங்கி இருந்தது. அவன் ஒரு சுருட்டைக் கையில் வைத்திருந்தான். சிறுவன் அவனைப் பார்த்து, ஹாய் என்றான். அப்போது அவன் கையில் சுருட்டொன்று இருந்தது. அவன் சிறுவனைப் பார்த்து, 'ஹலோ, எப்படி இருக்கிறாய், மகனே,' என்றான். சிறுவன் இருந்த இருக்கைக்கு அருகில் நின்று பின்னால் சாய்ந்து கொண்டு, சிறுவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்காகச் சிறுவன் தன் கழுத்தை மேலே உயர்த்தினான். 'அந்த யன்னலால் நீ எதைப் பார்க்கிறாய்?' என்று அந்த மனிதன் அவனைக் கேட்டான்.

'சூனியக்காரிகளைப் பார்க்கிறேன். கெட்ட முதிய இழிவான சூனியக்காரிகளை.'



‘அப்படியா ? அப்படிப் பலரைக் கண்டிருக்கிறாயா ?’ என்று கேட்டான்.

‘என்னுடைய அப்பா சுருட்டுக் குடிப்பார்,’ என்றான் சிறுவன்.

‘எல்லா ஆண்களும் சுருட்டுக் குடிப்பார்கள். ஒருநாள் நீயும் சுருட்டுக் குடிப்பாய்,’ என்றான் அந்த மனிதன்.

‘ஏற்கெனவே நான் ஒரு ஆண் தான்,’ என்றான் சிறுவன்.

‘உனக்கு எத்தனை வயது ?’ என்று அந்த மனிதன் கேட்டான்.

காலவரம்பில்லாத அந்தக் கேள்விக்கு சிறுவன் சந்தேகத்துடன் அந்த மனிதனை ஒரு நிமிசம் பார்த்து விட்டு, ‘இருபத்தாறு. எண்ணூற்று நாற்பத்தெட்டு,’ என்றான்.

அப்போது அவனுடைய தாய் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து தலையைத் தூக்கி, ‘நாலு’ என்று சொல்லி விட்டு, தன் மகனை அன்புடன் பார்த்தாள்.

‘அப்படியா ? இருபத்தாறு,’ என்று அந்த மனிதன் சிறுவனிடம் கண்ணியமாகச் சொன்னான். எதிர்ப்புறம் இருந்த தாயைப் பார்த்து தலையாட்டி விட்டு, ‘அது உன் அம்மாவா ?’ என்று கேட்டான்.

சிறுவன் அவளைப் பார்ப்பதற்காக தலையை நீட்டிய பின், ‘ஓம், அது என் அம்மாதான்’ என்றான்.

‘உன்னுடைய பெயர் என்ன ?’ என்று அந்த மனிதன் சிறுவனைக் கேட்டான்.

சிறுவன் திரும்பவும் அவனைச் சந்தேகத்துடன் பார்த்து விட்டு, ‘திரு ஜீசஸ்,’ என்றான்.

‘ஜோனி,’ என்றாள் சிறுவனின் தாய். அவள் சிறுவனின் கண்களைப் பார்த்து கடுமையாக தன் முகத்தைச் சுளித்தாள்.

‘அங்கே இருப்பவள் என் தங்கை. அவளுக்குப் பன்னிரண்டரை வயது,’ என்றான் சிறுவன்.

‘நீ உன் தங்கையில் அன்புள்ளவனா ?’ என்று அந்த மனிதன் கேட்டான். சிறுவன் அவனை உற்றுப் பார்த்தான். அப்போது அந்த மனிதன் சிறுவனின் இருக்கையைச் சுற்றி வந்து அவன் பக்கத்தில் இருந்து கொண்டான். ‘நான் என்னுடைய தங்கையைப் பற்றிச் சொல்லப் போவதைக் கேட்பாயா ?’ என்று அந்த மனிதன் கேட்டான்.

அந்த மனிதன் தன் மகனின் பக்கத்தில் போய் இருப்பதை பதற்றத்துடன் கவனித்துக் கொண்டிருந்த தாய் அமைதியாக தன் புத்தகத்தில் திரும்பவும் கவனம் செலுத்தினாள்.

‘உங்கள் தங்கையைப் பற்றிச் சொல்லுங்கள். அவள் ஒரு சூனியக்காரியா ?’ என்று சிறுவன் கேட்டான்.

‘இருக்கலாம்,’ என்றான் அந்த மனிதன்.

சிறுவன் உற்சாகமாகச் சிரித்தான். அந்த மனிதன் பின்னால் சாய்ந்திருந்து சுருட்டைப் புகைத்தான். பின் ‘முன்னொரு காலத்தில் எனக்கு ஒரு சிறிய தங்கை இருந்தாள். உன் தங்கையைப் போல,’ என்று தன் கதையை ஆரம்பித்தான். சிறுவன் அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்கும் தலையை ஆட்டிக் கொண்டிருந்தான். ‘என்னுடைய சிறிய தங்கை மிகவும் அழகானவள், மிகவும் இனிமையானவள். அதனால் உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் பார்க்க அவளின் மேல் நான் அன்பு கொண்டிருந்தேன். அதனால் நான் என்ன செய்தேன் என்று உனக்குச் சொல்லவா ?’ என்றான் அந்த மனிதன்.

அதற்கு அந்தச் சிறுவன் மேலும் தீவிரமாகத் தலையை ஆட்

டினான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த தாய் தன் கண்களை புத்தகத்திலிருந்து எடுத்து புன்னகைத்தாள்.

'நான் அவளுக்கு ஒரு ஆடும் குதிரையையும் ஒரு பொம்மையும் மில்லியன் கணக்கான லொலிபொப்பையும் வாங்கிக் கொடுத்தேன். பிறகு அவளைத் தூக்கினேன். என் கைகளை அவளுடைய கழுத்தைச் சுற்றிப் போட்டேன். பின் அவளை நுள்ளத் துவங்கினேன். அவள் சாகும்வரை நுள்ளிக் கொண்டே இருந்தேன்.
சிறுவன் மூச்செடுக்கக் கஷ்டப்பட்டான். அவன் தாய் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய புன்னகை மங்கிக் கொண்டிருந்தது. தன் வாயை ஒருமுறை திறந்தாள். திரும்ப மூடினாள். அந்த மனிதன் தன் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான். 'அவளைத் தூக்கி அவளுடைய தலையை வெட்டி எடுத்துக் கொண்டேன்...'

'அவளைத் துண்டு துண்டாக வெட்டினீர்களா?' சிறுவன் கேட்டான், திணறிக் கொண்டே.

'நான் அவளுடைய தலையையும் பாதங்களையும் தலைமுடியையும் மூக்கையும் வெட்டினேன். பிறகு ஒரு தடியால் அடித்து அவளைக் கொன்றேன்.'

'ஒரு நிமிசம் பொறுங்கள்,' என்றாள் சிறுவனின் தாய். அவள் வைத்திருந்த குழந்தை அந்த நிமிசத்தில் பக்கவாட்டாகச் சரிந்து விழுந்தது. குழந்தையை அவள் சரி செய்து திரும்பவும் நிமிர்த்தி வைத்தபோதும் அந்த மனிதன் தன் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'அவளின் தலையைத் தூக்கி அவள் தலைமயிரை இழுத்தெடுத்தேன்...'

'உங்கள் சின்னஞ்சிறிய தங்கச்சியையா?' சிறுவன் ஆர்வத்துடன் அவனைத் தூண்டித் தூண்டிக் கேட்டான்.

'ஓம், என்னுடைய சின்னஞ்சிறிய தங்கச்சியைத்தான்,' என்றான் திட்டவட்டமாக. 'பிறகு அவளுடைய தலையை ஒரு கரடி இருந்த கூண்டிற்குள் வைத்தேன். கரடி அவளை முழுவதாக சாப்பிட்டுவிட்டது.'

'அவளுடைய தலை முழுவதையுமா?'

அவனுடைய தாய் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, இடைகழியைக் கடந்து அங்கே வந்து, அந்த மனிதனின் பக்கத்தில் நின்று, 'நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறாய்?' என்றாள். அவன் இணக்கமாக அவளைப் பார்த்தான். அவள், அவனைப் பார்த்து 'இங்கிருந்து போய் விடு,' என்றாள்.

'நான் உங்களைப் பயமுறுத்தி விட்டேனா?' என்று கேட்டான். அவன் சிறுவனைக் கீழே பார்த்து தன் முழங்கையால் அவனை இடித்தான். அவனும் சிறுவனும் சிரித்தார்கள்.

'இவன் தன் சிறிய தங்கச்சியை வெட்டிப் போட்டான்,' என்று தன் தாய்க்குச் சொன்னான் சிறுவன்.

'ரயில் பாதுகாவலனை அழைக்கவா,' என்றாள் தாய் அந்த மனிதனுக்கு.

'ரயில் பாதுகாவலன் என்னுடைய அம்மாவைச் சாப்பிட்டு விடுவான்,' என்றான் சிறுவன். 'நாங்கள் அவளுடைய தலையை வெட்டி எடுப்போம்.'



ஷேளி ஜக்சன் - 1916-1965, அமெரிக்கப் பெண் எழுத்தாளர். இவர் தன் கதைகளில் திகில், மர்மம், பயங்கரம் ஆகிய கருப்பொருள்களைக் கையாண்டிருக்கிறார். ஆறு நாவல்கள், இரண்டு நினைவுக் குறிப்புகள், இருநூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவருடைய 'லொட்டறி' என்ற சிறுகதை பல சிறுகதைத் தொகுப்புக்களில் இடம்பெற்றுள்ளது. Life Among the Savages, The Haunting of Hill House, We Have Always Lived in the Castle ஆகியவை பெயர்போன ஆக்கங்கள். இவரின் கதைகளில் சில திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டுள்ளன. இவருக்குப் பல விருதுகளும் பரிசுகளும் கிடைத்துள்ளன. மிகச் சிறந்த அமெரிக்கக் கதைகள், ஓ'ஹென்றிப் பரிசு போன்றவை அவற்றில் சில. இவரது கணவன் ஓர் இலக்கிய விமர்சகர்.

'உன் தங்கச்சியின் தலையையும் வெட்டுவோம்,' என்றான் அந்த மனிதன், எழுந்து கொண்டே. அவன் வெளியேறத் தாயும் எழுந்தாள். 'இந்த வண்டிக்கு நீ ஒருபோதும் வரக் கூடாது,' என்றாள் தாய்.

'என்னுடைய அம்மா உன்னைச் சாப்பிட்டு விடுவார்,' என்றான் அந்தச் சிறுவன் அந்த மனிதனைப் பார்த்து.

அந்த மனிதன் சிரித்தான். சிறுவனும் சிரித்தான். 'மன்னிக்கவும்,' என்று சொல்லிவிட்டு அந்த வண்டியிலிருந்து அவளைக் கடந்து அவன் வெளியேறினான். அவன் போய் கதவு மூடிய பின், சிறுவன், 'எவ்வளவு நேரம் இந்த பழைய ரயிலில் நாங்கள் இருக்க வேணும்,' என்று தாயைக் கேட்டான்.

'கன நேரமில்லை,' என்றாள் தாய். பின் எதையோ சொல்வதற்காகச் சிறுவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசியில், 'இங்கே சும்மா நல்ல பிள்ளையாக இரு. இன்னொரு லொல்லிபொப் தருகிறேன்,' என்றாள்.

சிறுவன் விருப்பத்துடன் கீழே இறங்கி தாய்க்குப் பின்னால் போய் அவளுடைய இருக்கைக்குச் சென்றான். அவள் தன்னுடைய பைக்குள்ளிருந்து ஒரு லொல்லிப்பொப்பை எடுத்து அவனுக்குக் கொடுத்தாள். 'என்ன சொல்லுவாய்?' என்றாள்.

'நன்றி,' என்றான். 'அந்த மனிதன் உண்மையாகவே தன் தங்கச்சியின் உடலை துண்டு துண்டாக வெட்டினானா?' என்று அவன் தன் தாயைக் கேட்டான்.

'அவன் சும்மா பகடி விடுகிறான்,' என்றாள். திரும்பவும், 'அவன் பகடி விடுகிறான்,' என்றாள்.

'இருக்கலாம்,' என்று சொல்லிவிட்டு சிறுவன் தன் லொல்லிபொப்புடன் தன் இருக்கைக்குச் சென்று அமர்ந்துகொண்டு யன்னலால் திரும்பவும் வெளியே பார்த்து, 'அவன் ஒரு சூனியக்காரனாக இருக்கலாம்,' என்றான்.



mahalingam.k@thaiveedu.com


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
Each Office Independently Owned and Operated.
RE/MAX
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

# தனுஜன் தேவதாஸின்
# மிருதங்க அரங்கேற்றம்











மிருதங்க ஆசான் வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவனான செல்வன் தனுஜன் தேவதாஸ் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம், அக்ரோபர் 26, 2024 சனிக்கிழமை, ஸ்காபரோ-சீனக் கலாச்சார மையத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. தனுஜன், ரொறன்ரோவில் சட்டவாளர்களாகப் பணியாற்றி வரும் வாசுகி-தேவதாஸ் இணையரின் மகன் ஆவார். அன்றைய அரங்கேற்ற நிகழ்வைப் பார்வையாளர் பலரும் பாராட்டி தனுஜனை வாழ்த்திச் சென்றனர். இந்நிகழ்வில், வாசுகி-தேவதாஸ் இணையரால் தமிழ்ப் பண்பாட்டு மையத்துக்கு 25,000 டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டது.












உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

*33 Years Canadian Experience*

AUGUSTINE & ASSOCIATES

# INCOME TAX

OUR SERVICES

- Personal, Business and Corporate Tax Services
- GST, HST & QST
- Accounting & Bookkeeping
- Payroll
- T4, T4A, T5, Rental Releve 31 (QC)
- Business Registration
- E-filing
- Ontario, Quebec & Other Provinces

EFILE Canada

CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com



*Helping you find your dream home, one key at a time.*

JW PROPERTY REALTORS

# REAL ESTATE

Residential, Commercial, Investment, and New Development Properties.

**Jesmine Wimal**
647-871-1921

**Wimal Augustine**
416-617-6735

www.propertyrealtors.ca

HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977



HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell
Your Home
call me 24-7



Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

*With best compliments from*

ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987

Digital Prints from 16"x20" to 40"x60"

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location



Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 ( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
*Digitally Redefined*

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

**Our passion is to solve your tax problems:**

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272








BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதும் உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radiusfinancial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்தால் CO அளவீடு
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Guaranteed Repairs
Over 10 yrs in Business Experience
Professional Service
Flat Rate Pricing
Fully Insured
Parts and Labour guarantee
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280




Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090




SABONA




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673.9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141




Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough




Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
Rishani Vettyvel
Barrister and Solicitor
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544
AEREN Thiyagarajan
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
$8475.00
416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600
HomeLife Today Realty Ltd., Brokerage*
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545
RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
President & CEO
416-666-1120
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011
Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage
Amazon
2468 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
RE/MAX ACE
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage*
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000
QUALITY ADVICE YOU CAN TRUST
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
416 505 8532
DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7471 WOODBINE RD, MARKHAM, ON L3R 5J8
RE/MAX
LATHAN VARATHARAJAH